# பகுதி II

# பகுதி II

## இலங்கை மத்திய வங்கியின் கணக்குகளும் தொழிற்பாடுகளும்

பக்கம்


1. கணக்குகளும் நிதியும் 1
2. வங்கி மேற்பார்வை 77
3. வங்கித்தொழில் கற்கைகளுக்கான ஆய்வுநிலையம் 81
4. தொடர்பூட்டல் 81
5. நாணயம் 84
6. உள்நாட்டுத் தொழிற்பாடுகள் 86
7. பொருளாதார ஆராய்ச்சி 89
8. ஊழியர் சேம நிதியம் 93
9. வசதிகள் முகாமைத்துவம் 97
10. நிதி 97
11. நிதியியல் உளவறிதல் பிரிவு 99
12. வெளிநாட்டுச் செலாவணி 101
13. மனித வளங்கள் 105
14. தகவல் தொழில்நுட்பம் 108
15. உள்ளகக் கணக்காய்வு 110
16. பன்னாட்டுத் தொழிற்பாடுகள் 111
17. சட்டம் மற்றும் இணங்குவிப்பு 113
18. பேரண்ட முன்மதியுடைய கண்காணிப்பு 114
19. கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் 115
20. கொள்கை மீளாய்வு மற்றும் கண்காணிப்பு 118
21. பொதுப்படுகடன் 119
22. பிரதேச அபிவிருத்தி 121
23. பிரதேச அலுவலக முகாமைத்துவம் 127
24. தீர்மானங்கள் மற்றும் நடைமுறைப்படுத்தல் 128
25. இடர்நேர்வு முகாமைத்துவம் 129
26. செயலகம் 131
27. பாதுகாப்புப் பணிகள் 131
28. அலுவலர் பணிகள் முகாமைத்துவம் 132
29. புள்ளிவிபரவியல் 132
30. வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வை 136
31. பயிற்சி மற்றும் அபிவிருத்தி 141

# 1. கணக்குகளும் நிதியும்

## ஆண்டுகாலப்பகுதி மற்றும் 2018 நிதியியல் ஆண்டுடன் தொடர்புடைய நாணயச்சபை மதியுரைக் கணக்காய்வு குழுவின் செயற்பாட்டு அறிக்கை

### 1. அறிமுகம்

நாணயச்சபை மதியுரைக் கணக்காய்வு குழு என்பது நாணயச்சபையினால் நியமிக்கப்பட்ட துணைக் குழுவொன்றாகும். நாணயச்சபை மதியுரைக் கணக்காய்.வு குழுவானது நிதியியல் அறிக்கையிடலுடன் தொடர்புடைய கொள்கைகள் மற்றும் கருமங்கள், உள்ளகக் கட்டுப்பாடுகள், இடர்நேர்வு முகாமைத்துவ முறைமைகள், இணங்குவித்தல், தகவல் தெரிவித்தல், மோசடி, உள்ளகக் கணக்காய்வு, வெளிவாரிக் கணக்காய்வு அத்துடன் நாணயச்சபையினால் குறித்தொதுக்கப்படுகின்ற வேறு ஏதேனும் விடயம் தொடர்பாக நாணயச்சபைக்கு ஆலோசனைகளை வழங்குகின்றது. நாணயச்சபை மதியுரைக் கணக்காய்வு குழுவானது காலாண்டு அடிப்படையில் அவசியப்படுகின்ற போதும் அவசியப்படுகின்றவாறும் அதன் செயலாற்றம் மற்றும் பரிந்துரைகளை நாணயச்சபைக்கு அறிக்கையிடுகின்றது.

### 2. நாணயச்சபை மதியுரைக் கணக்காய்வு குழுவின் உள்ளமைப்பு

நாணயச்சபை ஆலோசனைக் கணக்காய்வு குழுவுக்கு நாணயச்சபையின் நியமிக்கப்பட்ட உறுப்பினர் ஒருவர் தலைமை தாங்குவதுடன் இரு வேறு வெளிவாரிக் கணக்காய்வுத் தொழில்சார் நிபுணர்களை கொண்டுள்ளது. 2018.12.31 அன்று உள்ளவாறு நாணயச்சபை ஆலோசனைக் கணக்காய்வு குழுவின் உள்ளமைப்பு பின்வருமாறு:

| | | | |
|---|---|---|---|
| i. | திரு. ஏ. என். பொன்சேகா | - | தலைவர் |
| ii. | திரு. எச். எம். ஏ. ஜயசிங்க | - | உறுப்பினர் |
| iii. | திருமதி. ஏ. ஐ. மொஹுட்டி | - | உறுப்பினர் |

நாணயச்சபையின் செயலாளர் நாணயச்சபை மதியுரைக் கணக்காய்வு குழுவின் செயலாளர் ஆவார் என்பதுடன் உள்ளகக் கணக்காய்வுத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாணயச்சபை மதியுரைக் கணக்காய்வு குழுவிற்கான உதவிச் செயலாளர் ஆவார். உள்ளகக் கணக்காய்வுத் திணைக்களமானது நாணயச்சபை மதியுரைக் கணக்காய்வு குழுவுக்கு செயலக வசதிகளை வழங்குகின்றது. இலங்கை மத்திய வங்கியின் வெளிவாரி கணக்காய்விற்குப் பொறுப்பான தேசிய கணக்காய்வு அலுவலகத்திடமிருந்தான கணக்காய்வுக் கண்காணிப்பாளர், இலங்கை மத்திய வங்கியின் முதன்மைக் கணக்காளர் மற்றும் இணங்குவித்தல் அலுவலர் ஆகியோர் நாணயச்சபை மதியுரைக் கணக்காய்வு குழுக் கூட்டங்களில் அவதானிப்பாளர்களாகச் சமூகமளிக்கின்றனர். கலந்துரையாடல்களுக்கு அவசியப்படுகின்றவாறும் அவசியப்படுகின்ற போதும் இலங்கை மத்திய வங்கியின் திணைக்களத் தலைவர்கள் நாணயச்சபை மதியுரைக் கணக்காய்வு குழுவின் தலைவரினால் அழைக்கப்படுகின்றனர். வெளிவாரிக் கணக்காய்வினைக் கொண்டு நடாத்துவதற்கு கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் நியமிக்கப்பட்ட கணக்காய்வு நிறுவனமான கேபிஎம்ஜி ஈடுபாட்டுப் பங்காளரும் இலங்கை மத்திய வங்கியின் நிதியியல் கூற்றுக்கள் கலந்துரையாடப்படுகின்ற போது சமூகமளிக்கின்றார்.

நாணயச்சபை மதியுரைக் கணக்காய்வு குழுவானது ஆண்டுக்கு குறைந்தது ஆறு (06) தடவைகள் அல்லது நாணயச்சபை மதியுரைக் கணக்காய்வு குழுவின் தலைவரினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறு அல்லது நாணயச்சபையினால் பணிக்கப்பட்டவாறு சந்திப்பதற்கு தேவைப்படுத்தப்பட்டுள்ளது. நாணயச்சபை மதியுரைக் கணக்காய்வு குழுக் கூட்டங்கள் குழுவுக்கான செயலாளரினால் கூட்டப்படுகின்றன. கூட்டமொன்றிற்கான நிறைவெண் தலைவர் உள்ளடங்கலாக இரண்டு (02) ஆகும்.

### 3. 2018 நிதியியல் ஆண்டுடன் தொடர்புடையதும் ஆண்டுகாலப்பகுதியிலும் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள்

நாணயச்சபை மதியுரைக் கணக்காய்வு குழுவானது 2018இல் எட்டு (08) கூட்டங்களை நடாத்தியதுடன் கொண்டு நடாத்தப்பட்ட முக்கிய நடவடிக்கைகள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

அ. நிதி அறிக்கையிடல் மற்றும் வெளிவாரிக் கணக்காய்வு:

நாணயச்சபை மதியுரைக் கணக்காய்வு குழு பின்வருவனவற்றை மீளாய்வு செய்தது,

i. 2016ஆம் ஆண்டிற்கான இலங்கை மத்திய வங்கியின் நிதியியல் கூற்றுகள் மீதான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை,

ii. 2017.09.30 இல் முடிவுற்ற காலப்பகுதிக்கான இலங்கை மத்திய வங்கியின் நிதியியல் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு, 2017ஆம் ஆண்டிற்கான முகாமைத்துவக் கடிதம், அதற்கான முகாமைத்துவப் பதிலிறுத்தல் மற்றும் வெளிவாரிக் கணக்காய்வாளரின் பரிந்துரைகள் மீதான இடைக்கால பிரச்சனைக் குறிப்பறிக்கை,

iii. 2018ஆம் ஆண்டிற்கான கேபிஎம்ஜியின் கணக்காய்வுத் திட்டம்,

iv. 2018.12.31இல் முடிவுற்ற காலப்பகுதிக்கான நிதியியல் கூற்றுக்களின் கணக்காய்வு மீதான இடைக்காலப் பிரச்சனைகள் குறிப்பறிக்கை

v. 2018ஆம் ஆண்டிற்கான இலங்கை மத்திய வங்கியின் நிதியியல் கூற்றுக்கள்

ஆ. உள்ளகக் கட்டுப்பாடுகள் மற்றும் இடர்நேர்வு முகாமைத்துவ முறைமைகள்

நாணயச்சபை மதியுரைக் கணக்காய்வு குழு,

i. இலங்கை மத்திய வங்கியின் உள்ளகக் கட்டுப்பாடுகள் மற்றும் இடர்நேர்வு முகாமைத்துவ முறைமைகள் தொடர்பாக மீளாய்வு செய்து ஆலோசனை வழங்கியது.

ii. நாணயச்சபை மதியுரைக் கணக்காய்வு குழுவின் பரிந்துரைகள் தொடர்புடைய திணைக்களத் தலைவர்கள் மூலமான நடைமுறைப்படுத்தல் முன்னேற்றத்தினை மீளாய்வு செய்தது.

இ. உள்ளகக் கணக்காய்வு

நாணயச்சபை மதியுரைக் கணக்காய்வு குழு,

i. 2018இன் உள்ளகக் கணக்காய்வுத் திட்டத்தின் நடைமுறைப்படுத்தல் முன்னேற்றத்தினை மீளாய்வு செய்தது.

ii. கணக்காய்வுகள் ஊடாக உள்ளகக் கணக்காய்வுத் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகளின் நடைமுறைப்படுத்தல் நிலைமையினை மீளாய்வு செய்தது.

iii. 2019இற்கான உள்ளகக் கணக்காய்வுத் திட்டத்தினை மீளாய்வு செய்தது.

iv. கணக்காய்வுப் பெறுபேறுகளை தொடர்பூட்டுகின்ற முறையியலினை மீளாய்வு செய்து திருத்தியது.

v. உள்ளகக் கணக்காய்வுத் திணைக்களத்தின் பதவியினர் தேவைப்பாட்டினை மீளாய்வு செய்தது.

# இலங்கை மத்திய வங்கி

**முகாமைத்துவக் கூற்று**

**2018 திசெம்பர் 31இல் முடிவடைந்த காலப்பகுதிக்குரியது**

## இலங்கை மத்திய வங்கியின் குறிக்கோள்களுடன் தொடர்பான பொறுப்புடைமையும் நிதிச் செயலாற்றமும்

இலங்கை மத்திய வங்கியானது இலங்கையின் நாணய, நிதி மற்றும் கொடுப்பனவு முறைமையின் நிர்வாகம், கண்காணிப்பு மற்றும் கட்டுப்பாட்டிற்கு பொறுப்பான நிறுவனமாக நாணய விதிச் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்டது. இச் சட்டத்திற்கிணங்க, வங்கியானது பிரதானமான குறிக்கோள்களான பொருளாதார மற்றும் விலை உறுதிப்பாட்டையும் நிதியியல் முறைமையின் உறுதிப்பாட்டையும் பேணுகின்ற பொறுப்பை ஏற்றுள்ளது.

ஆதலால், மத்திய வங்கி மற்றும் அதன் தொழிற்பாடுகளின் வெற்றிகரத் தன்மைக்கான பொறுப்புபுடைமையின் அடிப்படையானது அதன் பிரதான குறிக்கோள்களை அடையப் பெறுவதை முன்னிட்டான அதன் கொள்கைகள் மற்றும் தொழிற்பாடுகள் நற்பயன் தொடர்பாகவேயன்றி அதன் இலாபகரத்தன்மை தொடர்பில் அத்தியாவசியமானதாயிராது. இக் குறித்துரைக்கப்பட்ட குறிக்கோள்கள் ஏனைய தனியார் மற்றும் அரச நிறுவனங்களிலிருந்து மத்திய வங்கியை பிரித்துக் காட்டுகின்ற சிறப்புத் தன்மையைக் கொண்ட அடிப்படைப் பண்புகளாக உள்ளன. இதற்கிணங்க மத்திய வங்கிக்கு வட்டி வீதத்திலும் செலாவணி வீதத்திலும் செல்வாக்குச் செலுத்தக்கூடிய அதன் நாணயக் கொள்கைச் செயற்பாடுகளினூடாக அதற்கே உரியதான இலாபத்தை உருவாக்கிக் கொள்ளும் சிறப்புமிக்க ஆற்றல் அதற்குள்ள போது, இலாபகரத் தன்மையுடன் தொடர்புடைய அணுகுமுறைகள் கடைப்பிடிக்கப்படும் பட்சத்தில் அதன் பெறுபேறாக பிரதானமான குறிக்கோள்களை விட்டுக் கொடுத்து இலாபத்தைப் பின்தொடர்ந்து செல்ல வேண்டிய நிலை உருவாகும். ஆதலால் தற்காலிகமானதாக அல்லது புலமை வாய்ந்ததாக மட்டும் இருந்தாலன்றி மத்திய வங்கியின் குறிக்கோள்களான பொருளாதார மற்றும் விலை உறுதிப்பாட்டையும் நிதியியல் முறைமையின் உறுதிப்பாட்டையும் பேணுதல் சிறப்புமிக்கதாகவும் தனியே இலாபத்தைப் பெறும் குறிக்கோள்களிலிருந்து விலகியதாக இருத்தலும் அவசியமாகின்றது.

இப் பின்னணியில், மத்திய வங்கியின் நிதிக் கூற்றுக்களில் அதன் நாணயக் கொள்கைத் தொழிற்பாடுகள், செலாவணி வீத முகாமைத்துவம், நாணயங்களை வெளியிடல் ஆகியவற்றை அமுலாக்குகின்ற போது உருவாகின்ற இலாபம் மற்றும்/ அல்லது நட்டம் உணர் பெறுமதியில் பதிவு செய்யப்படுவதால், இக் கூற்றுக்களில் அறிக்கையிடப்பட்டுள்ள நிதிச் செயலாற்றுகையானது இச் சூழலமைவிற்கிணங்க வரைவிலக்கணம் அளிக்கப்படுதலும் புரிந்து கொள்ளப்படுதலும் அவசியமாகும்.

வங்கியானது, நாணய விதிச் சட்டத்தின் 42 மற்றும் 43ஆம் பிரிவுகளின் கீழ் கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் வெளிவாரிக் கணக்காய்வுக்கு உள்ளாக்கப்படுகின்றது. இதற்கமைய பன்னாட்டு நிதி அறிக்கையிடல் நியமங்களுக்கு இணங்கியொழுகுதலை உறுதி செய்யும் பொருட்டு பன்னாட்டு கணக்காய்வு நியமங்களின் கீழ் கணக்காய்வை மேற்கொள்வதற்கு கேபிஎம்யி பட்டயக் கணக்காளர் நிறுவனத்தின் சேவையை கணக்காய்வாளர் தலைமை அதிபதி பெற்றுள்ளார். உள்ளகக் கட்டுப்பாடு மற்றும் நடைமுறை மீளாய்வுகள் ஆகிய இரண்டிலும் மேற்கொள்ளப்படும் இக் கணக்காய்வுகள் நிதி அறிக்கையிடலுடன் தொடர்புடையதாகும்.

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE

මගේ අංකය / எனது இல. / My No. } பீஏஎவ்/எச்/சீபிஎஸ்எல்/1/18/1   ඔබේ අංකය / உமது இல. / Your No. }   දිනය / திகதி / Date } 2019 ஏப்ரல் 03

கௌரவ நிதி அமைச்சர்

**இலங்கை மத்திய வங்கியின் 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மற்றும் ஏனைய சட்டரீதியான மற்றும் பிரமாணரீதியான தேவைப்பாடுகள் மீது 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12 ஆம் பிரிவு மற்றும் நாணய அதிகாரச்சட்டத்தின் (422 ஆம் அத்தியாயம்) 42(2) ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

இலங்கை மத்திய வங்கியின் ("வங்கி") 2018 திசெம்பர் 31 இல் உள்ளபடியான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான வருமானக் கூற்று, ஏனைய விரிவான வருமான கூற்று, உரிமை மூலதனத்திலான மாற்றங்கள் கூற்று, காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்புக்களை உள்ளடக்கிய நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்களின் கணக்காய்வு, 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம், 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் நாணய அதிகாரச்சட்டத்தின் (422 ஆம் அத்தியாயம்) 42(2) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க பாராளுமன்றத்திற்கான எனது அறிக்கை காலக்கிரமத்தில் பட்டியல்படுத்தப்படும். இக் கணக்காய்வை மேற்கொள்வதற்கு பொதுத் தொழிலிலுள்ள பட்டயக் கணக்காளர்கள் நிறுவகமொன்று எனக்கு உதவியது.

1

අංක 306/72, පොල්දූව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව   இல. 306/72, பொல்தூவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை.   No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka.
+94 11 2 88 70 28 - 34   +94 11 2 88 72 23   ag@auditorgeneral.gov.lk   www.naosl.gov.lk

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE
NAOSL

வங்கியின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் சர்வதேச நிதிசார் அறிக்கையிடல் நியமங்களிற்கு (ஐஎவ்ஆர்எஸ்எஸ்) இணங்க மேற்படி நிதிக்கூற்றுக்கள் அனைத்து பொருண்மையான விடயங்களையும் நியாயமாக பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

சர்வதேச கணக்காய்வு நியமங்களுக்கு (ஐஎஸ்ஏஎஸ்) இற்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பகுதியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான நாணய சபையினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

நிதிக்கூற்றுக்களை ஐஎஸ்ஏஎஸ் இற்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென நாணயச் சபை நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு வங்கியின் நாணயச் சபை பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கையில், வங்கியின் தொடந்தியங்கும் நிலையை தொடருவதற்கான இயலுமை, வெளிப்படுத்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய பிரயோகித்தக்க விடயங்கள் என்பவற்றை மதிப்பாய்வு செய்வதற்கும் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருக் கணக்கீட்டு அடிப்படையினை பயன்படுத்துவதற்கும் நாணயச் சபை பொறுப்பாக உள்ளது.

வங்கியின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் வங்கி வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு வங்கி அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்**

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் ஐஎஸ்ஏஎஸ் இற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

ஐஎஸ்ஏஎஸ் இற்கு இணங்க கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது

3

விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி வங்கியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் நாணயச் சபையால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு நாணயச் சபையின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு வங்கியிடம் உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் வங்கியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல்

வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

**2. ஏனைய சட்டரீதியான மற்றும் பிரமாணரீதியான தேவைப்பாடுகள் மீதான அறிக்கை**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம், பின்வரும் தேவைப்பாடுகளிற்காக குறித்துரைக்கப்பட்ட ஏற்பாடுகளை உள்ளடக்குகின்றன.

- கணக்காய்விற்கு அவசியமான சகல தகவல்களையும் விளக்கங்களையும் நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என்பதுடன் இதுவரையான எனது பரீட்சிப்பின் மூலம் தென்படுகின்றவாறு 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(அ) பிரிவு என்பவற்றின் தேவைப்பாடுகளின் பிரகாரம் வங்கி முறையான கணக்கீட்டுப் பதிவேடுகள் வைத்திருக்கப்படுகின்றன.

- 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

- 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் அனைத்தையும் உள்ளடக்குகின்றன.

மேற்கொள்ளப்பட்ட நடைமுறைகளின் அடிப்படையில் பெறப்பட்ட சான்றுகளானவை பொருண்மையான விடயங்களிற்கு மட்டுப்படுத்தப்பட்டிருந்தன. ஆனால் வேறு எதுவும் எனது கவனத்திற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

- 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(ஈ) பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் வழமையான வணிக செயற்பாடுகளிற்கு வெளியே வங்கி செய்துகொள்ளப்பட்ட ஏதேனும் ஒப்பந்தம் தொடர்பில் வங்கி

5

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE
NAOSL

ஆளுகை சபை உறுப்பினர் எவராவது நேரடியாக அல்லது நேரடியாகவல்லாமல் ஏதேனும் அக்கறை கொண்டுள்ளதை குறிப்பிடுதல்.

- 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(ஊ) பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் வங்கி ஆளுகை சபையால் வழங்கப்பட்ட ஏதேனும் ஏற்புடையற்பாலதான எழுத்தினாலான சட்டம், பொது அல்லது விசேட பணிப்புக்களுடன் வங்கி இணங்கியொழுகாதுள்ளமையை குறிப்பிடுதல்.

- 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(எ) பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் வங்கி அதன் தத்துவங்கள், பணிகள் மற்றும் கடமைகளுக்கு இணங்க செயலாற்றியிருக்காதமையை குறிப்பிடுதல்.

- 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(ஏ) பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் வங்கி வளங்கள், காலவரையறைகளினுள்ளும் ஏற்புடையற்பாலனவான சட்டங்களுக்கு இணங்கியொழுகவும் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும், பயனுறுதியாகவும் பெறப்பட்டுப் பயன்படுத்தப்பட்டிருக்காதமையை குறிப்பிடுதல்.

எச். எம். காமினி விஜேசிங்ஹ
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

6

# இலங்கை மத்திய வங்கி
## நிதியியல் நிலைமைக் கூற்று

| 2018 திசெம்பர் 31இல் உள்ளவாறானது | குறிப்பு | 2018 ரூ.000 | 2017 ரூ.000 |
|---|---|---|---|
| **சொத்துக்கள்** | | | |
| **வெளிநாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள்** | | | |
| காசும் காசுக்குச் சமமானவையும் | 9 | **372,175,176** | 459,827,641 |
| இலாபம் அல்லது நட்டத்தினூடாக சீர்மதிப்புப் பெறுமதியில் பிணையங்கள் | 10 | **37,467,239** | 45,264,376 |
| ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானம்/ விற்பனைக்கு கிடைக்கத்தக்கதாகவுள்ள வற்றினூடாக சீர்மதிப்புப் பெறுமதியில் பிணையங்கள் | 10 | **694,876,394** | 566,228,935 |
| பெறுதி நிதியியல் கருவிகள் | 11 | **750** | 4,940,455 |
| ப.நா. நிதியத்துடன் தொடர்பான சொத்துக்கள் | 12 | **147,427,452** | 126,842,946 |
| ஏனைய பெறத்தக்கவைகள் | | **961,284** | 3,665,700 |
| **மொத்த வெளிநாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள்** | | **1,252,908,295** | 1,206,770,053 |
| **உள்நாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள்** | | | |
| இலங்கை அரச பிணையங்கள் | 13 | **45,031,157** | 9,704,962 |
| மீள்விற்பனை உடன்படிக்கையின் மீள்கொள்வனவு செய்யப்பட்ட பிணையங்கள் | 14 | **229,454,409** | 22,375,124 |
| அரசுக்கான தற்காலிக முற்பணங்கள் | 15 | **198,632,571** | 199,800,871 |
| வங்கிகளுக்கான கடன்கள் | 16 | **95,963** | 223,702 |
| நிதியியல் மற்றும் ஏனைய நிறுவனங்களில் செய்யப்பட்ட பங்குரிமை முதலீடுகள் | 17 | **1,381,879** | 41,095 |
| ஏனைய சொத்துக்கள் | 18 | **14,783,305** | 12,882,470 |
| **மொத்த உள்நாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள்** | | **489,379,284** | 245,028,224 |
| **மொத்த நிதியியல் சொத்துக்கள்** | | **1,742,287,579** | 1,451,798,277 |
| **வெளிநாட்டு நாணய நிதியல்லாச் சொத்துக்கள்** | | | |
| தங்கம் | 19 | **149,683,439** | 126,583,727 |
| **நிதியல்லாச் சொத்துக்கள்** | | | |
| இருப்புக்கள் | 20 | **6,568,935** | 6,875,533 |
| ஏனைய பெறத்தக்கவைகள் மற்றும் முற்பணங்கள் | | **1,914,087** | 1,534,848 |
| ஆதனங்கள், பொறிகள் மற்றும் கருவிகள் | 21 | **16,955,854** | 17,960,517 |
| அருவச் சொத்துக்கள் | 22 | **30,437** | 80,623 |
| **மொத்த நிதியல்லாச் சொத்துக்கள்** | | **175,152,752** | 153,035,248 |
| **மொத்தச் சொத்துக்கள்** | | **1,917,440,331** | 1,604,833,525 |
| **பொறுப்புக்களும் உரிமை மூலதனமும்** | | | |
| **வெளிநாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள்** | | | |
| வங்கிகள் மற்றும் நிதியியல் நிறுவனங்கள் | 23 | **19,301,160** | 8,239,544 |
| பெறுதி நிதியியல் சாதனங்கள் | 11 | **14,056,460** | 4,648,449 |
| ஆசிய தீர்ப்பனவு ஒன்றியம் | 24 | **79,158,977** | 90,981,712 |
| பன்னாட்டு நாணய நிதியம் | 25 | **416,988,246** | 318,995,269 |
| ஏனையவை | 26 | **134,730,933** | 64,095,889 |
| **மொத்த வெளிநாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள்** | | **664,235,776** | 486,960,863 |
| **உள்நாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள்** | | | |
| வங்கிகள், நிதியியல் நிறுவனங்களின் வைப்புக்கள் | 27 | **320,106,183** | 341,712,198 |
| அரச மற்றும் அரச நிறுவனங்களிலுள்ள வைப்புக்கள் | 28 | **348,718** | 324,517 |
| மீள் கொள்வனவு உடன்படிக்கையின் கீழ் விற்பனை செய்யப்பட்ட பிணையங்கள் | 29 | **28,311,221** | 40,655,278 |
| ஊழியர் நன்மை திட்டங்களிலுள்ள மீதிகள் | 30 | **18,333** | 4,547 |
| சுற்றோட்டத்திலுள்ள நாணயம் | 31 | **640,942,510** | 598,053,901 |
| ஏனைய செலுத்தத்தக்கவைகள் | 32 | **12,606,431** | 8,887,156 |
| **மொத்த உள்நாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள்** | | **1,002,333,396** | 989,637,597 |
| **மொத்த நிதியியல் பொறுப்புக்கள்** | | **1,666,569,172** | 1,476,598,460 |
| **ஏனைய பொறுப்புக்கள்** | | | |
| பிற்போடப்பட்ட கொடைகள் | 33 | **11** | 45 |
| ஓய்வூதியம் மற்றும் ஏனைய தொழிலுக்குப் பின்னரான நன்மைத் திட்டங்கள் | 34 | **12,016,804** | 671,061 |
| நானாவிதப் பொறுப்புக்கள் மற்றும் அட்டுறுக்கள் | 35 | **85,945** | 211,720 |
| **மொத்த ஏனைய பொறுப்புக்கள்** | | **12,102,760** | 882,826 |
| **மொத்தப் பொறுப்புக்கள்** | | **1,678,671,932** | 1,477,481,286 |
| **உரிமை மூலதனம்** | | | |
| மூலதன நிதியம் | | **50,000,000** | 50,000,000 |
| ஒதுக்குகள் | 36 | **188,768,399** | 77,352,239 |
| **மொத்த உரிமை மூலதனம்** | | **238,768,399** | 127,352,239 |
| **மொத்த பொறுப்புக்கள் மற்றும் உரிமை மூலதனம்** | | **1,917,440,331** | 1,604,833,525 |

15ஆம் பக்கம் தொடக்கம் 76ஆம் பக்கம் வரையிலுள்ள கணக்கீட்டுக் கொள்கைகளும் குறிப்புகளும் நிதிக் கூற்றுக்களின் முக்கிய ஒரு பகுதியாகும்.

நாணயச் சபையின் சார்பில் இலங்கை மத்திய வங்கியின் ஆளுநரும் முதன்மைக் கணக்காளரும் 2018 மாச்சு 29ஆம் திகதியில் வெளியிடுவதற்காக இந்நிதியியல் கூற்றுக்களை அங்கீகரித்துள்ளனர்.

முனைவர் இந்திரஜித் குமாரசுவாமி - ஆளுநர்

யு.எல் முத்துகல - முதன்மைக் கணக்காளர்

# இலங்கை மத்திய வங்கி
## வருமானக் கூற்று

| 2018 திசெம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டுக்கானது | குறிப்பு | 2018 ரூபா 000 | 2017 ரூபா 000 |
|---|---|---|---|
| **தொழிற்பாட்டு வருமானம்** | | | |
| **வெளிநாட்டு நாணய நிதியியல் சொத்துக்களிலிருந்தான வருமானம்** | | | |
| வட்டி வருமானம் | 38 | **25,556,932** | 22,914,716 |
| தேறல் செய்யப்படாத விலை மீள் மதிப்பீடுகளிலிருந்தான இலாபம்/ (நட்டம்) | 39 | **(18,259,956)** | 24,000,475 |
| தேறல் செய்யப்பட்ட விலை மாற்றங்களிலிருந்தான இலாபம்/ (நட்டம்) | | **(4,092,390)** | 2,772,209 |
| **வெளிநாட்டு நாணய நிதியியல் சொத்துக்களிலிருந்தான மொத்த வருமானம்** | | **3,204,586** | 49,687,400 |
| **வெளிநாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள் மீதான செலவுகள்** | | | |
| வட்டிச் செலவு | 40 | **(5,350,155)** | (2,963,231) |
| வெளிநாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள் மீது எதிர்பார்க்கப்படும் கொடுகடன் நட்டங்கள் | 41 | **(19,121)** | - |
| **வெளிநாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள் மீதான மொத்தச் செலவு** | | **(5,369,276)** | (2,963,231) |
| தேறிய வெளிநாட்டுச் செலாவணி மீள் மதிப்பீட்டு இலாபம்/ (நட்டம்) | | **146,854,048** | (3,808,147) |
| **வெளிநாட்டு நாணய முதலீட்டு வருமானம்** | | **144,689,358** | 42,916,022 |
| **உள்நாட்டு நாணய நிதியியல் சொத்துக்களிலிருந்தான வருமானம்** | | | |
| வட்டி வருமானம் | 38 | **8,956,322** | 18,501,748 |
| தேறல்செய்யப்பட்ட விலை மாற்றங்களிலிருந்தான இலாபம்/ (நட்டம்) | | **117,771** | 267,180 |
| வட்டிச் செலவு | 40 | **(2,880,220)** | (2,676,116) |
| உள்நாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள் மீது எதிர்பார்க்கப்படும் கொடுகடன் நட்டங்கள் | 41 | **(10,966)** | - |
| **உள்நாட்டு நாணய நிதியியல் சொத்துக்களிலிருந்தான மொத்த வருமானம்** | | **6,182,907** | 16,092,812 |
| ஏனைய வருமானம் | 42 | **1,692,994** | 1,602,664 |
| **மொத்த தேறிய தொழிற்பாட்டு வருமானம்** | | **152,565,259** | 60,611,498 |
| **தொழிற்பாட்டுச் செலவுகள்** | | | |
| ஆளணிச் செலவுகள் | 43 | | |
| - சம்பளங்களும் கூலிகளும் | | **(5,409,137)** | (4,112,349) |
| - நிர்ணயிக்கப்பட்ட பங்களிப்புத் திட்டச் செலவு | | **(1,536,049)** | (610,489) |
| - தொழிலுக்குப் பின்னரான நன்மை திட்டச் செலவிற்கான பங்களிப்பு | | **(205,147)** | (744,356) |
| | | **(7,150,333)** | (5,467,194) |
| பெறுமானத் தேய்வும் பெறுமதி இழப்பும் | | **(498,189)** | (518,716) |
| இருப்புச் செலவு (புதிய நாணயங்களை வெளியிடுவதற்கான செலவு) | | **(3,999,000)** | (2,850,823) |
| நிர்வாகம் மற்றும் ஏனைய செலவுகள் | 44 | **(1,850,083)** | (1,305,649) |
| சொத்துக்களின் மீதான சேத இழப்பு கட்டணங்கள் | | **(20,650)** | (274,773) |
| **மொத்தத் தொழிற்பாட்டுச் செலவுகள்** | | **(13,518,255)** | (10,417,155) |
| **வருமான வரிக்கு முந்திய இலாபம்** | | **139,047,004** | 50,194,343 |
| வரி | 45 | **(1,119,286)** | (1,837,976) |
| **இவ்வாண்டிற்கான இலாபம்** | | **137,927,718** | 48,356,367 |

அடைப்புக்குறியினுள் காட்டப்படும் எண்தொகைகள் கழித்தலைக் குறிக்கும்.

15 தொடக்கம் 76 ஆம் வரையிலுள்ள கணக்கீட்டுக் கொள்கைகளும் குறிப்புக்களும் நிதியியல் கூற்றுக்களின் முக்கிய ஒரு பகுதியாகும்.

# இலங்கை மத்திய வங்கி
## ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானக் கூற்று

| திசெம்பர் 31இல் உள்ளவாறானது | 2018<br>ரூபா 000 | 2017<br>ரூபா 000 |
|---|---|---|
| ஆண்டுக்கான தேறிய இலாபம் | **137,927,718** | 48,356,367 |
| **ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானம்** | | |
| **இலாபம்/ (நட்டம்) இற்குப் பின்னர் மீள்வகைப்படுத்தப்பட்ட அல்லது மீள்வகைப்படுத்தக்கூடிய விடயங்கள்** | | |
| அனைத்தையுமுள்ளடக்கிய வருமானம்/ விற்பனைக்குள்ள பிணையங்களூடான சீர்மதிப்புப் பெறுமதியிலான பிணையங்கள் மீதான தேறிய சீர்மதிப்புப் பெறுமதி நட்டம் | **(877,778)** | (6,843,970) |
| ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தினூடான சீர்மதிப்புப் பெறுமதியிலான அரச பிணையங்கள் மீதான தேறிய சீர்மதிப்புப் பெறுமதி இலாபம் | **5,259** | - |
| ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தினூடாக சீர்மதிப்புப் பெறுமதியிலான முதலீடுகள் மீது எதிர்பார்க்கப்படும் கொடுகடன் நட்டங்கள் | **(1,939)** | - |
| **இலாபம்/ (நட்டம்) இற்குப் பின்னர் மீள்வகைப்படுத்தப்படாத விடயங்கள்** | | |
| ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தில் அங்கீகரிக்கப்பட்ட தொழிலுக்குப் பின்னைய நன்மைகள் திட்டத்தின் செலவு | **(11,823,458)** | 1,741,622 |
| ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தினூடான சீர்மதிப்புப் பெறுமதியிலான பங்குரிமை மூலதனங்கள் மீதான தேறிய சீர்மதிப்புப் பெறுமதி இலாபம் | **122,747** | - |
| **மொத்த அனைத்தையுமுள்ளடக்கிய வருமானம்** | **125,352,549** | 43,254,019 |

அடைப்புக்குறியினுள் காட்டப்படும் இலக்கங்கள் கழித்தலைக் குறிக்கும்

15 தொடக்கம் 76ஆம் பக்கம் வரையிலுள்ள கணக்கீட்டுக் கொள்கைகளும் குறிப்புகளும் முழு நிதியியல் கூற்றுக்களின் முக்கிய ஒரு பகுதியாகும்.

# இலங்கை மத்திய வங்கி
## உரிமை மூலதன மாற்றக் கூற்று
## திசெம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டுக்கானது

| | பங்களிக்கப் பட்ட மூலதனம் ரூபா 000 | மீள் மதிப்பீட்டு ஒதுக்கங்கள் ரூபா 000 | ஏனைய ஒதுக்கங்கள் (குறிப்பு 36) ரூபா 000 | திரட்டிய இலாபங்கள் ரூபா 000 | மொத்தம் ரூபா 000 |
|---|---|---|---|---|---|
| **2017 சனவரி 01இல் உள்ளவாறு** | 50,000,000 | 9,022,907 | 30,530,509 | (3,910,215) | 85,643,201 |
| ஆண்டிற்கான தேறிய இலாபம் | - | - | - | 48,356,367 | 48,356,367 |
| அதேநேர மொத்தத் தீர்ப்பனவின் கடன் கரைப்பு நிதியத்திற்கான மாற்றல் | - | - | 273,918 | (273,918) | - |
| ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தில் அங்கீகரிக்கப்பட்ட தொழிலுக்குப் பின்னைய நன்மைகள் திட்டத்தின் செலவு | - | - | - | 1,741,622 | 1,741,622 |
| தேறிய வெளிநாட்டு நாணயமாற்று மீள்மதிப்பீட்டு நட்டத்தின் மாற்றல் | - | - | (3,808,147) | 3,808,147 | - |
| இலங்கை மத்திய வங்கி குறித்துரைக்கப்பட்ட ஒதுக்கிற்கான மாற்றல் | - | - | - | (166,388) | (166,388) |
| விற்பனைக்குள்ள பிணையங்கள் மீதான தேறிய சீர்மதிப்புப் பெறுமதி நட்டம் | - | - | (6,843,970) | - | (6,843,970) |
| திரட்டிய இலாபத்திலிருந்து சந்தை மீள்மதிப்பீட்டு ஒதுக்கத்திற்கு நிதியங்களை மாற்றுதல் | - | - | 14,028,792 | (14,028,792) | - |
| பொது ஒதுக்கத்திற்கான மாற்றல் | - | - | 7,462,613 | (7,462,613) | - |
| 2016ஆம் ஆண்டிற்கான இலாபப் பகிர்ந்தளிப்பு - வெளிநின்ற இலங்கை அரச கடப்பாடுகளை 2016ஆம் ஆண்டு இலாபத்திலிருந்து அறவிடுதல் | - | - | - | (1,378,272) | (1,378,272) |
| இலங்கை மத்திய வங்கி ஊழியர் மற்றும் ஓய்வூதியக்காரர் அனர்த்த நிவாரண நிதியத்திற்கான நிதிய மாற்றல் | - | - | - | (321) | (321) |
| தொழிலுக்குப் பின்னைய நன்மைகளின் நிதியிடல் தேவைகளுக்காக ஒதுக்கங்களுக்கு மாற்றுதல் | - | - | 689,025 | (689,025) | - |
| **2017 திசெம்பர் 31இல் உள்ளவாறான நிலுவை** | 50,000,000 | 9,022,907 | 42,332,740 | 25,996,592 | 127,352,239 |
| பன்னாட்டு நிதியியல் அறிக்கையிடல் நியமம் 9 மீள்வகைப்படுத்தப்பட்ட தாக்கம் மீதான நிலைமாறல் சீராக்கம் | - | - | 1,287,347 | - | 1,287,347 |
| ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய முதலீடுகள் மீது எதிர்பார்க்கப்படும் கொடுகடன் நட்டங்களுக்கான நிலைமாறல் சீராக்கம் | - | - | 65,588 | (117,160) | - |
| **2018 சனவரி 1 இல் உள்ளவாறான சீராக்கப்பட்ட நிலுவை** | **50,000,000** | **9,022,907** | **43,685,675** | **25,879,432** | **128,588,014** |
| ஆண்டிற்கான தேறிய இலாபம் | - | - | - | 137,927,718 | 137,927,718 |
| அதேநேர மொத்தத் தீர்ப்பனவின் கடன் கரைப்பு நிதியத்திற்கான மாற்றல் | - | - | 291,983 | (291,983) | - |
| ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தில் அங்கீகரிக்கப்பட்ட தொழிலுக்குப் பின்னைய நன்மை திட்டங்களின் செலவு | - | - | - | (11,823,458) | (11,823,458) |
| தேறிய வெளிநாட்டு நாணயமாற்று மீள்மதிப்பீட்டு இலாபத்தின் மாற்றல் | - | - | 146,854,048 | (146,854,048) | - |
| தொழில்நுட்ப மேம்பாட்டு ஒதுக்கிற்கான நிதியங்களின் மாற்றல் | - | - | 2,000,000 | (2,000,000) | - |
| இலங்கை மத்திய வங்கி குறித்துரைக்கப்பட்ட ஒதுக்கிற்கான மாற்றல் | - | - | - | (171,843) | (171,843) |
| ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தினூடாக சீர்மதிப்புப் பெறுமதி மீதான தேறிய சீர்மதிப்புப் பெறுமதி நட்டம் | - | - | (877,778) | - | (877,778) |
| திரட்டிய இலாபத்திலிருந்து சந்தை மீள்மதிப்பீட்டு ஒதுக்கத்திற்கு நிதியங்களை மாற்றுதல் | - | - | 24,337,841 | (24,337,841) | - |
| பொது ஒதுக்கத்திற்கு நிதியங்களை மாற்றல் | - | - | 5,013,869 | (5,013,869) | - |
| 2017ஆம் ஆண்டுக்கான இலாப பகிர்ந்தளிப்பு - வெளிநின்ற அரச கடன்பாடுகளை 2017ஆம் ஆண்டு இலாபத்தில் இருந்து அறவிடுதல் | - | - | - | (15,000,000) | (15,000,000) |
| இலங்கை மத்திய வங்கி ஊழியர் மற்றும் ஓய்வூதியக்காரர் அனர்த்த நிவாரண நிதியத்திற்கான மாற்றல் | - | - | - | (321) | (321) |
| தொழிலுக்குப் பின்னைய நன்மைகளின் நிதியிடல் தேவைகளுக்காக நிதியங்களின் மாற்றல் | - | - | 5,372,178 | (5,372,178) | - |
| ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தினூடான சீர்மதிப்புப் பெறுமதியில் வகைப்படுத்தப்பட்ட பங்குரிமை முதலீடு தொடர்பான விற்பனை இலாபம் | - | - | (16,289) | 16,289 | - |
| ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தினூடான சீர்மதிப்புப் பெறுமதியில் வகைப்படுத்தப்பட்ட அரச பிணையங்களின் சீர்மதிப்பீடு தொடர்பான இலாபம் | - | - | 5,259 | - | 5,259 |
| அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தினூடான சீர்மதிப்புப் பெறுமதியில் வகைப் படுத்தப்பட்ட பங்குரிமை மூலதனங்களின் சீர்மதிப்பு மீள்மதிப்பீடு தொடர்பான இலாபம் | - | - | 122,747 | - | 122,747 |
| ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தினூடான சீர்மதிப்பு பெறுமதியிலான முதலீடுகள் மீது எதிர்பார்க்கப்படும் கொடுகடன் நட்டங்கள் | - | - | (1,939) | - | (1,939) |
| திரட்டிய இலாபத்தினை நிதிய மாற்றல்கள் | | | (21,154,178) | 21,154,178 | - |
| **2017 திசெம்பர் 31இல் உள்ளவாறான நிலுவை** | **50,000,000** | **9,022,907** | **205,633,416** | **(25,887,924)** | **238,768,399** |

அடைப்புக்குறியினுள் காட்டப்படும் இலக்கங்கள் கழித்தலைக் குறிக்கும்

15 தொடக்கம் 76ஆம் பக்கம் வரையிலுள்ள கணக்கீட்டுக் கொள்கைகளும் குறிப்புகளும் முழு நிதிக் கூற்றுக்களின் முக்கிய ஒரு பகுதியாகும்.

# இலங்கை மத்திய வங்கி
## காசுப்பாய்ச்சல் கூற்று

| 2018 திசெம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டுக்கானது | குறிப்பு | 2018 ரூபா 000 | 2017 ரூபா 000 |
|---|---|---|---|
| **தொழிற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான காசுப்பாய்ச்சல்** | | | |
| **பெறுகைகள்:** | | | |
| பெறப்பட்ட வட்டி - வெளிநாட்டு நாணயம் | | **25,346,571** | 24,380,250 |
| பெறப்பட்ட வட்டி - உள்நாட்டு நாணயம் - மற்றையவை | | **821,348** | 843,143 |
| திரவ முகாமைத்துவமும் வர்த்தக வருமானமும் | | **(3,974,618)** | 2,772,208 |
| தேறல் செய்யப்பட்ட செலாவணி நட்டம் | | **(9,065,597)** | (14,514,115) |
| பெறப்பட்ட ஏனைய வருமானம் | | **1,605,833** | 1,607,790 |
| | | **14,733,537** | 15,089,276 |
| **பகிர்ந்தளிப்புக்கள்:** | | | |
| செலுத்தப்பட்ட வட்டி - வெளிநாட்டு நாணயம் | | **4,855,646** | 2,740,357 |
| செலுத்தப்பட்ட வட்டி - உள்நாட்டு நாணயம் | | **2,368,605** | 2,679,274 |
| ஊழியர்களுக்கான கொடுப்பனவு | | **6,765,420** | 5,245,612 |
| வழங்குநர்களுக்கான கொடுப்பனவு | | **3,380,162** | 4,823,628 |
| செலுத்தப்பட்ட வரி | | **1,100,219** | 902,864 |
| | | **18,470,052** | 16,391,735 |
| **தொழிற்பாட்டு நடவடிக்கைகளில் பயன்படுத்தப்பட்ட தேறிய காசுப்பாய்ச்சல்** | 46 | **(3,736,515)** | (1,302,459) |
| **முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்தான காசுப்பாய்ச்சல்** | | | |
| **பெறுகைகள்:** | | | |
| ஏனைய உள்நாட்டு நாணய நிதியியல் சொத்துக்களிலான தேறிய அதிகரிப்பு | | **(2,487,565)** | (1,524,155) |
| நிதியியல் மற்றும் ஏனைய நிறுவனங்களிலான முதலீடுகளின் விற்பனை/மீட்பு | | **19,789** | - |
| ஏனைய நிறுவனங்களுக்கான கடன்கள் மற்றும் முற்பணங்களிலிருந்தான முதல் தொகை அறவீடுகள் | | **127,584** | 487,927 |
| தொகுதிக் கடன்களிலான முதலீடுகளின் விற்பனை/ மீட்பு | | **15,178** | - |
| ஆதனம், பொறி, கருவிகளின் விற்பனை மீதான பெறுகைகள் | | **10,284** | 3,088 |
| மீள விற்பதற்கான உடன்படிக்கையின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட பிணையங்களின் தேறிய குறைவு | | **(12,340,173)** | (29,394,318) |
| | | **(14,654,903)** | (30,427,458) |
| **பகிர்ந்தளிப்புக்கள்:** | | | |
| வெளிநாட்டு நாணயப் பிணையங்களிலான தேறிய அதிகரிப்பு | | **5,592,252** | 211,673,611 |
| ஏனைய வெளிநாட்டு நாணய நிதியியல் சொத்துக்களிலான தேறிய அதிகரிப்பு/(குறைவு) | | **(263,842)** | 355,012 |
| ஏனைய வெளிநாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்களிலான தேறிய அதிகரிப்பு/(குறைவு) | | **(34,064,176)** | 60,818,636 |
| ஏனைய உள்நாட்டு வைப்புக்கள் மற்றும் கொடுபடத்தக்கவையிலான தேறிய குறைவு | | **(14,311)** | (155) |
| கொடைகள் தவிர்ந்த ஆதனம், பொறிகள் மற்றும் கருவிகளின் கொள்வனவுகள் | | **104,362** | 265,725 |
| அருவச் சொத்துக்களின் கொள்வனவு | | **25,484** | 7,432 |
| தங்க இருப்புக்களிலான தேறிய குறைவு | | **(19,060,015)** | - |
| ஏனைய நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட கடன்களும் முற்பணங்களும் | | **-** | 369,684 |
| | | **(47,680,246)** | 273,489,945 |
| **முதலீட்டு நடவடிக்கைகளில் (பயன்படுத்தப்பட்ட)/ உருவாக்கப்பட்ட தேறிய காசுப் பாய்ச்சல்** | | **33,025,343** | (303,917,403) |
| **நிதியிடல் நடவடிக்கைகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்** | | | |
| **பெறுகைகள்:** | | | |
| சுற்றோட்டத்திலுள்ள நாணயங்களை வெளியிடுதல் | | **796,515,572** | 628,828,164 |
| சுற்றோட்டத்திலுள்ள நாணயங்களை மீளப்பெறல் | | **(753,626,964)** | (583,552,128) |
| சுற்றோட்டத்திலுள்ள நாணயங்களின் தேறிய வழங்கல் | | **42,888,608** | 45,276,036 |
| **பகிர்ந்தளிப்புக்கள்:** | | | |
| அரச கொடுக்கல்வாங்கல் தொடர்பில் சுற்றோட்டத்திலுள்ள நாணயத்தின் தேறிய வெளியிடுதல்/ (மீளப்பெறல்) | 47 | **233,216,924** | (220,649,290) |
| வங்கிகள் மற்றும் நிதியியல் நிறுவனங்களுடனான கொடுக்கல்வாங்கல் தொடர்பில் சுற்றோட்ட நாணயத்தின் தேறிய வெளியிடுதல்/ (மீளப்பெறல்) | 48 | **23,010,511** | (38,460,908) |
| சுற்றோட்ட நாணயத்தின் தேறிய வெளியிடுதல்/ (மீளப்பெறல்) | | **256,227,435** | (259,110,198) |
| **சுற்றோட்டத்திலுள்ள நாணயத்தின் தேறிய அதிகரிப்பு/ (குறைவு)** | | **(213,338,827)** | 304,386,234 |
| **பகிர்ந்தளிப்புக்கள்:** | | | |
| வெளிநாட்டு நாணய தவணைப் பொறுப்புக்களின் மீள் கொடுப்பனவு | | **(39,813,671)** | (28,666,576) |
| ஏனைய நிதியங்களுக்கான கொடுப்பனவுகள் | | **321** | 321 |
| ஓய்வூதிய நிதியத்திற்கான கொடுப்பனவுகள் | | **-** | 261,625 |
| திரட்டிய நிதியத்திற்கான இலாப மாற்றல் | | **14,227,097** | - |
| | | **(25,586,253)** | (28,404,630) |
| **நிதியியல் நடவடிக்கையிலிருந்தான தேறிய காசுப்பாய்ச்சல்** | | **(187,752,574)** | 332,790,864 |
| **காசு மற்றும் காசுக்குச் சமமானவற்றில் ஏற்பட்ட தேறிய அதிகரிப்பு/ (குறைவு)** | | **(158,463,746)** | 27,571,002 |
| காசு மற்றும் காசுக்குச் சமமானவற்றின் மீதான செலாவணி வீதத் தாக்கம் | | **70,882,845** | 8,472,902 |
| ஆண்டின் தொடக்கத்தில் உள்ளவாறு காசு மற்றும் காசுக்குச் சமமானவைகள் | | **459,827,641** | 423,783,737 |
| **திசெம்பர் 31இல் உள்ளவாறு காசு மற்றும் காசுக்குச் சமமானவைகள்** | 9 | **372,246,740** | 459,827,641 |

அடைப்புக்குறியினுள் காட்டப்படும் இலக்கங்கள் கழித்தலைக் குறிக்கும்

15 தொடக்கம் 76ஆம் பக்கம் வரையிலுள்ள கணக்கீட்டுக் கொள்கைகளும் குறிப்புகளும் முழு நிதிக் கூற்றுக்களின் முக்கிய ஒரு பகுதியாகும்.

**இலங்கை மத்திய வங்கி**
**2018 திசெம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக்கூற்றுக்களின் விளக்கக் குறிப்புகள்**

**1. அறிக்கையிடும் நிறுவனம் மற்றும் நியதிச் சட்டத் தளம்**

திருத்தப்பட்டவாறான இலங்கையின் 1949ஆம் ஆண்டின் 58ஆம் இலக்க இலங்கை நாணய விதிச் சட்டத்தினால் நிறுவப்பட்ட இலங்கை மத்திய வங்கி (வங்கி அல்லது இ.ம.வங்கி) இலங்கையின் நாணய, ஒழுங்குவிதிகள், நிதியியல் மற்றும் கொடுப்பனவு முறைமைகள் என்பனவற்றின் நிருவாகம், மேற்பார்வை மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு பொறுப்பான அதிகாரசபையாக இருக்கின்றது. இலங்கை மத்திய வங்கியானது இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்குள் நிரந்தரமாக நிறுவப்பட்டுள்ளதோடு இல.30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01இல் அமைந்துள்ளது.

இந் நிதியியல் கூற்றுக்களை வெளியிடுவதற்கு நாணயச் சபையின் சார்பில் ஆளுநராலும் முதன்மைக் கணக்காளராலும் 2019 மாச்சு 29ஆம் திகதி அதிகாரமளிக்கப்பட்டது.

**1.1 முதன்மை நடவடிக்கைகள்**

திருத்தப்பட்டவாறான இலங்கையின் 1949ஆம் ஆண்டின் 58ஆம் இலக்க நாணய விதிச் சட்டத்தின் கீழ் பின்பற்றப்படுவதற்கு அல்லது மேற்கொள்ளுவதற்கு அதிகாரமளிக்கப்பட்ட கொள்கைகள் அல்லது வழிமுறைகளைத் தீர்மானிப்பதற்குப் புறம்பாக, இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையிடம் இலங்கை மத்திய வங்கியின் அதிகாரங்கள் மற்றும் தொழிற்பாடுகள் ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன் இதனிடம் பொதுவாக வங்கியின் முகாமைத்துவம், தொழிற்பாடுகள் மற்றும் நிர்வாகம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. வங்கியானது இலங்கையின் நாணய, நிதியியல் மற்றும் கொடுப்பனவு முறைமையின் நிர்வாகம், மேற்பார்வை மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தலுக்கு முதன்மைப் பொறுப்பாக இருப்பதுடன் அரசாங்கத்தின் இறை முகவராகவும் தொழிற்படுகின்றது. வங்கியின் நடவடிக்கைகள் முக்கியமாக பின்வருவனவற்றை உள்ளடக்கியிருக்கின்றன:

- நாணய மற்றும் செலாவணி வீதக் கொள்கைகளை நடைமுறைப்படுத்தல்
- நாணயத்தை வெளியிடுதல்
- நிதியியல் முறைமையில் கட்டற்ற போட்டித்தன்மை மற்றும் உறுதித்தன்மையை வசதிப்படுத்தல்
- குறித்துரைக்கப்பட்ட நிதியியல் நிறுவனங்களுக்கு உரிமமளித்தல் மற்றும் மேற்பார்வை செய்தல்
- வங்கிகளுக்கிடையிலான தீர்ப்பனவு முறைமையின் ஒழுங்குமுறைப்படுத்தல் மற்றும் முகாமைத்துவம் மற்றும் கொடுப்பனவு முறைமையின் சுமுகமான தொழிற்பாட்டை ஊக்குவித்தல்
- பல்வேறுபட்ட வசதிகளின் கீழ் அரசாங்கம், வங்கி மற்றும் நிதியியல் நிறுவனங்களுக்கு கடன்கள் மற்றும் முற்பணங்களை வழங்குதல்.
- அரசாங்கம் மற்றும் அரசாங்கத்தின் சார்பில் செயற்படும் முகவர்களுடனான குறித்துரைக்கப்பட்ட ஒழுங்குகளின் கீழ் அரசாங்கத்தின் வைப்பாளராகச் செயற்படுதல்

இலங்கையின் உற்பத்தியாக்க வளங்களின் அபிவிருத்தியை ஊக்குவித்து மேம்படுத்தும் நோக்கில் அதன் பொருளாதார, விலை மற்றும் நிதியியல் முறைமை உறுதித்தன்மை குறிக்கோள்களை அடையும் பொருட்டு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளை வெளிநாட்டு நாணய நடவடிக்கைகள் மற்றும் உள்நாட்டு நாணய நடவடிக்கைகள் என பரந்தளவில் வேறுபடுத்தலாம். இந்நடவடிக்கைகளின் பெறுபேறுகள் வருமானக் கூற்றினைப் பொறுத்தவரை தொழிற்பாட்டு நடவடிக்கைகள் எனக் குறிப்பிடப்படுகின்றன.

**2. நிதியியல் கூற்றுக்களின் சமர்ப்பித்தலின் அடிப்படை**

**2.1. இணக்கக் கூற்று**

2018 திசெம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டிற்கான இலங்கை மத்திய வங்கியின் இந் நிதியியல் கூற்றுக்கள் பன்னாட்டு நிதியியல் அறிக்கையிடல் நியமங்களுக்கு இணங்கத் தயாரிக்கப்பட்டுள்ளன.

பன்னாட்டு நிதியியல் அறிக்கையிடல் நியமம் - 9 “நிதியியல் சாதனங்கள்” மற்றும் பன்னாட்டு நிதியியல் அறிக்கையிடல் நியமம் 15 “வாடிக்கையாளர்களுடனான ஒப்பந்தங்களிலிருந்தான வருமானம்” பிரயோகிக்கப்பட்ட முதல் தொகுதி நிதியியல் கூற்று இதுவாகும். முக்கிய கணக்கீட்டு கொள்கைகளின் மாற்றங்கள் குறிப்பு 4இல் விபரிக்கப்பட்டுள்ளன.

**2.2 அளவீட்டிற்கான அடிப்படை**

கீழ்வருவனவற்றிற்குத் தவிர்ந்து, நிதியியல் கூற்றுக்கள் வரலாற்றுக் கிரய அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளன.

- தங்கமானது இலாபம் அல்லது நட்டத்தினூடாக சீர்மதிப்புப் பெறுமதியில் அளவிடப்பட்டுள்ளது.
- பெறுமதி நிதியியல் சாதனங்கள் மற்றும் இலாபம் அல்லது நட்டத்தினூடாக சந்தைப் பெறுமதியில் வைத்திருக்கப்பட்ட மற்றும் ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தினூடாக சீர்மதிப்புப் பெறுமதியில் வைத்திருக்கப்பட்ட பெறுதியல்லா நிதியியல் சாதனங்கள் சீர்மதிப்புப் பெறுமதியில் அளவிடப்பட்டன.
- காணி மற்றும் கட்டிடங்கள் கொள்வனவு செய்யப்பட்ட நேரத்தில் கிரயத்தில் அளவிடப்படுவதுடன் பின்னர் மீள்மதிப்பிட்ட தொகையிலிருந்து ஒன்றுசேர்ந்த தேய்மானம் மற்றும் பதிவழிப்பு நட்டங்களைக் கழித்த தொகையில் அளவிடப்படுகின்றன.
- குறித்துரைக்கப்பட்ட நன்மைக் கடப்பாட்டிற்கான பொறுப்பானது குறித்துரைக்கப்பட்ட நன்மைக் கடப்பாட்டின் தற்போதைய பெறுமதியிலிருந்து திட்டச் சொத்துக்களின் சீர்மதிப்புப் பெறுமதியைக் கழிப்பதன் மூலம் அளவிடப்படுகின்றது.

**2.3 அறிக்கையிடல் வடிவம்**

வங்கியானது நிதியியல் சொத்துக்களையும் நிதியியல் பொறுப்புக்களையும் அவற்றுடன் இணைந்த வருமானத்தையும் செலவினத்தையும் வெளிநாட்டு நாணய மற்றும் உள்நாட்டு நாணய நடவடிக்கைகளிடையே வேறுபடுத்தி காட்டுகின்றது. நிதியியல் நிலைமைக் கூற்றில் சொத்துக்களும் பொறுப்புக்களும் பரந்தளவில் குறிப்பிட்ட வகைகளின் திரவத்தன்மை ஒழுங்கு வரிசையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. இவ்வறிக்கையிடும் அணுகுமுறை குறிப்பு 7இல் முழுமையாக விபரிக்கப்பட்டுள்ளவாறு, வங்கியின் நடவடிக்கைகளை பொருத்தமான முறையில் அறிக்கையிடுவதாக வங்கி கருதுகின்றது.

**2.4 தொழிற்பாட்டு மற்றும் சமர்ப்பித்தல் நாணயம்**

இந்நிதியியல் கூற்றுக்கள் வங்கியின் தொழிற்பாட்டு நாணயமான இலங்கை ரூபாவிலேயே சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. இலங்கை ரூபாவில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதியியல் தகவல்கள் கிட்டிய ஆயிரத்திற்கு மட்டந்தட்டப்பட்டுள்ளன. மீளாய்வுக்குரிய ஆண்டில் வங்கியின் சமர்ப்பித்தல் மற்றும் தொழிற்பாட்டு நாணயத்தில் எவ்வித மாற்றமும் ஏற்படவில்லை.

**2.5 பொருண்மை மற்றும் ஒன்றுசேர்ப்பு**

ஒரே மாதிரியான விடயங்களின் ஒவ்வொரு பொருண்மைப் பிரிவும் நிதியியல் கூற்றுக்களில் வேறுவேறாகச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. ஒரே தன்மையற்ற விடயங்கள் அல்லது தொழிற்பாடுகள், அவை பொருண்மைத் தன்மை அற்றதாக இருந்தாலன்றி வேறு வேறாகச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

2.6 எதிரீடு

வங்கியானது அங்கீகரிக்கப்பட்ட தொகைகளை எதிரீடு செய்வதற்கான சட்ட ரீதியான உரிமையைக் கொண்டிருந்து ஒன்றில் தேறிய அடிப்படையில் தீர்ப்பதற்கோ அல்லது சொத்துக்களை தேறல் செய்து அதேநேரத்தில் பொறுப்புக்களை தீர்ப்பதற்கோ விரும்பும் சந்தர்ப்பங்களில் மட்டும் நிதியியல் சொத்துக்களும் பொறுப்புக்களும் எதிரீடு செய்யப்பட்டு தேறிய பெறுமதி நிதியியல் நிலைமைக் கூற்றில் சமர்ப்பிக்கப்பட்டன.

2.7 ஒப்பீட்டுத் தகவல்

ஒப்பீட்டுத் தகவலானது நடப்பாண்டின் சமர்ப்பிப்புடன் ஒத்திருக்க வேண்டிய அவசியமேற்படும் சந்தர்ப்பங்களில் மீள்வகைப்படுத்தப்பட்டது.

3. மதிப்பீடுகள் மற்றும் திறனாய்வுகளின் பயன்பாடு

வங்கியின் நிதியியல் கூற்றுக்களின் தயாரிப்பிற்கு முகாமைத்துவத்தின் திறனாய்வு முடிவுகள், மதிப்பீடுகள் மற்றும் கருதுகோள்கள் என்பன தேவைப்படுவதுடன் இவை வருமானங்கள் செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் என்பனவற்றின் அறிக்கையிடப்பட்ட தொகைகளின் மீதும் இணைந்த வெளிப்படுத்துகைகள் அதேபோன்று எதிர்பாராத பொறுப்புக்களின் மீதும் தாக்கத்தினை ஏற்படுத்துகின்றன.

இக்கருதுகோள்கள் மற்றும் மதிப்பீடுகளின் நிச்சயமற்ற தன்மையானது எதிர்காலத்தில் பொருண்மிய சீராக்கத்தினை தேவைப்படுத்தும் சொத்துக்கள் அல்லது பொறுப்புக்களின் கொண்டு செல்லும் பெறுமதியில் தாக்கத்தினை விளைவிக்கக்கூடும்.

மதிப்பீடுகள் மற்றும் அடிப்படையான அனுமானங்கள் தொடர்ச்சியான அடிப்படையில் மதிப்பாய்வு செய்யப்படுகின்றன. மதிப்பீடுகளுக்கான திருத்தங்கள் எதிர்கால நோக்கில் இனங்காணப்படுகின்றன.நிதியியல் கூற்றுக்களில் இனங்காணப்பட்ட தொகைகளில் மிக முக்கியமான விளைவுகளினைக் கொண்ட கணக்கீட்டு கொள்கைகளை பயன்படுத்துவதில் செய்யப்பட்ட திறனாய்வு முடிவுகள் பற்றிய தகவல்கள் பின்வரும் குறிப்புகளில் விபரிக்கப்பட்டுள்ளன.

3.1 நிதியியல் சொத்துக்களின் வகைப்படுத்தல் மற்றும் பெறுமதி இழப்பு (2018 சனவரி 01 இலிருந்து பிரயோகிக்கத்தக்கது)

சொத்துக்கள் வைத்திருக்கப்படும் வியாபார மாதிரியை மதிப்பிடுகையில் வங்கியானது திறனாய்வுகளை மேற்கொண்டதுடன் நிதியியல் சொத்துக்களின் ஒப்பந்த நியதிகள் வெளிநின்ற முதல் தொகையின் மீதான முதல் மற்றும் வட்டியின் கொடுப்பனவு மட்டுமா என்பதை மதிப்பிட்டது. வங்கியானது மேலும் நிதியியல் சொத்துக்கள் மீதான கொடுகடன் இடர்நேர்வானது அது அங்கீகரிக்கப்பட்டதன் பின்னர் அதிகரித்துள்ளதா என்பதை தீர்மானிப்பதற்காக பிரமாணங்களை உருவாக்குதல், எதிர்பார்க்கப்படும் கொடுகடன் நட்டங்களின் அளவீட்டிற்கு முன்னோக்கிய தகவல்களை உள்ளடக்குவதற்கான வழிமுறையை தீர்மானித்தல் மற்றும் எதிர்பார்க்கப்படும் கொடுகடன் நட்டங்களை அளப்பதற்கான மாதிரிகளின் தெரிவு மற்றும் ஒப்புதலுக்கும் திறனாய்வுகளைப் பயன்படுத்தியது.

3.2 ஓய்வூதியமும், தொழில்நிலைக்குப் பின்னரான ஏனைய நலத் திட்டங்களும்

குறித்துரைக்கப்பட்ட நலத் திட்டங்களின் செலவு ஆயுட்கால மதிப்பீட்டைப் பயன்படுத்தித் தீர்மானிக்கப்படுகின்றது. ஆயுட்கால மதிப்பீடானது, கழிவு வீதங்கள், எதிர்கால இழப்பீட்டுக் கொடுப்பனவுகளின் அதிகரிப்பு, இறப்பு வீதங்கள் மற்றும் எதிர்கால ஓய்வூதிய அதிகரிப்புகள் ஆகியவற்றின் கருதுகோள்களின் அடிப்படையில் தயாரிக்கப்படுகின்றது. இத் திட்டங்களின் நீண்டகால இயல்பின் காரணமாக மேற்படி மதிப்பீடுகள் கணிசமான அளவு நிச்சமற்ற நிலைமைக்கு உட்படுகின்றன. ஆயுட்கால மதீப்பீட்டிற்கு பயன்படுத்தப்பட்ட கருதுகோள்கள் நிதியியல் கூற்றுக்களின் குறிப்பு 34இல் தரப்பட்டுள்ளன.

3.3 நிதியியல் சாதனங்களின் சீர்மதிப்புப் பெறுமதி

நிதியியல் நிலைமைக் கூற்றில் பதிவு செய்யப்படும் நிதியியல் சொத்துக்கள் மற்றும் நிதியியல் பொறுப்புக்களின் சந்தைப் பெறுமதிகள் செயற்படும் சந்தைகளிலிருந்து பெற்றுக் கொள்ளப்பட முடியாவிடின் அவை கணித ரீதியான மாதிரிகளை உள்ளடக்கும் வேறுபட்ட மதிப்பீட்டு முறைகளைப் பயன்படுத்தி தீர்மானிக்கப்படுகின்றன. இம்மாதிரிகளுக்கான உள்ளீடுகள் சாத்தியமான இடங்களில் அவதானிக்கக்கூடிய சீர்மதிப்புப் தரவுகளிலிருந்து பெற்றுக் கொள்ளப்படுகின்றன. ஆனால் இத்தரவுகள் கிடைக்கத்தக்கதாக இல்லாதவிடத்து, சீர்மதிப்புப் பெறுமதிகளைக் கணிப்பதற்கு திறனாய்வான முடிவு தேவைப்படுகின்றது. திறனாய்வான முடிவு, திரவத்தன்மையைக் கவனத்திலெடுத்தல் மற்றும் நீண்ட கால பெறுதிகளுக்கான தளம்பல்கள் போன்ற மாதிரி உள்ளீடுகளை உள்ளடக்கியிருக்கும்.

4. முக்கியமான கணக்கீட்டு கொள்கைகளிலான மாற்றங்கள்

கணக்கீட்டுக் கொள்கைகளில் மாற்றங்கள் எதுவும் இல்லையென்பதுடன், கீழே விபரமாக குறிப்பிடப்பட்டுள்ள ப.நி.அ.நி 9 மற்றும் ப.நி.அ.நி 15 உடன் தொடர்புபட்ட கொள்கைகள் தவிர பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக்கொள்கைகள் முன்னைய நிதியியல் ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

4.1 ப.நி.அ.நி. 9 நிதியியல் சாதனங்கள்

வங்கியின் நிதியியல் கூற்றுக்கள் ப.நி.அ.நி 9 நிதியியல் சாதனங்களின் தேவைப்பாடுகளின் இணங்கிச் செல்லும் விதத்தில் திருத்தப்பட்ட புதிய கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் முறைகளை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ளன. வங்கியானது தனது ஆண்டு நிதியியல் கூற்றுக்களை தயாரிக்கையில் ப.க.நி. 39 நிதியியல் சாதனங்கள் அங்கீகரிப்பு அளவீட்டுக்கு 2017 திசெம்பர் 31 வரை இணங்கியிருந்தது.

வகைப்படுத்தல் மற்றும் அளவீட்டுக்கான மாற்றங்கள்

ப.நி.அ.நி 9 ஆனது பங்குரிமை சாதனங்கள் மற்றும் பெறுதிகள் தவிர்ந்த அனைத்து நிதியியல் சொத்துக்களும் சொத்துக்களை முகாமை செய்வதற்கான நிறுவனத்தின் வியாபார மாதிரி மற்றும் சாதனங்களின் ஒப்பந்த ரீதியான காசுப்பாய்ச்சல் பண்புகள் என்பவற்றின் இணைந்த அடிப்படையில் மதிப்பிடப்பட வேண்டும் ப.க.நி 39 இன் நிதியியல் சொத்துக்களின் அளவீட்டு வகைப்படுத்தல்கள் (இலாப அல்லது நட்டத்தினூடான சீர்மதிப்புப் பெறுமதி, விற்பனைக்கு கிடைக்கத்தக்கவை, முதிர்ச்சி வரை வைத்திருக்கப்படுபவை, கடன்கள் மற்றும் பெறத்தக்கவைகள்) பின்வருவனவற்றின் மூலம் பதிலிடப்படுகின்றன.

- பதிவழிக்கப்பட்ட செலவிலான நிதியியல் சொத்துக்கள்
- ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தினூடான சீர்மதிப்புப் பெறுமதியிலான படுகடன் பிணையங்கள் இதில் அங்கீகரிப்பில் இருந்து நீக்கப்படும் போது இலாபம் அல்லது நட்டத்தினூடாக இலாபங்கள் அல்லது மீள்சுழற்சிப்படுத்தப்படுகின்றன.
- ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தினூடான சீர்மதிப்பு பெறுமதியிலான பங்குரிமை சாதனங்கள், இதில் அங்கீகரிப்பில் இருந்து நீக்கப்படும் போது இலாபம் அல்லது நட்டதினூடாக இலாபம் அல்லது நட்டம் மீள்சுழற்சிப்படுத்தப்படுவதில்லை.
- இலாபம் அல்லது நட்டத்தினூடான சீர்மதிப்புப் பெறுமதியிலான நிதியியல் சொத்துக்கள்

நிதியியல் பொறுப்புக்களுக்கான கணக்கீடானது அது ப.க.நி 39 இன் கீழ் இருந்ததைப் போன்றே பெரிதுமிருக்கின்றது. வங்கியின் நிதியியல் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களுக்கான வங்கியின் வகைப்படுத்தல் மற்றும் 2018 சனவரி 1 இல் உள்ளவாறு ப.நி.அ.நி 9 இனைப் பிரயோகிப்பதன் கணிய ரீதியான தாக்கம் என்பன குறிப்பு 8 இல் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

**பெறுமதி இழப்பு கணிப்பீட்டிற்கான மாற்றங்கள்**

ப.நி.அ.நி 9 இன் பின்பற்றலானது நிதியியல் சொத்துக்கள் மீதான பெறுமதியிழப்புக்கான அணுகுமுறையினை முன்னோக்கிப் பார்க்கும் எதிர்பார்க்கப்படும் கொடுகடன் இழப்பு அணுகுமுறைக்கு மாற்றியமைத்துள்ளது. ப.நி.அ.நி 9 இன் பெறுமதியிழப்பு தேவைப்பாடுகளை வங்கி எவ்வாறு பிரயோகித்துள்ளது என்பது தொடர்பான விரிவான விளக்கம் குறிப்பு 5.3.4 இல் வெளியிடப்பட்டுள்ளது.

**நிலைமாற்றம்**

ப.நி.அ.நி 9 இன் பின்பற்றுவதிலிருந்து தோன்றும் கணக்கீட்டு கொள்கைகளிலான மாற்றங்கள், கீழே விபரிக்கப்பட்டுள்ளவை தவிர்ந்து முன்னோக்கி பிரயோகிகப்பட்டுள்ளன.

- வங்கியானது ப.நி.அ.நி 9 இன் செயற்பரப்பில் நிதியியல் சாதனங்களுக்கான 2017இற்கான ஒப்பீட்டுத் தகவல்களை மீளக்குறிப்பிடவில்லை. எனவே, 2017இற்கான ஒப்பீட்டுத் தகவலானது ப.க.நி 39இன் கீழ் அறிக்கையிடப்பட்டுள்ளதுடன் இது 2018 இற்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ள தகவல்களுடன் ஒப்பிடமுடியாததாகும். ப.நி.அ.நி 9 இனை பின்பற்றுவதன் மூலம் தோன்றக்கூடிய வேறுபாடுகள் 2008 சனவரி 1 இல் உள்ளவாறான பிடித்துவைக்கப்பட்ட வருவாய்களில் நேரடியாக அங்கீகரிக்கப்படுவதுடன் இவை இந்நிதியியல் கூற்றுக்களுக்கான குறிப்பு 8 இல் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.
- பின்வரும் மதிப்பீடுகள் ஆரம்ப பிரயோக திகதியில் இருந்தவாறான உண்மைகள் மற்றும் சூழ்நிலைகளின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டன.
  - நிதியியல் சொத்து வைத்திருக்கப்படும் வியாபார மாதிரியின் தீர்மானம்
  - ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தினூடான சீர்மதிப்புப் பெறுமதியில் உள்ளவாறு வர்த்தகத்திற்காக வைத்திருக்கப்படாத நாணய விதிச் சட்டத்தின் பிரிவு 105அ இற்கமைய பங்குரிமை சாதனங்களின் மேற்கொள்ளப்பட்ட சில முதலீடுகளின் குறித்துரைப்புகள்.

**4.2 ப.நி.அ.நி. 15 - வாடிக்கையாளர்களுடனான ஒப்பந்தங்களில் இருந்தான வருமானம்**

வருமானமானது எவ்வளவு மற்றும் எப்போது அங்கீகரிக்கப்படுகின்றது என்பதை தீர்மானிப்பதற்காக ப.நி.அ.நி 15 ஆனது விரிவான கட்டமைப்பொன்றை உருவாக்கியுள்ளது. இது பன்னாட்டு கணக்கீட்டு நியமம் 18 - “வருமானம்”, ப.நி.அ.நி 11 - “கட்டுமான ஒப்பந்தங்கள்” மற்றும் தொடர்பான குறித்துரைப்புகளை பதிலீடு செய்கின்றது. எனினும் காலப்பகுதியோ அல்லது வாடிக்கையாளர்களுடனான ஒப்பந்தங்களில் இருந்தான கட்டண மற்றும் தரகுவருமானமோ ப.நி.அ.நி 15 இனை பின்பற்றியதினால் பாதிக்கப்படவில்லை.

**5. முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள்**

குறிப்பு 4இல் விபரிக்கப்பட்டுள்ள கணக்கீட்டுக் கொள்கைகளிலான மாற்றங்கள் தவிர, வங்கியினால் கணக்கீட்டுக்கொள்கைகள் ஒரே மாதிரியாக பிரயோகிக்கப்பட்டுள்ளன.

**5.1 வெளிநாட்டு நாணய மாற்றுவீதங்கள் மற்றும் நிலுவைகள்**

வெளிநாட்டு நாணயங்களிலான கொடுக்கல்வாங்கல்கள், அவை இடம்பெற்ற நாளில் நிலவிய செலாவணி வீதத்தில் இலங்கை ரூபாவிற்கு மாற்றப்பட்டன. அறிக்கையிடல் திகதியில் உள்ளவாறான வெளிநாட்டு நாணயங்களில் குறித்துரைக்கப்பட்ட நிதியியல் சொத்துக்களும் பொறுப்புக்களும் அறிக்கையிடல் திகதியில் நிலவிய செலாவணி வீதத்தில் இலங்கை ரூபாவுக்கு மாற்றப்பட்டன. நிதிவிடயங்கள் மீதான வெளிநாட்டு செலாவணி இலாபங்களும் நட்டங்களும் வருமானக் கூற்றில் உள்ளடக்கப்பட்டுள்ளன. இம்மாற்றங்களுக்குப் பயன்படுத்தப்பட்ட முக்கிய நாணயங்களுக்கான அறிக்கையிடல் திகதியில் உள்ளவாறான இலங்கை ரூபா செலாவணி வீதங்கள் பின்வருமாறு:

| நாணயம் | 2018<br>ரூபா | 2017<br>ரூபா |
|---|---|---|
| 1 அவுஸ்திரேலிய டொலர் | 128.8113 | 119.3796 |
| 1 கனேடிய டொலர் | 134.0153 | 121.8598 |
| 1 யூரோ | 209.5593 | 183.1353 |
| 1 யப்பானிய யென் | 1.6661 | 1.3580 |
| 1 சிறப்பு எடுப்பனவு உரிமை (சி.எ.உ) | 253.511 | 217.1608 |
| 1 ஸ்டேர்லிங் பவுண் | 233.0792 | 206.5221 |
| 1 ஐக்கிய அமெரிக்க டொலர் | 182.7499 | 152.8548 |
| 1 சீன யுவான் (கரைகடந்த) | 26.5988 | 23.4847 |

நிதியல்லாத விடயங்கள் ஆரம்பக் கொடுக்கல்வாங்கல் நடைபெற்ற திகதியன்று உள்ளவாறான செலாவணி வீதத்தைப் பயன்படுத்தி, வெளிநாட்டுச் செலாவணியின் வரலாற்றுச் செலவின் அடிப்படையில் அளவிடப்பட்டுள்ளன.

**5.2 சீர்மதிப்புப் பெறுமதி அளவீடு**

வங்கி ஒவ்வொரு அறிக்கையிடல் திகதியிலும் வெளிநாட்டுப் பிணையங்கள், பெறுதிகள் போன்ற நிதியியல் சாதனங்களையும் தங்கம் போன்ற நிதியல்லாச் சொத்துக்களையும் சீர்மதிப்புப் பெறுமதியில் அளவிடுகின்றது. பதிவழிப்புச் செலவில் அளவிடப்பட்ட நிதியியல் சாதனங்களின் சீர்மதிப்புப் பெறுமதி குறிப்பு 53இல் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

சீர்மதிப்புப் பெறுமதி என்பது அளவிடுகின்ற திகதியில் சொத்தொன்றினை விற்பது தொடர்பில் பெறப்படுகின்ற அல்லது சந்தைப் பங்கேற்பாளர்களுக்கிடையிலான கொடுக்கல்வாங்கல்களின் பொருட்டு பொறுப்பொன்றினை மாற்றல் செய்வதற்கான கொடுப்பனவு எனப் பொருள்படும். சீர்மதிப்புப் பெறுமதி அளவீடு சொத்துக்களை விற்றல் அல்லது பொறுப்புக்களை மாற்றல் செய்தல் தொடர்பாக பின்வரும் இடமொன்றில் இடம்பெறும் கொடுக்கல்வாங்கல்களின் ஊகங்களை அடிப்படையாகக் கொண்டதாகும்.

- சொத்து அல்லது பொறுப்பிற்கான முதன்மைச்சந்தை, அல்லது
- முதன்மைச் சந்தை இல்லாத போது சொத்து அல்லது பொறுப்பிற்கு மிக அநுகூலம் நிறைந்த சந்தை

முதன்மை அல்லது மிக அநுகூலம் நிறைந்த சந்தை வங்கியினால் அணுகப்படக்கூடியதாக இருத்தல் வேண்டும்.

சொத்தொன்றின் அல்லது பொறுப்பொன்றின் சீர்மதிப்புப் பெறுமதியானது சந்தைப் பங்கேற்பாளர்கள் தமது சிறந்த பொருளாதார நலனைக் கருத்திற் கொண்டு செயற்படுவர் என்ற கருகோளைப் பயன்படுத்தி அளவிடப்படுகின்றது. நிதியல்லாச் சொத்தொன்றின் சீர்மதிப்புப் பெறுமதி சொத்தினை மிக உயர்ந்த விதத்திலும் சிறந்த முறையிலும் பயன்படுத்துவதன் மூலம் அல்லது சொத்தினை மிக உயர்ந்த விதத்திலும் சிறந்த முறையிலும் பயன்படுத்தக்கூடிய இன்னொரு சந்தைப் பங்கேற்பாளருக்கு விற்பதன் மூலம் பொருளாதார நன்மைகளை உருவாக்கக்கூடிய சந்தைப் பங்கேற்பாளர்களின் இயலாற்றலைக் கணக்கில் கொண்டு அளவிடப்படுகிறது.

வங்கி சூழ்நிலைக்குப் பொருத்தமானதும் இதற்காகத் தொடர்பான அவதானிக்கத்தக்க உள்ளீடுகளை உச்சப்படுத்துகின்றதும் அவதானிக்கப்பட முடியாத உள்ளீடுகளை மிகக் குறைப்பதுமான சீர்மதிப்புப் பெறுமதிகளை அளவிடுவதற்குப் போதுமான தரவுகள் கிடைக்கத்தக்கதாகவுள்ள மதிப்பீட்டு நுணுக்கங்களை பயன்படுத்துகின்றது.

நிதியியல் கூற்றுக்களில் அளவிடப்பட்ட அல்லது வெளிப்படுத்தப்பட்ட சீர்மதிப்புப் பெறுமதிகளுக்கான அனைத்துச் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் சீர்மதிப்புப் பெறுமதிகளின் அடிப்படையில் வகைப்படுத்தப்பட்டு பொதுவாக சீர்மதிப்புப் பெறுமதியின் அளவிடலுக்குப் போதுமானதாக விளங்கும் குறைந்த மட்டத்தின் அடிப்படையில் பின்வருமாறு விபரிக்கப்பட்டுள்ளன.

மட்டம் 1 - ஒரே மாதிரியான சொத்துக்கள் அல்லது பொறுப்புக்களுக்கான செயற்படுகின்ற சந்தையில் விலைக்குறிப்பீடு செய்யப்பட்ட (சீராக்கப்படாத) சந்தை விலைகள்.

மட்டம் 2 - பெறுமதியிடல் நுணுக்கங்களுக்கான சீர்மதிப்புப் பெறுமதியினை அளவிடுவதற்கு குறிப்பிடத்தக்கதாக விளங்கும் குறைந்தமட்ட உள்ளீடு நேரடியாகவோ மறைமுகமாகவோ அவதானிக்கப்படுதல்.

மட்டம் 3 - பெறுமதியிடல் நுணுக்கங்களுக்கான சீர்மதிப்புப் பெறுமதியினை அளவிடுவதற்குக் குறிப்பிடத்தக்கதாக விளங்கும் குறைந்தமட்ட உள்ளீடு அவதானிக்கப்பட முடியாதவை.

மீண்டெழும் அடிப்படையில் நிதியியல் கூற்றுக்களில் இனங்காணப்பட்டுள்ள சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களுக்காக வங்கியானது ஒவ்வொரு அறிக்கையிடும் காலப்பகுதியின் முடிவிலும் ஒழுங்கமைப்பிலுள்ள மட்டங்களுக்கிடையில் ஏதேனும் மாற்றங்கள் இடம்பெற்றுள்ளதாவென வகையிடலை மீளமதிப்பிடுவதன் மூலம் (முழுமையான சீர்மதிப்புப் பெறுமதி அளவீட்டிற்கு குறிப்பிடத்தக்கதாக விளங்கும் குறைந்த மட்ட உள்ளீடுகளின் அடிப்படையில்) நிர்ணயிக்கிறது.

### 5.3 நிதியியல் சொத்துக்கள் மற்றும் நிதியியல் பொறுப்புகள்

வங்கியானது, நிதியியல் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களையும் அத்துடன், இணைந்த வருமானம் மற்றும் செலவுகளையும், வெளிநாட்டு நாணய மற்றும் உள்நாட்டு நாணய நடவடிக்கைகளை வேறுபடுத்திக் காட்டுவதன் மூலமே சமர்ப்பிக்கின்றது. வெளிநாட்டு நாணய நடவடிக்கைகள் முக்கியமாக வங்கியின் வெளிநாட்டு ஒதுக்குகளின் முகாமைத்துவத் தொழிற்பாட்டிலிருந்தே உருவாகின்றன. உள்நாட்டு நாணய நடவடிக்கைகள் முக்கியமாக நாணயக் கொள்கை நடைமுறைப்படுத்தல், ரூபா நாணயங்களின் வெளியீடு மற்றும் வங்கித்தொழில் நடவடிக்கைகள் என்பவற்றுடன் தொடர்புடைய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களைப் பிரதிபலிக்கின்றன.

இந்நடவடிக்கைகளைத் தனித்தனியாக அறிக்கையிடுவது வங்கியின் நிதியியல் நிலைமை, நிதியியல் செயலாற்றுகை மற்றும் இடர்நேர்வுத் தோற்றப்பாட்டினை சிறந்த முறையில் முன்வைப்பதாகக் கருதப்படுகின்றது. வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு நாணயங்களின் நடவடிக்கைகளை இணைத்து அறிக்கையிடுதல் நிதியியல் கூற்றுக்களின் தகவல் பெறுமதியை நலிவுறச் செய்யுமென வங்கி கருதுகின்றது.

#### 5.3.1 அங்கீகரித்தல் மற்றும் ஆரம்ப அளவீடு

கருத்திற்கொண்ட விடயத்தின் சீர்மதிப்புப் பெறுமதி தரப்பட்டு, முதலீட்டுடன் தொடர்புடைய கொள்வனவுக் கட்டணங்களும் தரப்படுகையில் அனைத்து நிதியியல் சொத்துக்களும் பொறுப்புகளும் ஆரம்பத்தில் செலவில் அங்கீகரிக்கப்படுகின்றன. ஆரம்ப அங்கீகரிப்பின் பின்னர் நிதியியல் சொத்துக்களின் ஒவ்வொரு தனிப்பட்ட விடயத்திற்குமான அளவீடுகள் 2018 சனவரி 1 இலிருந்து பிரயோகிக்கத்தக்க கொள்கைகளுக்குப் பின்னர் விபரிக்கப்பட்டுள்ளன. நிதியியல் சொத்துக்கள் மற்றும் பொறுப்புகளின் அனைத்து கிரமமான வழி கொள்வனவுகள் மற்றும் விற்பனைகள் முறையே வர்த்தகத் திகதியில் அங்கீகரிக்கப்படுகின்றன. கிரமமான வழி கொள்வனவு அல்லது விற்பனை என்பது பொதுவாக சந்தையின் மரபு அல்லது ஒழுங்குமுறையால் உருவாக்கப்பட்ட காலவரம்பிற்குள் சொத்துக்களின் கையளிப்பை தேவைப்படுத்தும் நிதியியல் சொத்துக்களின் கொள்வனவு அல்லது விற்பனையாகும்.

#### 5.3.2 (அ) வகைப்படுத்தல்

**2018 சனவரி 1இல் இருந்து பிரயோகிக்கப்படும் கொள்கை**

**நிதியியல் சொத்துக்கள்**

ஆரம்ப அங்கீகரிப்பில், வங்கியானது கீழ்வரும் செலவுகளில் அளவிடப்பட்ட நிதியியல் சொத்துக்களை வகைப்படுத்துகிறது;

- பதிவழிக்கப்பட்ட செலவு
- ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தின் ஊடான சீர்மதிப்புப் பெறுமதி
- இலாபம் அல்லது நட்டத்தின் ஊடான சீர்மதிப்புப் பெறுமதி

ஒரு நிதியியல் சொத்தானது கீழ்வரும் இரு நிபந்தனைகளையும் பூர்த்திசெய்து இலாபம் மற்றும் நட்டத்தினூடான சீர்மதிப்புப் பெறுமதியில் குறித்துரைக்கப்படாத போது பதிவழிக்கப்பட்ட செலவில் அளவிடப்படுகிறது.

- ஒப்பந்த ரீதியான காசுப்பாய்ச்சல்களை சேகரிப்பதற்காக சொத்துக்களை வைத்திருக்கும் நோக்குடைய வியாபார மாதிரி ஒன்றினுள் சொத்து வைத்திருக்கப்படுதல்; மற்றும்
- நிதியியல் சொத்தின் ஒப்பந்த நியதிகளானவை முதல் மற்றும் வட்டிக்கொடுப்பனவை மட்டும் உள்ளடக்கிய காசுப்பாய்ச்சலுக்கான குறித்துரைக்கப்பட்ட திகதிகளை வழங்கும்.

ஒரு நிதியியல் சொத்தானது கீழ்வரும் இரு நிபந்தனைகளையும் பூர்த்தி செய்து இலாபம் அல்லது நட்டத்தினூடான சீர்மதிப்புப் பெறுமதியில் குறித்துரைக்கப்படாத போது ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தின் ஊடான சீர்மதிப்புப் பெறுமதியில் அளவிடப்படுகின்றது.

- ஒப்பந்த ரீதியான காசுப்பாய்ச்சல்களை சேகரித்தல் மற்றும் நிதியியல் சொத்துகளை விற்றல் இரண்டின் மூலமும் குறிக்கோளை அடைந்துகொள்ளும் வியாபார மாதிரி ஒன்றினுள் சொத்து வைத்திருக்கப்படுதல்; மற்றும்
- நிதியியல் சொத்தின் ஒப்பந்த நியதிகளானவை முதல் மற்றும் வட்டிக்கொடுப்பனவை மட்டும் உள்ளடக்கிய காசுப் பாய்ச்சலுக்கான குறித்துரைக்கப்பட்ட திகதிகளை வழங்கும்.

வர்த்தகத்திற்காக வைத்திருக்கப்படாத பங்குரிமை முதலீட்டின் ஆரம்ப அங்கீகரிப்பின் போது வங்கியானது சீர்மதிப்புப் பெறுமதியில் அடுத்துவரும் மாற்றங்களை ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தில் காட்டுவதற்கு மாற்றமுடியாதபடி தெரிவுசெய்யலாம். ஏனைய அனைத்து நிதியியல் சொத்துக்களும் இலாபம் அல்லது நட்டத்தினூடான சீர்மதிப்புப் பெறுமதியில் அளவிடப்பட்டு வகைப்படுத்தப்படுகின்றன.

**வியாபார மாதிரி மதிப்பீடு**

வங்கியானது சொத்தொன்று சொத்துப்பட்டியல் மட்டம் வைத்திருக்கப்படும் வியாபார மாதிரியின் குறிக்கோளின் மதிப்பீடு ஒன்றினை மேற்கொள்கின்றது. ஏனெனில் இது வியாபாரம் முகாமை செய்யப்படும் விதம் மற்றும் முகாமைத்துவத்திற்கு தகவல் வழங்கப்படும் விதம் பற்றி சிறப்பாக பிரதிபலிக்கின்றது. கவனத்திலெடுக்கப்படும் தகவலானது பின்வருவனவற்றை உள்ளடக்கி இருப்பதோடு இது இதற்கு மட்டும் மட்டுப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

- வியாபார மாதிரியின் செயலாற்றம் மற்றும் அவ்வியாபார மாதிரியில் வைத்திருக்கப்படும் சொத்துக்கள் எவ்வாறு மதிப்பிடப்பட்டு நிறுவனத்தின் முக்கிய முகாமைத்துவ ஆளணியினருக்கு அறிக்கையிடப்படுகின்றன.
- வியாபார மாதிரியின் (மற்றும் அவ்வியாபார மாதிரியினுள் வைத்திருக்கப்படும் நிதியியல் சொத்துக்கள்) செயலாற்றத்தினைப் பாதிக்கும் இடர்நேர்வுகள் மற்றும், குறிப்பாக இவ்வுடர்நேர்வுகள் முகாமை செய்யப்படும் விதம்
- விற்பனையின் எதிர்பார்க்கப்படும் தடவைகள், பெறுமதி மற்றும் காலக்கிரமம் என்பனவும் வங்கி மதிப்பீட்டின் முக்கிய அம்சங்களாகும். முன்னைய காலங்களின் விற்பனையின் தடவைகள், அளவு மற்றும் காலக்கிரமம் அத்தகைய விற்பனைக்கான காரணங்கள் மற்றும் எதிர்கால விற்பனை நடவடிக்கை தொடர்பான அதன் எதிர்பார்ப்புகள் எனினும்,

விற்பனை நடவடிக்கை தொடர்பான தகவலானது தனியாக கருத்திற்கொள்ளப்படுவதில்லை, மாறாக இது நிதியியல் சொத்துக்களை முகாமை செய்வதற்கான வங்கியின் கூறப்பட்ட குறிக்கோள் எவ்வாறு அடையப்படுகின்றது மற்றும் காசுப்பாய்ச்சல்கள் எவ்வாறு தேறல் செய்யப்படுகின்றன என்பது தொடர்பான ஒட்டுமொத்த மதிப்பீட்டின் ஒரு பகுதியாகும்.

வர்த்தகத்திற்காக வைத்திருக்கப்பட்டு அல்லது முகாமைப்படுத்தப்பட்டு சீர்மதிப்புப் பெறுமதியில் அவற்றின் செயலாற்றம் மதிப்பிடப்படும் நிதியியல் சொத்துக்கள் இலாபம் அல்லது நட்டத்தின் ஊடான சீர்மதிப்புப் பெறுமதியில் அளவிடப்படுவதற்கான காரணம் அவை ஒப்பந்த ரீதியான காசுப்பாய்ச்சல்களை சேகரிப்பதற்காகவோ அல்லது ஒப்பந்த ரீதியான காசுப்பாய்ச்சல்களை சேகரிப்பதுடன் நிதியியல் சொத்துக்களை விற்பதற்காகவோ வைத்திருக்காமை ஆகும்.

**ஒப்பந்த ரீதியான காசுப்பாய்ச்சல்கள் முதல் மற்றும் வட்டியின் தனிக்கொடுப்பனவா என்பதை மதிப்பிடுதல்**

நிதியியல் சொத்துக்கள் முதல் மற்றும் வட்டியின் தனிக்கொடுப்பனவு பரீட்சிப்பை பூர்த்திசெய்வதனை கண்டறிவதற்காக நிதியியல் சொத்துக்களின் ஒப்பந்த ரீதியான நியதிகளை வங்கி மதிப்பிடுகின்றது. இம்மதிப்பீட்டு நோக்கத்திற்காக ‘முதல்’ என்பது ஆரம்ப அங்கீகரிப்பின் போது நிதியியல் சொத்தின் சீர்மதிப்புப் பெறுமதி எனவும் “வட்டி” என்பது பணத்தின் காலப்பெறுமதி, குறிப்பிட்ட காலப்பகுதியொன்றில் காலப்பகுதியொன்றில் வெளிநின்ற முதல் தொகையுடன் தொடர்புபட்ட கொடுகடன் இடர்நேர்வு மற்றும் ஏனைய அடிப்படை கடன்வழங்கல் இடர்நேர்வுகள் மற்றும் செலவுகள் என்பவற்றுக்கான கைமாறு எனவும் வரைவிலக்கணப்படுத்தப்படுகின்றது.

ஒரு கடன் வழங்கல் உடன்படிக்கையினுள் காணப்படும் வட்டியினது மிக முக்கியமான கூறாகக் காணப்படுவது பணத்தின் காலப்பெறுமதி மற்றும் கொடுகடன் இடர்நேர்வாகும். முதல் மற்றும் வட்டியின் தனிக்கொடுப்பனவின் மதிப்பீட்டினை மேற்கொள்ளுவதற்கு, வங்கியானது மதிப்பாய்வுகளை பிரயோகிப்பதுடன், நிதியியல் சொத்து குறித்துரைக்கப்பட்டிருக்கும் நாணயம் மற்றும் வட்டிவீதம் தீர்மானிக்கப்பட்டிருக்கும் காலப்பகுதி போன்ற தொடர்புடைய காரணிகளைக் கருத்திற்கொள்கின்றது.

மாறாக அடிப்படையான கடன்வழங்கல் ஒழுங்கிற்கு தொடர்புபடாத ஒப்பந்த ரீதியான காசுப்பாய்ச்சல்களின் இடர்நேர்வு அல்லது தளம்பல்களுக்கு குறைந்தபட்ச வெளிப்படுத்துகையை விட அதிகமாக தேவைப்படுத்தும் ஒப்பந்த ரீதியான நியதிகள் வெளிநின்ற தொகை மீதான முதல் மற்றும் வட்டியின் தனிக்கொடுப்பனவுகளைக் கொண்ட ஒப்பந்த ரீதியான காசுப்பாய்ச்சலை தோற்றுவிக்காது. அத்தகைய சந்தர்ப்பங்களில், நிதியியல் சொத்தானது இலாபம் அல்லது நட்டத்தின் ஊடான சீர்மதிப்புப் பெறுமதியில் அளவிடுவதற்கு தேவைப்படுத்தப்படுகின்றது.

**மீள்வகைப்படுத்தல்**

நிதியியல் சொத்துக்களை முகாமைப்படுத்துவதற்காக வங்கி அதன் வியாபார மாதிரியை மாற்றியதற்கு பின்னரான காலப்பகுதி தவிர, நிதியியல் சொத்துக்கள் அவற்றின் ஆரம்ப அங்கீகரிப்பின் பின்னர் மீள்வகைப்படுத்தப்படுவதில்லை.

**5.3.2 (ஆ) வகைப்படுத்தல்**

**2018 சனவரி 1இற்கு முன்னர் பிரயோகிக்கப்பட்ட கொள்கை**

**நிதியியல் சொத்துக்கள்**

பன்னாட்டு கணக்கீட்டு நியமம் 39 கீழ் வங்கியானது பின்வரும் வகைகளில் ஒன்றில் நிதியியல் சொத்துக்களை வகைப்படுத்துகின்றது.

- கடன்கள் மற்றும் பெறத்தக்கவைகள்
- முதிர்ச்சிக்காலம் வரை வைத்திருக்கப்படுபவை
- விற்பனைக்கென உள்ளவை அல்லது இலாபம் அல்லது நட்டத்தினூடாக சந்தைப்பெறுமதியில் மற்றும் பின்வரும் வகைக்குள்,
    - வர்த்தகத்திற்கென வைத்திருக்கப்படுபவை
    - இலாபம் அல்லது நட்டத்தினூடாக சீர்மதிப்புப் பெறுமதியில் நிர்ணயிக்கப்பட்டவை

**நிதியியல் பொறுப்புகள்**

வங்கியானது அதன் நிதியியல் பொறுப்புகளை பதிவழிக்கப்பட்ட செலவில் அளவிடுகின்றவாறு வகைப்படுத்துகின்றது.

**5.3.3 விலக்குதல்**

**நிதியியல் சொத்துக்கள்**

வங்கியானது நிதியியல் சொத்தில் இருந்தான காசுப்பாய்ச்சல்களுக்கான ஒப்பந்த ரீதியான உரிமை காலாவதியாகும் போது அல்லது நிதியியல் சொத்தின் உடமையினது குறிப்பிடத்தக்க அனைத்து இடர்நேர்வுகள் மற்றும் பயன்கள் மாற்றல் செய்யப்பட்ட கொடுக்கல்வாங்கலில் ஒப்பந்த ரீதியான காசுப்பாய்ச்சலினை பெறுவதற்கான உரிமையை மாற்றல்செய்யும் போது அல்லது வங்கி உடமையின் குறிப்பிடத்தக்க அனைத்து இடர்நேர்வுகள் மற்றும் பயன்களை வைத்திருக்காமல் அல்லது மாற்றல் செய்யாமல் இருப்பதுடன் நிதியியல் சொத்தின் கட்டுப்பாட்டை கொண்டிருக்காத போது நிதியியல் சொத்தொன்றினை அங்கீகரிப்பிலிருந்தும் விலக்குகின்றது.

நிதியியல் சொத்தொன்றின் விலக்கலின்போது சொத்தின் கொண்டு செல்லப்படும் பெறுமதிக்கும் அல்லது விலக்கப்படும் சொத்தின் பகுதிக்கு ஒதுக்கப்பட்ட கொண்டு செல்லல் பெறுமதிக்கும் (i) பெறப்பட்ட விலை (பெறப்பட்ட ஏதாவது புதிய சொத்திலிருந்து உறப்பட்ட ஏதாவது பொறுப்பை கழித்தவை உள்ளடங்கலாக மற்றும் (ii) ஏனைய அனைத்தையுமுள்ளக்கிய வருமானத்தில் காட்டப்பட்ட ஏதாவது ஒன்றுசேர்ந்த இலாபம் அல்லது நட்டம் என்பவற்றின் கூட்டுத்தொகைக்கு இடையிலான வேறுபாடு இலாபம் அல்லது நட்டத்தில் காட்டப்படுகிறது.

2018 சனவரி 1 இலிருந்து ஏனைய அனைத்தையுமுள்ளக்கிய வருமானத்தின் ஊடாக சீர்மதிப்பு பெறுமதியில் நிர்ணயிக்கப்பட்ட பங்குரிமை முதலீட்டுப் பிணையங்கள் தொடர்பில் ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தில் காட்டப்பட்ட ஏதாவது ஒன்றுசேர்ந்த இலாபங்கள் அல்லது நட்டங்கள், அத்தகைய பிணையங்கள் விலக்கப்படும்போது இலாபம் அல்லது நட்டத்தில் காட்டப்படமாட்டா. வங்கியினால் உருவாக்கப்பட்ட அல்லது வைத்திருக்கப்பட்ட விலக்கல்களுக்கு தகுதியான மாற்றல் செய்யப்படும் நிதியியல் சொத்தில் இருக்கும் ஏதாவது வட்டியானது தனியான சொத்தொன்றாக அல்லது பொறுப்பொன்றாக காட்டப்படுகின்றது.

வங்கியானது கொடுக்கல்வாங்கல்களில் ஈடுபடுவதன் மூலம் அதன் நிதியியல் நிலைமைக் கூற்றில் காட்டப்பட்ட சொத்துக்களை மாற்றல் செய்கின்றது. எனினும், அது ஒன்றில் மாற்றல் செய்யப்படும் சொத்துக்களின் குறிப்பிடத்தக்க அனைத்து இடர்நேர்வுகள் மற்றும் பயன்களையோ அல்லது அதன் ஒரு பகுதியையோ வைத்துக்கொள்கின்றது. அத்தகைய சந்தர்ப்பங்களில், மாற்றல் செய்யப்பட்ட சொத்துக்கள் விலக்கப்படுவதில்லை. அத்தகைய கொடுக்கல்வாங்கல்களுக்கு உதாரணங்களாக பிணையங்களின் கடன்வழங்கல் மற்றும் விற்பனை மற்றும் மீள்கொள்வனவு கொடுக்கல்வாங்கல்களை குறிப்பிடலாம். வங்கியானது நிதியியல் சொத்தொன்றின் உடமையின் குறிப்பிடத்தக்க அனைத்து இடர்நேர்வுகள் மற்றும் பயன்களை வைத்திருக்காமலோ அல்லது மாற்றல் செய்யாமலோ இருந்து அச்சொத்தின் கட்டுப்பாட்டைக் கொண்டிருக்கும் கொடுக்கல்வாங்கல்களில், மாற்றல் செய்யப்பட்ட சொத்தின் பெறுமதியிலான மாற்றங்களுக்கு அது வெளிப்படுத்தப்படும் அளவினால் தீர்மானிக்கப்பட்டவாறு அதன் தொடர்ச்சியான ஈடுபாட்டின் அளவிற்கு வங்கி தொடர்ந்து அங்கீகரிக்கும்.

**நிதியியல் பொறுப்புக்கள்**

நிதியியல் பொறுப்பின் ஒப்பந்த ரீதியான கடப்பாடுகள் இடைநிறுத்தப்படுகையில் அல்லது நிறுத்தப்படுகையில் அல்லது காலாவதியாகையில் வங்கி நிதியியல் பொறுப்பொன்றினை அங்கீகரிப்பில் இருந்தும் விலக்கும்.

**5.3.4 (அ) நிதியியல் சொத்துக்களின் சேத இழப்பு (2018 சனவரி 1 இலிருந்து பிரயோகிக்கப்படும் கொள்கை)**

இலாபம் அல்லது நட்டத்தினூடான சீர்மதிப்புப் பெறுமதியில் அளவிடப்படாத பின்வரும் நிதியியல் சாதனங்கள் தொடர்பிலான எதிர்பார்க்கப்படும் கொடுகடன் இழப்பிற்கான நட்ட படிகளை வங்கி அங்கீகரிக்கின்றது.

- ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தின் ஊடான சீர்மதிப்பு பெறுமதியிலான நிதியியல் சொத்துக்கள்
- பெறுமதியிழப்பு செலவிலான நிதியியல் சொத்துக்கள்
- பிரதேச அபிவிருத்தி திணைக்களத்தின் கொடுகடன் உத்தரவாத ஒப்பந்தங்கள்

பங்குரிமை முதலீடுகள் தொடர்பில் சேத இழப்பு அங்கீகரிக்கப்படுவதில்லை.

வங்கியானது முதலீட்டுத் தரத்தில் உள்ள (பிஏஏ3/பிபிபி- மற்றும் மேற்பட்ட தரமிடப்பட்டவை) முதலீடுகளுக்காக 12 மாத எதிர்பார்க்கப்படும் கொடுகடன் இழப்பிற்கு சமமான தொகையில் நட்டப்படியை அளவிடுகின்றது. ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தின் ஊடான சீர்மதிப்புப் பெறுமதியில் அல்லது பதிவழிக்கப்பட்ட செலவில் வகைப்படுத்தப்படும் வங்கியின் பெரும்பாலான முதலீடுகள் பிஏஏ 3/ பிபிபி- தரத்திற்கு மேற்பட்டவையாகவே இருக்கின்றன. 12 மாத எதிர்பார்க்கப்பட்ட கொடுகடன் இழப்பு அங்கீகரிக்கப்பட்ட நிதியியல் சாதனங்கள் "கட்டம் 1 நிதியியல் சாதனங்கள்" என குறிப்பிடப்படுகின்றன.

ஆரம்ப அங்கீகரிப்பின் போது முதலீட்டுத் தரத்திற்கு கீழ் இருக்கும் அல்லது பீஏஏ 3/பிபிபி-இற்கு கீழ் அவற்றின் கொடுகடன் இடர்நேர்வு தேய்வடையும் அல்லது ஆரம்ப அங்கீகரிப்பின் பின்னர் தவணை தவறுதல் நிகழ்தகவு இரட்டிப்பாகிய சாதனங்களுக்கு ஆயுட்கால எதிர்பார்க்கப்படும் கொடுகடன் இழப்பு கணிக்கப்படுகின்றது. ஆயுட்கால எதிர்பார்க்கப்படும் கொடுகடன் இழப்பு அங்கீகரிக்கப்பட்டு கொடுகடன் பெறுமதி இழக்காத நிதியியல் சாதனங்கள் 'கட்டம் 2 நிதியியல் சாதனங்கள்' எனக் குறிப்பிடப்படுகின்றன. "கட்டம் 3 நிதியியல் சாதனங்கள்" எனக் குறிப்பிடப்படும். கொடுகடன் பெறுமதி இழந்த நிதியியல் சாதனங்களுக்கும் ஆயுட்கால எதிர்பார்க்கப்படும் கொடுகடன் இழப்பு கணிக்கப்படும்.

**எதிர்பார்க்கப்படும் கொடுகடன் நட்டத்தின் அளவீடு**

எதிர்பார்க்கப்படும் கொடுகடன் இழப்பு கணிப்பீட்டின் பொறிமுறையானது முக்கிய கூறுகளுடன் கீழே விபரிக்கப்பட்டுள்ளது.

**தவணை தவறுதல் நிகழ்தகவு:** தவணை தவறுதல் நிகழ்தகவு என்பது தரப்பட்ட காலப்பகுதியொன்றில் தவணை தவறல்களின் சாத்தியத்தன்மையின் மதிப்பீடொன்றாகும். வசதியானது முன்னர் விலக்கப்படாமலிருந்து இன்னமும் சொத்துப்பட்டியலில் காணப்படுமாயின், தவணை தவறுதலானது மதிப்பிடப்படும் காலப்பகுதியில் குறிப்பிட்ட ஒரு நேரத்தில் மாத்திரம் ஏற்பட முடியும். வங்கியானது ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தினூடான சீர்மதிப்புப் பெறுமதி மற்றும் பதிவழிக்கப்பட்ட செலவிலான அதன் அனைத்து வெளிநாட்டு முதலீடுகளுக்காக புளூம்போர்க்கிடமிருந்தான வழங்குநர்கள் அல்லது இணைந்த தரப்பினரின் குறிப்பிட்ட பங்குரிமை தவணை தவறல் நிகழ்தகவைப் பயன்படுத்துவதுடன், பங்குரிமை தவணை தவறல் நிகழ்தகவு காணப்படாத சந்தர்ப்பத்தில் தரப்பட்ட அறிக்கையிடல் திகதியில் புளூம்போர்க் பொதுவான தவணை தவறல் நிகழ்தகவில் இருந்து குறிப்பிட்ட வழங்குநர் அல்லது இணைத்தரப்பின் தரமிடலுக்கு பிரியோகிக்கத்தக்க தவணை தவறல் நிகழ்தகவைப் பயன்படுத்துகின்றது.

**தவணை தவறுதலின் போதான வெளிப்படுத்துகை:** தவணை தவறுதலின் போதான வெளிப்படுத்துகை என்பது, முதல் மற்றும் வட்டியின் மீள்கொடுப்பனவு, ஒப்பந்தத்தின் அல்லது வேறு ஏதாவது ஒன்றின் மூலம் அட்டவணையிடப்பட்டுள்ள ஒப்புக்கொண்ட வசதிகள் மீது எதிர்பார்க்கப்படும் குறைப்புக்கள் மற்றும் தவறவிடப்பட்ட கொடுப்பனவுகளிலிருந்தான அட்டுறு வட்டி போன்றவை உள்ளடங்களாக அறிக்கையிடப்பட்ட திகதிக்குப் பின்னர் வெளிப்படுத்துகையில் எதிர்பார்க்கப்படும் மாற்றங்களை கவனத்திற்கொண்டு எதிர்கால தவணை தவறல் திகதியில் வெளிப்படுத்துகையின் மதிப்பீடொன்றாகும்.

**இழப்பினை தருகின்ற தவணை தவறல்கள்:** இழப்பினைத் தருகின்ற தவணை தவறல்கள் என்பது குறிப்பிட்டதொரு நேரத்தில் தவணை தவறல் ஒன்று இடம்பெறுவதினால் ஏற்படும் இழப்பின் மதிப்பீடொன்றாகும். இது வரவேண்டிய ஒப்பந்த ரீதியான காசுப்பாய்ச்சலுக்கும் ஏதாவது பிணையத்திலிருந்து தேறிய தொகையுட்பட கடன்வழங்குநர் பெறுவதற்கு எதிர்பார்க்கும் தொகைக்கும் இடையிலான வேறுபாட்டை அடிப்படையாகக் கொண்டதாகும். வங்கியானது நிதியியல் சொத்துக்களின் வேறுபட்ட வகைகளுக்கு இழப்பினைத்தருகின்ற தவணைத் தவறல்களைப் பிரயோகிக்கையில் அவற்றின் வங்கிக்கான இடர்நேர்வு வெளிப்படுத்துகையின் அடிப்படையில் ஒப்புதலளிக்கப்பட்ட உள்ளகக் கொள்கையைக் கொண்டிருக்கின்றது.

**பொருளியல் காரணி சீராக்கம்:** வங்கியானது சுழற்சி முழுவதுக்குமான தவணை தவறல் நிகழ்தகவிலிருந்து குறிப்பிட்ட நேரத்திலுள்ள தவணை தவறல் நிகழ்வுகளுக்கு மாற்றுவதற்காக பொருளியல் காரணி சீராக்கத்தைப் பயன்படுத்துவதுடன் தவணை தவறல் நிகழ்தகவினை சீராக்கும் முக்கிய பொருளியல் காரணியாக வங்கி மொத்த உள்நாட்டு உற்பத்தி தரவைப் பயன்படுத்துகின்றது.

**கொடுகடன் இடர்நேர்வினை குறிப்பிடத்தக்க அதிகரிப்பை மதிப்பிடல்**

வங்கியானது ஆரம்ப அங்கீகரிப்பின் பின்னர் தவணை தவறல் நிகழ்தகவு இரட்டிப்பாகும்போதும் ஆரம்ப அங்கீகரிப்பின் பின்னர் பிபிபி- இற்குக் கீழான ஏதாவது தரமிடலில் கீழ்நோக்கிய திருத்தம் மேற்கொள்ளப்படுகையிலும் நிதியியல் சாதனம் குறிப்பிடத்தக்க அதிகரித்த இடர்நேர்வைக் கொண்டிருப்பதாகக் கருதுகின்றது. இது தவணை தவறல் நிகழ்தகவின் இரண்டு மடங்கு அல்லது அதற்கு அதிகமான அதிகரிப்பை தோற்றுவிக்கும் பிஏஏ3 இலிருந்து பிஏ1 இற்கான மிகச் சிறிய கீழ்நோக்கிய தரமிடல் உட்பட, முதலீட்டுத் தர தரமிடலிருந்து முதலீட்டுத் தரமல்லாத தரமிடல்களின் அவதானிப்புக்களை அடிப்படையாகக் கொண்டதாகும்.

**கொடுகடன் பெறுமதி இழந்த நிதியியல் சொத்துக்கள்**

ஒவ்வொரு அறிக்கையிடும் திகதியிலும் நிதியியல் சொத்து பதிவழிக்கப்பட்ட செலவில், ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தின் ஊடான சீர்மதிப்புப் பெறுமதியில் கொண்டு செல்லப்படுகின்றதா என்பதையும் கொடுகடன் உத்தரவாதங்கள் கொடுகடன் பெறுமதி இழந்தனவா ("கட்டம் 3 நிதியியல் சொத்துக்கள்" எனக் குறிப்பிடப்படும்) என்பது தொடர்பிலும் வங்கி மதிப்பிடும். ஒரு நிதியியல் சொத்தானது, நிதியியல் சொத்தின் மதிப்பிடப்பட்ட எதிர்கால காசுப்பாய்ச்சல்களுக்கு தீங்கான விளைவுகளை ஏற்படுத்தக்கூடிய ஒன்று அல்லது மேற்பட்ட நிகழ்வுகள் இடம்பெறும் சந்தர்ப்பத்தில் "கொடுகடன் பெறுமதி இழந்ததாக" கருதப்படும். நிதியியல் சொத்தொன்று கொடுகடன் பெறுமதி இழந்தற்கான சான்றுகள் பின்வரும் அவதானிக்கத்தக்க தரவுகளை உள்ளடக்கும்.

- கடன்பெறுநர் அல்லது வழங்குநரின் குறிப்பிடத்தக்க நிதியியல் இடர்ப்பாடு
- தவணை தவறல் அல்லது காலந்தவறல் நிகழ்வு போன்ற ஒப்பந்த மீறல்
- கடன்பெறுநர் வங்குரோத்துக்கு அல்லது ஏனைய நிதியியல் மீள்கட்டமைப்பிற்குள்ளாகப்போகிறார் என சாத்தியமாகத் தெரிதல்

**நிதியியல் நிலைமைக் கூற்றில் எதிர்பார்க்கும் கொடுகடன் இழப்பிற்கான படியின் சமர்ப்பிப்பு**

எதிர்பார்க்கும் கொடுகடன் இழப்பிற்கான நட்டம் படியானது நிதியியல் நிலைமைக்கூற்றில் பின்வருமாறு காட்டப்படுகின்றது.

- பதிவழிக்கப்பட்ட செலவில் அளவிடப்படும் நிதியியல் சொத்துக்கள்: சொத்துக்களின் மொத்த கொண்டு செல்லல் பெறுமதியிலிருந்தான குறைப்பொன்றாக;
- ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தின் ஊடான சீர்மதிப்புப் பெறுமதியில் அளவிடப்படும் முதலீடுகள் நிதியியல் நிலைமைக்கூற்றில் நட்டப்படி அங்கீகரிக்கப்படுவதில்லை ஏனெனில் இச்சொத்துக்களில் கொண்டுசெல்லல் பெறுமதி அவற்றின் சீர்மதிப்புப் பெறுமதியாகும். எனினும், நட்டப்படி வெளிப்படுத்தப்படுவதுடன் இது ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தில் அங்கீகரிக்கப்படுகின்றது.
- கொடுகடன் உத்தரவாத ஒப்பந்தங்கள்: பொதுவாக ஏற்பாடொன்றாக

**பதிவழிப்பு**

நிதியியல் சொத்தினை முழுமையாகவோ அல்லது அதன் பகுதியொன்றினையோ அறவிடுவதற்கு போதுமான எதிர்பார்ப்புக்கள் இல்லாதவிடத்து கடன்கள் மற்றும் படுகடன் பிணையங்கள் பதிவழிக்கப்படுகின்றன (ஒன்றில் பகுதியளவில் அல்லது முழுமையாக). பதிவழித்தலுடன் தொடர்புபட்ட தொகையில் மீளச்செலுத்துவதற்கு போதுமான காசுப்பாய்ச்சல்களை உருவாக்கக்கூடிய வருமான மூலங்களையோ அல்லது சொத்துக்களையோ கடன்பெறுநர் கொண்டிருக்கவில்லை என வங்கி தீர்மானிக்கும் சந்தர்ப்பத்தில் இது பொதுவான வழமையாகும். இம்மதிப்பீடானது தனிப்பட்ட சொத்து மட்டத்தில் மேற்கொள்ளப்படுகின்றது. முன்னர் பதிவழிக்கப்பட்ட தொகைகளின் அறிவிடலானது இலாப அல்லது நட்ட மற்றும் ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானக்கூற்றின் "நிதியியல் சாதனங்கள் மீதான பெறுமதி இழப்பு நட்டம்" இல் உள்ளடக்கப்படுகின்றன.

### 5.3.4 (ஆ) நிதியியல் சொத்துக்களின் பெறுமதி இழப்பு - (2018 சனவரி 1 இற்குப் முன்னர் பிரயோகிக்கப்பட்ட கொள்கை)

ஒவ்வொரு அறிக்கையிடல் திகதியிலும் நிதியியல் சொத்தொன்று பெறுமதி இழந்திருக்கின்றதா என வங்கி மதிப்பிடுகின்றது. பதிவழிக்கப்பட்ட செலவில் கொண்டு செல்லப்படும் கடன்கள் மற்றும் பெறத்தக்கவைகள் தொடர்பில் பெறுமதி இழப்பு நட்டம் ஏற்பட்டிருப்பதற்காக பாரபட்சமற்ற சான்று இருப்பின், நட்டத்தின் தொகையானது சொத்தின் கொண்டு செல்லப்படும் தொகைக்கும் நிதியியல் சொத்தின் ஆரம்ப பயனுறு வட்டிவீதத்தில் (அதாவது, ஆரம்ப அங்கீகரிப்பின் போது கணிக்கப்பட்ட பயனுறு வட்டிவீதம்) கழிவிடப்பட்ட மதிப்பிடப்பட்ட எதிர்கால காசுப்பாய்ச்சல்களின் நிகழ்காலப் பெறுமதிக்கும் இடையிலான வேறுபாடாக அளவிடப்படுகின்றது. சொத்தின் கொண்டு செல்லல் பெறுமதியானது ஒன்றில் நேரடியாகவோ அல்லது ஒரு படிக்கணக்கைப் பயன்படுத்தியோ குறைக்கப்பட வேண்டும். நட்டத்தின் தொகையானது வருமானக் கூற்றில் அங்கீகரிக்கப்பட வேண்டும்.

வங்கியானது முதலில் பெறுமதியிழப்பிற்கான பாரபட்சமற்ற சான்று இருக்கின்றதா என்பதை, தனிப்பட்ட ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த சொத்துக்களுக்கு தனித்தனியாகவும் தனிப்பட்ட ரீதியில் முக்கியத்துவமற்ற சொத்துக்களுக்கு கூட்டாகவும் மதிப்பிடும். தனியாக மதிப்பிடப்பட்ட நிதியியல் சொத்தொன்றுக்கு பெறுமதி இழப்பிற்கான பாரபட்சமற்ற சான்று இல்லை எனத் தீர்மானிக்கப்படின் முக்கியத்துவம் வாய்ந்ததோ இல்லையோ, அச்சொத்தானது அதேபோன்ற கொடுகடன் இடர்நேர்வுகளை கொண்ட நிதியியல் சொத்துக்களின் குழுமத்தில் உள்ளடக்கப்படுவதுடன் அச்சொத்துக்களின் குழுமமானது பெறுமதி இழப்பிற்காக கூட்டாக மதிப்பிடப்படும்.

தொடர்ந்துவரும் காலப்பகுதியொன்றில், பெறுமதி இழப்பு நட்டத்தின் தொகையானது குறைவடைந்து, அக்குறைவானது பெறுமதி இழப்பு அங்கீகரிப்பின் பின்னர் ஏற்படும் நிகழ்வொன்றுடன் பாரபட்சமின்றி தொடர்புபடுத்தக்கூடியதாகவிருப்பின் முன்னர் அங்கீகரிக்கப்பட்ட பெறுமதி இழப்பானது திருப்பப்படும். பெறுமதி இழப்பொன்றின் ஏதாவது திருப்பமானது திருப்பப்படும் திகதியில் சொத்தின் கொண்டு செல்லப்படும் பெறுமதியானது அதன் பதிவழிக்கப்பட்ட பெறுமதியை விட மிஞ்சாத அளவிற்கு, வருமானக் கூற்றில் அங்கீகரிக்கப்படும்.

விற்பனைக்கு கிடைக்கத்தக்க சொத்தொன்று பெறுமதி இழந்தால், அதன் கிரயத்திற்கும் (ஏதாவது முதல் தொகை மற்றும் பதிவழிப்பு கழித்தது) மற்றும் தற்போதைய சீர்மதிப்புப் பெறுமதியில் இருந்து இலாபம் அல்லது நட்டத்தின் முன்னர் அங்கீகரிக்கப்பட்ட ஏதாவது பெறுமதி இழப்பு நட்டம் கழித்த தொகைக்கும் இடையிலான வேறுபாட்டை உள்ளடக்கிய தொகையானது பங்குரிமையில் இருந்து வருமானக்கூற்றுக்கு மாற்றல் செய்யப்படும். விற்பனைக்கு கிடைக்கத்தக்கவை என வகைப்படுத்தப்பட்ட பங்குரிமை சாதனங்களைப் பொறுத்தவரையில் திருப்பமானது இலாபத்தில் அங்கீகரிக்கப்படாது. படுகடன் சாதனங்கள் தொடர்பான பெறுமதியிழப்பின் திருப்பமானது, சாதனத்தின் சீர்மதிப்பு பெறுமதியிலான அதிகரிப்பு, பெறுமதியிழப்பு இலாபம் அல்லது நட்டத்தில் அங்கீகரிக்கப்பட்டதன் பின்னர் ஏற்படும் நிகழ்வொன்றுடன் பாரபட்சமற்று தொடர்புபட்டதாக இருப்பின், இலாபம் அல்லது நட்டத்தின் ஊடாக திருப்பப்படும்.

### 5.4 இலாபம் அல்லது நட்டத்தின் ஊடாக சந்தைப் பெறுமதியிலான நிதியியல் சொத்துக்கள்

வர்த்தகப்படுத்தக்கூடியவற்றில் வகைப்படுத்தப்பட்டுள்ள நிதியியல் சொத்துக்கள் "இலாபம் அல்லது நட்டத்தின் ஊடாக சந்தைப்பெறுமதியிலான பிணையங்கள்" வகையில் உள்ளடக்கப்பட்டுள்ளன. ஆரம்ப அங்கீகரிப்பின் போது தொடர்புடைய கொடுக்கல்வாங்கல் செலவுகள் இலாபம் அல்லது நட்டத்தில் அவை இடம்பெறும் பொழுது அங்கீகரிக்கப்படுகின்றன. பின்னர் மேற்படி பிணையங்கள் விலைக்குறிப்பேடு செய்யப்பட்ட சந்தை விலைகளில் பெறுமதியிடப்படுகின்றன. சந்தைப்பெறுமதியிலான மாற்றங்கள் நிதியியல் நிலைமைக் கூற்றில் வர்த்தகப்படுத்தக்கூடிய பிணையங்கள் பெறுமதியில் அதிகரிப்பொன்றாகவோ அல்லது வீழ்ச்சியொன்றாகவோ காட்டப்படுகின்ற அதேநேரம் இதன் மூலம் எழும் இலாபங்களும் நட்டங்களும் வருமானக்கூற்றில் அங்கீகரிக்கப்படும்.

பிணையம் வங்கிக்குச் சொந்தமாக இருக்குமிடத்து இலாபம்/ நட்டம் "தேறல் செய்யப்படாத விலை மீள்பெறுமதியிடலிருந்தான இலாபமாக/ (நட்டமாக)" அறிக்கையிடப்படும். இலாபமோ/ நட்டமோ பெறப்படுமிடத்து (பிணையத்தினை விற்பதன் மூலம்) அது "தேறல் செய்யப்பட்ட மீள்மதிப்பீட்டிலிருந்து பெறப்பட்ட இலாபமாக/நட்டமாக" அறிக்கையிடப்படும்.

### 5.5 ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தின் ஊடான சீர்மதிப்பு பெறுமதியிலான நிதியியல் சொத்துக்கள்

ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தின் ஊடான சீர்மதிப்பு பெறுமதியிலான முதலீடுகள், ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தின் ஊடான சீர்மதிப்பு பெறுமதியாக குறித்துரைக்கப்பட்ட பெறுதியல்லா முதலீடுகள் அல்லது நிதியியல் சொத்துக்களின் ஏனைய வகையொன்றாக வகைப்படுத்தப்படாதவையாகும். ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தின் ஊடான சீர்மதிப்புப் பெறுமதியிலான முதலீடுகள் பங்குரிமைப் பிணையங்களையும் படுகடன் பிணையங்களையும் உள்ளடக்கியிருக்கும்.

ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தின் ஊடான சீர்மதிப்பு பெறுமதியிலான வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு நாணயப் படுகடன் பிணையங்கள் பின்னர் விலைக்குறிப்பீடு செய்யப்பட்ட சந்தை விலைகளில் பெறுமதியிடப்படுகின்றன. சந்தைப் பெறுமதியிலான மாற்றங்கள் நிதியியல் நிலைமைக்கூற்றில் ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தின் ஊடான சீர்மதிப்பு பெறுமதியில் உள்ள முதலீடுகளின் பெறுமதியிலான அதிகரிப்பொன்றாக அல்லது குறைவொன்றாக அங்கீகரிக்கப்படுகின்றன.

ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தினூடான சீர்மதிப்பு பெறுமதியிலான பங்குரிமை முதலீடுகள் பின்னர் விலைக்குறிப்பீடு செய்யப்பட்ட பெறுமதிகளின் கிடைப்பனவின்மை காரணமாக தொடர்பான நிறுவனங்களின் தேறிய சொத்துக்களின் அடிப்படையில் பெறுமதியிடப்படுகின்றன.

வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு நாணயப் படுகடன் பிணையங்கள் மற்றும் ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தின் ஊடான சீர்மதிப்புப் பெறுமதியிலான பங்குரிமை முதலீடுகளிலான சந்தைப் பெறுமதி மாற்றங்களிலிருந்து எழுகின்ற இலாபங்களும் நட்டங்களும் நேரடியாக பங்குரிமையில் (ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானம் அங்கீகரிக்கப்படுவதுடன் இது முதலீடு விற்கப்படும் வரை சேகரிக்க அல்லது வேறுவகையில் அகற்றப்படும் வரை அல்லது முதலீடு பெறுமதியிழக்கப்பட்டது என்று தீர்மானிக்கப்படும் வரை நிதியியல் நிலைமைக் கூற்றில் ஏனைய ஒதுக்கங்களின் கீழ் காட்டப்படுவதுடன் முன்னர் கூறப்பட்ட நிகழ்வுகளில் ஒன்று இடம்பெறும் நேரத்தில், அகற்றப்படுகையில் வருமானக்கூற்றுக்கு சுழற்சிப்படுத்தப்படாத பங்குரிமை முதலீடுகளின் சீர்மதிப்புப் பெறுமதி மாற்றங்களின் விதிவிலக்குடன், முன்னர் பங்குரிமையில் அறிக்கையிடப்பட்ட ஒன்றுசேர்ந்த இலாபம் அல்லது நட்டம் வருமானக்கூற்றில் உள்ளடக்கப்படுகின்றது.

வட்டி வருமானமானது பயனுறுதி வட்டி முறைமையைப் பயன்படுத்தி வருமானக்கூற்றில் அங்கீகரிக்கப்படுகின்றது.

**5.6 பெறுமதியிழப்புச் செலவில் வைத்திருக்கப்படும் சாதனங்கள்**

பன்னாட்டுக் கணக்கீட்டு நியமம் 39 இன் கீழ் கடன்கள் மற்றும் பெறத்தக்கவைகளாகவும் முதிர்ச்சிவரை வைத்திருக்கப்படும் சாதனங்களாகவும் வகைப்படுத்தப்பட்டவை பன்னாட்டு நிதியிடல் அறிக்கையிடல் நியமம் 9இன் கீழ் பெறுமதியிழப்புச் செலவு சாதனங்கள் என வகைப்படுத்தப்படுவதுடன் வங்கிகள்/ அரசாங்கத்திற்கு வழங்கப்பட்ட கடன்கள் மற்றும் நிலையான அல்லது தீர்மானிக்கக்கூடிய கொடுப்பனவுகள் மற்றும் நிலையான முதிர்ச்சியுடன் வங்கி முதிர்ச்சிவரை வைத்திருப்பதற்கான சாதகமான விருப்பம் மற்றும் இயலுமையைக் கொண்ட முதலீடுகள் என்பனவும் இதனுள் உள்ளடக்கப்படுகின்றன. இச்சாதனங்கள் பின்னர் பயனுறு வட்டிமுறையை பயன்படுத்தி பெறுமதியிழப்புச் செலவில் அளவிடப்படுகின்றன.

**5.7 நிதியியல் பெறுதிக் கருவிகள்**

வங்கி, குறுக்கு நாணய பரஸ்பர பரிமாற்றல், நாணயத்தேர்வுகள், முன்னோக்கிய வெளிநாட்டுச் செலாவணி ஒப்பந்தங்கள் போன்ற பெறுதிகளை இடர்நேர்வு முகாமைத்துவ நோக்கங்களுக்காக பயன்படுத்துகின்றதேயொழிய ஊக நோக்கங்களுக்காக அல்ல. பெறுதிகள் சீர்மதிப்புப் பெறுமதியில் குறிப்பிடப்படுவதுடன், சந்தைப் பெறுமதி நேர்க்கணியமாக இருக்குமிடத்தில் சொத்தாகவும், எதிர்க்கணியமாக இருக்குமிடத்தில் பொறுப்பாகவும் கொண்டு செல்லப்படும். பெறுதிகளின் சீர்மதிப்புப் பெறுமதியில் ஏற்படுகின்ற மாற்றங்கள் “தேறல் செய்யப்படாத விலை மதிப்பீட்டிருந்தான இலாபத்தில்/ (நட்டத்தில்)” உள்ளடக்கப்படுகின்றன.

கொடுக்கல்வாங்கல் விலையானது அதே சாதனத்தின் இன்னொரு அவதானிக்கக்கூடிய நடைமுறைச் சந்தைக் கொடுக்கல்வாங்கல்களின் சீர்மதிப்புப் பெறுமதியிலிருந்து அல்லது அவதானிக்கக்கூடிய சந்தைகளிலிருந்தான தரவை மட்டும் கொண்டிருக்கும் மாறிகளை அடிப்படையாகக் கொண்ட மதிப்பீட்டு முறைகளிலிருந்து வேறுபடுமாயின், வங்கியானது உடனடியாக கொடுக்கல்வாங்கல் விலைக்கும் சந்தைப் பெறுமதிக்கும் இடையிலான வேறுபாட்டை (ஒரு நாள் வேறுபாடு) “தேறல் செய்யப்படாத விலை மீள்மதிப்பீடுகளிலிருந்தான இலாபம்/ (நட்டம்)” ஆக அங்கீகரிக்கும் அவதானிக்க முடியாத தரவுகளைப் பயன்படுத்தி சந்தைப் பெறுமதியானது தீர்மானிக்கப்படும் சந்தர்ப்பங்களில், கொடுக்கல்வாங்கல் விலைக்கும் மாதிரிப் பெறுமதிக்குமிடையிலான வேறுபாடு, உள்ளீடுகள் அவதானிக்கக்கூடியதாக மாறும் போது, அல்லது சாதனத்தின் பதிவு நீக்கப்படும் போது மட்டுமே வருமானக் கூற்றில் அங்கீகரிக்கப்படும்.

**5.8 பன்னாட்டு நாணய நிதியத்துடன் (ப.நா.நி.) தொடர்புடைய நிலுவைகள்**

வங்கியானது இலங்கை அரசின் வைப்பாளராக செயற்படுவதனை காட்டிலும் அதன் சொந்த உரிமையுடன் பன்னாட்டு நாணய நிதியத்துடன் கொடுக்கல்வாங்கல்களில் ஈடுபடுகின்றது. அந்த அடிப்படையிலேயே ப.நா.நிதியத்துடனான வங்கியின் அனைத்து கொடுக்கல்வாங்கல்களும் இந் நிதியியல் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

ப.நா. நிதியத்துடனான அனுமதிப் பங்கு ஒரு சொத்தாக வங்கியினால் பதிவு செய்யப்படுவதுடன், அனுமதிப் பங்கிற்காக ப.நா. நிதியத்திற்கு செலுத்தப்பட வேண்டிய தொகை வங்கியின் பொறுப்பாகப் பதிவு செய்யப்படுகிறது. ப.நா. நிதியத்தினால் மேற்கொள்ளப்பட்ட சிறப்பு எடுப்பனவு உரிமைகளின் ஒன்று சேர்ந்த ஒதுக்குகள் பொறுப்பாகக் கணிக்கப்படுகின்றன. அனைத்து பன்னாட்டு நாணய நிதியத்துடன் தொடர்புடைய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் பயனுறு வட்டிவீத முறையைப் பயன்படுத்தி பதிவழிப்புச் செலவில் அங்கீகரிக்கப்படுகின்றன. ப.நா. நிதியத்தினால் வெளியிடப்பட்டவாறு அறிக்கையிடல் திகதியிலுள்ள செலாவணி வீதத்தினைப் பிரயோகித்து பன்னாட்டு நாணய நிதியச் சொத்துக்களினதும் பொறுப்புக்களினதும் மீள்பெறுமதியிடலிலிருந்து எழும் செலாவணி இலாபங்களும் நட்டங்களும் வருமானக் கூற்றில் அங்கீகரிக்கப்பட்டுள்ளன.

ப.நா. நிதியத்துடனான நிலுவைகள் தொடர்பான ஏனைய அனைத்துக் கட்டணங்களும் வட்டியும் வருமானக் கூற்றில் உடனடியாகப் பதிவு செய்யப்படுகின்றன.

**5.9 காசும் காசுக்குச் சமமானவைகளும்**

காசும் காசுக்கு சமமானவையும் வெளிநாட்டு வங்கிகள் மற்றும் நிதியியல் நிறுவனங்களிலுள்ள காசு, குறுங்கால வைப்புகள் மற்றும் அவற்றின் சந்தைப்பெறுமதி மாற்றங்களால் குறிப்பிடத்தக்க இடர்நேர்வில்லாத மூன்று மாதங்களுக்கு குறைந்த ஆரம்ப முதிர்ச்சியைக் கொண்ட உயர்ந்தளவு திரவத்தன்மையான நிதியியல் சொத்துக்கள் என்பவற்றை உள்ளடக்குவதுடன் இவை குறுங்கால கடப்பாடுகளை முகாமைப்படுத்துவதற்காக வங்கியினால் பயன்படுத்தப்படுகின்றன. காசு மற்றும் காசுக்குச் சமனானவைகள் நிதியியல் நிலைமைக் கூற்றில் பதிவழிப்புச் செலவில் கொண்டு செல்லப்படுகின்றன.

உள்நாட்டு நாணய நடவடிக்கைகளின் ஒரு பகுதியாக, இலங்கை மத்திய வங்கி குறிப்பிட்டதொரு வருமானத்தினை உருவாக்குவதுடன் செலவுகளையும் ஏற்கின்ற போதிலும் இவை காசின் நகர்வுடன் தொடர்புபட்டவையல்ல. இந் நடவடிக்கைகள் குறிப்பிட்ட சொத்துக்களையும் பொறுப்புக்களையும் தோற்றுவிப்பதுடன், முக்கியமாக இலங்கை அரசாங்கத்துடனான கொடுக்கல்வாங்கல்களையும் உள்நாட்டு வங்கிகள் மற்றும் நிதியியல் நிறுவனங்களுடனான கொடுக்கல்வாங்கல்களையும் உள்ளடக்குகின்றன. அரசாங்கத்துடனான கொடுக்கல்வாங்கல்கள் நாணயக் கொள்கைப் பொறிமுறையாக அரசாங்கத்தினால் வெளியிடப்பட்ட திறைசேரி உண்டியல்கள் மற்றும் திறைசேரி முறிகளின் கொள்வனவை உள்ளடக்குகின்றன. அத்தகைய கொள்வனவுகள், விற்பனைகள் மற்றும் அவற்றின் மீதான வட்டி என்பன இலங்கை மத்திய வங்கியின் பதிவுகளில் தனியே ஏட்டுப் பதிவுகளாகப் பிரதிபலிக்கப்படுகின்றன. இவை இந் நிதியியல் கூற்றில் 47, 48 ஆம் இலக்கக் குறிப்புகளில் தனித்தனியாக வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

தனி அதிகாரம் கொண்ட சட்டபூர்வமான நிறுவனமாக விளங்கும் இலங்கை மத்திய வங்கியானது நாணய விதிச் சட்டத்திற்கிணங்க பொதுமக்களுக்கான நாணயத்தினை வழங்குகின்றது. மத்திய வங்கியினால் வெளியிடப்பட்ட நாணயம் உடமையாளரின் பெயரில் மத்திய வங்கியின் மீதான கோரலாக இருப்பதனைப் பிரதிபலிக்கிறது. இது மத்திய வங்கியின் பொறுப்பொன்றாக இருக்கின்ற அதேநேரம் உடமையாளரின் கையிலுள்ள காசாகவும் இருக்கின்றது. சுற்றோட்டத்திலுள்ள நாணயத்தின் அசைவு, காசுப்பாய்ச்சல் கூற்றுக்களை சமர்ப்பித்தலில் மத்திய வங்கிகளிடையே

காணப்படும் தற்போதைய தொழிற்துறை நடைமுறைகளுடன் இசைந்துசெல்லும் விதத்தில் நிதியிடல் நடவடிக்கைகளின் ஒரு பகுதியாக உள்ளடக்கப்படுகின்றது.

இலங்கை மத்திய வங்கி காசு/கொடுப்பனவுக் கட்டளைகள் ஊடாக நாணயத் தாள்கள் மற்றும் குத்திகள் அல்லது மத்திய வங்கியின் பெயரில் எழுதப்பட்ட காசோலைகள் என்பன வடிவில், பெறப்பட்ட பொருட்கள் மற்றும் பணிகளுக்காக வழங்குநர்கள் மற்றும் ஊழியர்கள் என்போரை உள்ளடக்கிய பல்வேறுபட்ட பணம் கொடுபட வேண்டியோருக்கு காசு பகிர்ந்தளிக்கிறது. இது ஒன்றில் சுற்றோட்டத்திலுள்ள நாணயப் பொறுப்புடன் அல்லது வங்கிகள் மற்றும் நிதியியல் நிறுவனங்களினால் வைத்திருக்கப்படும் வைப்புக்களுடன் சேர்க்கப்படுகின்றது. இலங்கை மத்திய வங்கியின் கொடுப்பனவு நோக்கங்களுக்கான நாணயப் பயன்பாட்டின் அத்தகைய வடிவங்கள் இலங்கை மத்திய வங்கியின் காசு வெளிப்பாய்ச்சலில் ஒரு பகுதியை உருவாக்குகிறது.

காசுப்பாய்ச்சல் கூற்று நோக்கத்திற்காக, காசு மற்றும் காசிற்குச் சமமானவைகள் மேலே வரைவிலக்கணம் செய்யப்பட்டவாறு, காசு/வெளிநின்ற கொடுப்பனவுக் கட்டளைகளின் வெளிப்பாய்ச்சல் நீங்கலான, காசு மற்றும் காசிற்குச் சமமானவற்றை உள்ளடக்கியுள்ளன.

### 5.10 மீள்கொள்வனவு மற்றும் நேர்மாற்று மீள்கொள்வனவுக் கொடுக்கல்வாங்கல்கள்

மீள்கொள்வனவு உடன்படிக்கைகளின் கீழ் விற்பனை செய்யப்பட்ட பிணையங்கள் நிதியியல் நிலைமைக் கூற்றில் சொத்துக்களாகத் தொடர்ந்தும் பதிவு செய்யப்படுகின்றன. மீள்கொள்வனவு செய்வதற்கான கடப்பாடு (மீள்கொள்வனவு செய்வதற்கான உடன்படிக்கையின் கீழ் விற்கப்பட்ட பிணையங்கள்) பொறுப்பொன்றாக இனங்காணப்பட்டுள்ளது. மீள்கொள்வனவுகள் கொடுக்கல்வாங்கல்களில் விற்பனை விலைக்கும் மீள்கொள்வனவு விலைக்குமிடையேயான வேறுபாடும் நேர்மாற்று மீள்கொள்வனவு கொடுக்கல் வாங்கல்களில் கொள்வனவு விலைக்கும் விற்பனை விலைக்குமிடையேயான வேறுபாடும் முறையே செலவினத்தையும் வருமானத்தையும் பிரதிபலிப்பதுடன் இது வருமானக் கூற்றில் அங்கீகரிக்கப்படும்.

நேர்மாற்று மீள்கொள்வனவு உடன்படிக்கைகளின் கீழ் வைத்திருக்கப்படும் பிணையங்கள் (மீள்விற்பனை செய்வதற்கான உடன்படிக்கைகளின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட பிணையங்கள்) நிதியியல் நிலைமைக் கூற்றில் ஒரு சொத்தாகப் பதிவு செய்யப்படுகின்றன. மீள்கொள்வனவு மற்றும் நேர்மாற்று மீள்கொள்வனவு ஆகிய இரண்டும், அட்டுறு வருமானம் அல்லது செலவினம் ஏதுமிருப்பின் அவற்றை உள்ளடக்கி பதிவழிக்கப்பட்ட பெறுமதியில் அறிக்கையிடப்படுகின்றன.

### 5.11 துணைநில் வைப்பு மற்றும் துணைநில் கடன்வழங்கல் வசதிகள்

2014 பெப்புருவரி 1ஆம் நாளிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் துணைநில் வைப்பு வசதியானது (முன்னர் துணைநில் மீள்கொள்வனவு வசதி) பிணை ஒதுக்கங்கள் இல்லாத "தூய வைப்புக்கள்" ஆக மாற்றப்பட்டன. எனவே, பங்கேற்கின்ற நிறுவனங்கள் அவற்றின் மிகையான நிதியங்களை தூய வைப்புக்களாக துணைநில் வைப்பு வசதி வீதத்தில் நாளாந்த அடிப்படையில் முதலிடலாம்.

துணைநில் கடன் வழங்கல் வசதியின் (முன்னர் துணைநில் நேர்மாற்று மீள்கொள்வனவு, நேர்மாற்று மீள்கொள்வனவு வசதி) நடைமுறைகள் துணைநில் நேர்மாற்று மீள்கொள்வனவு வசதியினை ஒத்ததாகவே காணப்படுகின்றதுடன் இரண்டும் நிதியியல் நிலைமைக்கூற்றில் பெறுமதியிழப்புச் செலவில் அங்கீகரிக்கப்படுகின்றன.

### 5.12 இலங்கை மத்திய வங்கிப் பிணையங்கள்

வங்கியானது அதன் நாணயக் கொள்கைத் தொழிற்பாடுகளின் கீழ் சந்தையிலுள்ள மேலதிகத் திரவத் தன்மையை உள்ளீர்த்துக் கொள்ளும் பொருட்டு காலத்திற்குக் காலம் இ.ம.வ. பிணையங்களை வழங்குகின்றது. வழங்கப்படும் பிணையங்கள் பொறுப்புகளாகப் பதிவு செய்யப்படுகின்றன. வழங்கப்பட்ட விலைக்கும் சீர்மதிப்புப் பெறுமதிக்குமிடையிலான வித்தியாசம் வருமானக் கூற்றில் செலவாகப் பதிவு செய்யப்படுகின்றது.

### 5.13 இலங்கை அரச பிணையங்கள்

இலங்கை அரச பிணையங்கள் இலங்கை அரசிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்ட திறைசேரி உண்டியல்களை உள்ளடக்குகின்றது. இலங்கை அரச பிணையங்களிலான முதலீடுகள் நிதியியல் நிலைமை கூற்றில் ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தினூடான சீர்மதிப்பு பெறுமதியில் பதியப்படுகிறது.

### 5.14 அரசிற்கான தற்காலிக முற்பணங்கள்

1949ஆம் ஆண்டின் 58ஆம் இலக்க நாணய விதிச் சட்டத்தின் திருத்தப்பட்டவாறான பிரிவு 89இன் கீழ் இலங்கை அரசிற்கு வழங்கப்பட்ட நேரடி தற்காலிக முற்பணங்களை அரசிற்கான கடன்கள் பிரதிநிதித்துவப்படுத்துகின்றன. இவை பின்னர் பதிவழிப்புச் செலவில் பதியப்படுகின்றன.

### 5.15 ஏனைய நிறுவனங்களுக்கான கடன்கள்

ஏனைய நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட கடன்கள் பதிவழிப்புச் செலவில் அங்கீகரிக்கபட்டு கொண்டு செல்லப்படுகின்றன.

### 5.16 பிணையங்களின் கடன்பாடுகளும் பிணையங்களின் கடன் வழங்குதலும்

வங்கி அதன் நாணயக் கொள்கை தொழிற்பாடுகளின் கீழ் காலத்திற்குக் காலம் முக்கிய நிறுவன ரீதியான முதலீட்டாளர்களிடமிருந்து அரச பிணையங்களைக் கடன்படுகிறது. இவ்வாறு கடன்பட்ட பிணையங்கள் சந்தையில் காணப்படும் மிகையான திரவத்தன்மையினை ஈர்ப்பதற்காக மீள்கொள்வனவு தொழிற்பாடுகளுக்காகப் பயன்படுத்தப்படுகின்றன.

பிணையங்களின் கடன்பாடுகள் என்பது வங்கியிடமிருந்து அப் பிணையங்களை திருப்புவது, இணங்கப்பட்ட கட்டணத்தினை செலுத்துவது, வழங்கலின் போது ஏதேனும் தவறு இடம் பெறும் சந்தர்ப்பத்தில் சந்தை வீதங்களில் இழப்பீட்டினைச் செலுத்துவது (வங்கியின் பொதுப்படுகடன் திணைக்களத்தினால் முதனிலைச் சந்தை பங்கேற்பாளர்களுக்கு அறிவிக்கப்பட்ட சந்தை வீதங்களின் படி) என்பனவற்றிற்காக வங்கியிடமிருந்து பெறப்படும் நிபந்தனையற்ற பூரணமான உத்தரவாதமெனப்படும்.

குறிப்பிட்ட நேரத்தில் மீள்கொள்வனவு தொழிற்பாடுகளுக்கு பயன்படுத்தப்படாத கடன்பட்ட பிணையங்களினது சந்தைப் பெறுமதி எதிர்பாராத பொறுப்புக்களாக பதிவு செய்யப்படுகின்றன. செலுத்தப்பட்ட தரகு அட்டுறு அடிப்படையில் செலவிடப்படுகின்றது.

கடன் வழங்கும் கொடுக்கல்வாங்கல்களின் கீழ் இணைத்தரப்பினருக்கான பிணையங்களின் மாற்றல், சொத்தாண்மையின் இடர்நேர்வும் வெகுமதியும் மாற்றல் செய்யப்பட்டால் மட்டுமே நிதியியல் நிலைமைக் கூற்றில் பிரதிபலிக்கப்படும்.

### 5.17 பணியாளர்களுக்கான கடன்கள்

வங்கியின் பணியாளர்கள் சலுகை வட்டி வீதத்தின் கீழ் கடன் வசதிகளைப் பெறுவதற்கு உரித்துடையவர்களாவர். 2008ஆம் ஆண்டிலிருந்து வழங்கப்பட்ட இக்கடன்கள் ப.நி.அ.நி. 9 இன்படி கழிவிடப்பட்ட காசுப்பாய்ச்சலைப் பயன்படுத்தி சீர்மதிப்புப் பெறுமதியில் பெறுமதியிடப்பட்டுள்ளன.

**கழிவு வீதம்** - மேற்படி வீதமானது இ.ம.வங்கியின் பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களத்தினால் ஐ.அ.டொலர் வர்த்தக வட்டி மேற்கோள் வீதத்துடன் வங்கிக் கணக்காய்வுக் குழுவினால் இணங்கப்பட்டவாறு 1 சதவீத இடர்நேர்வுத் தவணைத் தொகையையும் சேர்த்து நீண்டகாலப் பணவீக்க இலக்கின் அடிப்படையில் கணிப்பிடப்பட்டு கழிவு வீதமாகப் பயன்படுத்தப்படுவதோடு, கடன் காலத்தைப் பொறுத்து இது வேறுபடுகின்றது.

ஆண்டின் இறுதிக்கும் ஆண்டின் ஆரம்பத்திற்கும் இடையிலுள்ள பணியாளர்களுக்கான கடன்களின் தற்போதைய பெறுமதியின் வித்தியாசமானது, சலுகை வீதத்தில் மேற்படி கடன் வழங்கப்படுவதால் வங்கிக்கு ஏற்க நேரிடுகின்ற செலவைப் பதிவதற்காக வருடாந்தம் பதிவழிக்கப்படும் என்பதோடு, சந்தை வீதத்தில் இக் கடன் வழங்கப்பட்டிருப்பின் வங்கியினால் ஈட்ட முடியுமாயிருக்கும் வருமானத்தைப் பதிவு செய்யும் பொருட்டு, அதற்குச் சமமான தொகை ஏனைய வருமானத்தில் பதியப்படும்.

**சீர்மதிப்பு பெறுமதியைக் கணிப்பிடுவதற்காகப் பயன்படுத்தப்படும் கருதுகோள்கள்**

- பணியாளர்களுக்கான கடன்கள் வழங்கப்பட்ட திகதியாக சனவரி 01 ஆம் திகதியைக் கருதுதல்.
- மேற்படி கடன்களில் எவ்விதத் திருத்தமும் அல்லது முன்கூட்டிய தீர்ப்பனவு எதுவும் செய்யப்படவில்லை எனக் கருதுதல்.

**5.18 தங்கம்**

பன்னாட்டு ஒதுக்கத்தின் உள்ளடக்கத்தினைக் குறித்துரைக்கின்றதான நாணய விதிச் சட்டத்தின் 67(1) ஆம் பிரிவு மேற்படி ஒதுக்கத்தின் ஒரு பகுதியாக இ.ம.வ. தங்கத்தை வைத்திருக்கலாம் எனக் குறிப்பிடுகின்றது. நாணய விதிச் சட்டத்தின் பிரிவு 67 (2) இன்படி, நாணயச் சபை, மத்திய வங்கியால் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ இலகுவாக தங்கமாக மாற்றக்கூடிய குறைந்ததொரு அணு ஒதுக்காவது தங்க வடிவிலோ அல்லது நாணய வடிவிலோ வைத்திருப்பதற்கு முயல வேண்டும். மேற்படி தங்கமானது பன்னாட்டு ஒதுக்குகளின் ஒரு பகுதியாக இருந்தமையால் பொதுவான வர்த்தக நடவடிக்கைகளின் போது ஒரு வர்த்தகப் பண்டமாகப் பயன்படுத்தப்படவில்லை என்பதோடு, தங்கமானது சீர்மதிப்புப் பெறுமதியில் மதிப்பிடப்பட்டு இலாபங்கள் அல்லது நட்டங்கள் வருமானக் கூற்றுக்கு மாற்றப்பட்டன. இலாப ஒதுக்கீடுகளுக்கு முன்னர் தங்கத்திலிருந்தான தேறல் செய்யப்படாத இலாபங்கள் தொடர்புபட்ட ஒதுக்குக் கணக்குகளுக்கு மாற்றப்பட்டன.

**5.19 இருப்புக்கள்**

**5.19.1 நாணய இருப்பு**

வங்கியின் இருப்புக்களானது, சுற்றோட்டத்திற்கு இன்னும் வழங்கப்படாத புதிய நாணயங்களை உள்ளடக்கியுள்ளது. புதிய நாணயத்தாள்கள் மற்றும் குத்திகளின் உற்பத்தி மற்றும் வடிவமைப்புடன் தொடர்பான செலவுகள் ஆரம்பத்தில் கிரயத்தில் அளவிடப்படுகின்றன. சுற்றோட்டத்திற்கு வழங்கப்பட்ட புதிய நாணயத்தாள்கள் மற்றும் குத்திகளிற்கான செலவானது நிறையேற்றப்பட்ட சராசரி அடிப்படையில் நிர்ணயிக்கப்படுவதுடன், வழங்கப்படும் வேளையில் வருமானக் கூற்றில் பதியப்படுகின்றது. மெதுவாக அசையும் இருப்புக்களுக்கு படி மேற்கொள்ளப்படுகின்றது.

**5.19.2 ஏனைய இருப்புக்கள்**

ஏனைய இருப்புக்கள் கிரயச் செலவு அல்லது தேறிய விற்றுப் பெறக்கூடிய பெறுமதி இவற்றில் குறைவான பெறுமதியில் வைத்திருக்கப்படுகின்றது. கிரயச் செலவானது நிறையேற்றப்பட்ட சராசரி அடிப்படையில் நிர்ணயிக்கப்படுகின்றது.

**5.20 ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்**

காணி மற்றும் கட்டடம் தவிர்ந்த ஆதனம், பொறி, உபகரணம், கிரயத்திலிருந்து ஒன்றுசேர்ந்த பெறுமானத் தேய்வு ஏற்பாடு மற்றும் பெறுமதி இழப்பு கழித்த தொகையில் கூறப்பட்டுள்ளது. அங்கீகரிப்பு விடயத்தைப் பூர்த்தி செய்வதற்காக இந்த ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் பகுதிகளை மாற்றீடு செய்யும் போது ஏற்படும் செலவினங்களையும் இந்தக் கிரயம் உள்ளடக்கியிருக்கிறது.

காணி மற்றும் கட்டடங்கள் மீள் மதிப்பிடப்படும் திகதியில் சீர்மதிப்புப் பெறுமதியிலிருந்து பின்னர் ஒன்று சேர்ந்த பெறுமானத் தேய்வுகளும், பின்னர் ஒன்று சேர்ந்த பெறுமதி இழப்பு நட்டங்களும் கழித்த - தொகையான மீள்மதிப்பீட்டுப் பெறுமதியில் அளவிடப்படுகின்றன.

இறையிலி காணி நீங்கலாக, பின்வரும் மதிப்பிடப்பட்ட பயன்மிக்க காலத்தைப் பயன்படுத்தி தேய்மானம் நேர்கோட்டு முறையில் கணிக்கப்பட்டிருக்கிறது.

| சொத்தின் வகை | பயனுள்ள ஆயுட்காலம் |
|---|---|
| இறையிலி காணியிலுள்ள கட்டடங்கள் | 50 ஆண்டுகளுக்கு மேல் |
| குத்தகைக் காணிகளிலுள்ள கட்டடங்கள் | குத்தகைக் காலம் அல்லது 50 ஆண்டுகளில் குறைந்தது |
| பொறியும் பொறியின் முக்கிய பகுதிகளும் | 20 ஆண்டுகள் |
| தளபாடங்கள் மற்றும் கருவிகள் | 10 ஆண்டுகள் |
| உந்து ஊர்திகள் | 5 ஆண்டுகள் |
| 2014 இலிருந்து கொள்வனவு செய்யப்பட்ட உந்து ஊர்திகள் | 10 ஆண்டுகள் |
| கணனி வன்பொருள் | 4 ஆண்டுகள் |
| ஏனையவை | 3 ஆண்டுகள் |

நிகழ்வுகள் அல்லது சூழ்நிலை மாற்றங்கள் எடுத்துச் செல்லும் பெறுமதியானது மீளப்பெற முடியாதென சுட்டிக்காட்டும் பொழுது ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் எடுத்துச் செல்லும் பெறுமதிகள் பெறுமதி இழப்புக்காக மீளாய்வு செய்யப்படுகின்றன.

வங்கியின் காணி மற்றும் கட்டிடம் என்பனவற்றை மீள்மதிப்பிடுவதற்கான கொள்கை யாதெனில் குறைந்தபட்சம் ஐந்து ஆண்டுக்கொரு தடவை அல்லது குறிப்பிடத்தக்க பெறுமதிச் சீராக்கம் தேவையென தெரியவரும் பொழுது ஏதேனும் குறுகிய காலத்தில் மேற்கொள்ளப்பட வேண்டுமென்பதாகும். எந்த மீள்மதிப்பிட்டு மிகையும் வருமானக்கூற்றிலே முன்னர் அங்கீகரிக்கப்பட்ட அதே சொத்தின் மீள்மதிப்பீட்டு வீழ்ச்சியை மறுதலையாக்கும் சந்தர்ப்பம் நீங்கலாக நிதியியல் நிலைமைக் கூற்றின் பங்குரிமையில் உள்ளடக்கப்பட்டுள்ள மீள்மதிப்பீட்டு ஒதுக்கிற்கு வரவு வைக்கப்படும். அவ்வாறு மறுதலையாக்கும் சந்தர்ப்பத்தில் அந்த அதிகரிப்பானது வருமானக்கூற்றில் அங்கீகரிக்கப்படுகிறது. மீள்மதிப்பீட்டுப் பற்றாக்குறையானது, அப்பற்றாக்குறை அதே சொத்தின் முன்னைய மிகையை நேரடியாக எதிரீடு செய்து மீள்மதிப்பீட்டு ஒதுக்கிலுள்ள மதிப்பீட்டு மிகையை நேரடியாக எதிரீடு செய்யும் சந்தர்ப்பங்கள் தவர்த்து, வருமானக் கூற்றில் அங்கீகரிக்கப்படுகின்றது. விற்கப்படுகையில், குறிப்பிட்ட விற்கப்படுகின்ற சொத்தோடு தொடர்புடைய எந்த மீள்மதிப்பீட்டு மிகையும், பிடித்துவைக்கப்படும் வருவாய்களுக்கு மாற்றப்படுகின்றது.

ஒரு ஆதனம், பொறி மற்றும் உபகரணம், விற்கப்படுகையில் அல்லது அதன் பாவனை அல்லது விற்பனையின் மூலம் எதிர்கால பொருளாதார நன்மைகளை வழங்காது என எதிர்பார்க்கப்படும் போது அது அங்கீகரிப்பிலிருந்தும் நீக்கப்படுகின்றது. அச்சொத்தின் அங்கீகரிப்பு நீக்கப்படுவதன் மூலம் உருவாகின்ற ஏதாவது இலாபம் அல்லது நட்டம் (தேறிய விற்பனைப் பெறுகைக்கும் சொத்தின் எடுத்துச் செல்லும் தொகைக்கும் இடையிலான வித்தியாசமாகக் கணிக்கப்பட்டது) சொத்தின் அங்கீகரிப்பு நீக்கப்பட்டு வருடத்தின் வருமானக்கூற்றில் உள்ளடக்கப்படுகிறது. பொருத்தமானவிடத்து சொத்தின் எஞ்சிய பெறுமதிகள், பயனுள்ள ஆயுட் காலங்கள் மற்றும் முறைகள் கிரமமாக மீள்பார்வை செய்யப்படுகின்றன.

மூலதன நடப்பு வேலைகள் கிரயத்தில் குறிப்பிடப்படுகின்றன. இவை கட்டிடங்கள், பாரிய பொறி மற்றும் உபகரணங்கள் மற்றும் முறைமை அபிவிருத்திகளின் கட்டுமானத்தின் போது நேரடியாக ஏற்படும் மூலதனத் தன்மை கொண்ட செலவுகளாகவும் மூலதனவாக்கத்தை எதிர்நோக்கியிருப்பனவாகவும் காணப்படுகின்றன.

### 5.21 அருவச் சொத்துக்கள்

கணனி வன்பொருள்களில் முழுமையாக உள்ளடங்காதுள்ள கணனி மென்பொருட்கள் அருவச் சொத்துக்களாகக் காட்டப்பட்டு கிரயத்தில் அங்கீகரிக்கப்படுகின்றன. ஆரம்ப அங்கீகரிப்பைத் தொடர்ந்து இவ்அருவச் சொத்துக்கள் கிரயத்தில் இருந்து ஒன்று சேர்ந்த பதிவழிப்பு மற்றும் ஒன்றுசேர்ந்த பெறுமதி இழப்பு கழிக்கப்பட்ட தொகையில் கொண்டு செல்லப்படுகின்றன.

கணணி மென்பொருள் சொத்துக்கள் மீதான தொடர்ந்துவரும் செலவுகள், அவை குறித்த சொத்துடன் தொடர்புடைய எதிர்காலப் பொருளாதார நன்மைகளை அதிகரித்தால் மட்டுமே மூலதனமாக்கப்படுகின்றன. ஏனைய அனைத்துச் செலவுகளும் ஏற்படும்போது செலவாக அங்கீகரிக்கப்படுகின்றன.

பதிவழிப்பானது, சொத்து பாவனைக்குரியதாகவுள்ள திகதியிலிருந்து நான்கு வருட பயனுள்ள ஆயுட்காலத்திற்கு நேர்கோட்டு முறையில் வருமானக் கூற்றில் அங்கீகரிக்கப்படுவதுடன் இம்முறையானது சொத்துடன் தொடர்புடைய எதிர்கால பொருளாதார நன்மைகளின் எதிர்கால நுகர்வுக் கோலத்தை மிகச் சரியாகப் பிரதிபலிக்கின்றது.

### 5.22 ஏனைய சொத்துக்கள்

ஏனைய சொத்துக்கள் எதிர்பார்க்கப்பட்ட தேறத்தக்க பெறுமதியில் முன்கொண்டு செல்லப்படுகின்றன.

### 5.23 நிதியியலல்லாச் சொத்துக்களின் பெறுமதியிழப்பு

சூழ்நிலைகளின் நிகழ்வுகள் அல்லது மாற்றங்கள் முன்கொண்டு செல்லும் பெறுமதியில் பெறுமதி இழப்பை உண்டுபண்ணலாம் என்பதைக் காட்டுகின்றனவா என்பதையும் நிதியியலல்லாச் சொத்துக்கள் பெறுமதி இழக்கலாம் என்பதற்கான அறிகுறிகள் உள்ளதா என்பதையும் அறிக்கையிடும் ஒவ்வொரு காலப்பகுதியின் இறுதியிலும் வங்கி மதிப்பிடுகின்றது. அத்தகைய அறிகுறிகள் காணப்படின், சொத்துக்களின் மீளப் பெறக்கூடிய தொகையின் மதிப்பீடொன்றை வங்கி மேற்கொள்ளும். ஒரு சொத்தின் கொண்டு செல்லல் பெறுமதி அதன் மீளப்பெறத்தக்க தொகையை விஞ்சும் சந்தர்ப்பத்தில் சொத்தானது பெறுமதி இழந்ததாக கருதப்படுவதுடன் அது அதன் மீளப்பெறத்தக்க தொகைக்கு குறைத்தெழுதப்படுகின்றது. பெறுமதியிழப்பு நட்டங்கள் வருமானக் கூற்றில் அங்கீகரிக்கப்படுகின்றன.

### 5.24 ஏற்பாடுகள்

கடந்த கால நிகழ்வொன்றின் விளைவாக, வங்கி தற்போதைய கடப்பாடொன்றினை (சட்ட ரீதியான அல்லது அமைப்பு ரீதியான) கொண்டிருந்து அக்கடப்பாட்டைத் தீர்ப்பதற்காக பொருளாதார நன்மைகளை உள்ளடக்கியிருக்கும் வளங்களின் வெளிப்பாய்ச்சல் தேவைப்படுவதுடன், இக் கடப்பாட்டுத் தொகையை நம்பத் தகுந்த மதிப்பீடொன்று மூலம் அறிய முடியுமாயின் ஏற்பாடுகள் அங்கீகரிக்கப்படுகின்றன. ஏற்பாடொன்று மீளளிக்கப்படும் என வங்கி எதிர்பார்க்குமிடத்து அந்த மீளளிப்பு இறுதியில் நிச்சயமாக ஏற்படும் வேளையில் மட்டும் தனியான சொத்தாக அங்கீகரிக்கப்படுகின்றது.

### 5.25 சுற்றோட்டத்திலுள்ள நாணயம்

இலங்கை மத்திய வங்கியினால் வெளியிடப்பட்ட நாணயம் அதனை வைத்திருப்பவரின் சார்பாக வங்கி மீதான கோரலலைக் கொண்டிருப்பதனைக் காட்டுகின்றது. சுற்றோட்டத்திலுள்ள நாணயத்துக்கான பொறுப்பு நிதியியல் நிலைமைக் கூற்றில் சீர்மதிப்புப் பெறுமதியில் பதியப்பட்டுள்ளது.

### 5.26 ஓய்வூதியம் மற்றும் தொழில்நிலைக்குப் பிந்திய ஏனைய நலத்திட்டங்கள்

வங்கியால் கையாளப்படும் ஓய்வூதியம் மற்றும் தொழில் நிலைக்குப் பின்னரான ஏனைய நலத்திட்டங்கள் குறிப்பு 34இல் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

### 5.27 நிர்ணயிக்கப்பட்ட நன்மைத் திட்டங்கள்

நிர்ணயிக்கப்பட்ட நன்மைத் திட்டங்களானவை, நிர்ணயிக்கப்பட்ட பங்களிப்பு திட்டங்கள் தவிர்ந்த ஏனைய தொழிலுக்கு பின்னரான நன்மைத் திட்டங்களாகும். ஓய்வூதியம், விதவைகள் மற்றும் அநாதைகளுக்கான ஓய்வூதியம், விதுரர் மற்றும் அநாதைகளுக்கான ஓய்வூதியம், இளைப்பாற்றுப் பணிக்கொடை மற்றும் வேலைக் காலத்திற்குப் பின்னரான மருத்துவ நலன்கள் போன்ற குறித்துரைக்கப்பட்ட நலத்திட்டங்களை வங்கி செயற்படுத்துகின்றது. ஐந்து திட்டங்களையும் பொறுத்தவரையில் வங்கியும் தகுதியுள்ள பயனாளிகளும் தனித்தனியாக நிர்வகிக்கப்படும் நிதியங்களுக்குப் பங்களிப்பினைச் செய்கின்றனர்.

எறிவு செய்யப்பட்ட அலகு கொடுகடன் ஆயுட்கால மதிப்பீட்டு முறையை உபயோகித்து ஒவ்வொரு திட்டத்திற்கும் குறித்துரைக்கப்பட்ட திட்டங்களின் கீழ் நன்மை வழங்கும் செலவு நிர்ணயிக்கப்படுகின்றது.நிர்ணயிக்கப்பட்ட நன்மைத் திட்டங்கள் தொடர்பாக வங்கியின் கடப்பாடு, ஒவ்வொரு திட்டத்திற்கும் தனித்தனியாக, ஊழியர்கள் அவர்களுடைய தற்போதைய மற்றும் முன்யை காலங்களில் வழங்கிய சேவைகளின் மூலம் ஈட்டிய எதிர்கால நன்மைகளை மதிப்பீடு செய்வதன் மூலம் கணிக்கப்படுவதுடன், அந்நன்மை அதன் தற்போதைய மதிப்பினை நிர்ணயம் செய்வதற்காக கழிவீடு செய்யப்படுகின்றது. இனங்காணப்படாத ஏதாவது கடந்த காலச் சேவை செலவுகள் மற்றும் திட்டச்சொத்துக்களின் சீர்மதிப்புப் பெறுமதி என்பன கழிக்கப்படும். கழிவீடு செய்யப்படும் வீதானது, சராசரி மீதமுள்ள சேவைக் காலத்திற்கு அண்ணளவான முதிர்ச்சிக் காலத்தைக் கொண்ட அரச பிணையங்களின் மதிப்பீட்டுத் திகதியன்றுள்ள விளைவு வீதமாகும். குறிப்பு 34இல் வெளிப்படுத்தப்பட்டுள்ள அனைத்து முதன்மையான காப்புறுதி மதிப்பீட்டு அனுமானங்களும், முழுமையாக காப்புறுதி மதிப்பீடு செய்யப்படும் போது மட்டுமே திருத்தப்படும்.

### 5.28 நிர்ணயிக்கப்பட்ட பங்களிப்புத் திட்டங்கள்

ஊழியர்கள், ஏற்புடைய நியதிகள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு இணங்க ஊழியர் சேம நிதியப் பங்களிப்புக்களுக்கும் ஊழியர் நம்பிக்கை நிதியப் பங்களிப்புக்களுக்கும் தகுதியுடையவர்களாவர். வங்கியானது ஊழியர்களின் மொத்தச் சம்பளத்தில் ஊழியர் சேம நிதியத்திற்கு 24 சதவீதத்தினையும் ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கு 3 சதவீதத்தினையும் முறையே பங்களிப்புச் செய்கிறது. இவை தனித்தனியாக நிருவகிக்கப்பட்டு வரும் நிர்ணயிக்கப்பட்ட பங்களிப்புத் திட்டங்களாகும்.

நிர்ணயிக்கப்பட்ட பங்களிப்புத் திட்டங்களின் பங்களிப்பிற்கான கடப்பாடுகள், வருமானக் கூற்றில் அவை ஏற்படும் போது செலவாக அங்கீகரிக்கப்படுகின்றன.

### 5.29 கொடைகள்

கொடைகள் (பெறப்படும் என்பதற்கு அத்துடன் அவற்றுடன் இணைந்த நிபந்தனைகள் ஏதுமிருப்பின் அவை இணங்கி ஒழுகப்படும் என்பதற்குமான உறுதிப்பாடு இருக்குமிடத்து) அவற்றின் சீர்மதிப்புப் பெறுமதியில் அங்கீகரிக்கப்பட்டு, பங்குரிமை மூலதனத்தின் கீழ் காட்டப்படும். கொடைகள் செலவு விடயங்களுடன் தொடர்பானதாக இருக்கும் பொழுது, ஒழுங்குமுறையானதொரு அடிப்படையில் இழப்பீடு செய்வதற்கெனக் கருதப்பட்ட செலவினங்களுக்கு அவற்றை ஈடுசெய்வதற்குத் தேவையான காலப்பகுதிக்கு வருமானக் கூற்றில் அங்கீகரிக்கப்படும். கொடைகள் சொத்தொன்றுடன் தொடர்பானதாக இருக்குமிடத்து, சீர்மதிப்புப் பெறுமதி பிற்போடப்பட்ட அரச கொடைக் கணக்கில் வரவு வைக்கப்பட்டு ஏற்புடைய சொத்தின் எதிர்பார்க்கப்படும் பயன்பாட்டுக் காலம் வரை, ஏற்புடைய சொத்தின் தேய்மானக் கொள்கையுடன் இசைந்த விதத்தில் ஒழுங்குமுறையான அடிப்படையில் வருமானக்கூற்றுக்கு விடுவிக்கப்படும்.

### 5.30 எதிர்பாரா பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகள்

எதிர்பாரா பொறுப்புக்களானவை, நிச்சயமற்ற எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிகழ்காலக் கடப்பாடுகளின் மூலம் உறுதி செய்யப்படுகின்ற சாத்தியமான கடப்பாடுகளாகக் காணப்படுவதுடன், இங்கு எதிர்காலப் பொருளாதார நன்மைகளின் மாற்றல் நிச்சயமற்றதாக அல்லது

நம்பத்தகுந்த முறையில் அளவிடமுடியாததாகக் காணப்படுகின்றது. நிதியியல் நிலைமைக் கூற்றில் அங்கீகரிக்கப்படாத படுகடன்களின் அனைத்து உத்தரவாதங்கள், முன்னோக்கிய வெளிநாட்டுச் செலாவணிக் கொடுக்கல்வாங்கல்கள் மற்றும் ஏனைய கடப்பாடுகள் எதிர்பாராத பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளின் உரிய தலைப்புகளின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளன. தேவைப்படுமிடத்து அவ்வாறான தொகைகள் மிகச்சிறந்த மதிப்பீடுகளில் அளவிடப்படுகின்றன.

**இலாப அல்லது நட்ட மற்றும் ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானக் கூற்று**

**5.31 வருமானங்களும் செலவினங்களும்**

வங்கிக்குப் பொருளாதார நன்மைகளைக் கொண்டு வரக்கூடிய சாத்தியம் காணப்பட்டு அவ்வருமானத்தினை நம்பகமான முறையில் அளவிடக்கூடியதாக உள்ள போது வருமானமானது அங்கீகரிக்கப்படுகின்றது. மேற்கொள்ளப்பட்ட செலவிற்கும் வருமானத்தின் குறித்துரைக்கப்பட்ட விடயங்களின் வருவாய்க்குமிடையிலான நேரடி இணைப்பொன்றின் அடிப்படையில் வருமானக்கூற்றில் செலவுகள் அங்கீகரிக்கப்படுகின்றன. வியாபாரத்தைக் கொண்டு நடத்துவது தொடர்பாகவும் ஆதனம், பொறி, உபகரணங்களை வினைத்திறனுள்ள விதத்தில் பேணுவதற்காகவும் மேற்கொள்ளப்பட்ட அனைத்து செலவினங்களும் ஆண்டிற்கான இலாபத்தினைக் கணிக்கும் போது வருமானத்தில் கழிக்கப்படுகின்றன.

வருமானத்தையும் செலவினத்தையும் அங்கீகரிப்பதற்கு முன்னர் பின்வரும் குறித்துரைக்கப்பட்ட பிரமாணங்களும் நிறைவேற்றப்பட வேண்டும்:

**5.31.1 வட்டி வருமானம் மற்றும் செலவினங்கள்**

சேகரித்தல் ஐயத்திற்கிடமில்லாதவிடத்து உண்மைக் கொள்வனவு விலையை அடிப்படையாகக் கொண்ட பயன்தரு விளைவு முறையைப் பயன்படுத்தி அட்டுறு அடிப்படையில் அனைத்து வட்டி உழைக்கும் சாதனங்களுக்கான வட்டி வருமானமும் செலவினங்களும் வருமானக் கூற்றில் அங்கீகரிக்கப்பட்டுள்ளன. வட்டி வருமானமானது, நிலையான வருமான முதலீடு மற்றும் பிணையங்கள் என்பன மீதான வட்டி வருவாய்களையும் திறைசேரி உண்டியல் மற்றும் ஏனைய கழிவிடப்பட்ட கருவிகளின் அட்டுறு கழிவுகள் மற்றும் வட்டங்களையும் உள்ளடக்குகிறது. கடன்களின் சேகரிப்பு ஐயத்திற்கிடமாகும் பொழுது வட்டி வருமானம் இடைநிறுத்தப்படுகிறது. அத்தகைய வருமானம் பெறப்படும் வரை வட்டி வருமானத்திலிருந்து நீக்கப்படுகிறது.

**5.31.2 பங்கிலாபங்கள்**

பங்குடமையாளர்கள் கொடுப்பனவைப் பெறுவதற்கான உரிமை நிறுவப்படும் போது பங்கிலாப வருமானம் அங்கீகரிக்கப்படுகிறது.

**5.31.3 நானாவித வருமானம் மற்றும் செலவினங்கள்**

பல்தரப்பட்ட வருமானமும் செலவினங்களும் அட்டுறு அடிப்படையில் அங்கீகரிக்கப்படுகின்றன.

ஆதனம், பொறி, உபகரணங்களின் விற்பனை மீதான வருமானத் தன்மையான தேறிய இலாபங்களும், நட்டங்களும் விற்பனை மூலம் பெற்ற பெறுகைகளிலிருந்து சொத்து கொண்டுள்ள பெறுமதியையும் அது சார்ந்த விற்பனைச் செலவுகளையும் கழித்த பின்பு வருமானக்கூற்றில் காட்டப்பட்டுள்ளன.

முக்கிய வருமானத்தை உருவாக்குகின்ற நடவடிக்கைகளுக்கான தற்செயலான நடவடிக்கை மூலம் எழும் இலாபங்களும், நட்டங்களும் மற்றும் குறிப்பிடத்தக்களவில் இல்லாத ஒரேமாதிரியான கொடுக்கல்வாங்கல் தொகுதியிலிருந்து எழும் இலாபங்களும் நட்டங்களும் தேறிய தேறிய அடிப்படையில் திரட்டப்பட்டு அறிக்கையிடப்பட்டு வெளிப்படுத்தப்படுகின்றது.

**5.31.4 ஆளணிச் செலவுகள்**

ஆளணிச் செலவுகள் அனைத்து அலுவலர் நன்மைகளினதும் முழுச் செலவினையும் உள்ளடக்குகின்றது. ஆண்டின் இறுதியில் செலுத்தப்பட வேண்டிய சம்பளங்கள் மற்றும் தொடர்பான செலவுகள் என்பன மற்றைய உள்நாட்டு கொடுபடத்தக்கனவற்றுள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**5.31.5 தொழிற்படு குத்தகைகள்**

தொழிற்படு குத்தகைகள் தொடர்பான அனைத்து குத்தகை கொடுப்பனவுகளும் நேர்கோட்டு அடிப்படையில் குத்தகைக் காலம் முழுவதும் வருமானக்கூற்றில் அங்கீகரிக்கப்படுகின்றன.

**5.31.6 வருமான வரிச் செலவு**

வங்கியின் வருமானமானது, திருத்தப்பட்டவாறான 1949ஆம் ஆண்டின் 58ஆம் இலக்க நாணய விதிச் சட்டத்தின் 118ஆம் பிரிவின் கீழ் வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளது. திருத்தப்பட்டவாறான 2017ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க பொருளாதார பணிக் கட்டணச் சட்டத்தின் நியதிகளில், 2017.04.01 இலிருந்து ஆரம்பித்து இலங்கை மத்திய வங்கி பொருளாதாரப் பணிக் கட்டணத்திற்கு ஏற்புடையதாகும். எனினும், திருத்தப்பட்டவாறான 2018ஆம் ஆண்டின் 31ஆம் இலக்க பொருளாதார பணி கட்டளைச் சட்டத்தின்படி, 2018 ஒத்தோபரில் இருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் செலாவணி வீதம் மீதான தேறல் செய்யப்படாத இலாபங்களும் வெளிநாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள் மீதான தேறல் செய்யப்படாத சந்தைப் படியான இலாபங்களும் பொருளாதார பணிக்கட்டணத்தில் இருந்து விலக்களிக்கப்பட்டுள்ளன. மேலும், 2013ஆம் ஆண்டின் 17ஆம் இலக்க பெறுமதிசேர் வரி (திருத்தப்பட்ட) சட்டத்தின்படி நிதியியல் பணிகள் வழங்கல்கள் மீது பெறுமதிசேர் வரியானது விலக்களிக்கப்பட்டது.

**5.32 அறிக்கையிடும் திகதியிற்குப் பின்னர் இடம்பெறும் நிகழ்வுகள்**

அறிக்கையிடும் திகதிக்குப் பின்னர் நிகழும் அனைத்து பொருண்மைத் தன்மை வாய்ந்த நிகழ்வுகளும் கருத்தில் எடுக்கப்படுவதுடன், பொருத்தமான விடத்து நிதியியல் கூற்றுக்களுக்கான தொடர்பான குறிப்புக்களில் சீராக்கங்கள் அல்லது வெளிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**காசுப்பாய்ச்சல் கூற்று**

காசுப்பாய்ச்சல் கூற்றானது பன்னாட்டு கணக்கீட்டு நியமம் 7 - காசுப்பாய்ச்சல் கூற்றிற்கு இணங்க காசுப்பாய்ச்சல் கூற்றின் தயாரிப்பில் "நேரடி முறை" யைப் பயன்படுத்திப் தயாரிக்கப்படுகின்றது.

காசுப்பாய்ச்சல் கூற்று நோக்கத்திற்காக, காசு மற்றும் காசிற்குச் சமமானவைகள் மேலே வரைவிலக்கணம் செய்யப்பட்டவாறு, காசு / வெளிநின்ற கொடுப்பனவுக் கட்டளைகளின் வெளிப்பாய்ச்சல் நீங்கலான, காசு மற்றும் காசிற்குச் சமமானவற்றை உள்ளடக்கியுள்ளன.

**6. விடுக்கப்பட்டிருந்தும் அறிக்கையிடும் திகதியில் இன்னமும் நடைமுறைப்படுத்தப்படாதுள்ள கணக்கீட்டு நியமங்கள்**

வங்கிக்கு ஏற்புடைத்தான, வங்கியின் நிதியியல் கூற்றுக்களுக்குட்பட்டு இற்றைவரை வெளியிடப்பட்டு, ஆனால் இன்னமும் நடைமுறைக்குவராத நியமங்கள் மற்றும் தொடர்பான விளக்கங்கள் கீழே வெளிக்காட்டப்பட்டுள்ளன. அவை நடைமுறைக்குவரும் பொழுது அந்நியமங்களைப் பின்பற்றுவதற்கு வங்கி எண்ணுகின்றது.

**6.1 பன்னாட்டு நிதியியல் அறிக்கையிடல் நியமம் 16 குத்தகைகள்**

பன்னாட்டு கணக்கீட்டு நியமச் சபையினால் 2016 சனவரியில் குத்தகைகளின் கணக்கீட்டிற்கென புதிய கணக்கீட்டு நியமம், ப.க.அ.நியமம் 16 குத்தகைகள் விடுக்கப்பட்டது. இப்புதிய நியமம் குத்தகைக்கு விடுபவரின் குத்தகைகளின் கணக்கீட்டில் பாரிய மாற்றத்தை ஏற்படுத்தவில்லை. எனினும், குத்தகைதாரர் பெரும்பாலான குத்தகைகளை, குத்தகைப் பொறுப்பொன்றாகவும் அதனுடன் தொடர்புடைய சொத்துக்களைப் பாவிப்பதற்கான உரிமையையும்

நிதியியல் நிலைமைக் கூற்றில் அங்கீகரிப்பதை தேவைப்படுத்துகின்றது. குத்தகைதாரர் அங்கீகரிக்கப்பட்ட அனைத்து குத்தகைகளுக்கும் கட்டாயமாக தனி மாதிரியொன்றைப் பிரயோகிக்க வேண்டும். எனினும், "குறுங்கால" குத்தகைகள் மற்றும் 'குறைந்த பெறுமதி' சொத்துக்களின் குத்தகைகளை அங்கீகரிக்காதிருப்பதற்கான தெரிவையும் கொண்டிருப்பர். பொதுவாக, அங்கீகரிக்கப்பட்ட குத்தகைகளுக்கான இலாபம் மற்றும் நட்டம் ஆகியவற்றின் அங்கீகரிப்பு முறை தற்போதைய நிதிக் குத்தகைக் கணக்கீட்டினைப் போன்று காணப்படுவதுடன், வட்டி மற்றும் பெறுமானத்தேய்வு செலவுகள் இலாப அல்லது நட்டக் கூற்றில் வேறாக அங்கீகரிக்கப்படுகின்றன.

ப.நி.அ. நியமம் 16, 2019 சனவரி 01இல் தொடங்குகின்ற அல்லது அதற்குப் பின்னரான ஆண்டு காலப்பகுதிகளுக்கு ஏற்புடைத்தானது புதிய வருமான நியமம் ப.நி.அ. நியமம் 15 பிரயோகிக்கப்படுகின்ற அதே திகதியில் பிரயோகிக்கப்பட்டால் மட்டுமே, உரிய நேரத்திற்கு முன்னைய பிரயோகம் அனுமதிக்கப்படும். குத்தகைதாரர், ப.நி.அ. நியமம் 16 இனை முழுமையான பின்னோக்கிய பிரயோகத்துடன் அல்லது ஒரு மாற்றியமைக்கப்பட்ட பின்னோக்கிய பிரயோக அணுகுமுறையுடன் நடைமுறைப்படுத்த வேண்டும்.

வங்கியானது உரிய நேரத்திற்கு முன்னர் பிரயோகிக்க எதிர்பார்க்காதிருப்பதுடன், தற்போது இந் நியமத்தின் தாக்கத்தினை மதிப்பீடு செய்கின்றது.

**7. நடவடிக்கைகளின் தன்மை மற்றும் அளவு**

**7.1 வெளிநாட்டு நாணய நடவடிக்கைகள்**

வெளிநாட்டு நாணயத் தொழிற்பாடுகள் முக்கியமாக மத்திய வங்கியின் வெளிநாட்டு ஒதுக்குகள் முகாமைத்துவத் தொழிற்பாடுகளின் கீழ் இலங்கை மத்திய வங்கியின் வெளிநாட்டு நாணயச் சொத்துக்களை வைத்திருப்பதன் மூலமாக ஏற்படுகின்றது. வெளிநாட்டு ஒதுக்குகள் முகாமைத்துவ சொத்துப்பட்டியலானது வெளிநாட்டுச் செலாவணி தலையீட்டு நோக்கங்களுக்காக வைத்திருக்கப்படும் வெளிநாட்டு நாணயச் சொத்துக்களையும் வர்த்தக நோக்கங்களுக்காக வைத்திருக்கப்படும் ஏனைய வெளிநாட்டு நாணயச் சொத்துக்களையும் உள்ளடக்குகிறது.

வெளிநாட்டு நாணயச் சொத்துக்கள் பல்வேறு நாணயங்களில் வைத்திருக்கப்படுகின்றன. முக்கியமான நாணயங்களாக ஐக்கிய அமெரிக்க டொலர், அவுஸ்திரேலிய டொலர், யூரோ, ஸ்டேர்லிங் பவுண், யப்பானிய யென் மற்றும் நியூசிலாந்து டொலர் என்பன காணப்பட்டன. இவ் வெளிநாட்டு நாணயச் சொத்துக்களில் வைத்திருக்கப்பட்ட நிதியியல் சாதனங்கள் முக்கியமாக இறைமைப் பிணையங்கள், நேர்மாற்று மீள்கொள்வனவு கொடுக்கல்வாங்கல்களின் கீழ் வைத்திருக்கப்படும் பிணையங்கள் அல்லது ஏனைய மத்திய வங்கிகள், வர்த்தக வங்கிகள் மற்றும் கட்டுக்காப்பு நிறுவனங்களுடன் வைத்திருக்கப்படும் நிலுவைகள் என்பவற்றை உள்ளடக்குகின்றன.

இலங்கை மத்திய வங்கி காலத்திற்குக் காலம் பன்னாட்டுச் சந்தைத் தொழிற்பாடுகளிலிருந்து எழும் வெளிநாட்டு நாணயச் சொத்துக்களையும் பொறுப்புக்களையும் கூட வைத்திருக்கின்றது.

**7.2 உள்நாட்டு நாணய நடவடிக்கைகள்**

உள்நாட்டு நாணய நடவடிக்கைகள் பின்வருமாறு தோன்றுகின்றன.

(i) திரவத்தன்மை முகாமைத்துவத் தொழிற்பாடுகள்: திரவத்தன்மை முகாமைத்துவமானது வங்கித்தொழில் முறைமைக்கு நிதியங்களை முற்பணமாக வழங்குதல் மூலம் அல்லது வங்கித்தொழில் முறைமையிலிருந்து நிதியங்களை மீளப் பெறல் மூலம் அரசுக்கான நாளாந்த தேறிய பாய்ச்சல்களையும் அல்லது அரசிடமிருந்து தேறிய நாளாந்தப் பாய்ச்சல்களையும் இலங்கை மத்திய வங்கி நாளாந்தம் எதிரீடு செய்வதுடன் பெருமளவிற்கு தொடர்புடையதாகவுள்ளது. இத் தொழிற்பாடுகளில் பெரும்பாலானவை நாளாந்த திறந்த சந்தைத் தொழிற்பாடுகளூடாக மேற்கொள்ளப்படுகின்றன.

(ii) சுற்றோட்டத்திலுள்ள நாணயத்தின் பொறுப்பிற்கு உதவுவதற்காக இலங்கை அரசாங்கத்தின் பிணையங்களை உள்ளடக்கியதாக முதலீட்டுப் பட்டியலொன்று வைத்திருக்கப்படுகின்றது. வர்த்தக நோக்கத்திற்கன்றி நாணயத் தொழிற்பாடுகளுக்காக இம் முதலீடுகளை வைத்திருப்பதே வங்கியின் கொள்கையாகும்.

**7.3 நம்பிக்கை மற்றும் கட்டுக்காப்பு நடவடிக்கைகள்**

கட்டுக்காப்பு மற்றும் நிர்வாக ஒழுங்குமுறைகளின் கீழ் இலங்கை மத்திய வங்கியினால் நிர்வகிக்கப்பட்ட தொகை, அவை வங்கியின் நிதியியல் கூற்றுக்களின் ஆக்கக் கூறுகளில் ஒரு பகுதியாக அமையாததால் இந் நிதியியல் கூற்றில் உள்ளடக்கப்படவில்லை.

**8. நிலைமாற்ற வெளிப்படுத்துகைகள்**

பின்வரும் வெளிப்படுத்துகையானது பா.நி.அ.நி. 9 இனைப் பின்பற்றுவதன் மூலம் நிதியியல் நிலைமைக் கூற்று, பிடித்து வைக்கப்பட்ட வருவாய்கள் மற்றும் எதிர்பார்க்கப்படும் கொடுகடன் இழப்புகளின் தாக்கம் உள்ளிட்ட ஏனைய ஒதுக்கங்கள் மீது ஏற்படுத்தப்படும் தாக்கத்தை விபரிக்கின்றது.

**8.1 ப.க.நி. 39 இன் கீழான கொண்டு செல்லும் பெறுமதிக்கும் 2018 சனவரி 1இல் உள்ளவாறான ப.நி.அ.நி. 9இன் கீழ் அறிக்கையிடப்பட்ட நிலுவைக்கும் இடையிலான இணக்கம்**

| சொத்து/ பொறுப்புக்கள் | குறிப்பு | ப.க.நி. 39 | | மீள்வகைப்படுத்தல் | மீள் அளவீடு | ப.நி.அ.நி 9 | |
|---|---|---|---|---|---|---|---|
| | | வகை | தொகை | | | வகை | தொகை |
| | | | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | | ரூ.000 |
| காசும் காசுக்குச் சமமானவைகளும் | 8.1.1 | மு.வ.வை | 459,827,641 | - | - | ப.செ | 459,827,641 |
| **கழிக்க:** எதிர்பார்க்கப்படும் கொடுகடன் இழப்புகள் | | | - | - | (50,505) | | (50,505) |
| | | | | | | | 459,777,136 |
| இலாபம் அல்லது நட்டத்தினூடான சீர்மதிப்புப் பெறுமதியிலான பிணையங்கள் | | இ.ந.சீ.பெ | 45,264,376 | - | - | இ.ந.சீ.பெ | 45,264,376 |
| ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தினூடான ஊடான சீர்மதிப்புப் பெறுமதியிலான பிணையங்கள் | | | - | - | - | | 566,228,935 |
| விற்பனைக்கு கிடைக்கத்தக்க முதலீடுகள் | | வி.கி.த | 566,228,935 | - | - | ஏ.அ.வ.சி.பெ | - |
| பெறுதி நிதியியல் சாதனங்கள் | | இ.ந.சீ.பெ | 4,940,455 | - | - | இ.ந.சீ.பெ | 4,940,455 |
| ப.நா.நிதியம் தொடர்புடைய சொத்துக்கள் | 8.1.1 | மு.வ.வை | 126,842,946 | - | - | ப.செ | 126,842,946 |
| **கழிக்க:** எதிர்பார்க்கப்படும் கொடுகடன் இழப்பு | | | - | - | (3) | | (3) |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | 126,842,946 |
| ஏனைய பெறத்தக்கவைகள் | | க.ம.பெ | 3,665,700 | - | - | ப.செ | 3,665,700 |
| இலங்கை அரச பிணையங்கள் (திறைசேரி உண்டியல் உடமைகள்) | 8.1.2 | மு.வ.வை | 9,704,962 | 9,704,962 | 49,521 | ஏ.அ.வ.சி.பெ | 9,154,483 |
| மீள்விற்பனை உடன்படிக்கையின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட பிணையங்கள் | | மு.வ.வை | 22,375,124 | - | - | ப.செ | 22,375,124 |
| அரசிற்கான தற்காலிக முற்பணங்கள் | | க.ம.பெ | 199,800,871 | - | - | ஏ.அ.வ.சி.பெ | 199,800,871 |
| வங்கிகளுக்கான கடன்கள் **கழிக்க:** எதிர்பார்க்கப்படும் கொடுகடன் இழப்புகள் | 8.1.1 | க.ம.பெ | 223,702<br>- | -<br>- | -<br>(642) | | 223,702<br>(642)<br>223,060 |
| நிதியியல் மற்றும் ஏனைய நிறுவனங்களிலுள்ள பங்குரிமை முதலீடுகள் நிதியியல் மற்றும் ஏனைய நிறுவனங்களிலுள்ள பங்குரிமை முதலீடுகள் | 8.1.3 | வி.கி.த | -<br>41,095 | -<br>- | 1,237,826<br>- | ப.செ | 1,278,921<br>- |
| ஏனைய சொத்துக்கள் **கழிக்க:** எதிர்பார்க்கப்படும் கொடுகடன் இழப்புகள் | 8.1.1 | மு.வ.வை | 12,882,470<br>- | -<br>- | -<br>(8) | ப.செ | 12,882,470<br>(8)<br>12,882,462 |
| ஒதுக்குகள் | | | 77,352,239 | - | 1,235,775 | | 78,588,014 |

மு.வ.வை - முதிர்ச்சி வரை வைத்திருக்கப்படுபவை
வி.கி.த - விற்பனைக்கு கிடைத்தவை
ப.செ - பதிவழிக்கப்பட்ட செலவு

இ.ந.சீ.பெ - இலாபம் அல்லது நட்டத்தினூடான சீர்மதிப்புப் பெறுமதி
க.ம.பெ. - கடன்கள் மற்றும் பெறத்தக்கவைகள்
ஏ.அ.வ.சீ.பெ - ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தினூடான சீர் மதிப்புப் பெறுமதி

8.1.1 ப.நி.அ.நி 9 இன் பின்பற்றல் ஆனது வங்கியின் பெறுமதி இழப்பு மாதிரியை மாற்றியுள்ளதுடன் இதனால் பதிவழிப்புச் செலவு மற்றும் ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தின் ஊடான சீர்மதிப்பு பெறுமதி என வகைப்படுத்தப்பட்ட சொத்துக்கள் எதிர்பார்க்கப்படும் கொடுகடன் இழப்புகளுக்கு உட்பட்டவையாகும்.

8.1.2 திறந்த சந்தைத் தொழிற்பாடுகளுக்காக வைத்திருக்கப்பட்ட வங்கியின் திறைசேரி உண்டியல் உடமையானது ப.க.நி 39 இன் கீழ் முதிர்ச்சி வரை வைத்திருக்கப்படும் வகைக்குள் உள்ளடக்கப்பட்டிருந்தது. திறைசேரி உண்டியல் உடமைகளின் வியாபார மாதிரியின் காரணமாக ப.நி.அ.நி 9இற்கான நிலைமாற்றத்தின் ஊடாக இது ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தினூடான சீர்மதிப்புப் பெறுமதியாக மீள வகைப்படுத்தப்பட்டது.

8.1.3 வங்கியானது நிதியியல் மற்றும் ஏனைய நிறுவனங்களில் குறிப்பிட்ட பங்குரிமை முதலீடுகளை கொண்டிருப்பதுடன் ப.க.நி 39இன் கீழ் இவை விற்பனைக்கு கிடைக்கத்தக்க முதலீடுகளாக வகைப்படுத்தப்பட்டிருந்தன. ப.நி.அ.நி 9 இற்கான நிலைமாற்றத்தில் இருந்து இவை ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தினூடான சீர்மதிப்புப் பெறுமதியாக மீள்வகைப்படுத்தப்பட்டுள்ளன.

**8.2 பிடித்து வைக்கப்பட்ட வருமானம் மற்றும் ஏனைய ஒதுக்கங்கள் மீது ப.நி.அ.நி. 9 இற்கான நிலைமாற்றத்தின் தாக்கம்**

| | ஏனைய ஒதுக்கங்கள் ரூபா 000 | பிடித்து வைக்கப்பட்ட வருவாய்கள் ரூபா 000 |
|---|---|---|
| ப.க.நி. 39இன் கீழ் 2018 திசெம்பர் 31 உள்ளவாறான இறுதி நிலுவை | **42,332,740** | 25,996,592 |
| ப.நி.அ.நி. 9இன் கீழான மீள்வகைப்படுத்தல் தொடர்பான நிலைமாற்றல் சீராக்கம் **(குறிப்பு 8.2.1)** | **1,287,247** | - |
| ப.நி.அ.நி. 9 இன் கீழான எதிர்பார்க்கப்படும் கொடுகடன் இழப்புகள் தொடர்பான நிலைமாற்றல் சீராக்கம் **(குறிப்பு 8.2.2)** | **65,588** | (117,160) |
| பா.நி.அ.நி. 9 இன் கீழ் 2018 சனவரி 1 இல் உள்ளவாறான ஆரம்ப நிலுவை | **43,585,675** | 25,879,432 |

**8.2.1 மீள்வகைப்படுத்தல் காரணமாக ப.க.நி. 39 மற்றும் ப.நி.அ.நி 9 இன் கீழான கொண்டு செல்லல் பெறுமதியின் இணக்கம்**

| வகை | ப.க.நி. 39 இன் கீழான கொண்டு செல்லல் பெறுமதி ரூபா 000 | மீள் அளவீடு ரூபா 000 | ப.நி.அ.நி 9இன் கீழான கொண்டு செல்லல் பெறுமதி ரூபா 000 |
|---|---|---|---|
| இ.ம.வ திறைசேரி உண்டியல் உடமை | **9,704,962** | 49,521 | 9,754,483 |
| நிதியியல் மற்றும் ஏனைய நிறுவனங்களிலுள்ள பங்குரிமை முதலீடுகள் | **41,095** | 1,237,826 | 9,278,921 |
| மொத்தம் | **9,746,057** | 1,287,347 | 11,033,404 |

**8.2.2 ப.நி.அ.நி 9 இன் கீழான எதிர்பார்க்கப்படும் கொடுகடன் இழப்பு ஏற்பாட்டுக்கு ப.க.நி 39 இன் கீழான ஒன்று சேர்ந்த ஆரம்ப பெறுமதி இழப்பு படியின் இணக்கம்**

| | 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ப.க.நி 39இன் கீழான பெறுமதி இழப்பு ரூ.000 | 2018 ரூபா 000 | 2017 ரூபா 000 |
|---|---|---|---|
| காசு மற்றும் காசுக்கு சமமானவைகள் | - | 50,505 | 50,505 |
| ஏனைய அனைத்தையு முள்ளடக்கிய வருமானத்தினூடான சீர்மதிப்புப் பெறுமதியிலான பிணையங்கள் | - | 65,588 | 65,588 |
| ப.நா.நிதிய தொடர்புடைய சொத்துக்கள் | - | 3 | 3 |
| வங்கிகளுக்கான கடன்கள் | - | 642 | 642 |
| ஏனைய சொத்துக்கள் | 151,674 | 8 | 151,682 |

| | | | |
|---|---|---|---|
| எதிர்பாரா பொறுப்புக்கள் - கொடுகடன் உத்தரவாதத் திட்டம் | 12,600 | 414 | 13,014 |
| | 164,274 | 117,160 | 281,434 |

### 9. காசு மற்றும் காசுக்குச் சமமானவைகள்

| | 2018 ரூபா 000 | 2017 ரூபா 000 |
|---|---|---|
| வங்கியிலுள்ள காசு நிலுவைகள் | **117,035,287** | 16,518,603 |
| வங்கிகளுடனான கால வைப்புக்கள் | **92,862,673** | 269,193,626 |
| ஓரிரவு வைப்புக்கள் | **162,300,186** | 173,979,333 |
| காசு மற்றும் காசுக்கு சமமானவைகளின் பெறவேண்டிய வட்டி | **48,624** | 136,079 |
| **காசுப்பாய்ச்சல் நோக்கத்திற்கான காசு மற்றும் காசுக்கு சமமானவைகள்** | **372,246,740** | 459,827,641 |
| **கழிக்க:** காசு மற்றும் காசுக்கு சமமானவை மீது எதிர்பார்க்கப்படும் கொடுகடன் இழப்புகள் (குறிப்பு 9.1) | (71,564) | - |
| மொத்தம் | **372,175,176** | 459,827,641 |

### 9.1 காசு மற்றும் காசுக்கு சமமானவை மீது எதிர்பார்க்கப்படும் கொடுகடன் இழப்புக்களிலான அசைவு

| கட்டம் 1 | 2018 ரூபா 000 |
|---|---|
| சனவரி 1இல் உள்ளவாறான நிலுவை | - |
| ப.நி.அ.நி 9இன் ஆரம்ப பிரயோகம் தொடர்பான சீராக்கம் **(குறிப்பு 8.2.2)** | **50,505** |
| சனவரி 1இல் உள்ளவாறான சீராக்கப்பட்ட நிலுவை | **50,505** |
| ஆண்டுகாலப்பகுதியிலான விதிப்புக்கள் | **21,059** |
| திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிலுவை | **71,564** |

### 10. வெளிநாட்டுப் பிணையங்களிலான முதலீடுகள்

| | 2018 ரூபா 000 | 2017 ரூபா 000 |
|---|---|---|
| **இலாபம் அல்லது நட்டத்தினூடான சீர்மதிப்பு பெறுமதியிலான பிணையங்கள்** | | |
| -வெளிநாட்டுப் பிணையங்களிலான முதலீடுகள் **(குறிப்பு 10.1)** | 37,467,239 | 29,988,753 |
| -தங்கம் (ஒதுக்கப்படாதது) | - | 15,275,623 |
| | **37,467,239** | 45,264,376 |
| **ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தினூடாக சீர்மதிப்பு பெறுமதியிலான பிணையங்கள்/ விற்பனைக்கு கிடைக்கத்தக்கவை** | | |
| -வெளிநாட்டுப் பிணையங்களிலான முதலீடுகள் | 694,876,394 | 566,228,935 |
| | 694,876,394 | 566,228,935 |
| **மொத்த வெளிநாட்டுப் பிணையங்களிலான முதலீடுகள்** | **732,343,633** | **611,493,311** |
| ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தினூடான சீர்மதிப்பு பெறுமதியிலான பிணையங்கள் மீதான எதிர்பார்க்கப்படும் கொடுகடன் இழப்புக்கள் **(குறிப்பு 10.2)** | 63,649 | - |

10.1 இலாபம் அல்லது நட்டத்தினூடாக சீர்மதிப்பு பெறுமதியிலான பிணையங்களாக வகைப்படுத்தப்பட்ட வெளிநாட்டுப் பிணையங்களிலான முதலீடுகளானவை, உலக வங்கியினால் முகாமைப்படுத்தப்படும் ஒதுக்கு ஆலோசனை முகாமைத்துவ நிகழ்ச்சித் திட்டத்தில் 2016 காலப்பகுதியில் வங்கியினால் செய்யப்பட்ட முதலீட்டை உள்ளடக்கியுள்ளது. 2018 திசெம்பர் 31இல் உள்ளவாறான இம் முதலீட்டின் பெறுமதியானது ரூ. 37,467.24 மில்லியனாகும் (2017 ரூ.29,988.75 மில்லியன்).

### 10.2 ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தின் ஊடான சீர்மதிப்பு பெறுமதியிலான பிணையங்கள் மீதான எதிர்பார்க்கப்படும் கொடுகடன் இழப்புக்களிலான அசைவு

| கட்டம் 1 | 2018 ரூபா 000 |
|---|---|
| சனவரி 1இலுள்ளவாறான நிலுவை | - |
| ப.நி.அ.நி 9இன் ஆரம்ப பிரயோகத்தின் போதான சீராக்கம் (குறிப்பு 8.2.2) | **65,588** |
| சனவரி 1இல் உள்ளவாறான சீராக்கப்பட்ட நிலுவை | **65,588** |
| ஆண்டுகாலப்பகுதியிலான எதிர்ப்பதிவுகள் | **(1,939)** |
| **திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிலுவை** | **63,649** |

### 11. பெறுதி நிதியியல் சாதனங்கள்

11.1 கீழேயுள்ள அட்டவணை, சொத்துக்கள் அல்லது பொறுப்புக்களாக அவற்றின் பெயரளவுத் தொகையுடன் சேர்த்து பதிவு செய்யப்பட்டுள்ள பெறுதி நிதியியல் சாதனங்களின் சீர்மதிப்புப் பெறுமதியினைத் தருகின்றது. மொத்தமாகப் பதிவு செய்யப்பட்ட பெயரளவுத் தொகையானது பெறுதியின் அடிப்படையான சொத்து, குறிப்பீட்டு வீதம் அல்லது சுட்டெண்ணின் தொகையாகும் என்பதுடன் பெறுதிகளின் பெறுமதிகளில் ஏற்படும் மாற்றங்களை அளவிடுவதற்கான அடிப்படையாகவும் காணப்பட்டது. பெயரளவுத் தொகை ஆண்டின் இறுதியில் வெளிநின்ற கொடுக்கல்வாங்கல்களின் அளவினை எடுத்துக்காட்டியதுடன் இது சந்தை இடர்நேர்வுகளையோ அல்லது கொடுகடன் இடர்நேர்வுகளையோ எடுத்துக்காட்டவில்லை.

| | 2018 | | | 2017 | | |
|---|---|---|---|---|---|---|
| | சொத்துக்கள் | பொறுப்புக்கள் | பெயரளவு தொகை | சொத்துக்கள் | பொறுப்புக்கள் | பெயரளவு தொகை |
| | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 |
| நாணய பரஸ்பர பரிமாற்றல்கள் | - | **13,590,145** | **203,257,715** | 4,939,919 | 3,403,868 | 228,553,847 |
| முன்னோக்கிய வெளிநாட்டுச் செலாவணி | **750** | - | **548,250** | 536 | - | 132,773 |
| உள்ளடக்கப்பட்ட பெறுதிகள் - நாணயத் தெரிவுகள் | - | **466,315** | **5,299,747** | - | 1,244,581 | 13,374,795 |
| மொத்தம் | **750** | **14,056,460** | **209,105,12** | 4,940,455 | 4,648,449 | 242,061,415 |

11.2 நாணய பரஸ்பர பரிமாற்றல்கள், நாணயத் தெரிவுகள் மற்றும் முன்னோக்கிய வெளிநாட்டுச் செலாவணி ஒப்பந்தங்கள் போன்றவற்றை உள்ளடக்கிய மேற்படி பெறுதிகள், பன்னாட்டு ஒதுக்குகளை பேணுவதற்கான நியதித் தேவை நோக்கங்களை வசதிப்படுத்துவதற்காக வங்கிகளால் பேணப்படும் பன்னாட்டு ஒதுக்குகளின் சந்தை மற்றும் திரவத்தன்மை இடர்நேர்வுகளை முகாமை செய்யும் நோக்கத்திற்காக பயன்படுத்தப்படுகின்றன. மேலும், வங்கியானது இலங்கை ரூபாவின் பன்னாட்டு உறுதித்தன்மையினைப் பேணுவதற்காகவும் நாட்டின் நிதியியல் முறைமையினை வலுப்படுத்துவதற்காகவும் மற்றும் வங்கிகள் வெளிநாட்டு நிதியங்களை கொண்டு வருவதை ஊக்குவிப்பதற்காகவும் உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள், உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள் மற்றும் வெளிநாட்டு மத்திய வங்கிகளுடன் வெளிநாட்டு ஒதுக்குகளின் பரஸ்பர பரிமாற்றல் கொடுக்கல் வாங்கல்களில் ஈடுபடுகிறது.

11.3 பெறுதிகள் என்பது வட்டிவீதங்கள், நிதியியல் சாதனங்களின் விலைகள், பண்ட விலைகள், வெளிநாட்டுச் செலாவணி வீதங்கள், கொடுகடன் இடர்நேர்வு மற்றும் சுட்டெண்களில் ஏற்படும் மாற்றங்களுக்கு பதிலிறுத்தும் விதத்தில் அவற்றின் பெறுமதியினைப் பெற்றுக்கொள்ளும் நிதியியல் உடன்படிக்கைகளாகும்.

11.4 வங்கியின் பெறுதிகளினது சொத்துப்பட்டியலின் குறிப்பிடத்தக்க பகுதி குறுங்கால திரவத்தன்மை தேவைப்பாடுகளை முகாமைப்படுத்துவதற்கானதொரு உபாயமாக மேற்கொள்ளப்பட்ட நாணய பரஸ்பரபரிமாற்றத்தினை உள்ளடக்குகின்றது. நாணய பரஸ்பர பரிமாற்றலில் வங்கியானது இணங்கப்பட்ட வீதங்களில் மற்றொரு நாணயத்தின் பரிவர்த்தனையாக இனங்காணப்பட்ட திகதியில் நாணயத்தின் குறிப்பிட்ட தொகையினை செலுத்துகிறது/பெறுகிறது.

11.5 வெளிநாட்டுச் செலாவணி முன்னோக்கிய ஒப்பந்தத்திலிருந்து, வங்கியானது இணங்கப்பட்ட எதிர்காலத்திகதியொன்றில் இணங்கப்பட்ட வீதமொன்றில் வெளிநாட்டு நாணயத்தின் குறிப்பிட்டதொரு தொகையினை வாங்குவதற்கு அல்லது விற்பதற்கான கடப்பாடுகளை பெற்றிருக்கிறது.

11.6 பெறுதி உடன்படிக்கைகளுக்கு வங்கியின் வெளிப்படுத்துகைத் தன்மையானது, அத்தகைய பெறுதிகளிலிருந்து எதிர்பார்க்கப்படும் நன்மைகள் வங்கிக்கு திடமாகக் கிடைக்கும் தன்மை கொண்டவை என்பதனை உறுதிப்படுத்துவதற்காக வங்கியின் ஒட்டு மொத்த இடர்நேர்வு முகாமைத்துவத்தின் ஒரு பகுதியாக நெருக்கமாகக் கண்காணிக்கப்படுகிறது.

12. ப.நா.நி. தொடர்பான சொத்துக்கள்

| | 2018 ரூபா 000 | 2017 ரூபா 000 |
|---|---|---|
| சிறப்பு எடுப்பனவு உரிமைகளின் உடமைகள் (குறிப்பு 12.1) | **217,126** | 677,131 |
| ப.நா.நிதிய அனுமதிப் பங்கு (குறிப்பு 12.2) | **146,732,242** | 125,996,456 |
| ப.நா.நிதியத்துடனான வைப்புக்கள் (குறிப்பு 12.3) | **199,965** | 164,565 |
| முற்செலுத்தப்பட்ட விதிப்புக்கள் -ப.நா. நி.கடன்கள் | **268,456** | - |
| ப.நா.நி. பங்கு தொடர்பான பெறத்தக்க வட்டி | **9,667** | **4,794** |
| **கழிக்க:** ப.நா.நி. தொடர்பான சொத்துக்கள் மீது எதிர்பார்க்கப்படும் கொடுகடன் இழப்பு நட்டங்கள் (குறிப்பு 12.4) | **(4)** | - |
| **மொத்த ப.நா.நி. தொடர்பான சொத்துக்கள்** | **147,427,452** | **126,842,946** |

12.1 சிறப்பு எடுப்பனவு உரிமை உடமைகள்

சிறப்பு எடுப்பனவு உரிமைகளைக் (சிஎஉ) கொண்டிருத்தலென்பது, ப.நா.நி. அங்கத்தவர்களுக்கு எவ்விதத் தடைகளுமின்றிப் பயன்படுத்தக் கூடியதாயுள்ள நாணய வகைகளுக்கான நிலையான உரிமையாகும். அதாவது சிஎஉ வைத்திருப்பவர்களால் இந் நாணயங்களுக்காக சிஎஉ வைப் பரிமாறிக் கொள்ள முடியும். இவ்வங்கத்தவர்கள் இந் நாணயங்களுக்காக சிஎஉ வைத்திருப்பதற்கும் ஏற்றுக் கொள்வதற்கும் கடப்பாடுடையவர்களாதலாலும் அத்துடன் சிஎஉ முறைமையின் நெறிப்படுத்தல்களுக்கு ஏற்புடையதான நானாவிதப் பொறுப்புகளுக்கு மதிப்பளிப்பதற்கு கடப்பாடுடையவர்களாதலாலும் ஒதுக்குச் சொத்தாக சிஎஉ முக்கியத்துவம் வாய்ந்ததாயுள்ளது. தடையின்றிப் பயன்படுத்தக்கூடியதான நாணயத்தின் மீது சிஎஉ இற்குள்ள உரிமைக்கு இரண்டு விதத்தில் மதிப்பளிப்பதை ப.நா.நி. உறுதி செய்கின்றது. அதாவது, பலவீனமான வெளிநாட்டு நிலைமைகளிலுள்ள அங்கத்தவர்களிடமிருந்து சிஎஉ வைக் கொள்வனவு செய்வதற்குப் பலம் வாய்ந்த வெளிநாட்டு நிலைமையிலுள்ள அங்கத்தவர்களைப் பெயரிடுவதன் மூலமும் மற்றும் முகாமைக்குட்படுத்தப்பட்ட சந்தையினுள் அங்கத்தவர்களிடையே தாமாக முன்வந்து பரிமாற்றிக் கொள்வதன் மூலமுமாகும். மேற்குறிப்பிடப்பட்ட அறிக்கையிடல் தினங்களில் வங்கி வைத்திருந்த மொத்தத் தொகை மேலே காட்டப்பட்டுள்ளது.

12.2 ப.நா. நிதிய அனுமதிப் பங்கு

ப.நா.நிதிய அனுமதிப் பங்கானது (மூலதன சந்தாக்கள்) அதன் அங்கத்துவ நாடுகளிலிருந்து கிடைக்கின்ற ப.நா.நிதிய வளங்களின் முதன்மை மூலமாகும். பரந்தளவில் ஒரு நாட்டின் ஒப்பீட்டளவிலான பொருளாதார நிலைமை கருத்தில் கொள்ளப்பட்டு ஒவ்வொரு நாட்டினதும் அனுமதிப் பங்கு தீர்மானிக்கப்படுகின்றது. ப.நா. நிதியத்தில் இணைகின்ற சந்தர்ப்பத்தில் ஒரு நாடு அதற்குரிய அனுமதிப் பங்குத் தொகையில் நூற்றுக்கு 25 வீதத்தினை பரவலாக ஏற்றுக்கொள்ளப்படுகின்ற வெளிநாட்டு நாணயத்தின் மூலம் அல்லது சிஎஉ யில் செலுத்துதல் வேண்டுமென்பதோடு, எஞ்சிய 75 வீதத்தினையும் தம் நாட்டுப் பணத்தின் மூலம் செலுத்துதல் வேண்டும். வங்கியொன்றின் ப.நா. நிதியத்துடனான அதன் கொடுக்கல்வாங்கல்கள், ப.நா.நிதியத்தின் உறுப்புரையின்படி, அரசாங்கத்தின் சார்பில் அதன் சொந்தக் கணக்கின் மீது இடம்பெறுவதனால் ப.நா.நிதியத்தின் அனுமதிப் பங்கு வங்கியின் சொத்துக்களைப் பிரதிபலிக்கிறது.

ப.நா. நிதியம், பொது அனுமதிப் பங்கு மீளாய்வு உடன்படிக்கைக்கு அமைவாக, 2016 சனவரியில் ப.நா. நிதியத்தின் 189 அங்கத்தவர்களினதும் அனுமதிப் பங்கினையும் 2016 சனவரியில் அதிகரிக்க முடிவு செய்தது. இதன் விளைவாக, இலங்கையின் ப.நா. நிதிய அனுமதிப்பங்கு 2016 பெப்புருவரி 17இல் முன்னைய அனுமதிப்பங்கு தொகையான சிஎஉ 413.40 மில்லியனிலிருந்து சிஎஉ 578.80 மில்லியனுக்கு அதிகரித்தது.

ப.நா. நிதியத்தின் அனுமதிப் பங்கு தொடர்பில் செலுத்தப்படத்தக்க தொகை குறிப்பு 25இல் அனுமதிப் பங்கு பொறுப்பு என்ற தலையங்கத்தின் கீழ் காட்டப்பட்டுள்ளது. உறுப்பினரொருவரின் அனுமதிப் பங்கு பின்வருவன உட்பட ப.நா. நிதியத்துடனான நாட்டின் நிதியியல் மற்றும் அமைப்பியல் ரீதியான தொடர்புகளை நிர்ணயிக்கின்றது.

(i) **சந்தாக்கள்:** ப.நா. நிதியத்திற்கான அங்கத்தவரின் பங்களிப்பானது அங்கத்தவரின் அனுமதிப் பங்குக்குச் சமமாகும். அதன் மூலம் அங்கத்தவர் ப.நா. நிதியத்திற்கு வழங்குவதற்கு கடப்பாடுடைய கூடியபட்ச நிதி வளங்களின் தொகை தீர்மானிக்கப்படுகிறது. அங்கத்தவர் பங்களிப்பை முழுமையாகச் செலுத்துதல் வேண்டும். 25 சதவீதத்தினை ப.நா.நிதியம் தீர்மானிக்கின்ற ஒதுக்குச் சொத்துக்களிலிருந்தும் (சிஎஉ அல்லது பயன்படுத்தக்கூடிய நாணயங்களில்) மற்றும் எஞ்சிய தொகையை அங்கத்தவரின் நாணயத்தின் மூலமும் செலுத்துதல் வேண்டும்.

(ii) **வாக்களிக்கும் அதிகாரம்:** ப.நா.நிதியத்தின் தீர்மானங்களின் போது அங்கத்தவரின் வாக்களிக்கும் அதிகாரமானது அனுமதிப் பங்கின் மூலம் தீர்மானிக்கப்படுகிறது. ஒவ்வொரு ப.நா.நி. அங்கத்தவரும் அடிப்படை வாக்குகளுடன், அனுமதிப் பங்கின் ஒவ்வொரு சிஎஉ 100,000 க்கு ஒரு மேலதிக வாக்கு வீதமும் உரித்துடையவராவர். 2008 சீர்திருத்தமானது மொத்த வாக்குகளின் 5.50 சதவீதத்தில் அடிப்படை வாக்குகளின் எண்ணிக்கையினை நிர்ணயித்துள்ளது.

(iii) **நிதியிடலை பெறுவதற்கான வசதி:** அங்கத்தவரால் ப.நா. நிதியத்திடமிருந்து பெற்றுக்கொள்ளக் கூடிய நிதி வசதிகளுக்கு (வசதியின் எல்லை) அங்கத்தவருடைய அனுமதிப் பங்கு அடிப்படையாய் அமைகிறது. துணைநில் ஒழுங்குவிதிகள் மற்றும் விஸ்தரிக்கப்பட்ட திட்டங்களுக்கேற்ப அங்கத்தவரால் தற்காலத்தில் வருடாந்த அனுமதிப் பங்கின் 145 சதவீதமும் திரண்ட ரீதியில் 435 சதவீதம் வரையிலும் கடன் பெறலாம். அசாதாரணமான சந்தர்ப்பங்களில் இவ்வசதி இதை விட அதிகரிக்கலாம்.

(iv) **சிஎஉ ஒதுக்கல்:** அங்கத்தவருடைய அனுமதிப் பங்குகளின் விகிதாசாரப்படி இவர்களுக்கான சிஎஉ ஒதுக்குத் தொகை தீர்மானிக்கப்படுகிறது.

**12.3 ப.நா. நிதியத்துடனான வைப்புக்கள் - பாரிய அளவிற்குக் கடன்பட்ட வறிய நாடுகளுக்கான வறுமைக் குறைப்பு வளர்ச்சி வசதி நம்பிக்கை நிதிய வைப்பு**

பன்னாட்டு நாணய நிதியத்தில் நிர்வகிக்கப்படும் விசேட எதிர்பாரா நிகழ்வுக் கணக்கு-2 (வி.எ.நி.கணக்கு-2) இற்குப் பிந்திய கணக்கில் இலங்கையின் வைப்பிலிருந்து சிஎஉ 788,783 இனை மாற்றுவதன் மூலம் 2000 ஏப்பிறல் 21ஆம் திகதி இலங்கை அரசாங்கத்திற்கும் பன்னாட்டு நாணய நிதியத்திற்குமிடையில் மேற்கொள்ளப்பட்ட உடன்படிக்கையின் கீழ் பாரிய அளவிற்குக் கடன்பட்ட வறிய நாடுகளுக்கான வறுமைக் குறைப்பு வளர்ச்சி வசதி நம்பிக்கைப் பொறுப்பு வைப்பு மேற்கொள்ளப்பட்டது. வி.எ.நி. கணக்கு-2 ஐ முடிவுறுத்துவதற்கு பன்னாட்டு நாணய நிதியத்தினால் தீர்மானிக்கப்பட்ட போது, இலங்கைக்கெதிராக வி.எ.நி. கணக்கு-2 இல் வைக்கப்பட்டிருந்த மீதியை மாற்றுவதன் மூலம் பன்னாட்டு நாணய நிதியத்தின் வழிகாட்டலின் கீழ் இந்தக் கணக்கு உருவாக்கப்பட்டது. வி.எ.நி. கணக்கு-2 இற்குப் பிந்திய கணக்கிலுள்ள மீதிகளை முழுமையான நன்கொடையாக அல்லது பாரிய அளவிற்குக் கடன்பட்ட வறிய நாடுகளுக்கான வறுமைக் குறைப்பு வளர்ச்சி வசதி கடனுக்கு மானியம் வழங்கும் ஒரு வழியாக பாரிய அளவிற்குக் கடன்பட்ட வறிய நாடுகளுக்கான வறுமைக் குறைப்பு வளர்ச்சி வசதி நம்பிக்கைப் பொறுப்புக்கு வழங்குவதற்கு கவனத்தில் கொள்ளுமாறு அந்தக் கணக்கில் மீதிகளைக் கொண்டிருந்த நாடுகளை பன்னாட்டு நாணய நிதியம் கேட்டுக் கொண்டது. அதற்கிணங்க இலங்கை அரசாங்கம், வி.எ.நி. கணக்கிற்குப் பிந்திய கணக்கிலுள்ள நிதிகளை முழுமையான நன்கொடையாகவன்றி 2018 வரையிலான வட்டியில்லா வைப்பாக பாரிய அளவிற்குக் கடன்பட்ட வறிய நாடுகளுக்கான வறுமைக் குறைப்பு வளர்ச்சி வசதி நம்பிக்கைப் பொறுப்புக் கணக்குக்கு மாற்றுவதற்கு இணங்கியது. இது பின்னர் 2024 வரை நீடிக்கப்பட்டது.

**12.4 பா.நிதியத்துடன் தொடர்புபட்ட சொத்துக்கள் மீது எதிர்பார்க்கப்பட்ட கொடுகடன் இழப்புக்களிலான அசைவு**

| கட்டம் 1 | 2018<br>ரூபா 000 |
|---|---|
| சனவரி 1இலுள்ளவாறான நிலுவை | - |
| ப.நி.அ.நி 9இன் ஆரம்ப பிரயோகத்தின் போதான சீராக்கம் (குறிப்பு 8.2.2) | 3 |
| சனவரி 1இல் உள்ளவாறான சீராக்கப்பட்ட நிலுவை | 3 |
| ஆண்டுகாலப்பகுதியிலான விதிப்புக்கள் | 1 |
| **திசெம்பர் 31 உள்ளவாறான நிலுவை** | **4** |

**13. இலங்கை அரச பிணையங்கள்**

அரச பிணையங்களின் பட்டியலானது நாணய விதிச்சட்டத்தின் 90 (2) பிரிவின் கீழ், நாணயக் கொள்கையை நடைமுறைப்படுத்துவதற்காக திறந்த சந்தைத் தொழிற்பாடுகளை மேற்கொள்ளும் நோக்கில் கொள்வனவு செய்யப்பட்டு பேணப்படுகின்றது.

| | 2018<br>ரூபா 000 | 2017<br>ரூபா 000 |
|---|---|---|
| திறைசேரி உண்டியல்கள் | **43,443,802** | 9,704,962 |
| திறைசேரி முறி | **1,542,796** | - |
| பெறத்தக்க வட்டி | **44,559** | - |
| | **45,031,157** | 9,704,962 |

**14. மீள் விற்பனை உடன்படிக்கையின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட பிணையங்கள்**

| | 2018<br>ரூபா 000 | 2017<br>ரூபா 000 |
|---|---|---|
| மீள்கொள்வனவு உடன்படிக்கையின் கொள்வனவு செய்யப்பட்ட பிணையங்கள் | **229,333,000** | 22,359,000 |
| மீள்கொள்வனவு உடன்படிக்கையின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட பிணையங்கள் மீது பெறத்தக்க வட்டி | **121,409** | 16,124 |
| | **229,454,409** | 22,375,124 |

**15. அரசுக்கான தற்காலிக முற்பணங்கள்**

இவை நாணய விதிச் சட்டத்தின் 89ஆவது பிரிவின் கீழ் இலங்கை அரசாங்கத்திற்கு வழங்கப்பட்ட முற்பணங்களைக் குறிக்கின்றன. இது திரண்ட நிதியத்திலிருந்து உறப்படுவதற்காக, அங்கீகரிக்கப்பட்ட நிதியியல் செலவுகளுக்கான முற்பணங்களின் ஏற்பாடுகளில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்குட்பட்டதாகும்.

**16. வங்கிகளுக்கான கடன்கள்**

இக்கடன்களானது நாணய விதிச் சட்டத்தின் அத்தியாயம் V இன் பகுதி III 'ஏ' இற்கிணங்க, உற்பத்தித்திறன் தேவைகளுக்காக கடன் கொடுத்தலை வசதிப்படுத்துவதற்காக வழங்கப்பட்டுள்ளது.

| | 2018<br>ரூபா 000 | 2017<br>ரூபா 000 |
|---|---|---|
| நடுத்தர மற்றும் நீண்டகால கொடுகடன் திட்டம் | | |
| - தொடர்புபட்ட தரப்பினர்கள் | **26,951** | 29,146 |
| மாகாண அபிவிருத்திக் கொடுகடன் திட்டம் - தொடர்புபட்ட தரப்பினர்கள் | **-** | 28,254 |
| சௌபாக்யா கடன் திட்டம் | | |
| - தொடர்புபட்ட தரப்பினர்கள் | **13,122** | 49,539 |
| - ஏனையவர்கள் | **8,345** | 14,211 |
| கிழக்கின் பொருளாதார நடவடிக்கைகளை மீளமைத்தல் கடன்திட்டம் | | |
| - தொடர்புபட்ட தரப்பினர்கள் | **12,358** | 41,382 |
| - ஏனையவர்கள் | **16,403** | 35,492 |
| வடக்கு மற்றும் கிழக்கில் பாதிக்கப்பட்ட வீடுகளின் திருத்தல் | | |
| - தொடர்புபட்ட தரப்பினர்கள் | **18,830** | 24,330 |
| வடக்கின் எழுச்சிக் கடன் திட்டம் (மீள்நிதியிடல் கட்டம் II) | | |
| - தொடர்புபட்ட தரப்பினர்கள் | **108** | 1,348 |
| **கழிக்குக:** | | |
| பெறுமதி இழப்பிற்கான ஏற்பாடு (குறிப்பு 16.1) | **(154)** | - |
| **தேறிய பெறத்தக்கவை** | **95,963** | 223,702 |

**16.1 பெறுமதி இழப்பிற்கான ஏற்பாட்டிலான அசைவு**

| | 2018<br>ரூபா 000 | 2017<br>ரூபா 000 |
|---|---|---|
| சனவரி 01இல் உள்ளவாறு | - | 27,302 |
| ஆண்டு காலப்பகுதியிலான எதிர்ப்பதிவுகள் | - | (27,302) |
| வங்கிகளுக்கான கொடுகடன்கள் மீது எதிர்பார்க்கப்படும் கொடுகடன் இழப்பு (குறிப்பு 16.2) | **154** | - |
| **திசெம்பர் 31இல் உள்ளவாறு** | **154** | - |

**16.2 வங்கிகளுக்கான கடன்கள் மீது எதிர்பார்க்கப்படும் கொடுகடன் இழப்புக்களிலான அசைவு**

| | கட்டம் 1<br>ரூபா 000 | கட்டம் 2<br>ரூபா 000 | கட்டம் 3<br>ரூபா 000 |
|---|---|---|---|
| சனவரி 01இல் உள்ளவாறான நிலுவை | - | - | - |
| ப.நிஅ.நி 9இன் ஆரம்ப பிரயோகத்தின் போதான சீராக்கம் (குறிப்பு 8.2.2) | **26** | 616 | 642 |

| | | | |
|---|---|---|---|
| சனவரி 1இல் உள்ளவாறான சீராக்கப்பட்ட நிலுவை | **26** | 616 | 642 |
| ஆண்டுகாலப்பகுதியிலான எதிர்ப்பதிவுகள் | **(11)** | (477) | (488) |
| **திசெம்பர் 31இல் உள்ளவாறான நிலுவை** | **15** | 139 | 154 |

### 17. நிதியியல் மற்றும் ஏனைய நிறுவனங்களிலான பங்குரிமை முதலீடுகள்

நாணய விதிச் சட்டத்தின் பிரிவு 105 “ஏ” ந்கு அமைய, இம்முதலீடுகள் மேற்கொள்ளப்படுகின்றன. இப் பிரிவின் கீழ் நாணயச் சபையின் கருத்துப்படி வங்கித்தொழில் மற்றும் நிதியியல் துறையில் மனிதவள மூலவளங்களையும் தொழில்நுட்ப அபிவிருத்தியையும் முன்னேற்றுவதற்கும் மேம்படுத்துவதற்கும் அல்லது இலங்கையில் தொழிற்படுகின்ற வர்த்தக வங்கிகளுக்கிடையே கொடுக்கல்வாங்கல்களின் தீர்ப்பனவினை வசதிப்படுத்துவதற்குமாக ஏதாவது கம்பனி நிறுவப்படுமிடத்து அக்கம்பனிகளிலிருந்து பங்குகளைக் கொள்வனவு செய்து வைத்திருப்பதற்கு வங்கிக்கு வலுவளிக்கப்பட்டுள்ளது.

### 17.1 முதலீட்டு நிலைமை

| கம்பனி | வியாபாரத்தின் தன்மை | 2018 | | 2017 | |
|---|---|---|---|---|---|
| | | பங்குகளின் எண்ணிக்கை | கொண்டு செல்லல் பெறுமதி ரூ.000 | பங்குகளின் எண்ணிக்கை | கொண்டு செல்லல் பெறுமதி ரூ.000 |
| லங்கா கிளியர் (பிறைவேட்) லிமிடெட் | தன்னியக்கத் தீர்ப்பனவு | **2,950,000** | **417,128** | 2,950,000 | 29,500 |
| பிட்ச் ரேட்டிங்ஸ் லங்கா லிமிடெட் | கொடுகடன் தரமிடல் | **-** | **-** | 3,500,000 | 3,500 |
| வரையறுக்கப்பட்ட லங்கா நிதிச் சேவைகள் பணியகம் | தன்னியக்க நிதிய மாற்றல் | **225,000** | **1,396** | 225,000 | 2,250 |
| வரையறுக்கப்பட்ட இலங்கை கொடுகடன் தகவல் பணியகம் | கொடுகடன் தகவல் வழங்கல் ஏற்பாடு | **48,244** | **963,355** | 48,244 | 5,845 |
| | | | **1,381,879** | | 41,095 |

17.2 பங்குரிமை முதலீடுகளானவை, வங்கியின் நிதியியல் கூற்றுக்களை தயாரிக்கும் நேரத்தில் இருந்த இக்கம்பனிகளின் மிகப்பிந்திய கணக்காய்வு செய்யப்படாத நிதியியல் கூற்றுக்களின் படி பங்கொன்றிற்கான தேறிய சொத்துக்களின் அடிப்படையில் 2018 திசெம்பர் 31 இலுள்ளவாறு சீர்மதிப்புப் பெறுமதியில் கொண்டு செல்லப்பட்டன. இதன்படி, கீழ்வரும் திகதிகளில் உள்ளவாறான பங்கொன்றிற்கான தேறிய சொத்து பயன்படுத்தப்பட்டது.

லங்காகிளியர் (பிறைவேட்) லிமிடெட் - 2018 நவெம்பர் 30
வரையறுக்கப்பட்ட லங்கா நிதிச் சேவைகள் பணியகம் - 2018 ஒத்தோபர் 31
வரையறுக்கப்பட்ட இலங்கை கொடுகடன் தகவல் பணியகம் - 2018 திசெம்பர் 31

### 18. ஏனைய சொத்துக்கள்

| நிதியியல் சொத்துக்கள் | 2018 ரூபா 000 | 2017 ரூபா 000 |
|---|---|---|
| உள்ளக நிதியங்களின் முதலீடு | **7,955,357** | 6,730,548 |
| **கழிக்குக:** சொத்துக்களின் மீதான பெறுமதியிழப்பிற்கான ஏற்பாடு (குறிப்பு 18.1) | **(163,144)** | (151,674) |
| உள்ளக நிதியங்களின் தேறிய முதலீடு | **7,792,393** | 6,578,874 |
| பதிவழிப்புச் செலவில் அலுவலர் கடன்கள் | **5,780,754** | 5,036,028 |
| திறைசேரி மற்றும் ஏனைய அமைச்சுக்களிலிருந்து பெறத்தக்கவை | **18,785** | 54,490 |
| ஏனைய பெறத்தக்கவைகள் | **126,086** | 143,276 |
| | **13,718,018** | 11,812,668 |
| **நிதியல்லாச் சொத்துக்கள்** | | |
| அலுவலர் கடன் தொடர்பான பிற்போடப்பட்ட சொத்து | **1,065,287** | 1,069,802 |
| | **14,783,305** | 12,882,470 |

### 18.1 சொத்துக்களின் பெறுமதி இழப்புக்கான ஏற்பாட்டிலான அசைவு

| | 2018 | | | 2017 |
|---|---|---|---|---|
| | கட்டம் 1 ரூ.000 | கட்டம் 3 ரூ.000 | மொத்தம் ரூ.000 | ரூ.000 |
| சனவரி 1 இல் உள்ளவாறான நிலுவை | **-** | **151,674** | 151,674 | 139,131 |
| ப.நிஅ.நி 9 ஆரம்ப பிரயோகத்தின் போதான சீராக்கம் (குறிப்பு 8.2.2) | **8** | **-** | 8 | - |
| சனவரி 1இல் உள்ளவாறான சீராக்கப்பட்ட நிலுவை | **8** | **151,674** | 151,682 | 139,131 |
| ஆண்டு காலப்பகுதிக்கான விதிப்பு | **84** | **11,378** | 11,462 | 12,543 |
| திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிலுவை | **92** | **163,052** | 163,144 | 151,674 |

### 19. தங்கம்

நாணய விதிச் சட்டத்தின் பிரிவு 67(1) மற்றும் பிரிவு 67(2) இன்படி, தங்கம் வங்கியின் பன்னாட்டு ஒதுக்குகளின் ஒரு பகுதியாக வைத்திருக்கப்படுகிறது. நாணய விதிச் சட்டத்தின் பிரிவு 67(2) இன்படி, நாணயச் சபை, மத்திய வங்கியால் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவே இலகுவாக தங்கமாக மாற்றக்கூடிய குறைந்ததொரு அணு ஒதுக்காவது தங்க வடிவிலோ அல்லது நாணய வடிவிலா வைத்திருப்பதற்கு முயலவேண்டும்.

### 20. இருப்புக்கள்

| | 2018 ரூபா 000 | 2017 ரூபா 000 |
|---|---|---|
| சுற்றோட்டத்திலுள்ள நாணயத் தாள்கள் | **2,495,222** | **4,442,014** |
| சுற்றோட்டத்திலுள்ள நாணயக் குத்திகள் | **2,194,055** | **1,850,723** |
| வழங்குநரிடமிருந்தான இடைப்போக்கிலுள்ள நாணயக்குத்திகள் | **613,432** | **-** |
| வழங்குநரிடமிருந்தான இடைப்போக்கிலுள்ள நாணயத் தாள்கள் | **1,253,694** | **568,716** |
| | **6,556,403** | **6,861,453** |
| **கழிக்குக:** மெதுவாக அசையும் இருப்புக்களுக்கான ஏற்பாடு | **(45,000)** | **(45,000)** |
| | **6,511,403** | **6,816,453** |
| எழுதுகருவிகளும் நானாவித இருப்புகளும் | **57,318** | **58,881** |
| மருத்துவ நிலைய இருப்புக்கள் | **214** | **199** |
| **கிரயச் செலவு அல்லது பெறத்தக்க தேறிய பெறுமதி இவற்றில் குறைவான பெறுமதியில் மொத்த இருப்புக்கள்** | **6,568,935** | **6,875,533** |

2018 காலப்பகுதியில் ரூ.3,199.00 மில்லியன் (2017 ரூ.2,850.82 மில்லியன்) பெறுமதியான இருப்புக்கள் ஆண்டுகாலப்பகுதியில் செலவினமாக அங்கீகரிக்கப்பட்டு “இருப்பின் கிரயம்” (புதிய நாணய வழங்கல் செலவு) ஆக உள்ளடக்கப்பட்டது.

**21. ஆதனங்கள், பொறிகள் மற்றும் கருவிகள்**

| கிரயம் | காணியும் கட்டடமும் | இயந்திரங்கள், இயந்திரப் பொறிகள் | தளபாடங்களும் கருவிகளும் | உந்து ஊர்திகள் | கணனி | ஏனையவை | நடைபெற்று வரும் கட்டுமானம் | 2018 மொத்தம் | 2017 மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 |
| சனவரி 1ஆம் நாள் உள்ளவாறு | 16,743,200 | 1,567,670 | 1,305,057 | 614,563 | 843,365 | 55,436 | 28,206 | **21,157,497** | 20,920,014 |
| ஆண்டுகாலப்பகுதியில் சேர்க்கப்பட்டவை | - | 10,272 | 17,537 | - | 64,328 | 1,303 | 11,074 | **104,514** | 267,129 |
| ஆண்டு காலப்பகுதியில் அகற்றப்பட்டவை | (734,278) | (1,278) | (11,672) | (13,300) | (12,143) | - | - | **(772,671)** | (29,646) |
| ஆண்டுகாலப்பகுதியில் மாற்றல் செய்யப்பட்டவை/ பதிவழிக்கப்பட்டவை | 106 | - | 450 | - | - | - | (22,958) | **(22,402)** | - |
| திசெம்பர் 31இல் உள்ளவாறு | 16,009,028 | 1,576,664 | 1,311,372 | 601,263 | 895,550 | 56,739 | 16,322 | **20,466,938** | 21,157,497 |

| தேய்மானம் | காணியும் கட்டடமும் | இயந்திரங்களும் இயந்திரப் பொறிகளும் | தளபாடங்களும் கருவிகளும் | உந்து ஊர்திகள் | கணனி | ஏனையவை | நடைபெற்று வரும் கட்டுமானம் | 2018 மொத்தம் | 2017 மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 |
| சனவரி 1ஆம் நாள் உள்ளவாறு | 251,534 | 860,947 | 863,095 | 410,441 | 774,790 | 36,173 | - | **3,196,980** | 2,787,624 |
| ஆண்டிற்கான தேய்மானம் | 195,031 | 78,357 | 80,725 | 25,923 | 40,289 | 1,126 | - | **421,451** | 434,558 |
| ஆண்டு காலப்பகுதியில் அகற்றப்பட்டவை | (70,478) | (663) | (10,866) | (13,300) | (12,040) | - | - | **(107,347)** | (25,202) |
| திசெம்பர் 31இல் உள்ளவாறு | 376,087 | 938,641 | 932,954 | 423,064 | 803,039 | 37,299 | - | **3,511,084** | 3,169,980 |
| தேறிய ஏட்டுப் பெறுமதி | 15,632,941 | 638,023 | 378,418 | 178,199 | 92,511 | 19,440 | 16,322 | **16,955,854** | 17,960,517 |

காணிகள் கட்டடங்களுக்கான கொண்டு செல்லும் பெறுமதி சீர்மதிப்புப் பெறுமதியில் குறிப்பிடப்படுகின்றன. மிக அண்மைக்கால சுயாதீனமான மதிப்பீடு எவ்.எம். வலுவோ்ஸ் (FM மதிப்பீட்டாளர்) இனால் 2016 திசெம்பர் 31இல் மேற்கொள்ளப்பட்டதோடு, அது 2016 திசெம்பர் 31இல் உள்ளவாறாக அறிக்கையிடப்பட்டுள்ளது.

பிரேசில் மற்றும் நியூயோர்க்கிலுள்ள வங்கியின் ஆதனங்கள் வெளிநாட்டு விவகாரங்கள் அமைச்சிற்கு 2018 மேயில் கிரயத்தில் விற்கப்பட்டன.

நிதியாண்டுப் பகுதியில் வங்கியினால் கொள்வனவு செய்யப்பட்ட சொத்துக்கள், பொறிகள் மற்றும் சாதனங்களின் காசு வடிவிலமைந்த மொத்தச் செலவு ரூ.104.18 மில்லியன்களாகும் (2017 - ரூ.265.73 மில்லியன்).

2018 திசெம்பர் 31இல் உள்ளவாறு இன்னும் பயன்பாட்டிலிருக்கும் முழுமையாகத் தேய்வடைந்த சொத்துக்களின் பெறுமதி ரூ.1,611.38 மில்லியனாக இருந்தது (2017 - ரூ.1,598.17 மில்லியன்).

நிதியாண்டில், வங்கியானது நடைபெற்றுவரும் கட்டுமானத்தில் இருந்து ரூ.22.40 மில்லியனை வருமானக்கூற்றுக்கு மாற்றியது.

**வங்கியின் இறையிலி காணியிலுள்ள கட்டங்கள் மற்றும் குத்தகைக் காணியிலுள்ள கட்டடங்கள் என்பனவற்றின் மதிப்பீடு தொடர்பான தகவல்கள்**

| ஆதனம் | பட்டயம் பெற்ற மதிப் பீட்டாளரின் பெயர் | மதிப்பீட்டு அணுகுமுறை | பேர்ச் ஒன்றிற்கான மதிப்பிடப்பட்ட விலை (ரூபா) | சதுர அடி ஒன்றுக்கான மதிப்பிடப்பட்ட விலை (ரூபா) | மாத மொன்றுக் கான மதிப்பிடப் பட்ட வாடகை (ரூபா) | வெளிச் செல்லும் செலவுகள் | கொள்வனவு ஆண்டுகள் |
|---|---|---|---|---|---|---|---|
| காணி மற்றும் கட்டடம் | | | | | | | |
| தலைமை அலுவலகம் - கொழும்பு 01 | ஏ.ஏ.எம். பாதிகு | சந்தை அணுகுமுறை மற்றும் கிரய அணுகுமுறை | 12,500,000 | 9,000 - 15,000 | - | - | - |
| வைற்எவேய்ஸ் கட்டடம் - கொழும்பு 01 | ஏ.ஏ.எம். பாதிகு | வருமான அணுகுமுறை | 13,500,000 | - | 6,000,000 | 40% | 16.66 |
| லொய்ட்ஸ் கட்டடம் - கொழும்பு 01 | ஏ.ஏ.எம். பாதிகு | வருமான அணுகுமுறை | 13,500,000 | - | 6,750,000 | 40% | 16.66 |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| சென்றல் பொயின்ட் கட்டடம் - கொழும்பு 01 | ஏ.ஏ.எம். பாதிகு | வருமான அணுகுமுறை | 14,000,000 | - | 7,500,000 | 35% | 16.66 |
| வங்கிக் கற்கைகளுக்கான மத்திய நிலையம் - இராஜகிரிய | ஏ.ஏ.எம். பாதிகு | சந்தை அணுகுமுறை மற்றும் கிரய அணுகுமுறை | 2,500,000 - 3,500,000 | 2,500 - 9,500 | - | - | - |
| வங்கி இல்லம் - கொழும்பு 07 | ஏ.ஏ.எம். பாதிகு | சந்தை அணுகுமுறை மற்றும் கிரய அணுகுமுறை | 7,500,000 | 3,500 - 8,500 | - | - | - |
| பிரதேச அலுவலகம் - மாத்தறை | ஏ.ஏ.எம். பாதிகு | சந்தை அணுகுமுறை மற்றும் கிரய அணுகுமுறை | 1,500,000 - 3,000,000 | 4,000 - 7,500 | - | - | - |
| பிரதேச அலுவலகம் - மாத்தளை | ஏ.ஏ.எம். பாதிகு | சந்தை அணுகுமுறை மற்றும் கிரய அணுகுமுறை | 100,000 - 500,000 | 2,500 - 7,500 | - | - | - |
| விடுமுறை இல்லம் - நுவரெலியா | ஏ.ஏ.எம். பாதிகு | சந்தை அணுகுமுறை மற்றும் கிரய அணுகுமுறை | 1,000,000 | 2,000 - 7,000 | - | - | - |
| விடுமுறை இல்லம் - கதிர்காமம் | ஏ.ஏ.எம். பாதிகு | சந்தை அணுகுமுறை மற்றும் கிரய அணுகுமுறை | 200,000 | 4,500 - 10,000 | - | - | - |
| <u>குத்தகைக் காணியிலுள்ள கட்டடங்கள்</u> | | | | | | | |
| பிரதேச அலுவலகம் - அநுராதபுரம் | ஏ.ஏ.எம். பாதிகு | கிரய அணுகுமுறை | - | 3,500 - 7,500 | - | - | - |
| விடுமுறை இல்லம் - அநுராதபுரம் | ஏ.ஏ.எம். பாதிகு | கிரய அணுகுமுறை | - | 5,500 | - | - | - |
| பிரதேச அலுவலகம் - கிளிநொச்சி | ஏ.ஏ.எம். பாதிகு | கிரய அணுகுமுறை | - | 1,500 - 7,000 | - | - | - |
| விடுமுறை இல்லம் - சோமாவதிய | ஏ.ஏ.எம். பாதிகு | கிரய அணுகுமுறை | - | 10,000 | - | - | - |

**காணி, கட்டடங்களின் உள்ளடக்கம்**

| | கொண்டு செல்லும் பெறுமதி 2018 ரூபா 000 | கொண்டு செல்லும் பெறுமதி 2017 ரூபா 000 |
|---|---|---|
| இறையிலி காணி | **8,930.375** | 8,976,339 |
| இறையிலி காணிகளிலுள்ள கட்டடங்கள் | **6,449,206** | 7,250,954 |
| குத்தகைக் காணிகளிலுள்ள கட்டடங்கள் | **253,360** | 264,373 |
| | **15,632,941** | 16,491,666 |

மீள் பெறுமதியிடப்பட்ட காணிகள் மற்றும் கட்டடங்களின் கொண்டு செல்லல் பெறுமதி கிரயத்தில் இருந்து தேய்மானங்கள் கழிக்கப்பட்ட பெறுமதியாக நிதியியல் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ள ரூ.7,796.82 மில்லியனாகும் (2017 - ரூ.8,607.88 மில்லியன்).

## 22. அருவச் சொத்துக்கள்

| | 2018 ரூபா 000 | 2017 ரூபா 000 |
|---|---|---|
| **கணனி மென்பொருட்கள்:** | | |
| கிரயச் செலவு: | | |
| சனவரி 1இல் உள்ளவாறு | **957,204** | 949,772 |
| ஆண்டுகாலத்தில் சேர்க்கப்பட்டவை | **25,484** | 7,432 |
| திசெம்பர் 31இல் உள்ளவாறு | **982,688** | 957,204 |
| **பெறுமதியிழப்பு** | | |
| சனவரி 1இல் உள்ளவாறு | **876,581** | 793,452 |
| பதிவழிப்புக் கட்டணம் | **75,670** | 83,129 |
| திசெம்பர் 31இல் உள்ளவாறு | **952,251** | 876,581 |
| **தேறிய ஏட்டுப் பெறுமதி** | | |
| திசெம்பர் 31இல் உள்ளவாறு | **30,437** | 80,623 |

ஆண்டுப் பகுதியில் வங்கி காசின் மூலம் கொள்வனவு செய்த அருவச் சொத்துக்களின் மொத்தச் செலவு ரூ.25.48 மில்லியனாகும் (2017 - ரூ.7.43 மில்லியன்).

2018 திசெம்பர் 31இல் உள்ளவாறு இன்னும் பயன்பாட்டிலிருக்கும் முழுமையாகப் பதிவழிப்புச் செய்யப்பட்ட அருவச் சொத்துக்களின் பெறுமதி ரூ.927.38 மில்லியனாகும் (2017 - ரூ.636.58 மில்லியன்).

## 23. வங்கிகள் மற்றும் நிதியியல் நிறுவனங்கள்

| | 2018 ரூபா 000 | 2017 ரூபா 000 |
|---|---|---|
| வெளிநாட்டு வங்கிகளுக்குச் செலுத்த வேண்டியவை | **16,864,115** | 8,237,633 |
| ஏனைய வெளிநாட்டு நிதியியல் நிறுவனங்களுக்குச் செலுத்த வேண்டியவை | **2,437,045** | 1,911 |
| | **19,301,160** | 8,239,544 |

## 24. ஆசிய தீர்ப்பனவு ஒன்றியம்

ஆசியத் தீர்ப்பனவு ஒன்றியமானது, 1974ஆம் ஆண்டில் பங்குபற்றும் நாடுகளின் மத்திய வங்கிகளுக்கிடையே பிராந்தியங்களுக்கிடையிலான கொடுப்பனவுகளை பல்தரப்பு அடிப்படையில் தீர்த்து வைப்பதற்கான முறைமையொன்றாக, ஆசிய மற்றும் பசுபிக் பிராந்தியத்திற்கான ஐக்கிய நாடுகள் பொருளாதார மற்றும் சமூக அலுவல்கள் ஆணைக்குழுவின் முன்னெடுப்புடன் நிறுவப்பட்டது. இலங்கை, பங்களாதேசம், ஈரான், நேபாளம், பாகிஸ்தான், இந்தியா, பூட்டான், மியன்மார் மற்றும் மாலைதீவு ஆகியன ஆசிய தீர்ப்பனவு ஒன்றியத்தில் பங்குபற்றும் நாடுகளாகும். ஒவ்வொரு ஆசியத்தீர்ப்பனவு ஒன்றிய பங்குபற்றுனரின் தேறிய தீர்ப்பனவு நிலையானது, இரண்டு மாத காலப்பகுதியில் வைத்திருக்கப்பட்ட நாளாந்த வெளிநின்ற தொகையின் அடிப்படையில் கணிப்பிடப்படுவதுடன் தீர்ப்பனவானது அடுத்துவரும் மாதத்தில் நான்கு வேலை நாட்களுக்குள் இடம்பெறும். ஆண்டுகாலப்பகுதியில் வட்டிவீதமானது 1.45 சதவீதத்திற்கும் 2.88 சதவீதத்திற்கும் இடையில் இருந்தது. (2017 - 0.63 சதவீதம் மற்றும் 2.28 சதவீதம்)

**25. பன்னாட்டு நாணய நிதியம்**

| | 2018 ரூபா 000 | 2017 ரூபா 000 |
|---|---|---|
| வட்டியுடனான கடன்கள் | **181,318,765** | 116,996,460 |
| | - | - |
| சிறப்பு எடுப்பனவு உரிமைகளின் ஒதுக்கு | **100.253,563** | 86,086,013 |
| ப.நா. நிதியத்துக்குச் செலுத்த வேண்டிய ஏனைய தொகை | **67,352,253** | 57,467,696 |
| அனுமதிப் பங்குப் பொறுப்பு | **68,063,665** | 58,445,100 |
| | **235,669,481** | 201,998,809 |
| | **416,988,246** | 318,995,269 |

25.1 வட்டியுடனான கடன்கள், ப.நா.நிதியத்திடமிருந்து பெறப்பட்ட நீடிக்கப்பட்ட நிதிய வசதி (நீ.நி.வசதி) ஒழுங்குகளையும் உள்ளடக்கியுள்ளது.

25.2 **நீடிக்கப்பட்ட நிதிய வசதி (நீ.நி.வசதி)** என்பது சென்மதி நிலுவை மற்றும் அரசினுடைய பொருளாதார சீர்திருத்த நிகழ்ச்சி நிரல் என்பனவற்றுக்கு உதவும் ப.நா. நிதியத்தால் வழங்கப்பட்ட மூன்று வருடகால வசதியாகும். ப.நா. நிதியம் சிஎஉ 1.10 பில்லியன் (அண்ணளவாக ஐ.அ.டொலர் 1.50 பில்லியன்) பெறுமதி கொண்ட நீ.நி வசதிக்கு 2016 யூனில் ஒப்புதலளித்தது. இத்தொகையானது நாட்டின் தற்போதைய ப.நா. நிதியத்துடனான அனுமதிப் பங்கின் 185 சதவீதத்திற்குச் சமனானதாகும். நீ.நி. வசதியின் கீழ் முதற்கட்ட தொகுதிக் கொடுப்பனவு சிஎஉ 119.89 மில்லியன் (அண்ணளவாக ஐ.அ.டொலர் 168.10 மில்லியன்) 2016 யூனில் கிடைக்கப்பெற்றது. இரண்டாவது தொகுதிக் கொடுப்பனவு பெறுமதியான சிஎஉ 119.89 மில்லியன் (அண்ணளவாக ஐ.அ.டொலர் 162.56 மில்லியன்), மூன்றாவது தொகுதிக் கொடுப்பனவு பெறுமதியான சிஎஉ 119.89 மில்லியன் (அண்ணளவாக ஐ.அ.டொலர் (167.2 மில்லியன்), நான்காவது தொகுதிக் கொடுப்பனவு பெறுமதியான சிஎஉ 177.77 மில்லியன் (அண்ணளவாக ஐ.அ.டொலர் 251.4 மில்லியன்) மற்றும் ஐந்தாவது தொகுதி கொடுப்பனவு பெறுமதியான சிஎஉ 177.77 மில்லியன் (அண்ணளவாக ஐ.அ.டொலர் 252 மில்லியன்) என்பன முறையே 2016 யூன் 2017 யூலை, 2017 திசெம்பர் மற்றும் 2018 யூனில் பகிர்ந்தளிக்கப்பட்டன. ஐந்தாவது தொகுதிக் கொடுப்பனவுடன் நீடிக்கப்பட்ட நிதிய வசதியின் பேரில் இலங்கை இதுவரை மொத்தமாக ஐ.அ.டொலர் 1,014 மில்லியனை பெற்றிருக்கின்றது. மிகுதி தொகையானது ஓராண்டு காலப்பகுதியில் இன்னும் இரு தொகுதி கொடுப்பனவாக வழங்கப்பட எதிர்பார்க்கின்றது. நீநிவ மீது பிரயோகிக்கத்தக்க வட்டிவீதமானது சிஎஉ வட்டி வீதத்திற்குச் சமனான (தற்பொழுது ஆண்டிற்கு 0.05 சதவீதத்தில் இருக்கிறது) அடிப்படை கட்டணவீதத்துடன் 100 அடிப்படைப் புள்ளிகளை கூட்டிய வீதத்தை உள்ளடக்கியிருக்கும்.

| | பயனுறுதி வட்டி வீதம் % | முதிர்ச்சி | 2018 ரூ. 000 | 2017 ரூ. 000 |
|---|---|---|---|---|
| நீ.நி.வ | 1.103 | 2028 | **181,318,765** | 116,996,460 |
| **வட்டி உழைக்கும் மொத்தக் கடன்கள்** | | | **181,318,765** | 116,996,460 |

25.3 **சிறப்பு எடுப்பனவு உரிமை (சிஎஉ)** என்பது கைவசமுள்ள ஒதுக்கச் சொத்துக்களுக்கு குறைநிரப்பாக நீண்டகால உலகத் தேவைப்பாடுகளை நிறைவேற்றிக் கொள்ளும் பொருட்டு ப.நா. நிதியத்தால் நிறுவப்பட்டுள்ள ஒதுக்குச் சொத்தாகும். அங்கத்துவ நாடுகளுக்கு அவற்றின் ப.நா.நி. அனுமதிப் பங்கின் பிரகாரம் சிஎஉ ஒதுக்கப்படுகின்றது. ப.நா. நிதியத்தின் சிஎஉ திணைக்களத்தில் (ப.நா. நிதியத்தினுள் அமைந்துள்ள கணக்குப் பிரிவு) பங்குபற்றுகின்ற நாடுகளுக்கு மாத்திரம் சிஎஉ ஒதுக்கலாம். ப.நா. நிதியத்திற்கு உரித்தாயுள்ள தங்கம், வெளிநாட்டுச் செலாவணி மற்றும் ஒதுக்குகளின் நிலைமைகளுக்குக் குறைநிரப்பாக ப.நா. நிதியத்தால் சிஎஉ உருவாக்கப்பட்டது. வங்கியினால் இலங்கை அரசு சார்பாக கைச்சாத்திடப்பட்டுள்ள உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள ஒரு சில நிபந்தனைகளின் பிரகாரம் ப.நா. நிதியத்தால் அங்கத்தவர்களுக்கு அவர்களுடைய அனுமதிப் பங்குத் தொகைக்கேற்ப சிஎஉ ஒதுக்கப்படலாம். ப.நா. நிதியத்தால் சிஎஉ ஒதுக்கப்படுவதன் மூலம் ஒவ்வொரு அங்கத்தவருக்கும் கிரயச் செலவற்ற சொத்தொன்று உருவாவதுடன், அதற்காக வட்டி உழைக்கப்படுவதோ அல்லது செலுத்தப்படுவதோ கிடையாது. சிஎஉ ஐ இரத்துச் செய்வதற்குக் கூட உடன்படிக்கையின் நிபந்தனைகள் மூலம் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ள போதிலும் இற்றைவரை இவ்வேற்பாடுகள் செயற்படுத்தப்படவில்லை. சிஎஉ ஒதுக்குதல்கள் அதிகரிக்கப்படுவதன் மூலம் 12 ஆவது குறிப்பில் காட்டப்பட்டுள்ளவாறு சிஎஉ வைத்திருத்தல் அதிகரிக்கிறது. அதன் தேறிய ஒதுக்குதலுக்குச் சமமான தொகையையும் அது சிஎஉ திணைக்களத்தின் தொழிற்பாடுகளில் பங்குபற்றியதன் காரணமாக ப.நா. நிதியம் சிஎஉ திணைக்களத்தை முடிவுறுத்துகின்ற அல்லது ஒழிக்கின்ற போது செலுத்த வேண்டியதாயுள்ள ஏனைய ஏதேனும் தொகைகள் இருப்பின் அவற்றையும் ப.நா. நிதியத்திற்குச் செலுத்துவதற்கு அங்கத்தவர்கள் கடப்பாடுடையவர்களாயிருப்பர்.

25.4 **ப.நா. நிதியத்திற்குச் செலுத்தப்படத்தக்க ஏனைய தொகைகள்:** தொழிற்பாட்டு மற்றும் நிர்வாகக் கொடுக்கல்வாங்கல்கள் சார்பாக வங்கியானது ப.நா. நிதியத்திற்குச் செலுத்த வேண்டிய தொகைகள் இதன் மூலம் காட்டப்படுகிறது.

25.5 **அனுமதிப் பங்குப் பொறுப்புக்கள்:** 12.2ஆம் இலக்கக் குறிப்பில் விளக்கப்பட்டுள்ளவாறான ப.நா. நிதிய அனுமதிப் பங்கிற்காகச் செலுத்தப்பட்ட தொகை அனுமதிப் பங்குப் பொறுப்புக்கள் தலைப்பின் கீழ் காட்டப்பட்டுள்ளது.

**26. ஏனையவை**

| | 2018 ரூபா 000 | 2017 ரூபா 000 |
|---|---|---|
| எஸ்குரோ உடன்படிக்கையின் கீழ் மொரககந்த அபிவிருத்திச் செயற்றிட்டக் கடன்கள் (குறிப்பு 26.1) | **1,577,068** | 2,056,009 |
| திறைசேரி துணைச் செயலாளர் எஸ்குரோ உடன்படிக்கையின் கீழ் முன்னுரிமை வீதிச் செயற்றிட்டம் III (குறிப்பு 26.2) | **5,968,519** | 7,588,467 |
| திறைசேரி துணைச் செயலாளர் - எஸ்குரோ உடன்படிக்கையின் கீழ் முன்னுரிமை வீதிச் செயற்றிட்டம் III கட்டம் II (குறிப்பு 26.3) | **6,242,573** | 8,094,403 |
| திறைசேரி துணைச் செயலாளர் சிறப்பு டொலர் க/கு - சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சி மற்றும் பசுமை வலு உலகளாவிய கடன் திட்டம் (குறிப்பு 26.4) | **-** | 109,808 |
| திறைசேரி துணைச் செயலாளர் சிறப்பு டொலர் க/கு - அம்பத்தல் நீர்வழங்கல் மேம்பாட்டுத் திட்டம் (குறிப்பு 26.5) | **-** | 189,196 |
| திறைசேரி துணைச் செயலாளர் - பெரதேனியா பல்கலைக்கழகத்தின் நொராட் வசோ ஏசியா திட்டம் (குறிப்பு 26.6) | **-** | 10,664 |
| திறைசேரி துணைச் செயலாளர் டொலர் க/கு - ஹம்பாந்தோட்டை துறைமுகம் (குறிப்பு 26.7) | **91,374,150** | 44,648,475 |
| திறைசேரி துணைச் செயலாளர் - சிறப்பு டொலர் கணக்கு 2 (குறிப்பு 26.8) | **29,493,915** | |
| ஏனைய வெளிநாட்டுப் பொறுப்புக்கள் | **73,908** | 1,398,867 |
| | **134,730,933** | 64,095,889 |

**26.1 எஸ்குரோ உடன்படிக்கையின் கீழ் மொரககந்த அபிவிருத்திச் செயற்றிட்டக் கடன்கள்**

ஐ.அ.டொலர் 214.20 கொண்ட இவ்வுடன்படிக்கை சீன அபிவிருத்தி வங்கிக்கும் இலங்கை அரசாங்கத்திற்கும் இடையில் 2012 யூன் 28ஆம் நாளன்று கையெழுத்தானது. இக்கடன் உடன்படிக்கையின் நோக்கம், மொறககந்தையிலுள்ள நீர்மின் வலு நிலையத்தின் கட்டுமானத்திற்கு நிதியிடுவதற்கு வசதியளிப்பதேயாகும். இச்செயற்றிட்டம் நீர்ப்பாசன மற்றும் நீர் வளங்கள் முகாமைத்துவ அமைச்சினால் நடைமுறைப்படுத்தப்பட்டது. இலங்கை மத்திய வங்கி இவ்வுடன்படிக்கையின் வங்கியாளராக வெளிநாட்டு மூலவளங்கள் திணைக்களத்தின் அறிவுறுத்தல்களின்படி கடன்களைப் பெற்றுக்கொள்ளல் மற்றும் பகிர்ந்தளித்தல் நோக்கத்திற்காக வங்கியின் பொதுப் பேரேட்டில் கணக்கொன்றினைத் திறந்ததுடன், 2018ஆம் ஆண்டு காலப்பகுதியில் ஐ.அ.டொலர் 4.82 மில்லியன் பகிர்ந்தளிக்கப்பட்டதுடன், 2018 திசெம்பர் 31இல் ஐ.அ.டொலர் 8.63 மில்லியன் நிலுவையாகக் காணப்பட்டது.

**26.2 எஸ்குரோ உடன்படிக்கையின் கீழ் முன்னுரிமை வீதிச் செயற்றிட்டம் III**

இவ்வசதி உடன்படிக்கையானது சீன அபிவிருத்தி வங்கிக்கும் இலங்கை அரசாங்கத்திற்குமிடையில் 2014 மாச்சு 11ஆம் நாளன்று ஐ.அ.டொலர் 300 மில்லியனுக்காக கையெழுத்தானது. இக்கடனின் நோக்கம் யாதெனில் முன்னுரிமை வீதிச் செயற்றிட்டம் III - கட்டம் I இன் மேம்பாட்டிற்கும் புனரமைப்பு வேலைகளுக்கும் ஏற்படும் செலவிற்கு நிதியிடுவதேயாகும். வசதி உடன்படிக்கையின்படி, வங்கியானது இலங்கை அரசாங்கத்திற்கான வங்கியாளராக நியமிக்கப்பட்டிருக்கிறது. இதன்படி, கடன் தொகையினை வைப்புச் செய்வதற்கும் அவ்வாறு பெறப்பட்ட பணத்தினை வீதி அபிவிருத்திக்கு பகிர்ந்தளிப்பதற்குமான ஒரே நோக்கத்திற்காக அதன் பேரேட்டில் கணக்கொன்று திறக்கப்பட்டது. 2018ஆம் ஆண்டு காலப்பகுதியில் ஐ.அ.டொலர் 16.99 மில்லியன் பகிர்ந்தளிக்கப்பட்டதுடன், 2018 திசெம்பர் 31இல் ஐ.அ.டொலர் 32.66 மில்லியன் நிலுவையாகக் காணப்பட்டது.

**26.3 எஸ்குரோ உடன்படிக்கையின் கீழ் முன்னுரிமை வீதிச் செயற்றிட்டம் III கட்டம் II**

இவ்வுடன்படிக்கையின் கட்டம் II இன் கீழ் 2014 நவெம்பர் 24ஆம் நாளன்று ஐ.அ.டொலர் 100 மில்லியன் பெறப்பட்டது. 2018ஆம் ஆண்டு காலப்பகுதியில், ஐ.அ.டொலர் 18.80 மில்லியன் பகிர்ந்தளிக்கப்பட்டதுடன், 2018 திசெம்பர் 31இல் உள்ளவாறு எஞ்சிய மீதி ஐ.அ.டொலர் 34.16 மில்லியனாகக் காணப்பட்டது.

**26.4 சிறிய நடுத்தர தொழில்முயற்சிகளும் பசுமை வலு உலகளாவிய கடன் திட்டமும்**

இது இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் ஐரோப்பிய முதலீட்டு வங்கிக்குமிடையில் 2013 நவெம்பர் 13ஆம் நாள் இடம்பெற்ற நிதியியல் ஒப்பந்தமாகும். இவ்வசதி உடன்படிக்கையின்படி இலங்கை அரசாங்கத்தின் வங்கியாளராக வங்கி நியமிக்கப்பட்டிருக்கிறது. இதன்படி, கடன் தொகையினை வைப்புச் செய்வதற்கும் அவ்வாறு பெறப்பட்ட பணத்தினை செயற்றிட்டத்திற்குப் பகிர்ந்தளிப்பதற்குமான ஒரே நோக்கத்திற்காக அதன் பேரேட்டில் கணக்கொன்று திறக்கப்பட்டது.

மேற்குறிப்பிட்ட சிறிய நடுத்தர தொழில் முயற்சிகளும் பசுமைவலு உலகளாவிய கடன்திட்டத்தினதும் இரண்டாவது தொகுதி யூரோ நாணயத்தில் 2015 யூலை 09 ஆம் நாளன்று பெறப்பட்டது. இதன்படி, அக்கடனை வைப்புச் செய்வதற்கும், அத்தகைய பெறப்பட்ட பணத்தினை செயற்றிட்டத்திற்கு பகிர்ந்தளிப்பதற்கும் இலங்கை மத்திய வங்கியின் பொதுப்பேரேட்டில் கணக்கொன்று திறக்கப்பட்டிருக்கிறது.

2018ஆம் ஆண்டு காலப்பகுதியில், ஐ.அ.டொலர் 0.71 மில்லியன் பகிர்ந்தளிக்கப்பட்டதுடன், 2018 திசெம்பர் 31இல் வெளிநின்ற நிலுவை எதுவும் இருக்கவில்லை.

**26.5 சிறப்பு டொலர் கணக்கு - அம்பத்தல நீர்வழங்கல் மேம்பாட்டுச் செயற்றிட்டம்**

இக்கொடுகடன் வசதி உடன்படிக்கையானது ஏஜென்ஸ் பிரான்கைஸ் டி டெவலப்பெமன்றிற்கும், இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்குமிடையில் 2014 செத்தெம்பர் 29 அன்று கையொழுத்தானது. இக்கடனைப்பெற்று பகிர்ந்தளிக்கும் நோக்கத்திற்காக திறைசேரி தொழிற்பாடுகள் திணைக்களத்தின் அறிவுறுத்தலுக்கிணங்க இவ்வுடன்படிக்கையில் வங்கியாளர் என்ற முறையில் வங்கி அதன் பேரேட்டில் கணக்கொன்றினைத் திறந்துள்ளது. 2015 செத்தெம்பர் 14ஆம் நாளன்று மேற்குறிப்பிட்ட கணக்கிற்கு ஐ.அ.டொலர் 5 மில்லியன் பெறப்பட்டது.

2018 காலப்பகுதியில், ஐ.அ.டொலர் 1.24 மில்லியன் பகிர்ந்தளிக்கப்பட்டதுடன், 2018 திசெம்பர் 31இல் வெளிநின்ற நிலுவை எதுவும் இருக்கவில்லை.

**26.6 பேராதனை பல்கலைக்கழகத்தின் நொராட் வசோ ஏசியா செயற்றிட்டம்**

இயலளவைக் கட்டியெழுப்பும் திட்டத்திற்காக நொராட்டிடமிருந்து நிதியுதவியைப் பெற்றுக் கொள்ள பேராதனைப் பல்கலைக்கழகத்தின் சார்பில் 2016 இலிருந்து இலங்கை மத்திய வங்கி பேராதனை பல்கலைக்கழகத்தின் நொராட் வசோ ஏசியா செயற்றிட்டத்தின் ஐ.அ.டொலர் கணக்கைப் பேணுகின்றன. பேராதனை பல்கலைக்கழகம் திறைசேரி தொழிற்பாடுகள் திணைக்களத்தினூடாக மீளெடுப்பனவு விண்ணப்பத்தைச் சமர்ப்பிப்பதன் மூலம் ஐ.அ.டொலரில் அல்லது இலங்கை ரூபாவில் நிதியத்தை மீளெடுக்கிறது 2018ஆம் ஆண்டு காலப்பகுதியில், ஐ.அ.டொலர் 0.16 மில்லியன் பெற்றுக்கொள்ளப்பட்டதுடன், ஐ.அ.டொலர் 0.23 மில்லியன் திறைசேரி துணைச் செயலாளருக்கு மாற்றப்பட்டது. 2018 திசெம்பர் 31இல் வெளிநின்ற நிலுவை எதுவும் இருக்கவில்லை.

**26.7 திறைசேரி துணைச் செயலாளர் டொலர் கணக்கு- ஹம்பாந்தோட்டை துறைமுகம்**

இது, இலங்கை துறைமுக அதிகார சபைக்கும் சைனா மேர்சன்ற் போர்ட் ஹோல்டிங் கம்பனி லிமிடெட்டிற்குமிடையில் கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கையின் தொடர்ச்சியாக, ஹம்பாந்தோட்டை துறைமுகச் செயற்பாடுகளை கையளிக்கும் முகமாக சைனா மேர்சன்ற் போர்ட் ஹோல்டிங் கம்பனி லிமிடெட்டிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட தொகையை வைப்பிடுவதற்காக, திறைசேரி தொழிற்பாடுகள் திணைக்களத்தின் சார்பாக பேணப்படுகின்ற சிறப்பு டொலர் கணக்காகும். முதற் பெறுகையாக ஐ.அ.டொலர் 292.1 மில்லியன் 2017 திசெம்பர் 22இல் பெறப்பட்டது. ஐ.அ.டொலர் 97.37 மில்லியன் மற்றும் ஐ.அ.டொலர் 584.19 மில்லியன் பெறுமதியான இரண்டாம் மற்றும் மூன்றாம் கட்டப்பெறுகைகள் முறையே 2018 சனவரி 24 மற்றும் 2018 யூன் 25இல் கிடைத்தன. 2018 திசெம்பர் 31இல் உள்ளவாறான நிலுவை ஐ.அ.டொலர் 500.00 மில்லியன் ஆகும்.

**26.8 திறைசேரி துணைச் செயலாளர் சிறப்பு டொலர் கணக்கு 2**

இது திறைசேரியின் சார்பில் ஐ.அ.டொலரில் பெறப்படும் தொகையை வரவு வைக்கும் பொருட்டு திறைசேரி தொழிற்பாடுகள் திணைக்களத்தின் சார்பில் பேணப்படும் டொலர் கணக்காகும். 2018ஆம் ஆண்டில் இலங்கை அபிவிருத்தி முறிகள், வெளிநாட்டு நாணய வங்கித்தொழில் கடன்கள் மற்றும் நீண்டகால நிதியிடல் வசதியின் பெறுகைகள் வரவுவைக்கப்பட்டதுடன் அரசாங்கத்தின் சார்பில் கடன்களின் மீள்கொடுப்பனவிற்காக பயன்படுத்தப்பட்டது. 2018 திசெம்பர் 31இல் உள்ளவாறான வெளிநின்ற தொகை ஐ.அ.டொலர் 161.39 மில்லியனாகும்.

**27. வங்கிகள் மற்றும் நிதியியல் நிறுவனங்களின் வைப்புக்கள்**

இவை நாணய விதிச் சட்டத்தின் 93ஆம் பிரிவின் கீழ் நியதி ஒதுக்குத் தேவைப்பாட்டினை பூர்த்தி செய்யும் நோக்கத்திற்காக

உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளினால் பேணப்படும் வைப்புக்களாக இருப்பதுடன் உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள், அரச பிணையங்களிலுள்ள முதனிலை வணிகர்கள், ஊழியர் சேம நிதியம் மற்றும் அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமைகளின் பங்கேற்பாளர்கள் ஆகியோரினால் நாணய விதிச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் வங்கிகளினால் தொழிற்படுத்தப்படும் அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமையின் கீழான கொடுப்பனவுகளை கௌரவிப்பதற்காக பேணப்படும் வைப்புக்களாகவும் காணப்படுகின்றன. இத்திட்டத்தின் கீழ், அரசாங்கத்தினால் முழுமையாக பிணையிடப்பட்ட வட்டியற்ற ஒரு நாளுக்குள்ளேயான திரவ வசதி, தீர்ப்பனவு முறைமையின் சுமூகமான தொழிற்பாட்டிற்கு வசதியளிப்பதற்காக ஒரு நாளுக்குள்ளேயான கொடுப்பனவுக் கடப்பாடுகளை பூர்த்தி செய்வதற்காக பங்கேற்பாளர்களுக்குக் கிடைக்கச் செய்யப்படுகிறது. இவ்வைப்புக்கள் தொடர்பான தரப்பினராலும் (அதாவது அரசிற்குச் சொந்தமான வங்கிகள் மற்றும் நிறுவனங்கள்) மற்றவர்களினாலும் வைப்புக்கள் போன்ற கணக்கீட்டு வெளிப்படுத்துகைத் தேவைப்பாட்டு நோக்கங்களுக்காக வகைப்படுத்தப்பட்டு தொடர்பான நியதி ஒதுக்கு வீதங்களில் பேணப்பட்டு வருகின்றதேயன்றி அவ்வரச நிறுவனங்களுடனான வங்கியின் குறித்துரைக்கப்பட்ட வியாபாரத் தொடர்புகளுக்காகவல்ல.

| | 2018 ரூபா 000 | 2017 ரூபா 000 |
|---|---|---|
| வங்கிகளினால் செய்யப்பட்ட வைப்புக்கள் | | |
| - தொடர்பான தரப்பினர்கள் | **192,367,084** | 215,901,806 |
| - ஏனையவை | **127,555,665** | 125,805,585 |
| | **319,922,749** | 341,707,391 |
| நிதியியல் நிறுவனங்களால் செய்யப்பட்ட வைப்புக்கள் | | |
| - தொடர்பான தரப்பினர்கள் | **177** | 94 |
| - ஏனையவை | **183,257** | 4,713 |
| | **183,434** | 4,807 |
| வங்கிகளினாலும் ஏனைய நிதியியல் நிறுவனங்களினாலும் செய்யப்பட்ட மொத்த வைப்புகள் | **320,106,183** | 341,712,198 |

## 28. அரச மற்றும் அரச நிறுவனங்களின் வைப்புக்கள்

| | 2018 ரூபா 000 | 2017 ரூபா 000 |
|---|---|---|
| அரச வைப்புக்கள் | **167,537** | 167,492 |
| அரச முகவராண்மைகளும் நிதியங்களும் | **181,181** | 157,025 |
| | **348,718** | 324,517 |

வங்கி, அரச மற்றும் / அல்லது அரச முகவர்களின் அல்லது நிறுவனங்களின் வைப்புக்களுக்கான அலுவல்சார் வைப்பாளராக இருப்பதனால் நாணய விதிச் சட்டத்தின் 106 (1)ஆம் பிரிவின் நியதிகளில் இவ்வைப்புக்கள் பேணப்படுகின்றன.

## 29. மீள்கொள்வனவு உடன்படிக்கையின் கீழ் விற்பனை செய்யப்பட்ட பிணையங்கள்

| | 2018 ரூபா 000 | 2017 ரூபா 000 |
|---|---|---|
| மீள் கொள்வனவு உடன்படிக்கையின் கீழ் விற்பனை செய்யப்பட்ட பிணையங்கள் | **-** | 6,503,884 |
| துணைநில் வைப்பு வசதிகள் | **28,311,221** | 34,151,394 |
| | **28,311,221** | 40,655,278 |

நாணயக் கொள்கையை நடைமுறைப்படுத்தலின் ஒரு பகுதியாக, நாணய விதிச் சட்டத்தின் பிரிவுகள் 90 மற்றும் 91 இன் கீழ் மீள்கொள்வனவு உடன்படிக்கைகளானவை, பணச்சந்தையின் திரவத்தன்மையை ஒழுங்குபடுத்தும் பொருட்டு திறந்த சந்தை நடவடிக்கைகளுக்காக மேற்கொள்ளப்படுகின்றன. இம்மீள்கொள்வனவு உடன்படிக்கைகளானவை காலத்திற்குக் காலம் வங்கியால் தீர்மானிக்கப்படுகின்ற திரவத்தன்மை முகாமைத்துவக் கொள்கைக்கு அமைவாக ஓரிரவு அல்லது தவணை முறையில் அரச பிணையங்களில் ஈடுபடுத்தப்படுகின்றன.

## 30. ஊழியர் நன்மைத் திட்டங்களிலுள்ள நிலுவைகள்

வங்கியானது பொதுவான அலுவல்களின் ஒரு பகுதியாக அதன் ஊழியர் நன்மைத் திட்டங்களிற்கு நடைமுறைக் கணக்கு வசதிகளினை வழங்குகின்றது. தனியாக நிருவகிக்கப்படுகின்ற வங்கியின் ஊழியர் நன்மைத் திட்டங்களின் நடைமுறைக் கணக்கு மற்றும் உள்ளக நிருவகக் கணக்குகளில் செலவு வைக்கப்பட்டுள்ள தொகைகள் பின்வருமாறு:

| | 2018 ரூபா 000 | 2017 ரூபா 000 |
|---|---|---|
| இ.ம.வ சேம நிதியம், ஓய்வூதியத் திட்டங்கள் மற்றும் விதவைகள்/ விதுரர்கள் மற்றும் அநாதைகள் ஓய்வூதியத் திட்டம் என்பவற்றின் மீதிகள் | **18,333** | 4,547 |
| | **18,333** | 4,547 |

## 31. சுற்றோட்டத்திலுள்ள நாணயம்

இலங்கையின் நாணயத்தை வெளியிடும் தனி அதிகாரம் வாய்ந்த நிறுவனமென்ற ரீதியில் மத்திய வங்கியானது தொடர்ச்சியாக சட்டத்தின் பிரகாரம் செல்லுபடியாகும் நாணயத்தை வெளியிடுகின்றது. குறிப்பிட்ட வங்கியினால் வெளியிடப்பட்டு அறிக்கையிடல் திகதிகளில் சுற்றோட்டத்தில் உள்ளவாறான நாணயத் தரவுகள் பின்வருமாறு:

| பெறுமதி | 2018 ரூபா 000 | 2017 ரூபா 000 |
|---|---|---|
| குத்திகள்: | | |
| சதம் 1 | **3,631** | 3,631 |
| சதம் 2 | **5,707** | 5,707 |
| சதம் 5 | **23,260** | 23,258 |
| சதம் 10 | **39,232** | 39,229 |
| சதம் 25 | **121,046** | 121,039 |
| சதம் 50 | **185,247** | 185,590 |
| ரூபா 1 | **929,905** | 898,148 |
| ரூபா 2 | **1,414,466** | 1,357,849 |
| ரூபா 5 | **4,408,327** | 4,102,486 |
| ரூபா 10 | **6,101,195** | 5,402,312 |
| ஞாபகார்த்த நாணயக் குத்திகள் | **590,240** | 587,075 |
| | **13,822,256** | 12,726,324 |
| தாள்கள்: | | |
| ரூபா 1 | **4,981** | 4,981 |
| ரூபா 2 | **26,694** | 26,696 |
| ரூபா 5 | **37,192** | 37,193 |
| ரூபா 10 | **1,271,474** | 1,340,240 |
| ரூபா 20 | **5,607,149** | 5,758,265 |
| ரூபா 50 | **5,456,882** | 5,561,352 |
| ரூபா 100 | **22,612,502** | 21,599,562 |
| ரூபா 200 | **128,307** | 130,040 |
| ரூபா 500 | **40,093,478** | 38,153,548 |
| ரூபா 1000 | **136,787,726** | 141,832,264 |
| ரூபா 2000 | **5,331,902** | 10,526,029 |
| ரூபா 5000 | **409,761,967** | 360,357,407 |
| | **627,120,254** | 585,327,577 |
| சுற்றோட்டத்திலுள்ள மொத்த நாணயங்கள் | **640,942,510** | 598,053,901 |

### 32. ஏனைய கொடுபடத்தக்கவை

| | 2018<br>ரூபா 000 | 2017<br>ரூபா 000 |
|---|---|---|
| உள்நாட்டு செலுத்த வேண்டிய வட்டி | - | 1,676 |
| ஏற்பாடுகளும் கட்டணங்களும் | **1,706,541** | 396,531 |
| பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்தின் வைப்புக்கள் | **2,082,061** | 2,306,897 |
| பெறப்பட்ட கைவிடப்பட்ட சொத்துக்களுக்கெதிரான பொறுப்பு (குறிப்பு 32.1) | **6,188,502** | 5,083,171 |
| ஏனைய கொடுபடத்தக்கவை | **2,629,327** | 1,098,881 |
| | **12,606,431** | 8,887,156 |

32.1 கைவிடப்பட்ட சொத்துக்கள் தொடர்பான கொடுபடத்தக்கவை 2009ஆம் ஆண்டின் 05ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளின் கைவிடப்பட்ட சொத்துக்களை அடையாளம் காணல், அறிக்கையிடல், மாற்றல் செய்தல் மற்றும் பேணுதல் தொடர்பான வழிகாட்டலின் கீழ் உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளிடமிருந்து சேகரிக்கப்பட்ட கைவிடப்பட்ட சொத்துக்கள் தொடர்பானவையாக இருந்தன. கைவிடப்பட்ட சொத்துக்கள் மீது ஏதேனும் மேலதிகக் கோரல்கள் காணப்படும் சந்தர்ப்பத்தில் வங்கிகள் அவ்வாறு சேகரிக்கப்பட்ட வைப்புக்களை வட்டியுடன் செலுத்துவதற்குப் பொறுப்புடையனவாகும். எனவே, சேகரிக்கப்பட்ட மொத்த வைப்புக்கள் நிறையேற்றப்பட்ட சராசரி திறைசேரி உண்டியல் வீதங்களில் கணிக்கப்பட்ட வட்டி வீதங்களுடன் சேர்த்து வங்கிகளின் பொறுப்பாகப் பதிவு செய்யப்பட்டுள்ளன.

### 33. பிற்போடப்பட்ட கொடைகள்

| | 2018<br>ரூபா 000 | 2017<br>ரூபா 000 |
|---|---|---|
| சனவரி 1 இல் உள்ளவாறு | **45** | 80 |
| இவ்வாண்டின் பெறுமதியிழப்பு | **(34)** | (35) |
| திசெம்பர் 31இல் உள்ளவாறு | **11** | 45 |

பிற்போடப்பட்ட வருமானம் அத்தகைய சொத்துக்களின் தேய்மானத்துடன் பொருந்தத்தக்க விதத்தில் இக் காலப்பகுதியில் பெறுமதியிழப்பு செய்யப்பட்டன. இது, எந்தவித கரிசனைகளுமில்லாது வங்கியால் பெற்றுக்கொள்ளப்பட்ட சொத்துக்களை உள்ளடக்குகின்றது. சொத்துக்களின் சந்தைப் பெறுமதி பிற்போடப்பட்ட கொடைக் கணக்கொன்றில் செலவு வைக்கப்படுவதுடன், தொடர்பான சொத்துக்களின் தேய்மானக் கொள்கைகளின்படி அச்சொத்துக்களின் பயன்தரு ஆயுட்காலம் முழுவதும் ஏனைய வருமானமாகக் கொள்ளப்படுகிறது.

### 34. ஓய்வூதியமும் தொழில்நிலைக்குப் பின்னரான ஏனைய நன்மைகள் திட்டங்களும்

அனைத்து தகுதியான ஊழியர்களும் உள்ளடங்கக் கூடியவாறான குறித்துரைக்கப்பட்ட ஏழு நலவுரிமைத் திட்டங்கள் வங்கியினால் தொழிற்படுத்தப்படுகின்றன. ஊழியர் ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் 1998 சனவரி 01ஆந் திகதிக்கு முன்னர் வங்கியில் சேர்ந்த ஊழியர்கள், 10 வருட பணிக் காலத்தைப் பூர்த்தி செய்ததன் பின்னர் இதற்குத் தகுதி பெறுகின்றனர். புதிய ஊழியர் ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் 1998 சனவரி 01ஆந் திகதிக்கு பின்னர் வங்கியில் சேர்ந்த ஊழியர்கள், 10 வருட பணிக்காலத்தைப் பூர்த்தி செய்ததன் பின்னர் இதற்குத் தகுதி பெறுகின்றனர். ஊழியர் ஓய்வூதியத் திட்டங்களானது பங்களிப்பில்லாத ஓய்வூதியத் திட்டமாக இருப்பதுடன் இதன் நன்மைக் கிரயச் செலவுகளை முழுமையாகவே வங்கி ஏற்கின்றது. ஆண் ஊழியர்களுக்கான விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டமும் பெண் ஊழியர்களுக்கான விதுரர்கள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டமும் 1998 சனவரி 01ஆம் திகதிக்கு முன்னர் வங்கியில் பணிக்குச் சேர்ந்த ஊழியர்களுக்குக் கிடைக்கத்தக்கதாகவுள்ளது. இத் திட்டத்திற்குத் தகுதி பெற்ற 1994 ஓகத்து 01இற்கு முன்னர் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட ஊழியர்கள் மாதாந்த அடிப்படைச் சம்பளத்தில் 5 சதவீதத் தொகையொன்றைப் பங்களிப்புச் செய்வதுடன் 1994 ஓகத்து 01 அன்றோ அல்லது அதற்குப் பின்னரோ ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டவர்கள் மாதாந்த அடிப்படைச் சம்பளத்தில் 10 சதவீதத்தினையும் புதிய ஆண் ஊழியர்களுக்கான விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டம், பெண் ஊழியர்களுக்கான விதுரர்கள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் தகுதிபெற்ற ஊழியர்கள் தங்களின் மாதாந்த அடிப்படை சம்பளத்தில் 5.5 சதவீதத்தினையும் பங்களிப்புச் செய்வர்.

வங்கியில் ஐந்து ஆண்டு கால பணியைப் பூர்த்தி செய்தவர்களான, ஊழியர் ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் மாதாந்த ஓய்வூதியக் கொடுப்பனவைப் பெறத் தகுதி பெறாத ஊழியர்களுக்காக பணிக்கொடை நன்மைகள் வங்கியினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. இப்பொறுப்புபைப் பூர்த்தி செய்வதற்காக காப்புறுதி மதிப்பீட்டைப் பயன்படுத்தி கணிப்பீடு செய்யப்பட்ட, அதற்குச் சமமானதொரு தொகை நிதி நிலைமைகள் பற்றிய கூற்றில் முன்கொண்டு செல்லப்படுகின்றது.

தொழில்நிலைக்குப் பிந்திய மருத்துவ நலத் திட்டத்தின் கீழ், ஓய்வு பெற்ற ஊழியர்களால் அவர்கள் பெயரில் அல்லது அவர்களது துணைவர் பெயரில் மற்றும் ஊழியர்களது விதவைகள்/விதுரர்களாலும் ஏற்கப்படுகின்ற ஒரு சில மருத்துவச் செலவுகள் மீளளிக்கப்படுகின்றன.

ஊழியர் ஓய்வூதியத் திட்டம், விதவைகள் அநாதைகள் ஓய்வூதியத் திட்டங்கள், விதுரர்கள் அநாதைகள் ஓய்வூதியத் திட்டம், பணிக் கொடைகள் திட்டம் மற்றும் மருத்துவ நலத் திட்டம் என்பனவற்றின் குறித்துரைக்கப்பட்ட நன்மைகளைப் பகிர்ந்தளித்தல் மற்றும் அவற்றுடன் தொடர்புடைய நடைமுறைப் பணிச் செலவுகள் தொடர்பான காப்புறுதி மதிப்பீட்டைச் செய்வதற்காக சுயாதீனமான காப்புறுதி மதிப்பீட்டாளரான கே.ஏ.பண்டிற், ஆலோசகர் மற்றும் காப்புறுதி மதிப்பீட்டாளர் (மும்பாய்) ஆண்டுக் காலத்தில் பணியின் பொருட்டு வங்கியினால் அமர்த்தப்பட்டார்.

ஊழியர் ஓய்வூதியத் திட்டங்கள் விதவைகள் அநாதைகள் ஓய்வூதியத்திட்டம் மற்றும் விதுரர்கள் அநாதைகள் ஓய்வூதியத்திட்டம் என்பனவற்றின் நிதியங்கள் தனித்தனியாக முகாமைப்படுத்தப்படுவதுடன் தனித்தனியாக ஏடுகளும் பேணப்படுகின்றன. எனினும், பணிக்கொடைத் திட்டமும் மருத்துவ நன்மைகள் திட்டமும் வங்கியின் கணக்கேடுகளிலிருந்து வேறாக்கப்படவில்லை. மேலும் முதலீடுகளும் முதலீட்டு வருமானமும் வங்கி ஏடுகளில் இந்நிதியத்திற்காக தனித்தனியாக பதிவு செய்யப்படுகின்றதுடன், முதலீடுகளிலிருந்து உழைக்கப்பட்ட வருமானம் இந்நிதியத்திற்கு மாற்றல் செய்யப்படுவதுடன் பங்கிடப்படாமல் மீளமுதலிடப்படுகின்றன.

அறிக்கையிடும் காலப்பகுதியின் திட்டச் சொத்துக்களின் மொத்தச் சீர்மதிப்புப் பெறுமதி ரூ.38,884.03 மில்லியனாக (2017 - ரூ.40,816.60 மில்லியன்) காணப்பட்ட போதும் தற்போதைய பெறுமதியில் அனைத்து நன்மைக் கடப்பாடுகளினதும் மொத்தம் ரூ.48,245.66 மில்லியனாக (2017 - ரூ.38,392.29 மில்லியன்) சீர்மதிப்பு பெறுமதியை விட அதிகரித்து காணப்பட்டதன் காரணமாக பற்றாக்குறையாக ரூ.9,361.63 மில்லியனாக (2017இல் - மிகை ரூ.2,424.31 மில்லியன்) காணப்பட்டது.

2018 திசெம்பர் 31இல் உள்ளவாறு

| நன்மைப் பொறுப்புக்கள் / (சொத்துக்கள்) | ஊழியர் ஓய்வூதியத் திட்டம் ரூ.000 | ஊழியர் ஓய்வூதியத் திட்டம் - புதிய ரூ.000 | விதவைகள் அநாதைகள் ஓய்வூ தியத் திட்டம் ரூ.000 | விதுரர்கள் அநாதைகள் ஓய்வூதியத் திட்டம் ரூ.000 | விதவைகள், அநாதைகள் மற்றும் விதுரர்கள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டம் - புதிய ரூ.000 | பணிக் கொடைத் திட்டம் ரூ.000 | மருத்துவ நலன்கள் திட்டம் ரூ.000 | மொத்தம் ரூ.000 |
|---|---|---|---|---|---|---|---|---|
| நன்மைக் கடப்பாட்டின் நடைமுறைப் பெறுமதி | **35,971,523** | **1,055,695** | **6,241,591** | **1,199,154** | **718,088** | **290,932** | **2,768,680** | **48,245,663** |
| திட்டச் சொத்துக்களின்/ முதலீடுகளின் சீர்மதிப்புப் பெறுமதி | **(26,120,425)** | **(3,519,332)** | **(5,337,743)** | **(2,177,286)** | **(52,204)** | **(243,167)** | **(1,433,872)** | **(38,884,029)** |
| நன்மைப் பொறுப்பு/ (சொத்து) நடைமுறையல்லாதவை | **9,851,098** | **(2,463,637)** | **903,848** | **(978,132)** | **665,884** | **47,765** | **1,334,808** | **9,361,634** |

நிதியியல் நிலைமைக் கூற்றில் காட்டப்பட்டுள்ள ஓய்வூதியமும் தொழில்நிலைக்குப் பின்னரான ஏனைய நன்மைகள் திட்டங்களின் மீதியானது, பின்வரும் காரணங்களின் காரணமாக மதிப்பீட்டாளரின்படி தேறிய பொறுப்புக்களிலிருந்து வேறுபடுகின்றது.

அ) விதவைகள் மற்றும் அநாதைகள் ஓய்வூதிய நிதியம் மற்றும் விதுரர்கள் மற்றும் அநாதைகள் ஓய்வூதிய நிதியத்தின் எஞ்சிய மீதியை வங்கிக்குப் பகிர்ந்தளிப்பதற்கான சாத்தியம் குறைவாக இருப்பதன் காரணமாக இந்நிதியத்தின் தேறிய சொத்து நிலைமை கணக்குகளில் பிரதிபலிக்கப்படவில்லை.

ஆ) வங்கியானது வெவ்வேறான நிதியம் (உள்ளக ரீதியாக நிர்வகிக்கப்பட்ட) தொடர்பான சொத்துக்களை வைத்திருக்காததன் காரணமாக பணிக்கொடை மற்றும் மருத்துவ நன்மைத் திட்டம் இரண்டிற்குமாக ஏட்டுப் பெறுமதி மொத்தப் பெறுமதியினைக் காட்டுமேயன்றி, மதிப்பீட்டாளரினால் மதிப்பிடப்பட்ட தேறிய பொறுப்புக்களைக் காட்டாது.

| | 2018 ரூபா 000 | 2017 ரூபா 000 |
|---|---|---|
| ஊழியர் ஓய்வூதியத் திட்டம் | **9,851,097** | 892,685 |
| ஊழியர் ஓய்வூதியத் திட்டம் - புதிய | **(2,463,637)** | (2,533,060) |
| விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டம் | **903,848** | - |
| விதுரர்கள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டம் | **-** | - |
| விதவைகள், அநாதைகள் மற்றும் விதுரர்கள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டம் - புதிய | **665,884** | - |
| பணிக்கொடை திட்டம் | **290,932** | 153,167 |
| மருத்துவ நலன்கள் திட்டம் | **2,768,680** | 2,158,269 |
| | **12,016,804** | 671,061 |

| நன்மைப் பொறுப்புக்கள் / (சொத்து) களிலான அசைவு | ஊழியர் ஓய்வூதியத் திட்டம் ரூ.000 | ஊழியர் ஓய்வூதியத் திட்டம் - புதிய ரூ.000 | விதவைகள் அநாதைகள் ஓய்வூதியத் திட்டம் ரூ.000 | விதுரர்கள் அநாதைகள் ஓய்வூதியத் திட்டம் ரூ.000 | விதவைகள், அநாதைகள் மற்றும் விதுரர்கள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டம் - புதிய ரூ.000 | பணிக் கொடைத் திட்டம் ரூ.000 | மருத்துவ நலன்கள் திட்டம் ரூ.000 | மொத்தம் ரூ.000 |
|---|---|---|---|---|---|---|---|---|
| 2018 சனவரி 01இல் உள்ளவாறு | 892,685 | (2,533,060) | (424,605) | (1,279,273) | - | (22,218) | 942,158 | (2,424,313) |
| நன்மைகளுக்கான செலவு | 283,821 | (294,427) | (88,343) | (176,350) | 665,884 | 14,991 | 145,554 | 551,130 |
| ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தில் அங்கீகரிக்கப்பட்ட தொகை | 9,059,635 | 567,448 | 1,416,796 | 477,491 | - | 54,992 | 247,096 | 11,823,458 |
| செலுத்தப்பட்ட பங்களிப்பு | (385,044) | (203,598) | - | - | - | - | - | (588,642) |
| **2018 திசெம்பர் 31இல் உள்ளவாறான** | **9,851,097** | **(2,463,637)** | **903,848** | **(978,132)** | **665,884** | **47,765** | **1,334,808** | **9,361,633** |

| திட்டமிடப்பட்ட நன்மைக் கடப்பாடுகளின் நடைமுறைப்பெறுமதியிலான அசைவு | ஊழியர் ஓய்வூதியத் திட்டம் | ஊழியர் ஓய்வூதியத் திட்டம் - புதிய | விதவைகள் அநாதைகள் ஓய்வூதியத் திட்டம் | விதுரர்கள் அநாதைகள் ஓய்வூதியத் திட்டம் | விதவைகள், அநாதைகள் மற்றும் விதுரர்கள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டம் - புதிய | பணிக் கொடைத் திட்டம் | மருத்துவ நலன்கள் திட்டம் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 |
| 2018 சனவரி 01இல் உள்ளவாறு | 29,232,145 | 718,032 | 5,218,411 | 912,262 | 912,262 | 153,167 | 2,158,269 | 39,304,548 |
| வட்டிச் செலவு | 3,800,179 | 93,344 | 678,393 | 118,594 | 118,594 | 19,912 | 280,575 | 5,109,591 |
| நடைமுறைப் பணிகளுக்கான செலவு | 167,772 | 34,871 | - | - | - | 17,879 | 30,481 | 251,003 |
| முன்னைய பணிகளுக்கான செலவு | - | - | - | - | - | - | - | - |
| நிதியத்திலிருந்து செலுத்தப்பட்ட நன்மைகள் | (2,365,843) | (966) | (479,098) | (30,040) | (30,040) | (5,570) | (218,416) | (3,129,973) |
| கடப்பாடுகள் மீதான ஆயுட்கால நட்டங்கள் | 5,137,270 | 210,414 | 823,885 | 198,338 | 198,338 | 105,544 | 517,771 | 6,993,222 |
| **2018 திசெம்பர் 31இல் உள்ளவாறான** | **35,971,523** | **1,055,695** | **6,241,591** | **1,199,154** | **1,199,154** | **290,932** | **2,768,680** | **48,528,391** |

| திட்டச் சொத்துக்களின்/ முதலீடுகளின் சீர்மதிப்பு பெறுமதியிலான மாற்றங்கள் | ஊழியர் ஓய்வூதியத் திட்டம் | ஊழியர் ஓய்வூதியத் திட்டம் - புதிய | விதவைகள் அநாதைகள் ஓய்வூதியத் திட்டம் | விதுரர்கள் அநாதைகள் ஓய்வூதியத் திட்டம் | விதவைகள், அநாதைகள் மற்றும் விதுரர்கள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டம் - புதிய | பணிக் கொடைத் திட்டம் | மருத்துவ நலன்கள் திட்டம் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 |
| 2018 சனவரி 01இல் உள்ளவாறு | 28,339,459 | 3,251,092 | 5,643,016 | 2,191,535 | - | 175,385 | 1,216,111 | 40,816,598 |
| வட்டி வருமானம் | 3,684,130 | 422,642 | 733,592 | 284,900 | 14,346 | 22,800 | 158,094 | 5,320,504 |
| தொழில்தருனரினால் செய்யப்பட்ட பங்களிப்புகள் | 385,044 | 203,598 | - | - | - | - | - | 588,642 |
| ஊழியர்களினால் செய்யப்பட்ட பங்களிப்புகள் | - | - | 33,144 | 10,044 | 37,858 | - | 7,408 | 88,454 |
| நிதியத்திலிருந்து செலுத்தப்பட்ட நன்மைகள் | (2,365,843) | (966) | (479,098) | (30,040) | - | (5,570) | (218,416) | (3,099,933) |
| வட்டி வருமானம் தவிர்ந்த திட்டச் சொத்துக்களின் வருமானம் | (3,922,365) | (357,034) | (592,911) | (279,153) | - | 50,552 | 270,675 | (4,830,236) |
| **2018 திசெம்பர் 31இல் உள்ளவாறான** | **26,120,425** | **3,519,332** | **5,337,743** | **2,177,286** | **52,204** | **243,167** | **1,433,872** | **38,884,029** |

ஊழியர் ஓய்வூதியத் திட்டம், விதவைகள் அநாதைகள் ஓய்வூதிய திட்டம், விதுரர்கள் அநாதைகள் ஓய்வூதிய திட்டம், பணிக் கொடைத் திட்டம் மற்றும் மருத்துவ நலன்கள் திட்டம் போன்ற நிதியங்களின் கீழ் ரூ.522.23 மில்லியன் பெறுமதி கொண்ட பிணைகளற்ற முதலீடு காணப்படுவதனால் அவற்றிற்கு 100 சதவீத ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டதுடன், இதன் விளைவாக திட்டச் சொத்துக்களில் உள்ளடக்கப்படவில்லை. அத்தகைய முதலீடுகளின் பெறுமதி உள்ளடக்கப்படாத போதும், வங்கியானது ஓய்வூதிய பொறுப்புக்களின் ஆயுட்கால மதிப்பீட்டின் கீழ் தேறிய சொத்து நிலையைக் கொண்டுள்ளது.

| 2018 திசெம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டுக்கான ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தில் அங்கீகரிக்கப்பட்ட செலவீனங்கள் | ஊழியர் ஓய்வூதியத் திட்டம் | ஊழியர் ஓய்வூதியத் திட்டம் - புதிய | விதவைகள் அநாதைகள் ஓய்வூதியத் திட்டம் | விதுரர்கள் அநாதைகள் ஓய்வூதியத் திட்டம் | விதவைகள், அநாதைகள் மற்றும் விதுரர்கள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டம் - புதிய | பணிக் கொடைத் திட்டம் | மருத்துவ நலன்கள் திட்டம் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 |
| காலப்பகுதிக்குரிய கடப்பாடுகளின் மீதான ஆயுட்கால நட்டங்கள்/ (இலாபங்கள்) | | | | | | | | |
| நிதியியல் எடுகோள்களின் மாற்றத்தின் காரணமாக | 3,809,336 | 200,760 | 638,640 | 156,561 | - | 76,750 | 460,701 | 5,342,748 |
| அனுபவத்தின் காரணமாக | 1,327,934 | 9,654 | 185,245 | 41,777 | - | 28,794 | 57,070 | 1,650,474 |
| வட்டி வருமானம் தவிர்ந்த திட்டச் சொத்துக்களின் வருமானம் | 3,922,365 | 357,034 | 592,911 | 279,153 | - | (50,552) | (270,675) | 4,830,236 |
| காலப்பகுதிக்குரிய ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்ட தேறிய (இலாபங்கள்)/ செலவினங்கள் | 9,059,635 | 567,448 | 1,416,796 | 477,491 | - | 54,992 | 247,096 | 11,823,458 |

| 2018 திசெம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டுக்கான நன்மைச் செலவுகள் | ஊழியர் ஓய்வூதியத் திட்டம் | ஊழியர் ஓய்வூதியத் திட்டம் - புதிய | விதவைகள் அநாதைகள் ஓய்வூதியத் திட்டம் | விதுரர்கள் அநாதைகள் ஓய்வூதியத் திட்டம் | விதவைகள், அநாதைகள் மற்றும் விதுரர்கள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டம் - புதிய | பணிக் கொடைத் திட்டம் | மருத்துவ நலன்கள் திட்டம் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 |
| நன்மைகள் கடப்பாடுகளின் மீதான வட்டிச் செலவுகள் | 3,800,179 | 93,344 | 678,393 | 118,594 | - | 19,912 | 280,575 | 4,990,997 |
| திட்டமிட்ட சொத்துக்களின் மீதான வட்டி வருமானம் | (3,684,130) | (422,642) | (733,592) | (284,900) | (14,346) | (22,800) | (158,094) | (5,320,504) |
| நடைமுறை பணிகளுக்கான செலவு | 167,772 | 34,871 | - | - | - | 17,879 | 30,481 | 251,003 |
| முன்னைய பணிகளுக்கான செலவு | - | - | - | - | 718,088 | - | - | 718,088 |
| ஊழியர்களினால் செய்யப்பட்ட பங்களிப்புக்கள் | - | - | (33,144) | (10,044) | (37,858) | - | (7,408) | (88,454) |
| நன்மைச் செலவுகள் | 283,821 | (294,427) | (88,343) | (176,350) | 665,884 | 14,991 | 145,554 | 551,130 |

| திட்டச் சொத்துக்களின் கலவை | ஊழியர் ஓய்வூதியத் திட்டம் | ஊழியர் ஓய்வூதியத் திட்டம் - புதிய | விதவைகள் அநாதைகள் ஓய்வூதியத் திட்டம் | விதுரர்கள் அநாதைகள் ஓய்வூதியத் திட்டம் | விதவைகள், அநாதைகள் மற்றும் விதுரர்கள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டம் - புதிய | பணிக் கொடைத் திட்டம் | மருத்துவ நலன்கள் திட்டம் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 |
| அரச பிணையங்களிலான முதலீடுகள் | 18,951,019 | 3,138,194 | 3,665,611 | 1,682,559 | 43,131 | 214,815 | 1,150,734 | 28,846,063 |
| நேர்மாற்று மீள்கொள்வுகளிலான முதலீடுகள் | 219,425 | 21,471 | 44,950 | 26,096 | 3,883 | - | 4,013 | 319,838 |
| தொகுதிக்கடன்களிலான முதலீடுகள் | **761,114** | **43,004** | **449,408** | **20,335** | **-** | **6,633** | **-** | **1,280,494** |
| நிலையான வைப்புக்களிலான முதலீடுகள் | 6,173,983 | 315,885 | 1,176,978 | 448,149 | 4,848 | 21,719 | 279,125 | 8,420,687 |
| நடைமுறைக் கணக்கிலான நிலுவை மீதிகள் | 14,884 | 778 | 796 | 147 | 342 | - | - | 16,947 |
| 2018 திசெம்பர் 31இல் உள்ளவாறான மொத்த திட்டச் சொத்துக்கள் | 26,120,425 | 3,519,332 | 5,337,743 | 2,177,286 | 52,204 | 243,167 | 1,433,872 | 38,884,029 |

**2017 திசெம்பர் 31இல் உள்ளவாறு**

| நன்மைப் பொறுப்பு/ (சொத்து) | ஊழியர் ஓய்வூதியத் திட்டம் | ஊழியர் ஓய்வூதியத் திட்டம் - புதிய | விதவைகள் அநாதைகள் ஓய்வூதியத் திட்டம் | விதுரர்கள் அநாதைகள் ஓய்வூதியத் திட்டம் | பணிக் கொடைத் திட்டம் | மருத்துவ நலன்கள் திட்டம் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|
| | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 |
| | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 |
| நன்மைகள் கடப்பாட்டின் தற்போதைய பெறுமதி | 29,232,145 | 718,032 | 5,218,411 | 912,262 | 153,167 | 2,158,269 | 38,392,286 |
| திட்டச் சொத்துக்களின்/ முதலீடுகளின் சீர்மதிப்புப் பெறுமதி | (28,339,460) | (3,251,092) | (5,643,016) | (2,191,535) | (175,385) | (1,216,111) | (40,816,599) |
| தேறிய நன்மைப் பொறுப்பு/ (சொத்து) | 892,685 | (2,533,060) | (424,605) | (1,279,273) | (22,218) | 942,158 | (2,424,313) |

| நன்மைப் பொறுப்புகளின் / (சொத்துகளின்) அசைவு | ஊழியர் ஓய்வூதியத் திட்டம் | ஊழியர் ஓய்வூதியத் திட்டம் - புதிய | விதவைகள் அநாதைகள் ஓய்வூதியத் திட்டம் | விதுரர்கள் அநாதைகள் ஓய்வூதியத் திட்டம் | பணிக் கொடைத் திட்டம் | மருத்துவ நலன்கள் திட்டம் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|
| | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 |
| 2017 சனவரி 01இல் உள்ளவாறு | 2,076,018 | (1,834,772) | (187,705) | (1,002,453) | (20,646) | 889,590 | (79,968) |
| நன்மைகளுக்கான செலவு | 480,203 | (208,897) | (24,402) | (130,319) | 12,698 | 144,685 | 273,968 |
| ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தில் அங்கீகரிக்கப்பட்ட தொகை | **(1,017,607)** | **(308,404)** | **(180,379)** | **(136,612)** | **(14,270)** | **(84,350)** | **(1,741,622)** |
| செலுத்தப்பட்ட பங்களிப்பு | (645,929) | (180,987) | (32,119) | (9,889) | - | (7,767) | (876,691) |
| **2017 திசெம்பர் 31இல் உள்ளவாறான** | **892,685** | **(2,533,060)** | **(424,605)** | **(1,279,273)** | **(22,218)** | **942,158** | **(2,424,313)** |

| 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான நன்மைகளுக்கான செலவுகள் | ஊழியர் ஓய்வூதியத் திட்டம் | ஊழியர் ஓய்வூதியத் திட்டம் - புதிய | விதவைகள் அநாதைகள் ஓய்வூதியத் திட்டம் | விதுரர்கள் அநாதைகள் ஓய்வூதியத் திட்டம் | பணிக் கொடைத் திட்டம் | மருத்துவ நலன்கள் திட்டம் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|
| | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 |
| தேறிய வட்டிச் செலவு | 269,882 | (238,520) | (24,402) | (130,319) | (2,684) | 115,647 | (10,396) |
| தற்போதைய பணிகளுக்கான செலவு | 210,321 | 29,623 | - | - | 15,382 | 29,038 | 284,364 |
| **நன்மைகளுக்கான செலவுகள்** | **480,203** | **(208,897)** | **(24,402)** | **(130,319)** | **12,698** | **144,685** | **273,968** |

| திட்டச் சொத்துக்களின்/ முதலீடுகளின் சீர்மதிப்புப் பெறுமதியிலான மாற்றங்கள் | ஊழியர் ஓய்வூதியத் திட்டம் | ஊழியர் ஓய்வூதியத் திட்டம் - புதிய | விதவைகள் அநாதைகள் ஓய்வூதியத் திட்டம் | விதுரர்கள் அநாதைகள் ஓய்வூதியத் திட்டம் | பணிக் கொடைத் திட்டம் | மருத்துவ நலன்கள் திட்டம் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|
| | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 |
| 2017 சனவரி 01இல் உள்ளவாறு | 25,408,311 | 2,444,748 | 5,144,789 | 1,828,245 | 152,419 | 1,166,543 | 36,145,055 |
| திட்ட சொத்துக்களின்/ முதலீடுகளின் மீதான உண்மை வருமானம் | 4,375,497 | 627,231 | 849,631 | 375,242 | 37,653 | 253,174 | 6,518,428 |
| பெறப்பட்ட பங்களிப்புக்கள் | 645,929 | 180,987 | 32,119 | 9,889 | - | 7,767 | 876,691 |
| செலுத்தப்பட்ட நன்மைகள் | **(2,090,277)** | **(1,874)** | **(383,523)** | **(21,842)** | **(14,687)** | **(211,373)** | **(2,723,576)** |
| **2018 திசெம்பர் 31இல் உள்ளவாறான** | **28,339,460** | **3,251,092** | **5,643,016** | **2,191,534** | **175,385** | **1,216,111** | **40,816,598** |

அனைத்துத் திட்டங்களுக்குமான ஊழியர் நன்மைகளின் கடப்பாடுகளைத் தீர்மானிக்கின்றபோது பயன்படுத்தப்பட்ட முக்கியமான எடுகோள்கள் பின்வருமாறு காட்டப்படுகின்றன:

| | 2018 | 2017 |
|---|---|---|
| கழிவு வீதம் | **12.00%** | 13.00% |
| சொத்துக்களின் மீதான எதிர்பார்க்கப்பட்ட திரும்பல் வீதம் | **12.00%** | 13.00% |
| எதிர்காலச் சம்பள அதிகரிப்பு - மருத்துவ நலன்கள் திட்டம் | **8.50%** | 8.50% |
| சம்பள அதிகரிப்பு வீதம் - பணிக் கொடைத் திட்டம், விதவைகள் அநாதைகள் ஓய்வூதிய திட்டம், விதுரர்கள் அநாதைகள் ஓய்வூதிய திட்டம், ஊழியர் ஓய்வூதியத் திட்டம் பழையது | **11.50%** | 8.50% |
| சம்பள அதிகரிப்பு வீதம் - விதவைகள் அநாதைகள் மற்றும் விதுரர்கள் அநாதைகள் ஓய்வூதிய திட்டம் - புதிய மற்றும் ஊழியர் ஓங்வூதியத் திட்டம் - புதிய | **6.50%** | 6.50% |
| எதிர்கால ஓய்வூதிய அதிகரிப்பு | **7.50%** | 7.50% |
| தேய்வு வீதம் | **2.00%** | 2.00% |
| மருத்துவச் செலவு பணவீக்க வீதம் | **4.50%** | 3.00% |
| எஞ்சியுள்ள சராசரி பணி ஆண்டுகள் | | |
| இ.ம. வங்கி ஓய்வூதியம் | **26 ஆண்டுகள்** | 27 ஆண்டுகள் |
| இ.ம. வங்கி புதிய ஓய்வூதியம் | **38 ஆண்டுகள்** | 41 ஆண்டுகள் |
| விதவைகள் அநாதைகள் ஓய்வூதியத் திட்டம் | **26 ஆண்டுகள்** | 27 ஆண்டுகள் |
| விதுரர்கள் அநாதைகள் ஓய்வூதியத் திட்டம் | **26 ஆண்டுகள்** | 27 ஆண்டுகள் |
| விதவைகள் அநாதைகள் மற்றும் விதுரர்கள் அநாதைகள் ஓய்வூதிய திட்டம் - புதியது | **38 ஆண்டுகள்** | - |
| பணிக் கொடைத் திட்டம் | **19 ஆண்டுகள்** | 20 ஆண்டுகள் |
| இ.ம. வங்கி மருத்துவ நலன்கள் திட்டம் | **26 ஆண்டுகள்** | 32 ஆண்டுகள் |
| ஓய்வுபெறும் வயது | **60 ஆண்டுகள்** | 60 ஆண்டுகள் |

| உணர்திறன் பகுப்பாய்வு 0.5% இல் (2018 திசெம்பர் 31இல் உள்ளவாறு) | ஊழியர் ஓய்வூதியத் திட்டம் | ஊழியர் ஓய்வூதியத் திட்டம் - புதிய | விதவைகள் அநாதைகள் ஓய்வூதியத் திட்டம் | விதுரர்கள் அநாதைகள் ஓய்வூதியத் திட்டம் | விதவைகள் அநாதைகள் மற்றும் விதுரர்கள் அநாதைகள் ஓய்வூதிய திட்டம் - புதிய | பணிக் கொடைத் திட்டம் | மருத்துவ நலன்கள் திட்டம் |
|---|---|---|---|---|---|---|---|
| | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | | ரூ.000 | ரூ.000 |
| **நடைமுறை கருதுகோள்களின் மீது எறிவுசெய்யப்பட்ட நன்மைக் கடப்பாடுகள்** | **35,971,523** | **1,055,695** | **6,241,591** | **1,199,154** | **718,088** | **290,932** | **2,768,680** |
| கழிவிடல் வீதத்தில் "+" இன் மாற்றத்தின் தாக்கம் | (1,508,089) | (106,827) | (298,931) | (68,243) | (79,520) | (11,697) | (105,627) |
| கழிவிடல் வீதத்தில் "-" இன் மாற்றத்தின் தாக்கம் | 1,628,425 | 121,759 | 326,649 | 74,734 | 92,308 | 12,548 | 114,320 |
| தேய்வு வீதத்தில் "+" இன் மாற்றத்தின் தாக்கம் | - | - | - | - | - | 55,973 | 15,155 |
| தேய்வு வீதத்தில் "-" இன் மாற்றத்தின் தாக்கம் | - | - | - | - | - | (61,945) | (16,016) |
| சம்பள உயர்வு வீதத்தில் "+" இன் மாற்றத்தின் தாக்கம் | 188,526 | 87,724 | 14,634 | 5,647 | 55,034 | 12,548 | - |
| சம்பள உயர்வு வீதத்தில் "-" இன் மாற்றத்தின் தாக்கம் | (183,845) | (80,157) | (14,279) | (5,510) | (50,354) | (11,799) | - |
| மருத்துவச் செலவு அதிகரிப்பு வீதத்தில் "+" இன் மாற்றத்தின் தாக்கம் | - | - | - | - | - | - | 115,653 |
| மருத்துவச் செலவு அதிகரிப்பு வீதத்தில் "-" இன் மாற்றத்தின் தாக்கம் | - | - | - | - | - | - | (106,871) |
| ஓய்வூதிய அதிகரிப்பு வீதத்தில் "+" இன் மாற்றத்தின் தாக்கம் | 1,486,502 | - | 322,830 | 71,348 | - | - | - |
| ஓய்வூதிய அதிகரிப்பு வீதத்தில் "-" இன் மாற்றத்தின் தாக்கம் | (1,393,434) | - | (298,617) | (65,954) | - | - | - |

**35. பல்வகைப் பொறுப்புக்களும் அட்டுறுக்களும்**

பல்வகைப் பொறுப்புக்களும் அட்டுறுக்களும் கொடுப்பனவு செய்யத்தக்க கணக்குகளிலுள்ள கொடுபடத்தக்க மீதிகள், ஒப்பந்த ரீதியான பிடித்துவைத்தல்கள், மீட்கத்தக்க விலைக்கோரல் வைப்புக்களாக எடுக்கப்பட்ட வைப்புக்கள் மற்றும் அந்நிய செலாவணித் திணைக்களத்தினால் செலுத்தப்படவேண்டிய தண்டப்பணங்கள் என்பனவற்றை உள்ளடக்குகிறது.

**36. பங்குரிமை மூலதனம்**

**பங்குரிமை மூலதன விடயங்களின் தன்மை**

**36.1 மூலதன நிதியம்**

**பங்களிப்பு மூலதனம்** - நாணய விதிச் சட்டத்தின் 6ஆவது வாசகத்தின் பிரகாரம் மூலதனக் கணக்கு, வங்கியின் மூலதனத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துகிறது. 2014ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க நாணய விதிச் சட்டத்தின் (திருத்தப்பட்டது) 6ஆம் பிரிவின்படி, வங்கியின் மூலதனம் ரூ.50 பில்லியனுக்கு அதிகரிக்கப்பட்டது. இதன்படி, வங்கி, 2014 செத்தெம்பரில் நிதி அமைச்சரின் சம்மதத்துடன் அதன் ஒதுக்கங்களை மூலதனமாக்கியதன் மூலம் மூலதனத்தினை ரூ.50 பில்லியனுக்கு அதிகரித்தது.

**36.2 நிலையான சொத்து மீள்மதிப்பீட்டு ஒதுக்கம்** - ப.க.நி 16 இன் படி இவ்வொதுக்கானது ஆதனம், பொறி மற்றும் கருவிகளின் மீள்மதிப்பீட்டு மிகையை உள்ளடக்கியுள்ளது.

**36.3 ஏனைய ஒதுக்கங்கள் பின்வருவனவற்றை உள்ளடக்கியுள்ளன:**

(i) **பன்னாட்டு மீள் மதிப்பீட்டு ஒதுக்கம்** - பன்னாட்டு மீள் மதிப்பீட்டு ஒதுக்கம் என்பது, நாணய விதிச் சட்டத்தின் 41ஆம் பிரிவின் பிரகாரம் நிறுவப்பட்டுள்ளதொரு ஒதுக்கமாகும். இதன் பிரகாரம், தங்கம் மற்றும் வெளிநாட்டு நாணயங்களிலுள்ள மத்திய வங்கியின் தேறிய சொத்துக்களும் பொறுப்புக்களும் மீளக் கணிப்பிடப்படுவதன் ஊடாக உருவாகின்ற தேறல் செய்யப்படாத இலாபம் அல்லது நட்டம் வங்கியின் தேறிய இலாபத்தைக் கணிப்பதற்காக கவனத்திற் கொள்ளப்படலாகாதென்பதுடன், அதற்குப் பதிலாக இவ்விலாபம் அல்லது நட்டம் பன்னாட்டு மீள் மதிப்பீட்டு ஒதுக்கத்திற்கு மாற்றப்படுதல் வேண்டும்.

(ii) **சந்தை மீள்மதிப்பீட்டு ஒதுக்கம்** - வெளிநாட்டு நிதியியல் சொத்துக்களின் சந்தைப்படியான விலைகளின் மோசமான தாக்கத்திற்கு வழிவகுக்கின்ற பன்னாட்டுச் சந்தைகளின் தளம்பல்களின் ஏதேனும் மோசமான தாக்கத்தினை ஈடுசெய்யும் பொருட்டு வெளிநாட்டுச் சொத்துக்களின் சந்தைப் பெறுமதியிலிருந்து கிடைக்கும் விலைப் பெறுமதி இலாபங்களை மாற்றல் செய்வதற்காக 2003 சனவரி 30ஆம் நாளன்று நாணயச் சபையினால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்தின்படி சந்தை மீள்மதிப்பீட்டு ஒதுக்கம் ஏற்படுத்தப்பட்டது. நாணயச் சபையானது இந்த ஒதுக்கினை இலங்கை மத்திய வங்கியின் மொத்த வெளிநாட்டு ஒதுக்கில் உயர்ந்தபட்சம் 10 சதவீதத்திற்கு உயர்த்துவதற்கு தீர்மானித்தது.

மேலும், 29 பெப்புருவரி 2016இல் திகதியிடப்பட்ட வங்கியின் இலாபப் பகிர்ந்தளிப்புக் கொள்கை தொடர்பில் பிரேரிக்கப்பட்ட நாணயச் சபையின் தீர்மானம் எம்பீ/ டீயி (டபிள்யு)/7/1/2016 இற்கமைய, நாணயச் சபையானது அவசியம் எனக் கருதும் பட்சத்திலும், குறிப்பிடத்தக்க தேறல் செய்யப்படாத விலை மீள்மதிப்பீடுகளிலிருந்தான நட்டத்தின் காரணமாக திரட்டிய இலாபங்கள் எதிர்மறையாகக் காணப்படுமிடத்தும் சந்தை மீள் மதிப்பீட்டு ஒதுக்கத்திலிருந்து திரட்டிய இலாபத்திற்கு மாற்றல் செய்யமுடியும்.

இதன்படி, கடந்த காலங்களில் திரட்டப்பட்ட குறிப்பிடத்தக்களவிலான தேறல் செய்யப்படாத விலை மதிப்பீடுகளிலிருந்தான நட்டத்தின் காரணமாக உருவான எதிர்மறை திரட்டிய இலாபத்தை மேம்படுத்தும் விதமாக ரூ.19.43 மில்லியன் பெறுமதியான தொகை சந்தை மீள் மதிப்பீடு ஒதுக்கத்திலிருந்து திரட்டிய இலாபத்திற்கு மாற்றப்பட்டது.

2017ஆம் ஆண்டில் பதிவுசெய்யப்பட்ட சந்தைப்படியான இலாபத்தை கருத்திற்கொண்டு, 2018 பெப்புருவரி 26இல் திகதியிடப்பட்ட நாணயச் சபையின் தீர்மானம் பீபி எம்பீ/எவ்/8/34/2018 இன்படி ரூ.24.34 பில்லியன் தொகை திரட்டிய இலாபத்திலிருந்து சந்தை மீள்மதிப்பீட்டு ஒதுக்கத்திற்கு மாற்றப்பட்டது.

(iii) **ஏனைய ஒதுக்குகள்** - பொது ஒதுக்கு, கட்டட ஒதுக்கு மற்றும் கொடுகடன் உத்தரவாத ஒதுக்கு என்பவற்றை உள்ளடக்குகிறது. பொது ஒதுக்கு, நாணயச் சபையினால் பிடித்துவைக்கப்பட்டிருக்கும் வருவாய்களிலிருந்து வேறாக வைத்திருக்கப்படும் தொகையினை உள்ளடக்குகின்றது.

(iv) **ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தினூடாக** சீர்மதிப்புப் **பெறுமதியில் பிணையங்கள் மீதான தேறிய** சீர்மதிப்புப் **மிகை/ (நட்ட) பெறுமதி:** பிணையங்கள் மற்றும் அலகு முதலீடு என்பவற்றை மீளமதிப்பிடப்பட்டதன் மூலம் உருவாக்கிய தேறல் செய்யப்படாத இலாபம் மற்றும் நட்டம் சீர்மதிப்புப் பெறுமதியில் ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தின் ஊடாக ஒதுக்கத்திற்கு மாற்றப்பட்டது.

(v) **அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறை கடன்கரைப்பு நிதியம்** - அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறையைப் பயன்படுத்துவதில் பங்குபற்றுகின்றவர்களிடமிருந்து சேகரிக்கப்படுகின்ற கட்டணங்களைக் கொண்டு இந் நிதியம் உருவாக்கப்பட்டுள்ளது.

(vi) **ஓய்வூதிய நிதிய ஒதுக்கம்** - வெளியக இடர்நேர்வுகளின் காரணமாக வங்கியின் வருமானம் ஈட்டும் ஆற்றலில் ஏற்படும் வடுக்களால் ஓய்வூதிய நிதியத்தில் ஏதேனும் பற்றாக்குறை உருவாகுமாயின், அதனை ஈடுசெய்யும் பொருட்டு 2007ஆம் ஆண்டின் வருமானத்திலிருந்து மேலதிகமாக ரூ. 3 பில்லியன் மாற்றப்பட்டதன் மூலம் இவ்வொதுக்கம் உருவாக்கப்பட்டுள்ளது. 2011ம் ஆண்டு இலாபத்திலிருந்து ரூ. 1 பில்லியன் தொகை இவ்வொதுக்கத்திற்கு மாற்றப்பட்டது. 2015 யூனில் ரூ. 2 பில்லியன் ஓய்வூதிய நிதிய ஒதுக்கிலிருந்து, புதிய ஓய்வூதிய பொறுப்புக் கணக்கிற்கு, நாணயச் சபை பத்திர இலக்கம் எம்பீ/எச்ஆர்/11/12/2015 இன்படி புதிய ஓய்வூதியத்திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்காக மாற்றல் செய்யப்பட்டது.

(vii) **தொழில்நுட்ப மேம்பாட்டு ஒதுக்கம்** - குறிப்பாக தொழில்நுட்ப மேம்பாட்டுத் தேவைப்பாடுகள், நவீனமயமாக்கல் அல்லது இ.ம.வங்கியினால் தற்போது பயன்படுத்தப்பட்டு வருகின்ற பொதுப்பேரேடு, அ.நே.மொ. தீர்ப்பனவு முறை, திறைசேரி முகாமைத்துவ முறைமை மற்றும் பத்திரங்களற்ற பிணையங்கள் தீர்ப்பனவு முறை ஆகிய தகவல் தொழில்நுட்ப முறைமையைத் தரமுயர்த்துதல் ஆகியவற்றுக்காகப் பயன்படுத்தும் பொருட்டு இவ்வொதுக்கம் 2007 ஆம் ஆண்டின் இலாபத்திலிருந்து உருவாக்கப்பட்டது. 2017ஆம் ஆண்டு இலாபத்தில் இருந்து ரூ.2.0 பில்லியன் 2018ஆம் ஆண்டு மாச்சு மாத காலப்பகுதியில் இவ்வொதுக்கத்திற்கு மேலதிகமாக மாற்றப்பட்டது.

(viii) **மாகாண அபிவிருத்தி கொடுகடன் திட்டம்** - 2010ஆம் ஆண்டுப் பகுதியில், வங்கி இலாபத்திலிருந்து உருவாக்கிய நிதியத்தின் மூலம் அபிவிருத்தி நோக்கங்களுக்காக மாகாணங்களுக்கு ரூ.2.90 பில்லியன் கொண்ட நடுத்தர கால மற்றும் நீண்ட கால மீள்நிதியிடல் இலங்கை வங்கியூடாகவும் மக்கள் வங்கியூடாகவும் வழங்கப்பட்டன.

(ix) சிறப்புக் கொடுகடன் உத்தரவாதத் திட்ட ஒதுக்கம் - இவ்வொதுக்கானது நடுத்தர மற்றும் நீண்ட கால கொடுகடன் நிதியத்திலிருந்து ரூ.2 பில்லியனை மாற்றல் செய்ததன் மூலம்

2014இல் ஏற்படுத்தப்பட்டது. இதில் ரூ.1 பில்லியன் வங்கியின் பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்தினால் தொழிற்படுத்தப்படும் சௌபாக்கியா கடன் திட்டம், வடக்கின் எழுச்சிக் கடன் திட்டம் (கட்டம் II), கிழக்கில் பொருளாதார நடவடிக்கைகளை மீளத் தொடங்குதல் (கட்டம் ஐஐ) மற்றும் வடக்கு, கிழக்கில் சேதமடைந்த வீடுகளைத் திருத்தல் என்பனவற்றின் மீளமைத்தலுக்கு ஆதரவளிப்பதற்காக ஒதுக்கப்பட்டது. மற்றைய ரூ.1 பில்லியன் வர்த்தக வங்கிகளின் சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளுக்கான கடன் வழங்கலுக்கு உதவியளிப்பதற்கான சிறப்புக் கொடுகடன் உத்தரவாதத்திட்டத்தினை நடைமுறைக்கிடுவதற்காக ஒதுக்கப்பட்டது.

(x) தொழில்நிலைக்குப் பின்னரான நன்மைகள் திட்டங்களினை நிதியிடும் நோக்கத்திற்காக ஒதுக்கம் - 2016.12.16 ஆம் திகதியிடப்பட்ட எம்/எப்/39/20/2016 ஆம் இலக்க நாணயச் சபையின் முடிவிற்கமைய ஆயுட்கால நட்டங்கள் மற்றும் நன்மைச் செலவுகள் காரணமாக பங்குரிமை மூலதனத்திற்கு எதிர்மறையான தாக்கம் ஏற்படக்கூடிய சாத்தியம் இருக்கும் போது அதனை ஈடுசெய்ய தேவையான அளவு பகிரக்கூடிய இலாபம் இருக்குமெனில் கொடுக்கப்பட்ட ஆண்டின் (2016ஆம் ஆண்டிலிருந்து) உண்மையான நன்மைச் செலவுகளின் 50 சதவீதத்தினை குறித்த ஒதுக்கத்திற்கு ஒதுக்கீடு செய்வதற்கு முன்மொழியப்பட்டது. அதன்படி இலங்கை மத்திய வங்கி 2017ஆம் ஆண்டில் ரூ.0.37 பில்லியனை மாற்றியது. ஊழியர் சேம நிதியத்தின் ஆயுட்கால மதிப்பீட்டிலிருந்தான உத்தரவாதமான வருமானத்தினால் வங்கியின் பங்குரிமை மூலதனத்தில் சாதகமான பாதிப்பு எதிர்பார்க்கப்பட்டதனால் மேலதிகமாக ரூ.5.0 பில்லியன் மாற்றப்பட்டது. 2018ஆம் ஆண்டில் பகிரபடக்கூடிய இலாபங்கள் இல்லாதமையினால் வங்கியால் 2018ஆம் ஆண்டின் எந்தவிதமான மாற்றல்களும் மேற்கொள்ளப்படவில்லை.

ஏனைய ஒதுக்கங்களிலான அசைவுகள் பின்வருமாறு:

| | நடுத்தர கால, நீண்ட கால கொடுகடன் ஒதுக்கம் | சந்தை மீள்மதிப்பீட்டு ஒதுக்கம் | ஏனைய ஒதுக்கங்கள் | சிறப்புக் கொடுகடன் உத்தரவாதத் திட்ட ஒதுக்கம் | அ.நே. மொ. தீ. கடன் கரைப்பு நிதியம் | பன்னாட்டு மீள்மதிப்பீட்டு ஒதுக்கம் | விற்பனைக்குள்ள பிணையங்களின் தேறிய சந்தைப் பெறுமதி இலாபம்/(நட்டம்) | ஓய்வூதிய நிதிய ஒதுக்கம் | தொழில் நுட்ப மேம்பாட்டு ஒதுக்கம் | மாகாண அபிவிருத்திக் கொடுகடன் திட்ட நிதியம் | தொழில் நிலைக்குப் பின்னரான நன்மைத் திட்டங்களின் நிதியிடல் தேவைகளுக்கான ஒதுக்கம் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 |
| 2017 திசெம்பர் 01இல் உள்ளவாறு | 1,925,000 | 14,028,792 | 10,952,533 | 2,000,000 | 1,826,818 | 8,573,729 | (3,563,157) | 2,000,000 | 1,000,000 | 2,900,000 | 689,025 | 42,332,740 |
| ப.நி.அ.நி. 9 மீள்வகைப்படுத்தல் தாக்கத்தினால் சரிசெய்யப்பட்ட மாற்றம் | - | - | - | - | - | - | 1,287,347 | - | - | - | - | 1,287,347 |
| ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தின் ஊடான சீர்மதிப்புப் பெறுமதி முதலீடுகளின் எதிர்பார்க்கப்பட்ட செலவு நட்டங்களின் சரிசெய்யப்பட்ட மாற்றம் | - | - | - | - | - | - | 65,588 | - | - | - | - | 65,588 |
| 2018 சனவரியில் உள்ளவாறு சரிசெய்யப்பட்ட மீதி | 1,925,000 | 14,028,792 | 10,952,533 | 2,000,000 | 1,826,818 | 8,573,729 | (2,210,222) | 2,000,000 | 1,000,000 | 2,900,000 | 689,025 | 43,685,675 |
| அ.நே.மொ.தீ. கடன்கரைப்பு நிதியத்திற்கு மாற்றல் | - | - | - | - | 291,983 | - | - | - | - | - | - | 291,983 |
| பொது ஒதுக்கத்திற்கு இலாபத்தை மாற்றுதல் | - | - | 5,013,869 | - | - | - | - | - | - | - | - | 5,013,869 |
| தேறிய வெளிநாட்டுச் செலாவணி மீள்மதிப்பீட்டு இலாபத்தினை மாற்றல் | - | - | - | - | - | 146,854,048 | - | - | - | - | - | 146,854,048 |
| ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தின் ஊடான சீர்மதிப்புப் பெறுமதி பிணையங்களின் தேறிய சீர்மதிப்புப் பெறுமதி நட்டம் | - | - | - | - | - | - | (877,778) | - | - | - | - | (877,778) |
| சந்தை மீள்மதிப்பீட்டு ஒதுக்கத்திற்கு நிதியங்களை மாற்றுதல் | - | 24,337,841 | - | - | - | - | - | - | - | - | - | 24,337,841 |
| தொழில் நிலைக்குப் பின்னரான நன்மைத் திட்டங்களின் நிதியிடல் தேவைகளுக்கான ஒதுக்கத்திற்கான மாற்றல் | - | - | - | - | - | - | - | - | - | - | 5,372,178 | 5,372,178 |
| தொழில் நுட்ப மேம்பாட்டு ஒதுக்கத்திற்கு நிதியங்களை மாற்றல் | - | - | - | - | - | - | - | - | 2,000,000 | - | - | 2,000,000 |
| சந்தை மதிப்பீட்டு ஒதுக்கம் - உள்நாட்டு திறைசேரி உண்டியல்/முறி | - | - | - | - | - | - | 5,259 | - | - | - | - | 5,259 |
| சந்தை மதிப்பீட்டு ஒதுக்கம் - பங்குரிமை முதலீடாக வகைப்படுத்தப்பட்ட ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தினூடான சீர்மதிப்புப் பெறுமதி | - | - | - | - | - | - | 122,747 | - | - | - | - | 122,747 |
| ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தினூடான சீர்மதிப்புப் பெறுமதி முதலீடுகளின் எதிர்பார்க்கப்பட்ட செலவு நட்டங்கள் | - | - | - | - | - | - | (1,939) | - | - | - | - | (1,939) |
| திரட்டிய இலாபத்திற்கு நிதியங்களை மாற்றல் | - | (19,426,472) | - | - | - | - | (16,289) | - | - | - | (1,727,706) | (21,170,467) |
| 2018 திசெம்பர் 31இல் உள்ளவாறான | 1,925,000 | 18,940,161 | 15,966,402 | 2,000,000 | 2,118,801 | 155,427,777 | (2,978,222) | 2,000,000 | 3,000,000 | 2,900,000 | 4,333,497 | 205,633,416 |

## 37. இலாபப் பகிர்ந்தளிப்பு

நாணய விதிச்சட்டத்தின்படி, நாணயச் சபையால் ஒப்புதலளிக்கப்பட்ட இலங்கை மத்திய வங்கியின் இலாப பகிர்ந்தளிப்பு கொள்கை (2018 இலிருந்து நடைமுறைக்குவரும்) பகிரத்தக்க இலாபத்தினைப் பெறும் விதத்தில் தேறிய இலாபத்திற்கு பின்வரும் சீராக்கங்கள் செய்யப்பட்டன.

(அ) செலாவணிவீத இலாபம் நீக்குதல். நட்டத்தினை இல்லாமல் செய்வதற்கு தேவையானளவான செலாவணிவீத இலாபம் திரட்டப்படும் வரை வெலாவணிவீத நட்டங்களை அகற்றுதல் எந்தவொரு மேலதிக செலாவணிவீத நட்டத்தையும் உள்ளடக்குதல் (இலங்கை மத்திய வங்கியின் இலாப பகிர்ந்தளிப்பு கொள்கையின்படி).

(ஆ) தேறல் செய்யப்படாத விலை மீள் மதிப்பீடுகளிருந்தான இலாபத்தினை நீக்குகிறது (தேறல் செய்யப்படாத சந்தைப்படியான இலாபங்கள்) எனினும் தேறல் செய்யப்படாத விலை மீள்மதிப்பீடுகளிலிருந்தான (தேறல் செய்யப்படாத சந்தைப்படியான நட்டங்கள்) நட்டங்களை விதிக்கிறது. (இலங்கை மத்திய வங்கியின் இலாப பங்கீட்டு கொள்கையின்படி)

(இ) நாணயச் சபையினால் தீர்மானிக்கப்பட்டவாறு நாணய விதிச் சட்டத்தின் பிரிவு 38 இன்படியான வேறு ஏதேனும் மாற்றல்கள் மற்றும் நாணய விதிச் சட்டத்தின் பிரிவு 39 இலிருந்து எழும் வேறு ஏதேனும் சீராக்கங்கள்.

மேலும், கணக்கீட்டு நியமங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களினால் தேவைப்படுத்தப்பட்டவாறு வேறு ஏதேனும் சீராக்கங்கள் பகிரத்தக்க இலாபத்தினைப் பெறும் விதத்தில் சீராக்கப்பட்டன.

மேற்குறிப்பிட்ட சீராக்கங்களின் அடிப்படையில், 2018 திசெம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டுக்கான பகிரத்தக்க இலாபம் பின்வருமாறு:

| விடயம் | 2018<br>ரூ. 000 |
|---|---|
| **ஆண்டிற்கான இலாபம்** | **137,927,718** |
| **கழிக்குக:** | |
| நாணயவிதிச்சட்டத்தின் படி பன்னாட்டு மீள்மதிப்பீட்டு ஒதுக்கிற்கான செலாவணி வீத இலாப மாற்றல் | 146,854,048 |
| வெளிநாட்டுச் சொத்துக்களிலிருந்தான சந்தைப் படியான இலாபத்தை சந்தை மீள் மதிப்பீட்டு ஒதுக்கத்திற்கு மாற்றல் | 1,166,516 |
| ஏனைய கணக்கீட்டுச் சீராக்கங்கள் | 463,842 |
| ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்திற்கு மாற்றல் (ச.க.நி 19: ஊழியர் நன்மைகள், இன்படி) | **11,823,458** |
| கூட்டுக | |
| தொழில் நிலைக்குப் பின்னரான நன்மைத் திட்டங்களின் நிதியிடல் தேவைகளுக்காக ஒதுக்கத்திலிருந்து திரட்டிய இலாபத்திற்கு மாற்றல் | 1,727,706 |
| **நாணய விதிச்சட்டம், வங்கியினுடைய இலாபப் பகிர்ந்தளிப்புக் கொள்கை மற்றும் ஏனைய சீராக்கங்கள் என்பவற்றின் படியான பங்கிடத்தக்க இலாபம்/ (நட்டம்)- தேறல் செய்யப்பட்ட இலாபம்/ (நட்டம்)** | (20,652,440) |

## 38. நிதிச் சொத்துக்களிலிருந்தான வட்டி வருமானம்

| | 2018<br>ரூபா 000 | 2017<br>ரூபா 000 |
|---|---|---|
| **வெளிநாட்டு நாணய நிதிச் சொத்துக்களிலிருந்தான வட்டி வருமானம்** | | |
| காசு மற்றும் குறுங்கால வைப்புக்கள் | **3,889,162** | 2,760,599 |
| நிதியியல் சொத்துக்கள் | **13,588,824** | 6,170,100 |
| பெறுதிகள் | **8,078,946** | 13,984,017 |
| **வெளிநாட்டு நாணய நிதிச் சொத்துக் களிலிருந்தான மொத்த வட்டி வருமானம்** | **25,556,932** | 22,914,716 |
| **உள்நாட்டு நாணய நிதிச் சொத்துக் களிலிருந்தான வட்டி வருமானம்** | | |
| இலங்கை அரச பிணையங்கள் | **7,941,274** | 17,656,195 |
| ஏனைய கடன்களும் முற்பணங்களும் | **1,015,048** | 845,553 |
| **உள்நாட்டு நாணய நிதிச் சொத்துக்களிலிருந்தான மொத்த வட்டி வருமானம்** | **8,956,322** | 18,501,748 |
| **நிதிச் சொத்துக்களிலிருந்தான மொத்த வட்டி வருமானம்** | **34,513,254** | 41,416,464 |

## 39. விலை மீள் மதிப்பீடுகளிலிருந்தான தேறல் செய்யப்படாத இலாபம்/ (நட்டம்)

| | 2018<br>ரூபா 000 | 2017<br>ரூபா 000 |
|---|---|---|
| வெளிநாட்டுப் பிணையங்கள் | **214,157** | (61,814) |
| தங்கம் | **(4,103,042)** | 13,949,169 |
| வெளிநாட்டுச் செலாவணி மற்றும் நாணய பரஸ்பர பரிமாற்றல்கள் | **(14,882,288)** | 9,702,099 |
| நாணயத் தெரிவுகள் | **511,217** | 411,021 |
| **மொத்த விலை மீள் மதிப்பீடுகளிலிருந்தான தேறல் செய்யப்படாத இலாபம்/ (நட்டம்)** | **(18,259,956)** | 24,000,475 |

## 40. நிதிப் பொறுப்புக்கள் மீதான வட்டிச் செலவு

| | 2018<br>ரூபா 000 | 2017<br>ரூபா 000 |
|---|---|---|
| **வெளிநாட்டு நாணய நிதிப் பொறுப்புக்கள் மீதான வட்டிச் செலவு** | | |
| ஆசியத் தீர்ப்பனவு ஒன்றியத்துக்குச் செலுத்தப்பட வேண்டிய தொகை | **991,982** | 467,828 |
| பன்னாட்டு நாணய நிதியம் தொடர்பான பொறுப்புக்கள் | **3,862,093** | 1,900,742 |
| பெறுதிகள் | **486,325** | 210,877 |
| ஏனைய வெளிநாட்டு செலுத்த வேண்டியன | **9,755** | 383,784 |
| **வெளிநாட்டு நாணய நிதிப் பொறுப்புக்கள் மீதான மொத்த வட்டிச் செலவினம்** | **5,350,155** | 2,963,231 |
| **உள்நாட்டு நாணய நிதிப் பொறுப்புக்கள் மீதான வட்டிச் செலவு** | | |
| மீள்கொள்வனவு உடன்படிக்கையின் கீழ் விற்பனை செய்யப்பட்ட பிணையங்கள் | **925,379** | 1,023,720 |
| துணைநில் வைப்பு வசதி | **1,409,287** | 1,195,866 |
| முறிக் கடன்பாடுகள் | **15,882** | 1,716 |
| கைவிடப்பட்ட ஆதனம் | **529,672** | 454,814 |
| **உள்நாட்டு நாணய நிதிப் பொறுப்புக்கள் மீதான மொத்த வட்டிச் செலவு** | **2,880,220** | 2,676,116 |
| **நிதிப் பொறுப்புக்கள் மீதான மொத்த வட்டிச் செலவு** | **8,230,375** | 5,639,347 |

பற்றாக்குறை திரவத்தன்மை நிலை காரணமாக, சந்தைக்கு திரவத் தன்மையை உட்செலுத்தும் விதமாக வங்கியின் நடவடிக்கைகளில் ரூ.10,041.78 மில்லியன் (2017 - ரூ.12,977.01 மில்லியன்) தேறிய இலாபம் காணப்பட்டது. பண நிரம்பலைக் கட்டுப்படுத்துவதற்கான செலவு ஆனது கீழே காட்டப்பட்டுள்ளவாறு மீள்கொள்வனவு உடன்படிக்கையின் கீழ் விற்பனை செய்யப்பட்ட பிணையங்கள், முறிகளின் கடன்பாடு மற்றும் துணைநில் வசதி ஆகியவற்றின் மீதான வட்டிச்செலவுகளிலிருந்து, இலங்கை அரச பிணையங்களின் கீழ் உள்ளடக்கப்பட்டுள்ள மீள்கொள்வனவு உடன்படிக்கையின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட பிணையங்களின் வட்டி வருமானம் மற்றும் வெளிநாட்டு நிதியியல் சொத்துக்களிலிருந்தான வட்டி வருமானத்தில் உள்ளடக்கப்பட்டவாறான ஐ.அ.டொலர்/இல. ரூபா பெறுதிகளின் இலாபம் என்பனவற்றைக் கழிப்பதன் மூலம் பெறப்பட்ட தேறிய தொகையை உள்ளடக்கிறது.

| | 2018 ரூபா 000 | 2017 ரூபா 000 |
|---|---|---|
| மீள்கொள்வனவு உடன்படிக்கையின் கீழ் விற்பனை செய்யப்பட்ட பிணையங்கள் மீது ஏற்பட்ட வட்டிச் செலவு | **925,379** | 1,023,720 |
| முறிக் கடன்பாட்டின் மீது செலுத்தப்பட்ட வட்டிச் செலவு | **15,882** | 1,716 |
| துணைநில் வைப்பு வசதி மீதான வட்டிச் செலவினம் | **1,409,287** | 1,195,866 |
| கழி: | | |
| மீள் விற்பனை செய்வதற்கான உடன்படிக்கையின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட பிணையங்களின் மீது உழைக்கப்பட்ட வட்டி வருமானம் | **4,313,387** | 1,214,298 |
| ஐ.அ.டொலர்/ இல.ரூபா பெறுதிகள் இலாபம் | **8,078,946** | 13,984,017 |
| | **10,041,785** | 12,977,013 |

## 41. நிதிச் சொத்துக்கள் மீது எதிர்பார்க்கப்பட்ட செலவு நட்டங்கள்

| | 2018 ரூபா 000 | 2017 ரூபா 000 |
|---|---|---|
| வெளிநாட்டு நாணய நிதிச் சொத்துக்கள் | | |
| நிதிச் சொத்துக்களின் பெறுமதியிழப்புச் செலவு | | - |
| காசு மற்றும் காசிற்குச் சமமானவை (குறிப்பு 9.1) | **(21,059)** | - |
| பன்னாட்டு நாணய நிதியம் தொடர்பான சொத்து (குறிப்பு 12.4) | **(1)** | - |
| ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தினூடான சீர்மதிப்புப் பெறுமதியில் பிணையங்கள் (குறிப்பு 10.2) | **1,939** | - |
| **மொத்த வெளிநாட்டு நாணய நிதிச் சொத்துக்கள் மீது எதிரபார்க்கப்பட்ட செலவு நட்டங்களின் திரும்பல்கள்** | **(19,121)** | - |
| **உள்நாட்டு நாணய நிதிச் சொத்துக்கள்** | | - |
| நிதிச் சொத்துக்களின் பெறுமதியிழப்புச் செலவு | **-** | - |
| வங்கிகளுக்கான கடன்கள் (குறிப்பு 16.2) | **488** | - |
| ஏனைய சொத்துக்கள் (குறிப்பு 18.1) | **(11,462)** | - |
| பிரதேச அபிவிருத்தி திணைக்களத்திற்கான கடன் உத்தரவாதங்கள் | **8** | - |
| **மொத்த உள்நாட்டு நாணய நிதிச் சொத்துக்கள் மீது எதிரபார்க்கப்பட்ட செலவு நட்டங்களின் திரும்பல்கள்** | **(10,966)** | - |
| **நிதிச் சொத்துக்கள் மீது எதிரபார்க்கப்பட்ட மொத்தச் செலவு நட்டங்களின் திரும்பல்கள்** | **(30,087)** | - |

## 42. ஏனைய வருமானம்

| | 2018 ரூபா 000 | 2017 ரூபா 000 |
|---|---|---|
| பங்குலாப வருமானம் - தொடர்புபட்ட நபர்கள் | **126,111** | 104,601 |
| - ஏனையோர் | **-** | 2,540 |
| ஆதனங்கள் பொறிகள் மற்றும் கருவிகளின் அகற்றல் மீதான இலாபம்/ (நட்டம்) | **79,373** | (732) |
| பிற்போடப்பட்ட கொடைகளின் பதிவழிப்பு | **34** | 34 |
| நிதியியல் நிறுவனங்களின் உரிமக் கட்டணம் | **580,950** | 555,975 |
| வாடகை வருமானம் | **402,429** | 485,515 |
| அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமைப் பங்கேற்பாளர்களிடமிருந்து சேகரிக்கப்பட்ட கட்டணங்கள் | **123,361** | 119,606 |
| நானாவித வருமானம் | **380,736** | 335,125 |
| **மொத்த ஏனைய வருமானம்** | **1,692,994** | 1,602,664 |

## 43. ஆளணிச் செலவுகள்

| | 2018 ரூபா 000 | 2017 ரூபா 000 |
|---|---|---|
| சம்பளங்களும் கூலிகளும் | **5,409,137** | 4,112,349 |
| குறித்துரைக்கப்பட்ட பங்களிப்புத் திட்டச் செலவுகள் | **1,536,049** | 610,489 |
| தொழில் நிலைக்குப் பிந்திய குறித்துரைக்கப்பட்ட நன்மைத் திட்டங்களின் செலவு | **205,147** | 744,356 |
| **மொத்த ஆளணிச் செலவுகள்** | **7,150,333** | **5,467,194** |

## 44. நிர்வாகம் மற்றும் ஏனைய செலவுகள்

| | 2018 ரூபா 000 | 2017 ரூபா 000 |
|---|---|---|
| திருத்தங்களும் பேணல்களும் | **831,201** | 796,595 |
| ரொயிட்டர், புளும்பேர்க் சுவிப்ற் மற்றும் ஏனையவற்றுக்கான தொழிற்பாட்டுச் செலவினங்கள் | **162,735** | 122,260 |
| பயணம் | **131,033** | 114,217 |
| வாடகைச் செலவுகள் | **3,004** | 3,325 |
| அச்சிடல் | **36,412** | 27,728 |
| கணக்காய்வுக் கட்டணம் | **11,199** | 10,412 |
| நாணயச் சபை உறுப்பினர்களுக்கான ஊதியங்கள் | **4,510** | 4,463 |
| இ.ம.வ சேம நிதியம் மீதான வட்டி உதவுதொகை | **85,383** | - |
| விளம்பரச் செலவு | **104,930** | 36,045 |
| ஆலோசனை, தொடர்பூட்டல், மதியுரை மற்றும் தொழில்சார் நிபுணத்துவக் கட்டணங்கள் | **102,718** | 87,020 |
| நானாவிதச் செலவினம் | **376,958** | 103,584 |
| **மொத்த நிர்வாக மற்றும் ஏனைய செலவுகள்** | **1,850,083** | 1,305,649 |

## 45. வரி

2006ஆம் ஆண்டின் 10ஆம் இலக்க உள்நாட்டரசிறை (திருத்தச்) சட்டத்தின் பிரிவு 7ஆ (xvi) மற்றும் 2017 ஆண்டின் 24 ஆம் இலக்க உள்நாட்டரசிறை சட்டத்தின் பிரிவு 9 (1) ஆகியவற்றின்படி இலங்கை மத்திய வங்கி வருமான வரி செலுத்தப் பொறுப்புடையதல்ல

2018 ஆம் ஆண்டு மாச்சு 31 ஆம் திகதி வரை வங்கியால் செலுத்தப்படும் பிடித்துவைத்தல் வரி மற்றும் வங்கியால் செலுத்தப்படும் பொருளாதார சேவைக் கட்டணம் என்பன உள்நாட்டரசிறைத் திணைக்களத்திற்கு வங்கி செலுத்தும் இறுதி வரிகளாக கருதப்படுகிறது. 2017 ஆண்டின் 24 ஆம் இலக்க உள்நாட்டரசிறை சட்டத்தின்படி அரச பிணையங்கள் மீது செலுத்தப்படும் பிடித்துவைத்தல் வரியானது 2018.04.01 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் நீக்கப்பட்டுள்ளது.

2018 ஆம் ஆண்டுகாலப்பகுதியில் மொத்த வரியாக ரூபா.1,119.29 மில்லியன் (2017 - ரூபா 1,837.98 மில்லியன்) செலுத்தப்பட்டது. பிடித்துவைத்தல் வரி தொடர்பில் ரூ. 268.08 மில்லியனும் (2017 - ரூ. 1,837.98 மில்லியன்) உம் பொருளாதார சேவைக் கட்டணமாக ரூ. 851.21 மில்லியனாகும் (2017 - எதுவுமில்லை).

## 46. தொழிற்பாட்டு இலாபங்களை தொழிற்பாட்டு காசுப் பாய்ச்சலுடன் இணக்கப்படுத்தல்

| | 2018 ரூபா 000 | 2017 ரூபா 000 |
|---|---|---|
| **தொழிற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து அறிக்கையிடப்பட்ட தேறிய இலாபம்** | **137,927,718** | 48,356,367 |
| **கூட்டுக /(கழிக்குக) காசல்லா விடயங்கள்** | | |
| தேய்மானம் மற்றும் பெறுமதியிழப்பு | **498,189** | 518,716 |
| பெறப்பட்ட வட்டி - உள்நாட்டு நாணயம் - முதலீட்டுச் சொத்துப்பட்டியல் | **(7,941,272)** | (17,911,409) |
| அறவிடமுடியாக் கடன் மீள்பதிவு | - | (27,302) |
| குறித்துரைக்கப்பட்ட ஊழியர் நன்மைகள் திட்டத்திற்கான தேறிய ஏற்பாடுகள் | **390,483** | 236,269 |
| மொத்தத் தேறாத வெளிநாட்டுச் செலாவணி இலாபம் | (149,861,582) | (9,595,724) |
| ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்களின் விற்பனை மீதான (இலாபம்)/ நட்டம் | (79,381) | - |
| ஏற்பாடுகள் மற்றும் அட்டுறுக்கள் | 2,288,287 | 489,509 |
| நிதிச் சொத்துக்கள் மீதான எதிர்பார்க்கப்பட்ட செலவு நட்ட ஏற்பாடுகள் | 30,086 | - |
| பிற்போடப்பட்ட கொடைகள் | (34) | (34) |
| வறுமைக் குறைப்பு வளர்ச்சி வசதி நம்பிக்கை நிதிய வைப்பின் பெறுமதியிழப்பு | (7,747) | (6,804) |
| செயற்பாட்டிலுள்ள கட்டுமானங்களின் பதிவழிப்பு | 22,402 | - |
| நிலையான வருமான பிணையங்களின் பெறுமதியிழப்பு செலவுகள் | 109,525 | 883,659 |
| **கூட்டுக/ (கழிக்குக) ஏனைய தொழிற்படு மூலதன விடயங்களின் அசைவு** | | |
| இருப்புக்களின் (அதிகரிப்பு)/ குறைவு | **306,597** | (760,672) |
| பெறத்தக்க வட்டியின் அதிகரிப்பு | **2,558,796** | 579,464 |
| பல்வகைப் பொறுப்புக்களின் அதிகரிப்பு | **(21,325)** | 906,181 |
| கொடுபடத்தக்க வட்டியில் அதிகரிப்பு | **1,075,371** | 219,716 |
| ஏனைய பெறத்தக்கவற்றின் அதிகரிப்பு | **(3,234,520)** | (79,675) |
| **கூட்டுக/ (கழிக்குக) முதலீடு மற்றும் நிதியிடல் நடவடிக்கைகள்** | | |
| தேறிய தேறல்செய்யப்படாத சந்தைப் பெறுமதி மாற்றங்கள் | **12,201,892** | (25,110,720) |
| **தொழிற்பாட்டு நடவடிக்கையிலிருந்தான தேறிய காசுப்பாய்ச்சல்** | **(3,736,515)** | (1,302,459) |

## 47. அரச கொடுக்கல் வாங்கல்களின் மீதான சுற்றோட்ட நாணயத்தின் தேறிய வெளியீடு/(மீளப்பெறல்)

| | 2018 ரூபா 000 | 2017 ரூபா 000 |
|---|---|---|
| இலங்கை அரச பிணையங்களின் கொள்வனவு/ (விற்பனை) | **241,803,062** | (315,960,919) |
| பெறப்பட்ட வட்டி - உள்நாட்டு நாணயம் - இலங்கை அரச பிணையங்கள் | **(7,393,636)** | (21,308,838) |
| இலங்கை அரசுக்கான முற்பணங்களின் அதிகரிப்பு/ (குறைவு) | **(1,168,300)** | 116,494,100 |
| அரசு மற்றும் அரச நிறுவனங்களுடனான நிலுவைகளின் (அதிகரிப்பு)/குறைவு | **(24,202)** | 126,367 |
| | **233,216,924** | (220,649,290) |

## 48. வங்கி மற்றும் நிதியியல் நிறுவனங்களின் கொடுக்கல்வாங்கல்கள் மீதான சுற்றோட்ட நாணயத்தின் தேறிய வெளியீடு/(மீளப்பெறல்)

| | 2018 ரூபா 000 | 2017 ரூபா 000 |
|---|---|---|
| வங்கிகள் மற்றும் நிதியியல் நிறுவனங்களின் வைப்புக்களிலான (அதிகரிப்பு)/குறைவு | **23,010,511** | (38,460,908) |
| | **23,010,511** | (38,460,908) |

## 49. நிதியிடலின் திரட்சி

ஆண்டின் இறுதியில் வங்கியின் முக்கியமான நிதியிடலின் திரட்சியானது பின்வருமாறு:

| 49.1 2018 திசெம்பர் 31இல் உள்ளவாறு நிலுவைகள் | இலங்கை அரசு | இலங்கை பொதுமக்கள் | இலங்கை வணிக வங்கிகள் | பல்தேசிய நிதியியல் நிறுவனங்கள் | ஏனையவை | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 |
| **வெளிநாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள்** | | | | | | |
| வங்கிகள் மற்றும் நிதியியல் நிறுவனங்கள் | - | - | - | 811,552 | 18,489,608 | 19,301,160 |
| பெறுதி நிதியியல் சாதனங்கள் | - | - | 12,156,003 | - | 1,900,457 | 14,056,460 |
| ஆசிய தீர்ப்பனவு ஒன்றியம் | - | - | - | 79,158,977 | - | 79,158,977 |
| ப.நா.நிதியம் | - | - | - | 416,988,246 | - | 416,988,246 |
| ஏனையவை | 134,657,025 | - | - | 68,817 | 5,091 | 134,730,933 |
| மொத்த வெளிநாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள் | 134,657,025 | - | 12,156,003 | 497,027,592 | 20,395,156 | 664,235,776 |
| **உள்நாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள்** | | | | | | |
| வங்கிகள் மற்றும் நிதியியல் நிறுவனங்களின் வைப்புக்கள் | - | - | 319,922,749 | - | 183,434 | 320,106,183 |
| அரசு, அரச நிறுவனங்களின் வைப்புக்கள் | 348,681 | 37 | - | - | - | 348,718 |
| மீள்கொள்வனவு உடன்படிக்கையின் கீழ் விற்பனை செய்யப்பட்ட பிணையங்கள் | - | - | 16,741,679 | - | 11,569,542 | 28,311,221 |
| ஊழியர் நலத் திட்டங்களின் நிலுவைகள் | - | - | - | - | 18,333 | 18,333 |
| சுற்றோட்டத்திலுள்ள நாணயம் | - | 640,942,510 | - | - | - | 640,942,510 |
| ஏனைய செலுத்தத்தக்கவைகள் | 103,736 | - | 2,082,061 | - | 10,420,634 | 12,606,431 |
| மொத்த உள்நாட்டு நாணய நிதிப் பொறுப்புக்கள் | 452,417 | 640,942,547 | 338,746,489 | - | 22,191,943 | 1,002,333,396 |
| மொத்த நிதியியல் பொறுப்புக்கள் | 135,109,442 | 640,942,547 | 350,902,492 | 497,027,592 | 42,587,099 | 1,666,569,172 |
| ஏனைய பொறுப்புக்கள் | | | | | | |
| பிற்போடப்பட்ட கொடைகள் | - | - | - | - | 11 | 11 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| ஓய்வூதியம் மற்றும் ஏனைய தொழிலுக்குப் பின்னரான நலத் திட்டங்கள் | - | - | - | - | 12,016,804 | 12,016,804 |
| நானாவித பொறுப்புக்கள் மற்றும் அட்டுறுக்கள் | 2,562 | - | - | - | 83,383 | 85,945 |
| **மொத்த ஏனைய பொறுப்புக்கள்** | **2,562** | **-** | **-** | **-** | **12,100,198** | **12,102,760** |
| **மொத்தப் பொறுப்புக்கள்** | **135,112,004** | **640,942,547** | **350,902,492** | **497,027,592** | **54,687,297** | **1,678,671,932** |

| **49.2 2017 திசெம்பர் 31இல் உள்ளவாறு நிலுவைகள்** | இலங்கை அரசு ரூ.000 | இலங்கை பொதுமக்கள் ரூ.000 | இலங்கை வணிக வங்கிகள் ரூ.000 | பல்தேசிய நிதியியல் நிறுவனங்கள் ரூ.000 | ஏனையவை ரூ.000 | மொத்தம் ரூ.000 |
|---|---|---|---|---|---|---|
| **வெளிநாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள்** | | | | | | |
| வங்கிகள் மற்றும் நிதியியல் நிறுவனங்கள் | - | - | - | - | 8,239,544 | 8,239,544 |
| பெறுதி நிதியியல் சாதனங்கள் | - | - | 4,648,449 | - | - | 4,648,449 |
| ஆசிய தீர்ப்பனவு ஒன்றியம் | - | - | - | 90,981,712 | - | 90,981,712 |
| ப.நா.நிதியம் | - | - | - | 318,995,269 | - | 318,995,269 |
| ஏனையவை | 62,497,163 | - | 1,193,019 | 200,757 | 204,950 | 64,095,889 |
| **மொத்த வெளிநாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள்** | 62,497,163 | - | 1,193,019 | 200,757 | 204,950 | 64,095,889 |
| **உள்நாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள்** | | | | | | |
| வங்கிகள் மற்றும் நிதியியல் நிறுவனங்களின் வைப்புக்கள் | - | - | 341,707,391 | - | 4,807 | 341,712,198 |
| அரச, அரச நிறுவனங்களின் வைப்புக்கள் | 324,515 | 2 | - | - | - | 324,517 |
| மீள்கொள்வனவு உடன்படிக்கையின் கீழ் விற்பனை செய்யப்பட்ட பிணையங்கள் | - | - | 40,655,278 | - | - | 40,655,278 |
| ஊழியர் நலத் திட்டங்களின் நிலுவைகள் | - | - | - | - | 4,547 | 4,547 |
| சுற்றோட்டத்திலுள்ள நாணயம் | - | 598,053,901 | - | - | - | 598,053,901 |
| ஏனைய செலுத்தத்தக்கவைகள் | 45,734 | - | 2,306,897 | - | 6,534,525 | 8,887,156 |
| **மொத்த உள்நாட்டு நாணய நிதிப் பொறுப்புக்கள்** | 370,249 | 598,053,903 | 384,669,566 | - | 6,543,879 | 989,637,597 |
| **மொத்த நிதியியல் பொறுப்புக்கள்** | 370,249 | 598,053,903 | 384,669,566 | - | 6,543,879 | 989,637,597 |
| **ஏனைய பொறுப்புக்கள்** | 62,867,412 | 598,053,903 | 390,511,034 | 410,177,738 | 14,988,373 | 1,476,598,460 |
| பிற்போடப்பட்ட கொடைகள் | | | | | | |
| ஓய்வூதியம் மற்றும் ஏனைய தொழிலுக்குப் பின்னரான நன்மைகள் திட்டங்கள் | - | - | - | - | 45 | 45 |
| நானாவித பொறுப்புக்கள் மற்றும் அட்டுறுக்கள் | - | - | - | - | 671,061 | 671,061 |
| **மொத்த ஏனைய பொறுப்புக்கள்** | 82,328 | - | - | - | 129,392 | 211,720 |
| **மொத்தப் பொறுப்புக்கள்** | 82,328 | - | - | - | 800,498 | 882,826 |
| | 62,949,740 | 598,053,903 | 390,511,034 | 410,177,738 | 15,788,871 | 1,477,481,286 |

## 50. இடர்நேர்வு முகாமைத்துவம்

இலங்கை மத்திய வங்கியானது (இ.ம.வ) கொள்கைக் குறிக்கோள்களை பின்பற்றுவதில் நிதி மற்றும் நிதியல்லா இயல்புகளை உடைய பல்வேறுபட்ட இடர்களை எதிர்நோக்குகின்றது. இதில் எந்தவொரு இடர்நேர்வினதும் பொருண்மைத் தன்மையானது இ.ம.வ. நற்பெயர் மற்றும் நிதி நிலைமைகளில் பாரிய தாக்கத்தினை ஏற்படுத்தும் என்பதால் இ.ம.வ முறையாக வடிவமைக்கப்பட்ட இடர்முகாமைத்துவக் கட்டமைப்பு மிகவும முக்கியமானதாகும். இடர்முகாமைத்துவத்திற்கு ஒருங்கிணைந்த அணுகுமுறையின் தந்திரோபாய முக்கியத்துவத்தினை உணர்ந்து, தனிமைப்படுத்தலில் உள்ள இடரின் காரணமாக வழக்கமான முகாமைத்துவத்தில் இருந்து விடுபட்டு இ.ம.வங்கியானது 2015இல் தனியாக இடர்முகாமைத்துவ திணைக்களத்தினை (இ.மு.தி) உருவாக்கியது. அதன்படி, இ.ம.வ 2018 - 2020 ஆண்டிற்கு முக்கிய தந்திரோபாய முன்னுரிமையாக இடர்முகாமைத்துவத்தினை அடையாளப்படுத்தியதுடன் இ.ம.வங்கிக்கு நிறுவன அடிப்படையிலான இடர்முகாமைத்துவ கட்டமைப்பினை செயற்படுத்தும் செயற்பாட்டில் உள்ளது. இந்தக் கட்டமைப்பானது வங்கியின் எல்லா மட்டங்களிலும் இடர்ஏற்கும் பண்பினை ஊக்குவிக்கும் நோக்காகக் கொண்டது.

வங்கி எதிர்நோக்கிய நிதி மற்றும் நாணயச் சபை நிதியல்லா இடர்கள் இரண்டையும் இல்லாமல் செய்வதற்கான இடர்முகாமைத்துவ அமைப்பு மற்றும் இடர்ஆளுகை அமைப்பு ஆகிய இரண்டும் உள்ளடக்கிய இடர் ஆளுகை கட்டமைப்பானது 2018ஆம் ஆண்டு யூலையில் நாணயச் சபையினால் ஒப்புதளிக்கப்பட்டது.

இடர்ஆளுகை அமைப்பில் நாணயச் சபை மற்றும் சபை இடர் மேற்பார்வைக் குழு அத்துடன் நாணயச் சபை ஆலோசனை கணக்காய்வுக் குழு ஆகிய இரண்டு சபையின் உப குழுக்களும் உள்ளடங்கியுள்ளது. வங்கியின் ஒட்டுமொத்த இடர் முகாமைத்துவப் பணிகளில் இறுதிப் பொறுப்பாண்மையை நாணயச் சபை கொண்டிருக்கும் மற்றும் “மேல் தொணி” யாகவும் அமைக்கின்றது. மேலும் இ.ம.வங்கிக்கான இடர் அபாயத்தை மற்றும் இடர் சகிப்புத்தன்மை அளவினை அமைப்பதற்கும் மற்றும் இடர்முகாமைத்துவம்/ இணக்க கட்டமைப்பைப் அங்கீகரிப்பதற்கும் நாணயச் சபை பொறுப்புடையதாகும்.

2018ஆம் ஆண்டு ஓகத்தில் இடர்மேற்பார்வைக் குழு ஏற்படுத்தப்பட்டது. அதன் தலைவர் திரு.கிருஷாந்த பெரேரா, நாணயச் சபையின் சுயாதீன உறுப்பினர் மற்றும் வெளியக நிபுணர் குழு (திரு.ரவி அபேசூரிய, பணிப்பாளர் எச் என் பி அசூரன்ஸ் 2018.08.01 ஆம் திகதியிலிருந்து 2018.10.05 ஆம் திகதி வரை மற்றும் திரு. பிரியா பெர்னான்டோ, பிராண்டெக்ஸ் தலைவர் மற்றும் பொஸ்டன் கொண்ஸ்டல்டிங் குரூப் சிரேஷ்ட ஆலோசகர் 2018.10.05 ஆம் திகதியிலிருந்து)

நாணயச் சபையில் இருந்து ஒரு முறையான குழுவாக சபையின் இடர்மேற்பார்வை குழுவானது இ.ம.வங்கியினுடைய ஒட்டுமொத்த இடர்நேர்வு முகாமைத்துவம் மற்றும் இணங்குவித்தல் தொழிற்பாடுகளை மேற்பார்வையிடுகின்றது. மற்றும் வங்கியினுடைய இடர்நேர்வு முகாமைத்துவம்

மற்றும் இணங்குவித்தல் தொழிற்பாடு ஆகியவற்றிற்கான சபையின் தந்திரோபாயம் மற்றும் கொள்கைகளை அமைப்பதற்கான பொறுப்பும் காணப்படுகின்றது. இடர்மேற்பார்வைக் குழு மேலும், வங்கியில் இடர்நேர்வு முகாமைத்துவம் மற்றும் இணங்குவித்தல்களுக்கு ஒரு பிரத்தியேக கவனம் செலுத்துவதற்கு நாணயச் சபைக்கு உதவி புரிகின்றது.

இடர்நேர்வு முகாமைத்துவ அமைப்பு மூன்று மட்டப் பாதுகாப்பு மாதிரியைப் பின்பற்றி அமைக்கப்பட்டுள்ளது. இதில் முதல் மட்ட பாதுகாப்பில் செயற்பாட்டுத் திணைக்களம் இடர்களை அடையாளங் கண்டு மதிப்பிட்டு கட்டுப்படுத்தி குறைப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. மற்றும் இந்த செயற்பாடுகள் வங்கியின் குறிக்கோள்கள் மற்றும் இலக்குகளுடன் ஒத்துப்போவதனை உறுதிப்படுத்துவதற்கு உள்ளக கொள்கைகள் மற்றும் செயல்முறைகளை செயற்படுத்தல் வேண்டும் செயற்பாட்டு முகாமைத்துவத்தினால் நடைமுறைப்படுத்தப்படுகின்ற பயனுறுதி வாய்ந்த இடர்முகாமைத்துவ நடைமுறைகளை கண்காணிப்பதற்கு உதவுதல் மற்றும் இடர்ஆளுகை அமைப்பு, இடர்முகாமைத்துவம் ஆகியவற்றிற்கு இடையே ஒரு இணைப்பை உருவாக்கும் இடர்ஆளுகை அமைப்பிற்கு இடர் தொடர்பான பிரச்சனைகளை சுயாதீனமாக அறிக்கையிடுவதும் இடர்முகாமைத்துவ திணைக்களமாகும். இது இரண்டாவது மட்ட பாதுகாப்பு மாதிரியாகும். மூன்றாவது மட்டப் பாதுகாப்பில், குறிக்கோள்கள் கட்டுப்பாடு மற்றும் முதலாம், இரண்டாம் மட்டப் பாதுகாப்பு மாதிரியில் இடர்முகாமைத்துவத்தினால் அடையப்பட்டவை உள்ளடங்களாக உள்ளக கட்டுப்பாடுகள், இடர்முகாமைத்துவம் மற்றும் ஆளுகையின் செயல்திறன் ஆகியவற்றிற்கு உள்ளக கணக்காய்வு உத்தரவாதமளிக்கின்றது. இந்த மூன்று மட்டங்களும் வங்கியினுடைய இடர்ஆளுகை கட்டமைப்பில் தனித்துவமான பங்கை வகிக்கின்றது.

மூன்று மட்ட பாதுகாப்பு மாதிரியின் கீழ் எல்லாத் திணைக்களங்களினுடைய உடைய நிதியல்லா இடர்முகாமைத்துவத்திற்கு வசதியளிப்பற்கு மேலதிகமாக பன்னாட்டு அரசாங்கத்தின் முகவராண்மைச் செயற்பாடுகளான ஒதுக்குகளினுடைய உடைய நிதியியல் முகாமைத்துவ செயற்பாடுகள் இலங்கை மத்திய வங்கியின் உள்ளக நிதியம் மற்றும் அதனுடன் ஊழியர் சேம நிதியம் ஆகியவற்றின் இடர்நிதியியல் முகாமைத்துவத்திற்கும் இடர்முகாமைத்துவ திணைக்களம் பொறுப்பானதாகும். இந்த நிதியியல் முகாமைத்துவ நடவடிக்கைகளை மேற்பார்வையிடுவதற்கு முதலீட்டு மேற்பார்வைக் குழுவினை ஏற்படுத்தியதுடன் ஊழியர் சேம நிதியம் உள்ளக முதலீட்டு நிதியம் ஆகியவற்றிற்காக முதலீட்டு கொள்கை அறிக்கைகள் மற்றும் முதலீட்டு வழிகாட்டுதல்களையும் இடர்முகாமைத்துவ திணைக்களம் திருத்தியது. இடர்முகாமைத்துவ திணைக்களம் இந்த நிதியியல் முகாமைத்துவ செயற்பாடுகள் தொடர்பான சந்தை மற்றும் கொடுகடன் இடர்களை சுயாதீனமாக கண்காணிப்புடன் அதிலிருந்து வரக்கூடிய இடர்களை முகாமைத்துவத்திற்கு அறிக்கையிடுகின்றது. பன்னாட்டு ஒதுக்குகள் முகாமைத்துவ குழுவின் மாதாந்தக் கூட்டத்தில் சந்தை மற்றும் கொடுகடன் இடர்நேர்வு குறிகாட்டிகள் சமர்ப்பிக்கப்படுவதுடன் அங்கே பன்னாட்டு அபிவிருத்திகள் மற்றும் முதலீட்டு தந்திரோபயங்கள் மீதான இடர் முன்னறிவிப்புகளில் இருந்தான அவதானிப்புகள் குழுவிற்கு பரிமாற்றப்படும். உள்ளக முதலீட்டு நிதியம் மற்றும் ஊழியர் சேம நிதியம் ஆகியவற்றினுடைய முதலீட்டு மேற்பார்வை குழுவிற்கும் மாதாந்த அடிப்படையிலும் இதேபோன்ற கூட்டங்கள் கூட்டப்பட்டன. அங்கே அவற்றினுடைய முதலீடுகள் சம்பந்தமான இடர் மற்றும் இணங்குவித்தல் பிரச்சனைகள் பற்றி கலந்துரையாடப்பட்டது.

புதிய கட்டமைப்பிற்கிணங்க, இலங்கை மத்திய வங்கிக்குரிய இடர்முகாமைத்துவக் கொள்கை அறிக்கையொன்று தயாரிப்பதும் இலங்கை மத்திய வங்கி முழுவதும் இடர்முகாமைத்துவத்தினை அமுல்படுத்துவதற்கான கொள்கை உருவாக்குவதும் இடர்முகாமைத்துவ திணைக்களமானகும். இச்செயற்பாட்டில், இலங்கை மத்திய வங்கியானது இடர்களை முகாமை செய்வதற்காக ஏற்றுக்கொள்ளப்பட்ட நியமங்களையும் வழிகாட்டுதல்களையும் பின்பற்றுகின்றது. அதேநேரத்தில் தெளிவான பொறுப்புகளை உடைய பல்வேறுபட்ட பங்குபற்றுனர்களிடையே இடர்உரிமை மற்றும் முகாமைத்துவத்தை ஒதுக்குகின்றது.

இலங்கை மத்திய வங்கியை பாதிக்கக்கூடிய வங்கியல்லா இடர்களை வங்கி முழுவதற்கும் உயரத்தில் தீர்மானிப்பதற்கு இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபை மற்றும் முகாமைத்துவத்தினுடையே ஒரு கணக்கெடுப்பு நடாத்தப்பட்டது. இலங்கை மத்திய வங்கியின் இடர் வகைப்படுத்தல்களை உருவாக்குவதற்க இந்தக் கணக்கெடுப்புக்களை பயன்படுத்திக்கொள்ளலாம். இது இலங்கை மத்திய வங்கியை பாதிக்கும் நிதியல்லா இடர் வகைகளை வங்கி முழுமைக்கும் முன்னுரிமையளிக்க உதவுவதுடன் நிறுவனத்தினைப் பாதிக்கக்கூடிய முக்கிய இடர் வகைகளில் கவனம் செலுத்துவதற்கு முகாமைத்துவத்திற்கு இயலச்செய்யும்.

வங்கிக்குள் இடர் பண்பினை உருவாக்குவதற்கான முக்கியத்துவத்தினை அங்கீகரித்து இடர்நேர்வு முகாமைத்துவத் திணைக்கள ஊழியர் மற்றும் வெளியக வளவாளர்கள் ஆகியோரின் ஈடுபாட்டுடன் இலங்கை மத்திய வங்கியின் ஊழியர்களுக்கு ஆண்டுமுழுவதும் பல்வேறுபட்ட நிலைகளின் பல இடர் விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்களை இடர் முகாமைத்துவத் திணைக்களம் கொண்டு நடாத்தியது. தொழிற்பாட்டு இடர்நேர்வு முகாமைத்துவச் செயற்பாடுகளை வழிப்படுத்தும் நோக்குடன் இடர் முகாமைத்துவத் திணைக்களமானது உலக வங்கியில் தொழிற்பாட்டு இடர்நேர்வுக் குழுவின் தொழில்நுட்ப உதவியுடன் இலங்கை மத்திய வங்கியில் ஒரு இடர் முகாமைத்துவக் கட்டமைப்பை விருத்தி செய்வதுடன் இடர் ஆளுகையை அதிகரித்தது.

இலங்கை மத்திய வங்கியின் மீது குறிப்பிடத்தக்களவுத் தாக்கத்தினை ஏற்படுத்தும் வளர்ந்து வரும் இடர்களை உறுதிப்படுத்தவும் இலங்கை மத்திய வங்கி இடர் அபாயத்திற்கு அப்பால் எந்தவொரு இடரினை எடுக்கவும் உரிய நேரத்தில் அதிகரித்து அங்கீகரிக்கப்படுவதற்குமான சூழலை உருவாக்குவதற்கு இடர் முகாமைத்துவத் திணைக்களம் தொடர்ந்து முயற்சிக்கும்.

இடர் முகாமைத்துவ திணைக்களமானது செயற்பாட்டுத் திணைக்களங்களுடன் சேர்ந்தியங்கி இடர்நேர்வு பதிவேட்டினை உருவாக்க முயற்சி செய்தது. வங்கியின் எல்லா செயற்பாடுகளிலும் ஒரு சீரான முறையில் உறுதியாக இடர்களை அளவிடுவதற்கு இடர்நேர்வு பதிவேடு உதவிபுரியும், மேலும் இது சரியான நேரத்தில் மதிப்பீடுகளை மேற்கொள்ளுவதற்கு முகாமைத்துவத்திற்கு இடர்நேர்வு தொடர்பான தகவல்களை வழங்குவதோடு இடர்நேர்வினை இல்லாமற் செய்வதற்கான வழிமுறைகளையும் வழங்கும்.

இ.ம.வங்கிக்கு பாதிப்பினை ஏற்படுத்தும் இடர்நேர்வு சம்பவங்களைப் பற்றி அறிக்கையிடும் வசதிகளை இடர்முகாமைத்துவ திணைக்களமானது 2019ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் சம்பவங்களை அறிக்கையிடும் முறைமையினை நடைமுறைப்படுத்துவதோடு, அத்தகைய சம்பவங்களின் காரணங்களைக் குறித்து பொருத்தமான நடவடிக்கைகள் செயற்படுத்துவதனை உறுதிப்படுத்தும். இந்த அதே நேர சம்பவம் அறிக்கையிடும் முறைமையை அனைத்துமட்ட ஊழியர்களும் அணுககூடியதாகயிருக்கும். இது இடர்நேர்வு சம்பவங்களை மதிப்பீடு செய்வதற்கும் மற்றும் பகுப்பாய்வு செய்வதற்குமாக இ.ம.வங்கி இடர்நேர்வு நிகழ்வுகளை மத்திய வைப்பகத்தில் வைப்பதனை அபிவிருத்தி செய்வதற்கு வசதியளிக்கின்றது. அத்துடன் சரியான நடவடிக்கைகளை செயற்படுத்துவதன் முன்னேற்றத்தினை கண்காணித்தல், இடர்நேர்வினை குறைப்பதற்கான நடவடிக்கைகளை மேம்படுத்தல் மற்றும் பாதிக்கப்பட்ட பகுதிகளின் சாத்தியமான போக்குகளை அடையாளம் காணுதலுமாகும்.

நிதியியல் இடர்நேர்வு முகாமைத்துவத்துடன் இடர்முகாமைத்துவ திணைக்களமானது நிதி முகாமைத்துவ நடவடிக்கைகளின் இடர்நேர்வு முகாமைத்துவ கட்டமைப்பை மீதும் பலப்படுத்தும் மற்றும் இ.ம.வ முகாமை செய்கின்ற ஒவ்வொரு நிதிக்குமான முதலீட்டுக் கொள்கை மற்றும் வழிகாட்டுதல்களை மதிப்பாய்வு செய்யும். இ.ம.வங்கியின் எதிர் தரப்பினர், வழங்குநர்கள் மற்றும் கட்டுக்காப்பாளர்களை உள்ளடக்கும். இ.ம.வங்கியின் நிதி முகாமைத்துவ நடவடிக்கைகளின் கொடுகடன் இடர்நேர்வு முகாமைத்துவ கட்டமைப்பை மேம்படுத்துவதற்கும் கொடுகடன் இடர்நேர்வு கொள்கைகள் மற்றும் வழிகாட்டுதல்களை மீளாய்வு செய்வதில் இடர்முகாமைத்துவ திணைக்களம் கவனம் செலுத்தும் அதேநேரம் இடர்முகாமைத்துவ திணைக்களம் நடைமுறையில் உள்ள முதலீடுகள் தொடர்பான கொடுகடன் மற்றும் சந்தை இடர்நேர்வுகளை தொடர்ச்சியாக கண்காணிப்பதுடன் அவை நாணயச் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட தந்திரோபாய சொத்து ஒதுக்கீடு,

முதலீட்டுக் கொள்கை அறிக்கை மற்றும் முதலீட்டு வழிகாட்டுதல்களில் குறிப்பிடப்பட்ட கட்டுப்பாட்டிற்குள் இருப்பதனையும் உறுதிசெய்யும்.

### 50.1 கொடுகடன் இடர்நேர்வு

#### (அ) புவியியல் பிரதேசங்களுக்கேற்ப கொடுகடன் இடர்நேர்வுகளுக்குள்ளாகும் தன்மையின் திரட்சி

வங்கியின் ஆண்டின் இறுதியிலுள்ளவாறான குறிப்பிடத்தக்க கொடுகடன் இடர்நேர்வுகளுக்குள்ளாகும் தன்மையின் திரட்சி புவியியல் பிரதேசங்களுக்கேற்ப (நாணயக் கூறுக்குரிய நாட்டை அடிப்படையாகக் கொண்டு) பின்வருமாறு:

| | 2018 ரூபா 000 | 2017 ரூபா 000 |
|---|---|---|
| இலங்கை | **489,380,034** | 249,968,143 |
| ஐக்கிய அமெரிக்கா | **665,241,791** | 643,710,289 |
| யப்பான் | **95,625,902** | 18,253,104 |
| பிரித்தானியா | **9,869,079** | 28,946,605 |
| ஐரோப்பா | **118,939,171** | 94,190,661 |
| பல்தேசிய | **266,277,984** | 273,831,693 |
| ஏனையவை | **96,953,618** | 142,897,782 |
| மொத்த நிதியியல் சொத்துக்கள் | **1,742,287,579** | 1,451,798,277 |

#### (ஆ) நிறுவனங்களுக்கேற்ப கொடுகடன் இடர்நேர்வுகளுக்குள்ளாகும் தன்மையின் திரட்சி

வங்கியின் ஆண்டு இறுதியில் குறிப்பிடத்தக்க கொடுகடன் இடர்நேர்வுகளுக்குள்ளாகும் தன்மையின் திரட்சி நிறுவனங்களுக்கேற்ப வருமாறு:

| | 2018 ரூபா 000 | 2017 ரூபா 000 |
|---|---|---|
| அரசு | **1,340,399,127** | 958,345,205 |
| பல்தேசிய நிதியியல் நிறுவனங்கள் | **266,277,984** | 273,831,693 |
| வெளிநாட்டு வங்கிகளும் நிதியியல் நிறுவனங்களும் | **121,789,777** | 201,640,454 |
| இலங்கை வங்கிகளும் நிதியியல் நிறுவனங்களும் | **1,353,647** | 10,308,545 |
| ஏனையவை | **12,467,044** | 7,672,380 |
| மொத்த நிதியியல் சொத்துக்கள் | **1,742,287,579** | 1,451,798,277 |

#### (இ) கொடுகடன் தரமிடல் மூலம் கொடுகடன் இடர்நேர்வுகளுக்குள்ளாகும் தன்மை

பின்வரும் அட்டவணை ஸ்டான்டர்ட் அன்ட் புவர்ஸ் மற்றும் பிச் றேட்டிங்ஸ் கொடுகடன் தரமிடல்களின் அடிப்படையில் குறிப்பிட்ட நிதிச் சொத்துக்களின் அல்லது வெளியிடுபவர்களின் கொடுகடன் தரமிடல்களை காட்டுகின்றது. ஸ்டான்டர்ட் அன்ட் புவர்ஸ் தரமிடல்களுக்கும் பிச் றேட்டிங்ஸ் தரமிடல்களுக்கும் ஏற்ப AAA குறியீடுகள் அதியுயர் கொடுகடன் தரத்தினைக் கொண்ட தரமிடுதல்களையும் மிகக் குறைந்த கொடுகடன் இடர்நேர்வு எதிர்பார்ப்பினையும் காட்டுகின்றது. நிதிக் கடப்பாடுகளை உரிய நேரத்தில் கொடுப்பனவு செய்யக்கூடிய சிறப்பான பலம் பொருந்திய நிலை உள்ளதென்பதை இது காட்டுகிறது. AA குறியீட்டின் மூலம் உயர் தரமிடுதல் காட்டப்படுவதோடு மிகக் குறைந்த கொடுகடன் இடர்நேர்வு எதிர்பார்ப்பினைக் காட்டுகின்றது. A குறியீட்டின் மூலம் உயர் மத்திய தரம் காட்டப்படுவதோடு குறைந்த கொடுகடன் இடர்நேர்வு எதிர்பார்ப்பினைக் காட்டுகிறது. BBB குறியீட்டின் மூலம் கீழ்மட்ட முதலீட்டுத் தரமிடுதலும் கொடுகடன் இடர்நேர்வு தொடர்பில் நடைமுறையில் குறைந்த எதிர்பார்ப்பு உள்ளதென்பதும் காட்டப்படுவதோடு, பாதுகாப்பு அளவீடுகளின் தேவையை வலியுறுத்துகிறது. AAA குறியீட்டுக்குக் குறைவான தரங்களை பிரதானமான வகைகளுக்கு இடையிலுள்ள நிலைகளைக் காட்டும் பொருட்டு + அல்லது - அடையாளத்தின் மூலம் வகைப்படுத்திக் காட்டலாம். NR குறியீட்டின் மூலம் நிறுவனம், ஸ்டான்டர்ட் அன்ட் புவர்ஸ், பிச் றேட்டிங்ஸ் மற்றும் மூடிஸ் தரமிடலுக்கு உள்ளாக்கப்படவில்லையென்பது காட்டப்பட்டுள்ளது.

| கொடுகடன் தரமிடல் மூலம் கொடுகடன் இடர்நேர்வுக்குள்ளாகும் தன்மை | கொடுகடன் தரமிடல் | 2018 ரூபா 000 | % | 2017 ரூபா 000 | % |
|---|---|---|---|---|---|
| காசு மற்றும் காசுக்குச் சமமானவை | | | | | |
| பெடரல் ரிசர்வ் வங்கி - ஐ.அமெரிக்கா/ ரிசர்வ் வங்கி - அவுஸ்திரேலியா/ பன்னாட்டுத் தீர்ப்பனவுக்கான வங்கி/ யப்பான் வங்கி/ டியூச் புண்டெஸ் வங்கி/ இங்கிலாந்து வங்கி/ சுவேரிஸ் ரிக்ஸ் வங்கி/ கனடா வங்கி/ நியூசிலாந்து ரிசர்வ் வங்கி | | **327,240,508** | **18.78%** | 310,350,210 | 21.38% |
| | AAA | **-** | **0.00%** | 50,158,566 | 3.45% |
| | AA | **79,844** | **0.00%** | 772,746 | 0.05% |
| | AA- | **15,894,101** | **0.91%** | 81,500,623 | 5.61% |
| | A+ | **28,154,296** | **1.62%** | 3,032,823 | 0.21% |
| | A | **544,841** | **0.03%** | 13,741,004 | 0.95% |
| | A- | **51,131** | **0.00%** | 84,841 | 0.01% |
| | BBB- | **1,572** | **0.00%** | 1,505 | 0.00% |
| | NR | **208,883** | **0.01%** | 185,323 | 0.01% |
| | | **372,175,176** | **21.36%** | 459,827,641 | 31.67% |
| ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தினூடான சீர்மதிப்புப் பெறுமதி / விற்பனைக்குக் கிடைக்கத்தக்கதாகவுள்ள பிணையங்கள் | | | | | |
| | AAA | **137,844,494** | **7.91%** | 62,060,643 | 4.27% |
| | AA+ | **508,501,483** | **29.19%** | 464,672,544 | 32.01% |
| | AA | **3,892,615** | **0.22%** | 1,862,308 | 0.13% |
| | AA- | **26,115,880** | **1.50%** | 13,360,972 | 0.92% |
| | A+ | **13,325,830** | **0.76%** | 21,867,283 | 1.51% |
| | A | **196,616** | **0.01%** | 298,956 | 0.02% |
| | BBB+ | **134,539** | **0.01%** | - | 0.00% |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | NR | 4,864,937 | 0.28% | 2,106,229 | 0.15% |
| | | 694,876,394 | 39.80% | 566,228,935 | 39.00% |
| இலாப நட்டங்களினூடான சீர்மதிப்பு பெறுமதியில் பிணையங்கள் | AAA | 26,605,392 | 1.53% | 23,517,574 | 1.62% |
| | AA+ | 2,335,172 | 0.13% | 1,393,767 | 0.10% |
| | AA | 4,861,898 | 0.28% | 3,593,798 | 0.25% |
| | AA- | 1,385,016 | 0.08% | 1,174,551 | 0.08% |
| | A+ | 367,606 | 0.02% | 309,062 | 0.02% |
| | A | - | 0.00% | 15,275,623 | 1.05% |
| | A- | (596,292) | -0.03% | - | 0.00% |
| | BBB+ | 671,554 | 0.04% | - | 0.00% |
| | NR | 1,836,893 | 0.11% | - | 0.00% |
| | | 37,467,239 | 2.15% | 45,264,376 | 3.12% |
| பெறுதி நிதியியல் சாதனங்கள் | | | | | |
| உள்நாட்டில் தரமிடப்பட்டவை | AAA | - | 0.00% | 979,560 | 0.07% |
| | AA | - | 0.00% | 2,749,069 | 0.19% |
| | AA- | 750 | 0.00% | 481,327 | 0.03% |
| | A+ | - | 0.00% | 66,030 | 0.00% |
| | A | - | 0.00% | 64,099 | 0.00% |
| | A- | - | 0.00% | 387,706 | 0.03% |
| | B | - | 0.00% | 24,265 | 0.00% |
| | NR | - | 0.00% | 188,399 | 0.01% |
| ப.நா.நி தொடர்பான சொத்துக்கள் | | 750 | 0.00% | 4,940,455 | 0.33% |
| | | 147,427,452 | 8.46% | 126,842,946 | 8.74% |
| | | 147,427,452 | 8.46% | 126,842,946 | 8.74% |
| ஏனைய பெறத்தக்கவைகள் | AA+ | - | 0.00% | 3,072,381 | 0.21% |
| | NR | 961,284 | 0.06% | - | 0.00% |
| உள்நாட்டில் தரமிடப்பட்டவை | NR | - | 0.00% | 593,319 | 0.04% |
| | | 961,284 | 0.06% | 3,665,700 | 0.25% |
| மொத்த வெளிநாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள் | | 1,252,908,295 | 71.91% | 1,206,770,053 | 83.12% |

| உள்நாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள் | கொடுகடன் தரமிடல் | 2018 ரூபா 000 | % | 2017 ரூபா 000 | % |
|---|---|---|---|---|---|
| இலங்கை அரச பிணையங்கள் | B+ | - | 0.00% | 9,704,962 | 0.67% |
| | B | 45,031,157 | 2.58% | - | 0.00% |
| மீள்விற்பனை ஒப்பந்தத்தின் கீழ் வாங்கப்பட்ட பிணையங்கள் | B+ | - | 0.00% | 22,375,124 | 1.54% |
| | B | 229,454,409 | 13.17% | - | 0.00% |
| அரசிற்கான தற்காலிக முற்பணங்கள் | B+ | - | 0.00% | 199,800,871 | 13.76% |
| | B | 198,632,571 | 11.40% | - | 0.00% |
| வங்கிகளுக்கான கடன்கள் | AA+ | 39,448 | 0.00% | 96,025 | 0.01% |
| | AA | - | 0.00% | 2,056 | 0.00% |
| | AA- | 1,233 | 0.00% | 2,493 | 0.00% |
| | A+ | 6,904 | 0.00% | 8,218 | 0.00% |
| | A- | 2,816 | 0.00% | 14,624 | 0.00% |
| | BBB | - | 0.00% | 1,449 | 0.00% |
| | BBB- | 523 | 0.00% | - | 0.00% |
| | BB+ | 17,704 | 0.00% | 39,692 | 0.00% |
| | B | - | 0.00% | 2,140 | 0.00% |
| | NR | 27,335 | 0.00% | 57,006 | 0.00% |
| நிதியியல் மற்றும் ஏனைய நிறுவனங்களிலான உரிமை முதலீடுகள் | NR | 1,381,879 | 0.08% | 41,095 | 0.00% |
| ஏனைய சொத்துக்கள் | AAA | 198,899 | 0.01% | 135,457 | 0.01% |
| | AA+ | 996,102 | 0.06% | 919,142 | 0.06% |
| | AA | 55,313 | 0.00% | - | 0.00% |
| | A | 6,620 | 0.00% | 6,746 | 0.00% |
| | B+ | - | 0.00% | 5,443,809 | 0.37% |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | B | 6,458,108 | 0.37% | - | 0.00% |
| | NR | 7,068,263 | 0.41% | 6,377,316 | 0.44% |
| மொத்த உள்நாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள் | | 489,379,284 | 28.09% | 245,028,224 | 16.88% |
| மொத்த நிதியியல் சொத்துக்கள் | | 1,742,287,579 | 100.00% | 1,451,798,277 | 100.00% |
| (ஈ) பிரதானமான கொடுகடன் வகைப்படுத்தலின்படி சாராம்சம் வெளிநாட்டு நாணய நிதிச் சொத்துக்கள் | | | | | |
| பெடரல் ரிசேர்வ் வங்கி - ஐ.அமெரிக்கா/ரிசேர்வ் வங்கி - அவுஸ்திரேலியா/ பன்னாட்டுத் தீர்ப்பனவுக்கான வங்கி/யப்பான் வங்கி/ டியூச் புண்டெஸ் வங்கி/ இங்கிலாந்து வங்கி/ சுவேரிஸ் ரிக்ஸ் வங்கி/ கனடா வங்கி/ நியூசிலாந்து நிசேர்வ் வங்கி | | 327,240,508 | 18.78% | 310,350,210 | 21.38% |
| ப.நா. நிதியம் தொடர்பான சொத்துக்கள் | | 147,427,452 | 8.46% | 126,838,152 | 8.74% |
| | AAA | 164,449,886 | 9.44% | 135,741,577 | 9.35% |
| | AA+/- | 563,066,009 | 32.32% | 571,403,690 | 39.36% |
| | A+/- | 42,044,028 | 2.41% | 54,609,592 | 3.76% |
| | BBB+/- | 807,665 | 0.05% | 1,505 | 0.00% |
| | NR | 7,871,997 | 0.45% | 2,291,553 | 0.16% |
| உள்நாட்டு ரீதியாக தரமிடப்பட்டவை | AAA | - | 0.00% | 979,560 | 0.07% |
| | AA | - | 0.00% | 2,749,069 | 0.19% |
| | AA- | 750 | 0.00% | 481,327 | 0.03% |
| | A+/- | - | 0.00% | 517,835 | 0.04% |
| | B | - | 0.00% | 24,265 | 0.00% |
| | NR | - | 0.00% | 781,718 | 0.05% |
| மொத்த வெளிநாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள் | | 1,252,908,295 | 71.91% | 1,206,770,053 | 83.12% |
| உள்நாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள் | AAA | 198,899 | 0.01% | 135,457 | 0.01% |
| | AA+ | 1,035,550 | 0.06% | 1,015,167 | 0.07% |
| | AA | 55,313 | 0.00% | 2,056 | 0.00% |
| | AA- | 1,233 | 0.00% | 2,493 | 0.00% |
| | A+ | 6,904 | 0.00% | 8,218 | 0.00% |
| | A | 6,620 | 0.00% | 6,746 | 0.00% |
| | A- | 2,816 | 0.00% | 14,624 | 0.00% |
| | BBB | - | 0.00% | 1,449 | 0.00% |
| | BBB- | 523 | 0.00% | - | 0.00% |
| | BB+ | 17,704 | 0.00% | 39,692 | 0.00% |
| | B+ | - | 0.00% | 237,324,767 | 16.35% |
| | B | 479,576,245 | 27.53% | 2,140 | 0.00% |
| | NR | 8,477,477 | 0.49% | 6,475,417 | 0.45% |
| மொத்த உள்நாட்டு நாணய நிதிச் சொத்துக்கள் | | 489,379,284 | 28.09% | 245,028,224 | 16.88% |
| மொத்த நிதிச் சொத்துக்கள் | | 1,742,287,579 | 100.00% | 1,451,798,277 | 100.00% |

### 50.2 வட்டி வீத இடர்நேர்வு

#### (அ) வெளிநாட்டு நாணய வட்டி வீதக் கூருணர்திறன்

**வட்டி வீத இடர்நேர்வு என்பது வட்டி வீதங்களில் ஏற்படும் மாற்றங்களிலிருந்து எழுகின்ற நட்டங்களின் இடர்நேர்வாகும்.**

ஒதுக்கு ஆலோசனை மற்றும் முகாமைத்துவ நிகழ்ச்சித் திட்டம் தவிர்ந்த நிலையான வருமானப் பிணையங்கள் பட்டியலின் வட்டி வீத கூருணர் திறனானது, வட்டி வீதம் 10 அடிப்படைப்புள்ளிகளினால் அதிகரிப்பதன் காரணமாக உருவாகக் கூடிய இழப்புக்களின் அடிப்படையில் அளவிடப்படுவதுடன் ஒதுக்கு ஆலோசனை மற்றும் முகாமைத்துவ நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் நிலையான வருமானப் பிணையங்கள் பட்டியலின் வட்டி வீத கூருணர் திறனானது, வட்டி வீதம் 1 அடிப்படைப்புள்ளிகளினால் அதிகரிப்பதன் காரணமாக உருவாகக் கூடிய இழப்புக்களின் அடிப்படையில் அளவிடப்படுவதோடு கீழே தரப்பட்டுள்ள நிலையான வருமானப் பிணையங்கள் பட்டியல் கூறுகளைப் பயன்படுத்தி வங்கியானது இடர்நேர்வுக் கூருணர்திறனை அளவிடுகின்றது:

| பட்டியல் பிரிவு | நிகழக்கூடிய இழப்பு (ஐ.அ.டொ. மில்.) 2018 | 2017 |
|---|---|---|
| ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தினூடான சீமதிப்புப் பெறுமதி/ விற்பனைக்குக் கிடைக்கத்தக்கதாகவுள்ளவை | **7.86** | 7.55 |
| ஒதுக்கு ஆலோசனை மற்றும் முகாமைத்துவ நிகழ்ச்சித் திட்டம் | **0.03** | 0.03 |

பின்வரும் உபாய முறைகளைப் பயன்படுத்தி இடர் முகாமைத்துவத் திணைக்களம் வெளிநாட்டுச் சொத்துக்கள் பட்டியலின் வட்டி வீத இடர்நேர்வினை முகாமை செய்கின்றது.

(i) வெளிநாட்டுச் சொத்துப்பட்டியல் மீதான வட்டி வீத மாற்றங்களின் தாக்கத்தினை வட்டி வீத கூருணர்திறன் அளவிடுகின்ற அதேவேளை, வட்டி வீதத்தினையும் அதேநேரம் முதலீட்டுக் காலவரையறையையும் கவனத்திலெடுக்கின்றதான மாற்றப்பட்ட காலவரையறையை வட்டி வீத இடர்நேர்வினை அளவிடுவதற்காக

வங்கி பயன்படுத்துகின்றது. மாற்றப்பட்ட காலவரையறையானது வழங்கப்பட்டுள்ள வட்டி வீதத்திலான மாற்றத்திற்கான (விளைவு) பிணையங்களின் விலையிலான மாற்றத்தை அளவிடுகின்றது. உயர்ந்தளவு மாற்றப்பட்ட காலவரையறையானது உயர்ந்தளவு இடர்நேர்வினைக் குறிக்கின்றது. ஆதலால் வங்கியானது நிதிச் சந்தையிலான அபிவிருத்தி, சொத்துப் பட்டியலின் பண்புகள் மற்றும் வங்கியின் இடர்நேர்வு விருப்பினைக் கவனத்திற் கொண்டு காலத்திற்குக் காலம் பொருத்தமான மாற்றப்பட்ட காலவரையறையை விதிக்கின்றது. வெளிநாட்டுச் சொத்துக்கள் பட்டியலின் மாற்றப்பட்ட காலவரையறை பின்வரும் அட்டவணையில் தரப்பட்டுள்ளது.

மாற்றப்பட்ட காலவரையறை

| முதலீட்டுப் பிரிவு | மாற்றப்பட்ட காலவரையறை | |
|---|---|---|
| | 2018 | 2017 |
| மூலதனச் சந்தை (நிலையான வருமானப் பிணையங்கள்) | **2.08** | 2.02 |
| ஒதுக்கு ஆலோசனை மற்றும் முகாமைத்துவ நிகழ்ச்சித் திட்டம் | **1.41** | 1.39 |

(ii) மாற்றப்பட்ட காலவரையானது விலையிலான அதிகளவு மாற்றத்தினைக் கணிப்பிடாததால், வெளிநாட்டு ஒதுக்குப் பட்டியலின் வட்டி வீத இடர்நேர்வு முகாமைத்துவத்தின் பொருட்டு புறக்குவிவான அளவீடொன்று பயன்படுத்தப்படுகின்றது. காலவரையறையை குறிக்கும் நேர்கோட்டிலிருந்து முறி விலை விளைவு வளையின் வேறுபாட்டினை புறக்குவிவு அளவிடுகின்றது. முறி விலையின் மாற்றத்திற்கான சராசரிக் காலவரையறையின் மேம்பாட்டினை இது அனுமதிக்கின்றது. புறக்குவிவு என்பது விளைவு வீத மாற்றத்திற்கான காலப்பகுதி மாற்றமாகும். இது மாற்றப்பட்ட காலப்பகுதிக்கான ஊகத் தவறுகளை அளவிடுகின்றது. மறுசொல்லில் விளக்குவதாயின் இது, இதன் பிணைய விலைகளினால் வகுக்கப்பட்ட விளைவு தொடர்பான பிணைய விலைகளின் இரண்டாவது பெறுதியாகும்.

**கூறாக்கப்பட்ட நிலையான வருமானப் பிணையங்கள் பட்டியலின் புறக்குவிவு**

| பட்டியல் பிரிவு | எதிர்பார்க்கப்படும் நட்டம் (ஐ.அ.டொ. மில்.) | |
|---|---|---|
| | 2018 | 2017 |
| ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தினூடான சீர்மதிப்புப் பெறுமதி/ விற்பனைக்குக் கிடைக்கத்தக்கதாகவுள்ளவை | **0.07** | 0.07 |
| ஒதுக்கு ஆலோசனை மற்றும் முகாமைத்துவ நிகழ்ச்சித் திட்டம் | **0.04** | 0.04 |

(iii) **இடர்நேர்வேற்புப் பெறுமதி**

இடர்நேர்வேற்புப் பெறுமதியானது நிதியியல் சந்தை அசைவுகளிலிருந்தான சாதாரண சந்தை நிலைமைகளின் கீழ் சொத்துப்பட்டியலின் கீழ் நோக்கிய இடர்நேர்வை தனி இலக்கத்தில் சுருக்குகின்றது. எனவே, இடர்நேர்வேற்புப் பெறுமதியானது, இலக்கிடப்பட்ட அசைவு மீதான உயர்ந்தபட்ச இழப்பாக இருப்பதனால், உண்மையான இழப்பு அதிகமாக இருப்பதற்குரிய முற்குறிப்பிடப்பட்ட நிகழ்தகவு குறைவாகும். இடர்நேர்வேற்புப் பெறுமதியானது, இடர்நேர்வுகள் மற்றும் நிலைமைகளுக்கிடையில் கூட்டக்கூடிய, பணத்தின் நியதிகளிலான ஒரு இலக்கத்தை எமக்குத் தருகின்றது. வங்கியானது ஒதுக்கு ஆலோசனை மற்றும் முகாமைத்துவ நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் முதலீடு செய்யப்பட்டவை தவிர்ந்த நிலையான வருமான பிணையங்கள் பட்டியலிற்கு இடர்நேர்வேற்புப் பெறுமதியைக் கணிப்பதற்கு 99 சதவீத நம்பக இடைவெளியில் 10 நாட்களுக்கான மென்டே கார்லோ முறைமையைப் பயன்படுத்துகின்றது. ஒதுக்கு ஆலோசனை மற்றும் முகாமைத்துவ நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் முதலீடு செய்யப்பட்டவை நிலையான வருமான பிணையங்கள் பட்டியலிற்கு இடர்நேர்வேற்புப் பெறுமதியைக் கணிப்பதற்கு 99 சதவீத நம்பக இடைவெளியில் ஒரு மாதகால மென்டே கார்லோ முறைமையைப் பயன்படுத்துகின்றது.

| பட்டியல் பிரிவு | இடர்நேர்வேற்புப் பெறுமதி (ஐ.அ.டொ. மில்.) | |
|---|---|---|
| | 2018 | 2017 |
| ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தினூடான சீர்மதிப்புப் பெறுமதி/ விற்பனைக்குக் கிடைக்கத்தக்கதாகவுள்ளவை | **19.94** | 22.98 |
| ஒதுக்கு ஆலோசனை மற்றும் முகாமைத்துவ நிகழ்ச்சித் திட்டம் | **0.78** | 0.64 |

(iv) **வர்த்தகப்படுத்தல் மற்றும் திறந்த நிலைமை வரையறைகள்**

தனிப்பட்ட வணிகர்களுக்காக "வணிகப்படுத்தல் அதிகாரம்" என்ற முறை மூலம் வங்கியானது ஒரு நாளுக்குள்ளேயான மற்றும் ஓரிரவு நிலை வரையறை மீது குறிப்பிட்ட வணிக வரையறைகளை வழங்கியுள்ளது.

ஒதுக்கு ஆலோசனை மற்றும் முகாமைத்துவ நிகழ்ச்சித் திட்டத்தில் செய்யப்பட்ட முதலீடுகளுடன் தொடர்பான வட்டி வீத இடர்நேர்வு அளவீடுகளாவை கிரமமான முறையில் வெளிநாட்டு ஒதுக்கு முகாமைத்துக் குழுவிற்கு அறிக்கையிடப்படுகின்றன.

**(ஆ) உள்நாட்டு நாணய வட்டி வீத கூருணர்திறன்**

உள்நாட்டுத் திறைசேரி உண்டியல்கள் ப.நி.அ.நி கீழ் வியாபார மாதிரி மதிப்பீடாக ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தினூடான சீர்மதிப்புப் பெறுமதியில் இ.ம. வங்கியின் நிதி நிலைமை பற்றிய கூற்றில் கடன்தீர் செலவில் பதிவு செய்யப்படுகின்றன. வட்டி வருமானமொன்றை ஈட்டும் நோக்கத்துடன் வங்கி திறைசேரி உண்டியல்களைக் கொள்வனவு செய்யாததால் இந்தப் பட்டியல் ஒரு முதலீட்டுப்பட்டியல் அல்ல. பொருளாதார மற்றும் விலை உறுதிப்பாட்டைப் பேணுதல் என்னும் அதன் மையக் கருப்பொருட்கள் தொடர்பாக நாணயத் தொழிற்பாட்டுக் கொள்கைகளை மேற்கொள்கையில் திரவத்தன்மையை உள்நாட்டுச் சந்தையில் ஏற்படுத்துவதற்காக அல்லது திரவத்தன்மையை உள்நாட்டுச் சந்தையிலிருந்து உள்ளீர்ப்பதற்காக வங்கி திறைசேரி உண்டியல்களை கொள்வனவு செய்கின்றது அல்லது விற்பனை செய்கின்றது. ஆதலால், வங்கியின் பட்டியலிலுள்ள திறைசேரி உண்டியல்கள் அதன் நாணயச் கொள்கைத் தொழிற்பாடுகளினால் நிர்ணயிக்கப்படுகின்றன. அத்துடன், பணச் சந்தையில் மீள்கொள்வனவு வீதம் மற்றும் நேர்மாற்று மீள்கொள்வனவு வீதம் ஆகியவை வங்கியின் நாணயக் கொள்கையை நடைமுறைப்படுத்தும் போது அதனால் நிர்ணயிக்கப்படும் கொள்கை வீதங்களாகும். மேலும், சந்தையிலிருந்து ரூபாய் திரவத்தன்மையை ஏற்படுத்துவதில் அல்லது திரவத்தன்மையை உள்ளீர்ப்பதில் வங்கியின் நடவடிக்கைகள் பொதுவான ரூபாய் சந்தை வட்டி வீதங்களில் கணிசமான தாக்கத்தைக் கொண்டுள்ளன. இதன்படி, வங்கியின் திறைசேரி உண்டியல்களின் பட்டியலில் இருந்தும் அவ்வாறே வட்டி வீதங்களின் மாற்றங்களிலிருந்தும் எழுகின்ற திறைசேரி உண்டியல் பட்டியலிலிருந்து ஈட்டப்படும் வட்டி வருமானத்தின் மாற்றங்கள் வங்கியின் நாணயக் கொள்கை நடவடிக்கைகளின் விளைவாக உருவாவதேயன்றி முதலீட்டுத் தீர்மானங்கள் காரணமாக அல்ல. எனவே, வங்கியானது உள்நாட்டு நாணயச் சொத்துக்களிலிருந்து உருவாகின்ற வட்டி வீதக் கூருணர்திறனைக் கவனத்திற் கொள்வதில்லை.மாற்றங்கள் வங்கியின் நாணயக் கொள்கை நடவடிக்கைகளின் விளைவாக உருவாவதேயன்றி முதலீட்டுத் தீர்மானங்கள் காரணமாக அல்ல. எனவே, வங்கியானது உள்நாட்டு நாணயச் சொத்துக்களிலிருந்து உருவாகின்ற வட்டி வீதக் கூருணர்திறனைக் கவனத்திற் கொள்வதில்லை.

(இ) சொத்துக்களும் பொறுப்புக்களும் பின்வரும் கால கட்டத்தினுள் முதிர்ச்சியடையும் அல்லது மீள் விலையிடப்படும்

| வெளிநாட்டு நாணய வட்டி வீத கூருணர்திறன் வீச்சிடை | நிறை யேற்றிய சராசரி வட்டி வீதம் % | 2018 மொத்தம் ரூ.000 | 6 மாதமும் அதற்குக் குறைவான ரூ.000 | 6 - 12 மாதங்கள் ரூ.000 | 1 - 2 ஆண்டுகள் ரூ.000 | 2 - 5 ஆண்டுகள் ரூ.000 | 5 ஆண்டுகளுக்கு மேல் ரூ.000 |
|---|---|---|---|---|---|---|---|
| **வட்டி கூருணர்திறன் வெளிநாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள்** | | | | | | | |
| காசும் காசுக்குச் சமமானவையும் | 1.9645 | 372,175,176 | 372,175,176 | - | - | - | - |
| இலாபம் அல்லது நட்டத்தினூடாக சீர்மதிப்புப் பெறுமதியில் பிணையங்கள் மற்றும் ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தினூடான சீர்மதிப்புப் பெறுமதி | 2.4936 | 732,343,633 | 121,625,585 | 51,601,808 | 223,725,010 | 329,351,259 | 329,351,259 |
| ப.நா.நி. தொடர்பான சொத்துக்கள் | 1.0991 | 12,348,975 | 12,348,975 | - | - | - | - |
| **மொத்த வட்டி கூருணர்திறன் வெளிநாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள்** | | 1,116,867,784 | 506,149,736 | 51,601,808 | 223,725,010 | 329,351,259 | 329,351,259 |
| **வட்டி கூருணரற்ற வெளிநாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள்** | | | | | | | |
| ப.நா.நி. தொடர்பான சொத்துக்கள் | | 135,078,477 | 9,667 | - | - | 199,961 | 134,868,849 |
| பெறுதி நிதியியல் சாதனங்கள் | | 750 | 750 | - | - | - | - |
| ஏனைய பெறத்தக்கவை | | 961,284 | 961,284 | - | - | - | - |
| மொத்த வட்டி கூருணரற்ற வெளிநாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள் | | 136,040,511 | 971,701 | - | - | 199,961 | 134,868,849 |
| **மொத்த வெளிநாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள்** | | 1,252,908,295 | 507,121,437 | 51,601,808 | 223,725,010 | 329,551,220 | 464,220,108 |
| **வட்டி கூருணர்திறன் வெளிநாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள்** | | | | | | | |
| ப.நா.நி. | 2.1080 | 181,318,765 | - | - | - | 99,568,098 | 81,750,667 |
| ஆசிய தீர்ப்பனவு ஒன்றியம் | 2.2345 | 79,158,977 | 79,158,977 | - | - | - | - |
| **மொத்த வட்டி கூருணர்திறன் வெளிநாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள்** | | 260,477,742 | 79,158,977 | - | - | 99,568,098 | 81,750,667 |
| **வட்டி கூருணரற்ற வெளிநாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள்** | | | | | | | |
| வங்கிகளும், ஏனைய நிதியியல் நிறுவனங்களும் | | 19,301,160 | 19,301,160 | - | - | - | - |
| பெறுதி நிதியியல் சாதனங்கள் | | 14,056,460 | 11,736,595 | 1,853,550 | - | 466,315 | - |
| ப.நா.நிதியம் | | 235,669,481 | - | - | - | - | 235,669,481 |
| ஏனைய வெளிநாட்டு பொறுப்புக்கள் | | 134,730,933 | 134,730,933 | - | - | - | - |
| **மொத்த வட்டி கூருணரற்ற வெளிநாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள்** | | 403,758,034 | 165,768,688 | 1,853,550 | - | 466,315 | 235,669,481 |
| **மொத்த வெளிநாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள்** | | 664,235,776 | 244,927,665 | 1,853,550 | - | 100,034,413 | 317,420,148 |
| **வெளிநாட்டு நாணய வட்டி வீத கூருணர்திறன் வீச்சிடை** | | 856,390,042 | 426,990,759 | 51,601,808 | 223,725,010 | 229,783,161 | (75,710,696) |

| வட்டி கூருணர்திறன் உள்நாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள் | நிறை யேற்றிய சராசரி வட்டி வீதம் % | 2018 மொத்தம் ரூ.000 | 6 மாதமும் அதற்குக் குறைவான ரூ.000 | 6 - 12 மாதங்கள் ரூ.000 | 1 - 2 ஆண்டுகள் ரூ.000 | 2 - 5 ஆண்டுகள் ரூ.000 | 5 ஆண்டுகளுக்கு மேல் ரூ.000 |
|---|---|---|---|---|---|---|---|
| இலங்கை அரச பிணையங்கள் | 12.8451 | 45,031,157 | 43,443,802 | 407,078 | - | 886,336 | 293,941 |
| திறைசேரி உண்டியல் மற்றும் முறி நேர்மாற்று மீள்கொள்வனவு | 8.9950 | 229,454,409 | 229,454,409 | - | - | - | - |
| வங்கிகளுக்கான கடன்கள் | 7.7395 | 95,963 | 65,057 | 16,347 | 3,571 | 9,499 | 1,489 |
| ஏனைய சொத்துக்கள் - அலுவலர் கடன்கள் | 4.2160 | 6,846,041 | 269,780 | 275,058 | 563,545 | 1,810,962 | 3,926,696 |
| - ஏனையவைகள் | 9.7553 | 7,792,394 | 470,308 | 1,012,421 | 1,417,860 | 1,105,413 | 3,786,392 |
| **மொத்த வட்டி கூருணர்திறன் உள்நாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள்** | | 289,219,964 | 273,703,356 | 1,710,904 | 1,984,976 | 3,812,210 | 8,008,518 |
| **வட்டி கூருணரற்ற உள்நாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள்** | | | | | | | |
| அரசுக்கான தற்காலிக முற்பணங்கள் | | 198,632,571 | 198,632,571 | - | - | - | - |
| ஏனைய சொத்துக்கள் - ஏனையவைகள் | | 144,870 | 144,870 | - | - | - | - |
| உரிமை மூலதன பிணையங்களிலான முதலீடுகள் - ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தினூடான சீர்மதிப்புப் பெறுமதி | | 1,381,879 | - | - | - | - | 1,381,879 |
| **மொத்த வட்டி கூருணரற்ற உள்நாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள்** | | 200,159,320 | 198,777,441 | - | - | - | 1,381,879 |
| **மொத்த உள்நாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள்** | | 489,379,284 | 472,480,797 | 1,710,904 | 1,984,976 | 3,812,210 | 9,390,397 |
| **வட்டி கூருணர்திறன் உள்நாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள்** | | | | | | | |
| மீள் கொள்வனவு உடன்படிக்கையின் கீழ் விற்பனை செய்யப்பட்ட பிணையங்கள் | | - | - | - | - | - | - |
| துணைநில் வைப்பு வசதி | 8.0000 | 28,311,221 | 28,311,221 | - | - | - | - |
| **மொத்த வட்டி கூருணர்திறன் உள்நாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள்** | | 28,311,221 | 28,311,221 | - | - | - | - |
| **வட்டி கூருணரற்ற உள்நாட்டு நாணயப் பொறுப்புக்கள்** | | | | | | | |
| வங்கிகள், நிதியியல் நிறுவனங்களின் வைப்புக்கள் | | 320,106,183 | 320,106,183 | - | - | - | - |
| அரசு, அரச நிறுவனங்களின் வைப்புக்கள் | | 348,718 | 348,718 | - | - | - | - |
| ஊழியர் நலத் திட்டங்களின் நிலுவைகள் | | 18,333 | 18,333 | - | - | - | - |
| சுற்றோட்டத்திலுள்ள நாணயம் | | 640,942,510 | 640,942,510 | - | - | - | - |
| ஏனைய செலுத்ததக்கவைகள் | | 12,606,431 | 12,606,431 | - | - | - | - |
| **மொத்த வட்டி கூருணரற்ற உள்நாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள்** | | 974,022,175 | 974,022,175 | - | - | - | - |
| **மொத்த உள்நாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள்** | | 1,002,333,396 | 1,002,333,396 | - | - | - | - |
| **உள்நாட்டு நாணய வட்டி வீத கூருணர்திறன் வீச்சிடை** | | 260,908,743 | 245,392,135 | 1,710,904 | 1,984,976 | 3,812,210 | 8,008,518 |

2017 திசெம்பர் 31இல் உள்ளவாறு ஒப்பீட்டுத் தரவுகள் பின்வருமாறு:

| வெளிநாட்டு நாணய வட்டி வீத கூருணர்திறன் வீச்சிடை | நிறை யேற்றிய சராசரி வட்டி வீதம் % | 2017 மொத்தம் ரூ.000 | 6 மாதமும் அதற்குக் குறைவான ரூ.000 | 6 - 12 மாதங்கள் ரூ.000 | 1 - 2 ஆண்டுகள் ரூ.000 | 2 - 5 ஆண்டுகள் ரூ.000 | 5 ஆண்டுகளுக்கு மேல் ரூ.000 |
|---|---|---|---|---|---|---|---|
| **வட்டி கூருணர்திறன் வெளிநாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள்** | | | | | | | |
| காசும் காசுக்குச் சமமானவையும் | 1.5150 | 459,827,641 | 459,827,641 | - | - | - | - |
| இலாபம் அல்லது நட்டத்தினூடாக சீர்மதிப்புப் பெறுமதியில் பிணையங்கள் மற்றும் ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தின் ஊடான சீர்மதிப்புப் பெறுமதி முதலீகள் | 1.9158 | 596,217,687 | 87,922,743 | 76,479,327 | 118,516,346 | 313,299,271 | - |
| ப.நா.நி. தொடர்பான சொத்துக்கள் | 0.5392 | 11,094,542 | 11,094,542 | - | - | - | - |
| **மொத்த வட்டி கூருணர்திறன் வெளிநாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள்** | | 1,067,139,870 | 558,844,926 | 76,479,327 | 118,516,346 | 313,299,271 | - |
| **வட்டி கூருணரற்ற வெளிநாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள்** | | | | | | | |
| ப.நா.நி. தொடர்பான சொத்துக்கள் | | 115,748,404 | 4,794 | 164,564 | - | - | 115,579,046 |
| பெறுதி நிதியியல் சாதனங்கள் | | 4,940,455 | 4,536,892 | 403,563 | - | - | - |
| ஏனைய பெறத்தக்கவை | | 3,665,700 | 3,665,700 | - | - | - | - |
| இலாபம் அல்லது நட்டத்தினூடான சீர்மதிப்புப் பெறுமதியில் பிணையங்கள் | | 15,275,624 | 15,275,624 | - | - | - | - |
| **மொத்த வட்டி கூருணரற்ற வெளிநாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள்** | | 139,630,183 | 23,483,010 | 568,127 | - | - | 115,579,046 |
| **மொத்த வெளிநாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள்** | | 1,206,770,053 | 582,327,936 | 77,047,454 | 118,516,346 | 313,299,271 | 115,579,046 |
| **வட்டி கூருணர்திறன் வெளிநாட்டு நாணய நிதிப் பொறுப்புக்கள்** | | | | | | | |
| ப.நா.நி. | 1.5480 | 116,996,460 | - | - | - | 49,873,486 | 67,122,974 |
| ஆசிய தீர்ப்பனவு ஒன்றியம் | 1.2800 | 90,981,712 | 90,981,712 | - | - | - | - |
| **மொத்த வட்டி கூருணர்திறன் வெளிநாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள்** | | 207,978,172 | 90,981,712 | - | - | 49,873,486 | 67,122,974 |
| **வட்டி கூருணரற்ற வெளிநாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள்** | | | | | | | |
| வங்கிகளும், ஏனைய நிதியியல் நிறுவனங்களும் | | 8,239,544 | 8,239,544 | - | - | - | - |
| பெறுதி நிதியியல் சாதனங்கள் | | 4,648,449 | 1,048,241 | 2,355,626 | 448,134 | 796,448 | - |
| ப.நா.நி. | | 201,998,809 | 329,937 | - | - | - | 201,668,872 |
| ஏனைய வெளிநாட்டு பொறுப்புக்கள் | | 64,095,889 | 62,902,870 | - | - | - | 1,193,019 |
| **மொத்த வட்டி கூருணரற்ற வெளிநாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள்** | | 278,982,691 | 72,520,592 | 2,355,626 | 448,134 | 796,448 | 202,861,891 |
| **மொத்த வெளிநாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள்** | | 486,960,863 | 163,502,304 | 2,355,626 | 448,134 | 50,669,934 | 269,984,865 |
| **வெளிநாட்டு நாணய வட்டி வீத கூருணர்திறன் வீச்சிடை** | | 859,161,698 | 467,863,214 | 76,479,327 | 118,516,346 | 263,425,785 | (67,122,974) |

| வட்டி கூருணர்திறன் உள்நாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள் | நிறை யேற்றிய சராசரி வட்டி வீதம் % | 2017 மொத்தம் ரூ.000 | 6 மாதமும் அதற்குக் குறைவான ரூ.000 | 6 - 12 மாதங்கள் ரூ.000 | 1 - 2 ஆண்டுகள் ரூ.000 | 2 - 5 ஆண்டுகள் ரூ.000 | 5 ஆண்டுகளுக்கு மேல் ரூ.000 |
|---|---|---|---|---|---|---|---|
| இலங்கை அரச பிணையங்கள் | 8.9863 | 9,704,962 | 9,704,962 | - | - | - | - |
| திறைசேரி உண்டியல்கள் மற்றும் முறிகள் நேர்மாற்று மீள்கொள்வனவு | 8.7500 | 22,375,124 | 22,375,124 | - | - | - | - |
| வங்கிகளுக்கான கடன்கள் | 8.0891 | 223,702 | 110,409 | 44,126 | 54,599 | 10,049 | 4,519 |
| ஏனைய சொத்துக்கள் - அலுவலர் கடன்கள் | 3.9834 | 6,105,830 | 231,580 | 238,514 | 486,331 | 1,543,517 | 3,605,888 |
| - ஏனையவைகள் | 10.2520 | 6,579,629 | 593,501 | 622,037 | 1,142,843 | 1,870,103 | 2,351,145 |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| **மொத்த வட்டி கூருணர்திறன் உள்நாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள்** | | 44,989,247 | 33,015,576 | 904,677 | 1,683,773 | 3,423,669 | 5,961,552 |
| **வட்டி கூருணரற்ற உள்நாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள்** | | | | | | | |
| அரசுக்கான தற்காலிக முற்பணங்கள் | | 199,800,871 | 199,800,871 | - | - | - | - |
| ஏனைய சொத்துக்கள் - ஏனையவைகள் | | 197,011 | 197,011 | - | - | - | - |
| உரிமை மூலதன பிணையங்களிலான முதலீடுகள் - விற்பனைக்குள்ளவை | | 41,095 | - | - | - | - | 41,095 |
| **மொத்த வட்டி கூருணரற்ற உள்நாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள்** | | 200,038,977 | 199,997,882 | - | - | - | 41,095 |
| **மொத்த உள்நாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள்** | | 245,028,224 | 233,013,458 | 904,677 | 1,683,773 | 3,423,669 | 6,002,647 |
| **வட்டி கூருணர்திறன் உள்நாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள்** | | | | | | | |
| மீள்கொள்வனவு உடன்படிக்கையின் கீழ் விற்பனை செய்யப்பட்ட பிணையங்கள் | 7.2500 | 6,503,884 | 6,503,884 | - | - | - | - |
| துணைநில் வைப்பு வசதி | 7.2500 | 34,151,394 | 34,151,394 | - | - | - | - |
| **மொத்த வட்டி கூருணர்திறன் உள்நாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள்** | | 40,655,278 | 40,655,278 | - | - | - | - |
| **வட்டி கூருணரற்ற உள்நாட்டு நாணயப் பொறுப்புக்கள்** | | | | | | | |
| வங்கிகள், நிதியியல் நிறுவனங்களின் வைப்புக்கள் | | 341,712,198 | 341,712,198 | - | - | - | - |
| அரசு, அரச நிறுவனங்களின் வைப்புக்கள் | | 324,517 | 324,517 | - | - | - | - |
| ஊழியர் நலத் திட்டங்களின் நிலுவைகள் | | 4,547 | 4,547 | - | - | - | - |
| சுற்றோட்டத்திலுள்ள நாணயம் | | 598,053,901 | 598,053,901 | - | - | - | - |
| ஏனைய செலுத்தத்தக்கவைகள் | | 8,887,156 | 8,887,156 | - | - | - | - |
| **மொத்த வட்டி கூருணரற்ற உள்நாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள்** | | 948,982,319 | 948,982,319 | - | - | - | - |
| **மொத்த உள்நாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள்** | | 989,637,597 | 989,637,597 | - | - | - | - |
| **உள்நாட்டு நாணய வட்டி வீத கூருணர்திறன் வீச்சிடை** | | 4,333,969 | (7,639,702) | 904,677 | 1,683,773 | 3,423,669 | 5,961,552 |

### 50.3 வெளிநாட்டு நாணய இடர்நேர்வு

வங்கியின் வெளிநாட்டு ஒதுக்கங்களின் முகாமைத்துவத் தொழிற்பாடுகளின் கீழ் வைத்திருக்கப்படுகின்ற வெளிநாட்டு நாணயச் சொத்துக்கள் மூலமாக வெளிநாட்டு நாணய நடவடிக்கைகள் பிரதானமாக உருவாகின்றன. வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் மாற்றங்கள் உருவாகக்கூடிய போக்கின் காரணமாக வங்கியானது செலாவணி இடர்நேர்வுக்கு உள்ளாவதற்கான வாய்ப்பு உள்ளது. நாணயச் சபையினாலும் வெளிநாட்டு ஒதுக்குகள் முகாமைத்துவக் குழுவினாலும் வங்கியின் பன்னாட்டு ஒதுக்கங்களில் பல்வேறு நாணய வகைகளும் வைத்திருக்கப்பட வேண்டிய வீதத் தொகைகள் தீர்மானிக்கப்பட்டுள்ளன. நாணயங்களை ஒதுக்கீடு செய்தல் தொடர்பான தீர்மானங்கள் மேற்கொள்ளப்படுகின்ற போது அரச கடன்களை மீளச் செலுத்துவதன் தேவைப்பாடு தொடர்பில் உரிய கவனம் செலுத்தப்படுகின்றது. இதற்கிணங்க வங்கியானது பிரதானமான நாணய வகைகள் பலவற்றை, அதாவது ஐக்கிய அமெரிக்கா டொலர், ஸ்டேர்லிங் பவுண், அவுஸ்திரேலிய டொலர், யப்பான் யென், யூரோ மற்றும் நியூசிலாந்து டொலர் ஆகியவற்றை வைத்திருக்கின்றது. வெளிநாட்டு நாணய நிலைமைகளின் உருவாக்கப்பட்ட எல்லைகளுடனான இணங்குவிப்பு கண்காணிக்கப்படுகின்றது.

**வெளிநாட்டு நாணயங்களுக்கான தேறிய இடர்நேர்வுக்குள்ளாகும் தன்மை**

2018 திசெம்பர் 31இல் உள்ளவாறு முக்கிய நாணயங்களுக்கான இலங்கை மத்திய வங்கியின் தேறிய இடர்நேர்வுக்குள்ளாகும் தன்மை பின்வருமாறு:

| 2018 திசெம்பர் 31இல் உள்ளவாறு | ஐ. அமெரிக்க டொலர் | யூரோ | யப்பானிய யென் | நாணயம் ஸ்ரேலிங் பவுண் | சிஎஉ | அவுஸ்திரேலிய டொலர் | கனேடியன் டொலர் | நியுசிலாந்து டொலர் | ஏனைய நாணயங்கள் | அனைத்து நாணய வகைகளின் மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 |
| வெளிநாட்டு நாணய நிதிச் சொத்துக்கள் | | | | | | | | | | |
| காசும் காசுக்குச் சமமானவையும் | **567,599,621** | **(74,694,623)** | **(152,407,729)** | **92,299,209** | - | **130,349,501** | **(132,506)** | **(10,045,385)** | **(180,721,348)** | **372,246,740** |
| இலாபம் அல்லது நட்டத்தினூடாக சீர்மதிப்புப் பெறுமதியில் பிணையங்கள் மற்றும் விற்பனைக்குள்ள முதலீடுகள் | **658,211,280** | - | **5,303,481** | **6,251,413** | - | **32,289,309** | - | **17,069,668** | **13,218,482** | **732,343,633** |
| பெறுதி நிதியியல் சாதனங்கள் | - | - | - | - | - | - | - | - | **750** | **750** |
| ப.நா.நி. தொடர்பான சொத்துக்கள் | - | - | - | - | **147,427,456** | - | - | - | - | **147,427,456** |
| ஏனைய பெறத்தக்கவை | **961,284** | - | - | - | - | - | - | - | - | **961,284** |

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| **மொத்த வெளிநாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள்** | **1,226,772,185** | **(74,694,623)** | **(147,104,248)** | **98,550,622** | **147,427,456** | **162,638,810** | **(132,506)** | **7,024,283** | **(167,502,116)** | **1,252,979,863** |
| விகிதம் | **97.91%** | **-5.96%** | **-11.74%** | **7.87%** | **11.77%** | **12.98%** | **-0.01%** | **0.56%** | **-13.37%** | **100%** |
| **வெளிநாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள்** | | | | | | | | | | |
| வங்கிகள் மற்றும் நிதியியல் நிறுவனங்கள் | **19,299,921** | **444** | **1** | **57** | **-** | **737** | **-** | **-** | **-** | **19,301,160** |
| பெறுதி நிதியியல் சாதனங்கள் | **-** | **-** | **1,900,457** | **-** | **-** | **-** | **-** | **-** | **12,156,003** | **14,056,460** |
| ஆசிய தீர்ப்பனவு ஒன்றியம் | **79,158,977** | **-** | **-** | **-** | **-** | **-** | **-** | **-** | **-** | **79,158,977** |
| ப.நா. நிதியம் | **811,552** | **-** | **-** | **-** | **416,176,694** | **-** | **-** | **-** | **-** | **416,988,246** |
| ஏனையவை | **43,282,075** | **-** | **-** | **-** | **-** | **-** | **-** | **-** | **91,448,858** | **134,730,933** |
| **மொத்த வெளிநாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள்** | **142,552,525** | **444** | **1,900,458** | **57** | **416,176,694** | **737** | **-** | **-** | **103,604,861** | **664,235,776** |
| விகிதம் | **21.46%** | **0.00%** | **0.29%** | **0.00%** | **62.65%** | **0.00%** | **0.00%** | **0.00%** | **15.60%** | **100%** |
| **தேறிய வெளிநாட்டு நாணய இடர்நேர்வுக்குள்ளாகும் தன்மை** | **1,084,219,660** | **(74,695,067)** | **(149,004,706)** | **98,550,565** | **(268,749,238)** | **162,638,073** | **(132,506)** | **7,024,283** | **(271,106,977)** | **588,744,087** |

காசும் காசிற்குச் சமமானவைகளும் வேறுபட்ட நாணயங்களின் வாங்கல் மற்றும் விற்றலுடன் தொடர்புபட்ட வெளிநாட்டு கொடுக்கல்வாங்கல்களை உள்ளடக்கியிருந்ததுடன் இவற்றின் வர்த்தகத் திகதிகள் நடப்பு நிதியாண்டில் இடம்பெற்றதுடன் பெறுமதித் திகதி அடுத்த நிதியாண்டாக இருக்கும். அக்கொடுக்கல்வாங்கல்கள் பின்வருமாறு:

| **2018 திசெம்பர் 31இல் உள்ளவாறு** | **இலங்கை ரூபா ரூ.000** | **ஐ. அமெரிக்க டொலர் ரூ.000** | **யூரோ ரூ.000** | **ஸ்ரேலிங் பவுண் ரூ.000** | **யப்பானிய யென் ரூ.000** | **அவுஸ்தி ரேலிய டொலர் ரூ.000** |
|---|---|---|---|---|---|---|
| கொள்வனவு | 123,164,315 | 71,072,884 | - | - | - | - |
| விற்பனை | - | (132,733,080) | - | - | (72,973,340) | - |
| வெளிநாட்டுச் செலாவணி முன்னோக்கிய ஒப்பந்தக் கணக்கு - பிரிவிற்கு அணித்தாக | - | - | - | - | - | - |
| முன்னோக்கி ஒப்பந்தக் கணக்கு | 11,469,221 | - | - | - | - | - |

2017 திசெம்பர் 31இல் உள்ளவாறு முக்கிய நாணயங்களுக்கான இலங்கை மத்திய வங்கியின் தேறிய இடர்நேர்வுக்குள்ளாகும் தன்மை பின்வருமாறு

**நாணயம்**

| **2017 திசெம்பர் 31இல் உள்ளவாறு** | **ஐ. அமெரிக்க டொலர்** | **யூரோ** | **யப்பானிய யென்** | **ஸ்ரேலிங் பவுண்** | **சிஎஉ** | **அவுஸ்தி ரேலிய டொலர்** | **கனேடியன் டொலர்** | **நியுசிலாந்து டொலர்** | **ஏனைய நாணயங்கள்** | **அனைத்து நாணய வகைகளின் மொத்தம்** |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | **ரூ.000** | **ரூ.000** | **ரூ.000** | **ரூ.000** | **ரூ.000** | **ரூ.000** | **ரூ.000** | **ரூ.000** | **ரூ.000** | **ரூ.000** |
| **வெளிநாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள்** | | | | | | | | | | |
| காசும் காசுக்குச் சமமானவையும் | 133,266,127 | (50,974,866) | (58,292,654) | 92,771,973 | - | 124,864,455 | 390,378 | (6,412,537) | 224,214,765 | 459,827,641 |
| இலாபம் அல்லது நட்டத்தினூடாக சீர்மதிப்புப் பெறுமதியில் பிணையங்கள் மற்றும் விற்பனைக்குள்ள முதலீடுகள் | 532,783,747 | 3,676,937 | 6,297,818 | 5,302,523 | - | 34,445,694 | - | 11,011,941 | 17,974,651 | 611,493,311 |
| பெறுதி நிதியியல் சாதனங்கள் | 536 | - | - | - | | - | - | - | 4,939,919 | 4,940,455 |
| ப.நா.நி. தொடர்பான சொத்துக்கள் | - | - | - | - | 126,842,946 | - | - | - | - | 126,842,946 |
| ஏனைய வெளிநாட்டுப் பெறத்தக்கவை | 3,665,700 | - | - | - | - | - | - | - | - | 3,665,700 |
| **மொத்த வெளிநாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள்** | 669,716,110 | (47,297,929) | (51,994,836) | 98,074,496 | 126,842,946 | 159,310,149 | 390,378 | 4,599,404 | 247,129,335 | 1,206,770,053 |
| விகிதம் | 55.50% | -3.92% | -4.31% | 8.13% | 10.51% | 13.20% | 0.03% | 0.38% | 20.48% | 100% |
| **வெளிநாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள்** | | | | | | | | | | |
| வங்கிகள் மற்றும் நிதியியல் நிறுவனங்கள் | 8,237,608 | 12 | - | - | - | - | - | - | 1,924 | 8,239,544 |
| பெறுதி நிதியியல் சாதனங்கள் | - | - | - | - | - | - | - | - | 4,648,449 | 4,648,449 |
| ஆசிய தீர்ப்பனவு ஒன்றியம் | 90,981,712 | - | - | - | - | - | - | - | - | 90,981,712 |
| ப.நா.நிதியம் | - | - | - | - | 318,995,269 | - | - | - | - | 318,995,269 |
| ஏனையவை | 19,241,566 | - | - | - | - | - | - | - | 44,854,323 | 64,095,889 |

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| மொத்த வெளிநாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள் | 118,460,886 | 12 | - | - | 318,995,269 | - | - | - | 49,504,696 | 486,960,863 |
| விகிதம் | 24.33% | 0.00% | 0.00% | 0.00% | 65.50% | 0.00% | 0.00% | 0.00% | 10.17% | 100% |
| தேறிய வெளிநாட்டு நாணய இடர்நேர்வுக்குள்ளாகும் தன்மை | 551,255,224 | (47,297,941) | (51,994,836) | 98,074,496 | (192,152,323) | 159,310,149 | 390,378 | 4,599,404 | 197,624,639 | 719,809,190 |

காசும் காசிற்குச் சமமானவைகளும் வேறுபட்ட நாணயங்களின் வாங்கல் மற்றும் விற்றலுடன் தொடர்புபட்ட வெளிநாட்டு கொடுக்கல்வாங்கல்களை உள்ளடக்கியிருந்ததுடன் இவற்றின் வர்த்தகத் திகதிகள் நடப்பு நிதியாண்டில் இடம்பெற்றதுடன் பெறுமதித் திகதி அடுத்த நிதியாண்டாக இருக்கும். அக்கொடுக்கல்வாங்கல்கள் பின்வருமாறு:

| 2017 திசெம்பர் 31இல் உள்ளவாறு | இலங்கை ரூபா ரூ.000 | ஐ. அமெரிக்க டொலர் ரூ.000 | யூரோ ரூ.000 | ஸ்ரேலிங் பவுண் ரூ.000 | யப்பானிய யென் ரூ.000 | அவுஸ்தி ரேலிய டொலர் ரூ.000 |
|---|---|---|---|---|---|---|
| கொள்வனவு | 260,379,629 | (18,113,664) | 131,788 | (62,622) | (4,876) | (6,352,618) |
| விற்பனை | (24,459,676) | (231,780,079) | 5,375,438 | 19,321,868 | 4,876 | 30,444 |
| வெளிநாட்டுச் செலாவணி முன்னோக்கிய ஒப்பந்தக் கணக்கு - பிரிவிற்கு அணித்தாக | (1,667) | - | - | - | - | - |
| முன்னோக்கி ஒப்பந்தக் கணக்கு | (4,468,841) | - | - | - | - | - |

## 50.4 நிதியியல் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் கழிவுறப்படாத காசுப்பாய்ச்சல்களின் ஒப்பந்த முதிர்ச்சிகள்

2018 திசெம்பர் 31இல் உள்ளவாறு, நிதியியல் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் கழிவுறப்படாத காசுப்பாய்ச்சல்களின் ஒப்பந்த முதிர்ச்சிகள் பின்வருமாறு:

| 2018 திசெம்பர் 31இல் உள்ளவாறு | 6 மாதங் களுக்குக் குறை வானவை ரூ.000 | 6 மாதங்கள் - 1 ஆண்டுகள் ரூ.000 | 1-2 ஆண்டுகள் ரூ.000 | 2-5 ஆண்டுகள் ரூ.000 | 5 ஆண்டு களுக்கு மேல் ரூ.000 | மொத்தம் ரூ.000 |
|---|---|---|---|---|---|---|
| **வெளிநாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள்** | | | | | | |
| காசும் காசுக்குச் சமமானவையும் | **372,175,176** | **-** | **-** | **-** | **-** | **372,175,176** |
| இலாபம் அல்லது நட்டத்தினூடான சீர்மதிப்புப் பெறுமதியில் பிணையங்கள் | **38,478,059** | **-** | **-** | **-** | **-** | **38,478,059** |
| ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தினூடான சீர்மதிப்புப் பெறுமதியில் பிணையங்கள் | **86,972,038** | **58,347,392** | **236,273,635** | **341,808,636** | **9,636,712** | **733,038,413** |
| ப.நா.நி. தொடர்பான சொத்துக்கள் | **12,358,642** | **-** | **-** | **199,961** | **134,868,849** | **147,427,452** |
| ஏனைய பெறத்தக்கவைகள் | **961,284** | **-** | **-** | **-** | **-** | **961,284** |
| **மொத்த கழிவுறப்படாத வெளிநாட்டு நிதியியல் சொத்துக்கள்** | **510,945,199** | **58,347,392** | **236,273,635** | **342,008,597** | **144,505,561** | **1,292,080,384** |
| **உள்நாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள்** | | | | | | |
| இலங்கை அரச பிணையங்கள் | **42,861,171** | **1,928,480** | **128,960** | **1,150,405** | **384,130** | **46,453,146** |
| மீள் கொள்வனவு உடன்படிக்கையின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட பிணையங்கள் | **229,504,446** | **-** | **-** | **-** | **-** | **229,504,446** |
| அரசுக்கான தற்காலிக முற்பணங்கள் | **198,632,571** | **-** | **-** | **-** | **-** | **198,632,571** |
| வங்கிகளுக்கான கடன்கள் | **66,536** | **17,009** | **4,119** | **10,333** | **1,520** | **99,517** |
| நிதியியல் மற்றும் ஏனைய நிறுவனங்களிலான உரிமை மூலதன முதலீடுகள் | **-** | **-** | **-** | **-** | **1,381,879** | **1,381,879** |
| **ஏனைய சொத்துக்கள்** | **14,716,611** | **1,729,014** | **2,777,236** | **4,487,198** | **11,525,061** | **35,235,120** |
| **மொத்த கழிவுறப்படாத உள்நாட்டு நிதியியல் சொத்துக்கள்** | **485,781,335** | **3,674,503** | **2,910,315** | **5,647,936** | **13,292,590** | **511,306,679** |
| **மொத்த கழிவுறப்படாத நிதியியல் சொத்துக்கள்** | **996,726,534** | **62,021,895** | **239,183,950** | **347,656,533** | **157,798,151** | **1,803,387,063** |
| **வெளிநாட்டு நிதியியல் பொறுப்புக்கள்** | | | | | | |
| வங்கிகள் மற்றும் நிதியியல் நிறுவனங்கள் | **19,301,160** | **-** | **-** | **-** | **-** | **19,301,160** |
| ஆசிய தீர்ப்பனவு ஒன்றியம் | **79,158,977** | **-** | **-** | **-** | **-** | **79,158,977** |
| ப.நா.நிதியம் | **2,429,189** | **2,481,530** | **7,459,381** | **80,131,608** | **363,326,740** | **455,828,448** |
| ஏனையவை | **134,730,933** | **-** | **-** | **-** | **-** | **134,730,933** |
| **மொத்த கழிவுறப்படாத வெளிநாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள்** | **235,620,259** | **2,481,530** | **7,459,381** | **80,131,608** | **363,326,740** | **689,019,518** |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **உள்நாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள்** | | | | | | |
| வங்கிகள் மற்றும் நிதியியல் நிறுவனங்களின் வைப்புக்கள் | **320,106,183** | **-** | **-** | **-** | **-** | **320,106,183** |
| அரசு, அரச நிறுவனங்களின் வைப்புக்கள் | **348,718** | **-** | **-** | **-** | **-** | **348,718** |
| மீள்கொள்வனவு உடன்படிக்கையின் கீழ் விற்பனை செய்யப்பட்ட பிணையங்கள் | **28,311,221** | **-** | **-** | **-** | **-** | **28,311,221** |
| ஊழியர் நலத் திட்டங்களின் நிலுவைகள் | **18,333** | **-** | **-** | **-** | **-** | **18,333** |
| சுற்றோட்டத்திலுள்ள நாணயம் | **640,942,510** | **-** | **-** | **-** | **-** | **640,942,510** |
| ஏனைய செலுத்தத்தக்கவை | **12,606,431** | **-** | **-** | **-** | **-** | **12,606,431** |
| **மொத்த கழிவுறப்படாத உள்நாட்டு நிதியியல் பொறுப்புக்கள்** | **1,002,333,396** | **-** | **-** | **-** | **-** | **1,002,333,396** |
| **மொத்த கழிவுறப்படாத நிதியியல் பொறுப்புக்கள்** | **1,237,953,655** | **2,481,530** | **7,459,381** | **80,131,608** | **363,326,740** | **1,691,352,914** |
| **தேறிய கழிவுறப்படாத நிதியியல் சொத்துக்கள்/ (பொறுப்புக்கள்)** | **(241,227,121)** | **59,540,365** | **231,724,569** | **267,524,925** | **(205,528,589)** | **112,034,149** |

| | 6 மாதங்களுக்குக் குறைவானவை ரூ.000 | 6 மாதங்கள் - 1 ஆண்டுகள் ரூ.000 |
|---|---|---|
| **2018 திசெம்பர் 31இல் உள்ளவாறு** | | |
| பெறுதி நிதியியல் சொத்துக்கள் | 103,671,375 | 18,943,940 |
| பெறுதி நிதியியல் பொறுப்புக்கள் | 114,165,546 | 19,919,739 |

**வெளிநாட்டு நாணய மாற்று வீதங்கள்**

வெளிநாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களுடன் தொடர்புடைய அனைத்து எதிர்கால காசுப்பாய்ச்சல்களும், அறிக்கையிடல் திகதியிலுள்ள செலாவணி வீதத்தை பயன்படுத்தி அறிக்கையிடும் நாணயத்திற்கு மாற்றப்பட்டன.

**2017 திசெம்பர் 31இல் உள்ளவாறு, நிதியியல் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் கழிவுறபப்படாத காசுப்பாய்ச்சல்களின் ஒப்பந்த முதிர்ச்சிகள் பின்வருமாறு:**

| 2017 திசெம்பர் 31இல் உள்ளவாறு | 6 மாதங் களுக்குக் குறை வானவை ரூ.000 | 6 மாதங்கள் - 1 ஆண்டுகள் ரூ.000 | 1-2 ஆண்டுகள் ரூ.000 | 2-5 ஆண்டுகள் ரூ.000 | 5 ஆண்டு களுக்கு மேல் ரூ.000 | மொத்தம் ரூ.000 |
|---|---|---|---|---|---|---|
| **வெளிநாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள்** | | | | | | |
| காசும் காசுக்குச் சமமானவையும் | 459,827,641 | - | - | - | - | 459,827,641 |
| இலாபம் அல்லது நட்டத்தினூடான சீர்மதிப்புப் பெறுமதியில் பிணையங்கள் | 21,369,496 | 4,465,690 | 13,178,459 | 8,851,636 | - | 47,865,281 |
| விற்பனைக்கு கிடைக்கத்தக்கதாகவுள்ள முதலீடுகள் | 46,372,253 | 94,705,246 | 126,493,457 | 322,848,221 | - | 590,419,177 |
| ப.நா.நி. தொடர்பான சொத்துக்கள் | 11,099,336 | - | - | 164,565 | 115,579,046 | 126,842,947 |
| ஏனைய பெறத்தக்கவை | 3,665,700 | - | - | - | - | 3,665,700 |
| **மொத்த கழிவுறப்படாத வெளிநாட்டு நிதியியல் சொத்துக்கள்** | 542,334,426 | 99,170,936 | 139,671,916 | 331,864,422 | 115,579,046 | 1,228,620,746 |
| **உள்நாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள்** | | | | | | |
| இலங்கை அரச பிணையங்கள் | 9,907,506 | - | - | - | - | 9,907,506 |
| மீள் விற்பனை உடன்படிக்கையின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட பிணையங்கள் | 22,380,499 | - | - | - | - | 22,380,499 |
| அரசுக்கான தற்காலிக முற்பணங்கள் | 199,800,871 | - | - | - | - | 199,800,871 |
| வங்கிகளுக்கான கடன்கள் | 114,827 | 46,409 | 56,593 | 11,274 | 4,697 | 233,800 |
| நிதியியல் மற்றும் ஏனைய நிறுவனங்களிலான உரிமை மூலதன முதலீடுகள் | - | - | - | - | 41,095 | 41,095 |
| ஏனைய சொத்துக்கள் | 14,901,062 | 1,189,827 | 2,713,417 | 4,296,510 | 8,129,740 | 31,230,555 |
| **மொத்த கழிவுறப்படாத உள்நாட்டு நிதியியல் சொத்துக்கள்** | 247,104,765 | 1,236,235 | 2,770,010 | 4,307,784 | 8,175,531 | 263,594,325 |
| **மொத்த கழிவுறப்படாத நிதியியல் சொத்துக்கள்** | 789,439,191 | 100,407,171 | 142,441,927 | 336,172,205 | 123,754,577 | 1,492,215,071 |
| **வெளிநாட்டு நிதியியல் பொறுப்புக்கள்** | | | | | | |
| வங்கிகள் மற்றும் நிதியியல் நிறுவனங்கள் | 8,239,544 | - | - | - | - | 8,239,544 |
| ஆசிய தீர்ப்பனவு ஒன்றியம் | 90,981,712 | - | - | - | - | 90,981,712 |
| ப.நா.நிதியம் | 1,254,051 | 1,348,974 | 2,678,505 | 38,063,211 | 298,604,658 | 341,949,399 |
| ஏனையவை | 62,902,870 | - | - | - | 1,193,019 | 64,095,889 |
| **மொத்த கழிவுறப்படாத வெளிநாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள்** | 163,378,177 | 1,348,974 | 2,678,505 | 38,063,211 | 299,797,677 | 505,266,544 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **உள்நாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள்** | | | | | | |
| வங்கிகள் மற்றும் நிதியியல் நிறுவனங்களின் வைப்புக்கள் | 341,712,198 | - | - | - | - | 341,712,198 |
| அரச, அரச நிறுவனங்களின் வைப்புக்கள் | 324,517 | - | - | - | - | 324,517 |
| மீள்கொள்வனவு உடன்படிக்கையின் கீழ் விற்பனை செய்யப்பட்ட பிணையங்கள் | 40,663 | - | - | - | - | 40,663 |
| ஊழியர் நலத் திட்டங்களின் நிலுவைகள் | 4,547 | - | - | - | - | 4,547 |
| சுற்றோட்டத்திலுள்ள நாணயம் | 598,053,901 | - | - | - | - | 598,053,901 |
| ஏனைய செலுத்தத்தக்கவை | 9,189,166 | - | - | - | - | 9,189,166 |
| **மொத்த கழிவுறப்படாத உள்நாட்டு நிதியியல் பொறுப்புக்கள்** | 949,324,992 | - | - | - | - | 949,324,992 |
| **மொத்த கழிவுறப்படாத நிதியியல் பொறுப்புக்கள்** | 1,112,703,169 | 1,348,974 | 2,678,505 | 38,063,211 | 299,797,677 | 1,454,591,536 |
| **தேறிய கழிவுறப்படாத நிதியியல் சொத்துக்கள்/ (பொறுப்புக்கள்)** | (323,263,978) | 99,058,197 | 139,763,422 | 298,108,994 | (176,043,100) | 37,623,535 |

| | 6 மாதங்களுக்குக் குறைவானவை ரூ.000 | 6 மாதங்கள் - 1 ஆண்டுகள் ரூ.000 |
|---|---|---|
| **2018 திசெம்பர் 31இல் உள்ளவாறு** | | |
| பெறுதி நிதியியல் சொத்துக்கள் | 178,883,331 | 57,169,395 |
| பெறுதி நிதியியல் பொறுப்புக்கள் | 171,988,417 | 56,697,667 |

### 50.5 திரவத்தன்மை இடர்நேர்வு

நிதியியல் சாதனங்களுக்கான கடப்பாடுகளை நிறைவேற்றுவதற்குத் தேவையான நிதியங்களைக் குறுகிய கால அறிவித்தலின் மீது பெற்றுக் கொள்கின்ற போது நிறுவனமொன்று முகம் கொடுக்கின்ற இடர்ப்பாடு திரவத்தன்மை இடர்நேர்வாகும். நிறுவனம் தனது நிதிச் சொத்துக்களை விரைவாக, சந்தைப் பெறுமதியைவிட மிகக் குறைந்த விலைக்கு விற்பனை செய்ய வேண்டி நேரிடுவதும் திரவத்தன்மை இடர்நேர்வொன்றாகும்.

(அ) வங்கியின் வெளிநாட்டு நாணயச் சொத்துக்களின் உள்ளமைப்பைத் தீர்மானிக்கின்ற போது முக்கியமாக திரவத்தன்மை தொடர்பாகவே கவனம் செலுத்தப்படுகிறது. தேவையான சந்தர்ப்பங்களில் தலையீடு செய்கின்ற போது மற்றும் அரச கடன்கள் மற்றும் ப.நா. நி. கடன்களை மீளச் செலுத்துதல் போன்ற கடப்பாடுகளைத் தீர்ப்பதற்காக வெளிநாட்டு ஒதுக்கங்களை ஒழிக்கின்ற போது இது ஒரு உள்ளார்ந்த தேவைப்பாடாகும். நிதியங்களை விரைவாக அடைவதை உறுதி செய்து கொள்ளும் நோக்கத்துடன் வங்கியானது பின்வரும் அளவீடுகளை மேற்கொள்கிறது:

- வைத்திருக்கப்பட்ட பிணையங்களின் திரவத்தன்மை இயல்புகளை அடிப்படையாகக் கொண்ட திரவச் சொத்து வீதங்கள்.
- ஒரு இணைத்தரப்பினருடன் ஒரு நாணயத்தில் வைத்திருக்கப்படக் கூடிய ஒதுக்குகளின் உச்சமட்ட விகிதத்தின் மீதான வரையறை

(ஆ) உள்நாட்டு நாணய நடவடிக்கைகளின் போது, குறிப்பாக திறந்த சந்தைத் தொழிற்பாடுகளின் போது உருவாகின்ற திரவத்தன்மை இடர்நேர்வு மட்டத்தைக் குறைக்கும் பொருட்டு இலங்கை மத்திய வங்கியானது, திறைசேரி உண்டியல்கள் மற்றும் திறைசேரி முறிகள் போன்ற சந்தைப்படுத்தக்கூடிய அதிக திரவத்தன்மையுடனான கருவிகளை மேலதிகப் பிணையங்களாகப் பயன்படுத்துகிறது. வங்கியானது, மீள்கொள்வனவு/ நேர்மாற்று மீள்கொள்வனவு, மத்திய வங்கிப் பிணையங்கள் மற்றும் ஐ.அ.டொலர்/ ரூபா பரஸ்பர பரிமாற்றல்கள் போன்ற நிதிக் கருவிகளைப் பயன்படுத்தி முறைமையினுள் நிதியங்களை உட்செலுத்துவதன் மூலம் அல்லது அதிலிருந்து மீளப்பெறுவதன் மூலம் வங்கி முறைமையின் நாளாந்த திரவத்தன்மை நிலையைக் கட்டுப்படுத்துகிறது.

### 51. சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் முதிர்ச்சிப் பகுப்பாய்வு

| 2018 திசெம்பர் 31இலுள்ளவாறு | 12 மாதங்களுக்குக் குறைவானவை ரூ.000 | 12 மாதங்களுக்கு மேலானவை ரூ.000 | மொத்தம் ரூ.000 |
|---|---|---|---|
| **சொத்துக்கள்** | | | |
| காசும் காசுக்குச் சமமானவையும் | **372,175,176** | **-** | **372,175,176** |
| இலாபம் அல்லது நட்டத்தினூடான சீர்மதிப்புப் பெறுமதியில் பிணையங்கள் | **9,975,116** | **27,492,123** | **37,467,239** |
| ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தினூடான சீர்மதிப்புப் பெறுமதியில் பிணையங்கள் | **80,991,450** | **613,884,944** | **694,876,394** |
| பெறுதி நிதியியல் சாதனங்கள் | **750** | **-** | **750** |
| ப.நா.நி. தொடர்பான சொத்துக்கள் | **12,358,642** | **135,068,810** | **147,427,452** |
| ஏனைய வெளிநாட்டு பெறத்தக்கவை | **961,284** | **-** | **961,284** |
| இலங்கை அரச பிணையங்கள் | **43,874,997** | **1,156,160** | **45,031,157** |
| மீள் விற்பனை உடன்படிக்கையின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட பிணையங்கள் | **229,454,409** | **-** | **229,454,409** |
| அரசுக்கான தற்காலிக முற்பணங்கள் | **198,632,571** | **-** | **198,632,571** |
| வங்கிகளுக்கான கடன்கள் | **81,396** | **14,567** | **95,963** |
| நிதியியல் மற்றும் ஏனைய நிறுவனங்களிலான உரிமை மூலதன முதலீடுகள் | **-** | **1,381,879** | **1,381,879** |
| ஏனைய சொத்துக்கள் | **2,513,732** | **12,269,573** | **14,783,305** |

| | | | |
|---|---|---|---|
| தங்கம் | **-** | **149,683,439** | **149,683,439** |
| இருப்புக்கள் | **-** | **6,568,935** | **6,568,935** |
| ஏனைய பெறத்தக்கவைகள் மற்றும் மீள்கொடுப்பனவுகள் | **1,789,376** | **124,712** | **1,914,088** |
| ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் | **-** | **16,955,853** | **16,955,853** |
| அருவச் சொத்துக்கள் | **-** | **30,437** | **30,437** |
| **மொத்தச் சொத்துக்கள்** | **952,808,899** | **964,631,432** | **1,917,440,331** |
| **பொறுப்புக்கள்** | | | |
| வங்கிகள் மற்றும் நிதியியல் நிறுவனங்கள் | **19,301,160** | **-** | **19,301,160** |
| பெறுதி நிதியியல் சாதனங்கள் | **14,056,460** | **-** | **14,056,460** |
| ஆசியத் தீர்ப்பனவு ஒன்றியம் | **79,158,977** | **-** | **79,158,977** |
| ப.நா. நிதியம் | **-** | **416,988,246** | **416,988,246** |
| ஏனையவை | **134,730,933** | **-** | **134,730,933** |
| வங்கிகள் மற்றும் நிதியியல் நிறுவனங்களின் வைப்புக்கள் | **320,106,183** | **-** | **320,106,183** |
| அரசு, அரச நிறுவனங்களின் நிலுவைகள் | **348,718** | **-** | **348,718** |
| மீள்கொள்வனவு உடன்படிக்கையின் கீழ் விற்பனை செய்யப்பட்ட பிணையங்கள் | **28,311,221** | **-** | **28,311,221** |
| ஊழியர் நலத் திட்டங்களின் நிலுவைகள் | **18,333** | **-** | **18,333** |
| சுற்றோட்டத்திலுள்ள நாணயம் | **640,942,510** | **-** | **640,942,510** |
| ஏனைய செலுத்தத்தக்கவை | **12,606,431** | **-** | **12,606,431** |
| பிற்போடப்பட்ட கொடைகள் | **6** | **5** | **11** |
| ஓய்வூதியம் மற்றும் ஏனைய தொழிலுக்குப் பின்னரான நன்மைகள் திட்டங்கள் | **-** | **12,016,804** | **12,016,804** |
| நானாவிதப் பொறுப்புக்கள் மற்றும் அட்டுறுக்கள் | **49,224** | **36,721** | **85,945** |
| **மொத்தப் பொறுப்புக்கள்** | **1,249,630,156** | **429,041,776** | **1,678,671,932** |
| **தேறிய** | **(296,821,257)** | **535,589,656** | **238,768,399** |

| **2017 திசெம்பர் 31இலுள்ளவாறு** | 12 மாதங்களுக்குக் குறைவானவை ரூ.000 | 12 மாதங்களுக்கு மேலானவை ரூ.000 | மொத்தம் ரூ.000 |
|---|---|---|---|
| **சொத்துக்கள்** | | | |
| காசும் காசுக்குச் சமமானவையும் | 459,827,641 | - | 459,827,641 |
| இலாபம் அல்லது நட்டத்தினூடான சீர்மதிப்புப் பெறுமதியில் பிணையங்கள் | 23,416,953 | 21,847,423 | 45,264,376 |
| விற்பனைக்குள்ள முதலீடுகள் | 134,413,318 | 431,815,617 | 566,228,935 |
| பெறுதி நிதியியல் சாதனங்கள் | 4,940,455 | - | 4,940,455 |
| ப.நா.நி. தொடர்பான சொத்துக்கள் | 11,099,336 | 115,743,610 | 126,842,946 |
| ஏனைய வெளிநாட்டு பெறத்தக்கவை | 3,665,700 | - | 3,665,700 |
| இலங்கை அரச பிணையங்கள் | 9,704,962 | - | 9,704,962 |
| மீள் விற்பனை உடன்படிக்கையின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட பிணையங்கள் | 22,375,124 | - | 22,375,124 |
| அரசுக்கான தற்காலிக முற்பணங்கள் | 199,800,871 | - | 199,800,871 |
| வங்கிகளுக்கான கடன்கள் | 154,536 | 69,166 | 223,702 |
| நிதியியல் மற்றும் ஏனைய நிறுவனங்களிலான உரிமை மூலதன முதலீடுகள் | - | 41,095 | 41,095 |
| ஏனைய சொத்துக்கள் | 2,180,722 | 10,701,748 | 12,882,470 |
| தங்கம் | - | 126,583,727 | 126,583,727 |
| இருப்புக்கள் | - | 6,875,533 | 6,875,533 |
| ஏனைய பெறத்தக்கவைகள் மற்றும் மீள்கொடுப்பனவுகள் | 1,369,157 | 165,691 | 1,534,848 |
| ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் | - | 17,960,517 | 17,960,517 |
| அருவச் சொத்துக்கள் | - | 80,623 | 80,623 |
| **மொத்தச் சொத்துக்கள்** | 872,948,775 | 731,884,750 | 1,604,833,525 |
| **பொறுப்புக்கள்** | | | |
| வங்கிகள் மற்றும் நிதியியல் நிறுவனங்கள் | 8,239,544 | - | 8,239,544 |
| பெறுதி நிதியியல் சாதனங்கள் | 4,648,449 | - | 4,648,449 |
| ஆசியத் தீர்ப்பனவு ஒன்றியம் | 90,981,712 | - | 90,981,712 |
| ப.நா. நிதியம் | - | 318,995,269 | 318,995,269 |
| ஏனையவை | 62,902,870 | 1,193,019 | 64,095,889 |
| வங்கிகள் மற்றும் நிதியியல் நிறுவனங்களின் வைப்புக்கள் | 341,712,198 | - | 341,712,198 |
| அரசு, அரச நிறுவனங்களின் நிலுவைகள் | 324,517 | - | 324,517 |
| மீள்கொள்வனவு உடன்படிக்கையின் கீழ் விற்பனை செய்யப்பட்ட பிணையங்கள் | 40,655,278 | - | 40,655,278 |

| | | | |
|---|---|---|---|
| ஊழியர் நலத் திட்டங்களின் நிலுவைகள் | 4,547 | - | 4,547 |
| சுற்றோட்டத்திலுள்ள நாணயம் | 598,053,901 | - | 598,053,901 |
| ஏனைய செலுத்தத்தக்கவை | 8,887,156 | - | 8,887,156 |
| பிற்போடப்பட்ட கொடைகள் | 34 | 11 | 45 |
| ஓய்வூதியம் மற்றும் ஏனைய தொழிலுக்குப் பின்னரான நன்மைகள் திட்டங்கள் | - | 671,061 | 671,061 |
| நானாவிதப் பொறுப்புக்கள் மற்றும் அட்டுறுக்கள் | 160,398 | 51,322 | 211,720 |
| **மொத்தப் பொறுப்புக்கள்** | 1,156,900,541 | 320,580,745 | 1,477,481,286 |
| **தேறிய** | (283,951,766) | 411,304,005 | 127,352,239 |

### 52.1 நிதியியல் சொத்துக்கள் மற்றும் நிதியியல் பொறுப்புகளின் வகைப்படுத்தல்கள்

நிதியியல் சாதனங்களின் வகைகள் மற்றும் நிதியியல் நிலைமைகள் அறிக்கையில் உள்ள வரிசை விடயம் என்பவற்றிற்கிடையேயான இணங்குவித்தல்கள் பின்வரும் அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளது.

| 2018 திசெம்பர் 31இல் உள்ளவாறு | இலாபம் அல்லது நட்டத்தினூடாக சீர்மதிப்புப் பெறுமதியில் கட்டாயமானவை | ஏனைய அனைத்தையு முள்ளடக்கிய வருமானத்தினூடான சீர்மதிப்புப் பெறுமதியில் கடன் சாதனங்கள் | ஏனைய அனைத்தையு முள்ளடக்கிய வருமானத்தினூடான சீர்மதிப்புப் பெறுமதியில் உரிமை மூலதன சாதனங்கள | பெறுமதியிழப்புச் செலவு | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 |
| **வெளிநாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள்** | | | | | |
| காசும் காசுக்குச் சமமானவையும் | - | - | - | 372,175,176 | 372,175,176 |
| இலாபம் அல்லது நட்டத்தினூடான சீர்மதிப்புப் பெறுமதியில் பிணையங்கள் | 37,467,239 | - | - | - | 37,467,239 |
| ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தினூடான சீர்மதிப்புப் பெறுமதியில் பிணையங்கள் | - | 694,876,394 | - | - | 694,876,394 |
| பெறுதி நிதியியல் சாதனங்கள் | 750 | - | - | - | 750 |
| ப.நா.நி. தொடர்பான சொத்துக்கள் | - | - | - | 147,427,452 | 147,427,452 |
| ஏனைய வெளிநாட்டு பெறத்தக்கவை | - | - | - | 961,284 | 961,284 |
| **மொத்த கழிவுறப்படாத வெளிநாட்டு நிதியியல் சொத்துக்கள்** | 37,467,989 | 694,876,394 | - | 520,563,912 | 1,252,908,295 |
| **உள்நாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள்** | | | | | |
| இலங்கை அரச பிணையங்கள் | - | 45,031,157 | - | - | 45,031,157 |
| மீள் விற்பனை உடன்படிக்கையின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட பிணையங்கள் | - | - | - | 229,454,409 | 229,454,409 |
| அரசுக்கான தற்காலிக முற்பணங்கள் | - | - | - | 198,632,571 | 198,632,571 |
| வங்கிகளுக்கான கடன்கள் | - | - | - | 95,963 | 95,963 |
| நிதியியல் மற்றும் ஏனைய நிறுவனங்களிலான உரிமை மூலதன முதலீடுகள் | - | - | 1,381,879 | - | 1,381,879 |
| ஏனைய சொத்துக்கள் | - | - | - | 14,783,305 | 14,783,305 |
| **உள்நாட்டு நாணய நிதியியல் மொத்தச் சொத்துக்கள்** | - | 45,031,157 | 1,381,879 | 442,966,248 | 489,379,284 |
| **வெளிநாட்டு நிதியியல் பொறுப்புக்கள்** | | | | | |
| வங்கிகள் மற்றும் நிதியியல் நிறுவனங்கள் | - | - | - | 19,301,160 | 19,301,160 |
| பெறுதி நிதியியல் சாதனங்கள் | 14,056,460 | - | - | - | 14,056,460 |
| ஆசியத் தீர்ப்பனவு ஒன்றியம் | - | - | - | 79,158,977 | 79,158,977 |
| ப.நா. நிதியம் | - | - | - | 416,988,246 | 416,988,246 |
| ஏனையவை | - | - | - | 134,730,933 | 134,730,933 |
| **வெளிநாட்டு நாணய நிதிச் மொத்தப் பொறுப்புக்கள்** | 14,056,460 | - | - | 650,179,316 | 664,235,776 |
| **உள்நாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள்** | | | | | |
| வங்கிகள் மற்றும் நிதியியல் நிறுவனங்களின் வைப்புக்கள் | - | - | - | 320,106,183 | 320,106,183 |
| அரச, அரச நிறுவனங்களின் வைப்புக்கள் | - | - | - | 348,718 | 348,718 |
| மீள்கொள்வனவு உடன்படிக்கையின் கீழ் விற்பனை செய்யப்பட்ட பிணையங்கள் | - | - | - | 28,311,221 | 28,311,221 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ஊழியர் நலத் திட்டங்களின் நிலுவைகள் | - | - | - | 18,333 | 18,333 |
| சுற்றோட்டத்திலுள்ள நாணயம் | - | - | - | 640,942,510 | 640,942,510 |
| ஏனைய செலுத்தத்தக்கவை | - | - | - | 12,606,431 | 12,606,431 |
| **உள்நாட்டு நாணய நிதியியல் மொத்தப் பொறுப்புக்கள்** | - | - | - | 1,002,333,396 | 1,002,333,396 |

| 2017 திசெம்பர் 31இல் உள்ளவாறு | வர்த்தகம் | விற்பனைக்குள்ளவை | கடன்களும் பெறத் தக்கவைகளும் | முதிர்ச்சி வரை வைத்திருக்கக் கூடியவை | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 |
| **வெளிநாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள்** | | | | | |
| காசும் காசுக்குச் சமமானவையும் | - | - | - | 459,827,641 | 459,827,641 |
| இலாபம் அல்லது நட்டத்தினூடான சீர்மதிப்புப் பெறுமதியில் பிணையங்கள் | 45,264,376 | - | - | - | 45,264,376 |
| விற்பனைக்குள்ள பிணையங்கள் | - | 566,228,935 | - | - | 566,228,935 |
| பெறுதி நிதியியல் சாதனங்கள் | 4,940,455 | - | - | - | 4,940,455 |
| ப.நா.நி. தொடர்பான சொத்துக்கள் | - | - | - | 126,842,946 | 126,842,946 |
| ஏனைய வெளிநாட்டு பெறத்தக்கவை | - | - | 3,665,700 | - | 3,665,700 |
| **மொத்த வெளிநாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள்** | 50,204,831 | 566,228,935 | 3,665,700 | 586,670,587 | 1,206,770,053 |
| **உள்நாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள்** | | | | | |
| இலங்கை அரச பிணையங்கள் | - | - | - | 9,704,962 | 9,704,962 |
| மீள் விற்பனை உடன்படிக்கையின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட பிணையங்கள் | - | - | - | 22,375,124 | 22,375,124 |
| அரசுக்கான தற்காலிக முற்பணங்கள் | - | - | 199,800,871 | - | 199,800,871 |
| வங்கிகளுக்கான கடன்கள் | - | - | 223,702 | - | 223,702 |
| நிதியியல் மற்றும் ஏனைய நிறுவனங்களிலான உரிமை மூலதன முதலீடுகள் | - | - | - | 41,095 | 41,095 |
| ஏனைய சொத்துக்கள் | - | - | - | 12,882,470 | 12,882,470 |
| **உள்நாட்டு நாணய நிதியியல் மொத்தச் சொத்துக்கள்** | - | - | 200,024,573 | 45,003,651 | 245,028,224 |
| **வெளிநாட்டு நிதியியல் பொறுப்புக்கள்** | | | | | |
| வங்கிகள் மற்றும் நிதியியல் நிறுவனங்கள் | - | - | - | 8,239,544 | 8,239,544 |
| பெறுதி நிதியியல் சாதனங்கள் | 4,648,449 | - | - | - | 4,648,449 |
| ஆசியத் தீர்ப்பனவு ஒன்றியம் | - | - | - | 90,981,712 | 90,981,712 |
| ப.நா. நிதியம் | - | - | - | 318,995,269 | 318,995,269 |
| ஏனையவை | - | - | - | 64,095,889 | 64,095,889 |
| **வெளிநாட்டு நாணய நிதிச் மொத்தப் பொறுப்புக்கள்** | 4,648,449 | - | - | 482,312,414 | 486,960,863 |
| **உள்நாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள்** | | | | | |
| வங்கிகள் மற்றும் நிதியியல் நிறுவனங்களின் வைப்புக்கள் | - | - | - | 341,712,198 | 341,712,198 |
| அரசு, அரச நிறுவனங்களின் வைப்புக்கள் | - | - | - | 324,517 | 324,517 |
| மீள்கொள்வனவு உடன்படிக்கையின் கீழ் விற்பனை செய்யப்பட்ட பிணையங்கள் | - | - | - | 40,655,278 | 40,655,278 |
| ஊழியர் நலத் திட்டங்களின் நிலுவைகள் | - | - | - | 4,547 | 4,547 |
| சுற்றோட்டத்திலுள்ள நாணயம் | - | - | - | 598,053,901 | 598,053,901 |
| ஏனைய செலுத்தத்தக்கவை | - | - | - | 8,887,156 | 8,887,156 |
| **உள்நாட்டு நாணய நிதியியல் மொத்தப் பொறுப்புக்கள்** | - | - | - | 989,637,597 | 989,637,597 |

## 53. சீர்மதிப்புப் பெறுமதி வெளிப்படுத்தல்கள்

### 53.1 சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் சீர்மதிப்புப் பெறுமதி

சீர்மதிப்புப் பெறுமதி என்பது அளவிடுகின்ற திகதியில் சொத்தொன்றை விற்பது தொடர்பில் பெறப்படுகின்ற விலை அல்லது சந்தைப் பங்கேற்பாளர்களுக்கிடையிலான கொடுக்கல்வாங்களின் பொருட்டு பொறுப்பொன்றினை மாற்றல் செய்வதற்கான கொடுப்பனவு எனப் பொருள்படும். பொறுப்புக்களின் சீர்மதிப்புப் பெறுமதி ஆபத்தில்லாத இடரினைப் பிரதிபலிக்கின்றது.

நிதியியல் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களுக்கான சீர்மதிப்புப் பெறுமதியினைத் தீர்மானிக்கும்போது எந்தவொரு சந்தைப் பெறுமதி அவதானிப்புக்களும் தேவையற்றது மதிப்பீட்டு நுட்பங்கள் கணக்கீட்டுக் கொள்கை குறிப்பு 5.2 இல் கொடுக்கப்பட்டுள்ளது. வணிக ரீதியாகவும், குறைந்த விலை வெளிப்படைத்தன்மையுடனும் இருக்கும் நிதிச் சாதனங்களுக்கான, சீர்மதிப்புப் பெறுமதியின் குறைவான குறிக்கோள், மற்றும் திரவ செறிவு, சந்தை காரணிகளின் நிச்சயமற்ற தன்மை, விலை மதிப்பீடுகள் மற்றும் குறிப்பிட்ட கருவிகளைப் பாதிக்கும் பிற அபாயங்கள் ஆகியவற்றைப் பொறுத்து பல்வேறுபட்ட கோணங்களில் தீர்ப்பு தேவைப்படுகிறது. சீர்மதிப்புப் பெறுமதியினை தீர்மானிப்பதற்கும் வெளிப்படுத்துவதற்குமாக வங்கி பின்வரும் படிமுறையினைப் பயன்படுத்துகிறது:

**மட்டம் 1:** ஒத்த தன்மையான சொத்துக்கள் அல்லது பொறுப்புக்களுக்காக செயற்பாட்டு சந்தைகளில் விலைக்குறிப்பீடு செய்யப்பட்ட (சீராக்கப்படாத) விலைகள்.

**மட்டம் 2:** மட்டம் 1 இல் குறிப்பிடப்பட்ட விலைக்குறிப்பீடு செய்யப்பட்ட விலைகளைத் தவிர வேறு நுட்பத்தின்படி ஒன்றில் நேரடியாக அல்லது மறைமுகமாக அவதானிக்கப்படுகின்றன விலைகளைப் பயன்படுத்தி சீர்மதிப்புப் பெறுமதி கணிக்கப்படும்.

**மட்டம் 3:** பதிவு செய்யப்பட்ட சீர்மதிப்புப் பெறுமதி மீது குறிப்பிடத்தக்க தாக்கத்தினைச் செலுத்துகின்ற உள்ளீடுகளைப் பயன்படுத்தும் நுட்பமாக அவதானிக்கத்தக்க சந்தைத் தரவுகளை அடிப்படையாகக் கொண்டிருக்கவில்லை. (உதாரணம்: அவதானிக்க தேவையற்ற உள்ளீடுகள்)

பின்வரும் அட்டவணை சீர்மதிப்புப் பெறுமதிப் படிமுறையில் பதிவு செய்யப்பட்ட சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் பகுப்பாய்வொன்றினைத் தருகின்றது:

| 2018 திசெம்பர் 31 | மட்டம் 1<br>ரூ.000 | மட்டம் 2<br>ரூ.000 | மட்டம் 3<br>ரூ.000 | மொத்தம்<br>ரூ.000 |
|---|---|---|---|---|
| **நிதியியல் சொத்துக்கள்** | | | | |
| இலாபம் அல்லது நட்டத்தினூடாக சீர்மதிப்புப் பெறுமதியில் பிணையங்கள் | **37,467,239** | **-** | **-** | **37,467,239** |
| ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தினூடான சீர்மதிப்புப் பெறுமதியில் பிணையங்கள் | **694,876,394** | **-** | **-** | **694,876,394** |
| பெறுதிகள் | **-** | **750** | **-** | **750** |
| | **732,343,633** | **750** | **-** | **732,344,383** |
| **வெளிநாட்டு நாணய நிதியல்லாச் சொத்துக்கள்** | | | | |
| தங்கம் | **149,683,439** | **-** | **-** | **149,683,439** |
| | **149,683,439** | **-** | **-** | **149,683,439** |
| **உள்நாட்டு நாணய நிதிச் சொத்துக்கள்** | | | | |
| இலங்கை அரச பிணையங்கள் | **44,986,598** | **-** | **-** | **44,986,598** |
| நிதியியல் மற்றும் ஏனைய நிறுவனங்களிலான உரிமை மூலதன முதலீடுகள் | **-** | **-** | **1,381,879** | **1,381,879** |
| | **44,986,598** | **-** | **1,381,879** | **46,368,477** |
| **ஏனைய நிதியல்லாச் சொத்துக்கள்** | | | | |
| காணி | **-** | **-** | **8,930,375** | **8,930,375** |
| கட்டடம் | **-** | **-** | **6,702,567** | **6,702,567** |
| | **-** | **-** | **15,632,942** | **15,632,942** |
| **நிதியியல் பொறுப்புக்கள்** | | | | |
| உள்ளடக்கப்பட்ட பெறுதிகள் - நாணயத் தேர்வுகள் | **-** | **-** | **466,315** | **466,315** |
| பெறுதிகள் | **-** | **13,590,145** | **-** | **13,590,145** |
| | **-** | **13,590,145** | **466,315** | **14,056,460** |

| 2017 திசெம்பர் 31 | மட்டம் 1<br>ரூ.000 | மட்டம் 2<br>ரூ.000 | மட்டம் 3<br>ரூ.000 | மொத்தம்<br>ரூ.000 |
|---|---|---|---|---|
| **நிதியியல் சொத்துக்கள்** | | | | |
| இலாபம் அல்லது நட்டத்தினூடாக சீர்மதிப்புப் பெறுமதியில் பிணையங்கள் | 45,264,376 | - | - | 45,264,376 |
| விற்பனைக்கு கிடைக்கக்கூடிய முதலீடுகள் | 566,228,935 | - | - | 566,228,935 |
| பெறுதிகள் | - | 4,940,455 | - | 4,940,455 |
| | 611,493,311 | 4,940,455 | - | 616,433,766 |
| **வெளிநாட்டு நாணய நிதியல்லாச் சொத்துக்கள்** | | | | |
| தங்கம் | 126,583,727 | - | - | 126,583,727 |
| | 126,583,727 | - | - | 126,583,727 |
| **உள்நாட்டு நாணய நிதிச் சொத்துக்கள்** | | | | |
| இலங்கை அரச பிணையங்கள் | 9,754,483 | | - | 9,754,483 |
| | 9,754,483 | | - | 9,754,483 |
| **ஏனைய நிதியல்லாச் சொத்துக்கள்** | | | | |

| | | | | |
|---|---|---|---|---|
| காணி | - | - | 8,976,339 | 8,976,339 |
| கட்டடம் | - | - | 7,515,327 | 7,515,327 |
| | - | - | 16,491,666 | 16,491,666 |
| **நிதியியல் பொறுப்புக்கள்** | | | | |
| உள்ளடக்கப்பட்ட பெறுதிகள் - நாணயத் தேர்வுகள் | - | - | 1,244,581 | 1,244,581 |
| பெறுதிகள் | - | 3,403,868 | - | 3,403,868 |
| | - | 3,403,868 | 1,244,581 | 4,648,449 |

**நிதியியல் மற்றும் ஏனைய நிறுவனங்களிலான உரிமை மூலதன முதலீடுகள்**

உரிமை மூலதன முதலீடுகளின் சீர்மதிப்புப் பெறுமதியானது பங்கிற்கான தேறிய சொத்தின் மதிப்பீட்டு நுட்பத்தினை உபயோகித்து கணக்கிடப்பட்டது.

**குறிப்பிடத்தக்க கவனிக்கப்படாத உள்ளீடுகள் பயன்படுத்தப்பட்டது**
பங்கிற்கான தேறிய சொத்தின் பெறுமதி

**உணர்திறன் பகுப்பாய்வு**

பங்கிற்கான தேறிய சொத்தின் பெறுமதி 10 சதவீதத்தால் அதிகரித்தால் சீரமதிப்புப் பெறுமதியும் 10 சதவீதத்தினால் அதிகரிக்கும்

| | 2018 ரூ.000 | 2017 ரூ.000 |
|---|---|---|
| சனவரி 1இல் உள்ளவாறு நிலுவை | **41,095** | 41,095 |
| ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தில் அங்கீகரிக்கப்பட்ட சீர்மதிப்புப் பெறுமதி மிகை | **1,360,573** | - |
| வருடகாலப் பகுதிக்குள் அகற்றப்பட்டவை | **(19,789)** | - |
| திசெம்பர் 31இல் உள்ளவாறு நிலுவை | **1,381,879** | 41,095 |

**காணி மற்றும் கட்டடங்கள்**

**மதிப்பிடப்படும் முறை**

சந்தை அணுகுமுறையான நேரடி ஒப்பீட்டு முறையைப் பயன்படுத்தி நிலம் மதிப்பீடு செய்யப்பட்டதுடன், இம்முறையில் சந்தைப் பெறுமதியினைப் பெறுவதற்கு சொத்துக்கள் புள்ளி வேறுபாடுகளுக்காக சீராக்கப்படக் கூடிய அல்லது பெயரளவில் கூட்டி மேம்படுத்தப்பட்ட பெறுமதி அண்மைய விற்பனையுடன் ஒப்பிடப்படுகின்றன.

சென்றல் பொயின்ற், வைற் எவேய்ஸ் மற்றும் லொயிட்ஸ் கட்டடங்கள் தவிர்ந்த அனைத்துக் கட்டடங்களையும் பெறுமானத் தேய்விடப்பட்ட நடைமுறை பதிலீட்டுக் கிரயமுறையை பயன்படுத்தி மதிப்பிட்டதுடன், சமூகத்திற்குச் சேவை வழங்குகின்ற பொதுத்துறை நிறுவனங்களினால் கட்டுப்படுத்தப்படுகின்ற சொத்துக்கள் திறந்த திரவத்தன்மை சந்தையில் விற்பனை செய்யப்படுவதில்லை என்பதும் கருத்தில் கொள்ளப்பட்டது.

ஏனைய கட்டடங்களை மதிப்பிடுவதற்கு வருமான அணுகுமுறை பயன்படுத்தப்பட்டதுடன் இம்முறையானது ஆதனங்களை எதிர்கால மதிப்பிடப்பட்ட வருமானம், இலாபம் அல்லது காசுப் பாய்ச்சலை தனியொரு நடைமுறைத் தொகைக்கு மாற்றுவதன் (கழிவிடப்படுவதன்) மூலம் மதிப்பிடுகின்றது.

சந்தை அணுகுமுறையின் கீழ், மதிப்பிடப்பட்ட சந்தைப்பெறுமதியானது பின்வருமாறு அதிகரிக்கலாம்/ (குறைவடையலாம்):

பேர்ச் ஒன்றுக்கான விலை அதிகரித்தல்/ (குறைதல்)
சதுர அடி ஒன்றுக்கான விலை அதிகரித்தல்/ (குறைதல்)
கட்டடங்களிற்கான பெறுமானத்தேய்வு வீதம் குறைதல்/ (அதிகரித்தல்)

வருமான அணுகுமுறையின் கீழ், மதிப்பிடப்பட்ட சந்தைப்பெறுமதியானது பின்வருமாறு அதிகரிக்கலாம்/ (குறைவடையலாம்);

மொத்த வருடாந்த வாடகை வருமானம் அதிகரித்தல்/ (குறைதல்)
கொள்வனவு செய்யப்பட்ட ஆண்டுகள் அதிகரித்தல்/ (குறைதல்)

**பெறுதிகள்**

பெறுமதி மதிப்பீட்டு மாதிரிகள் முன்னோக்கிய விலைகளை (சந்தையில் கிடைக்கத்தக்கதாகவுள்ள முன்னோக்கிய புள்ளிகளுக்கு மேலதிக நிறைகளை அறிவிப்பதன் மூலம் கணக்கிடப்பட்டது) பயன்படுத்தியதுடன் பெறுமதித் திகதியிலுள்ளவாறு தொடர்பான நாணயங்களில் பூச்சிய நறுக்கு விளைவு வளைகோட்டினை அடிப்படையாகக் கொண்டு கழிவின் வீதம் கணிக்கப்பட்டது. சாதனமானது அளவின் உள்ளடக்கத்தினை மதிப்பிடுமிடத்து சீராக்கங்கள் முன்னோக்கிய விலைகளுக்கும் அல்லது அளவுவீதத்தின் தளத்தினை பிரதிநிதித்துவப்படுத்தும் வட்டிவீதங்களுக்கும் செய்யப்படுகிறது.

**உள்ளடக்கப்பட்ட பெறுதிகள் - நாணயத் தேர்வுகள்**

உள்ளடக்கப்பட்ட பெறுதிச் சாதனங்களின் சந்தைப் பெறுமதி பிளாக் ஷோல்ஸ் மாதிரியைப் பயன்படுத்திக் கணிக்கப்பட்டது.

| | மட்டம் 3 | |
|---|---|---|
| | 2018 ரூ.000 | 2017 ரூ.000 |
| சனவரி 1இல் உள்ளவாறு நிலுவை | **1,244,582** | 5,911,813 |
| வருமானக் கூற்றில் அங்கீகரிக்கப்பட்ட சீர்மதிப்பு பெறுமதி நட்டம் | **(778,266)** | (4,667,231) |
| திசெம்பர் 31இல் உள்ளவாறு நிலுவை | **466,316** | 1,244,582 |

பயன்படுத்தப்பட்ட குறிப்பிடத்தக்களவிற்கு அவதானிக்கப்படாத உள்ளீடு

| | |
|---|---|
| கழிவிடல் வீதம் | 10% |
| தளம்பல் | 4% |

| **உணர்திறன் பகுப்பாய்வு** | **கழிவிடல் வீதம்** | | **தளம்பல்கள்** | |
|---|---|---|---|---|
| | 9% | 11% | 3% | 5 % |
| | **ரூ.000** | **ரூ.000** | **ரூ.000** | **ரூ.000** |
| உள்ளடக்கப்பட்ட பெறுதிகள் - நாணயத் தேர்வுகள் | 475,893 | 457,048 | 466,305 | 466,578 |

| **உள்ளடக்கப்பட்ட பெறுதிகளிலுள்ள பிற்போடப்பட்ட சொத்து** | **2018 ரூ.000** | **2017 ரூ.000** |
|---|---|---|
| சனவரி 1இல் உள்ளவாறு நிலுவை | **369,455** | 4,625,665 |
| ஆண்டு காலப்பகுதியில் பெறுமதியிழக்கப்பட்ட கட்டுப்பணம் | **(267,049)** | (4,256,210) |
| திசெம்பர் 31இல் உள்ளவாறு நிலுவை | **102,406** | 369,455 |

**53.2 மீள்கொள்வனவு மற்றும் நேர்மாற்று மீள்கொள்வனவு உடன்படிக்கைகள்**

உடன்படிக்கைகளின் குறுகிய கால இயல்பின் காரணமாக மீள்கொள்வனவு மற்றும் நேர்மாற்று மீள்கொள்வனவுகளின் அறிக்கையிடப்பட்ட பெறுமதி சீர்மதிப்புப் பெறுமதியை அண்மித்ததாக இருக்கும் எனக் கருதப்படுகிறது. 2018 திசெம்பர் 31இல் மீள்கொள்வனவு உடன்படிக்கையின் கீழ் விற்பனை செய்யப்பட்ட இலங்கை அரச பிணையங்கள் எதுவும் இல்லை (2017 - ரூ.6,503.88 மில்லியன்) வழங்கப்பட்ட துணைநில் வைப்பு வசதி ரூ.28,311.22 மில்லியனாக (2017

- ரூ. 34,151.39) காணப்பட்டது. மீள் விற்பனை உடன்படிக்கையின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட இலங்கை அரச பிணையங்களின் ஏட்டுப் பெறுமதி 2018 திசெம்பர் 31இல் ரூ.229,454.41 மில்லியனாக இருந்தது (2017 - ரூ.22,375.12 மில்லியன்).

**53.3 சுற்றோட்டத்திலுள்ள நாணயம்**

சுற்றோட்டத்திலுள்ள நாணயங்களின் சீர்மதிப்புப் பெறுமதியானது, நிதிக் கூற்றில் அறிக்கையிடப்பட்டுள்ளவாறு அவற்றின் முகப்புப் பெறுமதியாகக் கருதப்படுகிறது

**53.4 வைப்புக்கள்**

கோரப்படுகின்ற போது செலுத்தப்பட வேண்டுமாதலால் வைப்புக்களின் ஏட்டுப் பெறுமதியானது சந்தைப் பெறுமதியை அண்மித்ததாக இருக்குமெனக் கருதப்படுகிறது.

**53.5 சீர்மதிப்புப் பெறுமதி மற்றும் சீர்மதிப்பு பெறுமதி படிநிலைகளை நிர்ணயித்தல்**

கொண்டு செல்லும் பெறுமதியானது சீர்மதிப்பு பெறுமதிக்கு அண்மைய பெறுமதியைக் கொண்டிராத வங்கியின் நிதியியல் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் கொண்டு செல்லும் பெறுமதிகளும், சீர்மதிப்பு பெறுமதிகளும் வகையின்படியான ஒரு ஒப்பீட்டுடன் கீழே தரப்பட்டுள்ளன.

| | எடுத்துச் செல்லப்படும் தொகை | | சீர்மதிப்புப் பெறுமதி | |
|---|---|---|---|---|
| | 2018<br>ரூ.000 | 2017<br>ரூ.000 | 2018<br>ரூ.000 | 2017<br>ரூ.000 |
| **வெளிநாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள்** | | | | |
| வெளிநாட்டு நாணய வர்த்தகம்/ ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தினூடான சீர்மதிப்புப் பெறுமதியில் பிணையங்கள்/விற்பனைக்குள்ளவை | 732,343,633 | 611,493,311 | 732,343,633 | 611,493,311 |
| பெறுதி நிதியியல் சாதனங்கள் | 750 | 4,940,455 | 750 | 4,940,455 |
| **உள்நாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள்** | | | | |
| இலங்கை அரச பிணையங்கள் | 45,031,157 | 32,080,086 | 45,031,157 | 32,129,607 |
| வங்கிகளுக்கான கடன்கள் | 95,963 | 223,702 | 92,601 | 214,077 |
| ஏனைய சொத்துக்கள் | 14,783,305 | 12,882,470 | 12,947,767 | 9,702,999 |
| **வெளிநாட்டு நாணய நிதியல்லாச் சொத்துக்கள்** | | | | |
| ஒதுக்கப்பட்ட தங்கம் | 149,683,439 | 126,583,727 | 149,683,439 | 126,583,727 |
| **வெளிநாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள்** | | | | |
| பெறுதி நிதியியல் சாதனங்கள் | 14,056,460 | 4,648,449 | 14,056,460 | 4,648,449 |

**54. ஒப்பிட்டு ரீதியான தகவல்கள்**

| முன்னர் அறிக்கையிடப்பட்டவாறு: | 2017<br>ரூ.000 |
|---|---|
| **வெளிநாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள்** | |
| ப.நா.நி. தொடர்பான சொத்துக்கள் | 126,838,152 |
| ஏனைய பெறத்தக்கவை | 3,670,494 |
| **உள்நாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள்** | |
| இலங்கை அரச பிணையங்கள் | 32,080,086 |
| வெளிநாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள் | |
| வங்கிகள் மற்றும் நிதியியல் நிறுவனங்கள் | 8,683,033 |
| **ஆசிய தீர்ப்பனவு ஒன்றியம்** | 90,868,160 |
| ப.நா.நிதியம் | 318,665,332 |
| **உள்நாட்டு நாணய நிதியியல் சொத்துக்களிலிருந்தான வருமானம்** | |
| வட்டி வருமானம் | 18,768,928 |

| தற்போதைய சமர்ப்பிப்பு: | குறிப்பு | 2018<br>ரூ.000 | 2017<br>ரூ.000 |
|---|---|---|---|
| **வெளிநாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள்** | | | |
| ப.நா.நி. தொடர்பான சொத்துக்கள் | 54.1 | **147,427,452** | 12,492,990 |
| ஏனைய பெறத்தக்கவை | | 961,284 | 3,665,700 |
| **உள்நாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள்** | | | |
| இலங்கை அரச பிணையங்கள் | 54.2 | 45,031,157 | 9,704,962 |
| மீள் விற்பனை உடன்படிக்கையின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட பிணையங்கள் | | 229,454,409 | 22,375,124 |
| **வெளிநாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள்** | | | |
| வங்கிகள் மற்றும் நிதியியல் நிறுவனங்கள் | 54.3 | 19,301,160 | 8,239,544 |
| ஆசிய தீர்ப்பனவு ஒன்றியம் | | 79,158,977 | 90,981,712 |
| ப.நா.நிதியம் | | 416,988,246 | 318,995,269 |
| **உள்நாட்டு நாணய நிதியியல் சொத்துக்களிலிருந்தான வருமானம்** | | | |
| வட்டி வருமானம் | **54.4** | **8,956,322** | 18,501,748 |
| விலைமாற்றத் தேறல்களிலிருந்தான மிகை | | **117,771** | 267,180 |

54.1 2017 ஆம் ஆண்டில் ஏனைய பெறுதிகளின் கீழ் வகைப்படுத்தப்பட்டிருந்த ரூ.4.79 மில்லியன் பெறுமதியுடைய ப.நா.நிதியத்திலிருந்தான பெறத்தக்க வட்டிகள் சிறந்த வெளிப்படுத்தல்களுக்காக தற்போது ப.நா.நிதியத்துடன் தொடர்புடைய சொத்துக்களின் கீழ் உள்ளடக்கப்பட்டுள்ளது.

54.2 2017 ஆம் ஆண்டு இலங்கை அரச பிணையங்களின் கீழ் வகைப்படுத்தப்பட்ட நேர்மாற்று மீள்கொள்வனவு பரிமாற்றல் மற்றும் துணைநில் கடன் வசதிப் பரிமாற்று நிலுவைத் தொகை ரூ. 22,375.12 மில்லியன் தற்பொழுது மீள்

விற்பனை உடன்படிக்கையின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட பிணையங்களின் கீழ் வெளிப்படுத்தப்படுகின்றது.

54.3 2017 ஆம் ஆண்டில் வங்கிகள் மற்றும் நிதியியல் நிறுவனங்களின் கீழ் சமர்ப்பிக்கப்பட்ட ப.நா.நி பொறுப்புக்களுக்கு செலுத்தத்தக்க வட்டி மற்றும் ஆசிய தீர்ப்பனவு ஒன்றிய பொறுப்புக்களுக்கான செலுத்தத்தக்க வட்டியும் முறையே ரூ.329.94 மில்லியன், ரூ113.55 மில்லியனானவை ஆசிய தீர்ப்பனவு ஒன்றியம் மற்றும் ப.நா.நிதியம் ஆகியவற்றின் பொறுப்புக்களாக தற்போது வகைப்படுத்தப்பட்டுள்ளது

54.4 உள்நாட்டு நாணய நிதியியல் சொத்துக்களிலிருந்தான வருமானமாக சமர்ப்பிக்கப்பட்ட இலங்கை அரச பிணையங்களின் இரண்டாம்தர விற்பனையின் தேறத்தக்க மிகையான ரூ. 267.18 மில்லியன் தற்போது விலை மாற்றங்களிலிருந்தான தேறத்தக்க மிகையாக வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

## 55. தொடர்புடைய தரப்பினர்கள்

### 55.1 அரச மற்றும் அரசினால் நிர்வகிக்கப்படுகின்ற நிறுவனங்களுடனான கொடுக்கல்வாங்கல்கள்

மத்திய வங்கியின் வழமையான வியாபாரத்தின் போது தொடர்புடைய தரப்பினர்களோடு கொடுக்கல்வாங்கலில் ஈடுபடுகின்றது. தொடர்புடைய தரப்பினருள் இலங்கை அரசாங்கம் (அரசு, வங்கியின் உரிமையாளர் என்ற ரீதியில்), பல்வேறு அரச திணைக்களங்கள், அரசின் கட்டுப்பாட்டுக்குட்பட்ட நிறுவனங்கள் என்பன உள்ளடங்குகின்றன. பன்னாட்டு கணக்கீட்டு நியமங்கள் 24 - திருத்தப்பட்ட தொடர்புடைய தரப்பினரின் வெளிப்படுத்தல்களுக்கமைய வங்கியினால் அரசுடனும் அரசின் கட்டுப்பாட்டுக்குட்பட்ட நிறுவனங்களுடனும் மேற்கொள்ளப்பட்ட தனித்தனியாக முக்கியத்துவம் வாய்ந்ததும் தனித்தனியாக முக்கியத்துவமில்லாத ஏனைய ஒன்றுசேர்ந்த கொடுக்கல்வாங்கல்கள் மற்றும் ஒழுங்குபடுத்தல்களின் தரப்பினருள் விபரங்கள் பின்வருமாறு:

| கொடுக்கல்வாங்கலின் இயல்பு | 2018 ரூ.000 | 2017 ரூ.000 |
|---|---|---|
| **கொடுக்கல்வாங்கல்கள்:** | | |
| அரச பிணையங்களின் உடனடி கொள்வனவு | **20,458,308** | - |
| அரச பிணையங்களின் உடனடி விற்பனை | **58,674,669** | 74,237,317 |
| மீள்கொள்வனவு / விற்பனை உடன்படிக்கையின் கீழ் கொள்வனவு / விற்பனை செய்யப்பட்ட இ.ம.வ. மற்றும் அரச பிணையங்கள் | **4,800,410,194** | 4,311,989,631 |
| மீள்கொள்வனவு/ மீள்விற்பனை செய்வதற்கான உடன்படிக்கையின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட / விற்பனை செய்யப்பட்ட இலங்கை மத்திய வங்கி மற்றும் அரசாங்க பிணையங்கள் மீதான வட்டி வருமானம் / செலவு | **2,426,510** | 1,210,183 |
| அரசாங்கத்தின் சார்பாக பெற்றுக் கொள்ளப்பட்ட நிதி (குறிப்பு 26.1 - 26.9) | **1,188,003,197** | 44,676,985 |
| அரசாங்கத்தின் சார்பாக பகிர்ந்தளிக்கப்பட்ட நிதி (குறிப்பு 26.1 - 26.9) | **1,144,407,670** | 17,346,423 |
| திசெம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டில் நாணயத் தாள்களை அச்சிடுவதற்கான செலவினம் (குறிப்பு 55.1.3) | **1,605,463** | 1,906,625 |
| திசெம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டுக்கான பொருட்கள், பணிகள் மற்றும் வரிகளுக்கான கொடுப்பனவுகள் (குறிப்பு 55.1.4) | **2,234,657** | 2,744,815 |
| ஆண்டினுள் மொத்த வெளிநாட்டு செலாவணிக் கொடுக்கல்வாங்கல்கள் (குறிப்பு 55.1.6) | | |
| விற்பனை | **89,011,978** | 5,337,500 |
| கொள்வனவு | **25,078,570** | 85,719,851 |
| ஐ.அ.டொலர் / இல. ரூபா பெறுதிகள் | **221,347,285** | 751,569,889 |
| இவ்வாண்டுப்பகுதியில் கைவிடப்பட்ட சொத்துக்கள் தொடர்பில் பெறப்பட்ட நிதியம் | **118,989** | 123,394 |
| வாடகை வருமானம் | **395,682** | 412,206 |
| ஏனைய கொடுக்கல்வாங்கல்கள் (குறிப்பு 55.1.10) | **1,392,7** | 996,174 |
| **நிலுவைகள்:** | | |
| மத்திய வங்கியினால் வைத்திருக்கப்படுகின்ற இலங்கை அரச பிணையங்கள் (குறிப்பு 55.1.7) | **45,031,157** | 9,704,962 |
| அரசுக்கான தற்காலிக முற்பணங்கள் (குறிப்பு 15) | **198,632,571** | 199,800,871 |
| சுசகன கட்டம் 1 மற்றும் 2 இன் கீழ் வழங்கப்பட்ட கடன்கள் மற்றும் மாகாண அபிவிருத்திக் கொடுகடன் திட்டம், சௌபாக்கிய கடன் திட்டம், வடக்கின் எழுச்சிக் கடன் திட்டம் (கட்டம் II), கிழக்கில் பொருளாதார நடவடிக்கைகளை மீள ஆரம்பித்தல் (கட்டம் II) மற்றும் வடக்கு மற்றும் கிழக்கில் சேதமடைந்த வீடுகளைத் திருத்துதல் | **-** | 28,254 |
| குறிப்பிட்ட நோக்கங்களுக்காக வைத்திருக்கப்பட்ட அரச பிணையங்கள் | **7,524,488** | 6,443,984 |
| அ.நே.மொ.தீ. நிலுவைகள் - வங்கிகள் நிதியியல் நிறுவனங்களுடன் (குறிப்பு 27) | **192,367,084** | 215,901,806 |
| இலங்கை வங்கி இலண்டனுடனான நொஸ்ரோ கணக்கு நிலுவைகள் | **209,155** | 185,324 |
| திறைசேரி மற்றும் ஏனைய அமைச்சுக்களிடமிருந்து பெறத்தக்கவை | **-** | 54,490 |
| திறைசேரி மற்றும் ஏனைய அமைச்சுக்களுக்கு கொடுபடத்தக்கவை (குறிப்பு 26) | **134,657,025** | 62,576,551 |
| அரச மற்றும் அரச முயற்சிகளுடனான நடைமுறைக் கணக்கு நிலுவைகள் திசெம்பர் 31இல் உள்ளவாறு | **(141,802)** | 84,833 |
| கைவிடப்பட்ட ஆதன நிலுவைகள் | **2,571,814** | 2,257,579 |
| ஏனைய நிலுவைகள் (குறிப்பு 55.1.10) | **212,877** | 599,623 |

**55.1.1** நாணய விதிச் சட்டத்தின் 28 - 33 பிரிவுகளினால் அதிகாரம் அளிக்கப்பட்ட இலங்கை மத்திய வங்கியின் வங்கி மேற்பார்வைத் திணைக்களமானது இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையால் உரிமம் வழங்கப்பட்ட வங்கிகள் மீதான மேற்பார்வைத் தொழிற்பாட்டினையும் ஒழுங்குபடுத்தலையும் மேற்கொண்டு வருகிறது. 2018 திசெம்பர் 31இல் உள்ளவாறு இலங்கை அரசாங்கத்தினால் நிதியிடப்பட்ட அல்லது குறிப்பிடத்தக்க செல்வாக்கைக் கொண்ட 6 உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் 1 சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள் இந்தத் திணைக்களத்தின் மேற்பார்வையின் கீழ் வந்தன.

இலங்கை மத்திய வங்கியின் வங்கியல்லாத நிதி நிறுவனங்களை மேற்பார்வை செய்யும் திணைக்களமானது வங்கியல்லாத நிதி நிறுவனங்களின் மேற்பார்வைத் தொழிற்பாட்டையும் ஒழுங்குபடுத்துகையையும் மேற்கொண்டு வருகிறது. இதற்கிணங்க, அரச கட்டுப்பாட்டிலுள்ள தொடர்புடைய நிறுவனங்கள் அல்லது அரசினால் நிதியிடப்பட்ட வங்கியல்லாத நிதி நிறுவனங்கள் இத்திணைக்களத்தின் மேற்பார்வையின் கீழுள்ளன.

**55.1.2** நாணய விதிச் சட்டத்தின் 113ஆம் பிரிவின் பிரகாரம் நாணயச் சபையும் இலங்கை மத்திய வங்கியும் பொதுப்படுகடன் முகாமைத்துவ தொழிற்பாட்டினை ஆற்ற அதிகாரம் பெற்றுள்ளன. இதற்கிணங்க, அரசாங்கத்தின் முகவர் என்ற வகையில் பொதுப்படுகடன் திணைக்களமானது, வரவு செலவுத்திட்ட தேவைப்பாடுகளை பூர்த்தி செய்து கொள்வதற்காக உள்நாட்டுச் சந்தைக்குப் பிணையங்களை வழங்குவதோடு உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு கடன் பணிகளையும் மேற்கொள்கின்றது. பொதுப்படுகடன் திணைக்களமானது பொதுப்படுகடன் முகாமைத்துவம் மற்றும் கடன் சந்தை அபிவிருத்தி என்பவற்றைக் கையாளுகின்றது. அரசாங்கத்தினுடைய நிதித் தேவைகளை உறுதிப்படுத்திக் கொள்ளும் வகையிலும் அதனுடைய பணம் செலுத்துதல் கடப்பாடுகளைப் பூர்த்தி செய்வதற்கும் அரசாங்கக் கடனை இது முகாமைத்துவம் செய்கிறது

**55.1.3** நாணய விதிச் சட்டத்தின் 49ஆம் பிரிவின்படி இலங்கையில் நாணய விநியோகத்தை மேற்கொள்ளும் அதிகாரத்தையும் ஏக உரிமையையும் வங்கி கொண்டுள்ளது. இதற்கிணங்க இ.ம. வங்கியின் நாணயத் திணைக்களம் இலங்கையிலே சட்ட ரீதியான நாணயத்தை விநியோகிக்கும் ஒரே அதிகாரத்துவம் உடையதாகத் தொழிற்படுகின்றது. நாணயத் தாள்களை அச்சிடுதலானது, 40 சதவீதப் பங்குகளை அரசாங்கம் சொந்தமாகக் கொண்டுள்ள டி லா ரூ லங்கா கரண்சி அன்ட் செக்குரிட்டி (பிறைவேட்) லிமிடெட் எனும் நிறுவனத்தால் மேற்கொள்ளப்படுகிறது.

**55.1.4** வங்கியின் சாதாரண நடவடிக்கைகளை மேற்கொள்ளும் போது வங்கியானது அரச நிறுவனங்கள் அல்லது அரசாங்கத்தின் குறிப்பிடத்தக்களவு செல்வாக்கு அல்லது கட்டுப்பாடுள்ள நிறுவனங்களுடன் பல்வேறுபட்ட பண்டங்கள் சேவைகளைப் பெற்றுக் கொள்வதற்காக கொடுக்கல்வாங்கல்களில் ஈடுபடுகிறது.

**55.1.5** மத்திய வங்கியானது, குறிப்பு 58 இல் விளக்கப்பட்டுள்ளவாறு, பொதுவாக நம்பிக்கைப் பொறுப்பாளராகவும் பிற காப்பாளர் தகுதிகளிலும் கடமை புரிவதனால் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களை அரசாங்கம், நம்பிக்கைப் பெறுப்புக்கள், ஓய்வூதிய நலத் திட்டங்கள் மற்றும் பிற நிறுவனங்களின் சார்பில் வைத்திருக்க அல்லது வழங்க முன் வருகின்றது.

**55.1.6** நாணய விதிச்சட்டத்தின் படி, வங்கியின் பன்னாட்டுத் தொழிற்பாட்டுத் திணைக்களம் உள்நாட்டின் வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையின் அபிவிருத்தியையும் வர்த்தக வங்கிகளின் ஓரிரவுக்கான தேறிய வெளிநாட்டுச் செலாவணி திறந்த நிலையினையும் கண்காணிக்கின்றது. உள்நாட்டின் வெளிநாட்டுச் சந்தைச் செலாவணி அபிவிருத்தியைக் கண்காணிக்கின்ற போது வங்கியானது சந்தையின் இரு புறத்திலுமிருந்து இலங்கை ரூபாவின் செலாவணி வீதத்தின் மிகை மாற்றமுறும் தன்மையினை மிதமான நிலைக்குக் கொண்டு வருகின்றது. அத்தகைய கண்காணிப்பு நடவடிக்கையின் பெறுபேறுகளாக வெளிநாட்டுச் செலாவணியின் கொள்வனவு மற்றும் விற்பனைத் தொகைகள் விளங்குகின்றன.

55.1.7 உள்நாட்டுத் தொழிற்பாட்டுத் திணைக்களமானது வங்கியின் நிதிக் கொள்கையை அமுல்படுத்தும் நேரடித் தொழிற்பாட்டை, பிரதானமாக 1949ஆம் ஆண்டு 58ஆம் இலக்க திருத்தப்பட்டவாறான நாணய விதிச் சட்டத்தின் 90 - 92ஆம் பிரிவின் படியாக, திறந்த சந்தை நடவடிக்கைகளினூடாக செயற்படுத்துவதுடன் நாணய விதிச் சட்டத்தின் 93 - 98 பிரிவுகளின் படியான நிதி ஒதுக்குத் தேவைப்பாடுகளையும் அமுல்படுத்துவதுடன், அரசாங்கம் பங்குடமைகளைக் கொண்டுள்ள வணிக நிறுவனங்களினதும் வேறும் சில நிதி நிறுவனங்களினதும், அரச நிறுவனங்களினதும் வங்கியாகவும் தொழிற்படுகிறது. 2018 திசெம்பர் 31ஆம் திகதியன்று இந்தத் தொழிற்பாட்டின் நிமித்தமாக எழும் திரண்ட நிலுவைகள், குறிப்பு 28 மற்றும் 29இல் தரப்பட்டுள்ளன. முதலீட்டுப் பட்டியலிலிருந்து உழைக்கப்பட்ட வட்டி குறிப்பு 38 இல் தரப்பட்டுள்ளது.

**55.1.8** வங்கியானது எவ்விதக் கட்டணங்களையும் அறவிடாது, அரச கட்டுப்பாட்டிலுள்ள வங்கியொன்றின் காப்பாளர் நடவடிக்கைகளையும் மேற்கொள்கிறது.

**55.1.9** வங்கி மேற்பார்வைப் பணிப்பாளரினால் விடுக்கப்பட்ட சுற்றறிக்கையின்படி, வேளாண்மைக்கான 10 சதவீதமான குறைந்தபட்ச முற்பண வரையறையினைப் பேணாத வங்கிகள், வங்கியின் பிரதேச அபிவிருத்தி திணைக்களத்தினால் தொழிற்படுத்தப்படும் மீள்நிதியிடல் நிதியத்திற்கு அப்பற்றாக்குறையாகவுள்ள தொகையினை செலுத்துதல் வேண்டும். 2018 திசெம்பர் 31இல் உள்ளவாறு மீள்நிதியிடல் திட்டத்தின் கீழ் எந்தவொரு மீதியும் காணப்படவில்லை (2017 திசெம்பர் 31இல் ரூ.6.83 மில்லியன் மீதியாகக் காணப்பட்டதுடன், மக்கள் வங்கி - ரூ.2.46 மில்லியன், இலங்கை வங்கி - ரூ.1.88 மில்லியன், பிரதேச சங்வர்த்தன வங்கி - ரூ.0.63 மில்லியன் மற்றும் லங்காபுத்திர அபிவிருத்தி வங்கி ரூ.1.86 மில்லியன்) பிரதேச அபிவிருத்தித் திணைக்களம் ரூ.99.36 மில்லியன் வட்டியைப் பெற்றது (2017 திசெம்பர் 31இல் ரூ.99.19 மில்லியன்).

**55.1.10** ஏனைய மீதிகளும் கொடுக்கல்வாங்கல்களும் அரசாங்கம், அரசாங்கத் திணைக்களங்கள் மற்றும் அரசின் கட்டுப்பாட்டுக்குட்பட்ட நிறுவனங்களுடன் மேற்கொள்ளப்பட்ட தனிப்பட்ட ரீதியில் முக்கியத்துவமில்லாத கொடுக்கல்வாங்கல்களை உள்ளடக்குகின்றன.

**55.1.11** ஏனைய மீதிகளும் கொடுக்கல்வாங்கல்களும் அரசாங்கம், அரசாங்கத் திணைக்களங்கள் மற்றும் அரசின் கட்டுப்பாட்டுக்குட்பட்ட நிறுவனங்களுடன் மேற்கொள்ளப்பட்ட தனிப்பட்ட ரீதியில் முக்கியத்துவமில்லாத கொடுக்கல்வாங்கல்களை உள்ளடக்குகின்றன.

**55.2 பிரதம முகாமைத்துவ ஆளணியினருடனான கொடுக்கல்வாங்கல்கள்**

ஆளுநர், துணை ஆளுநர்கள், உதவி ஆளுநர்கள் மற்றும் உள்ளகக் கணக்காய்வுப் பணிப்பாளர் உள்ளடங்கலாக நாணயச் சபையின் அங்கத்தவர்கள் வங்கியின் முக்கிய முகாமைத்துவ ஆளணியினராவர். பிரதம முகாமைத்துவ ஆளணியினருடனான கொடுக்கல்வாங்கல்கள் பற்றிய விபரங்கள் பின்வருமாறு:

**55.3 பிரதம முகாமைத்துவ ஆளணியினருக்கான கொடுப்பனவு**

| | 2018 ரூ.000 | 2017 ரூ.000 |
|---|---|---|
| குறுகிய கால ஊழியர் நலன்கள் | **161,833** | 123,072 |

மேற்படி கொடுப்பனவுகளுக்கு மேலதிகமாக பிரதம முகாமைத்துவ ஆளணியினருக்கு அவர்களுடான தொழில் ஒப்பந்தங்களுக்கமைய வங்கியினால் காசல்லாத நன்மைகளும் வழங்கப்படுகின்றன.

**55.4 பிரதம முகாமைத்துவ ஆளணியினருடனான ஏனைய கொடுக்கல்வாங்கல்கள்**

| | 2018 ரூ.000 | 2017 ரூ.000 |
|---|---|---|
| பிரதம முகாமைத்துவ ஆளணியினருக்கான கடன்கள் | **71,459** | 73,141 |

அனைத்துக் கடன்களும் கடன் வகை மற்றும் மாதாந்த மீளச் செலுத்துகையைப் பொறுத்து 2 சதவீதம் தொடக்கம் 7 சதவீதம் வரையிலான வட்டி வீத வீச்சிடையுடன் கூடிய போதியளவு பாதுகாப்பினைக் கொண்டுள்ளன.

**55.5 தொழில் நிலைக்குப் பிந்திய நலவுரிமைத் திட்டங்களுடனான கொடுக்கல்வாங்கல்கள்**

| | 2018 ரூ.000 | 2017 ரூ.000 |
|---|---|---|
| செலுத்தப்பட்ட மற்றும் செலுத்தப்பட வேண்டிய பங்களிப்புக்கள் | **82,798** | 69,573 |

குறிப்பு 34 இல் தரப்பட்டுள்ளவாறு ஓய்வூதியம் மற்றும் ஏனைய ஓய்வூதியத் திட்டத்திற்கும் பின்னரான திட்டங்களுக்கு வங்கி பல்வேறு தொகைகளையும் ஊழியர் சேம நிதியத்திற்கு ரூ.718.71 மில்லியன் (2017இல் ரூ.542.58 மில்லியன்) பங்களிப்புச் செய்துள்ளது. வழமையான வியாபார காலப்பகுதியில் வங்கியானது அதன் தொழில்நிலைக்குப் பின்னைய திட்டங்களுக்கு வங்கித்தொழில் மற்றும் நிதியியல் பணிகளை வழங்கியது. அத்தகைய திட்டங்களுடனான மீதிகளின் தொகை குறிப்பு 30 இல் தரப்பட்டுள்ளது.

**56. எதிர்பாராப் பொறுப்புக்களும் கடப்பாடுகளும்**

**56.1 நிதி உத்தரவாத ஒப்பந்தங்கள்**

வங்கியானது அரசாங்கத்தின் அல்லது அதன் முகவராண்மைகளினதும் நிறுவனங்களினதும் முகவராகச் செயற்பட்டு, பொதுத் திறைசேரியினால் இ.ம. வங்கிக்கு வழங்கப்பட்டுள்ள பதில் உத்தரவாதங்களைப் பயன்படுத்தி பல்வேறு தரப்பினர்களுக்கும் உத்தரவாதங்களை வழங்குகின்றது. 2018 திசெம்பர் 31இல் உள்ளவாறு அத்தகைய தீர்க்கப்படாத பிணைகள் எதுவும் இருக்கவில்லை.

**56.2 கொடுகடன் உத்தரவாதங்கள்**

பங்கேற்பு நிதி நிறுவனங்களுக்கு வழங்கப்படுகின்ற வெளிவாரியான கடன் தொகைகளின் மூலம் சிறிய மற்றும் மத்தியதர தொழில் முயற்சிகளுக்கு நிதியிடல், இத் தொழில் முயற்சிகளுக்கு வழங்கப்படுகின்ற கடன்களுக்கான உத்தரவாதப் பத்திரங்களை வெளியிடல், உத்தரவாதப் பத்திர தவணைப் பணங்களைச் சேகரித்தல், கடன் உத்தரவாதப் பத்திர நிதியத்தின் நிர்வாகம் மற்றும் செலுத்தத் தவறுதல்கள் நடைபெறாதென்பதை உறுதி செய்தல், கடன் நிதியம் உரிய விதத்தில் பயன்படுத்தப்படுகின்றதென்பதை உறுதி செய்வதற்காக கடன் வழங்கியதன் பின்னர் கடன் விசாரணைகளை நடத்துதல் ஆகிய மூலம் வங்கியின் பிரதேச அபிவிருத்தித் திணைக்களமானது மீள்நிதியிடல் கடன் வசதித் தொழிற்பாடுகளில் ஈடுபடுகின்றது. ஆண்டினுள் பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்தினால் தொடர்ந்து மீள்நிதியிடல் கடன் வசதிகள் வழங்கப்பட்டனவென்பதோடு, இத் திட்டத்தின் கீழ் கடன் வழங்குகின்ற பங்கேற்புக் கடன் நிறுவனங்களில் உருவாகின்ற நட்டங்கள் தொடர்பாக வங்கியானது கடன் உத்தரவாதப் பத்திரங்களை ஏற்பாடு செய்தது. இது கடன்பெறுநர்களின் செலுத்தத் தவறுதல்களுக்கான ஒரு உத்தரவாதப்பத்திரமல்லவென்பதோடு நட்டங்களுக்காக மட்டுமேயாகும். அதாவது, பங்கேற்புக் கடன் நிறுவனங்களின் மூலம் கடன்களை மீள அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதன் பின்னர் உருவாகின்ற நட்டங்களுக்காக மாத்திரம் உரிமைகள் கோரப்படுதல் வேண்டும். இவ் ஏற்பாடுகளின் கீழ் எழக்கூடிய எதிர்பாராப் பொறுப்புக்களுக்கான தொகைகள் பின்வருமாறு:

**உள்நாட்டு வர்த்தக வங்கிகள் - கடன் உத்தரவாதங்கள் தொடர்பானது:**

| | வெளிநின்ற உத்தரவாதங்களின் தொகை | |
|---|---|---|
| | 2018 ரூ.000 | 2017 ரூ.000 |
| தொடர்புடைய தரப்பினர்கள் | 784 | 1,798 |
| மொத்தக் கடன் உத்தரவாதங்கள் | **784** | 1,798 |

உள்நாட்டு வணிக வங்கிகளின் கடன் உத்தரவாதங்கள் காரணமாக வங்கியானது 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான எதிர்பார்க்கப்பட்ட கடன் நட்டமாக ரூ.0.40 மில்லியனை (2018 சனவரி 01 இல் ரூ. 0.41 மில்லியன்) பதிவுசெய்தது.

**56.3 நம்பகமான செயற்பாடுகள்**

நாணய விதிச் சட்ட ஏற்பாடுகளின் கீழ் வங்கியானது நம்பகமான செயற்பாடுகளை மேற்கொள்கின்றது. இவ் வகையான இயலுமையில் செயற்படுவதானது பல்வேறு தரப்பினரது சார்பாக நிதியங்களை வைத்திருக்க அல்லது இடம்பெறச் செய்கின்றது. ஆனாலும் அச் செயற்பாடுகளின் நிமித்தமாக எழும் எந்தப் பொறுப்பையும் வங்கி எதிர்பார்க்கவில்லை.

**56.4 சட்ட ரீதியான உரிமைக் கோரல்கள்**

2018 திசெம்பர் 31இல் வங்கிக்கெதிரான பல சட்ட நடவடிக்கைகள் எஞ்சியிருந்தன. குறிப்பிடத்தக்க ஏதேனும் நட்டங்கள் ஏற்படுவது சாத்தியமற்றதென்ற அபிப்பிராயத்தை வங்கி கொண்டுள்ளதால், எவ்வித ஒதுக்குகளும் மேள்கொள்ளப்படவில்லை.

**56.5 கடப்பாடுகள்**

(அ) 2018 திசெம்பர் 31ஆம் திகதியுள்ளவாறு, ஆதனங்கள், பொறிகள் மற்றும் கருவிகளின் கையேற்புத் தொடர்பில் வங்கி ரூ.577.99 மில்லியன் இனை மூலதனக் கடப்பாடாகக் கொண்டிருந்தது.

(ஆ) 2018 திசெம்பர் 31ஆம் நாளன்று வெளிநின்ற முன்னோக்கிய செலாவணிக் கொடுக்கல்வாங்கல்கள் பின்வருமாறு காணப்பட்டன.

| முன்னோக்கிய செலாவணி ஒப்பந்தங்கள் | | 2018 '000 | 2017 '000 |
|---|---|---|---|
| முன்னோக்கிய செலாவணி விற்பனைகள் | | | |
| | ஐ.அ.டொலர் | 726,310 | 1,850,735 |
| | யூரோ | - | 2 |
| முன்னோக்கிய செலாவணி கொள்வனவுகள் | | | |
| | ஐ.அ.டொலர் | 388,908 | 5,000 |
| | யூரோ | - | 400 |

**57. நிதியியல் சொத்துக்கள்**

சாதாரண வியாபாரத்தின் போது பன்னாட்டு மற்றும் உள்நாட்டு நாணயங்களில் குறிப்பிடப்பட்ட கடன்பத்திரங்கள் ஆகிய நிதியியல்

சொத்துக்களை முதன்மையாக பரிமாற்றுவதன் விளைவாக வங்கியானது பரிமாற்றத்தினுள் உள்நுழைகின்றது. கணக்கீட்டு கொள்கைக் குறிப்பு 5.3.3இல் குறிப்பிட்டதன் படி பரிமாற்றப்பட்ட நிதியியல் சொத்துக்கள் தொடர்ச்சியாக முழுமையாக அல்லது வங்கியின் தொடர்ச்சியான ஈடுபாட்டின் அளவிற்கு அங்கீகரிக்கப்படலாம் அல்லது அவை முழுமையாக அங்கீகரிக்கப்படாமலும் இருக்கலாம்.

வங்கியானது நிதியியல் சொத்துக்களின் முழுமையாக அங்கீகரிக்காத போதும் பரிமாற்றுகின்றது அல்லது வங்கியானது பின்வரும் நடவடிக்கைகள் மூலம் தொடர்ச்சியாக முதன்மையாக ஈடுபடுகின்றது.

மீள்கொள்வனவு ஒப்பந்தங்களின் கீழ் விற்கப்பட்ட பிணையங்கள்
கடன் பிணையங்கள்
பிணையாகக் வைக்கப்பட்ட பிணையங்கள்

**57.1 பரிமாற்றப்பட்ட நிதியியல் சொத்துக்கள் அவை முழுமையாக அங்கீகரிக்கப்படாதவை**

**(அ) மீள்கொள்வனவு ஒப்பந்தங்களின் கீழ் விற்கப்பட்ட பிணையங்கள்**

மீள்கொள்வனவு ஒப்பந்தங்களின் கீழ் விற்கப்படும் பிணையங்களின் பரிமாற்றல்களானவை வங்கியின் நாணயக் கொள்கை செயற்பாட்டின் ஒரு பகுதியாக செயற்படுத்தப்படுகின்றது மற்றும் இது நிதியியல் நிலைமைகள் அறிக்கைகளில் "இலங்கை அரச பிணையங்கள்" இன் கீழ் அவை முழுமையாக தொடர்ச்சியாக அங்கீகரிக்கப்பட்டது ஏனெனில் அது குறிப்பிடத்தக்களவு அனைத்து இடர்களையும் மற்றும் உரிமை வெகுமதிகளையும் கொண்டுள்ளது. காசு பரிசீலனைகள் கொடுக்கப்பட வேண்டும் மற்றும் அட்டுறு வட்டியானது நிதியியல் நிலைமைகள் அறிக்கையின் உள்நாட்டு நிதியியல் பொறுப்புக்களின் மீள்கொள்வனவு ஒப்பந்தத்தின் கீழ் விற்கப்பட்ட பிணையங்களின் கீழ் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

(ஆ) கடன் பிணையங்கள்

கடன் பிணையங்கள் விபரிப்பது யாதெனில் கட்டணத்தினால் உருவாக்கப்பட்ட சந்தை நடைமுறைகளில் பிணையங்கள் தற்காலிக அடிப்படையில் ஒரு தரப்பினரிடமிருந்து (கடன்கொடுப்பவர்: உதாரணம் இ.ம.வ) இன்னொரு தரப்பிக்கு (கடன்பெறுபவர்) பரிமாற்றப்படும். கடன்வாங்கியவர் ஒப்பந்த தவணை முடிவில் அல்லது கேட்கப்படும் போது திரும்ப செலுத்த வேண்டியது கட்டாயமானதாகும். பல்வேறு வழங்குநர்களினால் வழங்கப்படும் முறிகள் மற்றும் பல் தேசிய முறிகள் ஆகியவற்றின் கூட்டுக்காப்பாளராக கிளியரிங் கவுஸ் தற்போது தெரிவுசெய்யப்பட்டுள்ளது. அந்த முறிகளின் கேள்வியின் அடிப்படையில் அவற்றை கடன்கொடுப்பதற்கு கிளியரிங் கவுசினை ஏதுவாக்குவதற்காக அதனுடன் இலங்கை மத்திய வங்கி ஒப்பந்த ஒன்றில் கையெழுத்திட்டுள்ளது. இலங்கை மத்திய வங்கி கடன்கொடுக்கும் நடவடிக்கையில் ஈடுபடாத போதும் கிளியரிங் கவுஸ் நேரடியாக கடன்படுநர்களுக்கு அவற்றைக் கொடுக்கும் இச்செயற்பாடு தானாக முறிகடன் வழங்கல் என அழைக்கப்படும் ஒவ்வொரு மாத இறுதியிலும் தானாக கடன்வழங்கும் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட முறிகள் ஏதேனும் இருந்தால் அவற்றின் தானாக முறிகடன் வழங்கலின் கட்டண வருமானத்தினை கட்டுக்காப்பாளர் அனுப்பி வைப்பார். வங்கியானது நிதியியல் நிலைமைகள் அறிக்கையில் பிணையங்களை தொடர்ச்சியாக முழுமையாக அங்கீகரிக்கின்றது. ஏனெனில் குறிப்பிடத்தக்களவு முழுமையான இடர் மற்றும் உரிமை வெகுமதிகளை கொண்டிருப்பதனால் ஆகும். இந்தப் பிணையங்கள் நிதியியல் நிலைமைகள் அறிக்கையில் ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தின் ஊடாக சீர்மதிப்புப் பெறுமதியிலான பிணையங்களில் வெளிப்படுத்தப்படுகின்றது.

**(இ) பிணையாக வைக்கப்பட்ட பிணையங்கள்**

பிணையங்கள் தீர்ப்பனவு செயன்முறைக்கு வசதியளிக்கும் பொருட்டு அவுஸ்திரேலியா டொலர் 35.0 மில்லியன் கொண்டு செல்லும் பெறுமதியுடைய பிணையங்கள் வங்கியினால் யூரோ கிளியர் வங்கியில் பிணையிடப்பட்டதுடன் ஐ.அ.டொலர் 30மில்லியன் பெறுமதி கொண்ட கொடுகடன் வசதி பெறப்பட்டது. பிணையிடப்பட்ட பிணையங்கள் யூரோ கிளியரில் தனியாக கணக்கில் வைத்திருக்கப்படுகின்றன.

யூரோ கிளியர் முறைமையில் பங்குபற்றுவதற்கு பொது நிலமைகளின் ஆளுகையுடன் கடன்விரிவாக்கத்தினை குறிப்புடன் இலங்கை மத்திய வங்கி கணக்குச் செயற்பாடுகளில் பின்வரும் விமர்சனம் வங்கியின் கடன்வசதிகள் ஐ.அ.டொலர் 20.0 மில்லியனுக்கு 2017.01.31 ஆம் திகதியில் இருந்து நடைமுறைக்கு வரும் வகையில் குறைவடைந்துள்ளது.

இக்கொடுக்கல்வாங்கல்களை வங்கியானது "பிணையங்கள் உடன்படிக்கையின் ஆளுகைக்கு உட்பட்ட யூரோ கிளியர் முறைமையின் பங்கேற்பாளர்களின் பாதுகாக்கப்பட்ட கடன்பாடுகள்" மற்றும் "பொது நிபந்தனைகளின் ஆளுகைக்குட்பட்ட யூரோ கிளியர் முறைமையின் பங்கேற்பாளர்களுக்கான கடன்களின் நீட்சி" ஆகிய வழிகாட்டல்களின் கீழான விதிமுறைகளை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்படுகின்றது.

வங்கியானது நிதியியல் நிலைமைகள் அறிக்கையில் பிணையங்களை தொடர்ச்சியாக முழுமையாக அங்கீகரிக்கின்றது. ஏனெனில் குறிப்பிடத்தக்களவு முழுமையான இடர் மற்றும் உரிமை வெகுமதிகளைக் கொண்டிருப்பதனால் ஆகும். இந்தப் பிணையங்கள் நிதியியல் நிலைமைகள் அறிக்கையில் ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தின் ஊடான சீர்மதிப்புப் பெறுமதியில் ஆன பிணையங்களே வெளிப்படுத்தப்படுகின்றது.

| | 2018 | 2017 | |
|---|---|---|---|
| | நிதியியல் சொத்துக்கள் ஏ.அ.உ.வ.சீ. பெ | நிதியியல் சொத்துக்கள் விற்பனைக்கு உள்ளவை | நிதியியல் பொறுப்புக்கள் பெறுமதி இழப்புச் செலவு |
| | ரூ.000 | ரூ.000 | ரூ.000 |
| **சொத்துக்கள்** | | | |
| மீள்கொள்வனவு ஒப்பந்தத்தின் கீழ் விற்கப்பட்ட பிணையங்கள் | - | 6,366,710 | - |
| கடன் பிணையங்கள் | 3,714 | 2,466 | - |
| பிணையிடப்பட்ட பிணையங்கள் | 4,841,397 | 4,583,944 | - |
| சொத்தின் கொண்டு செல்லும் தொகை | 4,845,111 | 10,953,120 | - |
| **தொடர்புடைய பொறுப்புகள்** | | | |
| மீள்கொள்வனவு ஒப்பந்தத்தின் கீழ் விற்கப்பட்ட பிணையங்கள் | - | - | 6,503,884 |
| தொடர்புடைய பொறுப்புகளின் கொண்டு செல்லும் தொகை | - | - | 6,503,884 |

**58. நம்பிக்கை மற்றும் கட்டுக்காப்பு நடவடிக்கைகள்**

மத்திய வங்கி பொதுவாக நம்பிக்கைப் பொறுப்பாளராகவும் நம்பகத் தகுதிகளிலும் கடமை புரிவதனால் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களை அரசாங்கம், நம்பிக்கைப் பொறுப்புக்கள், ஓய்வூதிய நலத் திட்டங்கள் மற்றும் பிற நிறுவனங்களின் சார்பில் வைத்திருக்க அல்லது வழங்க முன்வருகின்றது. வங்கியினால் மேற்கொள்ளப்பட்ட முக்கியமான நம்பிக்கைப் பொறுப்பு நடவடிக்கைகள் பின்வருமாறு:

**58.1** வங்கியானது, இலங்கை அரசாங்கத்தின் சார்பில், வெளிநாட்டு நிதி உதவியின் கீழான அபிவிருத்தித் திட்டங்கள் மற்றும் கடன்

முறைகளின் கீழ் கிடைக்கும் பல்வேறு வெளிநாட்டுக் கடன்கள் மற்றும் கொடைகளின் பகிர்வையும் மீள்செலுத்துதலையும் கையாள்கின்றது. மேலும், பல்வேறு வெளிநாட்டுக் கடன்கள் மற்றும் கொடைகளின் கீழ் இணைக்கிணை நிதியத்தினை இலங்கை அரசாங்கத்தின் சார்பில் பெற்று அத்தகைய நிதிகளை வழங்கும் முகவராண்மைகளது வேண்டுகோளின்படி திறைசேரி உண்டியல்களில் முதலிடுகின்றது.

**58.2** வங்கியே ஊழியர் சேம நிதியத்தின் கட்டுக்காப்பாளர் ஆகும். சட்ட நியதிகளின்படி பங்களிப்புக்கள் மற்றும் மிகைக் கட்டணங்களை சேகரித்தல், முதலீடுகளிலிருந்து வருமானமீட்டல், ஊழியர் சேம நியதித்தில் பதிவு செய்யப்பட்ட அங்கத்தவர்களது முறையான கணக்குகளைப் பேணி வருதல், மிகையான நிதிகளை முதலீடு செய்தல், மற்றும் அங்கத்தவர்களுக்கு நலக் கொடுப்பனவுகளை மேற்கொள்ளுதல் என்பன நாணயச் சபையின் செயற்பாடுகளில் அடங்கும்.

**58.3** மத்திய வங்கியினால் உரிமம் வழங்கப்பட்ட வங்கியியல் நிறுவனங்களிற்கும், 1972ஆம் ஆண்டின் 5ஆம் இலக்க கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் கீழ் வங்கித்தொழிலை மேற்கொள்ளும் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் ஏற்படையதான தன்னார்வ வைப்புக் காப்புறுதித் திட்டமாக விளங்கும் வைப்புக் காப்புறுதித் திட்டத்தினை வங்கியே நிருவகிப்பதுடன் 2010 ஒத்தோபர் 01ஆம் நாள் தொடக்கம் நிதிகள், 2010 செத்தெம்பர் 28ஆம் நாளிடப்பட்ட 1673/ 11 இலக்க அரச வர்த்தமானியின்படி உருவாக்கப்பட்ட இலங்கை வைப்புக் காப்புறுதித் திட்டத்திற்கு மாற்றீடு செய்யப்பட்டுள்ளது.

**58.4** 2010 செத்தெம்பர் 28ம் நாளிடப்பட்ட 1673/ 11 இலக்க அரச வர்த்தமானியின்படி வங்கி 2010 ஒத்தோபர் 01 ஆம் நாள் தொடக்கம் இலங்கை வைப்புக் காப்புறுதித் திட்டம் என்ற பெயரில் வைப்பாளர்களின் நிதியினைப் பாதுகாக்கும் தேசிய நல நடவடிக்கையொன்றாக கட்டாய வைப்புக் காப்புறுதித் திட்டமொன்றினை ஏற்படுத்தியது.

அனைத்து உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள், உரிமம்பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள் மற்றும் உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகள் என்பன இத்திட்டத்தின் அங்கத்தவர்களாக இருத்தல் வேண்டும். இதன்படி, 76 நிறுவனங்கள் இத்திட்டத்தின் உறுப்பினர்களாகவுள்ளனர். காப்புறுதி செய்யப்படவுள்ள வைப்புக்கள் மேலே சொல்லப்பட்ட அரச வர்த்தமானி அறிவித்தல் 5.2 இன்படி விசேட விலக்கல்களுடன், அனைத்துக் கடன் கருவிகளும் நீங்கலான அங்கத்துவ நிறுவனங்களின் கேள்வி, தவணை மற்றும் சேமிப்பு வைப்புப் பொறுப்புக்கள் மற்றும் ஆரம்பத்தில் வைப்பாளர்களாகயிருந்து பின்னர் அவ்வைப்புக்கள், 2012 சனவரி 01இற்கு முன்னர் 2010 மற்றும் 2011ஆம் ஆண்டுகளில் நாணயச் சபையின் வழிகாட்டலின் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்ட வணிக மீளமைத்தல் திட்டங்களின் ஒரு பகுதியாக உரிமை மூலதனமாக மாற்றப்பட்ட பங்குதாரர்களின் பங்குகளின் பெறுமதி என்பவற்றை உள்ளடக்கும்.

வைப்புக் காப்புறுதி நிதியமானது, சுய விருப்பு வைப்புக் காப்புறுதித் திட்டத்தின் முதலீடான ரூ.350.20 மில்லியன் மாற்றல் மற்றும் கைவிடப்பட்ட சொத்தாக உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளிலிருந்து சேகரிக்கப்பட்டவற்றிலிருந்து செய்யப்பட்ட ரூ.1,168.31 மில்லியன் முதலீட்டு மாற்றல்களின் மூலமும் உருவாக்கப்பட்டது. 2018 திசெம்பர் 31இல் நிதியத்தின் அளவு ரூ.53.3பில்லியனாகவும் (தற்காலிகமானவை) தற்பொழுது, வைப்பாளரொருவருக்கு, நிறுவனமொன்றுக்கு கொடுபடத்தக்க இழப்பீட்டுத்தொகை ரூ.600,000.00 அல்லது வெளிநாட்டு நாணய வைப்புக்களாக இருக்குமிடத்து அதற்குச்சமனான தொகைக்கு மட்டுப்படுத்தப்படல் வேண்டும். இழப்பீட்டுக் கொடுப்பனவிற்கு நாணயச் சபையோ அல்லது இலங்கை மத்திய வங்கியோ பொறுப்பேற்கமாட்டாது என்பதுடன் ஏதேனும் அனுமதிக்கப்பட்ட கடன்பாடுகள் மற்றும் பெறப்பட்ட உதவுதொகைகள் உட்பட வைப்புக் காப்புறுதி நிதியத்தில் கிடைக்கத்தக்கதாகவுள்ள நிதியம் அல்லது ஒதுக்கப்பட்ட நிதியத்திற்கு ஏற்றவாறு மட்டுப்படுத்தப்படும். நிதியத்தில் செலவு வைக்கப்பட்டுள்ள தொகைக்கு மேலதிக ஏதாவது பொறுப்பு காணப்படுமானால் நாணயச் சபையோ இலங்கை மத்திய வங்கியோ பொறுப்பேற்க மாட்டாது.

2013 நவெம்பர் 22 ஆம் திகதியிலிருந்து இத்திட்டம் "இலங்கை வைப்புக் காப்புறுதி மற்றும் திரவத்தன்மை உதவித்திட்டம்" என மீளப்பெயரிடப்பட்டதுடன் வைப்பு காப்புறுதி நிதி "இலங்கை வைப்புக் காப்புறுதி மற்றும் திரவத்தன்மை உதவி நிதி" என மீளப்பெயரிடப்பட்டது.

தீர்மானங்கள் மற்றும் நடைமுறைப்படுத்தல் திணைக்களத்தில் நிறுவப்பட்டுள்ள வைப்புக் காப்புறுதிப் பிரிவு நாணயச் சபையினால் ஒப்புதலளிக்கப்பட்டவாறான பணிப்புரைகள்/ ஒழுங்குவிதிகள் மற்றும் கொள்கைகளின் நியதிகளுக்கிணங்க தீர்மானங்கள் மற்றும் நடைமுறைப்படுத்தல் திணைக்களப் பணிப்பாளரின் அறிவுறுத்தல்கள் மற்றும் மேற்பார்வையின் கீழ் இப்பிரிவு, இத்திட்டத்தின் தொழிற்பாடுகளுக்கும் முகாமைத்துவத்திற்கும் பொறுப்பாக இருப்பதுடன் வங்கியின் நிதியியல் கூற்றுக்களிலிருந்தும் தனித்தனியாக ஏடுகளையும், கணக்குகளையும் பேணல் வேண்டும். அத்துடன் கணக்காய்வாளர் நாயகம் இப்பிரிவின் கணக்காய்வாளராக இருத்தல் வேண்டும்.

**58.5** நாணயச் சபையினால் பொறுப்பளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின் கீழ், பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனிகள் விடயத்தில் வங்கியானது ஒழுங்குபடுத்துதல் மற்றும் மேற்பார்வைத் தொழிற்பாடுகள் மற்றும் தொடர்புடைய விடயங்களை மேற்கொள்கின்றது. இத் தொழிற்பாடுகளை நிறைவேற்றும் அதேவேளையில் பணிப்புரைகளுக்கு இணங்கியொழுகத் தவறும் நிதிக் கம்பனிகள் சார்பாக வேறுபட்ட நடவடிக்கைகளை எடுத்து வருகின்றதுடன் கடன் தீராற்றலற்ற முறிவு நிலைக்குப் பொறுப்பாகவுள்ள ஆட்களினுடைய சொத்துக்களை கையகப்படுத்தல் உட்பட பிணையத்தின் ஒரு வடிவமாக நாணயச் சபையைக் கொண்டு பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.

58.6 வங்கி மேற்பார்வைப் பணிப்பாளரினால் விடுக்கப்பட்ட சுற்றறிக்கையின்படி, வேளாண்மைக்கான குறைந்தபட்ச முற்பணமான 10 சதவீதம் வரையறையினைப் பேணாத வங்கிகள், மத்திய வங்கியின் பிரதேச அபிவிருத்தி திணைக்களத்தினால் தொழிற்படுத்தப்படும் மீள்நிதியிடல் நிதியத்திற்கு அப்பற்றாக்குறையினை வழங்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டன. பிரதேச அபிவிருத்தித் திணைக்களம், இலங்கை வங்கி, மக்கள் வங்கி, பிரதேச சங்வர்த்தன வங்கி மற்றும் லங்கா புத்திர அபிவிருத்தி வங்கி என்பனவற்றினூடாகத் திரட்டப்பட்ட அத்தகைய தொகையை விஸ்கம் மீள்நிதியிடல் திட்டத்தின் கீழ் வேளாண்மைக்கு மீள்நிதியிடலாக வழங்கியது. 2018 திசெம்பர் 31இல், அனைத்து திரட்டப்பட்ட நிதியங்களும் வங்கிகளுக்கு மீளளிக்கப்பட்டன (2016 திசெம்பர் 31இல் வெளிநின்ற தொகை ரூ.554.26 மில்லியன்). 2018 திசெம்பர் 31இல், மீள் நிதியிடல் திட்டத்தின் கீழ் வெளிநின்ற கடன்கள் எதுவுமில்லாமல் காணப்பட்டதுடன் (2017 - ரூ.6.83 மில்லியன்), ரூ. 0.17 மில்லியன் (2017 - ரூ.1.83 மில்லியன்) வழங்கப்பட்ட கடன்களுக்கான வட்டியாகப் பெறப்பட்டது. மேலும் முதலீட்டிலிருந்து ரூ.28.12 மில்லியன் (2017 - ரூ.84.72 மில்லியன்) வருமானத்தை உழைத்துக்கொண்டது.

58.7 பிரதேச அபிவிருத்தித் திணைக்களம், வங்கியின் நாணயச் சபையின் சார்பில் இலங்கை அரசாங்கம் மற்றும் வெளிநாட்டுக் கொடையாளர்களின் நிதியிடல் செயற்றிட்டங்கள் தொடர்பாக, இலங்கை அரசாங்கத்தின் முகவராகத் தொழிற்படுகிறது. இலங்கை மத்திய வங்கியினால் நிதியிடப்பட்ட செற்றிட்டங்களையும் பிரதேச அபிவிருத்தித் திணைக்களம் நடைமுறைப்படுத்துகிறது.

முடிவடைந்த செயற்றிட்டங்கள்

| செயற்றிட்டத்தின் பெயர் | நிதியத்தின் மொத்த ஒதுக்கு (மில்.) | | கடனின் நோக்கம் | பங்கேற்கும் நிதியியல் நிறுவனங் களுக்கு வழங்கப்பட்ட மீள் நிதியம் (ரூ. மில்.) | அடிப்படைப் பண்புகள் |
|---|---|---|---|---|---|
| தேயிலை அபிவிருத்திச் செயற்றிட்டம் | ஐ.அ.டொலர் | 24.50 | தேயிலை சிறு உடமையாளர் வருமானத்தினை அதிகரித்தல் மற்றும் செயற்றிட்டப் பிரதேசங்களில் இயற்கைச் சூழலை மேம்படுத்துதல் | 2,550.90 | திறைசேரி துணைச் செயலாளருக்கு மாற்றல் செய்வதற்காக அட்டவணை யிடப்பட்ட நாளன்று பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களிட மிருந்து அறவீடுகளைச் சேகரித்தல் |
| இரண்டாவது நீண்ட காலப் பயிர் அபிவிருத்திச் செயற்றிட்டம் | சிஎஉ | 11.56 | நீண்ட கால பயிர் துறையினை வர்த்தகப்படுத்தல், உற்பத்தியை அதிகரித்தல், நாற்றுமேடை அபிவிருத்தி, அறுவடைக்குப் பின்னரான கையாளல், பதனிடல் மற்றும் சந்தைப்படுத்தல் | 1,453.11 | |
| பெருந்தோட்டத்துறை சீர்திருத்த செயற்றிட்டம் | ஐ.அ.டொலர் | 40.00 | உற்பத்தித்திறனையும் இலாபத் தன்மையினையும் அதிகரிப்பதற்காக மற்றும் இலங்கையின் பெருந்தோட்டத் தொழில் துறையில் அநுகூலங்களைப் பேணுவதற்காக பெருந்தோட்டத் துணைத்துறையில் கொள்கை மற்றும் நிறுவன ரீதியான சீர்திருத்தங்களுக்கு உதவியளித்தல் | 5,200.00 | |
| சுசகன நிதி மற்றும் குத்தகைக் கம்பனி | இல.ரூ | 352.69 | சுனாமியினால் பாதிக்கப்பட்ட தொழில் முயற்சிகளை மீளத் தொடங்குவதற்கான கடன் வசதிகள் | 351.06 | |
| சிறிய வியாபாரங்களை மீள எழுச்சிப்படுத்தும் நிகழ்ச்சித்திட்டம் | இல.ரூ | 2,656.00 | சுனாமியினால் பாதிக்கப்பட்ட சிறிய நடுத்தர தொழில் முயற்சிகளை மீளத் தொடங்குவதற்கான கடன் வசதிகள் | 2,663.40 | |
| சிறிய வியாபாரங்களை மீள் எழுச்சிப்படுத்தும் நிகழ்ச்சித்திட்டம் - சுழலும் நிதியம் | இல.ரூ | 150.00 | சுனாமியினால் பாதிக்கப்பட்ட சிறிய நடுத்தர தொழில் முயற்சிகளை மீளத் தொடங்குவதற்கான கடன் வசதிகள் | 122.72 | |
| தேர்ச்சி அபிவிருத்தி செயற்றிட்டம் | இல.ரூ | 94.31 | உயர்தர தொழிற்படையை உருவாக்குவதற்காகவும் தேர்ச்சி பொருத்தப்பாடின்மையை நீக்குவதற்காகவும் தேர்ச்சிப் பயிற்சியின் தரம் மற்றும் பொருத்தப்பாட்டை மேம்படுத்தல் | 94.59 | |
| நகர சுற்றாடல் உட்கட்டமைப்பு அபிவிருத்திச் செயற்றிட்டம் | ஐ.அ.டொலர் | 4.00 | நகரத்திலும் நகர்ப் புறங்களிலும் வசிக்கும் மக்களின் சூழல் வசதிகள், நலம் மற்றும் சுகாதார நிலைமைகளை மேம்படுத்துதல் | 369.15 | |
| வீடமைப்பு உத்தரவாத குறைந்த வருமான வீடமைப்பு புகலிடச் செயற்றிட்டம் | ஐ.அ.டொலர் | 25.00 | நாட்டிலுள்ள குறைந்த வருமானம் பெறுபவர்களுக்கு வீடுகளைக் கட்ட, புதுப்பிக்க, வாழிடங்களை விரிவாக்க உதவுதல் | 1,362.00 | |
| நகர அபிவிருத்தி குறைந்த வருமான வீடமைப்புச் செயற்றிட்டம் | சிஎஉ | 15.10 | வீடமைப்பினை முன்னேற்றுவதற்காக குறைந்த வருமான குடியிருப்பாளர்களுக்கு மூலதனத்தினை வழங்குதல் | 1,915.76 | |
| வடமேல் மாகாண நீர் மூலவள அபிவிருத்திச் செயற்றிட்டம் | ஐ.அ.டொலர் | 1.80 | செயற்றிட்டப் பிரதேசத்தில் வசிக்கும் மக்களின் பொருளாதார, சமூக, ஊட்டச்சத்து நலனோம்புகைகளை மேம்படுத்துதல் | 102.76 | |
| மாத்தளை பிரதேச பொருளாதார மேம்பாட்டுச் செயற்றிட்டம் | சிஎஉ | 2.00 | சிறிய தொழில் முயற்சியாளர்களின் வருமானத்தினை நிரந்தரமாக உயர்த்துதல் மற்றும் வலுப்படுத்தல் | 249.06 | |
| மத்திய மலைநாட்டு நீண்ட கால பயிர் அபிவிருத்திச் செயற்றிட்டம் | சிஎஉ | 11.56 | மத்திய மலைநாட்டுப் பகுதியில் நீண்ட காலப் பயிர்களின் உற்பத்தியை அதிகரிக்க கடன் வசதி வழங்குதல் | 642.00 | |
| வேளாண்மை புத்தாக்க செயற்றிட்டம் | சிஎஉ | 17.05 | வடக்கு, கிழக்கு மாகாணங்களிலும் ஐந்து எல்லை மாவட்டங்களிலுமுள்ள சிவில் குழப்பங்களினால் பாதிக்கப்பட்ட மக்களின் புனர்வாழ்விற்கும் சொத்துக்களின் புனரமைப்பிற்கும் உதவுதல் | 843.00 | |
| சிறு உடமையாளர் தேயிலை அபிவிருத்திச் செயற்றிட்டம் | ஐ.அ.டொலர் | 12.60 | சிறு உடமையாளர் தேயிலை துறையினை அபிவிருத்தி செய்தல் மற்றும் தேயிலைக்கான வசதிகளை புனரமைத்தல் | 645.93 | |
| வறுமை ஒழிப்பு நுண்பாக நிதிச் செயற்றிட்டம் | யென் | 1,368.00 | வருமான உருவாக்க நடவடிக்கைகளுக்காக முறையான கொடுகடன் வழிப்படுத்தல்களை மேற்கொள்வதற்காக காத்திரமான கொடுகடன் வழங்கல் பொறிமுறை யொன்றினை ஏற்படுத்துதல் | 1,402.45 | |
| சிறு வேளாண்மையாளர் நிலமற்றோர் கொடுகடன் செயற்றிட்டம் | ஐ.அ.டொலர் | 17.40 | குறைந்த வருமானம் பெறும் மக்களிடையே தொழில் உருவாக்கத்தினையும் சேமிப்புப் பழக்கத்தினையும் மேம்படுத்தலும் செலவுச் சிக்கனமானதும் உறுதியானதுமான நுண்பாக கொடுகடன் விநியோக முறைமையை நிறுவுதலும் | 345.69 | |
| கேகாலை ஒருங்கிணைக்கப்பட்ட கிராமிய அபிவிருத்திச் செயற்றிட்டம் | சிஎஉ | 1.50 | வருமானத்தை உருவாக்கும் நடவடிக்கைகளினை மேம்படுத்துவதன் மூலம் செயற்றிட்டப் பிரதேசங்களிலுள்ள மக்களின் வாழ்க்கை நிலைமைகளைத் தரமுயர்த்துதல் | 148.00 | |
| தென் மாகாண கிராமிய அபிவிருத்திச் செயற்றிட்டம் | சிஎஉ | 27.90 | தென் மாகாணத்திலுள்ள மக்களின் வாழக்கைத் தரத்தினை மேம்படுத்துதல் | 564.00 | |
| ஐரோப்பிய முதலீட்டு வங்கியின் ஒப்பந்தம் பீ | யூரோ | 10.00 | சுனாமியால் நேரடியாகப் பாதிக்கப்பட்ட சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சிகளை மீளக் கட்டியெழுப்புதல் | 1,553.27 | |
| சுசகன | இல.ரூ | 3,000.00 | சுனாமியினால் பாதிக்கப்பட்ட நுண்பாக சிறிய நடுத்தர தொழில் முயற்சிகளை மீளத் தொடங்குவதற்கு கொடுகடன் வசதிகளை வழங்குதல் | 2,750.00 | நிதித் திணைக்களத்திற்கு மாற்றல் செய்வதற்காக அட்டவணை யிடப்பட்ட திகதியின்படி பங்கேற்கும் நிதியியல் நிறுவனங் களிடமிருந்து அறவீடுகளைச் சேகரித்தல் |
| சுசகன கட்டம் II | இல.ரூ | 500.00 | சுனாமியினால் பாதிக்கப்பட்ட நுண்பாக சிறிய நடுத்தர தொழில் முயற்சிகளை மீளத் தொடங்குவதற்கு கொடுகடன் வசதிகளை வழங்குதல் | 105.54 | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| வடக்கின் எழுச்சி | இல.ரூ | 2,000.00 | வட மாகாணத்தில் வேளாண்மை, விலங்கு வளர்ப்பு, நுண்பாக மற்றும் சிறிய தொழில்முயற்சிகளுக்கு கொடுகடன் வசதிகளை விரிவாக்குதல் | 2,000.00 | அட்டவணை யிடப்பட்ட திகதியின்படி பங்கேற்கும் நிதியியல் நிறுவனங் களிடமிருந்து அறவீடுகளைச் சேகரித்தல் மற்றும் பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்தின் தொடர்பான கணக்குகளுக்கு மாற்றல் செய்தல் |
| கிழக்கு மாகாணத்தின் பொருளாதாரச் செயற்பாடுகளை மீளமைத்தல் | இல.ரூ | 1,000.00 | கிழக்கு மாகாணத்தில் சிறிய மற்றும் நடுத்தரளவு துறைகளின் நடவடிக்கைகளுக்கு கடன்களை வழங்குதல் | 1,000.00 | |
| வடக்கின் எழுச்சி - கட்டம் II | இல.ரூ | 2,154.25 | வட மாகாணத்தில் வேளாண்மை, விலங்கு வளர்ப்பு, நுண்பாக மற்றும் சிறிய தொழில் முயற்சிகளுக்கு கொடுகடன் வசதிகளை விரிவாக்குதல் | 2,361.00 | |
| இரண்டாவது நீண்ட காலப் பயிர் அபிவிருத்திச் செயற்றிட்டம் - சுழலும் நிதியம் | இல.ரூ | 1,200.00 | நாட்டின் நீண்ட காலப் பயிர்த் துறையை அபிவிருத்தி செய்வதற்காக கொடுகடன் வசதிகளை வழங்குதல் | 1,199,82 | |
| மாத்தளை பிரதேச பொருளாதார மேம்பாட்டுச் செயற்றிட்டம் - சுழலும் நிதியம் | இல.ரூ | 77.00 | மாத்தளை மாவட்டத்தில் கிராமிய மற்றும் பண்ணைக் குடும்பங்களின் வருமானத்தினை உயர்த்துவதற்கும் பண்ணையல்லாத தொழில்முயற்சிகளை உருவாக்குவதற்காக நடுத்தரளவு தொழில் முயற்சியாளர்களுக்கு நிதியங்களை வழங்குவதற்கும் அத்துடன் ஏற்கனவேயிருக்கும் செயற்றிட்டங்களை விரிவாக்குவதற்கும் | 77.00 | |
| சப்பிரகமுவா மாகாண ஒருங்கிணைந்த கிராமிய அபிவிருத்திச் செயற்றிட்டம் - சுழலும் நிதியம் | இல.ரூ | 100.00 | சப்பிரகமுவா மாகாணத்தில் புதிய வருமானம் ஈட்டும் நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கும் மேம்படுத்துவதற்கும் | 100.00 | |
| கட்டுமானத் துறை அபிவிருத்திச் செயற்றிட்டம் | யூரோ | 9.00 | சுனாமிக்குப் பின்னைய மீள்கட்டுமானங்களில் கட்டுமானம் மற்றும் பொதுப் பணிகளில் வினைத்திறனுடன் பங்கேற்பதற்காக தனியார் உள்நாட்டு வியாபாரங்களின் நிதியியல் மற்றும் தொழில்நுட்ப இயலுமைகளை உறுதிப்படுத்துதல் | 1,399.73 | |
| சப்பிரகமுவா மாகாண ஒருங்கிணைந்த கிராமிய அபிவிருத்திச் செயற்றிட்டம் - கட்டம் II | இல.ரூ | 70.00 | சப்பிரகமுவா மாகாணத்தில் புதிய வருமானம் ஈட்டும் நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கும் மேம்படுத்துவதற்கும் | 70.00 | |
| சுனாமிக்குப் பின்னைய கரையோர மூலவள முகாமைத்துவச் செயற்றிட்டம் | சிஎஉ | 2.09 | சுனாமி அனர்த்தத்தினால் மோசமாகப் பாதிக்கப்பட்ட சமூகங்கள் அவர்களுடைய சொத்துக்களை மீளப்பெறுவதற்கும் அவர்களுடைய வழமையான பொருளாதார நடவடிக்கைகளுக்கான அடித்தளத்தை மீளக்கட்டியெழுப்பும் அதேநேரம் புதிய இலாபமுள்ள வருமானம் ஈட்டும் நடவடிக்கைகளுக்கு பன்முகப்படுத்துவதற்கும் உதவி வழங்குதல் | 190.77 | |
| வறுமை ஒழிப்பு நுண்பாக நிதிச் செயற்றிட்டம் II (பிரபோதினி) | யென் | 2,381.00 | செயற்றிட்ட அமைவிடத்தில் மாத வருமானம் ரூ.15,000 இற்கும் குறைவாகக் கொண்ட குடியிருப்பாளர் அலகுகளின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்துதல் | 3,213.20 | |
| சுய வேலை வாய்ப்பு ஊக்குவிப்பு முயற்சி | இல.ரூ | 250.00 | நாட்டில் அங்கீகரிக்கப்பட்ட தொழில் பயிற்சி நிறுவனத்தில் சித்தியடைந்து பயிற்சிபெற்ற இளைஞர்களுக்கு சுயவேலை வாய்ப்புச் செயற்றிட்டங்களைத் தொடங்குவதற்கு நிதியியல் உதவிகளை வழங்குதல் | 232.39 | |
| விஸ்கம் (வேளாண்மைத் துறை அபிவிருத்திக்கான சிறப்புக் கடன் திட்டம்) | இல.ரூ | 1,325.60 | நாட்டில் வர்த்தக வேளாண் வியாபாரத்தின் முதலீடு, பன்முகப்படுத்தல் மற்றும் முன்னேற்றத்திற்கான கொடுகடனின் கிடைப்பனவினை உறுதிப்படுத்தல் | 881.00 | பங்களிக்கும் வங்கிகளால் கட்டாய தேவைப்பாடுகள் பூர்த்தி செய்யப்படும் போது நிதியங்கள் திருப்பி அளிக்கப்படும் |
| மாகாண அபிவிருத்தி கொடுகடன் திட்டம் | இல.ரூ | 2,900.00 | நாட்டின் சிறிய நடுத்தர தொழில்முயற்சி துறையின் நடுத்தர மற்றும் நீண்ட கால செயற்றிட்டங்களுக்கு கொடுகடன் வசதிகளை வழங்குதல் | 2,900.00 | நிதித் திணைக்களத்திற்கு மாற்றல் செய்வதற்காக அட்டவணை யிடப்பட்ட திகதியின்படி பங்கேற்கும் நிதியியல் நிறுவனங் களிடமிருந்து அறவீடுகளைச் சேகரித்தல் |
| வரண்ட வலய வாழ்வாதார உதவி மற்றும் பங்குடமை நிகழ்ச்சித்திட்டம் | இல.ரூ | 252.95 | அநுராதபுரம், மொனராகலை, குருணாகல் மற்றும் பதுளை மாவட்டங்களில் வருமானம் ஈட்டும் நடவடிக்கைகளுக்கு வசதிகளை வழங்குதல் | 252.95 | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| கிழக்கு மாகாணத்தின் பொருளாதாரச் செயற்பாடுகளை மீளமைத்தல் கடன் திட்டம் - கட்டம் II | இல.ரூ | 1,078.27 | கிழக்கு மாகாணத்தில் வேளாண்மை, விலங்கு வளர்ப்பு, நுண்பாக மற்றும் சிறிய தொழில்முயற்சிகளுக்கு கொடுகடன் வசதிகளை விரிவாக்குதல் | 1,000.00 | |
| கிழக்கு மாகாணத்தின் பொருளாதாரச் செயற்பாடுகளை மீளமைத்தல் கடன் திட்டம் - கட்டம் III | இல.ரூ | 1,000.00 | கிழக்கு மாகாணத்தில் வேளாண்மை, விலங்கு வளர்ப்பு, நுண்பாக மற்றும் சிறிய தொழில்முயற்சிகளுக்கு கொடுகடன் வசதிகளை விரிவாக்குதல் | 1,428.47 | |
| வடக்கு மற்றும் கிழக்கில் சேதமடைந்த வீடுகளைத் திருத்துதல் | இல.ரூ | 600.00 | வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் போரின் போது சேதமடைந்த வீடுகளைத் திருத்துவதற்கான கொடுகடன் வசதிகளை வழங்குதல் | 600.00 | |
| தேசிய வேளாண் வியாபார அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் | ஐ.அ.டொலர் | 32.90 | சந்தை/ பெறுமதிச் சங்கிலித் தொடர் அபிவிருத்தியில் நன்மை பெறுநர்களின் வருமானத்தினை அதிகரிப்பதன் மூலம் சிறு உடமை உற்பத்தியாளர்கள் மற்றும் நிலமற்றோரின் குறிப்பாக இளைஞர்களுக்கு உதவியளிப்பதற்கும் தமது வருமானத்தினை மேம்படுத்தும் விதத்தில் தொழில்பெறும் விதத்தில் நிதியினையும் பயிற்சியையும் வழங்குவதற்கும் | 113.13 | |
| சிறிய பெருந்தோட்டத் தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி செயற்றிட்டம் | சிஎஉ | 2.60 | மொனராகல, கண்டி, கேகாலை மற்றும் நுவரெலியா ஆகிய இடங்களிலுள்ள குறைந்த வருமானம் பெறும் சமூகத்தினரின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்துதல் | 487.66 | |
| தேசிய வேளாண் பயிர் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் - நுண்பாக நிதி | இல.ரூ | 1,049.84 | தெரிவு செய்யப்பட்ட செயற்றிட்ட பிரதேசங்களின் வசதி குறைந்தோரின் வருமான மட்டம் மற்றும் சமூக நிலையை முன்னேற்றுதல். | 1,049.84 | |
| தேசிய வேளாண் பயிர் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் வெளிப்பயிர் வேளாண்மையாளர் கடன் திட்டத்தின் கீழான பெறுமதிச் சங்கிலி மூலதன வேளாண் கடன் திட்டம் | இல.ரூ | 135.69 | வேளாண்மை உற்பத்திப் பொருட்களின் உற்பத்தித் திறன், தரம் மற்றும் பெறுமதியுயர்வை அதிகரித்தல். | 135.69 | |
| தேசிய வேளாண்மை வியாபார அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் வெளிப்பயிர் வேளாண்மையாளர் கடன் திட்டத்தின் கீழான பெறுமதிச் சங்கிலி அபிவிருத்தி பருவகால வேளாண்மை கடன்திட்டம். | இல.ரூ | 302.04 | வேளாண்மை உற்பத்திப் பொருட்களின் உற்பத்தி, உற்பத்தித் திறன், தரம் மற்றும் பெறுமதியுயர்வை அதிகரித்தல். | 302.04 | |
| அனர்த்தங்களுக்கு பின்னரான பொருளாதார நடவடிக்கைகளை மீளமைப்பதற்கான கடன்திட்டம் | இல.ரூ | 134.58 | அண்மைக்கால வெள்ளம் மற்றும் வறட்சியினால் பாதிக்கப்பட்ட வியாபாரம்/ சிறிய முயற்சியாண்மைகளின் அனர்த்தத்துக்கு பின்னரான மீளெழுச்சி இயலுமைக்கு, தேவையான நிதியினனை வழங்குவதன் மூலம் அவர்களின் வியாபாரத்தை/ வருமானமீட்டும் நடவடிக்கைகளை மீளஆரம்பிப்பதற்கு கடன்பெறுநர்களுக்கு (தனிநபர்/குழுக்கள்) உதவியளித்தல் | 134.58 | |
| “தருண திரிய” இளைஞர்களுக்கு வலுவளித்தல் மற்றும் வேலைவாய்ப்பு நிகழ்ச்சித் திட்டம் | இல.ரூ | 288.48 | முயற்சியாண்மையாளர்களை உருவாக்குவதற்கும் சிறிய வியாபாரங்களை ஆரம்பிப்பதற்கும் மற்றும் ஏனைய வடிவங்களிலான சுயமுயற்சி செயற்றிட்டங்களை ஆரம்பிக்கவும் கடன் வசதிகளை வழங்குவதன் மூலம் கிராம மட்டத்திலான வசதி குறைந்த இளையோரின் வாழ்வினை மேம்படுத்தல் | 288.48 | |
| வறண்ட வலய வாழ்வாதார உதவி மற்றும் பங்குடமை நிகழ்ச்சித் திட்டம் - சுழலும் நிதியம் | இல.ரூ | 252.90 | அநுராதபுரம், மொனராகலை, குருநாகல் மற்றும் பதுளை மாவட்டங்களில் வருமான மீட்டும் நடவடிக்கைகளுக்கு வசதியளித்தல். | 252.89 | |
| சிறிய வேளாண்மையாளர்கள், நிலமற்றோர் கொடுகடன் திட்டம் - சுழலும் நிதியம் | இல.ரூ | 345.69 | சிறு வேளாண்மையாளர்கள் மற்றும் சிறு அளவு வேளாண்மையல்லா கிராமிய தொழில்முயற்சி நிறுவனங்களினாலும் வேளாண்மை உற்பத்தியை செறிவுபடுத்துவதற்கு ஊக்குவித்தல். | 1,564.75 | |
| வறுமை ஒழிப்பு நுண்பாக நிதிச் செயற்றிட்டம் ஐஐ (பிரபோதினி) - சுழலும் நிதி | இல.ரூ | 2,764.84 | வறியோர்களின் வருமான மட்டத்தை மேம்படுத்தல் மற்றும் வருமானம் ஈட்டும் செயற்பாடுகளுக்கு கடன்களை வழங்குவதன் மூலம் முறையான நீதிச் சேவைகளின் உள்ளடக்கத்தினை மேம்படுத்தல் | 7,016.86 | |

**நடைபெற்று வரும் செயற்றிட்டங்கள்**

| செயற்றிட்டத்தின் பெயர் | நிதியத்தின் மொத்த ஒதுக்கு (மில்.) | | கடனின் நோக்கம் | பங்கேற்கும் நிதியியல் நிறுவனங் களுக்கு வழங்கப்பட்ட மீள் நிதியம் (ரூ. மில்.) | அடிப்படைப் பண்புகள் | உத்தரவாதங்கள் மற்றும் காப்பீடுகள் | சிறப்பு நிபந்தனை |
|---|---|---|---|---|---|---|---|
| தேயிலை அபிவிருத்திச் செயற்றிட்டம் - சுழலும் நிதியம் | இல.ரு | 1,100.00 | நாட்டின் தேயிலைத் துறையை அபிவிருத்தி செய்வதற்காக கொடுகடன் வசதிகளை வழங்குதல் | 964.87 | | உத்தரவாதமோ காப்பீடோ இல்லை | தொடர்பான அனைத்து தரப்பினர்களினதும் உடன்படிக்கையில்லாமல் உடன்படிக்கையின் உரிமைகள் மற்றும் கடப்பாடுகள் மாற்றப்படவோ இரத்துச் செய்யப்படவோ மாட்டாது. |
| சுவசக்தி கடன் திட்டம் | இல.ரு | 4,000.00 | புதிய மற்றும் தற்போதுள்ள முயற்சியாளர்களுக்கு நிதியுதவி வழங்குவதனூடாக வேலைவாய்ப்புக்களை உருவாக்குதல் | 2,522.20 | | | |
| "அத்வெல" - அனர்த்தங்களால்ப் பாதிக்கப்பட்ட இடங்களில் பொருளாதாரச் செயற்பாடுகளை மீளமைத்தல் | இல.ரு | 2,000.00 | இலங்கை அரசினால் அறிவிக்கப்பட்டவாறு அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட பொருளாதாரச் செயற்பாடுகளை மீளமைக்க தகுதி வாய்ந்த உபகடன் பெறுநர்களுக்கு நிதியியல் வசதிகளை வழங்குதல் | 1,599.74 | | | |
| வறுமை ஒழிப்பு நுண்பாக நிதிச் செயற்றிட்டம் மீள் நிதியிடல் (பிரபோதினி) | இல.ரு | 1,031.00 | முறைமையான கடன் வசதியைப் பெற்றுக் கொள்ள முடியாத, கிராமிய வறியோரால் நடாத்தப்படும் வருமானமீட்டும் செயற்பாடுகளுக்கு வினைத்திறன் வாய்ந்த கடன்வழங்கும் முறைமையை உருவாக்க உதவுதல் | 4,821.16 | | | |
| சிறுவேளாண்மை பங்குடமை செயற்றிட்டம் 4பி மூலதனம் | ஐ.அ.டொலர் | 1.10 | இலங்கையின் சிறு வேளாண் தொழிலாளர்களின் வறுமையைக் குறைப்பதற்கும் வருமானத்தினை அதிகரிப்பதற்கும் மற்றும் உணவுத் தரமிக்க வணிகம் சார்ந்த உற்பத்தி செய்து விளம்பரப்படுத்த 57,500 சிறு வேளாண் தொழிலாளர்களின் பங்குடமைகள் மூலம் அவர்களின் வலையமைப்புக்களை ஸ்தீரமானதாக்கி உற்பத்தியாளர் குழுக்களை உருவாக்குதல். | 67.84 | | | |
| சிறுவேளாண்மை பங்குடமை செயற்றிட்டம் 4பி பருவகால | ஐ.அ.டொலர் | 2.45 | | 254.15 | | | |
| சிறுவேளாண்மை பங்குடமை செயற்றிட்டம் 4 பி ஆர்எவ் வருமானத்தை உருவாக்குபவை | ஐ.அ.டொலர் | 6.00 | | 106.42 | | | |
| சௌபாக்கிய கடன் திட்டம் | இல.ரு | 26,725.60 | நுண்பாக சிறிய நடுத்தரளவு தொழில்முயற்சிகள் மற்றும் அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட நுண்பாக சிறிய நடுத்தரளவு தொழில்முயற்சிகளுக்கு கொடுகடன் வழங்குதல் | 26,725.60 | பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்திற்கு மாற்றல் செய்வதற்காகக அட்வணையிடப்பட்ட திகதியின் படி பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களிடமிருந்து அறவீடுகளைச் சேகரித்தல். | | |
| சுய தொழில் வாய்ப்பு ஊக்குவிப்பு முன்னெடுப்பு - கட்டம் II | இல.ரு | 225.00 | தேசிய தொழிற் பயிற்சி தகைமையின் சான்றிதழை அல்லது டிப்ளோமாவைப் பூர்த்தி செய்த பயிற்சி பெற்ற இளைஞர்களுக்கு நிதி உதவியை வழங்குதல் | 352.09 | | | |

## 59. அறிக்கையிடல் திகதிக்குப் பின்னரான நிகழ்வுகள்

நிதியியல் கூற்றுக்களை சீர்செய்தல் அல்லது நிதியியல் கூற்றுக்களின் வெளிப்படுத்தப்படவேண்டிதாகவுள்ள திடமான நிகழ்வுகள் எதுவும் நிதி அறிக்கையிடல் திகதிக்குப் பின்னர் நடைபெறவில்லை.

## 2. வங்கி மேற்பார்வை

வங்கி மேற்பார்வைத் திணைக்களம் இலங்கையிலுள்ள உரிமம்பெற்ற வங்கிகளைத் தொடர்ச்சியாக மேற்பார்வை செய்து, கலாந்தரப் பரீட்சிப்புக்களை மேற்கொள்ளும் நோக்கத்திற்காக நாணய விதிச் சட்டத்தின் 28ஆம் பிரிவின் நியதிகளுக்கிணங்க நிறுவப்பட்டது. மேலும், உரிமம்பெற்ற வங்கிகளின் ஒழுங்குபடுத்தல் மற்றும் மேற்பார்வை திருத்தப்பட்டவாறான 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் ஆளப்படுகின்றன.

வங்கி மேற்பார்வைத் திணைக்களத்தின் முக்கிய தொழிற்பாடுகளாக முன்மதியுடைய ஒழுங்குவிதிகளையும் வழிகாட்டல்களையும் உருவாக்குதல் மற்றும் நடைமுறைப்படுதல் தேவையானவிடத்து நாணயச் சபையின் ஒப்புதலுடன் ஒழுங்குமுறைப்படுத்தலுக்கான ஒப்புதல்களை வழங்குதல், உரிமம்பெற்ற வங்கிகளின் தொடர்ச்சியான மேற்பார்வையினையும் காலாந்தரப் பரீட்சிப்புக்களையும் மேற்கொள்ளுதல் மற்றும் வங்கித்தொழில் துறையின் விழிப்புணர்வினையும் இயலாற்றலையும் கட்டியெழுப்புதல் என்பன விளங்குகின்றன.

2018இன் இறுதியிலுள்ளவாறு, வங்கி மேற்பார்வைத் திணைக்களத்தின் ஒழுங்குமுறைப்படுத்தல் மற்றும் மேற்பார்வை வரம்பிற்குள் 26 உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளும் 7 உரிமம்பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளும் உள்ளடக்கப்பட்டிருக்கின்றன. மேலும், 2018 இறுதியில் வெளிநாட்டு வங்கிகளின் 3 பிரதிநிதித்துவ அலுவலகங்களும் இலங்கையில் தொழிற்படுகின்றன. உரிமம்பெற்ற வங்கிகளினதும் பிரதிநிதித்துவ அலுவலகங்களினதும் பட்டியல் இணைப்பு I இல் தரப்பட்டுள்ளது.

2018 ஆண்டுப்பகுதியில் வங்கி மேற்பார்வைத் திணைக்களத்தினால் ஆற்றப்பட்ட முக்கிய தொழிற்பாடுகளும் நடவடிக்கைகளும் கீழே சுருக்கமாகத் தரப்பட்டுள்ளன.

### 2.1 முன்மதியுடைய ஒழுங்குவிதிகளை விடுத்தல்

உரிமம்பெற்ற வங்கிகளுக்கு விடுக்கப்பட்ட முன்மதியுடைய ஒழுங்குவிதிகள் இவ்வறிக்கையின் பகுதி III இல் தரப்பட்டுள்ளன. இவ்வாண்டுப் பகுதியில் விடுக்கப்பட்ட முக்கிய முன்மதியுடைய ஒழுங்குவிதிகளின் சுருக்கம் கீழே தரப்படுகிறது.

**(அ) உந்து ஊர்திகள் தொடர்பில் கொடுகடன் வசதிகளுக்கான பெறுமதிக்கான கடன் விகிதம்**

உந்து ஊர்திகளின் கொள்வனவிற்காக வங்கித்தொழில் துறையில் காணப்படும் மிகையான கொடுகடனைக் கட்டுப்படுத்துமொரு பேரண்ட முன்மதியுடைய வழிமுறையாக உந்து ஊர்திகளின் கொள்வனவு அல்லது பயன்பாட்டிற்காக கொடுகடன்களை வழங்குகின்றபோது பெறுமதிக்கான கடன் விகிதத்தினைப் பேணுமாறு வர்த்தக வங்கிகள் கேட்டுக்கொள்ளப்பட்டன. 2018இல் காலத்திற்குக் காலம் இத்தேவைப்பாடுகளுக்கு பல திருத்தங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

இதன்படி மின்னியல், கலப்பு வலு மற்றும் பதிவு செய்யப்படாத ஊர்திகள் மற்றும் முதலாவது பதிவின் பின்னர் ஓராண்டிற்கு கூடுதலாக/ குறைவாக இலங்கையில் பயன்படுத்தப்படுகின்ற பதிவுசெய்யப்பட்ட ஊர்திகளை உள்ளடக்கிய உந்து ஊர்திகள் தொடர்பில் கொடுகடன் வசதிகளுக்கு புறம்பாக இத்தகைய திருத்தியமைக்கப்பட்ட பெறுமதிக்கான கடன்விகிதம் அறிமுகப்படுத்தப்பட்டது. மேலும், பெறுமதிக்கான கடன்விகிதத்தினை குறைப்பதன் மூலமும் இலங்கை அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட சலுகை நியதிகள் மீதான உந்து ஊர்திகள் அனுமதிப் பத்திரத்தினை வழங்குவதற்கான திட்டத்தின் கீழ் உந்து ஊர்திகளின் இறக்குமதிகளுக்கான நாணயக் கடிதங்களைத் திறப்பதிருலிந்தும் விலகியிருக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டதன் மூலமும் செலாவணி வீதத்தின் மீதான மோசமான தாக்கத்தினைக் குறைப்பதற்காக உந்து ஊர்திகள் மற்றும் அத்தியாவசியமல்லாத நுகர்வுப் பொருட்களின் இறக்குமதியினைக் கட்டுப்படுத்துவதற்கான வழிமுறைகள் எடுக்கப்பட்டன. மேலும், உரிமம்பெற்ற வங்கிகள் 2018 வரவுசெலவுத் திட்டத்தில் முன்மொழியப்பட்டவாறு, உந்து ஊர்திகளில் இறக்குமதிக்காக கொடுகடன் வசதி வழங்கல் கடிதத்தினை வழங்குவதிலிருந்தும் விலிகியிருக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டன. இருப்பினும், கூட அடையாளம் காணப்பட்ட பொருளாதாரத் துறைகள் அவற்றின் மைய வியாபார தொழிற்பாடுகளுக்குத் தேவையான ஊர்திகளை இறக்குமதி செய்வதற்காகப் பெறுமதிக்கான கடன் விகிதங்களிலிருந்து விதிவிலக்கல்கள் வழங்கப்பட்டதுடன் அரச முகவர்களுக்கான ஊர்திகளின் கொள்வனவிற்கான ஏற்புடைத்தாக பெறுமதிக்கான கடன் விகிதம் தளர்த்தப்பட்டதுடன் தேவையின் அடிப்படையில் அரசாங்கத்தினால் சலுகை அடிப்படையிலான ஊர்திக் கடன்திட்டமும் அறிமுகப்படுத்தப்பட்டது.

**(ஆ) கரைகடந்த வங்கித்தொழில் வியாபாரத் திட்டங்கள்**

2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் ஏற்பாடுகளின் படி கரைகடந்த வங்கித்தொழில் பிரிவொன்றில் வதிவற்ற ஒருவரினால் பேணப்படும் கணக்கொன்றில் ஏதேனும் குறித்துரைக்கப்பட்ட வெளிநாட்டு நாணயத்தில் கொடுக்கல்வாங்கல்களை மேற்கொள்வதற்கு அனைத்து உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளையும் அனுமதிக்கின்ற விதத்தில் வங்கித்தொழில் சட்ட கட்டளைகள் விடுக்கப்பட்டன.

**(இ) முகவர்களை நியமிப்பதற்கான ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பு**

முகவர்கள் மற்றும் துணை முகவர்களின் ஒப்புதல் மற்றும் தெரிவுசெய்யும் செயன்முறைகள் உட்பட உரிமம்பெற்ற வங்கிகளின் முகவர்களை நியமிப்பது, வங்கிகளின் பொறுப்புக்கள், முகவர்களினாலும் துணை முகவர்களினாலும் ஆற்றப்படுவதற்கு அனுமதிக்கப்பட்ட நடவடிக்கைகள், இடர்நேர்வு முகாமைத்துவம் மற்றும் மேற்பார்வை, வாடிக்கையாளர் பாதுகாப்பு, முறையீட்டு வழிமுறைகள் மற்றும் நிவாரணப் பொறிமுறை என்பன மீது ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பொன்று அறிமுகப்படுத்தப்பட்டது. அதனைத் தொடர்ந்து ஏற்கனவேயுள்ள வாடிக்கையாளர் தவிர்ந்த மற்றைய ஆட்களுக்கும் உள்முக பணவலுப்பல்களை வழங்குவதற்கு உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளை அனுமதிக்கும் விதத்தில் பணப்புரைகளுக்குத் திருத்தங்கள் வெளியிடப்பட்டன.

**(ஈ) பெறுதிகளின் கொடுக்கல்வாங்கல்களின் இடர்நேர்வு முகாமைத்துவத்தினை வலுப்படுத்தல்**

பெறுதிக் கொடுக்கல்வாங்கல்களுக்காக மிகக் கடுமையான இடர்நேர்வு முகாமைத்துவ வழிமுறைகளைப் பின்பற்றுமாறு உரிமம்பெற்ற வங்கிகள் அறிவுறுத்தப்பட்டதுடன் இது தொடர்பில் விடுக்கப்பட்ட பணிப்புரைகள் பெறுதிக் கொடுக்கல்வாங்கல்களை ஆரம்பித்தல், சபை ஒப்புதலளித்த கொள்கைகள் மற்றும் நடைமுறைகள் வாடிக்கையாளர் விழிப்புணர்வு, தடைசெய்யப்பட்ட நடவடிக்கைகள் அறிக்கையிடல் தேவைப்பாடுகள் போன்ற துறைகளை உள்ளடக்கியிருந்தன. இது தொடர்பில் முன்னர் விடுக்கப்பட்ட பணிப்புரைகள் இரத்துச் செய்யப்பட்டன.

**(உ) ஏற்பு ஆவணங்களின் நியதிகளின் மீதான இறக்குமதிகளுக்கெதிரான அளவுத் தேவைப்பாடுகள்**

உரிமம்பெற்ற வங்கிகள் அத்தியாவசியமல்லாத நுகர்வுப் பொருட்களின் இறக்குமதிகளைக் கட்டுப்படுத்துவதற்கும் செலாவணி வீதத்தின் மீதான மோசமான தாக்கத்தினைக் குறைப்பதற்காகவும் தேவையான வழிமுறைகளை எடுக்குமாறு

கேட்டுக்கொள்ளப்பட்டதுடன் ஏற்பாவணங்கள் மீதான இறக்குமதிகளுக்காக 100 சதவீத காசு அளவுத் தேவைப்பாடு அறிமுகப்படுத்தப்பட்டது.

**(ஊ) உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் உரிமம்பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளின் ஆண்டு உரிமக்கட்டணம்**

உரிமம்பெற்ற வங்கிகளின் முன்னைய ஆண்டின் இறுதியில் உள்ளவாறான மொத்தச் சொத்துக்களின் அடிப்படையில் 2019 மற்றும் 2020 ஆம் கலண்டர் ஆண்டுகளுக்கான உரிமம்பெற்ற வங்கிகளின் ஆண்டு உரிமக்கட்டணம் அதிகரிக்கப்பட்டுள்ளமை பற்றி உரிமம்பெற்ற வங்கிகளுக்கு அறிவிக்கப்பட்டன.

**(எ) பாசல் III திரவத் தன்மை நியமங்களின் கீழ் தேறிய உறுதிவாய்ந்த நிதியிடல் விகிதத்தினை அறிமுகப்படுத்தல்**

சொத்துக்களின் உள்ளமைப்பு மற்றும் வங்கிகளின் ஐந்தொகைக்கு வெளியேயான நடவடிக்கைகள் தொடர்பில் உறுதியான நிதியிடல் தோற்றப்பாட்டினை உறுதிப்படுத்தும் நோக்குடன், உரிமம்பெற்ற வங்கிகள் பாசல் III திரவத்தன்மை நியமங்களுக்கிணங்க தேறிய உறுதியான நிதியிடல் விகிதத்தினைப் பேணுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டன. இதற்கமைய, உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் 2019 சனவரி 01ஆம் திகதியன்று 90 சதவீதத் தேறிய உறுதியான நிதியிடல் விகிதத்தினைப் பூர்த்தி செய்யுமாறும் இதனை 2019 யூலை 01ஆம் திகதியளவில் 100 சதவீதத்திற்கு அதிகரிக்குமாறும் கேட்டுக்கொள்ளப்பட்டன.

**(ஏ) பாசல் III திரவத்தன்மை நியமங்களின் கீழ் திரவத்தன்மை உள்ளடக்க விகிதத்தின மீதான பணிப்புரைகளுக்கான திருத்தங்கள்**

பாசல் III திரவத்தன்மை நியமங்களின் கீழ், திரவத்தன்மை உள்ளடக்க விகிதத்தின் மீதான ஒழுங்குமுறைப்படுத்தல் அறிக்கையிடல் படிவங்கள் திருத்தப்பட்டமை பற்றி வங்கிகளுக்கு அறிவிக்கப்பட்டது.

**(ஐ) உரிமம்பெற்ற வங்கிகளின் வெளிநாட்டு நாணயக் கடன்பாடுகள்**

வங்கிகளின் வெளிநாட்டு நாணயக் கடன்பாடுகளின் இடர்நேர்வு முகாமைத்துவத்தினை மேலும் உறுதிப்படுத்தும் நோக்குடன், வெளிநாட்டு நாணயக் கடன்பாடுகள் தொடர்பில் உரிமம்பெற்ற வங்கிகள் 2018 நவெம்பர் 30 ஆம் நாள் தொடக்கம் புதிய கொள்கையொன்றுடன் இணங்கி நடக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டன. வங்கியின் வெளிநாட்டுக் கொடுகடன் தரமிடல் மற்றும் மூலதன போதுமை விகிதம் மற்றும் மொத்தச் சொத்துக்களின் குறிப்பிட்ட சதவீதத்துடனான இணைப்பு என்பனவற்றினை பரிசீலனையில் கொண்டு கணிக்கப்பட்ட புள்ளிகளின் அடிப்படையில் வெளிநாட்டு நாணய கடன்பாடுகளின் மீது குறுங்கால மற்றும் நீண்டகால வரையறைகள் அனுமதிக்கப்பட்டன. கரைகடந்த வங்கித்தொழில் பிரிவுகளின் வெளிநாட்டு நாணயக் கடன்பாடுகளைப் பொறுத்தவரை, உரிமம்பெற்ற வங்கிகள் 2018ஆம் ஆண்டின் 11ஆம் இலக்க உரிமம் பெற்ற வங்கிகளின் வெளிநாட்டு நாணய கடன்பாடுகள் தொடர்பிலான வங்கித்தொழில் சட்ட பணிப்புரையின் நியதிகள் மற்றும் நிபந்தனைகளுக்குக் கட்டுப்பட்டு வதிவுள்ளோருடன் வெளிநாட்டு நாணய கடன்பாடுகள் மற்றும் கடன்பாடுகளின் வியாபாரத்தில் ஈடுபடுமாறு அறிவுறுத்தப்பட்டன.

**(ஒ) பாசல் III இன் கீழ் உரிமம்பெற்ற வங்கிகளுக்கான முடுக்கி விகிதத்தின் அறிமுகம்**

2019 சனவரி 01ஆம் தொடக்கம் உரிமம்பெற்ற வங்கிகள் இடர்நேர்வினை அடிப்படையாகக் கொண்ட மூலதன தேவைப் பாட்டிற்கான நம்பகமான துணைநிரப்பு வழிமுறையொன்றாக செயற்படும் விதத்தில் பாசல் III முடுக்கி விகித கட்டமைப்பிற்கு இணங்க குறைந்தபட்சம் 3 சதவீதம் கொண்ட முடுக்கிவீதத்தினைப் பேணுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டன.

**(ஓ) இலங்கை கணக்கீட்டு நியமம் - இ.நி.அ. நியமம் 9: நிதியியல் சாதனங்கள் இனைப் பின்பற்றுதல்**

வங்கித்தொழில் துறையில் இலங்கை கணக்கீட்டு நியமங்களைப் பின்பற்றுவது தொடர்பில் இயைபானதும் முன்மதியுடையதுமான நடைமுறைகளை நிறுவுகின்ற நோக்குடன், இலங்கை கணக்கீட்டு நியமம் - இ.நி.அ. நியமம் 9: நிதியியல் சாதனங்கள் இனைப் பின்பற்றுவது மீதான வழிகாட்டல்கள் 2018 திசெம்பர் 31ஆம் நாளன்று உரிமம்பெற்ற வங்கிகளுக்கு விடுக்கப்பட்டன.

**2.2 நாணயச் சபையினால் வழங்கப்பட்ட ஒப்புதல்கள்**

**(அ) உரிமம்பெற்ற வங்கிகளின் கிளைகள் மற்றும் ஏனைய வங்கித்தொழில் நிலையங்கள்**

இவ்வாண்டுப் பகுதியில், 1,557 ஒப்புதல்கள் செய்முறைப்படுத்தப்பட்டதுடன் 1,519 ஒப்புதல்கள் வழங்கப்பட்ட வேளையில் 38 கோரிக்கைகள் முன்மதியுடைய விடயங்களின் அடிப்படையில் பிற்போடப்பட்டன.'. நிராகரிக்கப்பட்டன.

(அட்டவணை 1) இதன்படி 2018 இறுதியில் 3,572 வங்கிக் கிளைகளும் 3,309 மாணவர் சேமிப்பு அலகுகளும் 4,834 தன்னியக்க கூற்றுப்பொறிகளும் தொழிற்பாட்டிலிருந்தன.

**அட்டவணை II - 1**

**கிளைகள் மற்றும் ஏனைய வங்கித்தொழில் நிலையங்கள் தொடர்பான ஒப்புதல்கள்**

| ஒப்புதல்களின் வகைகள் | ஒப்புதல்களின் எண்ணிக்கை | |
|---|---|---|
| | செயன்முறையிலுள்ளவை | வழங்கப்பட்டவை |
| **திறத்தல் மற்றும் நிறுவுதல்** | **1,281** | **1,251** |
| கிளைகள் | 66 | 50 |
| தன்னியக்கக் கூற்றுப் பொறிகள் | 146 | 136 |
| மாணவர் சேமிப்பு அலகுகள் | 231 | 231 |
| காசு வைப்பு இயந்திரங்கள் | 63 | 61 |
| நடமாடும் வங்கித்தொழில் பிரிவுகள் மற்றும் ஊர்திகள் | 560 | 560 |
| செல்லிடத் தன்னியக்கக் கூற்றுப் பொறிகள் மற்றும் காசு வைப்பு இயந்திரங்கள் | 8 | 8 |
| **வேறிடத்தில் அமைத்தல்** | **149** | **143** |
| கிளைகள் | 137 | 131 |
| தன்னியக்கக் கூற்றுப் பொறிகள் மற்றும் காசு வைப்பு இயந்திரங்கள் | 12 | 12 |
| கிளைகள் மற்றும் ஏனைய பணி நிலையங்களை மூடிவிடுதல் மற்றும் இரத்துச் செய்தலுக்காக வழங்கப்பட்ட ஒப்புதல்கள் | 25 | 23 |
| தன்னியக்கக் கூற்றுப் பொறிகள் மற்றும் ஏனையவற்றை நிறுத்திவிடுவதற்கும் இரத்துச் செய்வதற்குமாக வழங்கப்பட்ட ஒப்புதல்கள் | 102 | 102 |
| **மொத்தம்** | **1,557** | **1,519** |

**(ஆ) ஏனைய ஒழுங்குமுறைப்படுத்தல் ஒப்புதல்கள்**

2018ஆம் ஆண்டுப் பகுதியில் உரிமம்பெற்ற வங்கிகளின் வெளிநாட்டுக் கடன்பாடுகள், அடுக்கு 2 மூலதனத்தில் தொகுதிக் கடன்களை உள்ளடக்குதல், வங்கிகளின் உரிமையாண்மையில் பொருண்மிய ஈடுபாடுகளைக் கையேற்றல், கடன்வழங்கலின் உயர்ந்தபட்சத் தொகையினை விஞ்சுதல், புதிதாக நியமிக்கப்படுகின்ற/ தொடர்ந்துமிருக்கின்ற பணிப்பாளர்கள் மற்றும் முதன்மை முகாமைத்துவ ஆளணியினரின் நியமனத்திற்கான பொருத்தம் மற்றும் தகுதியை மதிப்பிடல், சந்தைப் பெறுமதிக்கும் குறைவாக சொத்துக்களை விற்றல், குறைந்தபட்ச மூலதன தேவைப்பாடுகளைப் பூர்த்திசெய்தல், வெளியிலிருந்து பணிகளைப் பெற்றுக்கொள்ளுதல் வெளியாரிடமிருந்து பணிகளைப் பெற்றுக்கொள்ளும் ஒழுங்குகள், முகவர் தொழிற்பாடுகள், அடுக்கு 2 மூலதனத்திலுள்ள மீள்மதிப்பீட்டு ஒதுக்குகளை உள்ளடக்குதல் மற்றும் கைவிடப்பட்ட சொத்துக்களின் பணத்தினை மீளச்செலுத்துதல் என்பன தொடர்பில் மொத்தமாக 442 ஒப்புதல்கள் வழங்கப்பட்டன.

**(இ) ஒழுங்குமுறைப்படுத்தல் நடவடிக்கைகள்**

2018ஆம் ஆண்டுப் பகுதியில் வங்கித்தொழில் சட்டம் மற்றும் பணிப்புரைகளுடன் இணங்கியொழுகாமை தொடர்பிலான 33 சம்பவங்கள் பற்றி உரிமம்பெற்ற வங்கிகளுக்கு ஒழுங்குமுறைப்படுத்தல் நடவடிக்கைகள் அறிவிக்கப்பட்டன. மேலும், காலாண்டு அடிப்படையில் வங்கித்தொழில் துறையின் செயலாற்றம் பற்றி நாணயச் சபைக்கு அறிவிக்கப்பட்டது.

**2.3 தொடர்ச்சியாக மேற்பார்வையினை நடாத்துதல்**

(அ) தொடர்ச்சியான மேற்பார்வை என்பது தனிப்பட்ட வங்கிகளின் அலுவல்கள் மீது இடம்பெற்று வருகின்ற கண்காணிப்புப் பொறிமுறையாக இருப்பதுடன் இது முழு வங்கித்தொழில் தொழில்துறையினதும் தொழிற்பாட்டுக்கு வினைத்திறனையும் நீண்ட கால உறுதிப்பாட்டுத் தன்மையினையும் கண்டறிவதற்கானதொரு நேரகாலத்துடன் எச்சரிக்கைப்படுத்தும் முறைமையாகவும் செயற்படுவதுடன் தேவையானவிடத்து வைப்பாளர்களின் நிதிப் பாதுகாப்பை உறுதிசெய்யும் பொருட்டு சரிசெய்யும் வழிமுறைகளை நடைமுறைப்படுத்துவதனையும் இயலச் செய்கிறது.

(ஆ) வெப்பினைத் தளமாகக் கொண்ட பின்நெட் முறைமையினூடாக வங்கிகளினால் சமர்ப்பிக்கப்பட்ட காலாந்தர நிதியியல் மற்றும் செயலாற்றத் தகவல்களை அடிப்படையாகக் கொண்டு தொடர்ச்சியான மேற்பார்வை நடாத்தப்பட்டது. பின்நெட் ஊடாக நிதியியல் மற்றும் முன்மதியுடைய தகவல்களை உள்ளடக்கிய விதத்தில் ஒவ்வொரு வங்கியாலும் ஏறத்தாழ 70 நியதிச்சட்டக் கூற்றுக்கள் மாதாந்த/ காலாண்டு வருடாந்த அடிப்படையில் சமர்ப்பிக்கப்பட்டன. சிறந்த அறிக்கையினைத் தயாரிப்பதற்கு வசதியளிக்கும் விதத்தில் வங்கி மேற்பார்வைத் திணைக்களத்தினால் பேணப்பட்ட தரவுத் தளத்தினைத் புதுப்பித்தல் செயற்பாடுகள் 2018இலும் தொடர்ந்தது.

(இ) வங்கிகளின் தொடர்ச்சியான கண்காணிப்பு மற்றும் மேற்பார்வைச் செயன்முறையில் வங்கித்தொழில் துறையின் துறைவாரியான கொடுகடன் குவிவு தொடர்பில் விசேட அறிக்கைகள் தயாரிக்கப்பட்டன. மேலும், அறிக்கைகளைத் தயாரிப்பதில் வசதியளிப்பதற்காக வங்கித்தொழில் துறையின் மொத்தத் தரவுகள் இலங்கை மத்திய வங்கியின் மற்றைய திணைக்களங்களுடனும் வெளிவாரி அரச நிறுவனங்களுடனும் பகிர்ந்து கொள்ளப்பட்டன. மேலும், வங்கித்தொழில் துறை செயலாற்றம் மீதான மாதாந்தச் சமர்ப்பிப்புக்களும் தயாரிக்கப்பட்டன.

(ஈ) 2018ஆம் ஆண்டுப்பகுதியில் கடன்வட்டி வீதங்கள், மீள் அட்டவணைப்படுத்தப்பட்ட கடன்கள், கொடுகடன் அட்டைகள், அடகுபிடித்தல் தொழிற்பாடுகள், வங்கித்தொழில் தவறான நடத்தைகள் மற்றும் மோசடிகள், அதிகாரமளிக்கப்படாத நிதியங்களின் எடுப்பனவுகள் மற்றும் தன்னியக்கக் கூற்றுப் பொறிகளின் விதிப்புகள் மற்றும் கட்டணங்கள் தொடர்பில் குறைப்புக்களை எதிர்பார்த்தல் தொடர்பில் ஏறத்தாழ 795 வாடிக்கையாளர் முறைப்பாடுகள் கையாளப்பட்டன. மேலும், உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளில் வைத்திருக்கப்பட்ட மூத்த பிரசைகளின் நிலையான வைப்புக்கள் மீதான வட்டியின் மீளச்செலுத்தல் தொடர்பான தகவல்களைச் சேகரித்து காலாண்டு அடிப்படையில் நிதி மற்றும் பொதுசன ஊடக அமைச்சிற்குச் சமர்ப்பிப்பதற்கு வங்கி மேற்பார்வைத் திணைக்களம் வசதியளித்தது.

(உ) 2018 காலப்பகுதியில் குறித்துரைக்கப்பட்ட நேர இலக்கொன்றிற்குள் வங்கிகளின் நியதி பரீட்சிப்புக்களின் போது அடையாளம் காணப்பட்ட மேற்பார்வைக் கரிசனைகளைத் தீர்ப்பது தொடர்பான முன்னேற்றம் காலாண்டு அடிப்படையில் மேற்பார்வை செய்யப்பட்டன. மேலும் தொடர்ச்சியான மேற்பார்வை தொழிற்பாடுகளின் மூலம் அடையாளங் காணப்பட்ட ஒழுங்குமுறைப்படுத்தல் கரிசனைகளைக் கலந்துரையாடுவதற்காக உரிமம்பெற்ற வங்கிகளுடன் 17 கூட்டங்கள் நடத்தப்பட்டன.

**2.4 காலாந்தரப் பரீட்சிப்புக்களை நடத்துதல்**

(அ) முன்னைய ஆண்டின் தொடர்ச்சியாக இடம்பெற்ற 05 பரீட்சிப்புக்கள் உட்பட 2018 ஆண்டுக் காலப்பகுதியில் வங்கி மேற்பார்வைத் திணைக்களம் 32 பரீட்சிப்புக்களை நடத்தியது. 27 தொடர்பான வங்கிகளின் முகாமைத்துவத்துடன் இடம்பெற்ற வழமையான கலந்துரையாடல்களின் மூலமாக 2018இல் 27 வங்கிகளின் பரீட்சிப்புக்கள் நிறைவடைந்து நாணயச் சபைக்கு அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்ட வேளையில் 05 பரீட்சிப்புக்கள் முற்றுப்பெறும் நிலையில் இருக்கின்றன. பரீட்சிப்புக்களின் போது எழுந்த முக்கிய கரிசனைகள் குறைந்த மூலதனமயமாக்கல் மற்றும் குறைந்த வினைத்திறன், கம்பனி ஆளுகை மற்றும் முகாமைத்துவம் தொடர்பான குறைபாடுகள், தொழில்நுட்ப இடர்நேர்வு முகாமைத்துவம் மற்றும் திரவத்தன்மை இடர்நேர்வு முகாமைத்துவம் தொடர்பான குறைபாடுகள், செயற்பாடக் கடன்கள் பற்றிய குறைவான மதிப்பீடுகள் மற்றும் அறவிடமுடியா மற்றும் ஐயக்கடன்களுக்கான குறைந்த ஏற்பாடுகள் மற்றும் திறைசேரித் தொழிற்பாடுகள் தொடர்பான கரிசனைகளை உள்ளடக்கியிருந்தன. மேலும், பல பரீட்சிப்புக்கள், அரச பிணையங்களிலான முதலீடுகள், கம்பனி ஆளுகை, வாடிக்கையாளர் முறைப்பாடுகள் வர்த்தக நிதி கொடுக்கல்வாங்கல்கள் மற்றும் வெளிநாட்டுச் செலாவணிக் கொடுக்கல்வாங்கல்கள் மற்றும் உந்து ஊர்திகள் என்பனவற்றிற்காக வழங்கப்பட்ட கொடுகடன் வசதிகள் ஆகிய துறைகளின் மீது மட்டுப்படுத்தப்பட்டளவில் மேற்கொள்ளப்பட்டன.

(ஆ) மேலும், வங்கி மேற்பார்வைத் திணைக்களம் உரிமம்பெற்ற வங்கிகளுக்காக மேற்பார்வைத் தரமிடல் மாதிரியொன்றினை, அதாவது வங்கி உறுதிப்பாட்டுத் தன்மை தரமிடல் குறிகாட்டியினை விருத்திசெய்துள்ளது. இது, உரிமம்பெற்ற வங்கிகளின் இடர்நேர்வினை அடிப்படையாகக் கொண்ட மேற்பார்வை கட்டமைப்பிற்கு வசதியளிப்பதற்காகவும் உரிமம்பெற்ற வங்கிகளின் தோற்றம் பெற்றுவரும் அபிவிருத்திகள் மற்றும் உபாய மாற்றல்களிலிருந்து தோற்றுகின்ற உள்ளார்ந்த இடர்நேர்வினை இனங்காண்பதற்காகவும் சரியான திருத்த நடவடிக்கைகளையும் நேரகாலத்துடன் இயலச் செய்வதற்காகவும் நாணயச் சபையினால் ஒப்புதலளிக்கப்பட்டது. இதன்படி, வங்கி உறுதிப்பாட்டுத் தரமிடல் குறிகாட்டியின் அடிப்படையில் இடர்நேர்வினை அடிப்படையாகக் கொண்ட பரீட்சிப்புக்கள் 2019 சனவரியின் 01ஆம் நாளிலிருந்து ஆரம்பிக்கப்பட்டன.

2.5 வங்கித்தொழில் துறையின் விழிப்புணர்வு மற்றும் இயலளவைக் கட்டியெழுப்புதல்

(அ) இயலளவைக் கட்டியெழுப்புதல்

வங்கி மேற்பார்வைத் திணைக்களம் வங்கித்தொழில் துறையின் இயலாற்றலைக் கட்டியெழுப்புவதற்கான அதன் பங்களிப்பினைத் தொடர்கின்ற விதத்தில், இலங்கை மத்திய வங்கியின் வங்கித்தொழில் கற்கைகளுக்கான ஆய்வு நிலையத்திலும் ஏனைய வெளிவாரி நிறுவனங்களிலும் நடைபெறுகின்ற ஒழுங்குமுறைப்படுத்தல் இணங்குவிப்பு, கம்பனி ஆளுகை, புதிய கணக்கீட்டு நியமங்கள், இடர்நேர்வு முகாமைத்துவம், வங்கித்தொழில் வியாபாரம் மற்றும் சட்டம் மற்றும் வங்கித்தொழில் மற்றும் நிதியுடன் தொடர்பான ஒழுங்குமுறைப்படுத்தல் அபிவிருத்தி போன்ற துறைகளை உள்ளடக்கிய பல்வேறுபட்ட தொழில் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களிலும் ஆய்வரங்குளிலும் பங்குபற்றுவதற்காக வள ஆளணியினரை வழங்கியிருக்கின்றது. வங்கி மேற்பார்வைத் திணைக்களம், வங்கிகளின் நடத்தைகளை மேம்படுத்துவதற்காக கம்பனி ஆளுகை சம்பந்தமாக உரிமம்பெற்ற வங்கிகளின் சபைச் செயலாளர்களுக்காக செயலமர்வொன்றினை ஒழுங்குசெய்தது.

வங்கி மேற்பார்வைத் திணைக்களத்தின் அலுவலர்களது இயலாற்றலைக் கட்டியெழுப்பும் நடவடிக்கைகள் 2018 இலும் தொடர்ந்ததுடன் வங்கி மேற்பார்வைத் திணைக்கள அலுவலர்கள் இடர்நேர்வை அடிப்படையாக்க கொண்ட மேற்பார்வை, பாசல் III நியமங்கள், கம்பனி ஆளுகை, கலாச்சாரம் மற்றும் விழுமியங்கள், பின்நெட், சைபர் பாதுகாப்பு, நிதியியல் கண்டுபிடிப்புக்கள், நிதியியல் அறிக்கையிடல் நியமங்கள் மற்றும் நிலையான நிதியிடல் போன்ற துறைகளில் உள்நாட்டு, வெளிநாட்டு பயிற்சித் திட்டங்களில் பங்கேற்றனர்.

(ஆ) வங்கிகள் மற்றும் ஏனைய ஆர்வலர்களுடனான கூட்டங்கள்

வங்கி மேற்பார்வைத் திணைக்களம் வங்கிகளின் முதன்மை நிறைவேற்று அலுவலர்களுடனான ஆளுநரின் கூட்டங்களுக்கான செயலகமாகத் தொடர்ந்தும் பணியாற்றியதுடன் இது இலங்கைப் பொருளாதாரம் மற்றும் வங்கித்தொழில் துறை போன்றவற்றின் அபிவிருத்திகள் மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் மற்றும் மேற்பார்வைக் கட்டமைப்பு தொடர்புபட்ட விடயங்களில் மத்திய வங்கிக்கும் வங்கித்தொழில் துறைக்குமிடையில் கலந்துரையாடல்களை உருவாக்குவதனையும் நோக்கமாகக் கொண்டிருந்தது. வங்கி மேற்பார்வைத் திணைக்களம் வங்கிகளின் பணிப்பாளர்களினது எதிர்கால கலாச்சாரம் மற்றும் நடத்தை, தொழில்நுட்ப இடர்நேர்வு மீளெழுச்சி மற்றும் பணம் தூ யதாக்கலுக்கெதிரான இணங்குவிப்பு சவால்கள் போன்ற துறைகளை உள்ளடக்கி வெளிநாட்டு வள ஆளணியினரின் பங்கேற்புடன் உரிமம்பெற்ற வங்கிகளின் பணிப்பாளர் சபை, முதன்மை நிறைவேற்று அலுவலர்கள் மற்றும் முக்கிய முகாமைத்துவ ஆளணியினர் அறிவாற்றல் மேலும், உயர்த்தி இற்றைப்படுத்துவதற்காக தொழில்நுட்ப கூட்டங்களை நடாத்தியது. மேலும், வங்கி மேற்பார்வைத் திணைக்களம் தகவல் தொழில்நுட்ப மீளெழுச்சி தொடர்பில் முதன்மை தகவல் அலுவர்கள் மற்றும் முதன்மை இடர்நேர்வு அலுவலர்களுடன் கலந்துரையாடல்களை ஒழுங்குசெய்தது.

பொருத்தமான மேற்பார்வை மற்றும் திருத்த நடவடிக்கைகளை சரியான நேரத்தில் நடைமுறைக்கிடப்படுவது என்பனவற்றை உறுதிப்படுத்துவதற்காக வங்கியின் குறித்துரைக்கப்பட்ட விடயங்களில் கலந்துரையாடுவதற்காக கரிசனைக்குரிய உரிமம்பெற்ற வங்கிகளின் மூத்த முகாமைகளுடன் கிரமமான முறையில் கூட்டங்கள் நடத்தப்பட்டன. வங்கித்தொழில் துறையின் உறுதித்தன்மையினையும் உறுதிப்படுத்துவதற்காக சபையினால் நியமிக்கப்பட்ட குழுக்களுடன் கூட்டங்கள் நடத்தப்பட்டன. மேலும், வங்கி மேற்பார்வைத் திணைக்களம், இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவகத்துடன் ஒழுங்கு செய்யப்பட்ட கூட்டத்தில் புதிய இலங்கை நிதியியல் அறிக்கையிடல் நியமங்களைப் பின்பற்றுவது தொடர்பில் தேவையான தகவல்களையும் தெளிவுபடுத்தல்களையும் பெற்றுக்கொள்ளுவதற்கு வங்கிகளுக்கு வசதியளித்தது.

வங்கி மேற்பார்வைத் திணைக்களம் நிதியியல் முறைமையின் வினைத்திறன், ஆற்றல்வாய்ந்த தன்மை மற்றும் பாதுகாப்பு என்பனவற்றை உறுதிப்படுத்துவதற்காக அங்கத்துவ நிறுவனங்களுக்கிடையேயான ஒத்துழைப்பிற்கு வசதியளிக்கும் விதத்தில் மைய நிதியியல் துறை ஒழுங்குமுறைப்படுத்தும் தலைவர்களை உள்ளடக்கிய நிதியியல் துறை மேற்பார்வைக் குழுவின் கூட்டமொன்றினை ஒழுங்குசெய்தது. மேலும் எதிர்வரும் கணக்காய்வின் போது கவனம் செலுத்தப்பட வேண்டிய துறைகள் பற்றி கலந்துரையாடுவதற்காகவும் கணக்காய்வு நிறுவனங்களினால் உரிமம்பெற்ற வங்கிகளுக்கு வழங்கப்படும் கணக்காய்வு அல்லாத பணிகளின் ஏற்பாடு தொடர்பிலும் உரிமம்பெற்ற வங்கிகளின் கணக்காய்வாளர் குழுவுடன் கூட்டமொன்று இடம்பெற்றது.

### இணைப்பு II-1

#### உரிமம்பெற்ற வங்கிகளின் பட்டியல்

**உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள்**

1. அமானா பாங்க் பிஎல்சி
2. அக்சிஸ் பாங்க் லிமிடெட்
3. இலங்கை வங்கி
4. பாங்க் ஒப் சைனா லிமிடெட்
5. காகில்ஸ் பாங்க் லிமிடெட்
6. சிற்றி பாங்க் என் ஏ
7. கொமர்ஷல் பாங்க் ஒவ் சிலோன் பிஎல்சி
8. டொயிஷ் பாங்க் ஏஜி
9. டிஎவ்சிசி பாங்க் பிஎல்சி
10. ஹபீப் பாங்க் லிமிடெட்
11. அட்டன் நஷனல் பாங்க் பிஎல்சி
12. ஐசிஐசிஐ பாங்க் லிமிடெட்
13. இந்தியன் பாங்க்
14. இந்தியன் ஓவசீஸ் பாங்க்
15. எம்சிபி பாங்க் லிமிடெட்
16. நஷனல் டெவலப்மென்ற் பாங்க் பிஎல்சி
17. நேஷன்ஸ் ரஸ்ட் பாங்க் பிஎல்சி
18. பான் ஏசியா பாங்கிக் கோப்பிரேசன் பிஎல்சி
19. மக்கள் வங்கி
20. பப்ளிக் பாங்க் பெர்காட்
21. சம்பத் பாங்க் பிஎல்சி
22. செலான் பாங்க் பிஎல்சி
23. ஸ்ரான்டட் சார்ட்டட் பாங்க்
24. ஸ்ரேற் பாங்க் ஒவ் இந்தியா

25. த ஹொங்கொங் அன்ட் ஷங்காய் பாங்கிங் கோப்பிரேசன் லிமிடெட்

26. யூனியன் பாங்க் ஒவ் கொழும்பு பிஎல்சி

**உரிமம்பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள்**

27. இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கி

28. லங்காபுத்ர டெவலப்மென்ற் பாங்க் லிமிடெட்

29. தேசிய சேமிப்பு வங்கி

30. பிரதேசிய சங்வர்த்தன பாங்க்

31. சணச டெவலப்மென்ற் பாங்க் பிஎல்சி

32. அரச ஈட்டு முதலீட்டு வங்கி

33. சிறிலங்கா சேவிங்ஸ் பாங்க் லிமிடெட்

**வெளிநாட்டு வங்கிகளின் பிரதிநிதித்துவ அலுவலகங்கள்**

1. டோகா பாங்க் கியூபீஎஸ்சி

2. ஜேபி மோர்கன் ஷேஷ் வங்கி என் ஏ

3. எம்யுஎப்ஜி பாங்க் லிமிடெட்

## 3. வங்கித்தொழில் கற்கைகளுக்கான ஆய்வுநிலையம்

விரைவாக மாற்றமடைந்துவரும் நிதியியல் தோற்றபாட்டின் சாவல்களைக் கட்டுப்படுத்தவதற்குத் தேவையான தேர்ச்சிகளையும் தகைமைகளையும் பங்கேற்பாளர்களுக்கு வழங்குவதன் வாயிலாக இலங்கை மத்திய வங்கியினதும் நிதியியல் துறை நிறுவனங்களினதும் மனித மூலதனத்தினை அபிவிருத்தி செய்கின்ற பொறுப்பு வங்கித்தொழில் கற்கைகளுக்கான ஆய்வு நிலையத்திடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது.

இதற்கமைய, 2018ஆம் ஆண்டுப்பகுதியில் வங்கித்தொழில் கற்கைகளுக்கான ஆய்வு நிலையம் நிதியியல் துறை நிறுவனங்களிலிருந்தான அத்தகைய தேவைகளை பூர்த்திசெய்யும் விதத்தில் தேவையான பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள், ஆய்வரங்குகள் மற்றும் செயலமர்வுகளை வடிவமைத்து ஒருங்கிணைத்து நடாத்தி வருவதில் கவனத்தினைச் செலுத்திய வேளையில், வழங்கப்பட்ட பயிற்சிகள் மற்றும் ஏனைய வசதிகளின் தரநியதிகளில் வங்கித்தொழில் கற்கைகளுக்கான ஆய்வு நிலையத்தின் தரத்தினை உயர்ந்த மட்டத்திற்கு உயர்த்துவதற்கான வழிமுறைகளை மேற்கொண்டது. மேலும், இலங்கை மத்திய வங்கியின் அலுவலர்களின் இயலாற்றலைக் கட்டியெழுப்புதல் மற்றும் வங்கியின் கொத்தணி முறையில் ஆதரவளித்தல் ஆகிய உபாயக் குறிக்கோள்களுடன் இசைந்துசெல்லும் விதத்தில் பயிற்சியை வழங்குவதற்கு சிறப்பான வலியுறுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டன.

2018இல் வங்கித்தொழில் கற்கைகளுக்கான ஆய்வு நிலையம் வர்த்தக வங்கித்தொழில் தொழிற்பாடுகள், இடர்நேர்வு முகாமைத்துவம் மற்றும் இணங்குவிப்பு, திறைசேரி தொழிற்பாடுகள், கணக்கீட்டு மற்றும் நிதியியல் முகாமைத்துவம், கொடுகடன் முகாமைத்துவம், சட்டம் மற்றும் ஒழுங்குகள், அபிவிருத்தி வங்கித்தொழில், ஆராய்ச்சி மற்றும் தரவுப் பகுப்பாய்வுகள், பொருளாதாரம், தகவல் தொழில்நுட்பம் மற்றும் மனிதவள முகாமைத்துவம் ஆகிய துறைகளை உள்ளடக்கியவிதத்தில் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை வழங்கியது. வங்கித்தொழில் கற்களுக்கான ஆய்வு நிலையம் இலங்கை மத்திய வங்கியின் வள ஆளணியினர் மற்றும் உயர் கல்வியல்/ தொழில்சார் தகைமைகளையும் பன்னாட்டு அனுபவங்களுடன்கூடிய நிதியியல் துறை, கொள்கை மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தும் துறைகளின் நிபுணர்களை உள்ளடக்கிய வெளிநாட்டு நிபுணர்கள் ஆகியோரை உள்ளடக்கிய மூலவள ஆட்களைக் கொண்ட குழுவினரிடமிருந்து பணிகளைப் பெற்றுக்கொண்டது.

வங்கித்தொழில் கற்கைகளுக்கான ஆய்வு நிலையம் இவ்வாண்டுப் பகுதியில் 53 கலண்டர் நிகழ்ச்சித்திட்டங்கள், 61 சிறப்பு நிகழ்ச்சித்திட்டங்கள், 18 கல்விசார் நிகழ்ச்சித்திட்டங்கள், 12 பகிரங்க விரிவுரைகள் உள்ளிட்ட 144 நிகழ்ச்சித்திட்டங்களை வெற்றிகரமாக நடாத்தியது. மேலும், இலங்கை மத்திய வங்கியின் அலுவலர்களது தகுதிகளை உயர்த்துவதற்காக இயலளவினைக் கட்டியெழுப்பும் 18 நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டதுடன், இதில் 616 அலுவலர் உறுப்பினர்கள் பங்கேற்றுக் கொண்டனர். இயலளவினைக் கட்டியெழுப்பும் நிகழ்ச்சித்திட்டங்கள் தென்கிழக்காசிய மத்திய வங்கிகளின் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிலையம் இந்திய றிசேர்வ் வங்கியின் றிசேர்வ் வங்கி அலுவலர் கல்லூரி மற்றும் ஜேர்மனியின் டொய்ச் புண்டஸ் வங்கி என்பனவற்றின் ஒத்துழைப்புடன் நடத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களை உள்ளடக்கிக் காணப்பட்டன. மேலும், வங்கித்தொழில் கற்கைகளுக்கான ஆய்வு நிலையம் உள்நாட்டு வர்த்தக வங்கிகள், சிறப்பியல்புவாய்ந்த வங்கிகள், வெளிநாட்டு மத்திய வங்கிகள் மற்றும் வர்த்தக வங்கிகளின் கோரிக்கையின் மீது இவ்வாண்டுப்பகுதியில் 23 தேவைக்கேற்றவாறான நிகழ்ச்சித்திட்டத்தினையும் நடத்தியது. பொருளாதார அறிவையும் நிதியியல் உள்ளீடு என அழைக்கப்படும் அனைத்து மக்களும் குறைந்த செலவில் நிதியியல் பணிகளை பெற்றுக்கொள்வது தொடர்பான அறிவினையும் மேம்படுத்தும் நோக்குடன் வங்கித்தொழில் கற்கைகளுக்கான ஆய்வு நிலையம் பல்வேறு தலைப்புக்களில் வங்கித்தொழில் கற்கைகளுக்கான ஆய்வு நிலையத்திலும் இலங்கை மத்திய வங்கியின் தலைமை அலுவலகத்திலும் 6 பகிரங்க ஆய்வரங்குகள் மற்றும் பிரதேச மட்டத்தில் 6 பகிரங்க ஆய்வரங்குகளையும் நடத்தியது.

மேலும், வங்கித்தொழில் கற்கைகளுக்கான ஆய்வு நிலையம் க.பொ.த.உயர்தரத்தில் பொருளாதாரத்தினைக் கற்கின்ற மாணவர்களை இலக்காகக் கொண்டு சிங்களத்திலும் தமிழிலும் “தக்சிலாவ” மற்றும் “அறிவூற்று” என்ற தலைப்பில் சிங்களத்திலும் தமிழிலும் இரண்டு தொலைக்காட்சித் தொடர்களைத் தொடர்ந்தும் ஒருங்கிணைத்தது.

இவ்வாண்டு முழுவதிலும் 7,198 உள்நாட்டு பங்கேற்பாளர்களும் பிலிப்பைன்ஸ், இந்தியா, பாகிஸ்தான், நேபாளம், வங்காளதேசம், பூட்டான், சீனா, மாலைதீவு, மொங்கோலியா, இந்தோனேசியா, மலேசியா, பப்புவா நியூ கினியா, கம்போடியா, புறூணை மற்றும் தாய்லாந்து ஆகிய நாடுகளிலிருந்து 226 வெளிநாட்டவர்களும் பங்கேற்றனர்.

வங்கித்தொழில் கற்கைகளுக்கான ஆய்வு நிலையம் நிகழ்ச்சித்திட்ட மாதிரி முறையியல், விரிவுரைகளை வழங்குதல் மற்றும் வழங்கப்பட்ட ஏனைய பணிகள் என்பனவற்றை மேம்படுத்தவதற்காக நிகழ்ச்சிகளின் பின்னரான ஆழமான மதிப்பீட்டுச் செயன்முறைகளை மேற்கொண்டது. 2019 இற்கான நிகழ்ச்சித்திட்ட கலண்டரானது மத்திய வங்கி மற்றும் நிதியியல் துறையின் தற்போதைய மற்றும் எதிர்காலப் பயிற்சித் தேவைகளை கவனமாக மதிப்பீடு செய்ததுடன் அதன் நிகழ்ச்சித்திட்டங்களின் அனைத்து அம்சங்களினதும் உயர்தரத்தினைப் பேணுவதற்கு கடுமையாக உழைத்தது.

## 4. தொடர்பூட்டல்

தொடர்பூட்டல் திணைக்களமானது 2018 காலப்பகுதியில் பொருளாதார மற்றும் விலை உறுதிப்பாட்டைப் பேணுதல் என்ற இலங்கை மத்திய வங்கியினுடைய பணியினை நிறைவு செய்வதற்கு மற்றும் இலங்கை மத்திய வங்கியினுடைய முகவர் தொழிற்பாடுகள் மற்றும் நிறுவன சேவைகள் தொடர்பான தகவல்களைத் தொடர்பூட்டுவதற்கும் ஆதரவினை வழங்குகின்ற அதனுடைய வகிபாகத்தினைத் தொடர்ந்தும் முன்னெடுத்தது. உரைகள், விரிவுரைகள், கூட்டங்கள் மற்றும் கருத்தரங்குகள் ஊடாக நேரடித் தொடர்பூட்டல் என்பவற்றிற்கு மேலதிகமாக தொடர்பூட்டல் திணைக்களமானது அதனுடைய ஆர்வலர்களுடன் தொடர்பு கொள்வதற்கு வங்கியினுடைய www.cbsl.gov.lk நிறுவன வெப்தளம், வெளியீடுகள், செய்தித்தாள்கள், தொலைக்காட்சி மற்றும் காணொளிகள் போன்ற பல்வேறுபட்ட ஊடகங்களைப் பயன்படுத்தியது.

### 4.1 வெளிவாரித் தொடர்பூட்டல்

2018இல் வருடாந்த முழுநாள் நிகழ்ச்சியானது 2018 செத்தெம்பர் 21 மற்றும் 22ஆம் திகதிகளில் அநுராதபுரத்தின் பிரதேச அலுவலக வளாகத்திலும் பொது மைதானத்திலும் நடாத்தப்பட்டது. மத்திய வங்கியினுடைய

தொழிற்பாடுகள் அல்லது கொள்கைகளினுடைய வரையறைகளுக்குள் வருகின்ற இத்தகைய குழுக்களால் முகங்கொடுக்கப்படுகின்ற பல்வேறுபட்ட பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கு வங்கியானது நிதியியல் துறை ஆளணியினர், அரச துறை அலுவலர்கள், ஆசிரியர்கள், பாடசாலை மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் உள்ளடங்கலாக பல்வேறுபட்ட இலக்கு குழுக்களை சென்றடைந்தது. நிதிசார் அறிவினை உயர்த்துவதும் அவர்களுக்கிடையில் விழிப்புணர்வை ஏற்படுத்துவதும் இந்நிகழ்ச்சித் திட்டத்தின் நோக்கமாகும். ஊழியர் சேமலாப நிதியம் தொடர்பான பணிகளைப் பெற்றுக்கொள்ளல், சேதமடைந்த நாணயத் தாள்களுக்கான புதிய நாணயத்தாள் பரிமாற்றம், நாணயக் குற்றிகளைப் பெற்றுக்கொள்ளல் மற்றும் இலங்கை மத்திய வங்கியினுடைய வெளியீடுகளைக் கழிவு விலையில் கொள்வனவு செய்தல் போன்றவற்றிற்கான சந்தர்ப்பங்களை நிகழ்விற்கு வருகை தந்தவர்கள் பெற்றுக்கொண்டனர். 350 இற்கு மேற்பட்ட உயர்தர மாணவர்களுக்காக பல்வேறுபட்ட கருத்தரங்குகளும் நடாத்தப்பட்டன.

சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் சீரமைக்கப்பட்ட நிறுவன வெப்தளமானது 2018ஆம் ஆண்டுமாச்சு மாதம் 28 ஆம் நாளன்று தகவல் தொழில்நுட்பத் திணைக்களத்துடன் இணைந்து தொடர்பூட்டல் திணைக்களத்தினால் ஆரம்பித்து வைக்கப்பட்டது. செல்லிடத் தொலைபேசி தேடல் இணக்கத்திறன் உள்ளடங்கலாக பயன்பாட்டாளர் சிநேகமான இடைமுகங்களுடன் தகவல்களை வினைத்திறனாகவும் விரைவாகவும் பெற்றுக்கொள்வதை உறுதிப்படுத்துவதற்கு தொழில் நிபுணர்கள், பொதுமக்கள், ஊடகங்கள் மற்றும் மாணவர்கள் போன்ற வெப்தள பயன்பாட்டாளர்களுக்காக சிறந்த தேடல் அனுபவத்தை வழங்குவது இந்த சீரமைப்பின் நோக்கமாகும். விசேட வகை - சிறந்த தமிழ் வெப்தளம் வகையின் கீழ் சிறந்த வெப்தளம் என்ற விருதினை Bestweb.lk 2018 விருதுகளில் தங்க வெற்றியாளர் விருதினை இலங்கை மத்திய வங்கி தனதாக்கியது.

2018இல் தொடர்பூட்டல் திணைக்களமானது 'நாணயக் கொள்கை மீளாய்வு' மற்றும் நிதியியல் நிறுவனங்கள் மற்றும் நிதியியல் சந்தைகள் தொடர்பான நாணயச் சபையினுடைய தீர்மானங்கள் போன்ற முதன்மையான பத்திரிகை வெளியீடுகள் உள்ளடங்கலாக 438 பத்திரிகை வெளியீடுகளை வெளியிட்டது. மேலதிகமாக, 2018 காலப்பகுதியில் வங்கியுடன் தொடர்புடைய பல்வேறு முக்கியமான கொள்கை விடயங்கள் மீதான 16 ஊடக மாநாடுகளை மத்திய வங்கி நடாத்தியது. அதேவேளை, 2018இல் 11 வர்த்தமானி அறிவித்தல்கள் மற்றும் விளம்பரங்கள் உட்பட 87 அறிவித்தல்கள் ஊடகங்களில் வெளியிடப்பட்டன. இலங்கை மத்திய வங்கி, தந்திமாற்றல் (செலாவணி) வீதங்கள், இலங்கை வங்கிகளுக்கிடையியான வழங்கல் வீதங்கள் மற்றும் கொள்கை வீதங்கள் தொடர்பில் 488 குறுந்தகவல் விழிப்பூட்டல்களையும் அனுப்பியது. ஆர்வலர்களுடன் தொடர்பூட்டலை மேலும் வசதிப்படுத்துவதற்காக டுவிட்டர், முகநூல் மற்றும் யூ ரியூப் போன்ற அதனுடைய நிறுவன சமூக வலைத்தள கணக்குகளைத் தொடர்பூட்டல் திணைக்களமானது நிர்வகித்து கண்காணிக்கிறது. 2017 மற்றும் 2018ஆம் ஆண்டுகளின் வங்கியினுடைய சமூக வலைத்தள கணக்குகள் தொடர்பான செயலாற்ற ஒப்பீடொன்று கீழே அட்டவணை II - 2 இல் தரப்பட்டுள்ளது.

**அட்டவணை II-2**

**சமூக வலைத்தளங்களினூடான இலங்கை மத்திய வங்கியின் தொடர்பூட்டல்**

| ஊடக வகை | 2017 | 2018 |
|---|---|---|
| யூ ரியூப் (இ.ம.வங்கி காணொளி தரவேற்றம்) (You tube) | 63 | 37 |
| யூ ரியூப் பார்வைகள் (கூட்டுமொத்தம்) | 177,454 | 64,996 |
| முகநூல் விருப்பங்கள் (கூட்டுமொத்தம்) (Face Book) | 18,146 | 23,066 |
| டுவிட்டர் பின்தொடர்பவர்கள் (கூட்டுமொத்தம்) (Twitter) | 17,990 | 23,010 |

பாடசாலை மாணவர்களுக்கிடையில் பொருளாதாரம் மற்றும் மத்திய வங்கி தொடர்பான அறிவினை மேம்படுத்தும் நோக்கத்துடன் "ஈகோன் ஐகோன் கட்டம் IV" தொலைக்காட்சி வினாடி வினா நிகழ்ச்சித் திட்டத்தின் ஆரம்ப கட்டமானது தொடர்பூட்டல் திணைக்களத்தினால் ஒழுங்கமைக்கப்பட்டதுடன் தொலைக்காட்சி வினாடி வினாவில் பங்குபற்றுவதற்காக சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளில் 16 பாடசாலைக் குழுக்களைத் தெரிவு செய்வதற்கு எழுத்து மூலமான பரீட்சையானது நடாத்தப்பட்டது. பரீட்சை வினாப் பத்திரமானது கல்விப் பொதுத்தராதர (உயர்தரம்) தரம் 12 மற்றும் 13 பொருளியல் (2017 இலிருந்து அமுல்படுத்தப்பட்டது) பாடத்திட்டத்தினை அடிப்படையாகக் கொண்டு ஆண்டு காலப்பகுதியில் தயாரிக்கப்பட்டது. இப்பரீட்சை 2019ஆம் ஆண்டு சனவரி 22ஆம் நாளன்று இலங்கை முழுவதும் நடாத்தப்பட்டது.

இதில் இலங்கை மத்திய வங்கியினுடைய முன்னாள் துணை ஆளுநர் முனைவர். டபிள்யூ.ஏ. விஜேவர்த்தன அவர்களினால் நிகழ்த்தப்பட்ட "மத்திய வங்கியின் சுயாதீனம் பற்றிய புதிய நோக்கு: தோற்றம் பெறும் பிரச்சனைகளைத் தீர்ப்பது எவ்வாறு?" என்ற தலைப்பில் இலங்கை மத்திய வங்கியின் 68ஆவது ஆண்டு நிறைவு சொற்பொழிவு மற்றும் 2017ஆம் ஆண்டு ஆண்டறிக்கை பற்றிய எடுத்துரைத்தல், வழிகாட்டல் 2018, ஆசியத் தீர்ப்பனவு ஒன்றிய நிலையியல் தொழில்நுட்பக் குழுக்கூட்டம் மற்றும் 11ஆவது வருடாந்த சர்வதேச ஆய்வு மாநாடு போன்ற வங்கி நிகழ்வுகளுக்கு தொடர்பூட்டல் திணைக்களம் வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்திருந்தது.

நுண்நிதி பற்றி சிங்களம் மற்றும் தமிழ் ஊடகங்கள் மூலம் மக்களுக்கு அறிவூட்டும் நோக்கத்துடன் வங்கியல்லா நிதி நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களத்துடன் இணைந்து தொடர்பூட்டல் திணைக்களமானது நுண்நிதி பற்றிய ஆவண நாடகத் தயாரிப்பினைக் கையாண்டதுடன் அது 2018ஆம் ஆண்டு ஒகத்து மாதத்தில் ரூபவாஹினி மற்றும் நேத்ரா தொலைக்காட்சி ஒளியலைவரிசையில் ஒளிபரப்பப்பட்டது.

2018ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 21 இலிருந்து 30 வரை கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த பன்னாட்டு மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற "கொழும்பு பன்னாட்டு புத்தகக் கண்காட்சி" இல் தொடர்பூட்டல் திணைக்களம் பங்குபற்றியதுடன் இலங்கை மத்திய வங்கியினுடைய வெளியீடுகள் இந்நிகழ்வில் விற்பனை செய்யப்பட்டன/ பகிர்ந்தளிக்கப்பட்டன.

"சனாதிபதிக்குத் தெரிவியுங்கள்" குறைகளைக் கையாளுகின்ற முறைமையூடாக இலங்கை மத்திய வங்கிக்கு வழிப்படுத்தப்பட்ட பொது மக்களின் குறைகளை தொடர்பூட்டல் திணைக்களம் கையாண்டதுடன் வங்கியிலுள்ள தொடர்பான திணைக்களங்களின் ஒத்துழைப்புடன் 2018இல் 325 குறைகளுக்குப் பதிலிறுத்தியது.

2016ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க தகவல் அறிவதற்கான உரிமைச் சட்டத்தின் கீழ் பிரசைகளிடமிருந்து பெற்றுக்கொண்ட கோரிக்கைகளை ஒருங்கிணைக்கின்ற பணியானது 2017ஆம் ஆண்டு மாச்சு மாதம் தொடக்கம் தொடர்பூட்டல் திணைக்களத்திற்கு குறித்தொதுக்கப்பட்டிருந்தது. மொத்தமாக 102 கோரிக்கைகள் மற்றும் 13 மேன்முறையீடுகள் பொதுமக்களிடமிருந்து கிடைக்கப்பெற்றதுடன் 2018 காலப்பகுதியில் தொடர்புடைய திணைக்களங்களின் உதவியுடன் செயற்படுத்தப்பட்டது.

### 4.2 உள்ளகத் தொடர்பாடல்

பொருளாதாரத்திலுள்ள நடப்பு விடயங்கள் தொடர்பில் மூத்த முகாமைத்துவத்தினர் சிறந்த தகவல்களைப் பெற்றுக் கொள்வதனை இயலச் செய்வதற்காக நிதியியல் துறை மற்றும் வங்கி தொடர்பான ஏனைய விடயங்கள் பற்றி மும்மொழிகளிலும் 15 தேசிய நாளிதழ்களில் வெளியிடப்பட்டு சேகரிக்கப்பட்ட 6,392 செய்தி நறுக்குகள், கட்டுரைகள் மற்றும் பொதுமக்களின் கருத்துக்கள் போன்றவை மூத்த முகாமைத்துவத்தினரிற்கு சமர்ப்பிக்கப்பட்டன. வெளியிடப்பட்ட முக்கியமான பத்திரிகை வெளியீடுகளும் இலங்கை மத்திய வங்கியினுடைய அலுவலர்களுக்கிடையில் விநியோகிக்கப்பட்டன.

2018ஆம் ஆண்டுத் தொடக்கத்திலிருந்து அலுவல்சார் உள்ளக செய்தி மடல் "கவுளுவ" (கருத்து "யன்னல்") டிஜிட்டல் வடிவத்தில் மட்டுமே வெளியிடப்பட்டதுடன், ஒரு தொகுதியானது அலுவலர் உள்ளக வெப்தளத்தில் (மன்சல) பதிவேற்றம் செய்யப்பட்டது.

### 4.3 பொதுமக்கள் விழிப்புணர்வு

அட்டவணை II - 3 இல் காட்டப்பட்டவாறு, "இலங்கை மத்திய வங்கியினுடைய குறிக்கோள்கள் மற்றும் தொழிற்பாடுகள்", "இலங்கைப் பொருளாதாரம்" போன்ற பல்வேறு தலைப்புக்களில் விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்களை 15,742 பங்குபற்றுனர்களுக்காக தொடர்பூட்டல் திணைக்களமானது ஒழுங்குபடுத்தியிருந்தது.

**அட்டவணை II - 3**

**2018இல் நடாத்தப்பட்ட பொதுமக்கள் விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்களின் விபரங்கள்**

| நிறுவனம் | நிகழ்ச்சித் திட்டங்களின் எண்ணிக்கை | பங்குபற்றுனர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| பாடசாலைகள் | 145 | 11,973 |
| பல்கலைக்கழகங்கள் | 5 | 200 |
| இலங்கை ஆயுதப் படைகள் மற்றும் பாதுகாப்பு பல்கலைக்கழகங்கள் | 4 | 148 |
| வெளிநாட்டு பிரதிநிதிகள் (தேசிய பாதுகாப்பு கல்லூரி) | 3 | 73 |
| நடமாடும் நிகழ்ச்சிகள் (இலங்கை மத்திய வங்கியின் தலைமை அலுவலகத்திற்கு வெளியே நடாத்தப்பட்டது) | 16 | 3,348 |

மேலும், பிரதேச அலுவலகங்களினால் முன்னெடுக்கப்பட்ட இரண்டு நடமாடும் நிகழ்ச்சித் திட்டங்களுக்கு தொடர்பூட்டல் திணைக்களமானது வளவாளர்கள் மற்றும் வெளியீடுகளை வழங்கி உதவியது. தொடர்பூட்டல் திணைக்களமானது பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களத்தின் ஒத்துழைப்புடன் 2018ஆம் ஆண்டின் இரண்டாம் காலாண்டுப் பகுதியில் பத்திரிகையாளர்களுக்காக ஒரு கல்விசார் நிகழ்ச்சித் திட்டத்தினை வெற்றிகரமாக நடாத்தியது.

தொடர்பூட்டல் திணைக்களமானது இவ்வாண்டு காலப்பகுதியில் ரூ.3.6 மில்லியன் பெறுமதியுடைய இலங்கை மத்திய வங்கியினுடைய வெளியீடுகளை விற்பனை செய்தது. பொருளாதார வரலாற்று அருட்காட்சியகத்திலுள்ள விற்பனை கருமபீடம், இராஜகிரியவிலுள்ள வங்கித்தொழில் கற்கைகளுக்கான ஆய்வு நிலையத்தின் வெளியீட்டுக் களஞ்சியம் மற்றும் பிரதேச அலுவலகங்களிலுள்ள விற்பனை கருமபீடங்கள் மற்றும் கொழும்பு பன்னாட்டு புத்தகக் கண்காட்சி என்பவற்றினூடாக இவ்விற்பனைகள் மேற்கொள்ளப்பட்டன. தொடர்பூட்டல் திணைக்களமானது நாடு முழுவதிலுள்ள பாடசாலை மாணவர்கள் மற்றும் பொது நூலகங்களுக்கிடையில் 6,993 எண்ணிக்கையான பல்வேறு வெளியீடுகளின் பிரதிகளை இலவசமாக விநியோகித்தது.

### 4.4 தமிழ் மொழிபெயர்ப்புப் பணிகள்

இலங்கை மத்திய வங்கியானது தமிழ் மொழியில் தொடர்பூட்டலை மேற்கொள்ளுவதற்கு இயலச்செய்யும் வகையில் தொடர்பூட்டல் திணைக்களமானது அதனுடைய பெறுமதிவாய்ந்த தமிழ் மொழிபெயர்ப்புப் பணிகளை வழங்கியது. இதில் சில முக்கியமான வெளியீடுகளும் உள்ளடக்கப்பட்டுள்ளன. ஆகவே, தொடர்பூட்டல் திணைக்களமானது தேசிய மொழிக் கொள்கைகளின் இணக்கப்பாட்டுடன் மூன்று மொழிகளிலும் தகவல்களை வழங்குதல் என்ற அதனுடைய குறிக்கோள்களை அடைந்தது.

### 4.5 புகைப்படமெடுத்தல் மற்றும் காணொளிப் பதிவு வசதி

தொகுப்பாக்கம் செய்தல், புகைப்படங்களை அச்சிடல், புகைப்படத் தொகுப்புகள் மற்றும் இறுவெட்டுக்களைத் தயாரித்தல் உள்ளிட்ட அனைத்து தொடர்பான பணிகளையும் வழங்கியதன் மூலம் தொழில்சார் நிபுணத்துவத் தரத்தினைப் பேணியதுடன் உரிய நேரத்தில் பதிவுகளை இலங்கை மத்திய வங்கியினுடைய வெப்தளத்திலும் மன்சலவிலும் (உள்ளக வலையமைப்பு) பதிவேற்றம் செய்யும் அதேவேளை 2018இல் இலங்கை மத்திய வங்கியினுடைய 390இற்கு மேற்பட்ட நிகழ்வுகளை புகைப்படக்கருவி மூலம் படம் பிடித்துள்ளன.

### 4.6 அச்சகம்

தொடர்பூட்டல் திணைக்களமானது இலங்கை மத்திய வங்கியினுடைய அச்சகத் தேவைப்பாடுகளை உயர்தர நியமத்துடன் நிறைவு செய்வதற்கு வடிவமைத்தல், தட்டச்சு ஒழுங்கமைப்பு மற்றும் அச்சிடல் போன்ற பணிகளை வழங்கியது. இது தொடர்பில் 2018 காலப்பகுதியில் இலங்கை மத்திய வங்கியின் அச்சகத்தினால் 221 எண்ணிக்கையிலான அச்சிடல் ஒப்படைகள் நிறைவு செய்யப்பட்டன. இவை சட்டகன (10 தொகுதிகள்), நியூஸ் சேர்வே (07 தொகுதிகள்), வைப்பகம் (06 தொகுதிகள்) போன்ற காலாந்தர வெளியீடுகளையும் மற்றும் "பொருளாதாரத் தத்துவங்களின் அறிமுகம் - பகுதி 02" "இலங்கையின் பொருளாதார மற்றும் சமூக புள்ளிவிபரங்கள் - 2018" , "இலங்கையில் வியாபாரம் செய்வதற்கு ஒரு படிப்படியான வழிகாட்டி (8வது பதிப்பு)", மூன்று மொழிகளிலுமான "சமூக பொருளாதாரத் தரவுக் கோப்புறை" மற்றும் "பணவீக்கத்தினுடைய கதை" (தமிழ் மொழியில்) போன்ற தலைப்பிலான வெளியீடுகளை உள்ளடக்கியுள்ளன. மேலும், வர்ணச் சுவரொட்டிகள், கையேடுகள், துண்டுப் பிரசுரங்கள், கடிதத் தலைப்புக்கள், சான்றிதழ்கள், வங்கி அலுவலர்களுடைய அட்டைகள், பல்வேறு படிவங்கள் மற்றும் வாழ்த்து அட்டைகளை அச்சிடல் போன்ற பணிகள் தொடர்பூட்டல் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்டன.

### 4.7 நூலகம் மற்றும் தகவல் நிலையம்

தொழில்சார் நிபுணத்துவ வகிபங்கினை ஏற்க தயாராகுவதற்கு அறிவினை திரட்டிக் கொள்ளுதல், விழிப்புணர்வினை கட்டியெழுப்புதல், இன்று வரையான பொருளாதார அபிவிருத்தி பற்றி தெரிந்திருத்தல் மற்றும் சீரான ஆளுமைகளை விருத்தி செய்தல் போன்றவற்றினூடாக இலங்கை மத்திய வங்கியினுடைய அலுவலர்களுக்கு உதவும் நோக்குடன் நூலகம் மற்றும் தகவல் நிலையம் செயற்படுத்தப்படுகின்றது.

நூலகம் மற்றும் தகவல் நிலையம் 30,829 புத்தகங்கள், 19,600 அறிக்கைகள் மற்றும் 2,079 இறுவட்டுக்கள் போன்ற சேகரிப்புக்களை வைத்திருக்கின்றது. இவை இவ்வாண்டு காலப்பகுதியில் 229 புத்தகங்கள், 100 அறிக்கைகள் மற்றும் 144 இறுவட்டுக்கள் உள்ளடக்கிய புதிய பதிப்புக்களையும் 48,650இற்கு அதிகமான சஞ்சிகை வெளியீடுகளையும் உள்ளடக்கியுள்ளன. பொருளாதாரம், முகாமைத்துவம் மற்றும் நிதியியல் தொடர்பான தலைப்புக்களில் பரந்தளவிலான வெளியீடுகளினுடைய சேகரிப்புக்களின் அணுகலை வழங்குகின்ற 'சயன்ஸ் டிரெக்ட்' (science Direct), 'ஈகோன்லிட்' (Econ Lit) , மற்றும் 'வைலி ஒன்லைன் ஜேனல்ஸ்' (Wiley Online Jonrnals) போன்ற அதேநேர கணனி வழி தரவுத்தளங்களுக்கு நூலகம் மற்றும் தகவல் நிலையம் சந்தா தொகையைச் செலுத்துகின்றது. மேலும், மத்திய வங்கித் தொழில் தொடர்பான விடயங்களில் பல்வேறு ஏனைய அதேநேர கணனிவழி மூல வளங்களுக்கு நூலகம் மற்றும் தகவல் நிலையத்தினால் சந்தா செலுத்தப்பட்டது. உதாரணமாக www.centralbanking.com, www.risk.net மற்றும் www.ft.com என்பவற்றைக் குறிப்பிடலாம். அத்துடன் இத்தகைய வளங்களுக்கு அலுவலர் அணுகலைத் தொடர்ச்சியாக வழங்கியது. வங்கியினுடைய அலுவலர்கள் தமது அலுவலகங்களிலிருந்தே சஞ்சிகைக் கட்டுரைகளை அணுகுவதற்கான வசதியை வழங்குகின்ற 'ஓபன்ஏதன்ஸ்' (Open athens) இற்கு நூலகம் மற்றும் தகவல் நிலையம் தொடர்ச்சியான சந்தாவினைச் செலுத்தியது. நூலகம்

மற்றும் தகவல் நிலையமானது அச்சிட்ட வடிவத்தில் 84 வெளிநாட்டு சஞ்சிகைகள் மற்றும் 18 உள்நாட்டு சஞ்சிகைகளுக்கு சந்தாவினை செலுத்துகின்றது.

நூலகம் மற்றும் தகவல் நிலையமானது “அண்மையில் புதிதாக சேர்க்கப்பட்டவை” (அதாவது புதிய நூல்கள்), நடைமுறை விடயங்களின் உள்ளடக்கம்”, “பன்னாட்டு செய்தி விழிப்புக்கள்”, “உள்நாட்டு அச்சிடல் திரட்டுக்கள் மற்றும் பொருளாதாரம், வங்கியியல் மற்றும் நிதியியல் குறிப்புக்கள் தொடர்பான அறிக்கைகள் போன்ற இலத்திரனியல் செய்தி அறிக்கைகளை தொடர்ந்தும் தொகுத்ததுடன் அவற்றை உள்ளக வலையமைப்பினூடாக பரவச் செய்தது. தெரிந்தெடுக்கப்பட்ட தகவல் பரப்பும் பணிகளும் வழங்கப்பட்டன.

மேலும், நூலகம் மற்றும் தகவல் நிலையமானது மின்னஞ்சல் மற்றும் நூல்களை இரவல் வழங்கியதனூடாக பயனுள்ள தகவல்களை வழங்கியதன் மூலம் இலங்கையிலுள்ள வங்கித் தொழில் மற்றும் பொருளாதார நூலகங்களுக்கு அதனுடைய பணிகளைத் தொடர்ந்தும் வழங்கியது. மேலும், தகவல் வளங்களையும் அனுபவங்களையும் உலகளாவிய மத்திய வங்கிகள் மற்றும் பன்னாட்டு நிதியியல் நிறுவனங்களுக்கிடையில் பகிர்ந்து கொண்டதனூடாக நூலகம் மற்றும் தகவல் நிலையமானது உலகளாவிய மத்திய வங்கி, நிதியியல் நிறுவன நூலக மற்றும் தகவல் தொழில்சார் நிபுணத்துவ வலையமைப்பில் (CBFA பட்டியல்) ஒரு செயற்படும் அங்கத்தவர் என்ற நிலையைப் பெற்றுக் கொண்டது. நூலகத்தின் உள்ளக வெப்தளத்தின் ஊடாக வங்கி அலுவலர்கள் நூலகத்தை அணுகுவதற்கான வசதியை வழங்கியதன் மூலம் டிஜிட்டல் நூலகப்பணி தொடர்ந்தும் பேணப்பட்டது.

## 5. நாணயம்

1949ஆம் ஆண்டின் 58ஆம் இலக்க நாணய விதிச் சட்டத்தில் குறித்துரைக்கப்பட்டவாறு, நாணயத்தாள்கள் மற்றும் குத்திகள் இரண்டினையும் உள்ளடக்கி இலங்கையில் நாணயத்தினை வெளியிடுகின்ற ஏகபோக உரிமையினையும் அதிகாரத்தினையும் இலங்கை மத்திய வங்கி கொண்டுள்ளது. இப்பொறுப்பினை நிறைவேற்றுவதில் இலங்கை மத்திய வங்கிக்கு நாணயத் தாள்களை வடிவமைத்தல், அச்சிடுதல், குத்திகளை வார்த்தல் மற்றும் நாணயத் தாள்களையும் குத்திகளையும் விநியோகித்தல் ஆகிய பொறுப்புக்கள் ஒப்படைக்கப்பட்டுள்ளன. இலங்கை மத்திய வங்கியின் நாணயத் திணைக்களமானது நாணயச் சபையின் நியதிச்சட்ட பொறுப்பாண்மையுடன் தொடர்புடைய தொழிற்பாடுகளைக் கையாளுகின்றது. பொருளாதாரத்தின் சுமுகமான தொழிற்பாட்டுக்கு அத்தியாவசியமான நாணயத்தின் பெறுமதியினையும் ஒருமைப்பாட்டினையும் பேணிக்காத்தல் மற்றும் நாணயத்திற்கான கேள்வியினை பூர்த்திசெய்வதற்குப் போதுமான இருப்புக்களை கிடைக்கச்செய்தல் என்பன மூலம் நாணயத்தின் மீது பொதுமக்கள் நம்பிக்கையினை கட்டியெழுப்புவதிலும் பேணுவதிலும் நாணயத் திணைக்களம் தொடர்ச்சியாக ஈடுபட்டது.

### 5.1 நாணயத்தை அச்சிடுதலும் வார்த்தலும்

2018ஆம் ஆண்டுப் பகுதியில் சிறந்த தரத்திலான நாணயத் தாள்கள் சுற்றோட்டத்திலிருப்பதனை உறுதிப்படுத்தும் பொருட்டும் பொதுமக்களின் தேவையினை பூர்த்திசெய்ய போதுமான இருப்பு இருப்பதனை உறுதிப்படுத்தும் பொருட்டும் 121 மில்லியன் எண்ணிக்கை கொண்ட நாணயத்தாள்களும் 311.4 மில்லியன் எண்ணிக்கை கொண்ட குத்திகளும் அச்சிடப்பட்டும் வார்க்கப்பட்டும் நாணயத் திணைக்களத்தினால் பெறப்பட்டன. துருப்பிடிக்காத உருக்கினால் வார்க்கப்பட்ட ரூபா 1, ரூபா 2, ரூபா 5, ரூபா 10 இன நாணயக் குத்திகளைக் கொண்ட சுற்றோட்ட நியம நாணயக் குத்திகளின் புதிய தொகுதியொன்று வடிவமைக்கப்பட்டு 2016 - 2017 காலப்பகுதியில் பெறப்பட்டது. இவை உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளினூடாக 2018 திசெம்பர் 03ஆம் திகதியன்று சுற்றோட்டத்திற்கு விடப்பட்டன. இப்புதிய நாணயக் குத்தித் தொடர்கள் வார்ப்புச் செலவினைக் குறைப்பதனையும் நாணயக் குத்திகளின் பாவனைக் காலத்தினை அதிகரிப்பதனையும் எடுத்துச்செல்வதனை இலகுவாக்குவதனையும் பார்வை குறைந்தவர்களினால் இலகுவாக அடையாளம் காணப்படுவதனையும் குறிக்கோள்களாகக் கொண்டு வடிவமைக்கப்பட்டன.

### 5.2 நாணய விநியோகம்

#### அ) சுற்றோட்டத்திலுள்ள நாணயம்

தொடர்ச்சியான தொழில்நுட்ப பயன்பாடுகளினால் காசல்லாக் கொடுப்பனவு முறைகள் காணப்பட்ட போதும், பொருளாதார வளர்ச்சி மற்றும் இலங்கையின் பொருளாதாரத்தில் காணப்பட்ட பணவீக்கம் என்பவற்றுடன் இசைந்துசெல்லும் விதத்தில் 2018இல் நாணயத் தாள்கள் மற்றும் குத்திகளுக்கான கேள்வி அதிகரித்தது. இதன்படி, அட்டவணை 11.4 இல் காட்டப்பட்டவாறு, 2018 திசெம்பர் 31இல் உள்ளவாறு சுற்றோட்டத்திலுள்ள மொத்த நாணயத்தின் பெறுமதி முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் ரூ.640.3 பில்லியனுக்கு 7.2 சதவீதத்தினால் அதிகரித்தது.

அட்டவணை 11.4

சுற்றோட்டத்திலுள்ள நாணயம் (2018இன் இறுதியில் உள்ளவாறு)


| விடயம் | பெறுமதி (ரூ. பில்லியன்) | | | | | மாற்றம் (%) | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 2014 | 2015 | 2016 | 2017 | 2018 | 2014 | 2015 | 2016 | 2017 | 2018 |
| தாள்கள் | 408.8 | 482.0 | 541.5 | 585.3 | 627.1 | 23.0 | 17.9 | 12.3 | 8.1 | 7.1 |
| குத்திகள் * | 7.5 | 9.1 | 10.7 | 12.1 | 132 | 10.3 | 21.3 | 17.6 | 13.1 | 9.1 |
| **மொத்தம்** | **416.3** | **191.1** | **552.2** | **597.4** | **640.3** | **22.7** | **18.0** | **12.4** | **8.2** | **7.2** |

* ஞாபகார்த்த நாணயக் குத்திகள் நீங்கலாக

2018இல் சுற்றோட்டத்திலுள்ள நாணயத்தாள்களின் பெறுமதி 627.1 பில்லியனாக அமைந்து 7.1 சதவீதத்தினால் அதிகரித்தது. வரைபடம் 11.1இல் தரப்பட்டுள்ளவாறு நாணயத் தாள்களிடையே 2018.12.31இல் உள்ளவாறு ரூ.5,000 மற்றும் ரூ.1,000 இன வகை நாணயத்தாள்கள் இரண்டும் ஒன்றுசேர்ந்து சுற்றோட்டத்திலுள்ள நாணயத்தாள்களின் மொத்தப் பெறுமதியில் ஏறக்குறைய 87 சதவீதத்தினை உள்ளடக்கியிருந்தன.

வரைபடம் II - 1


சுற்றோட்டத்திலுள்ள நாணயத்தாள்களின் பெறுமதி





உள்நாட்டு மொத்த உற்பத்திக்கான சுற்றோட்டத்திலிருந்த நாணய விகிதம் 2013இல் 3.54 சதவீதமாக அமைந்து நாட்டில் முக்கிய கொடுப்பனவு வழிமுறையொன்றாக நாணயத்திற்கான அதிகரித்த கேள்வியினை எடுத்துக்காட்டும் விதத்தில் 2018இல் 4.44 சதவீதமாக விளங்கியது. (வரைபடம் 11.2)

(வரைபடம் 2: சுற்றோட்டத்திலுள்ள நாணயம்/ மொத்த உள்நாட்டு உற்பத்தி)

வரைபடம் II - 2
சுற்றோட்டத்திலுள்ள நாணயம்/ மொத்த உள்நாட்டு உற்பத்தி




வரைபடம் II - 3
நாணயம் வழங்குதல்[1] - குத்திகளினதும் நாணயத் தாள்களினதும் எண்ணிக்கை




1 நாணய வெளியீடுகள் பயன்படுத்தத்தக்க மற்றும் புதிய நாணயத் தாள்கள் மற்றும் குத்திகளை உள்ளடக்குகின்றன

**(ஆ) உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளுக்கான நாணய வழங்கல்**

நாணயத் தாள்கள் மற்றும் குத்திகளுக்கான பொதுமக்களின் கேள்வியினை நிறைவுசெய்யும் பொருட்டு நாணயத் திணைக்களமானது உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் புறக்கோட்டை இலங்கை வங்கி கிளையில் நிறுவப்பட்டுள்ள விசேட பொதுமக்கள் கருமபீடம் என்பனவற்றினூடாக நாணயத்தாள்களினதும் குத்திகளினதும் கிரமமான வழங்கல்களை தொடர்ந்தும் உறுதிசெய்தது. அதற்கமைய 2018 காலப்பகுதியில் நாட்டில் சுற்றோட்டத்திற்காக நாணயத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட நாணயத்தாள்களும் குத்திகளும் முறையே ரூ. 795.4 பில்லியன் அல்லது 610.1 மில்லியன் எண்ணிக்கையான தாள்களாகவும் ரூ1.1 பில்லியன் அல்லது 197.8 மில்லியன் குத்திகளாகவும் காணப்பட்டன. (அட்டவணை 11.5 வரைபடம் 11.3) குத்திகளின் குறைந்த கொள்வனவு வலு காரணமாக நாணயக் குத்திகளுக்கான கேள்வி 2016 இலிருந்து குறைவடைந்த போக்கினைக் காட்டியது.

அட்டவணை II-5

உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளுக்கு வழங்கப்பட்ட நாணயத்தாள்களும் குத்திகளும்

| விடயம் | பெறுமதி (ரூ. பில்லியன்) | | | | |
|---|---|---|---|---|---|
| | 2014 | 2015 | 2016 | 2017 | 2018 |
| தாள்கள் | 431.8 | 503.4 | 594.0 | 628.0 | 795.4 |
| குத்திகள் | 0.8 | 1.6 | 1.6 | 1.4 | 1.1 |
| **மொத்தம்** | **432.6** | **505.0** | **595.6** | **629.4** | **796.5** |

பிரதேச மட்டத்தில் குத்தி தேவைப்பாட்டினை நிறைவுசெய்வதற்காக நாடளாவிய குத்தி விநியோகத்திற்காக நாணயத் திணைக்களம் முயற்சியெடுத்தது. அதற்கமைய இலங்கை மத்திய வங்கியின் பிரதேச அலுவலகங்கள் ஊடாக நாட்டின் உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளின் பிரதேச மட்டக் கிளைகளுக்கும் பிரதேச அலுவலகங்களுக்கும் நாணயக் குத்திகளை நாணயத் திணைக்களம் விநியோகித்தது.

**(இ) உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளிடமிருந்து நாணய வைப்புகளை ஏற்றுக்கொள்ளல்**

நாணயத் தொழிற்பாடுகளின் ஒரு பகுதியாக, நாணயத் திணைக்களமானது நாணயக்கொள்கை கருவியொன்றாக, இலங்கை மத்திய வங்கியினால் விதிக்கப்படும் நியதிச்சட்ட ஒதுக்கீட்டு தேவைப்பாட்டினை பேணுவதற்காக உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளிடமிருந்து நாணய வைப்புகளை ஏற்றுக்கொள்கின்றது. 2018 காலப்பகுதியில் அட்டவணை 11.6இல் தரப்பட்டுள்ளவாறு உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளிடமிருந்து பயன்படுத்தத்தக்க (பொருத்தமானது) மற்றும் பயன்படுத்தமுடியாத (பொருத்தமற்றது) சேதமயைற்தவை உள்ளடங்கலாக இரண்டு வகையான நாணயத் தாள்களை ஏற்றுக்கொண்டது. 2018இல் நாணயத் திணைக்களத்தினுடனான உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளின் நாணய வைப்புகள் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகின்றபோது 29.1 சதவீதத்தினால் அதிகரித்தன.

அட்டவணை II-6

உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளினால் வைப்புச் செய்யப்பட்ட நாணயம்

| விடயம் | பெறுமதி (ரூ. பில்லியன்) | | | | மாற்றம் (%) | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 2015 | 2016 | 2017 | 2018 | 2015 | 2016 | 2017 | 2017 |
| தாள்கள் | 429.6 | 534.5 | 584.0 | 753.7 | 21.1 | 24.2 | 9.2 | 29.1 |

**(ஈ) ஞாபகார்த்த நாணயக் குத்திகளின் வெளியீடும் ஞாபகார்த்த சேகரிப்பாளர் பொருட்களின் விற்பனையும்**

2018 பெப்புருவரியில் நாணயத் திணைக்களம் இலங்கையின் 70 ஆவது சுதந்திர தினத்தினைக் குறிக்கும் முகமாக ரூ.1,000 முகப்புப் பெறுமதியினைக் கொண்ட சுற்றோட்ட நியம ஞாபகார்த்த நாணயக் குத்தியொன்றினை வெளியிட்டது. இதற்குப் புறம்பாக, 2018 நவெம்பரில் நாணயத் திணைக்களம் இலங்கை சமிஞ்ஞைப் படைப்பிரிவு நாட்டிற்களித்த பங்களிப்பினை அங்கீகரிக்கும் முகமாக அதன் 75ஆவது ஆண்டு நிறைவினைக் குறிக்கும் விதத்தில் ரூ.10 முகப்பெறுமதியினைக் கொண்ட நியம சுற்றோட்ட நாணயக் குத்தியினை வெளியிட்டது. ஞாபகார்த்த சேகரிப்பாளர் பொருட்கள் இலங்கை மத்திய வங்கியின் பிரதேச அலுவலகங்களூடாகவும் கொழும்பிலுள்ள பொருளாதார வரலாற்று அரும்பொருட் காட்சிசாலையினூடாகவும் விற்பனை செய்யப்படுகின்றன.

### 5.3 தூய நாணயத் தாள் கொள்கை

நாணயத் திணைக்களம் சுற்றோட்டத்திலிருந்து பொருத்தமற்ற, பயன்படுத்தமுடியாத நாணயத்தாள்களை புறக்கீடு செய்யும் அதேவேளை சிறந்த தரமிக்க நாணயத் தாள்கள் சுற்றோட்டத்தில் உள்ளதினை உறுதி செய்கின்ற நோக்குடன் கடந்த பல வருடங்களாக தூய நாணயத் தாள் கொள்கையினை நடைமுறைப்படுத்தி வருகிறது. சுற்றோட்டத்திலுள்ள தூ ய நாணயத் தாள்கள் நாடு பற்றிய தெளிவான எண்ணப்பாங்கினை பிரதிபலிப்பதனால், தூய நாணயத்தாள் கொள்கையினை உறுதிப்படுத்துவதற்கு நாணயத் திணைக்களம் 2018இல் பல்வேறு நடவடிக்கைகளை ஆரம்பித்தது.

2018 காலப்பகுதியில் ரூ.252.2 பில்லியன்[1] முகப்பெறுமதியினைக் கொண்ட உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளினால் வைப்பிலிடப்பட்ட 343.8 மில்லியன் எண்ணிக்கையிலான பொருத்தமற்ற நாணயத் தாள்களை அழித்ததன் மூலம் சிறந்த தரத்திலான (பொருத்தமான) நாணயத்தாள்களின் கிரமமான வழங்கல்களையும் பொருத்தமற்ற நாணயத்தாள்களை அகற்றுவதனையும் நாணயத் திணைக்களம் தொடர்ந்தும் உறுதிசெய்தது. நாணயத் திணைக்களமானது ரூ.467.0 பில்லியன் தொகைக்கான 231.5 மில்லியன் எண்ணிக்கையிலான பயன்படுத்தத்தக்க நாணயத் தாள்களை சுற்றோட்டத்திற்கு மீள வழங்கியது.

கிரமான அடிப்படையொன்றில் உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளின் நாணய வைப்புகள் மத்தியில் காணப்படும் வேண்டுமென்று சேதப்படுத்தப்பட்ட, மாற்றம் செய்யப்பட்ட அத்துடன்/ அல்லது உருச்சிதைக்கப்பட்ட நாணயத்தாள்களின் அதிகரித்த எண்ணிக்கையினைக் கருத்தில்கொண்டு நாணயத் தாள்களை வேண்டுமென்று சேதப்படுத்துதல், மாற்றம்செய்தல் மற்றும் உருச்சிதைத்தல் மீதான சட்டத்தினை கடுமையாக நடைமுறைப்படுத்த நாணயத் திணைக்களம் வழிமுறைகளை எடுத்தது.

அத்தகைய நடத்தைகளை தவிர்த்துக்கொள்வதற்கு பொதுமக்களுக்கு அறிவூட்டுவதற்கு ஆற்றல் வாய்ந்த விழிப்பூட்டல் நிகழ்ச்சித் திட்டமொன்று நடாத்தப்பட்டதுடன் 2018 திசெம்பர் 31 இற்கு முன்னர் தம்வசமுள்ள அத்தகைய நாணயத் தாள்களை மாற்றுமாறும் பொதுமக்களுக்கு அறிவிக்கப்பட்டது.

### 5.4 சட்டத்தினை நடைமுறைப்படுத்தும் அதிகாரிகளுக்கு வழங்கப்பட்ட உதவி

2018இல் நாணயத்தை போலியாக தயாரித்தல் தொடர்பிலும் நாணய விதிச்சட்டத்தின் ஏற்பாடுகளை மீறுவது தொடர்பிலும் நாணயத் திணைக்களம் சட்ட நடைமுறைப்படுத்தல் அதிகாரிகளுக்கு பின்வரும் விதத்தில் தொடர்ந்தும் வசதிகளை வழங்கியது.

(அ) போலி நாணயத் தாள்களை தயாரிப்பதற்கான முயற்சி தொடர்பில் பொலிஸ் குற்றவியல் புலனாய்வுத் திணைக்களத்தின் போலி நாணயப் பணியகத்துடனும் சட்டத்தை நடைமுறைப்படுத்தும் அதிகாரிகளுடனும் நெருக்கமான ஒத்துழைப்பினைக் கொண்டிருந்தது. 2018இல் 1,625 போலி நாணயத்தாள்கள் கண்டுபிடிக்கப்பட்டன. சுற்றோட்டத்திலுள்ள போலி நாணயத் தாள்கள் 2018இன் போது மில்லியன்களுக்கான பகுதிகளாக அளவிடும் பொழுது முன்னைய ஆண்டின் 5 உடன் ஒப்பிடுகையில் 1.6 இற்கு வீழ்ச்சியடைந்துள்ளது.

(ஆ) நீதிமன்றங்களில் வழக்கு விசாரணைக்கு வசதியளிக்கும் விதத்தில் போலி நாணயத் தாள்களுக்கான முடிவுச் சான்றுகளாக ஆளுநரின் கையொப்பத்துடன் கூடிய 108 சான்றிதழ்கள் நாணய விதிச் சட்டத்தின் 59ஆம் பிரிவின் நியதிகளுக்கமைவாக புறக்குறிப்பீடு செய்யப்பட்டு வழங்கப்பட்டன.

(இ) போலி நாணயத் தாள் வழக்குகளில் சாட்சியமளிப்பதற்காக 15 நீதிமன்ற வழங்குகளில் கலந்து கொண்டது

1 வேண்டுமென்றே சேதப்படுத்தப்பட்ட, மாற்றப்பட்ட, உருச்சிதைவு செய்யப்பட்ட நாணயத் தாள்கள் தொடர்பில் சட்டங்கள் கடுமையாக நடைமுறைப்படுத்தப்பட்டமையின் காரணமாக சேதப்படுத்தப்பட்ட நாணயத் தாள்களின் எண்ணிக்கை முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் குறிப்பிடத்தக்களவிற்கு குறைவாகக் காணப்பட்டது.

### 5.5 பொதுமக்கள் விழிப்புணர்வு

இலங்கை நாணயத்தின் வரலாறு இலங்கை நாணயத் தாள்களின் பாதுகாப்பு அம்சங்கள் நாணயத்தாள்களை சிறப்பாகக் கையாளும் நடைமுறைகள் மற்றும் நாணயக் குத்திகளின் காத்திரமான பயன்பாடு என்பன மீது பொதுமக்கள், பொலிஸ் அலுவலர்கள், உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் நிதியியல் நிறுவனங்களின் அலுவலர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், அரச அலுவலர்கள் போன்றோருக்கு அறிவூட்டும் பொருட்டு நாணயத் திணைக்களம் 2018 காலப்பகுதியில் பின்வரும் விதத்தில் பல பொதுமக்கள் விழிப்பூட்டல் நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்தியது.

(அ) வங்கித் தொழில் கற்கைகளுக்கான ஆய்வு நிலையத்தில் பல்வேறுபட்ட உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள், பொலிஸ் நிலையங்கள் மற்றும் தேசிய பாடசாலைகள், போன்ற இடங்களில் 23 ஆய்வரங்குகள்/ செயலமர்வுகள் நடத்தப்பட்டன.

(ஆ) நாடு முழுவதும் இடம்பெற்ற 09 கண்காட்சிகளில் நடமாடும் நாணய அரும்பொருட்காட்சிசாலை காட்சிப்படுத்தப்பட்டது.

(இ) இலங்கை மத்திய வங்கியின் மூன்று நாணய அரும்பொருட்காட்சிச்சாலைகளும் முக்கியமாக பாடசாலை மாணவர்கள் அண்ணளவாக உள்ளடக்கய, சுற்றுலாப் பயணிகள் மற்றும் பொதுமக்கள் ஆகியோரை 10,500 பேரின் விஜயத்திற்கு வசதியளித்ததுடன் தூய நாணயத் தாள் கொள்கை மற்றும் நாணயத் தாள்களை போலியாகத் தயாரிப்பதன் விளைவுகள் போன்றன தொடர்பில் தகவல் விடயங்களும் துண்டுப்பிரசுரங்களும் விநியோகிக்கப்பட்டன.

(ஈ) போலி நாணயத் தாள்களை அடையாளம் காண்பது தொடர்பில் முன்னணி தொலைக்காட்சி அலைவரிசைகள் ஊடாக 05 கலந்துரையாடல் நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டன.

### 5.6 நாணயத் தாள்களின் மீள் உற்பத்திக்கான அனுமதிகள்

நாணயச் சபையினால் அனுமதிக்கப்பட்ட கொள்கை நியதிகளுக்கமைவாக 2018இல் நாணயத்தாள்களை மீள உற்பத்தி செய்வதற்கான ஆறு அனுமதிகள் வழங்கப்பட்டன.

### 5.7 முறைமை மேம்படுத்தல்கள்

இலங்கை மத்திய வங்கியினால் வெளியிடப்படுகின்ற நாணயத் தாள்களின் தரநியமத்தினை மேம்படுத்தும் பொருட்டு அச்சகரின் உற்பத்திச் செயன்முறையின் இறுதி கட்டத்தில் ஒவ்வொரு தனி நாணயத்தாளினதும் பரீட்சிப்பினை உறுதிசெய்வதற்கு நாணயத் திணைக்களம் நடவடிக்கைகளை ஆரம்பித்தது. நாணயச் செயன்முறையினை தன்னியக்கப்படுத்தும் மற்றுமொரு நடவடிக்கையாக நாணயத் திணைக்களத்தில் நாணய தொழிற்பாடுகளின் வினைத்திறனையும் காத்திரமான தன்மையினையும் மேம்படுத்தும் பொருட்டு, உயர் தொழில்நுட்ப பொறிகளை அறிமுகப்படுத்தியதன் மூலம் நாணயச் செயன்முறையினை புதுக்கியமைப்பதற்கு நாணயத் திணைக்களம் நடவடிக்கைகளை எடுத்தது.

## 6. உள்நாட்டுத் தொழிற்பாடுகள்

### 6.1 உள்நாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களத்தின் தொழிற்பாடுகள்

நாணய விதிச் சட்டத்தில் குறிப்பிட்டவாறு, உள்நாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களம் பல முக்கிய தொழிற்பாடுகளை மேற்கொண்டது. அவை திறந்த சந்தைத் தொழிற்பாடுகளை நடத்துதல், வர்த்தக வங்கிகளின் நியதி ஒதுக்குகளை ஒழுங்குமுறைப்படுத்தல், அரசாங்கம், அரசாங்க முகவர்கள் மற்றும் அரசாங்கம் ஆகியோர் சார்பில் தொழிற்படுகின்ற ஏனைய நிறுவனங்களின் அலுவல்சார் வைப்பகத்தின் வங்கியாளராகவும் மற்றும் வர்த்தக வங்கிகளுக்கான வங்கியாளராகவும் தொழிற்படுதல், அரசாங்கத்திற்கு தற்காலிக முற்பணங்களை வழங்குதல், அதேநேர மொத்தத் தீர்ப்பனவு பங்கேற்பாளர்களுக்காக தீர்ப்பனவுக் கணக்குகளைப்

பேணுதல் மற்றும் அதேநேர மொத்தத் தீர்ப்பனவு பங்கேற்பாளர்களுக்கு ஒருநாளுக்குள்ளேயான கொடுகடன்களை வழங்குதல் என்பனவற்றை உள்ளடக்கியுள்ளன.

### 6.2 நாணயக் கொள்கையினை நடைமுறைப்படுத்தல்

மத்திய வங்கியின் தற்பொழுது நிலவும் நாணயக் கொள்கை நிலையுடன் இசைந்து செல்லும் விதத்தில் குறுங்கால வட்டி வீதங்களைப் பேணும் குறிக்கோளுடன் திணைக்களம் நாணயக் கொள்கையைத் தொடர்ந்தும் நடைமுறைப்படுத்தியது. விரும்பத்தக்க மட்டமொன்றினை நோக்கிச் சராசரி நிறையேற்றப்பட்ட அழைப்புப் பணவீதத்தினை வழிப்படுத்தும் விதத்தில் உள்நாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களம் திறந்த சந்தைத் தொழிற்பாடுகளில் தங்கியிருந்தது. இது, தாழ்ந்த தளம்பல் சூழ்நிலையொன்றில் விரும்பத்தக்க மட்டமொன்றினை அடையும்விதத்தில் அதிகரிக்கப்பட்ட நாணயக் கொள்கைக் கட்டமைப்பினை தொழிற்பாட்டு இலக்காகக்கொண்டு தொழிற்படுகிறது. அதேவேளை துணைநில் வசதிகளும் சந்தைப் பங்கேற்பாளர்களுக்கு திரவத் தேவைப்பாடுகளை ஓரிரவு அடிப்படையில் கட்டுப்படுத்துவதற்காக தொடர்ந்தும் கிடைக்கச் செய்யப்பட்டன. இதற்கமைய, திறந்த சந்தைத் தொழிற்பாடுகளின் பயன்பாட்டின் தன்மையில் கால இடைவெளியிலும் கொள்கை வீதங்களிலும் வீச்சின் அகலத்திலும், கொள்கை சமிஞ்ஞைகளின் தன்மையிலும் அதிகரித்த வெளிப்படைத் தன்மையிலும் சில மாற்றங்கள் இடம்பெற்றமைக்கு மத்தியிலும் 2018இல் நாணயக் கொள்கை தொழிற்பாட்டு நடைமுறை தொடர்ந்தும் அபிவிருத்தியடைந்தது.

வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையின் அழுத்தத்தினைக் குறைப்பதற்காக உந்து ஊர்திகள் மற்றும் அத்தியாவசியமல்லாத நுகர்வுப்பொருட்களின் இறக்குமதிக்கான நாணயக்கடிதத்திற்கெதிராக செத்தெம்பரில் அளவுத் தேவைப்பாடு விதிக்கப்பட்டது. இதன்படி, உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் உந்து ஊர்திகளின் இறக்குமதிக்காக 200 சதவீதம் கொண்ட குறைந்தபட்ச காசு அளவினையும் அத்தியாவசியமல்லாத நுகர்வுப்பொருட்களின் இறக்குமதிக்காக குறைந்தபட்சம் 100 சதவீத ஒதுக்குகளையும் பேணுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டன. மேலும், உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் 2018 ஒத்தோபர் 16ஆம் நாளிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் அத்தகைய அளவு வைப்புக்களில் குறைந்தபட்சம் 100 சதவீத ஒதுக்குகளைப் பேணுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டன.

பணச்சந்தை கொடுக்கல்வாங்கல்கள் மீதான அதேநேர துல்லியமான தகவல்களின் அணுகுமுறையானது பணச்சந்தையில் விலையினை கண்டுபிடிக்கும் செயன்முறைக்கு வசதியளிப்பதில் மிக முக்கியமானதாகும். இதற்கமைய, அழைப்புப் பணம், வெளிநாட்டுச் செலாவணி மற்றும் அரச பிணையங்கள் கொடுக்கல்வாங்கல்கள் பற்றிய தகவல்களை அறிக்கையிடுவதற்கு மத்திய ஒருங்கிணைக்கப்பட்ட சந்தை கண்காணிப்பாளர் முறைமை 2018 மாச்சு 01 இலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் அறிமுகப்படுத்தப்பட்டது. மத்திய ஒருங்கிணைக்கப்பட்ட சந்தை கண்காணிப்பாளர் உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளையும் முதனிலை வணிகர்களையும் ஒவ்வொரு வேலைநாளன்றும் 08.30 மணிக்கு முன்னதாக வங்கித்தொழில் முறைமையிலுள்ள நாளாந்த திரவத்தன்மையினை உயர்மட்ட துல்லியத்தன்மையுடன் மதிப்பிட்டுக்கொள்ளுமாறு கேட்டுக்கொண்டார்.

#### 6.2.1 திறந்த சந்தைத் தொழிற்பாடுகள்

**(அ) திரவத்தன்மை எதிர்வு கூறல்கள்**

உள்நாட்டு தொழிற்பாடுகள் திணைக்களம் நாணயக் கொள்கை நிலையுடன் இசைந்துசெல்லும் விதத்தில் பொருத்தமான திறந்த சந்தை ஏலத்தினை தெரிவுசெய்வதற்கு வசதியளிப்பதற்காக சந்தைப் பங்கேற்பாளர்களின் திரவத்தன்மை நிலைமையினை தீர்மானித்துக் கொள்வதற்காக நாளாந்த அடிப்படையில் உள்நாட்டு பணச் சந்தையின் திரவத்தன்மையினை மதிப்பிடுகிறது. திரவத்தன்மையினை மதிப்பிடுவதற்கு சுற்றோட்டத்திலுள்ள நாணயம், இலங்கை மத்திய வங்கியின் வெளிநாட்டுச் செலாவணிக் கொடுக்கல்வாங்கல்கள், வர்த்தக வங்கி ஒதுக்கு நிலைமைகள் மற்றும் அரசாங்கத்துடனான இலங்கை மத்திய வங்கியின் கொடுக்கல்வாங்கல்கள் என்பவற்றை உள்ளடக்கிய நாணயக் கொள்கை நடவடிக்கைகள் மற்றும் சுயநிர்ணய காரணிகள் பரிசீலனையில் கொள்ளப்படுகின்றன. தொழிற்பாட்டு இலக்கிடலின் பொருத்தமான மட்டம் மற்றும் சந்தைப் பங்கேற்பாளர்களிடையேயான திரவத்தன்மை பகிர்ந்தளிப்பு போன்ற ஏனைய காரணிகளுடன் பணச் சந்தையில் காணப்பட்ட மதிப்பிட்ட திரவத்தன்மையின் அடிப்படையில் உள்நாட்டு தொழிற்பாடுகள் திணைக்களம் நாணயக் கொள்கையினை நடத்துவதற்கு திறந்த சந்தை தொழிற்பாட்டு சாதனங்களின் வேறுபட்ட வகைகளைப் பயன்படுத்தியது.

**(ஆ) ஏலங்கள்**

**(i) மீள்கொள்வனவு ஏலங்கள்**

2018இல் உள்நாட்டு தொழிற்பாடுகள் திணைக்களம் சந்தையில் காணப்பட்ட மிகையான திரவத்தன்மையினை ஈர்த்துக்கொள்வதற்காக தேவைக்கேற்ற அடிப்படையில் ஓரிரவு, குறுங்கால மற்றும் நீண்டகால மீள்கொள்வனவு ஏலங்களை நடத்தியது. இதன்படி, பணச் சந்தை திரவத்தன்மை மிகையாகக் காணப்பட்ட பொழுது திரவத்தன்மையினை ஈர்த்துக்கொள்வதற்காக ஓரிரவு அடிப்படையொன்றில் ஓரிரவு மீள்கொள்வனவு ஏலங்கள் நடத்தப்பட்டன. குறுங்கால மீள்கொள்வனவு ஏலங்கள் அதேநாள் தீர்ப்பனவு அடிப்படையில் திரவத்தன்மையினை ஈர்த்துக்கொள்ளும் உபாயமொன்றாக ஒரு வாரம் வரையில் மேற்கொள்ளப்பட்டன. நீண்டகாலப்பகுதிக்கு மிகையான திரவத்தன்மை தொடர்ந்து காணப்படும் என எதிர்பார்க்கப்படும் பொழுது ஏழு நாட்களுக்கும் அப்பாலான காலப்பகுதிக்கு திரவத்தன்மையினை சந்தையில் ஈர்த்துக்கொள்வதற்காக அடுத்த வேலைநாளன்று தீர்ப்பனவு செய்யும் விதத்தில் நீண்டகால ஏலங்கள் நடத்தப்பட்டன.

**அட்டவணை II-7**

ரூ.பில்

| மீள்கொள்வனவு ஏலங்களின் வகை | ஏலங்களின் எண்ணிக்கை | முன்வைக்கப்பட்ட மொத்தத் தொகை | ஏற்றுக்கொள்ளப்பட்ட மொத்தத் தொகை |
|---|---|---|---|
| ஓரிரவு | 103 | 1,724.50 | 1,218.70 |
| குறுங்காலம் | 57 | 547.00 | 214.95 |
| நீண்ட காலம் | 55 | 429.50 | 96.63 |

**(ii) நேர்மாற்று மீள்கொள்வனவு ஏலங்கள்**

உள்நாட்டு தொழிற்பாடுகள் திணைக்களம் சந்தைக்கு திரவத்தன்மையினை உள்ளீடு செய்வதற்காக ஓரிரவு, குறுங்கால மற்றும் நீண்டகால அடிப்படையில் நேர்மாற்று மீள்கொள்வனவு ஏலங்களை நடத்தியது. ஏப்பிறல், யூன் மற்றும் யூலையில் நேர்மாற்று மீள்கொள்வனவு ஏலங்கள் இடையிடையே நடத்தப்பட்டதுடன் செத்தெம்பர் நடுப்பகுதியிலிருந்து தொடர்ச்சியான முறையில் ஏலங்கள் நடத்தப்பட்டன.

**அட்டவணை II-8**

ரூ.பில்

| மீள்கொள்வனவு ஏலங்களின் வகை | ஏலங்களின் எண்ணிக்கை | முன்வைக்கப்பட்ட மொத்தத் தொகை | ஏற்றுக்கொள்ளப்பட்ட மொத்தத் தொகை |
|---|---|---|---|
| ஓரிரவு | 107 | 2,531.00 | 2,099.10 |
| குறுங்காலம் | 70 | 1,400.80 | 968.71 |
| நீண்ட காலம் | 31 | 830.00 | 317.91 |

**(இ) உடனடிக் கொடுக்கல்வாங்கல்கள்**

பிணையங்களின் சொத்துடைமையினை மாற்றல் செய்வதன் மூலம் பணச் சந்தை திரவத்தன்மையில் நிரந்தரமான தன்மையொன்றினை மேற்கொள்வதற்காக 2018இல் உடனடி ஏலங்கள் நடத்தப்பட்டன.

அட்டவணை II-9

| | | | ரூ.பில் |
|---|---|---|---|
| உடனடி ஏலங்களின் வகை | ஏலங்களின் எண்ணிக்கை | முன்வைக்கப்பட்ட மொத்தத் தொகை | மொத்தத் திரவத்தன்மை |
| திறைசேரி உண்டியல்களின் உடனடி விற்பனை (திரவத்தமையினை ஈர்ப்பதற்கு) | 98 | 241.50 | 63.73 |
| திறைசேரி உண்டியல்களின் உடனடி கொள்வனவு (திரவத்தமையினை உள்ளீடுசெய்வதற்கு) | 110 | 475 | 40.50 |

முதலாந்தரச் சந்தை கொள்வனவுகளின் விளைவாக, இலங்கை மத்திய வங்கியின் திறைசேரி உண்டியல் உடமைகளில் ஏற்பட்ட அதிகரிப்பின் தாக்கத்தினை எதிரீடு செய்வதற்காக, திறைசேரி உண்டியல்களின் உடனடி விற்பனை ஏலங்கள் 2018இன் முதற்காலண்டில் மிகத் தீவிரமான முறையில் நடத்தப்பட்டன. உள்நாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களம் 2018 சனவரியின் ரூ. 60.0 பில்லியன் கொண்ட உடமைகளில் ஏற்பட்ட அதிகரிப்பிற்கெதிராக ரூ.56.3 பில்லியன் தொகை கொண்ட திறைசேரி உண்டியல்களின் உடனடி விற்பனையினை மேற்கொண்டது.

எனினும், 2018 செத்தெம்பர் நடுப்பகுதியிலிருந்து உள்நாட்டு பணச் சந்தையில் காணப்பட்ட உயர் பற்றாக்குறை தோற்றம் பெற்றமையின் காரணமாக உள்நாட்டு தொழிற்பாடுகள் திணைக்களம் நிரந்தர அடிப்படையில் திரவத்தன்மையினை உள்ளீடு செய்வதற்காக திறைசேரி உண்டியல்களின் உடனடி கொள்வனவு ஏலங்களை மீண்டும் தொடங்கியது.

### 6.2.2 துணைநில் வசதி

பங்கேற்கும் நிறுவனங்களுக்கு கொள்கை வீத வீச்சிற்குள் ஓரிரவு பணச் சந்தை வீதங்களினால் பிணிக்கப்பட்ட விதத்தில் துணைநில் வைப்பு வசதி வீதம் மற்றும் துணைநில் கடன் வழங்கல் வசதி வீதம் என்பனவற்றில் ஆண்டு முழுவதும் கொடுகடன் வசதிகள் வழங்கப்பட்டன. பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களிலிருந்து மிகையான திரவத்தன்மையினை ஈர்த்துக்கொள்வதற்கு துணைநில் வைப்பு வசதி வழங்கப்பட்ட வேளையில் பங்கேற்கும் நிறுவனங்கள் அவற்றின் ஓரிரவு திரவத்தன்மைத் தேவைப்பாடுகளை முழுமையாகப் பூர்த்திசெய்ய முடியாமல் இருக்கும்போது அவற்றிற்கு வங்கிகளுக்கிடையிலான பணச் சந்தை மற்றும் திறந்த சந்தைத் தொழிற்பாடுகளூடாக திரவத்தன்மையினை உள்ளீடு செய்வதற்காக துணைநில் கடன் வழங்கல் வசதி வழங்கப்பட்டது. துணைநில் வைப்பு வசதி கொடுக்கல்வாங்கல்கள் 2018இல் ரூ.18.8 பில்லியன் கொண்ட நாளாந்த சராசரியினைப் பதிவுசெய்த வேளையில் 2018ஆம் ஆண்டிற்காக ரூ.4,502.9 பில்லியன் கொண்ட மொத்த அளவினைப் பதிவுசெய்தது. துணைநில் கடன் வழங்கல் வசதியின் கீழ் கடனாக வழங்கப்பட்ட மொத்த அளவு ரூ.13.4 பில்லியன் கொண்ட நாளாந்த சராசரியுடன் 2018இல் ரூ.3,057.5பில்லியனைப் பதிவுசெய்தது.

### 6.2.3 நியதி ஒதுக்கு விகிதம்

நியதி ஒதுக்கு விகிதம் இலங்கை மத்திய வங்கியின் ஒழுங்குவிதிகளின் நியதிகளுக்கிணங்க, ஒவ்வொரு வர்த்தக வங்கியும் அவற்றின் மொத்த ரூபா வைப்புப் பொறுப்புக்களில் ஒரு பகுதியினை மத்திய வங்கியுடனான ஒதுக்குக் கணக்கில் பேணுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்ற குறைந்தபட்ச ஒதுக்குத் தொகையொன்றினை தீர்மானிக்கின்றது. உள்நாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களம் நியதிஒதுக்குத் தேவைப்பாட்டின்படி நியதி ஒதுக்கின் பேணலை நிருவகித்தல் மற்றும் இது தொடர்பில், வர்த்தக வங்கிகளின் இணங்குவிப்புக்களைக் கண்காணித்தல் ஆகிய இரண்டிற்கும் பொறுப்பாக இருக்கிறது. வர்த்தக வங்கிகளின் ரூபா வைப்புப் பொறுப்புக்களுக்கு ஏற்புடைத்தான நியதி ஒதுக்கு விகிதம் 2018 நவெம்பர் 16 இலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் 7.50 சதவீதத்திலிருந்து 6.00 இற்கு 150 அடிப்படைப் புள்ளிகளினால் குறைக்கப்பட்டது.

### 6.2.4 வங்கி வீதம்

நாணய விதிச் சட்டத்தின் 87ஆம் பிரிவின் கீழ், மத்திய வங்கியால் உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளுக்கு வழங்கப்படும் குறுங்கால முற்பணங்கள் மீதான வட்டி வீதம் வங்கி வீதம் ஆகும். 2017 காலப்பகுதியில் வங்கி வீதமானது 15 சதவீதத்தில் மாற்றமின்றிக் காணப்பட்டது. எனினும், 2017 காலப்பகுதியில் மத்திய வங்கி எந்தவொரு வர்த்தக வங்கிக்கும் இவ்வீதத்தில் நிதியினை வழங்கவில்லை.

## 6.3 வர்த்தக வங்கிகள் மற்றும் அரசிற்கான வங்கியாளர்

### 6.3.1 நிதியியல் நிறுவனங்களின் கணக்குகள்

மத்திய வங்கியுடனான தீர்ப்பனவுக் கணக்குகளினூடாக உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளும் முதனிலை வணிகர்களும் நாணய முறைமையுடன் இணைக்கப்பட்டுள்ளன. இக்கணக்குகள், கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் மற்றும் அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமையின் பங்கேற்பாளர்களிடையேயான பத்திரங்களற்ற பிணையங்கள் கொடுக்கல் வாங்கல்களுக்கான கொடுப்பனவுகளின் தீர்ப்பனவு என்பனவற்றிற்கு வசதியளிப்பதற்காக உள்நாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களத்தினால் பேணப்பட்டு வருகின்றன. மேலும், உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் வங்கி ஒதுக்குகளைப் பேணுவதற்காக இக்கணக்குகளைப் பயன்படுத்துகின்றன. காசோலை பிம்பப்படுத்தல் மற்றும் சுற்றோட்டக் குறைப்பு, இலங்கை வங்கிகளுக்கிடையிலான கொடுப்பனவு முறைமை, பொதுவான தன்னியக்கக்கூற்றுப் பொறி ஆளி மற்றும் பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆளி போன்ற சில்லறைக் கொடுப்பனவு முறைமைகள் தொடர்பில் வர்த்தக வங்கிகளிடையேயான தேறிய தீர்ப்பனவுகள் அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமையினூடாக மேற்கொள்ளப்பட்டதுடன் தேறிய தீர்ப்பனவுகளுக்கு உள்நாட்டு தொழிற்பாடுகள் திணைக்களம் வசதியளித்தது. 2018 இறுதியில் உள்நாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களம் 26 உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளினதும் 08 முதனிலை வணிகர்களினதும் கணக்குகளைப் பேணியது.

### 6.3.2 அரச கணக்குகள்

உள்நாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களம், அரச திணைக்களங்கள், அரச முகவர்கள், நிறுவனங்கள் மற்றும் நியதிச் சபைகள் என்பனவற்றின் கணக்குகளைப் பேணியதுடன் அவற்றிற்குத் தேவையான வங்கித்தொழில் வசதிகளையும் வழங்கியதன் மூலம் அரசிற்கான வங்கியாளர் என்ற அதன் வகிபாகத்தினை ஆற்றியது. 2018 இறுதியில் இலங்கை மத்திய வங்கியினால் பேணப்பட்ட கணக்குகளின் மொத்த எண்ணிக்கை 64 ஆகக் காணப்பட்டது. உள்நாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களம், இவ்வாண்டுப் பகுதியில், அரசாங்கத்தின் சார்பில் ரூ.17,920.8 பில்லியன் கொண்ட 18,005 கொடுக்கல்வாங்கல்களைக் கையாண்டது. அத்தகைய கொடுக்கல்வாங்கல்களில் 90 சதவீதத்திற்கும் கூடுதலானவை திறைசேரிக் கணக்குகளுக்கான துணைச் செயலாளர், பொதுப்படுகடன் திணைக்களத்தின் நடைமுறைக் கணக்கு, உள்நாட்டரசிறை ஆணையாளர் பெறுமதிசேர் வரி மீளளிப்புக் கணக்கு மற்றும் சனாதிபதி நிதியக் கணக்கு என்பனவற்றுடன் தொடர்பானவையாகக் காணப்பட்டன.

நாணய விதிச் சட்டத்தின் 89ஆவது பிரிவின் நியதிகளுக்கிணங்க, இலங்கை மத்திய வங்கி குறிப்பிட்டதொரு இறையாண்டில், மதிப்பிடப்பட்ட அரச அரசிறையில் 10 சதவீதம் என்ற உச்சமட்ட வரையறைகளுக்குட்பட்டு, கட்டணங்களெதுவுமின்றி அரசாங்கத்திற்கு முற்பணங்களை வழங்குகின்றது. 2018இன் தொடக்கத்தில், 2018ஆம் ஆண்டிற்காக மதிப்பிடப்பட்ட அரச அரசிறையின் அடிப்படையில், தற்காலிக முற்பணங்களின் தொகை 2017ஆம் ஆண்டிற்கான ரூ.203.9 பில்லியன் கொண்ட தற்காலிக முற்பணங்களுடன் ஒப்பிடுகையில் ரூ.21.1 பில்லியனால் ரூ.225.0 பில்லியனுக்கு அதிகரித்ததுடன் இதற்கு நாடாளுமன்றத்தினால் ஒப்புதலளிக்கப்பட்டது.

### 6.4 ஒரு நாளுக்குள்ளேயான திரவத்தன்மை வசதி ஏற்பாடு

உள்நாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களம், பங்கேற்கும் நிறுவனங்களுக்கு ஒரு நாளுக்குள்ளேயான திரவத்தன்மை வசதி ஏற்பாட்டினூடாக ஒரு நாளுக்குள்ளேயான நிதி கிடைப்பதனை ஏற்படுத்தியதன் மூலம் அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமையின் சுமுகமானதும் வினைத்திறன்மிக்கதுமான தொழிற்பாட்டினை நோக்கித் தொடர்ந்தது. இவ்வசதியானது, திறைசேரி உண்டியல்கள் மற்றும் முறிகளின் பிணையங்களுக்கெதிராக கட்டணமெதுவுமின்றி வழங்கப்பட்டதுடன் இவை அதேநாளன்று சந்தை விலைகளில் ஏற்படக்கூடிய ஏதேனும் வேறுபாடுகளை ஈர்த்துக்கொள்வதற்கேதுவாகப் போதுமான இலாபத்துடன் அவற்றின் சந்தை விலைகளில் மதிப்பிடப்பட்டன.

இவ்வாண்டுப் பகுதியில் எடுப்பனவு செய்யப்பட்ட ஒரு நாளுக்குள்ளேயான திரவத்தன்மை வசதியின் மொத்தப் பெறுமதியும் சராசரி நாளாந்தப் பெறுமதியும் முறையே ரூ.13,275 பில்லியனாகவும் ரூ.55.00 பில்லியனாகவும் காணப்பட்டன. இது ஒரு நாளுக்குள்ளேயான திரவத்தன்மை வசதியின் பயன்பாடு முன்னைய ஆண்டின் முறையே ரூ.11,430 கொண்ட பில்லியன் மொத்தப் பெறுமதி மற்றும் ரூ.47.4 பில்லியன் கொண்ட சராசரிப் பெறுமதி என்பனவற்றினைவிடக் காட்டியது.

### 6.5 அதிகாரமளிக்கப்பட்ட பணத் தரகர்களின் மேற்பார்வை

பணச் சந்தையில் விலை கண்டறியும் செயன்முறையில் அதிகாரமளிக்கப்பட்ட பணத்தரகுத் தொழில் கம்பனிகளின் முக்கியத்துவத்தினை கருத்திற்கொண்டும் அதிகாரமளிக்கப்பட்ட பணத்தரகுத் தொழில் கம்பனிகளின் ஈடுபாட்டின் காரணமாக ஏற்படக்கூடிய சந்தைக் குழப்பங்களை சாத்தியமானளவிற்கு குறைப்பதற்குமாக நாணயவிதிச் சட்டத்தின் பிரிவு 10(இ) இன் கீழ் 2013 பெப்புருவரி 15ஆம் நாளன்று நடைமுறைக்குவரும் விதத்தில் 2013ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க பணத்தரகுத் தொழில் ஒழுங்கு விதிகள் விடுக்கப்பட்டன. இதனைத் தொடர்ந்து 2016ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க பணத்தரகுத் தொழில் ஒழுங்கு விதியினால் திருத்தப்பட்டவாறான 2013ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க பணத்தரகுத் தொழில் ஒழுங்குவிதிகளை இரத்துச்செய்யும் விதத்தில் 2018 மாச்சு 05ஆம் நாளிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் 2018ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க பணத்தரகுத் தொழில் ஒழுங்கு விதிகள் விடுக்கப்பட்டன. வெளிநாட்டுச் செலாவணிச் சந்தை தொழிற்பாடுகள் தொடர்பில் இலங்கை மத்திய வங்கியின் பன்னாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களத்திற்கு வழங்கப்பட்ட ஒழுங்குமுறைப்படுத்தல் அதிகாரங்கள், முதனிலை அலுவலர்களுக்கும் கணிசமான பங்குகளைக் கொண்ட பங்குடமையாளர்களுக்கும் புதிய பொருத்தல் மற்றும் தகுதி விதிகளின் அறிமுகம், ஒழுங்கு விதிகளின் மீறல்களுக்காக புதிய தீர்மானங்கள் உள்ளடக்கப்பட்டமை மற்றும் மத்திய ஒருங்கிணைக்கப்பட்ட சந்தைக் கண்காணிப்பாளரின் அறிக்கையிடல் தேவைப்பாடுகள் உள்ளடக்கப்பட்டமை என்பன புதிதாக சேர்க்கப்பட்ட முக்கியமான விடயங்களாகவுள்ளன.

அதிகாரமளிக்கப்பட்ட பணத்தரகர்களின் சந்தை நடவடிக்கையினையும் நடைமுறைகளையும் மேலும் வலுப்படுத்தும் நோக்குடன், பணத்தரகுத் தொழில் துறையினை மேம்படுத்துவதற்காக இலங்கை மத்திய வங்கி பல வழிமுறைகளை அண்மையில் மேற்கொண்டது. அதிகாரமளிக்கப்பட்ட பணத்தரகர்களினால் கையாளப்பட்ட கொடுக்கல்வாங்கல்களின் விபரங்களை அறிக்கையிடுவதற்காக 2016இல் உள்நாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களம் அவர்களுக்கு கணனிவழி அதேநேர முறைமையை அறிமுகப்படுத்தியதுடன் 2017இல் இது மத்திய ஒருங்கிணைக்கப்பட்ட சந்தை கண்காணிப்பாளர் என அழைக்கப்படும். புதிய முறைமையொன்றிற்கு மேலும் விருத்தி செய்யப்பட்டது. தற்பொழுது பங்கேற்கும் நிறுவனங்கள் (உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் முதனிலை வணிகர்கள்) மற்றும் அதிகாரமளிக்கப்பட்ட பணத்தரகர்கள் மத்திய ஒருங்கிணைக்கப்பட்ட சந்தைக் கண்காணிப்பாளரூடாக அரச பிணையங்கள் மற்றும் வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் அவர்களின் கொடுக்கல்வாங்கல்களை அறிக்கையிட்டனர். இது 2018 மாச்சில் தொழிற்பாட்டிற்கு வந்தது. மேலும் அதிகாரமளிக்கப்பட்ட பணத்தரகர்களின் நிதியியல் கூற்றுக்களையும் செயலாற்ற அறிக்கைகளையும் கணனிவழி அதேநேர அறிக்கையிடல் முறைமையில் பதிவேற்றம் செய்வது 2018இல் அறிமுகப்படுத்தப்பட்டது. அதிகாரமளிக்கப்பட்ட பணத்தரகர்களின் தொழிற்பாடுகள் சிறந்த பன்னாட்டு நடைமுறையுடன் இசைந்துசெல்லும் விதத்தில் உயர்தரத்திலான நேர்மையுடனும் தொழில்சார் நிபுணத்துவத்துடனும் மேற்கொள்ளப்படுவதனை உறுதிப்படுத்துவதற்காக இலங்கை மத்திய வங்கி 2018 நவெம்பரில் அதிகாரமளிக்கப்பட்ட பணத்தரகர்களுக்காக நன்நடத்தைக் கோவையொன்றினை வெளியிட்டது.

2018 இறுதியிலுள்ளவாறு, இவ்வொழுங்கு விதிகளின் கீழ் ஒன்பது கம்பனிகளுக்கு "அதிகாரமளிக்கப்பட்ட பணத்தரகர்கள்" என குறித்துரைக்கும் "அதிகாரமளித்தல் சான்றிதழ்" வழங்கப்பட்டிருக்கின்றது. 2018ஆம் ஆண்டுப்பகுதியில் இக்கம்பனிகளின் பணிப்பாளர் சபைகளூடாக உள்நாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களம் ஆறு கூட்டங்களை நடத்திய வேளையில் உள்நாட்டு தொழிற்பாடுகள் திணைக்களம் 9 தலத்திலான பரீட்சிப்புக்களையும் நடத்தியது.

**பணத் தரகர்களின் பட்டியல்**

1. பார்ட்லீட் மெக்லய் அன்ட் ரோய் (பிறைவேற்) லிமிடட்
2. பெர்ஸ்ட் அலையன்ஸ் மணி புறோக்கர்ஸ் (பிறைவேற்) லிமிடட்
3. ஜோர்ச் ஸ்ருவர்ட் இன்வெஸ்ட்மன்ட்ஸ் (பிறைவேற்) லிமிடட்
4. எம்விஎஸ் மணி புறோக்கர்ஸ் லிமிடட்
5. சென்றல் பெறேக்ஸ் அன்ட் மணி புரோக்கர்ஸ் லிமிடட்
6. பிக்கொட் சாப்மான் அன்ட் கம்பனி (பிறைவேற்) லிமிடட்
7. எஸ்எம்பி மணி புறோக்கர்ஸ் (பிறைவேற்) லிமிடட்
8. தப்றொபேன் இன்வெஸ்ட்மென்ட்ஸ் (பிறைவேற்) லிமிடட்
9. விஷ்வின் மணி அன்ட் எக்ஸ்சேன்ஜ் புறோக்கர்ஸ் லிமிடட்

## 7. பொருளாதார ஆராய்ச்சி

பொருளாதாரக் கொள்கை மதியுரைக் கொத்தணியின் அங்கத்துவத் திணைக்களமொன்றான பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் 1949ஆம் ஆண்டின் நாணய விதிச் சட்டத்தின் கீழ் 1950ஆம் ஆண்டின் இலங்கை மத்திய வங்கி தாபிக்கப்பட்டதுடன் நிறுவப்பட்டது. நாணயவிதிச் சட்டத்தின் 25ஆம் பிரிவின்படி, பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களமானது கொள்கைகளை உருவாக்குதல் மற்றும் நடைமுறைப்படுத்துவதில் நாணயச் சபை மற்றும் ஆளுநரை வழிநடத்துவதற்கும் பணம் மற்றும் வங்கித்தொழில் துறை தொடர்பான விடயங்கள் மற்றும் பொதுவான ஈடுபாடுமிக்க ஏனைய பொருளாதார விடயங்கள் தொடர்பான தகவல்களை வழங்குவதற்காகவும் பொருளாதார ஆராய்ச்சியை நடாத்துதல் மற்றும் தகவல்களைத் தயாரித்தல் போன்றவற்றிற்குப் பொறுப்பானதாகும். பொருளாதார மற்றும் விலை உறுதிப்பாட்டைப் பேணிக்கொள்வதற்கு பங்களிப்புச் செய்யும் நோக்கில் ஏனைய விடயங்களுக்கு மத்தியில் கிரமமான அடிப்படையில் மதிப்பிடுதல், பேரண்டப் பொருளாதார அபிவிருத்திகளை நாணயக் கொள்கை மற்றும் வெளிநாட்டுத் துறைக் கொள்கைகளை உருவாக்குவதில் ஆதரவளித்தல், தரவு சேகரித்தல் மற்றும் செயன்முறைப்படுத்தலில் தற்போதுள்ள செயல்முறைகள் மற்றும் வடிவமைப்புக்களை மேம்படுத்தல் போன்ற அதன் முக்கிய பொறுப்புக்களை நடைமுறைப்படுத்தியது. பொருளாதார விடயங்கள் தொடர்பில் அரசிற்கான ஆலோசகராக மத்திய வங்கி செயலாற்றுவதில் பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் தோற்றம் பெற்றுவரும் பொருளாதாரச் சிக்கல்கள் மற்றும் பேரண்டப் பொருளாதார உறுதியை அடைவதற்காக சிறந்த இறை - நாணய ஒருங்கிசைவை உறுதிப்படுத்துவதற்காக பின்பற்றப்படவேண்டிய வழிமுறைகள் மற்றும் கொள்கைகள் தொடர்பில் விதந்துரைகளை வழங்கியிருந்தது. பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் கொள்கை ஆராய்ச்சியில் ஈடுபடுகின்ற அதேவேளையில் பேரண்டப் பொருளாதார அபிவிருத்திகள் மற்றும் மத்திய வங்கியின் தொழிற்பாடுகள் பற்றி பொதுமக்கள்

அறிந்திருப்பதற்காக சட்ட ரீதியான மற்றும் ஏனைய பிரசுரங்களிரண்டையும் பிரசுரித்தது. மேலும், பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் வெளிநாட்டு இணைத்தரப்பினருடனும் ஏனைய பன்னாட்டு முகவராண்மைகளுடனும் உறவுகளை நிறுவிக்கொள்வதிலும் பேணிக்கொள்வதிலும் முக்கிய பங்கினை ஆற்றியதுடன் தரவுகளையும் ஏனைய பேரண்டப் பொருளாதார தகவல்களையும் ஒரு காலக்கிரமமான முறையில் பரப்பி அதன் மூலம் ஒருங்கிசைவினையும் வெளிப்படைத்தன்மையையும் மேம்படுத்திக் கொண்டது.

### 7.1 பொருளாதார மற்றும் விலை உறுதிப்பாட்டினைப் பேணுதல்

பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் மத்திய வங்கியின் பணிப்பாணைக்கிணங்க பொருளாதார மற்றும் விலை உறுதிப்பாட்டினை அடைந்துகொள்ளும் இலக்குடன் முன்கூட்டியதும் நேரகாலத்துடனான நாணயக் கொள்கைத் தீர்மானங்களுக்கு வசதியளிப்பதற்காக நாட்டின் பேரண்டப் பொருளாதார அபிவிருத்திகளுடன் தொடர்புடைய தரவுகளைத் திரட்டுதல், கண்காணிப்புச் செய்தல் மற்றும் பகுப்பாய்வு செய்தலினை தொடர்ந்து மேற்கொண்டிருந்தது. இதன்படி, நாணயக் கொள்கைக் குழுவின் செயலகமாக பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் மாதிரியுருவினை அடிப்படையாகக் கொண்ட எறிவுகளினால் ஆதரவளிக்கப்பட்ட பொருளாதார மற்றும் நாணயத் தரவுகளை உள்ளடக்கிய முற்கூட்டிய பகுப்பாய்வுகள் உள்ளடங்கலாக அனைத்தையுமுள்ளடக்கிய உருவாக்கி மற்றும் திரட்டி நாணயக் கொள்கைக் குழுவிற்கு வழங்கியதன் மூலம் தேவைப்படுகின்ற நாணயக் கொள்கைத் தீர்மானங்கள் பற்றி நாணயச் சபைக்கு விதந்துரைப்புக்களை வழங்குவதில் நாணயக் கொள்கைக் குழுவினை இயலச்செய்தது. இந்த உள்ளீடுகள் நாணயக் கொள்கை தீர்மானமெடுத்தல் செயன்முறையினை மேலும் வலுப்படுத்துவதற்காக மத்திய வங்கிக்கும் கல்விமான்கள் மற்றும் தனியார் துறைப் பிரதிநிதிகளுக்குமிடையில் உரையாடலினை வசப்படுத்துவதற்காக 2017இல் மீளத்தாபிக்கப்பட்ட நாணயக் கொள்கை கலந்தாலோசனைக் குழுவின் நிபுணர்களது விதந்துரைப்புக்களினால் பலப்படுத்தப்பட்டதுடன் நாணயக் கொள்கை கலந்தாலோசனைக்குழுவின் கூட்டங்களிற்கு பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் வசதியளித்தது. மேலும், வருடாந்த கொள்கை அறிக்கையான "2019 இற்கும் அதற்கு அப்பாலுமான நாணய மற்றும் நிதியியல் துறைக் கொள்கைகள்" தயாரிப்பதில் மூத்த முகாமைத்துவத்திற்கு பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் ஆதரவளித்தது. இந்த அறிக்கையின் ஊடாக மத்திய வங்கியானது நடுத்தர காலத்தில் நாணயக் கொள்கை மற்றும் நிதித் துறைக் கொள்கைகளை மேற்கொள்வதில் அதன் அணுகுமுறை தொடர்பாக அறிவிப்பதன் மூலம் பொருளாதாரம் அதன் உள்ளார்ந்த ஆற்றலினை அடைந்துகொள்வதில் ஆதரவளிக்கிறது. தோற்றம் பெற்றுவருகின்ற பிரச்சினைகள், பேரண்டப் பொருளாதார உறுதிப்பாட்டை பேணிக்கொள்வதற்கு தேவைப்படுகின்ற கொள்கை வழிமுறைகள் மற்றும் அரசாங்கத்தினால் ஏற்கனவே பின்பற்றப்பட்ட இறை வழிமுறைகளினால் பொருளாதாரத்தின் பல்வேறு துறைகள் மீது ஏற்பட்ட தாக்கம் தொடர்பில் பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் மூத்த முகாமைத்துவத்திற்கு விதந்துரைப்புக்களை வழங்கியது. மேலும், பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் பல்வேறுபட்ட கரிசனைக்குறிய பிரச்சினைகள் மற்றும் அவற்றின் பொருளாதாரத் தாக்கங்களினை கோடிட்டுக் காட்டி சுயாதீனமான கருத்துக்களை பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் வழங்கியது. "வினைத்திறன் மிக்க நெகிழ்ச்சித்தன்மைவாய்ந்த பணவீக்க இலக்கிடல் முறைமையை அறிமுகம் செய்தல்" எனும் 2018 - 2020 காலப்பகுதிக்கான ஆறு வங்கி முழுமைக்குமான உபாய முன்னுரிமையொன்றிற்கான முதன்மைத் திணைக்களமாக செயலாற்றியது. நாணயவிதிச் சட்டத்தினைத் திருத்தியமைப்பதனை ஆரம்பித்தல் மற்றும் தேவைப்படுகின்ற உள்ளீடுகளை வழங்குதல் உள்ளடங்கலாக நாணயக் கொள்கைக் கட்டமைப்பான நெகிழ்ச்சித்தன்மை வாய்ந்த இலக்கிடலை பின்பற்றுவதற்கான ஆரம்ப வேலைகள் தொடர்ந்தன. இதற்கு மேலதிகமாக, நாணயக் கொள்கை தீர்மானமெடுத்தல் செயன்முறையை வலுப்படுத்துவதற்கு ஒரு அனைத்தையுமுள்ளடக்கிய மாதிரியுருவினை அடிப்படையாகக் கொண்ட எதிர்வுகூறல் மற்றும் கொள்கைப் பகுப்பாய்வு முறைமையினை தயாரிப்பதற்கு பன்னாட்டு நாணய நிதியத்தின் தொழில்நுட்ப உதவியுடன் உள்ளக மாதிரியுருவமைத்தல் மற்றும் எதிர்வுகூறல் இயலளவினையும் உட்கட்டமைப்பினையும் மேம்படுத்துவதனை பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் தொடர்ந்தது.

### 7.2 வெளிநாட்டுத் துறை உறுதிப்பாட்டினைப் பேணுதல்

பன்னாட்டு வர்த்தகம் மற்றும் வெளிநாட்டு நிதி தொடர்பான தரவுகளைச் சேகரித்தல், தொகுத்தல் மற்றும் பகுப்பாய்வு செய்தல் என்பவற்றின் மூலம் வெளிநாட்டுத் துறை பற்றிய அனைத்தையுமுள்ளடக்கிய பகுப்பாய்வுகளை பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் மேற்கொண்டதுடன் ஒரு கிரமமான அடிப்படையில் கொள்கை மதியுரைகளையும் விதந்துரைப்புக்களையும் நாணயக் கொள்கைக் குழுவிற்கும் நாணயச் சபைக்கும் வழங்கியது. இந்தச் செயன்முறையினொரு பகுதியாக ரூபாவின் மீதான ஏதாவதொரு அழுத்தத்தினை அடையாளம் காண்பதற்கும் செலாவணி வீதத்தின் மீதான மிதமிஞ்சிய தளம்பலை குறைப்பதற்கான பரிகார வழிமுறைகளை தயாரிப்பதற்காகவும் செலாவணி வீதத்தின் அசைவுகள் பற்றிய தொடர்ச்சியான பகுப்பாய்வு நடாத்தப்பட்டது.

இதேவேளை, பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களமானது நாணயவிதிச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் ஆண்டு காலப்பகுதியில் அரசாங்கத்தினால் பெற்றுக்கொள்ளப்பட்ட வெளிநாட்டு கடன்களின் நாணயத் தாக்கத்தினை தொடர்ச்சியாக பகுப்பாய்வு செய்திருந்தது. மேலும், பன்னாட்டு நாணய நிதியத்தின் சிறப்பு எடுப்பனவு உரிமை 1.1 பில்லியன் (ஏறத்தாழ ஐ.அ.டொலர் 1.5 பில்லியன்) விரிவாக்கப்பட்ட நிதிய வசதியில் திட்டவரைவிடப்பட்ட கணியஞ்சார் செயலாற்ற பிரமாணங்கள் மற்றும் அமைப்பியல் ரீதியான அடித்தள அறைக் குறியீடுகள் போன்றவை பற்றிய பேச்சுவார்த்தைகளில் உற்சாகமாக ஈடுபட்டதுடன் பன்னாட்டு நாணய நிதியம் மற்றும் அமைச்சுக்களின் தொடர்பான திணைக்களங்கள் போன்றவற்றுடன் பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் உறவுகளைப் பேணிக்கொண்டது. இதேவேளை, பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம வெளிநாட்டுத் துறை அபிவிருத்திகளுக்கான காரணங்கள் மற்றும் விளைவுகளினைப் பகுப்பாய்வு செய்தர்டன் வெளிநாட்டுத் துறையின் பாதிப்படையக்கூடிய தன்மைகளைத் தீர்த்துக் கொள்வதற்கான கொள்கை வழிமுறைகளையும் முன்மொழிந்து அரசாங்கத்திற்கு அறிக்கைகளை சமர்ப்பித்தது.

பன்னாட்டு ரீதியாக ஏற்றுக்கொள்ளப்பட்ட தரவு அறிக்கையிடல் நியமங்களுக்கமைவாக வெளிநாட்டுத் துறை தரவுகளை தொகுத்தல் மற்றும் பரப்புதல் போன்றவற்றை மேம்படுத்துவதற்கான பல்வேறு முன்னெடுப்புக்களை பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் மேற்கொண்டிருந்தது. படிநிலை பன்னாட்ட வர்த்தக வகைப்படுத்தல் திருத்தம் 04இற்கு இணையாக வணிகச் சரக்கு வர்த்தகப் புள்ளிவிபரங்களை மாதாந்த அடிப்படையில் பிரசுரிப்பதனை 2018இல் பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் ஆரம்பித்தது. சென்மதி நிலுவைப் புள்ளிவிபரங்கள் மற்றும் பன்னாட்டு முதலீட்டு நிலை புள்ளிவிபரங்களை சென்மதி நிலுவைக் கையேடு 6 வடிவமைப்பின் கீழ் காலாண்டு அடிப்படையிலும் பன்னாட்டு ஒதுக்கு தரவு முன்வரைவினை மாதாந்த அடிப்படையில் பிரசுரிப்பதனை பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் தொடர்ந்த வேளையில் காலாண்டு வெளிநாட்டுப் படுகடன் புள்ளிவிபரங்களை உலக வங்கிக்கும் ஒருங்கிணைக்கப்பட்ட நேரடி முதலீட்டு அளவீட்டிற்கு நேரடி முதலீட்டு தரவினையும் நேரந்தவறாமல் சமர்ப்பித்தது. மேலும், வெளிநாட்டுத் துறை தரவின் துல்லியம் மற்றும் காலந்தவறாமையை உறுதிப்படுத்துவதற்காக ஆண்டு காலப்பகுதியில் பல்வேறுபட்ட அளவீடுகளை பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் நடாத்தியது. தனியார் துறையின் வெளிநாட்டு சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் பற்றிய தரவுகளை சேகரிப்பதற்கான வருடாந்த பன்னாட்டு முதலீட்டு அளவீடு மற்றும் வதிவிட மற்றும் வதிவற்ற, வானூர்தி நிறுவனங்கள், கப்பற்படுத்தல் நிறுவனங்கள், தொலைத்தொடர்புகள், கட்டடவாக்கம் மற்றும் காப்புறுதித் துறைகளை உள்ளடக்கிய பணிகளிலுள்ள வர்த்தகத்துடன் தொடர்புபட்ட அளவீடுகள்

என்பவற்றை இந்த அளவீடுகள் உள்ளடக்குகின்றன. மேலும், உள்நோக்கிய தொழிலாளர்களின் பணவனுப்பல்கள் தொடர்பான வர்த்தக வங்கிகளுடனான மாதாந்த அளவீட்டினையும் பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் ஆண்டு காலப்பகுதியில் நடாத்துவதனைத் தொடர்ந்தது. எல்லைக் காட்டப்பட்ட மற்றும் வங்கித்தொழில் துறையினூடாக இடம்பெறுகின்ற வெளிநாட்டு நாணயக் கொடுக்கல்வாங்கல்களை கண்காணிப்பதற்காக ஒரு புதிய தரவு திரட்டல் முறைமையான பன்னாட்டு கொடுக்கல்வாங்கல்கள் அறிக்கையிடல் முறைமையை அறிமுகம் செய்வதற்கான ஆரம்ப வேலைகளிற்கு பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் வித்திட்டது.

### 7.3 முன்கூட்டிய கொள்கை மதியுரைகளை வழங்குதல்

பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களமானது 2018ஆம் ஆண்டில் முக்கியமாக நாணயக் கொள்கை, செலாவணி வீதக் கொள்கை மற்றும் இறைத் துறை தொடர்பான விடயங்கள் தொடர்பில் மத்திய வங்கியின் நாணயச்சபை, அரசாங்கம் மற்றும் ஏனைய பங்குதாரர்களுக்கு முன்கூட்டிய கொள்கை மதியுரைகளைத் தொடர்ந்தும் வழங்கியது. நாணய விதிச் சட்டத்தின் பிரிவு 116 (1)இற்கேற்ப, ஆண்டின் முதல் எட்டு மாதகாலப்பகுதியில் பொருளாதாரத்தின் அபிவிருத்திகளை வெளிப்படுத்துகின்ற இரகசிய அறிக்கையான செத்தெம்பர் 15ஆம் திகதி அறிக்கை மற்றும் 2019இற்கான அரசாங்கத்தின் வரவு செலவுத்திட்டத்தை தயாரிக்கும் செயன்முறையில் பயன்படுத்தக்கூடிய கொள்கைக் குறிப்புக்களையும் வழங்கியது. மேலும், பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் தேசிய பொருளாதார சபைக்கு தொழில்நுட்ப உள்ளீடுகளை வழங்கியிருந்ததுடன் வெவ்வேறுபட்ட பேரண்டப்பொருளாதார விடயங்கள் தொடர்பில் சுயாதீனமான அவதானிப்புக்களை வழங்கியது.

பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் 2018 காலப்பகுதியில் எட்டு நாணயக் கொள்கைக் குழு கூட்டங்களை ஒழுங்குபடுத்தியிருந்தது. பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களத்தின் பணிப்பாளர் இலங்கை மத்திய வங்கியின் நாணயக் கொள்கைக் குழுவில் சேவையாற்றுவதற்கு மேலதிகமாக சந்தை தொழிற்பாடுகள் குழு, நிதி முறைமை உறுதிப்பாட்டு குழு, உள்நாட்டு படுகடன் முகாமைத்துவக் குழு, வெளிநாட்டு ஒதுக்கு முகாமைத்துவக் குழு, திறைச்சேரி உண்டியல்கள், திறைச்சேரி உண்டியல்கள் மற்றும் இலங்கை அபிவிருத்தி முறிகள் என்பவற்றின் வெளியிடலுக்கான கேள்விக்கோரல் சபை, நெகிழ்ச்சியான பணவீக்க இலக்கிடலினை நிறைவேற்றுவதற்கான குழு, இடர் முகாமைத்துவ குழு, பயிற்சிக் குழு, இலங்கையில் நிலைத்துநிற்கும் நிதிக்கான வழிகாட்டலொன்றினை நிறைவேற்றுவதற்கான ஆலோசனைக் குழு, மனித வளங்களுக்கான கொள்கை கட்டமைப்பை அபிவிருத்தி செய்வதற்கான ஆலோசனைக் குழு மற்றும் இலங்கை அரசாங்கத்தினால் வெளியிடப்படுகின்ற நாட்டிற்கான பன்னாட்டு முறிகள் தொடர்பான கேள்விக்கோரல் சபை ஆலோசனைக் குழு போன்ற பல்வேறுபட்ட உள்ளகக் குழுக்களில் அங்கத்தவராக தொடர்ந்தும் பணியாற்றினார். திணைக்களத்தின் சிரேஸ்ட அலுவலர்களும் நாணயக் கொள்கைக் குழுவிற்கு பணியாற்றுவதற்கு மேலதிகமாக பல்வேறுபட்ட உள்ளகக் குழுக்களில் பின்வருமாறு பணியாற்றியிருந்தனர்: நெகிழ்ச்சியான பணவீக்க இலக்கிடலினை நிறைவேற்றுவதற்கான குழு, இலங்கையில் நிலைத்துநிற்கும் நிதிக்கான வழிகாட்டலொன்றினை நிறைவேற்றுவதற்கான ஆலோசனைக் குழு, நூலக ஆலோசனைக் குழு, நிதியியல் வலையமைப்பு முறைமையைப் புதுப்பிப்பதற்கான குழு, அரசாங்கத்தினால் வெளியிடப்படும் நாட்டிற்கான பன்னாட்டு முறி தொடர்பில் முக்கிய முகாமையாளர்களின் நியமிப்பு மீதான தொழில்நுட்ப மதிப்பீட்டு குழு.

பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களத்தின் அலுவலர்கள் ஹெக்டர் கொப்பேக்கடுவ வேளாண்மை ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிலையம், தேசிய விஞ்ஞான மன்றம், இலங்கை ஏற்றுமதி கொடுகடன் காப்புறுதிக் கூட்டுத்தாபனம், நிதி அமைச்சு, தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார விடயங்கள் தொடர்பான அமைச்சு, வலு மற்றும் சக்தி அமைச்சு போன்றவற்றால் நியமிக்கப்பட்ட பல்வேறுப்பட்ட வெளிவாரியான நிறுவனங்களின் பல செயற்குழுக்களிலும் சபைகளிலும் பிரதிநிதித்துவதன் ஊடாக கொள்கை ஆலோசனைகளை தொடர்ந்தும் வழங்கினர். மேலும், கெரவலப்பிட்டிய வலுப்பொறியினை நிர்மாணிப்பதற்கான செயற்றிட்டத்தின் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு, வரையறுக்கப்பட்ட ஆணையிறவு உப்பளத்தின் வடக்கு பகுதி தொடர்பில் மீள்கட்டியமைப்பு மீதான செயற்றிட்ட குழு, வரையறுக்கப்பட்ட பரந்தன் இரசாயனக் கம்பனியை மீள்கட்டியமைப்பது, வரையறுக்கப்பட்ட இலங்கை கனியுப்பு நிலங்களை மீள்கட்டியமைப்பது, தேசிய ஏற்றுமதி உபாயத்தினை உருவாக்குவதற்கான தொழில்நுட்ப மையக் குழு, குடும்ப வரவு செலவுத்திட்ட அலகு, தேசிய வர்த்தக இயக்கச் செயற்குழு மற்றும் அரச நிதிப் புள்ளிவிபரங்கள் ஒழுங்கமைப்பு குழு போன்றவற்றிலும் பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களத்தின் அலுவலர்கள் பிரதிநிதித்துவம் செய்திருந்தனர்.

### 7.4 நியதிச்சட்ட வெளியீடுகளும் தரவுகள் மற்றும் தகவல்களைப் பரப்புதலும்

பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களமானது நாணய விதிச் சட்டத்தின் நியதித் தேவைப்பாட்டை பூர்த்தி செய்யும் வகையில் 2017இற்கான ஆண்டறிக்கையை மும்மொழிகளிலும் தயாரித்திருந்ததுடன் மத்திய வங்கியின் ஏனைய திணைக்களங்களின் உதவியுடன் குறிப்பிட்ட காலப்பகுதியில் கௌரவ நிதி அமைச்சருக்கு வழங்கியிருந்தது. மேலும், “அண்மைக்கால பொருளாதார அபிவிருத்திகள் 2018இன் முக்கிய பண்புகள் மற்றும் 2019இற்கான வாய்ப்புக்கள்” மற்றும் மாதாந்த குறிப்புக்கள் என்பனவும் வெளியிடப்பட்டன. மேலும், நாணய விதிச் சட்டத்தின் பிரிவு 116(1)இன் தேவைப்பாட்டை பூர்த்தி செய்யும் வகையில் செத்தெம்பர் 15 அறிக்கையும் கௌரவ நிதி அமைச்சருக்கு வழங்கப்பட்டது.

பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களமானது தொடர்ச்சியாக பன்னிரெண்டாவது ஆண்டாக “வழிகாட்டல் 2019 - 2019இற்கும் அதற்கு அப்பாலுக்குமான நாணய மற்றும் நிதியியல் துறைக் கொள்கைகள்” எனும் மத்திய வங்கியின் கொள்கை அறிக்கையை தயாரித்திருந்ததுடன் 2019 சனவரி 02ஆம் நாளன்று ஆளுநரால் பொதுமக்களுக்கு அறிவிக்கப்பட்டது. வழிகாட்டலானது ஆர்வலர்கள் முன்னோக்கிய காலப்பகுதியில் தமது உபாயங்களை அதிக நிச்சயத்துடன் வடிவமைத்துக் கொள்ளல் மற்றும் திட்டமிட்டுக் கொள்ளல் என்பவற்றிற்கு துணைபுரிதல், மத்திய வங்கியின் கொள்கை தொடர்பில் எதிர்வுகூறும் தன்மை மற்றும் வெளிப்படைத்தன்மை என்பவற்றை மேம்படுத்துதல் என்பவற்றை நோக்காக கொண்டிருந்தது.

மேற்கூறப்பட்டவைக்கு மேலதிகமாக, பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களமானது பொதுமக்களுக்கு நன்மையளிக்கும் வகையில் நாளாந்த, வாராந்த மற்றும் மாதாந்த குறிகாட்டிகள் மற்றும் மத்திய வங்கியின் இணையத்தளத்தில் காணப்படுகின்ற ஊடகம் மற்றும் தரவு நூலகம் என்பவற்றில் வெளியிடப்பட்டுள்ள குறிப்பேடுகள் என்பவற்றின் ஊடாக பொருளாதார மற்றும் நிதியியல் தகவல்களை தொடர்ந்தும் வழங்கியது. தொடர்ச்சியான நாணயக்கொள்கை மீளாய்வு மற்றும் வெளிநாட்டுத்துறை பத்திரிகை வெளியீடுகள் என்பவற்றிற்கு அப்பால், பொதுமக்களின் விழிப்புணர்வை மேம்படுத்தும் நோக்கில் தோற்றம்பெற்றுவருகின்ற விடயங்கள் தொடர்பில் பத்திரிகை கூற்றுக்களும் வெளியிடப்பட்டன. பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களமானது சிறப்பு தரவு பரம்பல் புள்ளிவிபரங்களின் தேவைப்பாட்டிற்கு இணங்கும் வகையில் பொருளாதாரத்தின் அனைத்து துறைகளினதும் தரவுகளை உள்ளடக்கிய புள்ளிவிபரங்களை வெளியிட்டிருந்தது.

### 7.5 கொள்கை ஆராய்ச்சியில் ஈடுபடுதலும் அறிவினைப் பகிர்ந்து கொள்ளுதலும்

இவ்வாண்டுப்பகுதியில், சமகால முக்கியத்துவம் வாய்ந்த விடயங்களில் ஆராய்ச்சி மற்றும் பகுப்பாய்வை ஊக்கப்படுத்தும் நோக்குடன் பொருளாதார ஆராய்ச்சித் திணைக்கள அலுவலர்கள் பல ஆராய்ச்சிகளை மேற்கொண்டனர். ஆராய்ச்சிப் பணிகளை வசதிப்படுத்துவதற்கும் மத்திய

வங்கியில் ஆராய்ச்சி கலாசாரத்தினை ஊக்குவிக்கும் வகையிலும் அமைக்கப்பட்ட ஆராய்ச்சி மதியுரைக் குழு 2018ஆம் ஆண்டிலும் அதன் செயற்பாடுகளைத் தொடர்ந்து மேற்கொண்டது. மத்திய வங்கி அலுவலர்கள் மற்றும் வெளிவாரி பங்கேற்பாளர்களின் ஆராய்ச்சித் திறன்களை மேம்படுத்தும் வகையில், வங்கித்தொழில் கற்கைகளுக்கான ஆய்வு நிலையத்தின் ஒத்துழைப்புடன் ஆராய்ச்சி மதியுரைக் குழுவினால் முன்னெடுக்கப்பட்ட ஆராய்ச்சி முறையியல் மீதான "பொருளாதாரத்தில் ஆராய்ச்சி" எனும் பயிற்சிப் பாடநெறியை வெற்றிகரமாக நிறைவு செய்யப்பட்டது.

பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் "பணவீக்க இலக்கிடல் மற்றும் மத்திய வங்கி சுதந்திரம், பொறுப்புக்கூறல் மற்றும் வெளிப்படைத்தன்மை" என்ற தொனிப்பொருளின் கீழ் பன்னாட்டு ஆராய்ச்சி மாநாட்டை தொடர்ந்து பதினோராவது ஆண்டாக 2018 திசெம்பரில் ஒழுங்குசெய்தது. கோட்பாட்டு மற்றும் அனுபவரீதியான ஆராய்ச்சிகளை சமர்ப்பிப்பதற்கும் கலந்துரையாடுவதற்கும் மற்றும் குறிப்பாக சமகால பேரண்டப் பொருளாதாரக் கொள்கைகள் தொடர்பான கருத்துக்களை ஆராய்ச்சியாளர்களிடையே பகிர்ந்துகொள்வதற்கும் பன்னாட்டு ஆராய்ச்சி மாநாடானது தளம் அமைத்துக்கொடுத்திருந்தது. இதன்படி, மத்திய வங்கியின் ஒரு ஆராய்ச்சியாளர் உட்பட சிலி, ஜேர்மனி, இந்தியா, மால்டா, தாய்லாந்து மற்றும் இலங்கை ஆகிய நாடுகளைச் சார்ந்த ஆராய்ச்சியாளர்களினால் எட்டு ஆராய்ச்சிக் கட்டுரைகள் முன்வைக்கப்பட்டன. இம்மாநாட்டின் முக்கிய உரையினை பொருளியல் பேராசிரியரும் இந்திய றிசேர்வ் வங்கியின் நாணயக் கொள்கைக் குழுவின் உறுப்பினருமான பேராசிரியர். செடன் கேட் ஆற்றியிருந்த அதேவேளை "பணவீக்க இலக்கிடல் உபாயத்தில் செலாவணி வீதத்தின் பங்கு" எனும் தலைப்பிலான அழைக்கப்பட்ட சமர்ப்பிப்பை தென்னாசிய மத்திய வங்கி நிலையத்தின் நிர்வாக இயக்குனர் முனைவர். ஹன்ஸ் ஜென்பேர்க் நிகழ்த்தினார். இவ்வாண்டுக்கான மாநாட்டிலும் சிறந்த ஆராய்ச்சிக் கட்டுரைக்கான முனைவர் டி. எஸ். விஜேசிங்க ஞாபகார்த்த விருது வழங்கல் இடம்பெற்றது.

மேலும், இவ்வாண்டுப்பகுதியில் பொருளாதார ஆராய்ச்சி அலுவலர்களினதும் மற்றும் ஏனைய திணைக்கள அலுவலர்களினதும் ஏழு விரிவான ஆராய்ச்சிக் கட்டுரைகளை உள்ளடக்கிய மத்திய வங்கியின் ஆராய்ச்சிச் சஞ்சிகையான அலுவலர் ஆய்வின் இரண்டு தொகுதிகளை பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் வெளியிட்டது. பன்னாட்டு நாணய நிதிய அலுவலர்களுடன் இணைந்து மத்திய வங்கியின் ஆராய்ச்சியாளர்களினால் எழுத்துருவாக்கப்பட்ட "இலங்கைக்கான திறந்த பொருளாதார காலாண்டு மாதிரியொன்று" என்ற தலைப்பிலான ஓர் ஆராய்ச்சிக் கட்டுரை அலுவலர் ஆய்வில் பிரசுரிக்கப்பட்டதுடன் இவ்வாய்வானது பன்னாட்டு நாணய நிதியத்தின் தொழிற்படும் ஆய்வாகவும் பிரசுரிக்கப்பட்டது. மேலும், இவ்வாண்டில் பொருளாதார ஆராய்ச்சித் திணைக்கள அலுவலர்களினால் மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சிகளில் "பணவீக்க உறுதி: நுகர்வோர் விலைச் சுட்டெண் உபபிரிவுகளிடமிருந்தான ஆதாரம் - இலங்கையின் அனுபவம்" எனும் தலைப்பிலான ஓர் அத்தியாயம் தென்னாசிய மத்திய வங்கி ஆராய்ச்சித் திட்டத்தின் ஓர் பகுதியாக உள்ளடக்கப்பட்டது. இது பின்னர் 2019ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் வெளியிடப்பட்டது. மேலும், நியுடெல்லி, இந்தியாவில் நடைபெற்ற சர்வதேச ஆய்வு மாநாட்டில் பொருளாதார ஆராய்ச்சித் திணைக்கள அலுவலர்களால் இரண்டு ஆய்வுக் கட்டுரைகள் சமர்ப்பிக்கப்பட்டன. அதேவேளை, பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களமானது இவ்வாண்டுப்பகுதியில் அத்தகைய நிறுவனங்களுடன் இணைந்து நிகழ்வுகளை ஏற்பாடு செய்வதன் மூலம் சர்வதேச சமதரப்பினருடன் ஆராய்ச்சி ஒத்துழைப்புக்களை வலுப்படுத்தியது.

மத்திய வங்கிக்கு உள்ளேயும் வெளியேயும் பொருளாதாரம் பற்றிய அறிவினை மேம்படுத்தும் வகையில் பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களமானது தனது அலுவலர்களின் நிபுணத்துவத்தை பகிர்ந்துகொள்வதைத் தொடர்ந்தது. பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களத்தின் அலுவலர்கள் வங்கித்தொழில் கற்கைகளுக்கான ஆய்வு நிலையம், பல்கலைக்கழகங்கள், பாடசாலைகள் மற்றும் பலதரப்பட்ட ஏனைய அரச மற்றும் தனியார் துறை நிறுவனங்கள் போன்ற கல்வி நிறுவனங்களிற்கு வளவாளர்களாக பணியாற்றியிருந்தனர். அத்துடன் மத்திய வங்கிக்கு வருகைதந்த உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பிரதிநிதிகளுக்கு மத்திய வங்கித்தொழில் மற்றும் பேரண்டப் பொருளாதார அபிவிருத்திகள் தொடர்பாக பொருளாதார ஆராய்ச்சித் திணைக்கள அலுவலர்கள் விளக்கவுரைகளை வழங்கினர். அத்தகைய அமர்வுகள் பத்திரிகையாளர்கள் மற்றும் மத்திய வங்கி அலுவலர்களிற்கு நெகிழ்ச்சித்தன்மை கொண்ட பணவீக்க இலக்கிடல் தொடர்பாக அறிவூட்டுவதாகக் காணப்பட்டது. மேலும், இவ்வாண்டுப்பகுதியில் வெளித்தரப்பினரால் ஏற்பாடு செய்யப்பட்ட பல்வேறு மாநாடுகள் மற்றும் ஆய்வரங்குகளில் பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களத்தின் மூத்த அலுவலர்கள் பங்குபற்றினார்கள். மேலும், இலங்கையில் பெற்றோலியத் துறை, செயல்முறைகள் மற்றும் எதிர்கொள்ளும் பிரச்சனைகள் தொடர்பாக அறிந்துகொள்வதற்காக இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபன சுத்திகரிப்பு நிலையத்திற்கு கள ஆய்வுப் பயணமொன்றில் பொருளாதார ஆராய்ச்சித் திணைக்கள அலுவலர்கள் பங்கு கொண்டார்கள். பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களத்தின் மூத்த அலுவலர்கள் மத்திய வங்கியின் பட்டப்பின் படிப்பை நோக்காகக் கொண்ட ஆராய்ச்சி முன்மொழிவுகள் மற்றும் ஆராய்ச்சிக் கட்டுரைகள் தயாரிப்பதில் தொடர்ந்து உதவி செய்தனர். இதனிடையே உயர்தர மாணவர்கள் பயன்பெறும் வகையில் "தக்ஷிலாவ" தொலைக்காட்சி கல்விசார் நிகழ்ச்சியை சிங்கள மொழியிலும் "அறிவூற்று" தொலைக்காட்சி நிகழ்ச்சியை தமிழ் மொழியிலும் நடாத்துவதற்கு பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களத்தைச் சார்ந்த பல அலுவலர்கள் வளவாளர்களாக தமது சேவையை வழங்கினார்கள். மேலும், பொருளாதார ஆராய்ச்சித் திணைக்கள அலுவலர்கள் இலங்கை வங்கியாளர் நிறுவகத்தின் "வங்கிகளுக்கிடையிலான வினாடி வினாப் போட்டி" தொடர்பில் உதவியளித்ததுடன் இதுபோன்ற நிறுவனங்களின் உள்ளக மற்றும் வெளிவாரி பரீட்சைகள் மற்றும் சஞ்சிகைகளுக்கு பரீட்சகர்கள், மதிப்பீட்டாளர்கள் மற்றும் பரிசீலனையாளர்களாக சேவையாற்றினர்.

### 7.6 பன்னாட்டு உறவுகளை பேணுதல்

மத்திய வங்கியினதும் அரசாங்கத்தினதும் சார்பாக பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களமானது பன்னாட்டு நாணய நிதியம், சார்க் நிதியம், தென்கிழக்காசிய மத்திய வங்கிகள் மற்றும் தென்கிழக்காசியா, நியுசிலாந்து, அவுஸ்திரேலியா மத்திய வங்கிகள் உள்ளடங்கலான பல்புடை நிதிய பன்னாட்டு அமைப்புக்களுக்கான மத்திய தொடர்புமையமாக தொடர்ந்தும் தனது பங்கினை ஆற்றிவந்ததுடன் அரசாங்கம் மற்றும் ஏனைய முக்கிய பன்னாட்டு அபிவிருத்தி வங்கிகள் மற்றும் உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி போன்ற முகவர்களுக்கிடையேயான இணைப்புக்கு ஆதரவளித்து வந்திருந்தது. அதேவேளை, பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களமானது, பன்னாட்டு நாணய நிதியம், உலக வங்கி மற்றும் பன்னாட்டு நாட்டிற்கான தரமிடல் முகவர்கள் போன்ற பன்னாட்டு அமைப்புக்களுக்கு 2018ஆம் ஆண்டிலும் பேரண்ட பொருளாதார புள்ளிவிபரங்கள் மற்றும் இற்றைப்படுத்தல்களை தொடர்ச்சியாக வழங்கியிருந்தது.

இவ்வாண்டுப்பகுதியில், பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம், 2018 பெப்புருவரி மற்றும் 2018 செத்தெம்பர் மாதங்களில் பன்னாட்டு நாணய நிதியம் - விரிவாக்கப்பட்ட நிதிய வசதி நிகழ்ச்சித்திட்டத்தின் மீள்பார்வைக்காக இலங்கைக்கு வருகைதந்த பன்னாட்டு நாணய நிதிய தூதுக்குழுக்களுடன் ஒருங்கிணைந்து கவனமாக பணியினை மேற்கொண்டது. மேலும், இரண்டு பன்னாட்டு நாணய நிதிய தூதுக்குழுக்கள், 2018 யூன் மற்றும் ஓகத்தில் இடம்பெற்ற நாணயக் கொள்கை சீர்திருத்தம் மீதான மத்திய வங்கியின் செயற்றிட்டத்திற்கு ஆதரவளித்தது. மேலும், மூன்று பன்னாட்டு நாணய நிதிய தனிப்பயனாக்கப்பட்ட பயிற்சித்திட்ட தூதுக்குழுக்கள், பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களத்தினால் ஒருங்கிணைக்கப்பட்டது. அதில் இரண்டு இலங்கைக்கான

அபிவிருத்தியடையும் பேரண்ட பொருளாதாரத்தைக் கண்டறியும் கருவிகள் மீது காணப்பட்டது. அதில், முதலாவது, 2018 பெப்புருவரியில் நடத்தப்பட்டதுடன், அதனைத் தொடர்ந்து அனைத்தையுமுள்ளடக்கிய பின்தொடரும் தூதுக்குழுவானது 2018 ஒகத்தில் நடத்தப்பட்டது. மூன்றாவது பின்தொடரும் தனிப்பயனாக்கப்பட்ட பயிற்சித் திட்ட தூதுக்குழு, 2018 ஏப்பிறலில் பெற்றுக்கொள்ளப்பட்டதுடன், இலங்கையின் எதிர்வுகூறல் மற்றும் கொள்கைப் பகுப்பாய்வு முறைமையின் ஒரு பகுதியான காலாண்டு எறிவு உருப்படிவத்தின் மேம்பாட்டின் மீது கவனம் செலுத்தியது.

அதேவேளை, பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களத்தினால், 2018 நவெம்பர் 29 இலிருந்து 2018 திசெம்பர் 02 வரை கொழும்பில் இடம்பெற்ற 54 ஆவது தென்கிழக்காசிய மத்திய வங்கியின் ஆளுநர் மாநாடு/ உயர்நிலை கருத்தரங்கு மற்றும் 38 ஆவது தென்கிழக்காசிய மத்திய வங்கியின் ஆளுநர் சபைக்கான கூட்டம் என்பன ஒழுங்கு செய்யப்பட்டது. இது, மத்திய வங்கியின் ஆளுநர் சபைக்கான தலைவர் மற்றும் தென்கிழக்காசிய மத்திய வங்கி நிலைய நிறைவேற்றுக் குழுவின் மூலம் தொகுக்கப்பட்டது. இது, ஆளுநர் சபை மற்றும் தென்கிழக்காசிய மத்திய வங்கி நிலைய நிறைவேற்றுக் குழு என்பனவற்றின் தலைவர் பதவியினைக் கொண்ட மத்திய வங்கியினால் அனுசரனை வழங்கப்பட்டது. இம்மாநாட்டில், ஆளுநர்கள், 19 நாட்டிலிருந்தான மத்திய வங்கியின் பிரதிநிதிகள் மற்றும் நாணய அதிகாரசபைகள் கலந்துகொண்டன. இம்மாநாட்டில் பன்னாட்டு நாணய நிதியத்தின் பிரதி முகாமைத்துவத் தலைவரான திரு. மிசுஹிரோ புருஸாவ பிரதான பேச்சாளராக கலந்துகொண்டார். மேலும், பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களமானது, மத்திய வங்கியால் அனுசரனை வழங்கப்பட்ட பன்னாட்டு நாணய நிதியத்தின் தொன்னாசிய பயிற்சிநெறி மற்றும் தொழில்நுட்ப உதவி நிறுவனத்தின் இரண்டாவது ஆலோசனைக் குழுக்கூட்டம் என்பனவற்றை 2018 மே மாதத்தில் ஒழுங்குசெய்வதில் பங்கேற்றிருந்தது.

## 8. ஊழியர் சேம நிதியம்

ஊழியர் சேம நிதியமானது, 1958ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க ஊழியர் சேம நிதியச் சட்டத்தின் கீழ் நிறுவப்பட்டது. ஊழியர் சேம நிதிய சட்டத்தின் ஏற்பாட்டு நியதிகளின்படி, சட்டத்தின் பொது நிர்வாகம் தொழில் ஆணையாளரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள வேளையில் மற்றைய நிதிய முகாமைத்துவத்தின் அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பொறுப்புக்கள் என்பன நிதியத்தின் கட்டுக்காப்பாளர் என்ற முறையில் இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. ஊழியர் சேம நிதியத்தின் பிரிவு 5 இன்படி, நாணயச் சபை அதன் தொழிற்பாட்டினை ஆற்றுதல், அதன் அதிகாரங்களை பிரயோகித்தல் மற்றும் அதன் கடமைகளை செயற்படுத்துவதற்குமாக ஒரு தொழிற்பாட்டு சக்தியாக செயற்படுவதற்காக இலங்கை மத்திய வங்கியின் ஊழியர் சேம நிதியத் திணைக்களத்திற்கு (ஊ.சே.நி. திணைக்களம்) அதிகாரங்களை வழங்கியுள்ளது.

### 8.1 திணைக்களத்தின் தொழிற்பாடுகள்

ஊழியர் சேம நிதியத் திணைக்களத்திடம், உறுப்பினர் பங்களிப்புக்களையும் மேலதிகக் கட்டணங்களையும் சேகரித்தல், பொதுக் கணக்குகளையும் உறுப்பினர் கணக்குகளையும் (தனிப்பட்ட கணக்குகள்) பேணுதல், உறுப்பினர் கணக்குகளுக்கு வட்டியை வரவு வைத்தல், நிதியத்தின் பயனாளிகளுக்கு நன்மைகளைக் கொடுப்பனவு செய்தல், மிகையான நிதியங்களை முதலீடு செய்தல் மற்றும் நாணயச் சபையும் தொழில் ஆணையாளரும் தமது கடமைகளையும் தொழிற்பாடுகளையும் மேற்கொள்ளும் வேளையில் ஏற்படும் செலவினங்களை விதித்தல் ஆகிய பொறுப்புக்கள் ஒப்படைக்கப்பட்டுள்ளன. ஊழியர் சேம நிதியத் திணைக்களமானது, தொழில் ஆணையாளருடன் நெருக்கமான விதத்தில் ஒத்துழைப்பை வழங்கிய அதேவேளையில், ஊழியர் சேம நிதியச் சட்டத்தின் ஏற்பாட்டு நியதிகளின்படி மேற்குறிப்பிட்ட நடவடிக்கைகளில் தொடர்ச்சியாக ஈடுபட்டிருந்தது. 2018ஆம் ஆண்டுகாலப்பகுதியில் ஊழியர் சேம நிதியத் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் ஒரு தொகுப்பு கீழே தரப்பட்டுள்ளது.

**அ. பங்களிப்புக்களைப் பெறும் உரித்துடையவர்களுக்கு நன்மைகளைக் கொடுப்பனவு செய்தல்**

2018ஆம் ஆண்டில், உறுப்பினர்களுக்கும் அவர்களது சட்ட ரீதியான வாரிசுகளுக்கும் செலுத்தப்பட்ட மொத்த மீளளிப்புக்கள் ரூ.108.0 பில்லியனாக (அட்டவணை ஐஐ-10) காணப்பட்ட போதிலும், உறுப்பினர்களின் மொத்தப் பங்களிப்புக்கள் முன்னைய ஆண்டில் பதிவுசெய்யப்பட்ட ரூ.133.3 பில்லியனிலிருந்து ரூ.145.0 பில்லியனுக்கு 8.8 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது. மொத்த மீளளிப்புக்கள் 2017ஆம் ஆண்டைவிட 8.1 சதவீதம் கொண்ட ஒரு குறைவைக் காட்டியது. இதற்கேற்ப, தேறிய பங்களிப்பானது 2017ஆம் ஆண்டில் பதிவுசெய்யப்பட்ட ரூ.15.8 பில்லியனுடன் ஒப்பிடும்போது ரூ.37.0 பில்லியனாக அதிகரித்திருந்தது.

**ஆ. நிதியத்தின் பொதுக் கணக்கு மற்றும் உறுப்பினர் கணக்குகளைப் பேணுதல்**

பெறப்பட்ட தேறிய பங்களிப்புக்கள் (பங்களிப்புகளிலிருந்து மீளளிப்புக்களை கழித்த பின்னர்) மற்றும் முதலீடுகளால் உழைக்கப்பட்ட வருமானம் என்பவற்றின் காரணமாக நிதியத்தின் மொத்தப் பெறுமதி 2017ஆம் ஆண்டின் இறுதியிலுள்ளவாறான ரூ.2,066.3 பில்லியனுடன் ஒப்பிடும்போது 2018ஆம் ஆண்டின் இறுதியில் ரூ.2,289.4 பில்லியனுக்கு 10.8 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது. உறுப்பினர்களுக்கான மொத்தப் பொறுப்பு (உறுப்பினர் நிலுவைகள்), 2018 இறுதியில் ரூ.2,254.2 பில்லியனாக விளங்கி 2017இல் ரூ.2,020.8 பில்லியனிலிருந்து 11.6 சதவீதம் கொண்ட அதிகரிப்பினைப் பதிவுசெய்தது. (அட்டவணை II-10)

**அட்டவணை II-10:**
**நிதியத்தின் தெரிந்தெடுக்கப்பட்ட முக்கிய தகவல்**

| விடயம் | 2017 | 2018(அ) | மாற்றம் (%) |
|---|---|---|---|
| நிதியத்தின் மொத்தப் பெறுமதி (ரூ.பில்.) | 2,066.3 | 2,289.4 | 10.8 |
| உறுப்பினர்களுக்கான மொத்தப் பொறுப்பு (ரூ.பில்.) | 2,020.8 | 2,254.2 | 11.6 |
| உறுப்பினர் கணக்குகளின் மொத்த எண்ணிக்கை (மில்.) | 18.0 | 18.6 | 3.3 |
| பங்களிப்புச் செய்யும் உறுப்பினர் கணக்குகள் (மில்.) | 2.8 | 2.6 | (7.1) |
| பங்களிப்புச் செய்யாத உறுப்பினர்களின் கணக்குகள் (மில்.) | 15.3 | 16.0 | 4.6 |
| மொத்தப் பங்களிப்புக்கள் (ரூ.பில்.) | 133.3 | 145.0 | 8.8 |
| மொத்த மீளளிப்புக்கள் (ரூ.பில்.) | 117.5 | 108.0 | (8.1) |
| தேறிய பங்களிப்புக்கள் (ரூ.பில்.) | 15.8 | 37.0 | 134.2 |
| மீளளிப்புக்களின் எண்ணிக்கை | 260,989 | 241,190 | (7.6) |

அ) தற்காலிகமானவை

*மூலம்:* ஊ.சே.நி திணைக்களம், இலங்கை மத்திய வங்கி

**இ. நிதியத்தின் பணத்தை முதலீடு செய்தல்**

**i. முதலீட்டுச் சொத்துப்பட்டியல்**

2018இல், ஊழியர் சேம நிதியத் திணைக்களம் நீண்டகாலத் திறைசேரி முறிகள் மற்றும் கம்பனிக் கருவிகளில் நிதியத்தின் பணத்தை முதலீடு செய்வதில் தொடர்ந்தும் பேணியது. நிதியத்தின் மொத்த முதலீட்டுச் சொத்துப் பட்டியல் (ஏட்டுப் பெறுமதி), 2017இன் இறுதியில் பதிவுசெய்யப்பட்ட ரூ.1,992.4 பில்லியனிலிருந்து 2018இல் ரூ.2,298.8 பில்லியனுக்கு 15.4 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தது (அட்டவணை ஐஐ-11). நிதியத்தின் முதலீட்டுக் கொள்கையானது, உறுப்பினர்களுக்கு நீண்டகால நேர்க்கணிய உண்மைவீத வருமானத்தினை வழங்குவதன் மீது தொடர்ந்தும் கவனத்தினைச் செலுத்திய வேளையில் நிதியத்தின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்டதுடன், மீளளிப்பு கொடுப்பனவுகளையும்

நிதியத்தின் ஏனைய செலவுகளையும் ஈடுசெய்யக்கூடிய விதத்தில் திரவத்தன்மையும் ஒரு போதுமான மட்டத்தில் பேணப்பட்டது.

இதற்கேற்ப, 2018இன் இறுதியில், முதலீட்டுச் சொத்துப்பட்டியலானது 92.2 சதவீதமான அரச பிணையங்களையும், 3.3 சதவீதமான பங்குகளையும், 1.9 சதவீதமான நிறுவனத் தொகுதிக் கடன் பத்திரங்கள் மற்றும் நம்பிக்கைச் சான்றிதழ்களையும், 1.5 சதவீதமான நிலையான வைப்புக்களையும், மிகுதியான 1.1 சதவீதமானது நேர்மாற்று மீள்கொள்வனவு ஒப்பந்தத்தையும் உள்ளடக்கியதாகக் காணப்படுகின்றது. விளைவு வீதங்களுடன் சேர்த்து அரச பிணையங்கள் சொத்துப் பட்டியலின் முதிர்ச்சித் தோற்றப்பாடு அட்டவணை II-12இல் தரப்பட்டுள்ளது.

**அட்டவணை II - 11**
**முதலீட்டுச் சொத்துப்பட்டியல்**

| முதலீட்டின் வகை | 2017 இறுதி | | 2018 இறுதி | |
|---|---|---|---|---|
| | தொகை (ரூ.பில்) | பங்கு (%) | தொகை (ரூ.பில்) | பங்கு (%) |
| திறைசேரி முறிகள் மற்றும் உண்டியல்கள் | 1,818.6 | 91.3 | 2,119.2 | 92.2 |
| பங்குரிமை மூலதனம் | 84.3 | 4.2 | 74.9 | 3.3 |
| கம்பனிக் படுகடன்கள் | 41.5 | 2.1 | 44.8 | 1.9 |
| நிலையான வைப்புக்கள் | 48.0 | 2.4 | 33.6 | 1.5 |
| நேர்மாற்று மீள்கொள்வனவுகள் | - | - | 26.4 | 1.1 |
| **மொத்தம்** | **1,992.4** | **100.0** | **2,298.8** | **100.0** |

மூலம்: ஊ.சே.நி திணைக்களம்,
இலங்கை மத்திய வங்கி

**அட்டவணை II - 12**
**அரச பிணையங்கள் சொத்துப்பட்டியலின் முதிர்ச்சித் தோற்றப்பாடு (2018 இறுதியிலுள்ளவாறு)**

| முதிர்ச்சிக் காலம் | முதிர்ச்சிப் பெறுமதி (ரூ.மில்) | பங்கு (%) | நிறையேற்றப் பட்ட சராசரி விளைவு (%) |
|---|---|---|---|
| 1 ஆண்டுக்குக் குறைந்தது | 124,096.4 | 5.8 | 9.90 |
| 1 - 2 ஆண்டுகள் | 182,944.5 | 8.5 | 11.26 |
| 3 - 4 ஆண்டுகள் | 269,016.6 | 12.5 | 10.50 |
| 5 ஆண்டுகளுக்கும் கூடியது | 1,571,118.8 | 73.2 | 11.37 |
| மொத்தம் | **2,147,176.2** | **100.0** | **11.16** |

(அ) தற்காலிகமானவை மூலம்: ஊ.சே.நி திணைக்களம்,
இலங்கை மத்திய வங்கி

**ii. முதலீட்டு வருமானம்**

2018ஆம் ஆண்டு காலப்பகுதியில், நிதியத்தின் மொத்த முதலீட்டு வருமானமானது, முன்னைய ஆண்டினைக் காட்டிலும் 0.1 சதவீதக் குறைவினைப் பதிவுசெய்து ரூ.222.4 பில்லியனாகக் காணப்பட்டது (அட்டவணை II-13). வட்டி வருமானமானது நிதியத்தின் பிரதான வருமான மூலமாகக் காணப்பட்டதுடன், இது 2017இல் ரூ.219.6 பில்லியனிலிருந்து 4.5 சதவீதத்தினால் 2018இல் ரூ.229.4 பில்லியனுக்கு விரிவடைந்துள்ளது. பங்கு முதலீட்டுச் சொத்துப்பட்டியலிலிருந்து பெறப்பட்ட பங்கிலாப வருமானம், 2017இல் உழைக்கப்பட்ட ரூ. 2,993.6 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2018இல் ரூ.3,887.6 மில்லியனுக்கு 29.9 சதவீதத்தால் அதிகரித்துள்ளது. மேலும், இரண்டாம் தரச்சந்தையிலிருந்து திறைசேரி முறிகளை வாங்குதல் 2018இல் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டது. ஒட்டுமொத்தமாக, நிதியத்தின் முதலீடுகளிலிருந்தான வருமானம் 2017இல் பதிவுசெய்யப்பட்ட 11.8 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2018இல் 10.4 சதவீதமாக பதிவுசெய்யப்பட்டிருக்கிறது.

**அட்டவணை II - 13**
**முதலீடுகள் மீதான வருமானம்**

| வருமானத்தின் மூலம் | 2017 | | 2018 | |
|---|---|---|---|---|
| | தொகை (ரூ.மில்) | பங்கு (%) | தொகை (ரூ.மில்) | பங்கு (%) |
| கடன் தீர்ப்பனவு இலாபத்துடன் வட்டி | 219,635.3 | 98.7 | 229,446.0 | 103.1 |
| அரச பிணையங்களிலிருந்தான மூலதன இலாபம்* | - | - | - | - |
| அரச பிணையங்களிலிருந்தான சந்தைப்படியான இலாபம்/ இழப்புக்கள் | 1,640.2 | 0.7 | - | - |
| பங்குகளிலிருந்தான சந்தைப்படியான மூலதன இலாபம்/ இழப்புக்கள் | (163.4) | (0.1) | (10,901.3) | (4.9) |
| பங்குகளிலிருந்தான மூலதன இலாபம் | - | - | 7.2 | - |
| பங்கிலாபங்கள் | 2,993.6 | 1.3 | 3,887.6 | 1.7 |
| நிதியியல் சொத்துக்களின் சேத இழப்பு | (1,502.1) | (0.7) | 0.6 | - |
| **மொத்தம்** | **222,603.7** | **100.0** | **222,440.1** | **100.0** |

*கணக்கீட்டு நியமத்திற்கமைவாக, அரச பிணையங்கள் கடன் தீர்ப்பு கிரயத்திற்கு மீள்வகைப்படுத்தப்பட்டு, இலங்கை நிதியியல் அறிக்கை நியமம் 09- 01.01.2018 இருந்து நடைமுறைக்கு வரும் வகையில் பிரயோகிக்கக்கூடிய நிதியியல் கருவிகள்

மூலம்: ஊ.சே.நி திணைக்களம்,
இலங்கை மத்திய வங்கி

**iii. செலவினம்**

நிதியத்தின் மொத்தத் தொழிற்பாட்டுச் செலவினம் 2017இன் ரூ.1,348.7 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2018இல் ரூ.1,505.3 மில்லியனுக்கு 11.6 சதவீதத்தினால் அதிகரித்திருந்ததுடன், மொத்த வருமானத்தின் ஒரு விகிதமாக இது 2017இன் 0.61 சதவீதத்திலிருந்து 2018இல் 0.68 சதவீதத்திற்கு அதிகரித்துள்ளது (அட்டவணை II-14). இவ்வாண்டுகளில், நிதியானது அதன் தொழிற்பாட்டுச் செலவினத்தினை மொத்த வருமானத்தின் 1 சதவீதத்திற்கும் குறைவான மட்டத்தில் பேணக்கூடியதாகவிருந்தது.

**அட்டவணை II - 14**
**தொழிற்பாட்டுச் செலவினங்கள்**

| விடயம் | தொகை (ரூ.மில்.) | | மாற்றம் (%) |
|---|---|---|---|
| | 2017 | 2018 | |
| ஆளணிச் செலவினங்கள் | 847.3 | 967.3 | 14.2 |
| நிர்வாகச் செலவினங்கள் | 454.1 | 470.0 | 3.5 |
| ஏனைய செலவினங்கள் | 47.3 | 68.0 | 43.7 |
| மொத்தம் | **1,348.7** | **1,505.3** | **11.6** |
| **மொத்த வருமானத்தின் % ஆக மொத்தச் செலவினங்கள்** | **0.61** | **0.68** | |

மூலம்: ஊ.சே.நி. திணைக்களம்,
இலங்கை மத்திய வங்கி

**ஈ) உறுப்பினர் நிலுவைகள் மீதான வட்டிக் கொடுப்பனவு**

கடந்த 10 ஆண்டுகளுக்கும் மேலாக, ஊ.சே.நிதியம், சட்ட ரீதியான குறைந்தபட்ச வீதமான 2.5 சதவீதத்திற்கும் மிகக்கூடுதலாக அதன் உறுப்பினர்களுக்குத் தொடர்ந்தும் உயர்ந்த வட்டி வீதத்தை செலுத்தக்கூடியதாக இருந்தது (அட்டவணை II-15). அத்தியாயம் 8இல் விபரங்கள் கொடுக்கப்பட்டுள்ளன.

அட்டவணை II - 15

உறுப்பினர் நிலுவைகள் மீது செலுத்தப்பட்ட வட்டி வீதம்

| ஆண்டு | வழங்கப்பட்ட வட்டிவீதம் (%) | பயனுறு வட்டிவீதம் (%)[1] |
|---|---|---|
| 2008 | 13.20 | 13.44 |
| 2009 | 13.75 | 13.92 |
| 2010 | 12.50 | 12.65 |
| 2011 | 11.50 | 11.58 |
| 2012 | 11.50 | 11.62 |
| 2013 | 11.00 | 11.14 |
| 2014 | 10.50 | 10.60 |
| 2015 | 10.50 | 10.57 |
| 2016 | 10.50 | 10.51 |
| 2017 | 10.50 | 10.51 |
| 2018 (அ) | 9.50 | 9.54 |

(அ) தற்காலிகமானவை

மூலம்: ஊ.சே.நி. திணைக்களம், இலங்கை மத்திய வங்கி

[1] பயனுறு வட்டி வீதம் ரீ (உறுப்பினர்களுக்குச் செலுத்தப்பட்ட வட்டி)/ [( வருட ஆரம்பித்தல் உறுப்பினர் நிலுவை + வட்டி வரவு வைப்பதற்கு முன்பு வருட இறுதியில் உறுப்பினர் நிலுவை)/2]

### உ) உறுப்பினர் பணிகளில் ஈடுபடுதல்

### (i) உறுப்பினர் கணக்கு கூற்றுக்களை வழங்குதல்

2018 காலப்பகுதியில், ஊ.சே.நிதியத்தின் செயற்பாட்டு உறுப்பினர்களுக்கு அவர்களது தொழில்தருநர்களூடாக வழங்கப்பட்ட 2017ஆம் ஆண்டின் முதலரைப்பகுதி மற்றும் பின்னரைப்பகுதிக்கான உறுப்பினர் கணக்குக் கூற்றுக்களானது அட்டவணை II-16இல் கொடுக்கப்பட்டுள்ளது.

அட்டவணை II - 16

உறுப்பினர் கணக்குக் கூற்றுக்களை வழங்குதல்

| காலப்பகுதி | தொழில்தருநர்களின் எண்ணிக்கை | கூற்றுக்களின் எண்ணிக்கை (செயற்படும் உறுப்பினர்கள்) |
|---|---|---|
| 2017 முதலரை ஆண்டு | 69,020 | 2,176,952 |
| 2017 இரண்டாமரை ஆண்டு | 76,308 | 2,711,049 |

மூலம்: ஊ.சே.நி. திணைக்களம், இலங்கை மத்திய வங்கி

### (ii) வீடமைப்புக் கடன்களை பெறுவதற்கான வசதிப்படுத்தலுக்கு உறுப்பினர்களுக்கு உத்தரவாத சான்றிதழ்கள் வழங்குதல்

வீடமைப்பு அபிவிருத்தி மற்றும் நிதிக் கூட்டுத்தாபன வங்கி, அரச ஈட்டு முதலீட்டு வங்கி, இலங்கை வங்கி, மக்கள் வங்கி மற்றும் கூட்டுறவு கிராமிய வங்கிகள் ஆகிய பங்கேற்கும் கடன் வழங்கும் நிறுவனங்களிடமிருந்து வீடமைப்புக் கடன்களைப் பெற்றுக்கொள்வதற்கு உறுப்பினர்களுக்கு வசதியளிக்கும் குறிக்கோளுடன் 1988இல் அறிமுகப்படுத்தப்பட்ட வீடமைப்புக் கடன் திட்டத்தினை 2018இல் தொடர்ந்தது. இத்திட்டத்தின் கீழ், 2018 காலப்பகுதியில், ஊழியர் சேம நிதியத் திணைக்களம், ரூ.4,974 மில்லியன் கொண்ட வீடமைப்புக் கடன்களின் ஒப்புதலுக்காக பங்கேற்கின்ற கடன்வழங்கல் நிறுவனங்களுக்கு உறுப்பினர்களின் ஊழியர் சேம நிதிய நிலுவைகளுக்கெதிராக அவர்களுக்கு 10,036 உத்தரவாதச் சான்றிதழ்களை வழங்கியது (அட்டவணை ஐஐ-17). மேலும், 2018 காலப்பகுதியில், தொடர்பான உறுப்பினர் கணக்குகளிலிருந்து ஏறத்தாழ ரூ.2,759 மில்லியன் கழிக்கப்பட்டு, 2017ஆம் ஆண்டுப்பகுதியில் நிலுவையிலிருந்த கடன்களைத் தீர்ப்பனவு செய்வதற்காக 2018இல் பங்கேற்கின்ற கடன்வழங்கல் நிறுவனங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

அட்டவணை II - 17

வீடமைப்புக் கடன் உத்தரவாத வசதி

| ஆண்டு | வழங்கப்பட்ட சான்றிதழ்கள் (எண்ணிக்கை) | ஒப்புதலளிக்கப்பட்ட கொடுகடன் (ரூ.மில்) | கடன்வழங்கல் நிறுவனங்களுக்கு செலுத்திய தொகை (ரூ.மில்) |
|---|---|---|---|
| 2008 | 12,519 | 3,008 | 1,192 |
| 2009 | 10,383 | 2,680 | 1,552 |
| 2010 | 13,848 | 4,512 | 2,093 |
| 2011 | 20,041 | 6,355 | 1,896 |
| 2012 | 11,234 | 3,973 | 2,019 |
| 2013 | 16,268 | 6,914 | 2,178 |
| 2014 | 17,786 | 8,021 | 2,394 |
| 2015 | 13,132 | 5,489 | 2,522 |
| 2016 | 12,780 | 5,414 | 2,541 |
| 2017 | 10,998 | 4,946 | 2,485 |
| 2008 | 12,519 | 3,008 | 1,192 |
| 2009 | 10,383 | 2,680 | 1,552 |
| 2010 | 13,848 | 4,512 | 2,093 |
| 2011 | 20,041 | 6,355 | 1,896 |
| 2018(அ) | 10,036 | 4,974 | 2,759 |

(அ) தற்காலிகமானவை

மூலம்: ஊ.சே.நி. திணைக்களம், இலங்கை மத்திய வங்கி

### (iii) இளைப்பாறுவதற்கு முன்னரான மீளளிப்புத் திட்டம்

2012ஆம் ஆண்டின் 02ஆம் இலக்க ஊழியர் சேம நிதிய (திருத்தம்) சட்டத்தின் ஏற்பாடுகளில் நியதிகள் மற்றும் அதன் பின்னர் பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட்ட நடைமுறைகள் என்பனவற்றின் அடிப்படையில் 30 சதவீத ஊழியர் சேம நிதியம் இளைப்பாறுவதற்கு முன்னரான மீளளிப்புத் திட்டத்தின் கீழான கொடுப்பனவுகள் 2015 யூலை 1 இலிருந்து தொழிற்படுத்தப்படுகின்றது. இத்திட்டம் நன்மைபெறுபவர்களிடையே பெரும் வரவேற்பைப் பெற்றிருப்பதுடன் 2018 இறுதியளவில் 130,000 இற்கு மேற்பட்ட நன்மைபெறுநர்களுக்கு ரூ.73.1 பில்லியனை தொடங்கப்பட்டதிலிருந்து மீளளிப்புச் செய்யப்பட்டிருக்கின்றது. 2018 காலப்பகுதியில், இத்திட்டத்தின்கீழ் 28,377 நன்மைபெறுநர்களிற்கு ரூ.14.8 பில்லியன் விடுவிக்கப்பட்டிருக்கிறது.

### (iv) ஊ.சே.நிதிய நடமாடும் பணிகள் நிகழ்ச்சித்திட்டம்

உறுப்பினர் பணிகளின் விநியோகத்தில் வசதியை மேம்படுத்தல் மற்றும் ஊழியர் சேம நிதியத்தின் செயற்பாடுகள் மீதான பொதுமக்கள் விழிப்புணர்வை மேம்படுத்தல் என்பவற்றினை நோக்காகக் கொண்டு 2018ஆம் ஆண்டில் ஊ.சே.நிதிய நடமாடும் பணிகள் நடத்தப்பட்டன.

பெரும்பாலும் ஒரு உறுப்பினர் கொழும்பில் அமைந்துள்ள ஊ.சே.நிதிய திணைக்களத்திற்கு வருகைதந்து பெறுகின்ற ஏறத்தாழ அனைத்துப் பணிகளையும் தமது சொந்த இடத்தில் அல்லது வேலைத்தலத்திலிருந்து கொண்டே செல்லிடப் பணிகள் மூலம் பெற்றுக்கொள்ளலாம். இந்தப் பணிகளானது, ஊ.சே. நிதிய நிலுவைக் கூற்றுக்களை வழங்குதல், ஊ.சே. நிதிய உறுப்பினர்களின் விபரங்களைத் திருத்துதல், போலி இலக்கங்களை அகற்றுதல், ஊ.சே.நிதிய கணக்குத் திருத்தங்கள், இலத்திரனியல் ஊடகம் மற்றும் நேரடி பற்று முறைமை பற்றித் தொழில்தருநர்களுக்கு விழிப்புணர்வு வழங்கல், உறுப்பினர் தகவல்களினுடைய மீள்பதிவு, குறுந்தகவல் பணிகளையும் இணையத்தள உறுப்பினர் பணிகளையும் ஊக்குவித்தல் மற்றும் முழுமொத்த ஊ.சே.நிதிய நடைமுறைகளின் ஆலோசனை வழங்குதல் என்பவற்றை உள்ளடக்குகின்றது.

இதற்கிணங்க, இந்த ஆண்டில், ஊ.சே.நிதியத் திணைக்களமானது, 20 நடமாடும் பணிகள் மற்றும் 3 பிரதான விழிப்பணர்வு நிகழ்ச்சித்திட்டங்களையும் நடாத்தியுள்ளது. இந்த நடமாடும் பணிகளில் சில, தொழில் திணைக்களம்,

ஆட்பதிவுத் திணைக்களம், பதிவாளர் நாயகத் திணைக்களம், காவல் துறை திணைக்களம் மற்றும் சம்பந்தப்பட்ட மாவட்ட/ பிரதேச செயலகங்கள் என்பவற்றுடன் இணைந்து வழங்கப்பட்டது.

ஊ.சே.நிதியத்துடன் தொடர்புடைய பணிகளை வழங்கவும் பங்கேற்பாளர்களுக்கு இவற்றைத் தெரியப்படுத்தல் ஏனைய அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள்/ அமைச்சுக்களால் ஒழுங்கமைக்கப்பட்ட நடமாடும் பணிகளிற்கு அவர்களின் அழைப்பை ஏற்று ஊ.சே. நிதியத் திணைக்களமும் பங்கேற்றது. மேலும், பொதுமக்கள் கூட்டம் அதிகமாக இருந்த ஏனைய அரசு அல்லது அரச சார்பற்ற நிறுவனங்களினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிகழ்ச்சிகள்/ கண்காட்சிகளிற்காக ஊ.சே. நிதியத் திணைக்களமும் அழைக்கப்பட்டிருந்தது. இன்போரெல் - 2018 கண்காட்சி மண்டபத்தில் “டிஜிட்டல் அரசாங்கத்தில் மிகச்சிறந்த டிஜிட்டல் அரச தீர்வு” இற்கான விருது ஊ.சே.நிதியத்திற்கு வழங்கப்பட்டது.

இத்துடன், மின்னஞ்சல், சுவரொட்டிகள், துண்டுப்பிரசுரங்கள், காணொளிகள், மற்றும் விளக்கக்காட்சிகள் போன்றதொரு தொடர்பாடல் ஊடகத்தின் கூட்டினைப் பயன்படுத்தி ஊ.சே. நிதியத்தினால் வழங்கப்படுகின்ற பணிகள் சம்பந்தமாக இலக்கிடப்பட்ட உறுப்பினர்கள் தொழிலாளர்கள் மற்றும் ஏனைய ஆர்வலர்களுக்கு நடமாடும் பணிகளிற்கு இணையாக விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டன.

ஒவ்வொரு நடமாடும் பணிகள் நிகழ்ச்சித்திட்டத்திற்கும் முன்னர், செல்லிடப் பணிகளின் வினைத்திறனை மேம்படுத்தும் நோக்குடன் தொடர்புடைய தொழில்தருநர்கள், முகாமையாளர் மற்றும் தொடர்புடைய தொழில்தருநர்களின் ஏனைய நிர்வாக அலுவர்கள் ஆகியோருக்காக ஒரு விசேட விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டம் நடத்தப்படுகிறது.

### (v) இலத்திரனியல் ஊடகத்தினூடான ஊ.சே. நிதியத்தின் பங்களிப்பு

ஊ.சே.நிதியத்தின் பங்களிப்புக்களையும் முறையே உறுப்பினர்களின் விபரங்களையும் இலத்திரனியல் ஊடகத்தில் வசதிப்படுத்துகின்ற இலத்திரனியல் கூற்று முறையானது, ஒரு பத்திரங்களற்ற செயற்பாட்டுச் சூழலில் இதனுடைய செயற்பாட்டுத் திறனை மேம்படுத்துகின்ற நோக்கத்துடன் ஊ.சே.நிதியத் திணைக்களத்தினால் அறிமுகப்படுத்தப்பட்டது. சம்மந்தப்பட்ட சட்டவாக்கம் அதாவது 2012ஆம் ஆண்டு 2ஆம் இலக்க ஊழியர் சேம நிதியச் (திருத்தம்) சட்டம் நடைமுறைக்குவரும் வரையில் இந்த முறைமை சுயவிருப்பு அடிப்படையில் செயற்படுத்தப்பட்டது. இதற்கிணங்க, இலத்திரனியல் ஊடகத்தின் மூலம் ஊ.சே.நிதியத்தின் பங்களிப்பு விபரங்களை சமர்ப்பிப்பதானது, தொழில்தருநர்கள் அவர்களுடைய தொழிலில் 50 இற்கு மேற்பட்ட பணியாளர்களை வைத்திருக்கின்ற போது அவர்களுக்குக் கட்டாயமானதாக்கப்பட்டது. 2011இல் உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் அவற்றின் சொந்த அதேநேர வழிமூலம் ஊ.சே. நிதியத்தின் பங்களிப்புக்களைச் சேகரிப்பதை வசதிப்படுத்துவதற்கு இந்த முறைமையில் இணைந்தன. இது தொழில்தருநரின் பங்கேற்பு மற்றும் விரைவான உறுப்பினர் கணக்குகளை புதுப்பித்தல் செயன்முறை என்பவற்றில் ஒரு குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தினை ஏற்படுத்தியது. அதன் நிர்வாகம் மற்றும் கண்காணிப்புப் பணிகளை வலுப்படுத்திய அதேவேளை 100 வீத தன்னியக்க செயன்முறை மற்றும் நியம நேர உறுப்பினர் கணக்குகளைக் கொண்டு வந்த அதேநேர அங்கத்தவர்களின் தகவல் செல்லுபடியாக்கும் பொறிமுறையின் அறிமுகப்படுத்தலுடன், 2016இல் இ-கூற்று முறையானது அதனுடைய உயர்ந்த தொழில்நுட்ப திருப்பு முனையை அடைந்தது. இதற்கிணங்க 2018இல் இணைந்த இரண்டு உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் உட்பட 8 உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளானது, ஊ.சே. நிதியத்தின் அதேநேர கொடுப்பனவுகளை வசதிப்படுத்துகின்ற அதேவேளை இவற்றில் நான்கு அதேநேர உறுப்பினர் தகவல்களை செல்லுபடியாக்கும் மற்றும் அதனுடைய வாடிக்கையாளர்களுக்கான நியம நேர உறுப்பினர் கணக்குகளைப் புதுப்பிக்கின்ற வசதிகளையும் வழங்குகின்றது.

இத்துடன், இ-கூற்று சமர்ப்பிக்கும் நடைமுறை மற்றும் ஊ.சே. நிதியத்தின் ஆர்வலர்களுக்கான அதனுடைய பயன்கள் சம்மந்தமாக தொழில்தருநர்களுக்கு மேலும் விழிப்புணர்வுகளை ஏற்படுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டது. இதற்கிணங்க, இ-கூற்று சமர்ப்பிப்பு முறையில் தொழில்தருநர்களின் பங்களிப்பானது 7,900 இலிருந்து 8,540 இற்கு அதிகரிக்கப்பட்டது. இது, ஏறத்தாழ 81 சதவீதமான செயற்படுகின்ற உறுப்பினர் கணக்குகள் மற்றும் ஏறத்தாழ 88 சதவீதமான மொத்த மாதாந்த ஊ.சே. நிதியத்தின் பங்களிப்பையும் 2018 முடிவில் உள்ளடக்கியுள்ளது.

மேலும், ஊ.சே. நிதியத்தை செலுத்துவதற்கான புதிய முறைமைகளின் அறிமுகக் கண்ணோட்டத்துடன், ஏதேனும் பங்கேற்கும் வங்கிகளிடமிருந்து மாதாந்தப் பங்களிப்புக்களை செலுத்துவதற்கு தொழில்தருநர்களுக்கு வசதிப்படுத்துகின்ற லங்கா கிளியரினுடைய பொது இலத்திரனியல் நிதியமாற்றல் முறைமையை நடைமுறைப்படுத்துவதற்கு வெப்தளத்தினூடாக அவற்றினுடைய இ-வருமானங்களைச் சமர்ப்பிபதற்கு தொழில்தருநர்களை வழிப்படுத்துகின்ற ஊ.சே. நிதியத்தின் அதிகாரபூர்வ வெப்தளத்தை அபிவிருத்தி செய்வதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டன.

### (vi) ஊ.சே. நிதிய உறுப்பினர்களின் மீள்பதிவு

ஊ.சே.நிதியத் திணைக்களமானது தொழில் திணைக்களத்துடன் இணைந்து, தொழில்தருநர் மற்றும் தொழிலாளர்கள் ஆகிய இரண்டு தரப்பினருக்கும் ஒரு வினைத்திறன் மிக்க பணியை வழங்கும் நோக்குடன் அதனுடைய உறுப்பினர்களை மீள்பதிவு செய்வதற்காக 2010இல் அறிமுகப்படுத்தப்பட்ட விசேட திட்டமானது 2018ஆம் ஆண்டில் தொடரப்பட்டது. இதற்கிணங்க, ஒரு பொது உறுப்பினர் மையத் தரவுத் தளத்தினை நிறுவுவதற்கு ஊ.சே.நிதியம் மற்றும் தொழில் திணைக்களம் ஆகிய இரண்டையும் வழிப்படுத்துகின்றதும் ஒரு தனித்துவமான அடையாளப்படுத்தலுடன் உறுப்பினர்களுடைய அடையாளம் காணலை வசதிப்படுத்துவதற்கு தேசிய அடையாள அட்டையின் தகவல்களுடன் உறுப்பினர் தகவல்களை சேகரித்தல் மற்றும் தேசிய அடையாள அட்டையின்படி அந்த உறுப்பினர்களை மீள்பதிவு செய்தலானது மேற்கொள்ளப்பட்டது. இந்த நிகழ்ச்சித்திட்டமானது அங்கத்தவர் தகவல்களின் மேம்படுத்தப்பட்ட தரத்தினூடாக அதனுடைய ஆர்வலர்களிற்கு வினைத்திறனான பணிகளை வழங்குவதற்கு ஊ.சே. நிதியம் மற்றும் தொழில் திணைக்களம் ஆகிய இரண்டிற்கும் உதவுகிறது.

2018 இறுதிக்குள், ஏறத்தாழ 1.91 மில்லியனான செயற்பாட்டிலுள்ள ஊ.சே. நிதியத்தின் உறுப்பினர்களின் (பங்களிப்புச் செய்கின்ற உறுப்பினர்கள்) தேசிய அடையாள அட்டைத் தகவல்கள் சேகரிக்கப்பட்டுள்ளன. இதற்கிணங்க இந்த உறுப்பினர்களின் 81 சதவீதமான கணக்குகளிற்கு (1.55 மில்லியன் கணக்குகள்) தனித்துவமான அடையாளங்கள் ஒதுக்கப்பட்டுள்ள அதேவேளை, மீதமுள்ள உறுப்பினர்களின் விபரங்களை சரிபார்க்கும் பணி நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. ஒரு மாத அடிப்படையில் முதலாவது தடவையாக உறுப்பினர் பங்களிப்புக்கள் பெறப்பட்ட அனைத்துப் புதிய உறுப்பினர்களின் தேசிய அடையாள அட்டைத் தகவல்களின் தவறுகளற்ற இற்றைப்படுத்தலைக் கண்காணிப்பதற்கு இணையாக ஒரு முறைமையும் நிறுவப்பட்டுக் கொண்டிருந்தது. மேலும், இலத்திரனியல் செல்லுபடியாக்கும் முறையினூடாக ஊ.சே. நிதியத்தினுடைய அனைத்து செயற்பாட்டு உறுப்பினர்களின் கணக்குகளை மீள்பதிவு செய்வதற்கும் செயல்முறையை விரைவுபடுத்துவதற்குமான தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

### (vii) ஏனைய பணிகள்

ஊ.சே. நிதியத் திணைக்களமானது, அதனுடைய உறுப்பினர்களுக்கு வினைத்திறனும் காத்திரமானதுமான பணிகளை வழங்குவதற்காக பாடுபடுகின்றது. இன்றைய விரைவான சூழலில், உறுப்பினர்கள் மிகச் சிறந்த பணி வழங்கலைக் கோருகின்றனர். இதனால், ஊ.சே.நிதியத் திணைக்களத்தின் மக்கள் தொடர்பு மற்றும் விசாரணைகள் பீடமானது 2018இல் சவால்மிக்க ஆண்டொன்றை நிறைவுசெய்துள்ளது. 2018ஆம் ஆண்டில் திணைக்களத்திற்கான அங்கத்தவர் அல்லது தொழில்தருநரின் வருகைகளின் எண்ணிக்கையானது 173,595 ஐ பதிவுசெய்திருக்கின்ற அதேவேளை திணைக்களமானது அழைப்புக்களின் மூலம் 82,454 உறுப்பினர் விசாரணைகளையும், மின்னஞ்சல்கள் மூலம் 9,542 உறுப்பினர் விசாரணைகளையும் பெற்றுக்கொண்டது.

திணைக்களமானது, உறுப்பினர்கள், தொழில்தருநர்கள் மற்றும் ஏனைய ஆர்வலர்கள் மூலம் 2018ஆம் ஆண்டில் 100,058 கடிதங்களையும் பெற்றுக்கொண்டது.

உறுப்பினர் கணக்குகளின் தகவல்களைத் திருத்தம்/ சரிபார்த்தல் செய்வதற்காக திணைக்களத்திற்கு உறுப்பினர்களின் வருகை மற்றும் கடிதங்களூடாக ஒரு அதிக எண்ணிக்கையான அங்கத்தவர் வேண்டுகோள்கள் திணைக்களத்தால் பெறப்பட்டும் இருந்தன. 2018ஆம் ஆண்டில், ஊ.சே.நிதிய உறுப்பினர் கணக்குகளில் சுமார் 60,532 திருத்தங்களை திணைக்களத்தால் செய்யப்பட்டது. ஊ.சே. நிதிய அங்கத்தவர் கணக்குகளில் செய்ப்பட்ட திருத்தங்கள் பிரதானமாக இரண்டு கூறுகளாக வகைப்படுத்தலாம். அவையாவன, ஒரு உறுப்பினரின் கணக்கிற்கு வரவிடப்பட்டிருக்கின்ற பங்களிப்புக்களின் திருத்தங்கள் மற்றும் ஒரு ஊ.சே.நிதியத்தின் உறுப்பினர் கணக்கின் பெயர்/ தேசிய அடையாள அட்டைத் தகவல்களில் பிழைதிருத்தம் என்பனவாகும். 2018ஆம் ஆண்டுக்காலப்பகுதியில், திணைக்களமானது, 57,602 பெயர்/ தேசிய அடையாள அட்டை திருத்தங்கள் மற்றும் 2,750 கணக்குத் திருத்தங்களையும் திணைக்களம் செய்துள்ளது. மேலும், பிம்பப்படுத்தல் ஸ்கானிங் செயற்றிட்டத்தின் நடைமுறைப்படுத்தலுடன் ஊ.சே. நிதிய உறுப்பினர் கணக்குத் திருத்தங்களின் செயலாற்றத்திற்கான வசதியானது இலங்கை மத்திய வங்கியின் பிரதேச அலுவலகங்களிற்கும் விரிவுபடுத்தப்பட்டது. இதற்கிணங்க, 2018ஆம் ஆண்டில், திணைக்களமானது, வங்கியினுடைய பிரதேச அலுவலகங்களிலிருந்து கோரப்பட்ட 10,343 ஊ.சே. நிதிய உறுப்பினர் கணக்குகளுக்கு திருத்தங்களைச் செய்துள்ளது.

### ஊ) ஏனைய தொழிற்பாடுகள்

மேலும், உலக வங்கி மற்றும் இலங்கை அரசாங்கத்தின் நிதித் துறை நவீனமயமாக்கல் செயற்றிட்டத்தின் கீழ் ஊ.சே. நிதியமானது அதன் முதலீட்டு தந்திரோபாயம் மற்றும் கட்டமைப்பை மீளாய்வு செய்தல் மற்றும் மறுசீரமைப்புச் செய்யும் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தது. உலக வங்கியனாது ஊ.சே.நிதியத்திற்கான ஒரு விரிவான தகவல் தொடர்பூட்டல் தொழில்நுட்பத் தீர்வினை நடைமுறைப்படுத்துவதற்கு நிதி உதவியை வழங்கி வருகின்றது. இதனைக் கருத்தில் கொண்டு, ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் இலங்கை அரசாங்கத்தினதும் மூலதனச் சந்தை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் ஆசிய அபிவிருத்தி வங்கியின் தொழில்நுட்ப உதவியுடன் ஒரு வியாபாரச் செயன்முறை மீளாய்வு நடத்தப்பட்டுவருகிறது. வியாபாரச் செயன்முறை மீளாய்வின் கட்டம் - 1 2018இல் நடத்தப்பட்டது.

## 9. வசதிகள் முகாமைத்துவம்

வசதிகள் முகாமைத்துவத் திணைக்களமானது 2018இன் போது தொழில் தொடர்ச்சியினை உறுதிசெய்வதற்கு அதன் தலைமை அலுவலகக் கட்டடத்தினையும் உபகரணங்களையும் தரமுயர்த்துவதற்கு பல செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்திய அதேவேளை, பராமரிப்புப் பணிகளை தொடர்ந்தும் முன்னெடுத்தது. கட்டட உட்புறம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்களின் பிரதான செம்மைப்படுத்தலைக் கருத்திற்கொள்கின்ற தலைமை அலுவலகக் கட்டடக் கூறுகள் துணைக் கருவிகளைப் பொருத்தும் செயற்திட்டங்களை துரிதப்படுத்துவதற்கு ஆண்டு காலப்பகுதியின் போது அதிக அழுத்தம் கொடுக்கப்பட்டது. கட்டடக் கூறுகளின் கட்டமைப்பு சார்ந்த பரீட்சித்தல் உள்ளடங்கலாக கட்டடத்தின் நிலைமையினை மதிப்பிடுவதற்கான அனைத்தையுமுள்ளடக்கிய கட்டட அளவீடொன்று செயற்திட்ட ஆலோசகரின் உதவியுடன் மேற்கொள்ளப்பட்டது. இக்க செயற்திட்டங்களை பாகமொன்றாக கட்டடங்களின் துணைநில் மின்பிறப்பாக்கிக் கட்டுப்பாட்டு முறைமையினையும் அதன் பிரதான மாநாட்டு மண்டபத்தின் செவிப்புல கட்புல முறைமையினையும் மாற்றீடு செய்வதற்கான பெறுகைப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன. இலங்கை மத்திய வங்கியின் தொழிற்பாடுகளுக்கான வசதிகளை மேலும் அதிகரிப்பதற்கு தலைமை அலுவலகக் கட்டடத்தில் அழைப்பு பதிவு முறைமையொன்றினையும் இணையவழி அடிப்படையிலான சிசிரிவி முறைமையினையும் பொருத்துவதற்கு ஒப்பந்தங்கள் வழங்கப்பட்டன.

மீளாய்வுக்குட்படுகின்ற ஆண்டு காலப்பகுதியின் போது வசதிகள் முகாமைத்துவத் திணைக்களமானது இலங்கை மத்திய வங்கியின் பல முக்கிய திணைக்களங்களில் தொழிற்பாட்டு வசதிகளை அதிகரிப்பதற்கு முயற்சிகளை மேற்கொண்டது. நாணயத் திணைக்களத்தினுள் பணியாற்றத்தக்க சூழலை மேம்படுத்துவதற்காக நாணயத் தாசுப் பிரித்தெடுப்பு முறைமை ஒன்றினை பொருத்துவதற்கும் நாணயத் தொழிற்பாடுகளுக்கான மேலதிகக் கொள்ளளவுத் தேவைப்பாடுகளை நிறைவுசெய்வதற்காக புதிய நாணயக் களஞ்சிய வசதியொன்றினை நிருமாணிப்பதற்கும் வசதிகள் முகாமைத்துவத் திணைக்களம் செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்தியது. கேட்போர்கூட நுழைவாயிலுக்கான புதிய காப்புக்கூரை, புதிய துணைநில் மின் பிறப்பாக்கி மற்றும் கற்கைநெறிப் பங்கேற்பாளர்களுக்கான புதிய உணவுச்சாலை மற்றும் சவரிங் வதிவிடத்தில் மேம்படுத்தப்பட்ட தங்குமிட வசதிகள் போன்றன உள்ளடங்கலாக வங்கித்தொழில் கற்கைகளுக்கான நிலையத்தினையும் அதனோடு இணையப்பெற்ற கட்டடங்களையும் தரமுயர்த்துவதற்கு புதிய செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்தப்பட்டன. ஊழிய சேம நிதியத் திணைக்களம் அமைந்துள்ள லொயிட்ஸ் கட்டடத்தின் கூரையினை முழுமையாகப் பழுதுபார்த்தலும் கொண்டு நடாத்தப்பட்டது.

கடமை மற்றும் விடுமுறை போன்றவற்றுக்கு வெளியிடங்களுக்கு செல்லுகின்ற இலங்கை மத்திய வங்கியின் அலுவலர்களின் தேவைகளை நிறைவுசெய்யும் நோக்குடன் கிடைக்கப்பெறுகின்ற விடுமுறை விடுதி வசதிகளை விரிவுபடுத்துவதற்கு வசதிகள் முகாமைத்துவத் திணைக்களம் நடவடிக்கைகளை எடுத்தது. கிளிநொச்சியிலுள்ள புதிய விடுமுறை விடுதிக்கு தளபாடம் வழங்குதல் மற்றும் உட்புற வேலைப்பாடுகள் இக்காலப்பகுதியின் போது நிறைவுசெய்யப்பட்டதுடன் அநுராதபுரத்தில் தற்போது காணப்படுகின்ற கட்டடம் பழைமையின் காரணமாக சிதைவடைந்துள்ளதனால் புதிய விடுமுறை விடுதியொன்றினை வடிவமைத்து நிருமாணிப்பதனைப் பொறுப்பேற்பதற்கு கருத்திட்ட ஆலோசகர் ஒருவர் நியமிக்கப்பட்டார். மதில் சுவர் நிருமாணித்தல், கூரை பழுபார்த்தல், புதிய துணைநில் மின்பிறப்பாக்கியொன்றினைப் பொருத்துதல் போன்ற உள்ளடங்கலாக நுவரெலியாவிலுள்ள விடுதியில் பல மேம்படுத்தல் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

2018இல் அதன் வசதிகள் முகாமைத்துவ நடவடிக்கைகளை சீரமைப்பதற்கு வசதிகள் முகாமைத்துவத் திணைக்களம் பல நிர்வாக வழிமுறைகளைப் பொறுப்பேற்றது. ஊழியர்களினதும் ஓய்வூதியம் பெறுநர்களினதும் வசதிக்காக விடுமுறை விடுதிகளை ஒதுக்கீடு செய்வதற்கு இணையத்தளம் ஊடான முறைமையொன்று அறிமுகப்படுத்தப்பட்டதுடன் அலுவலர்களுக்கு எளிதான போக்குவரத்து வசதிகளை வழங்குவதற்கு வெப்தளத்தினை அடிப்படையாகக் கொண்ட வாடகை வண்டி, பெற்றுக்கொள்ளும் வசதி அறிமுகப்படுத்தப்பட்டது. அமைச்சரவையின் தீர்மானத்திற்கமைவாக வசதிகள் முகாமைத்துவத் திணைக்களமானது இலங்கை மத்திய வங்கியின் இரண்டு வெளிநாட்டு ஆதனங்களை 2018 மேயில் அவற்றின் சொத்தாண்மையினை மாற்றல் செய்வதன் மூலம் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சிற்கு கையுதிர்ப்பதற்கு இயலுமாகவிருந்தது. வசதிகள் முகாமைத்துவத் திணைக்களமானது தரமுயர்த்தல் மற்றும் விரிவுபடுத்தல் என்பவற்றுக்கான பல்வேறு புதிய செயற்திட்டங்களை ஈடுபட்ட அதேவேளை அதன் முக்கிய பொறுப்பின் பாகமொன்றாக கட்டடங்கள், உபகரணங்கள், நிலத்தோற்றம் என்பவற்றை பராமரிப்புச்செய்து போக்குவரத்து மற்றும் தொலைத்தொடர்பூட்டலில் அவசியமான துணைச் சேவைகளை வழங்கியது.

## 10. நிதி

நிதித் திணைக்களம், பன்னாட்டு கணக்கீட்டு நியமங்கள்/ பன்னாட்டு நிதியியல் அறிக்கையிடல் நியமங்கள் மற்றும் நாணய விதிச் சட்டத்தின் தொடர்பான ஏற்பாட்டு நியதிகள் என்பனவற்றிற்கிணங்க இலங்கை மத்திய வங்கியின் நிதியியல் அறிக்கையிடல் தொழிற்பாடுகளை மேற்கொள்கிறது.

நிதித் திணைக்களத்தின் தொழிற்பாடுகள் மத்திய வங்கியின் நிதியியல் கூற்றுக்களைத் தயாரித்தல், மத்திய வங்கியின் வருடாந்த வரவுசெலவுத் திட்டத்தினைத் தயாரித்தல் மற்றும் கண்காணித்தல், மத்திய வங்கியின் உள்ளக மற்றும் வெளியக நிதியியல் கொடுக்கல்வாங்கல்களுக்காக கொடுப்பனவு முறைமையொன்றைப் பேணுதல், கொடையாளர் நிதியங்களை பகிர்ந்தளித்தல் மற்றும் அரச வெளிநாட்டுக் கடன்களை மீளச் செலுத்தல், நிதியியல் கொடுக்கல்வாங்கல்களின் உள்ளக அறிக்கையிடலுக்கான முறைமைகளைப் பேணுதல், 17 உள்ளக நிதியங்களைப் முகாமைப்படுத்தல், மத்திய வங்கியின் நிலையான சொத்துப் பதிவேட்டினைப் பேணுதல் மற்றும் அலுவலர் கடன்களின் தரவுத்தளத்தைப் பேணுதல் என்பனவற்றை உள்ளடக்கியிருந்தன.

### 10.1 நிதியியல் கூற்றுக்களின் தயாரிப்பு

i. **மாதாந்த ஐந்தொகை:** 1949ஆம் ஆண்டின் 58ஆம் இலக்க நாணய விதிச் சட்டத்தின் தேவைப்பாடுகளுக்கிணங்க, 2017 திசெம்பர் மற்றும் 2018 சனவரி - நவெம்பர் காலப்பகுதிக்கான மாதாந்த ஐந்தொகைகள் தயாரிக்கப்பட்டன.

ii. **காலாண்டு ரீதியான அறிக்கைகள்:** காலாண்டு நிதியியல் செயலாற்றம் மற்றும் நிலைமை என்பன 2018இல் நாணயச் சபைக்கு அறிக்கையிடப்பட்டன.

iii. **வருடாந்த நிதியியல் கூற்றுக்கள்:** 2002 தொடக்கம் பன்னாட்டு கணக்கீட்டு நியமங்களும் பன்னாட்டு நிதியியல் அறிக்கையிடல் நியமங்களும் பின்பற்றப்படுகின்றன. நிதியியல் கூற்றுக்கள் மத்திய வங்கியின் ஆண்டறிக்கையில் வெளியிடப்படுகின்றன. 2018ஆம் ஆண்டு பகுதியில் தொடர்பான கணக்கீட்டு நியமங்களுடனும் தேவைப்பாடுகளுடனும் இணங்கிச் செல்வதற்காக கணக்கீட்டு முறைமைகளும் நடவடிக்கை முறைகளும் தொடர்ச்சியான அடிப்படையில் இற்றைப்படுத்தப்பட்டன. 2018 ஆம் ஆண்டிற்கான மத்திய வங்கியின் கணக்காய்வு செய்யப்பட்ட நிதியியல் கூற்றுக்கள் ஆண்டறிக்கையின் பகுதி II இல் காட்டப்பட்டுள்ளன.

iv. **பன்னாட்டு நிதியியல் அறிக்கையிடல் நியமம் 09 உடன் இணங்குதல்:** 2018 திசெம்பர் 31இல் உள்ளவாறான இலங்கை மத்திய வங்கியின் நிதியியல் கூற்றுக்கள் பன்னாட்டு நிதியியல் அறிக்கையிடல் நியமம் 9இற்கு இணங்க தயாரித்து சமர்ப்பிக்கப்பட்டதுடன் இதன் நடைமுறைக்கு வரும் திகதியானது 2018 சனவரி 01 அன்றோ அல்லது அதற்குப் பின்னரோ ஆரம்பிக்கும் ஆண்டு காலப்பகுதிக்கானதாகவிருக்கும்.

### 10.2 வருடாந்த வரவுசெலவுத் திட்டத்தினை தயாரித்தல்

2019ஆம் ஆண்டிற்கான மத்திய வங்கியின் வருடாந்த வருமானம் மற்றும் செலவின வரவு செலவுத்திட்டமும் மூலதன வரவு செலவுத்திட்டமும் மத்திய வங்கியின் ஒவ்வொரு திணைக்களத்தினதும் உபாயத் திட்டத்தின் கீழான நடவடிக்கைத் திட்டத்துடன் இசைந்து செல்லும் விதத்தில் "அதேநேர வெப்தள வரவு செலவுத்திட்ட முறைமை" இனைப் பயன்படுத்தி தயாரிக்கப்பட்டன. இலங்கை மத்திய வங்கியின் வரவுசெலவுத் திட்டத்திற்கான நாணயச் சபையின் ஒப்புதல் 2018 திசெம்பரில் பெறப்பட்டதுடன் வரவுசெலவுத் திட்டம் 2018இன் முதல் வேலை நாளன்று திணைக்களங்களுக்கு கிடைக்கச் செய்யப்பட்டது. அதேவேளை, வரவுசெலவுத் திட்டக் கட்டுப்பாட்டின் காத்திரமான கண்காணிப்பினைக் கருத்திற்கொண்டு 2018ஆம் ஆண்டிற்கான காலாண்டு ரீதியான வரவுசெலவுத் திட்டச் செயலாற்றக் கூற்றுக்கள் நாணயச் சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டன.

### 10.3 உள்ளக மற்றும் வெளியக நிதியியல் கொடுக்கல்வாங்கல்களுக்கான கொடுப்பனவு முறைமை

i. ஊழியர் ஊதியங்கள், அலுவலர் கடன்கள், தொழிற்பாட்டுச் செலவினங்கள் போன்ற அனைத்து உள்ளகக் கொடுப்பனவுகளும் 2018இல் கொடுப்பனவு முறைமையினால் வசதிப்படுத்தப்பட்டு நேர இலக்குகளுக்குள் மேற்கொள்ளப்பட்டன.

ii. உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வழங்குநர்களுக்கான அனைத்து வெளியகக் கொடுப்பனவுகளும் மத்திய வங்கியின் துணைநில் கட்டளைகளின்கீழ் குறிப்பிடப்பட்ட நடவடிக்கை முறைகளுக்கேற்ப மேற்கொள்ளப்பட்டன. 2018ஆம் ஆண்டுப்பகுதியில் மொத்த கொடுப்பனவுகள் 4,603ஆகக் காணப்பட்டதுடன் இது 4,354 உள்நாட்டு வழங்குநர்களையும் 249 வெளிநாட்டு வழங்குநர்களையும் உள்ளடக்கியிருந்தது.

iii. 2018ஆம் ஆண்டுப்பகுதியில் பொதுத் திறைசேரி மற்றும் தொடர்பான செயற்றிட்டங்களுக்காக ஏறத்தாழ ரூ.3,220.2 பில்லியன் பெறுமதியான 2,753 பகிர்ந்தளிப்புக்களும் வெளிநாட்டுக் கடன்களின் மீள்கொடுப்பனவு மீதான ரூ.2,409.2 பில்லியன் பெறுமதியான 597 தவணைக் கொடுப்பனவுகளும் மேற்கொள்ளப்பட்டன. மேலும், பல்வேறு செயற்றிட்டங்களுக்காக இரண்டு வெளிநாட்டு வங்கிகளுடன் 3 வங்கித்தொழில் ஒழுங்குபடுத்தல்களும் கையொப்பமிடப்பட்டன.

### 10.4 உள்ளக நிதியங்களின் முகாமைத்துவம்

i. நாணயச் சபையினால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்தின் படி, இலங்கை மத்திய வங்கியின் உள்ளக நிதியங்களின் (ஊ.சே.நிதியம் தவிர்ந்த) முதலீடுகளை மத்திய ரீதியில் முகாமை செய்வதற்காக நிதித் திணைக்களத்தின் கீழ் நிறுவப்பட்டு 2016 மாச்சில் தொழிற்பாடுகளை தொடங்கிய தனியலகானது அலுவலர்கள் மற்றும் ஓய்வூதியம் பெற்றவர்களின் 8 ஓய்வூதிய நிதியங்கள், நிதித் திணைக்களத்தினால் நிர்வகிக்கப்படும் 4 ஏனைய நிதியங்கள், தீர்மானம் மற்றும் நடைமுறைப்படுத்தல் திணைக்களத்தினால் நிர்வகிக்கப்படும் வைப்புக் காப்புறுதி மற்றும் திரவத்தன்மை ஆதரவு நிதியம், அலுவலர் பணிகள் முகாமைத்துவ திணைக்களத்தினால் நிர்வகிக்கப்படும் 3 நிதியங்கள் மற்றும் பிரதேச அபிவிருத்தி திணைக்களத்தினால் நிர்வகிக்கப்படும் செயற்றிட்ட நிதியங்கள் என்பனவற்றை உள்ளடக்கி 17 உள்ளக நிதியங்களை முகாமை செய்கின்றது. அனைத்து நிதியங்களும் நிதித் திணைக்களத்தினால் பொது முதலீட்டுக் கொள்கையொன்றின் கீழ் முதலிடப்பட்டதுடன் தொடர்பான உரிமைத் திணைக்களங்கள் அத்தகைய நிதியங்களின் நிர்வாகதாரராகவும் செயற்படுகின்றன. நிதிய முகாமைத்துவ ஆளுகை முறைமையானது, ஒரு சுயாதீனமாகத் தொழிற்படுகின்ற முன் அலுவலகம், மத்திய அலுவலகம் மற்றும் ஒரு பின் அலுவலகம் போன்றவற்றை உள்ளடக்குவதுடன், தீர்மானங்கள் துணை ஆளுநரின் தலைமையிலான உள்ளக முதலீட்டுக் கண்காணிப்புக் குழுவினால் எடுக்கப்படுவதுடன், இக் குழுவானது நிதியங்களின் முதலீடுகளைக் கண்காணித்து ஆலோசனை வழங்குவதற்காக 2018ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் 12 தடவைகள் சந்தித்துக் கொண்டது. முதலீடுகளின் செயலாற்றமானது தகவல் நோக்கங்களுக்காக நாணயச் சபைக்கு மாதாந்தம் அறிக்கையிடப்பட்டன.

ii. நிதியங்கள் முக்கியமாக அரச பிணையங்கள், நிலையான வைப்புக்கள், உயர் வட்டிவீதங்களைக் கொண்ட கம்பனித் தொகுதிக் கடன்கள் மற்றும் குறுங்கால நேர்மாற்று மீள்கொள்வனவுகள் என்பனவற்றில் முதலீடு செய்யப்பட்டன. 2017ஆம் ஆண்டிற்கான ஆறு ஓய்வூதிய நிதியங்களின் கணக்காய்வு செய்யப்பட்ட நிதியியல் கூற்றுக்கள்

இந்நிதியங்களின் விதிகளுக்கிணங்க நாணயச் சபைக்குச் சமர்ப்பிக்கப்பட்டன. 2018 இறுதியிலுள்ளவாறு, மொத்த நிதித்தளம் ரூ.112.84 பில்லியனுக்கு அதிகரித்தது.

அட்டவணை II - 18
நிதிய முகாமைத்துவத்தின் செயலாற்றம் - 2018

(ரூ. பில்)

| திணைக்களம் | 31 திசெம்பர் 2018இல் உள்ளவாறான சொத்துப் பட்டியல் பெறுமதி (முதலிடப்பட்ட பெறுமதி) | 31 திசெம்பர் 2017இல் உள்ளவாறான சொத்துப் பட்டியல் பெறுமதி (முதலிடப்பட்ட பெறுமதி) |
|---|---|---|
| நிதி | 55.16 | 52.22 |
| தீர்மானம் மற்றும் நடைமுறைப்படுத்தல் | 53.96 | 38.47 |
| பிரதேச அபிவிருத்தி | 3.64 | 3.12 |
| அலுவலர் பணிகள் முகாமைத்துவம் | 0.08 | 0.07 |
| மொத்தம் | **112.84** | **93.88** |

### 10.5 நிலையான சொத்துக்களின் பதிவேடுகளைப் பேணுதல்

நிதித் திணைக்களம் பொதுப் பேரேட்டு முறைமையின் நிலையான சொத்து மாதிரியிலுள்ள நிலையான சொத்து பதிவேட்டில் மத்திய வங்கியின் நிலையான சொத்துக்களின் அனைத்துப் பதிவுகளையும் பேணுகின்றது. 2018இல் புதிய கொள்வனவுகள் மற்றும் அமைவிடங்கள், அமைவிடங்களின் மாற்றங்கள், மீள்மதிப்பீடுகள், தேய்மானங்கள் மற்றும் அகற்றல்கள் போன்ற அனைத்து மாற்றங்களும் இப்பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டன. 2018இல் இப்பதிவேடானது 957 விடயங்களின் கொள்வனவுடனும் 606 பொருட்களின் அகற்றல்களுடனும் இற்றைப்படுத்தப்பட்டது.

### 10.6 அலுவலர் கடன்களின் தரவுத் தளத்தைப் பேணுதல்

நிதித் திணைக்களம், 2018ஆம் ஆண்டுப்பகுதியில் கடன்களின் அறவிடல் பதிவு செயன்முறையினை வசதிப்படுத்துவதற்காகவும் ஊழியர்களுக்கும் முகாமைத்துவத்திற்கும் தகவல்களை வழங்குவதற்காகவும் தகவல் தொழில்நுட்பத் திணைக்களத்தின் உதவியுடன் இலங்கை மத்திய வங்கி ஊழியர்களின் கடன் தரவுத் தளத்தை தொடர்ச்சியாக இற்றைப்படுத்தியது. 2018 காலப்பகுதியில் ரூ.1.9 பில்லியன் பெறுமதியான 1,556 கடன்கள் ஊழியர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

### 10.7 ஏனைய தொழிற்பாடுகள் - கொள்வனவுச் செயன்முறை

மத்திய வங்கியின் ஒழுங்குவிதிகளின்படி, நிதித் திணைக்களமானது, பொருட்கள் மற்றும் பணிகளின் கொள்வனவிற்கான அனைத்து தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுக்கள் மற்றும் விலைக்கோரல் சபைகளிலும் நிலையான சொத்துக்களின் அகற்றலுக்கான அளவீட்டுச் சபைகளிலும் கலந்து கொண்டது. கொள்வனவுகள் தொடர்பான ஏறத்தாழ 229 விலைக்கோரல் சபைகள் மற்றும் 84 தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுக்களிலும், நிலையான சொத்துக்களின் அகற்றல் தொடர்பான ஒரு அளவீட்டுச் சபையிலும் ஒரு ஊர்தி அகற்றல் சபையிலும் நிதித் திணைக்களத்தின் அலுவலர்கள் திணைக்களத்தை பிரதிநிதித்துவப்படுத்தினர்.

## 11. நிதியியல் உளவறிதல் பிரிவு

நிதியியல் உளவறிதல் பிரிவு, 2006ஆம் ஆண்டின் 6ஆம் இலக்க நிதியியல் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் சட்டத்தின் கீழ், சுயாதீனமான நியதிச்சட்ட ரீதியான அதிகாரபூர்வமான நிறுவனமாக 2006இல் நிறுவப்பட்டது. நிருவாக நோக்கங்களுக்காக, நிதியியல் உளவறிதல் பிரிவு, நிதியியல் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் சட்டத்தின் கீழ், நிதி அமைச்சரினால் செய்யப்பட்ட கட்டளையொன்றின் நியதிகளின்படி, 2007 மாச்சிலிருந்து இலங்கை மத்திய வங்கிக்குள்ளே ஒரு திணைக்களமாகத் தொழிற்பட்டு வருகின்றது. நிதியியல் உளவறிதல் பிரிவின் முக்கிய தொழிற்பாடுகள், பணம் தூயதாக்கல், பயங்கரவாதத்திற்கு நிதியிடல் மற்றும் நிதியியல் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் சட்டத்தில் வரைவிலக்கணம் செய்யப்பட்டுள்ள சட்டத்திற்குமாறான ஏனைய நடவடிக்கைகளுடன் சாத்தியமான தொடர்புகளைக் கொண்டுள்ள விடயங்களைக் கண்டறியும் நோக்குடன் நிதியியல் கொடுக்கல்வாங்கல்கள் மீதான தகவல்களைச் சேகரித்தல் மற்றும் பெற்றுக்கொள்ளுதல், மேற்குறிப்பிடப்பட்ட சட்டத்திற்குப் புறம்பான நடவடிக்கையுடன் தொடர்பான சந்தேகத்திற்குரிய நிதியியல் கொடுக்கல்வாங்கல்கள் பற்றிய புலனாய்வுகளையும் அத்தகைய பகுப்பாய்வுத் தகவல்களையும் விபரங்களையும் பொருத்தமான நடவடிக்கைகளுக்காக சட்டத்தினை நடைமுறைப்படுத்தும் அதிகாரிகளிடம் வழங்குதல் என்பனவற்றை உள்ளடக்கியிருக்கிறது. மேலும், நிதியியல் உளவறிதல் பிரிவின் தொழிற்பாடுகள் 2006ஆம் ஆண்டின் 5ஆம் இலக்க பணம் தூயதாக்கலைத் தடுத்தல் சட்டம் மற்றும் 2005ஆம் ஆண்டின் 25ஆம் இலக்க பயங்கரவாதத்திற்கு நிதியிடலை ஒடுக்குதல் மீதான சமவாயச் சட்டம் என்பனவற்றின் கீழும் நடைமுறைக்கிடப்படுகின்றன.

### 11.1 தகவல்களைப் பெற்றுக்கொள்ளுதல், பகுப்பாய்வு செய்தல் மற்றும் பரப்புதல்

நிதியியல் உளவறிதல் பிரிவு, பணம் தூயதாக்கல் மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியிடல் மீதான அறிக்கையிடலுக்கு உதவுவதற்கென விசேடமாக வடிவமைக்கப்பட்ட வெப்தள முறைமையான "லங்கா பின்" (Lanka Fin) ஊடாக அறிக்கையிடும் நிறுவனங்களிடமிருந்து சந்தேகத்திற்குரிய கொடுக்கல்வாங்கல்கள் உட்பட, நிதியியல் கொடுக்கல்வாங்கல்கள் மீதான தகவல்களைப் பெற்றுக்கொள்கிறது. உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள், உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள், உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகள், காப்புறுதிக் கம்பனிகள், பங்குத்தரகர்கள் மற்றும் பணம் அல்லது பெறுமதியான மாற்றல் பணிகளை வழங்குவோர் ரூ.1.0 மில்லியன் மற்றும் அதற்கு மேற்பட்ட அல்லது அதற்குச் சமமான வெளிநாட்டு நாணயங்களிலான காசுக் கொடுக்கல்வாங்கல்கள் மற்றும் இலத்திரனியல் நிதிய மாற்றல்களை (உள்நாடு மற்றும் வெளிநாடு இரண்டும்) நிதியியல் உளவறிதல் பிரிவிற்குத் தொடர்ந்தும் அறிக்கையிடுகின்றன. மேலும், சந்தேகத்திற்குரிய கொடுக்கல்வாங்கல் அறிக்கைகள் நிதியியல் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் சட்டத்தின் பிரிவு 7இன் நியதிகளில் அறிக்கையிடும் நிறுவனங்களினால் நிதியியல் உளவறிதல் பிரிவில் கோவைப்படுத்தப்படுகின்றன. இதற்கமைய, 2018ஆம் ஆண்டில் ரூ.11.9 மில்லியனுக்கு மேற்பட்ட காசு/ நிதிய மாற்றல்களும் 1022 சந்தேகத்திற்குரிய கொடுக்கல்வாங்கல் அறிக்கைகளும் அறிவிக்கப்பட்டுள்ளன. மேலும், அதிகாரமளிக்கப்பட்ட நாணய மாற்றுநர்கள் அதிகாரமளிக்கப்பட்ட நாணய மாற்றுநர் துறையினைக் கண்காணித்து ஒழுங்குமுறைப்படுத்துபவரான செலாவணிக் கட்டுப்பாட்டாளரினூடாக கீழ்மட்ட தொகையினை விஞ்சுகின்ற அவர்களின் காசுக் கொடுக்கல்வாங்கல்கள் பற்றி அறிவிக்கின்றனர். 2018இல் நிதியியல் உளவறிதல் பிரிவு, சட்டத்தினை நடைமுறைப்படுத்தும் மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தும் அதிகாரிகளுக்கு மேலதிக விசாரணைகளுக்காக 317 சந்தேகத்திற்குரிய கொடுக்கல்வாங்கல்களை அறிக்கையிட்டது.

### 11.2 அறிக்கையிடும் நிறுவனங்களை ஒழுங்குபடுத்தல்

இடர்நேர்வினை அடிப்படையாக் கொண்ட அணுகுமுறையின் அடிப்படையில் வாடிக்கையாளரை நுணுக்கமாகக் கவனிக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக குறித்துரைக்கப்பட்ட நிதியல்லா வியாபாரங்களுக்கு 2018ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க குறித்துரைக்கப்பட்ட நிதியல்லா வியாபாரங்கள் (வாடிக்கையாளரை நுணுக்ககமாகக் கவனித்தல்) விதிகள் தொடர்பில் 2018 சனவரி 10ஆம் திகதியிடப்பட்ட இல. 2053/20 இலக்கங்கொண்ட வர்த்தமானி (அதிவிசேடம்) வெளியிடப்பட்டது.

மேலும், இவ்வாண்டுப்பகுதியில் நிதியியல் உளவறிதல் பிரிவு பணம் தூயதாக்கல் மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியளித்தல் இடர்நேர்வு முகாமைத்துவம், கசினோ மற்றும் சூதாட்ட இல்லங்களுக்கான பணம் தூயதாக்கலுக்கெதிரான மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியளித்தல் இணங்குவிப்புக் கடப்பாடு, உண்மைச் சொத்து, பெறுமதிமிக்க உலோகங்கள், பெறுமதிமிக்க மற்றும் ஓரளவு பெறுமதிமிக்க கற்கள் என்பனவற்றின் வணிகர்களுக்கான பணம் தூயதாக்கலுக்கெதிரான மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒடுக்குதல் இணங்குவிப்புக் கடப்பாடுகள், பயன்பெறும் சொத்துடைமைகளை அடையாளம் காணுதல், ஐக்கிய நாடுகளின் (கொரிய மக்கள் சனநாயகக் குடியரசு மற்றும் ஈரான் தொடர்பான தடைகள்) தடைகளை நடைமுறைப்படுத்தல் மற்றும் சந்தேகத்திற்குரிய கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் போன்ற விடயங்கள் தொடர்பில் நிதியியல் நிறுவனங்களுக்கும் அதேபோன்று குறித்துரைக்கப்பட்ட நிதியல்லா நிறுவனங்களுக்கும் ஏழு வழிகாட்டல்களை விடுத்தது. இவற்றிற்குப் புறம்பாக, பணம் தூயதாக்கலுக்கெதிரான/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒடுக்குதல் மீதான மேற்பார்வை செயன்முறையினை வலுப்படுத்துவதற்காக இடர்நேர்வினை அடிப்படையாகக் கொண்ட தலத்திலான பரீட்சிப்புக்களை நடத்துகின்ற நடைமுறை தொடர்பில் சுற்றறிக்கையொன்று விடுக்கப்பட்டது.

### 11.3 உள்நாட்டு மற்றும் பன்னாட்டு ஒத்துழைப்பு

#### அ. புரிந்துணர்வு ஒப்பந்தம்

2018இல் நிதியியல் உளவறிதல் பிரிவு, உள்நாட்டு ரீதியாக உந்துஊர்திகள் போக்குவரத்துத் திணைக்களம், இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழு மற்றும் இலங்கை பிணையங்கள் பரிவர்த்தனை ஆணைக்குழு என்பனவற்றுடன் மூன்று புரிந்துணர்வு ஒப்பந்தங்களை கையெழுத்திட்டது. இதற்கமைய உள்நாட்டு முகவர்களுடன் நிதியியல் உளவறிதல் பிரிவு கையொப்பமிட்ட புரிந்துணர்வு ஒப்பந்தங்களின் மொத்த எண்ணிக்கை 2018 இறுதியில் 08 இற்கு அதிகரித்தது.

#### ஆ. எக்மன்ட் குழுமம்

நிதியியல் உளவறிதல் பிரிவு, புலனாய்வுகளை மேற்கொள்வதற்காகவும் உறுப்பு நாடுகளின் புலனாய்வுகள் மீதான சான்றுகளைத் திரட்டிக் கொள்வதற்காகவும், அவர்களுடன் ஒத்துழைப்பினை மேற்கொள்ளும் பொருட்டு உலகளாவிய ரீதியில் 155 உறுப்பினர் நிதியியல் பிரிவுகளை உள்ளடக்கிய நிதியியல் உளவறிதல் சங்கமான எக்மன்ட் குழுமத்திடமிருந்து உதவிகளைப் பெற்றுக்கொண்டது. 2018இல் எக்மன்ட் உறுப்பினர்களுடன் நிதியியல் உளவறிதல் பிரிவு பரிமாறிக் கொண்ட தகவல் நிகழ்வுகளின் மொத்த எண்ணிக்கை 94ஆகக் காணப்பட்டது. முன்னெடுக்கப்படும் புலனாய்வுகள் தொடர்பிலான தகவல்களைப் பகிர்ந்து கொள்வதற்கு இலங்கை நிதியியல் உளவறிதல் பிரிவு, இணைத்தரப்பு நிதியியல் உளவறிதல் பிரிவுகளிடமிருந்து 24 கோரிக்கைகளைப் பெற்றதுடன் இலங்கை நிதியியல் உளவறிதல் பிரிவு, இணைத்தரப்பு நிதியியல் உளவறிதல் பிரிவுகளிடம் 94 கோரிக்கைகளையும் விடுத்தது. மேலும், நிதியியல் உளவறிதல் பிரிவின் அலுவலர்கள், 2018 மாச்சில் ஆஜன்ரீனாவின் புவனஸ் அயர்ஸில் நடைபெற்ற நிதியியல் உளவறிதல் பிரிவுகளின் எக்மன்ட் குழுமத்தின் கூட்டத்திலும் 2018 செத்தெம்பரில் அவுஸ்திரேலியா சிட்னியில் நடைபெற்ற எக்மன்டின் முழுமையான கூட்டத்தொடரிலும் பங்கேற்றுக்கொண்டனர்.

#### இ. பணம் தூயதாக்கல் தொடர்பான ஆசிய பசுபிக் குழுமம்

நிதியியல் உளவறிதல் பிரிவின் அலுவலர்கள் 2018 யூலையில் நேபாளத்தின் காட்மான்டுவில் நடைபெற்ற ஆசிய பசுபிக் குழுமத்தின் முழுமையான மற்றும் தொழில்நுட்ப உதவிக் கூட்டத்தொடரில் பங்கேற்றுக்கொண்டவிடத்து நிதியியல் உளவறிதல் பிரிவின் பணிப்பாளர் 2018 திசெம்பரில் ரூசியாவில் நடைபெற்ற முழுமையான மற்றும் ஆசிய பசுபிக் குழுமத்தின் வரையறைசார்ந்த கோட்பாடுகள் மற்றும் இயலாற்றலைக் கட்டியெழுப்பும் செயலமர்வில் இணைத் தலைமையாளராக பங்கேற்றிருந்தார்.

#### ஈ. பணம் தூயதாக்கலுக்கெதிரான மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒடுக்குதல் தொடர்பான பிம்ஸ்டெக் துணைக் குழுமம்

2018 நவெம்பர் 19-20 காலப்பகுதியில் நேபாளத்தின் காட்மான்டுவில் நடைபெற்ற பல்துறைவாரியான தொழில்நுட்ப மற்றும் பொருளாதார ஒத்துழைப்பிற்கான வங்காளவிரிகுடாவின் பணம் தூயதாக்கலுக்கெதிரான/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒடுக்குதல் மீதான துணைக் குழுமத்தின் 10ஆவது கூட்டத்தில் நிதியியல் உளவறிதல் பிரிவின் அலுவலர்கள் பங்கேற்றனர்.

### 11.4 நிறுவன ரீதியான இயலளவைக் கட்டியெழுப்புதல் மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள்

பணம் தூயதாக்கல் மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியிடலுடன் தொடர்பான கொடுக்கல்வாங்கல்களைக் கண்டுபிடித்தல், அறிக்கையிடல் மற்றும் பகுப்பாய்வு செய்தல் மீதான விழிப்புணர்வினை அதிகரிக்கும் தொடர்ச்சியான முயற்சியாக இவ்வாண்டுப் பகுதியில் 61 விழிப்புணர்வு/ பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் நடத்தப்பட்டதுடன் இதில் உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள், உரிமம்பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள், உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் மற்றும் பணம் அல்லது பெறுமதிமிக்க மாற்றல் சேவைகளை வழங்குவோர் குறித்துறைக்கப்பட்ட நிதியல்லா வியாபாரம் மற்றும் தொழில்சார் நிறுவனங்கள், பங்குத் தரகர்கள் மற்றும் காப்புறுதிக் கம்பனிகள் ஆகியவற்றிலிருந்து 3,258 பங்கேற்பாளர்கள் கலந்துகொண்டனர். பன்னாட்டு நாணய நிதியத்திலிருந்தான நிபுணர்களினால் நடாத்தப்பட்ட பன்னாட்டு நாணய நிதியத்தின் 3ஆம் மற்றும் 4ஆம் தொழில்நுட்ப உதவிச் செயலமர்வுகள் முறையே 2018 பெப்புருவரி 26 - மாச்சு 07 மற்றும் 2018 நவெம்பர் 26 மற்றும் திசெம்பர் 04ஆம் திகதிகளில் நடைபெற்றன. தூதுக்குழுவானது இடர்நேர்வினை அடிப்படையாகக் கொண்ட மேற்பார்வை, நிதியியல் உளவறிதல் பிரிவின் இயலாற்றலை அபிவிருத்தி செய்தல் மற்றும் சட்டவாக்கத் திருத்தங்கள் ஆகிய துறைகளில் இலங்கையில் பணம் தூயதாக்கலுக்கெதிரான/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒடுக்குதல் அமைப்பினை வலுப்படுத்துவதற்கான தொழில்நுட்ப உதவிகளைத் தொடர்ந்தும் வழங்கியது. மேலும், ஐக்கிய அமெரிக்காவின் திறைசேரித் திணைக்களத்திலிருந்தான வதிவிட ஆலோசகரும் நிதியியல் உளவறிதல் பிரிவின் தொழிற்பாட்டின் காத்திரமான தன்மை, நிதியியல் துறை மேற்பார்வை மற்றும் பணம் தூயதாக்கலுக்கெதிரான/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒடுக்குதல் விடய அபிவிருத்தி மற்றும் சொத்து முகாமைத்துவம் ஆகிய துறைகளில் தொடர்ந்தும் தொழில்நுட்ப உதவிகளை வழங்கி வருகின்றார்.

### 11.5 பன்னாட்டு ஒத்துழைப்பு மீளாய்வுக் குழுவின் மீளாய்வு

பன்னாட்டு ரீதியான பணம் தூயதாக்கலுக்கெதிரான/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தல் நியமங்கள் தொடர்பில் பணம் தூயதாக்கலுக்கெதிரான/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒடுக்குதல் இணங்குவிப்பு தொடர்பானவற்றை மதிப்பிடும் நோக்குடன் ஆசிய பசுபிக் குழுமத்தினால் 2014/15 காலப்பகுதியில் 02 ஆவது பரஸ்பர மதிப்பீடொன்று நடைபெற்றது. 2015 யூலையில் மேற்கொள்ளப்பட்ட பரஸ்பர மதிப்பீட்டு அறிக்கை, ஆசிய பசுபிக் குழுமத்தின் விரைவுபடுத்தப்பட்ட மேம்பட்ட பின்தொடர் செயன்முறைகளின் கீழ் இலங்கையினால் நடைமுறைப்படுத்துவதற்கென ஒரு தொகுதி நடவடிக்கைகளை விதந்துரைத்தது. 2016 ஒத்தோபரில், நிதியியல் நடவடிக்கைச் செயலணிக் குழு, பணம் தூயதாக்கலுக்கெதிரான/ பயங்கரவாதத்திற்கு நிதியிடலை ஒழித்தலின் காத்திரமான முன்னேற்றத்தினை மதிப்பிடுவதற்கு இலங்கை நிதியியல் நடவடிக்கை செயலணிக் குழுவின் பன்னாட்டு ஒத்துழைப்பு மீளாய்வுக் குழுவின் மீளாய்வுக்கு உட்படுத்தப்படும் என தெரிவித்தது. பல எண்ணிக்கையான கலந்துரையாடல்கள் மற்றும் முன்னேற்ற அறிக்கைகளின் பின்னர் இலங்கை 4 விடயப்பரப்புக்களில்

அதாவது, பன்னாட்டு ஒத்துழைப்பு, மேற்பார்வை, சட்ட ரீதியான ஆட்கள் மற்றும் ஒழுங்குகள், ஆயுதப்பெருக்கம், (வடகொரியா மற்றும் ஈரான்) மீதான இலக்கிடப்பட்ட நிதியியல் தடைகள் என்பவற்றில் போதியளவு முன்னேற்றமடையவில்லை என நிதியியல் நடவடிக்கை செயலணிக் குழு தெரிவித்தது. இதன் விளைவாக, 2017 ஒத்தோபரில் ஆஜன்ரீனாவின் புவனஸ் அயர்ஸில் இடம்பெற்ற அதன் முழு நிறைவான சமவாயத்தில் நிதியியல் நடவடிக்கை செயலணிக் குழுவானது, நிதியியல் நடவடிக்கை செயலணிக் குழுவின் இணங்குவித்தல் ஆவணத்தில் உபாய பணம் தூயதாக்கலுக்கெதிரான/பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒடுக்குதல் குறைபாடுகளுடன் கூடிய ஆட்சிப் பிரதேசமொன்றாக இலங்கையினை அட்டவணைப்படுத்தியது. பொதுவாக "சாம்பல் பட்டியல்" என அறியப்படுகின்றது. அட்டவணைப்படுத்தப்பட்டதனைத் தொடர்ந்து, இனங்காணப்பட்ட உபாயக் குறைபாடுகளைத் தீர்ப்பதற்கு நேரக் கட்டமைப்பிற்குட்பட்ட நடவடிக்கைத் திட்டமொன்று இலங்கைக்கு வழங்கப்பட்டது.

2017 நவெம்பரில் பட்டியலிடப்பட்டதனைத் தொடர்ந்து இலங்கை அதிகாரிகள், 2018ஆம் ஆண்டின் 06ஆம் இலக்க நம்பிக்கைப் பொறுப்புக் கட்டளைச் (திருத்த) சட்டம் 2018ஆம் ஆண்டின் 24ஆம் இலக்க குற்றவியல் விடயங்கள் தொடர்பில் பரஸ்பர உதவிகள் (திருத்த) சட்டம் என்பனவற்றை நிறைவேற்றியமை உட்பட, கொரிய சனநாயக சோசலிசக் குடியரசு மற்றும் ஈரான் மீதான ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையின் தீர்மானங்களை நடைமுறைப்படுத்துவது மீதான ஒழுங்குவிதிகள்/ பணிப்புரைகள்/ வழிகாட்டல்களை வழங்குதல், குறித்துரைக்கப்பட நிதியல்லா வியாபாரங்கள் மற்றும் தொழில்சார் துறைகளை உள்ளடக்கத்தக்க விதத்தில் பணம் தூயதாக்கலுக்கெதிரான பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒடுக்குதல் வாடிக்கையாளரை நுணுக்கமாகக் கவனித்தல் விதிகளை விடுத்ததன் மூலம் தொழில்சார் தன்மையினை மேம்படுத்தல் இடர்நேர்வினை அடிப்படையாகக் கொண்ட மேற்பார்வையினை நடைமுறைப்படுத்தல், நடைமுறைக்கிடும் நடவடிக்கைகள் மற்றும் நிறுவனங்கள் மற்றும் குறித்துரைக்கப்பட்ட நிதியல்லா வியாபார மற்றும் தொழில்சார் விடயங்களை சென்றடையும் தன்மை உட்பட நிதியியல் நடவடிக்கைகள் செயலணிக் குழுவின் நடவடிக்கைத் திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்கு காத்திரமானதும் புலனாகக்கூடியதுமான நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கின்றனர்.

நிதியியல் நடவடிக்கைச் செயலனிக்குழு ஆசிய பசுபிக் கூட்டுக் குழுவினூடாக நடவடிக்கைத் திட்டத்தின் நடைமுறைப்படுத்தலில் காணப்படும் இலங்கையின் முன்னேற்றத்தினை மதிப்பிட்டது. இலங்கையினால் அடையப்பட்ட முன்னேற்றம் தொடர்பில் முறையே 2018 சனவரி, மே மற்றும் செத்தெம்பர் காலப்பகுதியில் ஆசிய பசுபிக் கூட்டுக் குழுவிற்கு இம்முன்னேற்ற அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டு நேருக்கு நேர் கலந்துரையாடல்கள் இடம்பெற்றன. ஆசிய பசுபிக் கூட்டுக் குழு இலங்கையினால் அடையப்பெற்ற முன்னேற்றத்தினை ஏற்றுக்கொண்டது. எனவே, 2019 நடுப்பகுதியளவில் சாமபல் பட்டியலிலிருந்து இலங்கை நீக்கப்பட்டுவிடுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

## 12. வெளிநாட்டுச் செலாவணி

இலங்கையில் வெளிநாட்டுச் செலாவணியினை உரிய வகையில் ஊக்குவித்து ஒழுங்குபடுத்துவதனை உறுதிசெய்வதற்காக இலங்கை அரசின் முகவராகத் தொழிற்படுகின்ற இலங்கை மத்திய வங்கியினால் வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் ஏற்பாடுகளினை அமுல்படுத்தும் நோக்கில் 2017இன் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் 2 ஆம் பிரிவு நியதிகளுக்கமைய 2017 நவெம்பர் 20 அன்று வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களம் தாபிக்கப்பட்டது.

திணைக்களத்திற்கு ஒப்படைக்கப்பட்டுள்ள தொழிற்பாடுகளை நிறைவேற்றுவதில், வெளிநாட்டுச் செலாவணி திணைக்களமானது வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் நியதிகளுக்கமைய வெளிநாட்டுச் செலாவணியினை கையாளுவதற்கு ஆட்களுக்கு அதாவது அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள், மட்டுப்படுத்தப்பட்ட வணிகர்கள் அத்துடன் அமைச்சினால் குறித்துரைக்கப்பட்ட வேறு ஆட்களுக்கு அதிகாரமளிக்கின்றது, அவசியமான அனுமதியுடன் வெளிநாட்டுச் செலாவணியுடன் தொடர்புடைய ஒழுங்குவிதிகள், கட்டளைகள் மற்றும் பணிப்புரைகளை வசதிப்படுத்துகின்றது, தொடர்புடைய அதிகாரமளிக்கப்பட்ட ஆட்கள், அத்தகைய ஒழுங்குவிதிகள், கட்டளைகள் மற்றும் பணிப்புரைகளுடனான இணங்குவித்தலினைக் கண்காணிக்கின்றது அத்துடன் வெளிநாட்டு செலாவணிச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் இணங்காமையின் மீது புலனாய்வுகளை நடாத்துகின்றது.

அதற்கமைய, பின்வரும் பிரதான தொழிற்பாடுகளை வினைத்திறன்மிக்கவாறும் செயல்திறன்மிக்க விதத்திலும் செயலாற்றும் பொருட்டு திணைக்களமானது மூன்று பிரிவுகளாக அதாவது, கொள்கை மற்றும் ஆராய்ச்சிப் பிரிவு, மூலதன கொடுக்கல்வாங்கல் பிரிவு மற்றும் புள்ளிவிபரவியல், கண்காணிப்பு மற்றும் விசாரணைப் பிரிவு என ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது. 2018இல் வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்ட பிரதான செயற்பாடுகளின் சுருக்கம் கீழே தரப்பட்டுள்ளது.

### 12.1 வெளிநாட்டுச் செலாவணிச் சட்டம் மற்றும் 2017இல் அதன் கீழ் வழங்கப்பட்ட ஒழுங்குவிதிகள், பணிப்புரைகள் மற்றும் கட்டளை என்பவற்றை மீளாய்வு செய்தல், அரச வர்த்தமானியில் வெளியிடுதலை வசதிப்படுத்தல் மற்றும் புதிய ஒழுங்குவிதிகள், பணிப்புரைகள் மற்றும் கட்டளைகள் என்பவற்றை வழங்குதல்

#### அ) வெளிநாட்டுச் செலாவணிச் சட்டம் மற்றும் அதன்கீழ் 2017இல் வழங்கப்பட்ட ஒழுங்குவிதிகள், பணிப்புரைகள் மற்றும் கட்டளைகளை மீளாய்வு செய்தல்

வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களமானது நீக்கப்பட்ட செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டம் மற்றும் வெளிநாட்டுச் செலாவணிச் சட்டம் என்பவற்றின் ஏற்பாடுகளைத் தொடர்ச்சியாக மீளாய்வுசெய்து இடைவெளிகளை இணங்காண்கின்ற அதேவேளை வெளிநாட்டுச் செலாவணி கொடுக்கல்வாங்கல்களைக் கையாளுவதில் ஈடுபடுகின்ற செயன்முறைகள் மற்றும் நடைமுறைகளை மேலும் இலகுபடுத்தி நாட்டிலிருந்து அவசியமற்ற வெளிநாட்டுச் செலாவணி வெளிப்பாய்ச்சலுக்கும் நாணயக் கடத்தலுக்கும் வழிவகுக்கக்கூடிய இலங்கையினுள் வெளிநாட்டுச் செலாவணியினைச் சட்டத்திற்கு புறம்பாக உடைமையில் வைத்திருத்தல், மாற்றல்செய்தல் மற்றும் பரிமாற்றம் போன்ற வெளிநாட்டுச் செலாவணியினை ஈடுபடுத்துகின்ற அதிகாரமளிக்கப்படாத நடவடிக்கைகளை எதிர்த்துப் போராடுவதற்கு விசாரணைகளையும் அமுல்படுத்தத்தக்க தடைகளையும் கொண்டு நடாத்துவதற்கான ஏற்பாடுகள் உள்ளடங்கலாக வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்திற்கு ஆக்கப்படவுள்ள அவசியமான திருத்தங்கள் மீது அத்தகைய பரிந்துரைகளை இலங்கை அரசாங்கத்திற்குச் சமர்ப்பித்தது.

2017இல் வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட ஒழுங்குவிதிகள், கட்டளைகள் மற்றும் பணிப்புரைகள் என்பன பிரதானமாக அத்தகைய ஒழுங்குவிதிகள், கட்டளைகள் மற்றும் பணிப்புரைகள் போன்றவற்றினை மேலும் இலகுபடுத்தவும் தெளிவினை அதிகரிப்பதனையும் மையப்படுத்தி பங்குதாரர்களிடமிருந்து பெறப்பட்ட பின்னூட்டலுடன் கூட்டிணைப்பதற்கு மீளாய்வு செய்யப்பட்டன.

#### ஆ) அரச வர்த்தமானி அறிவித்தல்களின் வழங்கலினை வசதிப்படுத்தல்

2018இல் நாட்டிற்கான பன்னாட்டு முறிகளை வழங்குவதற்கும் வதிவற்ற முதலீட்டாளர்களுக்கு அத்தகைய வழங்கல் தொடர்பில் ஏதேனும் கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்கும் இலங்கை அரசாங்கத்திற்கு அனுமதி வழங்குகின்ற 2018.03.19 ஆம் திகதியிடப்பட்ட 2063/12ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலினை வழங்குவதற்கு வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களம் வசதியளித்தது. இவ்வர்த்தமானியானது இவ்வறிக்கையின் பகுதி III இல் காணப்படுகிறது.

#### இ) அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கு பணிப்புரைகளை வழங்கல்

வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் கீழ் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கு 2018இல் வழங்கப்பட்ட இரண்டு பணிப்புரைகளும் இவ்வறிக்கையின் பகுதி IIIஇல் வழங்கப்பட்டிருப்பதுடன் அதன் சுருக்கம் பின்வருமாறு:

- 2018இன் 01ஆம் இலக்க பணிப்புரை: செலாவணி வீதம் மீதான பாதகமான தாக்கத்தினைக் குறைப்பதற்கு இறக்குமதிகளைக் கட்டுப்படுத்துவதற்காக இலங்கை மத்திய வங்கியினால் அறிமுகப்படுத்தப்பட்ட பல்வேறு வழிமுறைகளுடன் சேர்த்து மறு அறிவித்தல் வரை முற்பணக்கொடுப்பனவு (காசாக முற்கொடுப்பனவு) நியதிகளின் கீழ் சில அத்தியாவசியமற்ற நுகர்வுப்பொருட்களின் இறக்குமதிக்கான கொடுப்பனவுகளை மேற்கொள்ளுவதற்காக இலங்கை ரூபா பரிமாற்றத்தினை ஈடுபடுத்துகின்ற பொருள் இறக்குமதியாளர்களுக்கு வெளிநாட்டுச் செலாவணியினை விடுவிக்கவேண்டாம் என அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கு அறிவிக்கப்பட்டது.

- 2018இன் 02ஆம் இலக்க பணிப்புரை: வதிவற்ற இடைத்தரகர் ஒருவரினால் இலங்கையில் பேணப்படுகின்ற கணக்கொன்றின் ஊடாக வெளிநாட்டு நிறுவன ரீதியான முதலீட்டாளர்கள் மூலமான முதலீடுகளுடன் தொடர்புடைய கொடுக்கல்வாங்கல்களினை வசதிப்படுத்துவதற்கு அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டது.

**12.2 வெளிநாட்டுச் செலாவணிக் கொடுக்கல்வாங்கல்களுக்காக அனுமதியினை வழங்கல்**

**அ) கீழே அட்டவணை II-19 குறித்துரைக்கப்பட்டுள்ளவாறு வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட சிறப்பு அனுமதிகள்**

**அட்டவணை II-19**
**வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட சிறப்பு அனுமதிகள்**

| நோக்கம் | அனு-மதிகளின் எண்ணிக்கை | பெறுமதி ஐ.அ.டொலர் மில்லியன் |
|---|---|---|
| இலங்கை அரசு நாட்டிற்கான உத்தரவாதமொன்றை வழங்குவதற்கு | 1 | 58.19 |
| இலங்கை அரசு வெளிநாட்டிலிருந்து கடன் பெறுவதற்கு | 8 | 1,272.64 |
| வதியும் கம்பனிகள் வெளிநாட்டில் முதலிடுவதற்கு | 6 | 44.17 |
| வதியும் கம்பனிகள் வெளிநாட்டிலிருந்து கடன் பெறுவதற்கு | 3 | 2,001.69 |
| வதியும் கம்பனிகள் இலங்கைக்கு வெளியே வதிபவர்கள் சார்பில் வங்கி/ நிறுவன உத்தரவாதங்களை வழங்குவதற்கு | 5 | 41.45 |
| அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் சிறப்பு வெளிநாட்டு நாணயக் கணக்குகளைத் திறந்து பேணுவதற்கு | 42 | பொருத்தமற்றது |
| அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட அனுமதியின் கீழ் பொதுவான அனுமதிகளில் உள்ளடக்கப்படாத குறிப்பிட்ட நானாவித வெளிநாட்டுச் செலாவணிக் கொடுக்கல்வாங்கல்களை செயன்முறைபடுத்துவதற்கு | 283 | பொருத்தமற்றது |

**ஆ) நாணயமாற்று வியாபாரம் தவிர மட்டுப்படுத்தப்பட்ட வணிகர்களுக்கு அனுமதி வழங்குதல்**

வெளிநாட்டு செலாவணிச் சட்டத்தின் 4ஆம் பிரிவின் நியதிகளுக்கமைய இலங்கையினுள் வெளிநாட்டுச் செலாவணியினைக் கையாளுவதற்கான எம்எம்பிஎல் மணி ட்ரான்ஸ்பர் (பிறைவேட்) லிமிடெட் மற்றும் இலங்கை ஏற்றுமதி கொடுகடன் காப்புறுதிக் கூட்டுத்தாபனம் என்பன மட்டுப்படுத்தப்பட்ட வணிகர்களாக ஆண்டுக்காலப்பகுதியில் அதிகாரமளிக்கப்பட்டன. எம்எம்பிஎல் மணி ட்ரான்ஸ்பர் (பிறைவேட்) லிமிடெட்டிற்கு வெஸ்டன் யூனியன் பணப்பறிமாற்றல் முறைமையின் ஊடாக மாதமொன்றுக்கு ஆளொருவருக்கு ஐ.அ.டொலர் 500 கொண்ட உயர்ந்தபட்ச வரையறையொன்றுக்குட்பட்டு அவர்களது வெளிநாட்டிலுள்ள பயன்பெறுநர்களுக்கு புலம்பெயர்ந்த தொழிலாளர்களின் சம்பளங்களின் வெளிமுக பணவலுப்பல்களை மேற்கொள்ளுவதற்கு அதிகாரமளிக்கப்பட்டது. உள்நாட்டு ஏற்றுமதியாளர்களின் கணக்கின் மீது அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கு வெளிநாட்டு நாணயத்தில் முந்திய/ பிந்திய கப்பல் சரக்கு கொடுகடன் உத்தரவாதங்களை வழங்குவதற்கு இலங்கை ஏற்றுமதி கொடுகடன் காப்புறுதி கூட்டுத்தாபனத்திற்கு அதிகாரமளிக்கப்பட்டது.

**இ) நாணயமாற்று வியாபாரத்தில் ஈடுபடுவதற்கு மட்டுப்படுத்தப்பட்ட வணிகர்களுக்கு அனுமதிப் பத்திரங்களை வழங்கல் மற்றும் அத்தகைய தொழிற்பாடுகளை நிறுத்துதல்/ முடிவுறுத்துதல்**

- 2018இல் வெளிநாட்டு நாணயத்தைக் கொள்வனவு செய்வதற்கும் பரிமாற்றுவதற்கும் 02 வரையறுக்கப்பட்ட கம்பனிகளுக்கும் (அதாவது நாணய மாற்றுநர்கள்), வெளிநாட்டு நாணயத்தை கொள்வனவு செய்வதற்கு 02 சுற்றுலா விடுதிகளுக்கும் மற்றும் வெளிநாட்டு நாணயத்தை கொள்வனவு, விற்பனை மற்றும் பரிமாற்றம் செய்வதற்காக 01 உரிமம்பெற்ற நிதிக் கம்பனிக்கும் 05 புதிய அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்பட்டன.

- 03 ஏற்கனவேயுள்ள நாணயமாற்றுநர்களுக்கு 03 புதிய கிளைகளைத் திறப்பதற்கும் அனுமதி வழங்கப்பட்டது.

- 2018ஆம் ஆண்டில் ஒரு நாணயமாற்றுநர் தனது தொழிற்பாடுகளை முழுமையாக நிறுத்திக் கொண்ட அதேவேளை இரண்டு வேறு நாணயமாற்றுநர்கள் இரண்டு கிளைகளில் தமது தொழிற்பாடுகளை நிறுத்திக்கொண்டனர்.

- நாணயமாற்று வியாபாரத்தில் ஈடுபடுவதற்கு ஒவ்வொரு மட்டுப்படுத்தப்பட்ட வணிகருக்கும் வழங்கப்பட்டுள்ள அனுமதிப் பத்திரங்களின் நிலை அட்டவணை **II-20** குறிப்பிடப்பட்டுள்ளது.

**அட்டவணை II-20**
**நாணயமாற்று வியாபாரத்தில் ஈடுபடுவதற்கு மட்டுப்படுத்தப்பட்ட வணிகர்களுக்கு வழங்கப்பட்ட அனுமதிகள்**

| நிறுவனங்களின் வகை | அனுமதிக்கப்பட்ட வியாபாரம் | வழங்கப்பட்ட அனுமதிப் பத்திரங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| நாணயமாற்று வியாபாரத்தில் பிரத்தியேகமாக ஈடுபட்டுள்ள வரையறுக்கப்பட்ட கம்பனிகள் (நாணயமாற்றுநர்கள்) | வெளிநாட்டுச் செலாவணியினை கொள்வனவு மற்றும் பரிமாற்றம் செய்தல் | 58* |
| | வெளிநாட்டுச் செலாவணியினை கொள்வனவு, விற்பனை மற்றும் பரிமாற்றம் செய்தல் | |
| உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் | வெளிநாட்டுச் செலாவணியினை கொள்வனவு, விற்பனை மற்றும் பரிமாற்றம் செய்தல் | 09 |
| சுற்றுலா விடுதிகள் | வெளிநாட்டுச் செலாவணியினை கொள்வனவு செய்தல் | 05 |
| மொத்தம் | | 72 |

* 58 கம்பனிகளுக்கு வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரங்கள் 67 நாணயமாற்று நிலையங்கள்/ கிளைகளை உள்ளடக்குகின்றது. அவ் 67 நிலையங்களில் வெளிநாட்டுச் செலாவணியினை கொள்வனவு செய்வதற்கும் பரிமாற்று செய்வதற்கும் 55 நிலையங்கள் அனுமதிக்கப்பட்டிருந்த அதேவேளை வெளிநாட்டுச் செலாவணியின் கொள்வனவு, விற்பனை மற்றும் பரிமாற்றம் செய்வதற்கு எஞ்சியுள்ள 12 நிலையங்கள் அனுமதிக்கப்பட்டன.

இதன்படி, 2018 திசெம்பர் 31இல் உள்ளவாறு 28 அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களும் எம்எம்பிஎல் மற்றும் இலங்கை ஏற்றுமதி கொடுகடன் காப்புறுதிக் கம்பனி உள்ளடங்கலாக 74 வரையறுக்கப்பட்ட வணிகர்களும் தொழிற்பட்டதுடன் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் மற்றும் வரையறுக்கப்பட்ட வணிகர்களின் அட்டவணை முறையே இணைப்பு I-அ மற்றும் I-ஆ இல் தரப்பட்டுள்ளன.

**ஈ) புலம்பெயர்ந்தோரின் நிதியங்களின் மாற்றல்கள்**

புலம்பெயர் இலங்கையர்களுக்கு புலம்பெயர் முற்கொடுப்பனவுகளை விடுவித்தல் மற்றும் இலங்கையரல்லாதோருக்கு பரம்பரை நிதிகளின் அனுப்பல்களை உறுதிப்படுத்தல் தொடர்பில் 2403 மூலதனக் கொடுக்கல் வாங்கல் ரூபாக் கணக்குகளைத் திறப்பதற்கு அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் ஆண்டுக் காலப்பகுதியில் அனுமதிக்கப்பட்டனர்.

**12.3 வெளிநாட்டுச் செலாவணிக் கொடுக்கல்வாங்கல்களின் மேற்பார்வை மற்றும் கண்காணிப்பு/ விசாரணை**

**அ) தளத்திலான பரிசோதனைகள்**

மட்டுப்படுத்தப்பட்ட வணிகர்களுக்கு வழங்கப்பட்ட தொடர்புடைய அனுமதிப் பத்திரங்களில் குறித்துரைக்கப்பட்டுள்ள நியதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கமைய அவர்களின் இணங்குவித்தல் நிலையினை உறுதிப்படுத்தும் பொருட்டு 28 தளத்திலான மேற்பார்வைகள் மேற்கொள்ளப்பட்டன.

**ஆ) விசாரணைகள்**

- வெளிநாட்டுச் செலாவணி ஒழுங்குவிதிகளுடன் இணங்கி ஒழுகாமை மீது நீக்கப்பட்ட 1953ஆம் ஆண்டின் 24ஆம் இலக்க செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் ஆரம்பிக்கப்பட்ட 209 விசாரணைகள் 2018இன் ஆரம்பத்தில் முடிவுறாது காணப்பட்டன. வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் 30 (2) (ஆ) ஆம் பிரிவின் நியதிகளுக்கமைய செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் நியதிகளுக்கமைவான உரிய விசாரணை நடைமுறையினைத் தொடர்ந்து 52 விசாரணைகள் பூர்த்தி செய்யப்பட்டதுடன் அத்தகைய விசாரணைகளின் தொடர்புடைய தரப்பினர்களுக்கு எதிராக விதிக்கப்பட்ட தண்டப்பணங்களாக ரூபா 2.56 மில்லியன் திரட்டு நிதியத்திற்கு அனுப்பப்பட்டது.
- மிகுதி 157 விசாரணைகளும் வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் 30 (2) (ஆ) ஆம் பிரிவிற்கமைய 2018.05.19இல் கைவிடப்பட்டன. பெரும்பாலான விசாரணைகள் பிணையங்கள்/ பங்குகள் வழங்கல் மற்றும் உரிமை மாற்றம் தொடர்பில் பொது அனுமதியில் குறிப்பிடப்பட்டுள்ள நடைமுறைகளுடன் இணங்கியொழுகாமை, வதிவோரினால் வதிவற்றோருக்கான அதிகாரமளிக்கப்படாத கொடுப்பனவுகள், செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட பணிப்புரைகள்/ தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களுடன் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் இணங்கியொழுகாமை, அதிகாரமளிக்கப்பட்ட நாணயமாற்றுநர்களுக்கு வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரத்தின் நிபந்தனைகளை மீறுதல் மற்றும் வெளிநாட்டு நாணயங்களை அதிகாரமின்றி உடமையில் வைத்திருத்தல் போன்றன தொடர்பானதாகவிருந்தன.
- மேலும், 2018ஆம் ஆண்டில் வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் 03 விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டதுடன் அத்தகைய விசாரணைகள் அதே ஆண்டில் முடிவுக்கும் கொண்டுவரப்பட்டன.

**இ) மேலும், திணைக்களத்தினால் நிபுணத்துவச் சான்றுகள்/ அத்தாட்சிகள் வழங்குவதன் மூலம் வழக்காடல்கள் மற்றும் நீதிமன்ற நடவடிக்கைகளில் சட்ட அமுலாக்கல் அதிகாரிகளுக்கு மேலும் உதவி வழங்கப்பட்டன.**

**12.4 வெளிநாட்டுச் செலாவணி ஒழுங்குவிதிகள் மீது விழிப்புணர்வை வலுப்படுத்தல்**

அ) வாடிக்கையாளர் சேவையினை வினைத்திறனுடன் வழங்குகின்ற அதேவேளை நாளாந்த வெளிநாட்டுச் செலாவணித் தொழிற்பாடுகளிலும் கொடுக்கல்வாங்கல்களிலும் தகைமையுடையவர்களாகவும் செயற்திறனுடனும் ஈடுபடுவதற்கு அவர்களை இயலச் செய்கின்ற தற்போதுள்ள ஒழுங்குவிதிகள் தொடர்பாக வங்கிகளின் அலுவலர்களின் அறிவினை அதிகரிக்கும் பொருட்டு இலங்கை மத்திய வங்கியின் வங்கித் தொழில் கற்கைகள் நிலையம் மற்றும் இலங்கை வங்கியியலாளர்களின் நிறுவகம் என்பவற்றுடன் இணைந்து பொதுவான வெளிநாட்டுச் செலாவணி ஒழுங்குவிதிகள் மீது 05 விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்கள/ விரிவுரைகள் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கு நடாத்தப்பட்டது.

ஆ) வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் ஏற்பாடுகள் மற்றும் வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் ஒழுங்குவிதிகள் மீதான அண்மைய தளர்த்தல்கள் தொடர்பாக தொழில்சார் வங்கியாளர்களின் அமைப்பு, இலங்கை வர்த்தக சம்மேளனம், வருமான வரி செலுத்துவோர் சங்கம், பொலிஸ் சுற்றுலாப் பிரிவு, இலங்கை கணக்கீட்டு தொழில்நுட்பவியலாளர் சங்கம், இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் மற்றும் பட்டய முகாமைத்துவக் கணக்காளர்களின் நிறுவகம் என்பவற்றுடன் இணைந்து தொழில்சார் நிபுணத்துவர்கள்/ தொழில்துறை பங்காளர்கள் மற்றும் பொது மக்களுக்கு 09 எடுத்துரைப்புகள்/ குழுக் கலந்துரையாடல்கள் மற்றும் கருத்தரங்குகள் நடாத்தப்பட்டன.

இ) வெளிநாட்டுச் செலாவணிக் கொடுக்கல்வாங்கல்களின் அண்மைய தளர்த்தல்கள் தொடர்பாக அறிவினை மேம்படுத்தும் நோக்குடன் வங்கியாளர்கள், நாணய மாற்றுநர்கள் மற்றும் ஏனைய ஆர்வமுடைய தரப்பினர்களுக்கு இலங்கை மத்திய வங்கியின் பிரதேச அலுவலக முகாமைத்துவத் திணைக்களத்துடன் கூட்டிணைந்து 04 கருத்தரங்குகள்/ செயலமர்வுகள் நடத்தப்பட்டன.

ஈ) வெளிநாட்டுச் செலாவணி ஒழுங்குவிதிகள் தொடர்பாக பொதுமக்களின் விழிப்புணர்வை அதிகரிப்பதற்கு வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ வெப்தளம் (றறற. னகந.டம) உரியவாறு முழுமையாக இற்றைப்படுத்தப்பட்டதுடன் மின்னஞ்சல்கள், தொலைபேசி அழைப்புக்கள் மற்றும் திணைக்கள வருகைகள் மூலம் எழுப்பப்பட்ட வினாக்களுக்கும் வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களம் முழுமையான விளக்கத்தினை தொடர்ந்தும் வழங்கியது.

**இணைப்பு II - 2**

**2018.12.31இல் உள்ளவாறு அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களின் பட்டியல்**

| உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கிகள் | |
|---|---|
| 1 | அமானா பாங்க் பிஎல்சி |
| 2 | அக்சிஸ் பாங்க் பிஎல்சி |
| 3 | இலங்கை வங்கி |
| 4 | பாங்க் ஒவ் சைனா லிமிடெட் |
| 5 | கார்கில்ஸ் பாங்க் லிமிடெட் |
| 6 | சிற்றி பாங்க், என். எ |
| 7 | கொமர்சல் பாங்க் ஒவ் சிலோன் பிஎல்சி |

| | |
|---|---|
| 8 | டொய்ச் பாங்க் எ ஜி |
| 9 | டிஎவ்சிசி பாங்க் பிஎல்சி |
| 10 | ஹபிப் பாங்க் லிமிடெட் |
| 11 | ஹற்றன் நசனல் பாங்க் பிஎல்சி |
| 12 | ஐசிஐசிஐ பாங்க் லிமிடெட் |
| 13 | இந்தியன் வங்கி |
| 14 | இந்தியன் ஓவசீஸ் பாங்க் |
| 15 | எம்சிபி பாங்க் லிமிடெட் |
| 16 | நசனல் டிவலப்மன்ட் பாங்க் பிஎல்சி |
| 17 | நேசன்ஸ் ரஸ்ட் பாங்க் பிஎல்சி |
| 18 | பான் ஏசியா பாங்கிங் கோப்பிரேசன் பிஎல்சி |
| 19 | மக்கள் வங்கி |
| 20 | பப்ளிக் பாங்க் பெர்ஹெட் |
| 21 | சம்பத் பாங்க் பிஎல்சி |
| 22 | செலான் பாங்க் பிஎல்சி |
| 23 | ஸ்ரான்டேர்ட் சார்ரட் பாங்க் |
| 24 | ஸ்ரேற் பாங்க் ஒவ் இந்தியா |
| 25 | த ஹொங்கொங் அன்ட் சங்காய் பாங்கிங் கோப்பிரேசன் லிமிடெட் |
| 26 | யூனியன் பாங்க் ஒவ் கொழும்பு பிஎல்சி |
| **உரிமம்பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள்** | |
| 27 | தேசிய சேமிப்பு வங்கி |
| 28 | சனச டிவலப்மன்ட் பாங்க் பிஎல்சி |

**இணைப்பு II - 3**

**2018.12.31இல் உள்ளவாறு மட்டுப்படுத்தப்பட்ட**

**வணிகர்களின் பட்டியல்**

| | |
|---|---|
| **வெளிநாட்டு செலாவணியை கொள்வனவு செய்வதற்கும் பரிமாற்றுவதற்கும் அனுமதிக்கப்பட்ட மட்டுப்படுத்தப்பட்ட வணிகர்கள்** | |
| **நாணய மாற்றுநர்கள்** | |
| 1 | எ. ஓ. லக்ஷ்மி ஜுவல்ஸ் (பிறைவேற்) லிமிடெட் |
| 2 | அப்டீன் மணி சேஞ்சேர்ஸ் (பிறைவேற்) லிமிடெட் |
| 3 | ஆரியவன்ச என்ரபிறைசஸ் (பிறைவேற்) லிமிடெட் |
| 4 | அருணா பொறக்ஸ் (பிறைவேற்) லிமிடெட் |
| 5 | ஏசியன் மணி எக்சேஞ் (பிறைவேற்) லிமிடெட் |
| 6 | பிரசிகா கிராமின் (பிறைவேற்) லிமிடெட் |
| 7 | புள்ளியன் மணி எக்சேஞ் (பிறைவேற்) லிமிடெட் |
| 8 | கப்பிட்டல் எக்சேஞ் (பிறைவேற்) லிமிடெட் |
| 9 | காலோ இன்ரனஷனல் (பிறைவேட்) லிமிடெட் |
| 10 | கொழும்பு மணி எக்சேஞ் (பிறைவேற்) லிமிடெட் - கொழும்பு 01 |
| 11 | டெடிகம குறூப் (பிறைவேற்) லிமிடெட் |
| 12 | டேற்றா எக்சேஞ் இன்ரநஷனல் (பிறைவேற்) லிமிடெட் |
| 13 | டயா ஒதோரைஸ்ட் மணி சேஜ்சேர் (பிறைவேற்) லிமிடெட் |
| 14 | டெல்ரா சரத் ஹோல்டிங்ஸ் (பிறைவேற்) லிமிடெட் |
| 15 | கோல் மணி எக்சேஞ் (பிறைவேற்) லிமிடெட் |
| 16 | ஜோர்ஜ் மைக்கல் ஹோல்டிங்ஸ் (பிறைவேற்) லிமிடெட் |
| 17 | குளோபல் விலேஜ் எக்சேஞ் (பிறைவேற்) லிமிடெட் |
| 18 | கோல்டன் மணி சேஜ்சேர்ஸ் (பிறைவேற்) லிமிடெட் |
| 19 | இன்ரநஷனல் எக்சேஞ் (பிறைவேற்) லிமிடெட் |
| 20 | ஜேயஸ் இன்வெஸ்ட்மென்ற் லிமிடெட் |
| 21 | ஜுவல் லங்கா மணி எக்சேஞ் (பிறைவேற்) லிமிடெட் |
| 22 | கமல் என்ரபிறைசஸ் (பிறைவேற்) லிமிடெட் |
| 23 | கெயிசர் எக்சேஞ் (பிறைவேற்) லிமிடெட் |
| 24 | குடாமடு மணி எக்சேஞ் (பிறைவேற்) லிமிடெட் |
| 25 | எம் பி மணி சேஞ்சேர் (பிறைவேற்) லிமிடெட் |
| 26 | மஜஸ்ரிக் ஜுவல்லரி (பிறைவேற்) லிமிடெட் |
| 27 | மாறுதி மணி எக்சேஞ் (பிறைவேற்) லிமிடெட் - யாழ்ப்பாணம் |
| 28 | மயூரி மணி சேஞ்சேர்ஸ் (பிறைவேற்) லிமிடெட் |
| 29 | மிட்னா மினி மார்க்கட் (பிறைவேற்) லிமிடெட் |
| 30 | மிலானோ மணி எக்சேஞ் (பிறைவேற்) லிமிடெட் |
| 31 | மொன்ரி கார்லோ எக்சேஸ் (பிறைவேற்) லிமிடெட் |
| 32 | நர்மதா கோல்ட் சென்ரர் (பிறைவேற்) லிமிடெட் |
| 33 | நியு நட்டாஷா (பிறைவேற்) லிமிடெட் |
| 34 | நியு றீகல்ஸ் மணி சேஞ்சேர் (பிறைவேற்) லிமிடெட் |
| 35 | பேர்ள் எக்சி (பிறைவேற்) லிமிடெட் |
| 36 | றபீக் ஜெம்ஸ் (பிறைவேற்) லிமிடெட் |
| 37 | நிம்ஹா ஜுவல்லறி (பிறைவேற்) லிமிடெட் |
| 38 | நிவின்டு என்ரபிறைசஸ் (பிறைவேற்) லிமிடெட் |
| 39 | றோயல் மணி எக்ஸ்சேஞ் (பிறைவேற்) லிமிடெட் - கொழும்பு 01 |
| 40 | றோயல் மணி எக்ஸ்சேஞ் (பிறைவேற்) லிமிடெட் - கொழும்பு 06 |
| 41 | றோயல் மணி மார்ட் (பிறைவேற்) லிமிடெட் - அளுத்கம |
| 42 | றோயல் மணி மார்ட் (பிறைவேற்) லிமிடெட் - கொழும்பு 01 |
| 43 | சலாக்கா ரஸ்ட் இன்வெஸ்ட்மென்ற் (பிறைவேற்) லிமிடெட் |
| 44 | சாரங்கா மணி எக்சேஞ் (பிறைவேற்) லிமிடெட் |
| 45 | சிபாஸ் மணி எக்சேஞ்சிங் (பிறைவேற்) லிமிடெட் |
| 46 | எஸ்எஸ் டிடி மணி எக்சேஞ் (பிறைவேற்) லிமிடெட |
| 47 | சுவிஸ் மணி எக்ஸ்சேஞ் (பிறைவேற்) லிமிடெட் - கொழும்பு - 01 |
| 48 | சுவிஸ் மணி எக்ஸ்சேஞ் (பிறைவேற்) லிமிடெட் - கொழும்பு - 06 |
| 49 | தோமஸ் குக் லங்கா (பிறைவேற்) லிமிடெட் - கொழும்பு 03 |
| 50 | தோமஸ் குக் லங்கா (பிறைவேற்) லிமிடெட் - கண்டி |
| 51 | தோமஸ் குக் லங்கா (பிறைவேற்) லிமிடெட் - காலி |
| 52 | யுனிக் பொறக்ஸ் (பிறைவேற்) லிமிடெட் |
| 53 | வசந்தாஸ் இன்ரநஷனல் மணி எக்சேஞ் (பிறைவேற்) லிமிடெட் |

| | |
|---|---|
| 54 | வெஸ்ரேன் மணி எக்சேஞ் (பிறைவேற்) லிமிடெட் |
| 55 | வின்சோர் மணி எக்சேஞ் (பிறைவேற்) லிமிடெட் |
| **வெளிநாட்டு செலாவணியை கொள்வனவு, விற்பனை செய்வதற்கும் பரிமாற்றுவதற்கும் அனுமதிக்கப்பட்ட மட்டுப்படுத்தப்பட்ட வணிகர்கள்** | |
| நாணயமாற்றுநர்கள் | |
| 56 | அர்ஜுன ஜுவல்லறி (பிறைவேற்) லிமிடெட் |
| 57 | கொழும்பு மணி எக்சேஞ் (பிறைவேற்) லிமிடெட் - கொழும்பு 06 |
| 58 | கிறவுன் எக்சேஞ் (பிறைவேற்) லிமிடெட் |
| 59 | சிட்டி எக்சேஞ் (பிறைவேற்) லிமிடெட் |
| 60 | தேவி பொரெக்ஸ் (பிறைவேற்) லிமிடெட் |
| 61 | மாறுதி மணி எக்சேஞ் (பிறைவேற்) லிமிடெட் - கொழும்பு - 06 |
| 62 | மெட்ரோ பொரெக்ஸ் (பிறைவேற்) லிமிடெட் |
| 63 | பிரசன்னா மணி எக்ஸ்சேஞ் (பிறைவேற்) லிமிடெட் - கொழும்பு - 01 |
| 64 | பிரசன்னா மணி எக்ஸ்சேஞ் (பிறைவேற்) லிமிடெட் - கொழும்பு - 06 |
| 65 | புஸ்பா மணி சேஞ்சேர்ஸ் (பிறைவேற்) லிமிடெட் |
| 66 | ரவி பொரெக்ஸ் (பிறைவேற்) லிமிடெட் |
| 67 | தோமஸ் குக் லங்கா (பிறைவேற்) லிமிடெட் - பண்டாரநாயக்கா சர்வதேச விமான நிலையம் |
| உரிமம்பெற்ற நிதிக்கம்பனிகள் | |
| 68 | ஏசியா அசற் பினான்ஸ் பிஎல்சி |
| 69 | பிம்புத் பினான்ஸ் பிஎல்சி |
| 70 | சிற்றிசன்ஸ் டெவலப்மென்ற் பிசனஸ் பினான்ஸ் பிஎல்சி |
| 71 | லங்கா கிரடிட் அன்ட் பிசினஸ் பினான்ஸ் லிமிடெட் |
| 72 | எல்ஒஎல்சி பினான்ஸ் பிஎல்சி |
| 73 | எல்பீ பினான்ஸ் பிஎல்சி |
| 74 | செங்கடகல பினான்ஸ் கம்பனி பிஎல்சி |
| 75 | சிங்கபுத்திர பினான்ஸ் பிஎல்சி |
| 76 | சிங்கர் பினான்ஸ் (லங்கா) பிஎல்சி |
| **வெளிநாட்டு செலாவணியை கொள்வனவு செய்வதற்கு அனுமதிக்கப்பட்ட மட்டுப்படுத்தப்பட்ட வணிகர்கள்** | |
| சுற்றுலா விடுதிகள் | |
| 77 | மன்டரீனா கொழும்பு |
| 78 | பேள் சிற்றி ஹோட்டல் |
| 79 | சங்கிரி-லா ஹோட்டல் கொழும்பு |
| 80 | சங்கிரி-லாஸ் அம்பாந்தோட்டை றிசோட் அன்ட் ஸ்பா |
| 81 | சீகிரிய ஜங்கிள்ஸ் |
| ஏனைய நிறுவனங்கள் | |
| 82 | எம்எம்பிஎல் மணி ட்ரான்ஸ்பர் (பிறைவேற்) லிமிடெட் |
| 83 | இலங்கை ஏற்றுமதி படுகடன் காப்புறுதி கூட்டுத்தாபனம் |

## 13. மனித வளங்கள்

மனித வளங்கள் திணைக்களமானது 2018இல் புதிய மனித வளங்கள் முகாமைத்துவக் கொள்கையினை உருவாக்குதல், செயலாற்றல் மதிப்பீடு, வேலைச் சுழற்சி, பின்தொடர் திட்டமிடல், வகுப்பு மற்றும் தர பதவி உயர்வுகளை வழங்குதல் மற்றும் சிறந்த தொழில்தருநர் - ஊழியர் உறவுகளைப் பேணுவதற்கு ஆக்கபூர்வமான சூழலொன்றினை உருவாக்குவதற்கான தொழில் துறை ஐக்கியத்தினைப் பேணுதல் போன்ற பல்வேறு நடவடிக்கைகளைப் பெறுப்பேற்றது. இந்நடவடிக்கைகள், மத்திய வங்கியின் குறிக்கோள்களை எய்துவதனை நோக்கி பங்களிப்பு செய்யக்கூடிய உயர் உற்பத்தித் திறன்மிக்க, ஊக்கமளிக்கப்பட்ட மற்றும் திருப்தியுள்ள ஊழியர்கள் அணியொன்று கிடைக்கப்பெறுகின்றமையினை உறுதிசெய்வதனை இலக்காகக் கொண்டிருந்தன. 2018ஆம் ஆண்டு காலப்பகுதியின் போது மனித வளங்கள் திணைக்களத்தினால் கொண்டு நடாத்தப்பட்ட நடவடிக்கைகள் பற்றிய தொகுப்புடன் சேர்த்து வங்கியின் மனித வளங்கள் கட்டமைப்பு கீழே தரப்பட்டுள்ளது.


### 13.1 மனித வளங்கள் கட்டமைப்பு

2018இன் இறுதியிலுள்ளவாறு, இலங்கை மத்திய வங்கியின் ஊழியர்களின் மொத்த எண்ணிக்கை 1,421 ஆக விளங்கி 686 அலுவலர் தர அலுவாகள் அலுவலர்களையும் 576 முகாமைத்துவ உதவியாளர் வகுப்பு அலுவர்களையும் 159 அலுவலக உதவியாளர் வகுப்பு அலுவலர்களையும் உள்ளடக்கியிருந்தது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் உயர் பதவி மற்றும் முகாமைத்துவ உதவியாளர் வகுப்பு என்பவற்றின் சதவீத உள்ளடக்கம் சிறிதளவு மாற்றம் பெற்றுள்ள அதேவேளை அலுவலக உதவியாளர் வகுப்பு மாற்றமடையாது இருந்தது.


வங்கியின் ஊழியருடைய சராசரி வயது 2018ஆம் ஆண்டின் முடிவில் 39 வருடங்களாகவிருந்தது. 2018இன் இறுதியிலுள்ளவாறு அலுவலர்களின் வகுப்பு ரீதியான, பாலின ரீதியான மற்றும் வயது ரீதியான தொகுப்பு வரைபடம் II - 6இல் காட்டப்பட்டுள்ளது.

**வரைபடம் II - 4**
**2018.12.31 இல் உள்ளவாறு அலுவலர்களின் உள்ளமைப்பு**


(அ) வகுப்பு ரீதியான





(ஆ) பாலின ரீதியான



(இ) வயது ரீதியாக (எல்லா ஊழியர்கள்)




(ஈ) வயது ரீதியாக (அலுவலர் பதவி)




### 13.2 ஊழியர்களின் கல்விசார் மற்றும் தொழில்சார் நிபுணத்துவத் தகைமைகள்

அட்டவணை II - 21இல் குறித்துக் காட்டப்பட்டுள்ளவாறு, உயர்தர கல்வி மற்றும் தொழில்சார் தகைமைகளுடன் கூடிய பன்மைத்துவ மற்றும் திறன்வாய்ந்த மனித வளங்கள் குழுவை வங்கி கொண்டிருக்கிறது.

**அட்டவணை II - 21**

**2018.12.31இல் உள்ளவாறு இலங்கை மத்திய வங்கியின் ஊழியர்களின் கல்விசார் தகைமைகள்/ தொழில்சார் உறுப்புரிமைகள்**

| உழியர்களின் வகுப்புகள் | முனைவர் பட்டம் பெற்றோர் | பட்டப்பின் படிப்பு, முதற்பட்டம் மற்றும் தொழில்சார் உறுப்புரிமை பெற்றவர்கள் | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | மொத்தம் / வகை | பட்டப்பின் படிப்பு, முதற்பட்டம் மற்றும் தொழில்சார் உறுப்புரிமைகள் | பட்டப்பின் படிப்பு, முதற்பட்டம் | பட்டப்பின் படிப்பு, தொழில்சார் உறுப்புரிமைகள் | பட்டப்பின் படிப்பு, தொழில்சார் உறுப்புரிமைகள் | பட்டப்பின் படிப்பு மட்டும் | முதற் பட்டம் மட்டும் | தொழில்சார் உறுப்புரிமைகள் மட்டும் |
| அலுவலர் தர அலுவலர்கள் | 20 | 546 | 124 | 180 | 64 | 28 | 1 | 134 | 15 |
| முகாமைத்துவ உதவியாளர் வகுப்பு | - | 148 | 9 | 23 | 11 | 12 | 10 | 52 | 31 |
| அலுவலர் உதவியாளர் வகுப்பு | - | 7 | - | - | - | - | - | 7 | - |
| மொத்தம் | **20** | **701** | **133** | **203** | **75** | **40** | **11** | **193** | **46** |

### 13.3 மனித வள முகாமைத்துவம்

#### (அ) ஆட்சேர்ப்பு

2018இல், பொது ஆட்சேர்ப்புச் செயன்முறையின் கீழ் முப்பது 30 முகாமைத்துவ பயிலுநர்களையும் இருபத்தொரு 21 உதவிப் பாதுகாப்பு அலுவலர்களையும் (பயிலுநர்) மற்றும் பன்னிரண்டு 12 கனிஷ்ட தனிப்பட்ட உதவியாளர்களையும் வங்கியின் குறித்த தகைமைத் தேவைப்பாடுகளை நிறைவுசெய்யும் பொருட்டு பிந்திய ஆட்சேர்ப்புச் செயன்முறையின் கீழ் ஒரு முதன்மை நூலகர் 10 சட்ட அலுவலர்களையும் ஆட்சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டன. இதற்கு மேலதிகமாக காப்பாளர், பராமரிப்பு மற்றும் கருத்திட்டப் பொறியியலாளர் (சிவில், இயந்திரவியல், மின்னியல்), தொழில்நுட்ப (சிவில், இயந்திரவியல், மின்னியல்), தொழில்நுட்பவிளலாளர் (தொலைபேசி மற்றும் செவிப்புல கட்புல) பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோருவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

#### (ஆ) செயலாற்றல் முகாமைத்துவம்

வங்கியின் செயலாற்ற முகாமைத்துவ முறைமையானது ஊழியர்களின் வேலை விபரணங்களைத் தயாரித்தல் மற்றும் மீளாய்வு செய்தல், தனிப்பட்ட ஊழியர்களுக்கான இலக்குகளை நிர்ணயித்தல், ஊழியர்களின் செயலாற்றத்தினைக் கண்காணித்தல் மற்றும் செயலாற்றத்தினை மதிப்பிடுதல் என்பனவற்றை உள்ளடக்கியிருக்கிறது.

செயலாற்ற மதிப்பீட்டுச் செயன்முறையின் கீழ், ஒவ்வொரு ஊழியரினதும் செயலாற்ற மட்டமானது மதிப்பீட்டு பிரமாணத்தில் குறித்துரைக்கப்பட்டவாறு பொதுவான மற்றும் தொழில்நுட்பத் தகைமைகளின் அடிப்படையில் எய்தப்பட்ட செயலாற்றத்திற்குத் தரமிடல்களை வழங்குவதன் மூலம் மதிப்பிடப்படுகிறது. ஊழியர்களின் இறுதிச் செயலாற்ற புள்ளியிடலானது பதவி உயர்வுப் பிரமாணத்தின் தேவைப்பாடுகளில் ஒன்றாக பயன்படுத்தப்படுகிறது.

மனித வளத் திணைக்களம் இவ்வாண்டுப் பகுதியில் திட்டமிட்டவாறு ஊழியர்களின் செயலாற்ற மதிப்பீட்டுச் செயன்முறைகளை மேற்கொண்டது. மேலும், மனித வளத் திணைக்களம், திணைக்களங்களினது நடுவாண்டு செயலாற்ற மீளாய்வுச் செயன்முறைகளையும் மீளாய்வு செய்தது. இது, தொடர்புடைய தரப்பினர்களுக்கு இவ்வாண்டின் முதலரையாண்டு காலப்பகுதியில் உயர் பதவி அலுவலர்களது செயலாற்ற மட்டத்தினை புரிந்துகொள்வதற்கான வாய்ப்பினை வழங்கியது.

#### (இ) பதவி உயர்வுகள்

ஏற்புடைய பதவி உயர்வு பிரமாணங்களுக்கு இசைந்து செல்லும் வகையில், மனித வளங்கள் திணைக்களமானது, அவர்களது தொழில் முன்னேற்றங்களை உறுதிப்படுத்தும் விதமாக ஊழியர்களிற்கான பதவி உயர்வினை வழங்கியதுடன், அதன் காரணமாக 2018இல்

மொத்தமாக 216 அலுவலர்களுக்கு அவர்களது வகுப்பு மற்றும் தரப் பதவி உயர்வுகள் வழங்கப்பட்டன. இதனடிப்படையில், இரு 02 உதவி ஆளுநர்கள் துணை ஆளுநர்களாக பதவி உயர்த்தப்பட்டனர். மேலும் நாற்பத்துநான்கு 44 அலுவலர் வகுப்பு தரம் III (1) திணைக்களத் துணைத் தலைவர்களாகவும் பத்து 10 உயர் பதவி வகுப்பு III (2) திணைக்கள மேலதிகத் தலைவர்களாகவும் பதவி உயர்த்தப்பட்டதுடன் நூற்றுஇருபது 120 அலுவலர்களுக்கு அவர்களது தரப் பதவி உயர்வு வழங்கப்பட்ட அதேவேளை முப்பத்துஎட்டு 38 அலுவலர்கள் முகாமைத்துவ உதவியாளர் வகுப்பிலிருந்து அலுவர் பதவி வகுப்பிற்கு பதவி உயர்த்தப்பட்டனர்.

**(ஈ) வேலைச் சுழற்சி**

வங்கியின் செயன்முறையில் பல்வேறு துறைகளிலும் அனுபவத்தினைப் பெற்று தம்மை வளர்த்துக் கொள்வதற்காக ஊழியர்களிற்கு வாய்ப்பினை வழங்கும் குறிக்கோளுடன் மனித வளங்கள் திணைக்களமானது, வங்கியின் வருடாந்த வேலைச் சுழற்சிக் கொள்கையின் கீழ் 2018 பெப்புருவரி 15 இலிருந்து நடைமுறைக்குவரும் வகையில் ஆறு அலுவர் பதவி அலுவலர்களையும் ஒன்பது 09 முகாமைத்துவ உதவியாளர் வகுப்பு மற்றும் மூன்று 03 அலுவலகர் உதவியாளர் வகுப்பினரையும் இடமாற்றம் செய்யும் நடவடிக்கைகளை மேற்கொண்டது.

**(உ) தொழில்துறை ஐக்கியம்**

மனித வளத் திணைக்களம் முகாமைத்துவத்திற்கும் தொழிற் சங்கங்களுக்கும் இடையில் நெருக்கமான கலந்துரையாடல்களைப் பேணுவதற்கான வசதி ஏற்பாட்டாளர் என்ற அதன் வகிபாகத்தினைத் தொடர்ந்தும் ஆற்றியது. இதற்கமைய, 2018ஆம் ஆண்டில் ஊதியம், பதவி உயர்வுகள், பயிற்சி, நலன்புரிச் சேவை, ஆட்சேர்ப்பு மற்றும் வங்கியின் பொது நிர்வாகம் தொடர்பாக சில பிரச்சனைகளைத் தீர்ப்பதற்காக முகாமைத்துவத்திற்கும் தொழிற்சங்கங்களிற்கும் வாய்ப்பினை வழங்கி 12 கலந்துரையாடல்களை ஒழுங்குசெய்தது.

### 13.4 திணைக்களங்களை மூடுதல் மற்றும் நிறுவுதல்

1949ஆம் ஆண்டின் 58ஆம் இலக்க நாணயவிதிச் சட்டத்தின் 33ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கும் 2017.06.16 அன்று நடைபெற்ற 21/2017ஆம் இலக்க அதன் கூட்டத்தில் ஆக்கப்பட்ட நாணயச் சபைத் தீர்மானத்திற்கு அமைவாக 2018 சனவரி 01ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்குவரும் வகையில் தீர்மானம் மற்றும் நடைமுறைப்படுத்தல் திணைக்களம் நிறுவப்பட்டது.

### 13.5 2018ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் ஆளுநர் வெளிநாட்டில் பங்குபற்றிய கூட்டங்கள்

(i) இலங்கை பரிவர்த்தனை ஆணைக்குழு மற்றும் சிங்கப்பூர் - இலங்கை வர்த்தக அமைப்பு என்பவற்றின் கூட்டிணைப்புடன் சிங்கப்பூரில் 2018 மாச்சு 02 அன்று கொழும்பு பங்குப் பரிவர்த்தனையினால் ஏற்பாடு செய்யப்பட்ட “இலங்கையில் முதலிடுதல் முதலீட்டாளர் மன்றம்” நிகழ்வில் பொருளாதார எதிர்கால வாய்ப்பு பற்றிய உரையினை நிகழ்த்துவதற்காக பங்குபற்றினார்.

(ii) 2018 ஏப்பிறல் 18 - 28 வரை வொஸின்டன் டி.சியில் பன்னாட்டு நாணய நிதியம்/ உலக வங்கி இளவேனிக் கால கூட்டத்தொடரில் பங்குபற்றினார்.

(iii) 2018 யூலை 15 - 18 வரை சீன அபிவிருத்தி வங்கி, ஆசிய உட்கட்டமைப்பு முதலீட்டு வங்கி, சீன மக்கள் வங்கி மற்றும் சீன பன்னாட்டு மூலதன ஒத்துழைப்பு ஆகியவற்றின் அதிகாரிகளை சந்திப்பதற்கு இலங்கை மத்திய வங்கியின் பேராளர் குழுவொன்றுக்குத் தலைமை தாங்கி மக்கள் சீனகுடியரசிற்குப் பயணித்தார்.

(iv) 2018 செத்தெம்பர் 9 - 13 காலப்பகுதியின் போது இலங்கையிலிருந்தான வங்கித்தொழில் துறை சிரேஸ்ட அலுவலர்களைக் கொண்ட பேராளர் குழுவொன்றின் தலைவராக ஓமான், கட்டார் மற்றும் ஐக்கிய அரபு இராச்சியம் நாடுகளின் சிரேஸ்ட வங்கி அலுவலர்களுடனான கூட்டத்தில் பங்குபற்றினார்.

(v) 2018 ஒத்தோபர் 15 - 16 வரை பாரிஸில் நிதியியல் நடவடிக்கைச் செயலணி முழுநிறைவான மற்றும் பணியாற்றுக் குழுக் கூட்டங்களில் கலந்துகொண்டார்.

### 13.6 பதவி உயர்வுகள்/ நியமனங்கள்

i. பிரதிச் செயலாளராக நிதி அமைச்சிற்கு விடுவிக்கப்பட்டிருந்த உதவி ஆளுநர் திரு. எஸ். ஆர். ஆட்டிகல 2018 ஒத்தோபர் 31 தொடக்கம் நடைமுறைக்கு வரும்வகையில் துணை ஆளுநராக நியமிக்கப்பட்டார்.

ii. உதவி ஆளுநராக திரு. எச். ஏ. கருணாரத்ன 2018 ஒத்தோபர் 31 தொடக்கம் நடைமுறைக்கு வரும்வகையில் துணை ஆளுநராக நியமிக்கப்பட்டார்.

iii. நுண்பாக நிதி நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களத்தின் பணிப்பாளர் திரு. டி. ஏ. ஜி. கே. விஜயதுங்க 2018 சனவரி 01 தொடக்கம் நடைமுறைக்கு வரும்வகையில் பயிற்சி மற்றும் அபிவிருத்தித் திணைக்களத்தின் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

iv. பயிற்சி மற்றும் அபிவிருத்தித் திணைக்களத்தின் பணிப்பாளர் திரு. எஸ். கே. ரணசிங்க 2018 சனவரி 01 தொடக்கம் நடைமுறைக்கு வரும்வகையில் தீர்மானம் மற்றும் நடைமுறைப்படுத்தல் திணைக்களத்தின் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

v. நுண்பாக நிதி நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களத்தின் மேலதிப் பணிப்பாளர் திரு. பீ. பாஸ்கரன் 2018 சனவரி 01 தொடக்கம் நடைமுறைக்கு வரும்வகையில் வங்கியல்லா நிதி நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களத்தின் மேலதிகப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

vi. கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுகள் திணைக்களத்தின் மேலதிகப் பணிப்பாளர் திரு. ஏ. எம். குணதிலக 2018 சனவரி 17 தொடக்கம் நடைமுறைக்கு வரும் வகையில் நாணயத் திணைக்களத்தின் மேலதிக கண்காணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

vii. கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் திணைக்களத்தின் மேலதிகப் பணிப்பாளர் திரு. ஆர். எம். ஜயவர்த்தன 2018 யூன் 01 தொடக்கம் நடைமுறைக்கு வரும்வகையில் வசதிகள் முகாமைத்துவத் திணைக்களத்தின் மேலதிகப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

viii. ஊழியர் சேம நிதியத் திணைக்களத்தின் மேலதிகக் கண்காணிப்பாளர் திரு. ஏ. ஜி. யு. திலகரத்தன 2018 யூன் 01 தொடக்கம் நடைமுறைக்கு வரும்வகையில் நாணயத் திணைக்களத்தின் மேலதிகக் கண்காணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

ix. பொதுப்படுகடன் திணைக்களத்தின் மேலதிக் கண்காணிப்பாளர் திரு. சி. பி. எஸ் பண்டார 2018 யூன் 01 தொடக்கம் நடைமுறைக்கு வரும்வகையில் கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் திணைக்களத்தின் மேலதிகப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

x. பொருளாதார ஆராய்ச்சி பணிப்பாளராக நிதி அமைச்சிற்கு விடுவிக்கப்பட்டிருந்த மேலதிகப் பணிப்பாளர் முனைவர். பி.

கே. ஜி. ஹரிஷ்சந்திர 2018 யூன் 01ஆம் நடைமுறைக்கு வரும்வகையில் பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களத்தின் மேலதிகப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

xi. இடர்நேர்வு முகாமைத்துவத் திணைக்களத்தின் பணிப்பாளர் திருமதி கே. தஸநாயக்க 2018 யூலை 19 தொடக்கம் நடைமுறைக்கு வரும்வகையில் இலங்கை மத்திய வங்கியின் செயலாளராக நியமிக்கப்பட்டார்.

xii. வங்கி மேற்பார்வைத் திணைக்களத்தின் மேலதிகப் பணிப்பாளர் முனைவர் (திருமதி) ஆர் ஏ பெரேரா 2018 யூலை 19 தொடக்கம் நடைமுறைக்கு வரும்வகையில் இடர்நேர்வு முகாமைத்துவத் திணைக்களத்தின் பதில் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

xiii. உள்நாட்டு தொழிற்பாடுகள் திணைக்களத்தின் மேலதிப் பணிப்பாளர் திரு. சி. ஏ. அபேசிங்க 2018 ஓகத்து 17 தொடக்கம் நடைமுறைக்கு வரும்வகையில் உள்நாட்டு தொழிற்பாடுகள் திணைக்களத்தின் பதில் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

xiv. வங்கி மேற்பார்வைத் திணைக்களத்தின் மேலதிகப் பணிப்பாளர் திரு. எம். ஆர். எம். அபேரத்ன 2018 செத்தெம்பர் 03 தொடக்கம் நடைமுறைக்கு வரும்வகையில் தீர்மானம் மற்றும் நடைமுறைப்படுத்தும் திணைக்களத்தின் மேலதிகப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டதுடன் அதனைத் தொடர்ந்து 2018 ஒத்தோபர் 20ஆம் திகதி தொடக்கம் நடைமுறைக்கு வரும்வகையில் அவர் பயிற்சி மற்றும் அபிவிருத்தித் திணைக்களத்தின் மேலதிகப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார் அதன் பின்னர் 2018 நவெம்பர் 23ஆம் திகதி தொடக்கம் நடைமுறைக்கு வரும்வகையில் பயிற்சி மற்றும் அபிவிருத்தித் திணைக்களத்தின் பதில் பணிப்பாளராக அவர் நியமிக்கப்பட்டார்.

xv. ஆளுநர் செயலகத்திற்கு இணைக்கப்பட்டிருந்த பணிப்பாளர் (விசேட கருத்திட்டங்கள்) முனைவர் எச். அமரதுங்க 2018 ஒத்தோபர் 20 தொடக்கம் நடைமுறைக்கு வரும்வகையில் பிரதேச அலுவலகக் கண்காணிப்புத் திணைக்களத்தின் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

xvi. பிரதேச அலுவலகக் கண்காணிப்புத் திணைக்களத்தின் பணிப்பாளர் திரு. பீ. எல். ஜே. எஸ். பாலசூரிய 2018 ஒத்தோபர் 20 தொடக்கம் நடைமுறைக்கு வரும்வகையில் தீர்மானம் மற்றும் நடைமுறைப்படுத்தல் திணைக்களத்தின் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

xvii. இடர்நேர்வு முகாமைத்துவத் திணைக்களத்தின் பதில் கடமையாற்றிய மேலதிகப் பணிப்பாளர் திரு. டபிள்யு. ஆர். எம். கே. பர்னாந்து 2018 ஒத்தோபர் 29 தொடக்கம் நடைமுறைக்கு வரும்வகையில் தீர்மானம் மற்றும் நடைமுறைப்படுத்தல் திணைக்களத்தின் பதில் கடமையாற்றும் மேலதிகப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

xviii. பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களத்தின் மேலதிகப் பணிப்பாளர் திருமதி. டபிள்யு. ஏ. டில்ருக்ஷினி 2018 நவெம்பர் 16 தொடக்கம் நடைமுறைக்கு வரும்வகையில் பேரண்ட நுண்மதியுடைய கண்காணிப்புத் திணைக்களத்தின் மேலதிகப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

xix. வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களத்தின் மேலதிகப் பணிப்பாளர் திரு. ஆர். ஆர். ஜயரத்ன 2018 திசெம்பர் 01 தொடக்கம் நடைமுறைக்கு வரும்வகையில் வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களத்தின் பதில் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

### 13.7 விடுவிக்கப்பட்டுள்ள அலுவலர்கள்

i. திரு. கே எம் எம் சிறிவர்த்தன, உதவி ஆளுநர், மாற்று நிறைவேற்றுப் பணிப்பாளராக பன்னாட்டு நாணய நிதியத்திற்கு

ii. திருமதி எஸ். ரத்நாயக்க, உயர் பதவி அலுவலர் தரம் II, நிருவாக உதவியாளராக பன்னாட்டு நாணய நிதியத்திற்கு

iii. திருமதி. எஸ். அமிதா, உயர் பதவி அலுவலர் தரம் II, பொருளியலாளராக, பன்னாட்டு நாணய நிதிய இலங்கை வதிவிட பிரதிநிதி அலுவலகத்திற்கு

### 13.8 ஓய்வுபெறல்கள்

i. நிதியியல் உளவறிதல் பிரிவின் மேலதிகப் பணிப்பாளர் திரு. டி. கே. விஜயசூரிய 2018 சனவரி 01ஆம் திகதி தொடக்கம் வங்கிப் பணியிலிருந்து ஓய்வுபெற்றார்.

ii. முதன்மைக் கணக்காளர் திரு. எம். ஐ. சுபியான் 2018 பெப்புருவரி 18 திகதி தொடக்கம் வங்கிப் பணியிலிருந்து ஓய்வுபெற்றார்.

iii. நுண்பாக நிதி நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களத்தின் மேலதிகப் பணிப்பாளர் திரு வீ பாஸ்கரன் 2018 மே 10 திகதி தொடக்கம் வங்கிப் பணியிலிருந்து ஓய்வுபெற்றார்.

iv. அலுவலர் சேவைகள் முகாமைத்துவத் திணைக்களத்தின் பதில் மேலதிகப் பணிப்பாளர் செல்வி கே. ஜி. ஆர். கே. தீரசிங்க 2018 செத்தெம்பர் 01 தொடக்கம் வங்கிப் பணியிலிருந்து ஓய்வுபெற்றார்.

v. பதில் மேலதிகச் செயலாளர் திரு. எச். எம். விமல 2018 செத்தெம்பர் 16 தொடக்கம் வங்கிப் பணியிலிருந்து ஓய்வுபெற்றார்.

vi. செயலாளர் பி. டபிள்யு. ஜினசேன 2018 ஒத்தோபர் 19 தொடக்கம் வங்கிப் பணியிலிருந்து ஓய்வுபெற்றார்.

vii. துணை ஆளுநர் திரு. சி. ஜே. பி. சிறிவர்த்தன 2018 ஒத்தோபர் 31 தொடக்கம் வங்கிப் பணியிலிருந்து ஓய்வுபெற்றார்.

viii. உள்நாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களப் பணிப்பாளர் திரு. பி. டபிள்யு. டி. என். ஆர். ரொட்றிகோ 2018 நவெம்பர் 17 தொடக்கம் வங்கிப் பணியிலிருந்து ஓய்வுபெற்றார்.

ix. வங்கியல்லா நிதி நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களத்தின் பதில் மேலதிகப் பணிப்பாளர் திரு. ஆர். டி. டபிள்யு பல்லேகம 2018 திசெம்பர் 03 தொடக்கம் வங்கிப் பணியிலிருந்து ஓய்வுபெற்றார்.

x. வசதிகள் முகாமைத்துவத் திணைக்களத்தின் மேலதிகப் பணிப்பாளர் திரு. கே. டி. ஆர். பியதிலக 2018 திசெம்பர் 31 தொடக்கம் வங்கிப் பணியிலிருந்து ஓய்வுபெற்றார்.

## 14. தகவல் தொழில்நுட்பம்

தகவல் தொழில்நுட்பத் திணைக்களமானது வங்கியின் மையக் குறிக்கோள்களை எய்துவதற்காக நிறுவனமட்ட ஒருங்கிணைக்கப்பட்ட பிரயோகங்களை வழங்குகின்ற இயக்கவாற்றல்மிக்க அதன் வகிபாகத்தினைத் தொடர்ந்தும் வழங்கியது.

வங்கியின் தந்திரோபாய மற்றும் செயற்பாட்டு நடவடிக்கைகளின் கீழ் ஆண்டு காலப்பகுதியில், தகவல் தொழில்நுட்பத் திணைக்களமானது ஐந்து பரந்துபட்ட துறைகளில் தனது பங்களிப்பினைச் செய்தது. அவையாவன, (அ) செலவுச் சிக்கனமாக வியாபாரத் தீர்வுகளை வழங்குதல் (ஆ) வங்கியின் தகவல் தொழில்நுட்ப உட்கட்டமைப்பினைத் தொடர்ச்சியாக மேம்படுத்தல் (இ) தேசிய கொடுப்பனவு முறைமை

உட்கட்டமைப்பினை நிறுவுவதற்குப் பங்களித்தல் (ஈ) தகவல் தொழில்நுட்பப் பாதுகாப்பு மற்றும் மீளாற்றல் மற்றும் (உ) ஊழியர் மத்தியில் தகவல் தொடர்பூட்டல் தொழில்நுட்பத் திறமைகளை மேம்படுத்தல்.

### அ. செலவுச் சிக்கனமான வியாபாரத் தீர்வுகளை வழங்குதல்

வங்கியின் வருடாந்த வரவு செலவுத் திட்டமிடல் செயன்முறையினைத் தன்னியக்கப்படுத்த மற்றும் முறைப்படுத்த நிதியியல் திணைக்களத்திற்காக ஒரு வரவு செலவுத்திட்டத் தகவல் சமர்ப்பித்தல் மற்றும் முறைப்படுத்தல் முறைமை அமுல்படுத்தப்பட்டது. பொதுப்படுகடன் திணைக்களத்தினால் நடாத்தப்படும் திறைசேரி முறிகளின் முதன்மை வழங்கலுக்காக ஒரு இணைய வழி மூலமான ஏல முறைமை விருத்தி செய்யப்பட்டது. பன்னாட்டுத் தொழிற்பாட்டுத் திணைக்களமானது உடனடி விலைக்கூறினைப் பெறுவதற்காக ஒரு புதிய இடைமுகத்தினைச் சேர்ப்பதன் மூலம் மத்திய ஒருங்கிணைக்கப்பட்ட சந்தைக் கண்காணித்தல் முறைமை மேலும் விருத்தி செய்யப்பட்டது. இது இலங்கை மத்திய வங்கியினை வங்கிகளுக்கிடையிலான வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் நிகழ் நேரத்தில் தலையிடுதலை இயலச்செய்தது. இதற்கு மேலதிகமாக, ஏற்கனவேயுள்ள வட்டி வீத (இலங்கை வங்கிகளுக்கிடையிலான வழங்கல் வீதம், சராசரி நிறையேற்றப்பட்ட கடன்வழங்கல் வீதம், சராசரி நிறையேற்றப்பட்ட வைப்பு வீதம்) தொகுப்பினைத் தன்னியக்கமாக்குவதற்காகப் பொருளாதார அபிவிருத்தித் திணைக்களத்திற்காக ஒரு புதிய இடைமுகம் சீம் முறைமையிலேயே விருத்தி செய்யப்பட்டது. புதிய ஒழுங்குமுறைப்படுத்தல் திரும்பல்களை அறிமுகம் செய்வதன் மூலம் வங்கியினால் ஒழுங்குமுறைப்படுத்தப்படுகின்ற நிதியியல் நிறுவனங்களினால் அறிக்கையிடப்பட்ட தகவல்களைக் கண்காணிப்பதற்காகப் பல்வேறுபட்ட திணைக்களங்களினால் பயன்படுத்தப்படுகின்ற மத்திய தரவுத்தள முறைமை (பின்நெட்) மேலும் விருத்தி செய்யப்பட்டது. வெளிநாட்டு நாணய விற்பனை மற்றும் கொள்வனவுக் கண்காணித்தல் தொகுதியினைச் சீரமைத்தல் மூலம் வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களத்தினால் பயன்படுத்தப்பட்ட வெளிநாட்டுச் செலாவணி இணையத்தள முறைமையானது மேலும் விருத்தி செய்யப்பட்டது. புதிய வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக உள்முக மூலதனக் கணக்கு உட்பாய்ச்சல்கள் மற்றும் வெளிப்பாய்ச்சல்களின் கண்காணிப்பு முறைமை தரமுயர்த்தப்பட்டது.

நாணயச் சபையின் முடிவுகளை முகாமை செய்தல் மற்றும் தொடர்ந்து வருகின்ற மீளாய்வு மற்றும் நிலைமையைக் கண்காணித்தல் தொடர்பான நடவடிக்கைகள் பணி கண்காணித்தல் முறைமையின் விருத்தி மூலம் இயல்பாக்கப்பட்டது. வசதிகள் முகாமைத்துவத் திணைக்களத்திற்காக விருத்தி செய்யப்படும் விடுமுறை வீடுகள் பதிவு முறைமை, மத்திய வங்கியின் ஊழியர்கள் அறைகளை இணையத்தளத்தினூடாக ஒதுக்கீடு செய்தல் மற்றும் விடுமுறை வீடு வசதியினை இலகுவாக பயன்படுத்துவதையும் இயலச்செய்தது.

தேசிய கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமையான லங்காசெட்டில் முறைமை, முதலீட்டாளர்களைப் பாதுகாக்கும் பொருட்டு, அரச பிணை சந்தையில் வெளிப்படைத் தன்மையினைப் பேணுவதிலிருக்கின்ற சிறந்த நடைமுறைகளுக்கிணங்க, முறைமையிலே தீர்க்கப்படுகின்ற பிணை பற்றிய மின்னஞ்சல் மற்றும் குறுந்தகவல் மூலமான விழிப்புணர்வு வசதியை அறிமுகப்படுத்துவதன் மூலம் மேம்படுத்தப்பட்டது. இதற்கு மேலதிகமாக, லங்கா செட்டில் முறைமையானது, விலை கண்டுபிடித்தல் முறைமையினை மேம்படுத்தும் பொருட்டு, அரச பிணையங்களின், முதன்மை மற்றும் இடைநிலைச் சந்தை பரிவர்த்தனைகளின் விலை மற்றும் விளைவினைக் கைப்பற்றும் பொருட்டு மேம்படுத்தப்பட்டது. தகவல் தொழில்நுட்பத்தை அடிப்படையாகக் கொண்ட தீர்வினைப் பயன்படுத்தி ஒரு மில்லியனுக்கும் மேற்பட்ட தேசிய அடையாள அட்டை இலக்கங்கள் ஊழியர் சேமலாப நிதிய உறுப்பினர் பதிவேட்டில் புதுப்பிக்கப்பட்டன.

### ஆ. வங்கியின் தகவல் தொடர்பூட்டல் தொழில்நுட்ப உட்கட்டமைப்பினைத் தொடர்ச்சியாக மேம்படுத்தல்

சமீபத்திய தொழில்நுட்ப முன்னேற்றங்களுக்கு இணையாகப் பேணுவதுடன் தகவல் முறைமைகளின் மீளாற்றலை வலுவூட்டுவதற்காக வங்கியின் தகவல் தொடர்பூட்டல் தொழில்நுட்ப உட்கட்டமைப்பினை தகவல் தொழில்நுட்பத் திணைக்களமானது 2018ஆம் ஆண்டு காலப்பகுதியிலும் தொடர்ச்சியாக மேம்படுத்தியது.

உள்ளக அச்சுறுத்தல்கள் மற்றும் இணைய வழித் தாக்குதல்களுக்கெதிரான முக்கியமான பாதுகாப்பாக பாதுகாப்புச் சுவர் செயற்படுகிறது. நிறுவன வலையப்பின் உட்புற மற்றும் வெளிப்புற எல்லையில் காணப்படுகின்ற இரு பாதுகாப்புச் சுவருக்கும் நவீன பாதுகாப்புச் சுவர்களும் மாற்றீடு செய்யப்பட்டன.

வணிக ரீதியில் முக்கியமான முறைமைகளை அணுகுவதற்காக பங்கேற்பாளர் நிறுவனங்களை இலங்கை மத்திய வங்கியின் முதன்மைத் தளம் மற்றும் பேரிடர் மீட்புத் தளத்துடன் தொடர்புபடுத்துகின்ற மெய்நிகர் தனிப்பட்ட வலையமைப்பான சிபீஎஸ்எல் நெட் ஆனது, உயர் கிடைப்பனவு மற்றும் பழுதின் போது மாற்றீடு ஆகியவற்றை நிறுவுவதற்காக இரண்டு தொலைத்தொடர்பூட்டல் பணி வழங்குநர்கள் மூலமாக இரட்டை இணைப்புக்களை அமுல்படுத்தியதன் மூலம் மேம்படுத்தப்பட்டது. மேலும், வலையமைப்பின் பாதுகாப்பை மேம்படுத்துவதற்காக, மெய்நிகர் தனிப்பட்ட வலையமைப்பில் முடிவிலிருந்து முடிவிற்கு மறைகுறியாக்கம் அமுல்படுத்தப்பட்டது.

தொலைத்தொடர்பூட்டல் வலையமைப்பொன்றிற்கு குறுந்தகவல்களை அனுப்ப அல்லது பெறுவதற்காக, குறுந்தகவல் நுழைவாயிலொன்று நிறுவப்பட்டது. இது லங்கா செட்டில் முறைமையானது கணக்குகளிலே வரவு அல்லது செலவை ஏற்படுத்துகின்ற பிணைகளின் நகர்வு பற்றி அதன் பயன்பெறு உரிமையாளர்களுக்கு விழிப்புணாவு குறுந்தகவல்களை அனுப்புவதற்கு வழிசெய்கின்றது. எதிர்காலத்தில் இதே போன்ற சேவை தேவைப்பாடு ஏற்படுகின்ற ஏனைய முறைமைகளுக்கும் இதே வசதியினை இக்குறுந்தகவல் நுழைவாயில் வழங்கும்.

### இ. தேசியக் கொடுப்பனவு முறைமை உட்கட்டமைப்பினை நிறுவுவதற்குப் பங்களித்தல்

தேசிய கொடுப்பனவுச் சபையின் வழிகாட்டலுக்கமைவாக தேசிய நலன் சார்ந்த செயற்றிட்டங்களுக்கு ஆலோசகரொருவராகவும் தொழில்நுட்ப நிபுணரொருவராகவும் தகவல் தொழில்நுட்பத் திணைக்களம் தொடர்ந்தும் செயலாற்றியது. ஆண்டின் போது தகவல் தொழில்நுட்பத் திணைக்கள அலுவலர்கள் பல தேசிய செயற்றிட்டங்களுக்குத் தமது நிபுணத்துவப் பங்களிப்பை வழங்கினர். நிதியியல் சந்தை உட்கட்டமைப்பை வலுவூட்டுவதற்காக நிறுவப்படுகின்ற மத்திய எதிர்தரப்பு முறைமையுடன் மூடிய இலத்திரனியல் வர்த்தகத் தளமானது முக்கியமாக தேசிய செயற்றிட்டமாகும். செயற்றிட்ட அமுலாக்கத்துக்காகப் பொருத்தமான ஆலோசகரைத் தெரிவுசெய்வதற்காக நியமிக்கப்பட்ட தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவிலே தகவல் தொழில்நுட்பத் திணைக்கள ஊழியர்கள் பணியாற்றினர்.

இதற்கு மேலதிகமாக, தேசிய கொடுப்பனவுச் சபையினால் நியமிக்கப்பட்ட பின்டெக் அபிவிருத்திக் குழு மற்றும் தொடரேடு தொழில்நுட்பக் குழு ஆகிய இரு குழுக்களிலும் தகவல் தொழில்நுட்பத் திணைக்கள உத்தியோகத்தர்கள் பங்களிப்புச் செய்தனர்.

டயலொக் ஈஸி காஷ் மற்றும் மொபிடெல் எம் காஷ் முறைமைகளின் மீது தளப் பரிசீலனைகளை மேற்கொள்வதற்கு கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுத் திணைக்களத்திற்குத் தகவல் தொழில்நுட்பத் திணைக்கள உத்தியோகத்தர்களினால் தொழில்நுட்ப நிபுணத்துவம் வழங்கப்பட்டது மற்றும் சில நிதியியல் நிறுவனங்களின் மீது வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள் மேற்பார்வை திணைக்களத்தினால் ஒழுங்குமுறை நடவடிக்கைகளை மேற்கொள்வதற்குத் தகவல் தொழில்நுட்பத் திணைக்கள உத்தியோகத்தர்கள் உதவிபுரிந்தனர்.

**ஈ. தகவல் தொழில்நுட்ப பாதுகாப்பு மற்றும் மீளாற்றல் வலுவூட்டல்**

தகவல் தொழில்நுட்பத் திணைக்களமானது தகவல் தொழில்நுட்பப் பாதுகாப்பினை மேம்படுத்துவதற்கும் ஏதேனும் இணையப் பாதுகாப்பு அச்சுறுத்தலிருந்து வங்கியின் தகவல் தொழில்நுட்பச் சொத்துக்களைப் பாதுகாப்பதற்கும் பல நடவடிக்கைகளை எடுத்தது. முற்செயற்பாடு அணுகுமுறையொன்றாக பாதிக்கப்படக்கூடிய தன்மையினை இனங்காண்பதற்கு தொழில் வெற்றிக்கான தகவல் தொழில்நுட்ப முறைமையின் மீது பாதிக்கப்படக்கூடிய தன்மை மதிப்பீடுகள் தொடர்ச்சியாகக் கொண்டு நடாத்தப்பட்டதுடன் அவற்றைக் குறைப்பதற்கும் இணையத் தாக்குதல்களின் தோற்றப்பாடுகளைக் குறைப்பதற்கும் அவசியமான இடங்களில் தேவையான பரிகார நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

தகவல் தொழில்நுட்பத் திணைக்களமானது, வங்கியின் தகவல் பாதுகாப்பிற்கான நடைமுறைகள் மற்றும் அடிப்படைப் பாதுகாப்பு நியமங்களைக் குறிப்பிடுகின்ற வங்கியின் தகவல் பாதுகாப்புக் கொள்கையினை மீளாய்வு செய்து அதன் 4.0ஆம் பதிப்பினை வெளியிட்டது.

மனித வலையமைப்பிலே காணப்படக்கூடிய சாத்தியமான பாதிக்கப்படக்கூடிய தன்மையினை இனங்காண்வதற்காகப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன. இது தொடர்பில் விழிப்புணர்வைச் சோதனை செய்வதற்கு குறித்த பயனாளிகளுக்கு வேண்டா மின்னஞ்சல்கள் அனுப்பப்பட்டதுடன் பாதுகாப்பாக இருப்பதற்கான சிறந்த நடைமுறைகள் பற்றிய அறிவுரையும் வழங்கப்பட்டது.

2018 திசெம்பர் முடிவில் கட்டாயமான சுவிப்ற் வாடிக்கையாளர் பாதுகாப்புத் திட்டத்துடன் இணக்கத்தைப் பெறுவதில் தகவல் தொழில்நுட்பத் திணைக்களம் பெரும் பங்காற்றியது.

திணைக்களத் தகவல் தொழில்நுட்ப இணைப்பு அலுவலர்களுக்கு இணையப் பாதுகாப்பு தொடர்பில் பயிற்சியொன்று அளிக்கப்பட்டது.

**உ. ஊழியர் மத்தியில் தகவல் தொடர்பூட்டல் தொழில்நுட்பத் திறமைகளை மேம்படுத்தல்**

வங்கியிலுள்ள அனைத்து ஊழியர்களினதும் தகவல் தொழில்நுட்ப அறிவினை மேம்படுத்தும் நோக்குடன் தகவல் தொழில்நுட்பத் திணைக்களமானது விழிப்புணர்வுப் பதாதைகளை உள்ளக வலையமைப்பில் தொடர்ந்து வெளியிட்டதுடன் பாதுகாப்பு ஆலோசனை விழிப்பூட்டல்களை மின்னஞ்சல்களினூடாக அனுப்பியது. வங்கி உதவி அலுவலர்களுக்கு இணையம் மற்றும் மின்னஞ்சல் தொழில்நுட்பம் பற்றிய பயிற்சி நிகழ்ச்சித்திட்டமொன்று நடாத்தப்பட்டது.

மேலும் தொடர்புடைய துறைகளில் அறிவினையும் திறன்களையும் அதிகரிக்கும் பொருட்டு, தகவல் தொழில்நுட்பத் திணைக்களத்தின் அலுவலர்கள் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் குறுகிய கால பயிற்சிகளில் பங்கேற்றனர்.

## 15. உள்ளகக் கணக்காய்வு

உள்ளகக் கணக்காய்வுச் செயற்பாடுகள் 1951ஆம் ஆண்டு தொடக்கம் இலங்கை மத்திய வங்கியில் தொழிற்பாட்டிலிருந்து வருகின்றன. உள்ளகக் கணக்காய்வுத் திணைக்களத்தின் பணி, வேலையின் செயற்பரப்பு, பொறுப்புக்கூறும் தன்மை, சுயாதீனம், பொறுப்பாண்மை மற்றும் பணிப்பாளர் மற்றும் அலுவலர்களின் அதிகாரம் என்பன நாணயச்சபையினால் ஒப்புதலளிக்கப்பட்ட உள்ளகக் கணக்காய்வுச் சாசனத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளன. கணக்காய்வினை மேற்கொள்கையில் உலகளாவிய நியமங்கள் பின்பற்றப்படுகின்றன. 2018ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் சுருக்கம் கீழே தரப்படுகின்றது.

### 15.1 உள்ளகக் கணக்காய்வுத் திட்டம்

2019ஆம் ஆண்டுக்காக தயாரிக்கப்பட்ட உள்ளகக் கணக்காய்வுத் திட்டமானது நாணயச் சபையின் மதியுரைக் கணக்காய்வுக் குழுவினால் மீளாய்வு செய்யப்பட்டதுடன் அதற்கு நாணயச் சபையின் ஒப்புதலும் பெறப்பட்டது.

### 15.2 கணக்காய்வு பொறுப்புக்களை மேற்கொள்ளுதல்

**அ. செயன்முறை மற்றும் முறைமைக் கணக்காய்வுகள்**

2018இல், உள்ளகக் கணக்காய்வுத் திட்டத்திற்கமைவாக செய்முறை மற்றும் முறைமைக் கணக்காய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. ஒவ்வொரு கணக்காய்வுப் பொறுப்புக்களும் பொதுவாக, திட்டமிடல், செயற்படுத்தல், கணக்காய்வுப் பெறுபேறுகளைத் தொடர்பூட்டல் மற்றும் தீர்மானம் எடுத்தல் நடவடிக்கைகள் போன்ற நான்கு தொடர்ச்சியான படிமுறைகள் மூலம் மேற்கொள்ளப்பட்டன. கணக்காய்வு பெறுபேறுகளைத் தொடர்பூட்டுவதற்காக பெறுமதிமிக்க கணக்காய்வு அவதானிப்புக்களினை பெற்றுக்கொள்வதற்காக நெருக்கமான கூட்டங்களை நடாத்துதல், கணக்காய்வு அவதானிப்புக்களை எழுத்து வடிவில் தொடர்பூட்டுதல், வரைபு கணக்காய்வு அறிக்கையினை வழங்குதல் மற்றும் இறுதி அறிக்கையினை வழங்குதல் ஆகிய நான்கு படிச் செயன்முறை பின்பற்றப்பட்டது. இவ்வருட காலப்பகுதியில் நாணயச் சபை மதியுரைக் கணக்காய்வுக் குழுவின் பரிந்துரையுடனும் நாணயச் சபையின் ஒப்புதலுடனும் எழுத்து வடிவிலான தொடர்பூட்டலை நீக்கியதன் மூலம் இது மூன்று படிச்செயன்முறையாக மாற்றியமைக்கப்பட்டது. ஆண்டு காலப்பகுதியில் கணக்காய்வு விதந்துரைப்புக்களின் நடைமுறைப்படுத்தலானது செயன்முறை உரிமையாளர்களால் காலாண்டு அடிப்படையில் பின்பற்றப்பட்டது.

**ஆ. உடன் கணக்காய்வுகளை மேற்கொள்ளல்**

2018இல், தேவைப்படுத்தப்பட்டவாறு உடன் கணக்காய்வுகள் மேற்கொண்டதுடன், கணக்காய்வு முடிவுகள் செயன்முறை உரிமையாளர்கள் மற்றும் ஏனைய ஆர்வலர்களுக்கும் தொடர்பூட்டப்பட்டது.

**இ. விசேட பொறுப்புக்கள்**

நாணயச் சபையினுடைய அறிவுறுத்தலின்படி, ஊழியர் சேம நிதியத்தினுடைய பங்குரிமை மூலதனத்தின் முதலீடுகள் மற்றும் அரச பிணையங்கள் (2002 - முடிவு 2016) தொடர்பான கோப்புக்கள்/ஆவணங்கள் மீதான உடன் பரிசோதனையானது தடயவியல் கணக்காய்விற்கு வசதியளிப்பதற்காக உள்ளகக் கணக்காய்வுத் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்டது.

**ஈ. கணக்காய்வுகளை மேற்கொள்வதில் அடையப்பட்ட முன்னேற்றங்களை அறிக்கையிடல்**

கணக்காய்வு பொறுப்புக்களை மேற்கொள்வதில் காணப்படும் முன்னேற்றமானது மதியுரைக் கணக்காய்வுக் குழு மற்றும் நாணயச் சபைக்கு காலாண்டு அடிப்படையில் அறிக்கையிடப்பட்டது. செயற்பாட்டு அறிக்கைகள் அரையாண்டு அடிப்படையில் கணக்காய்வாளர் நாயகத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டன.

### 15.3 விழிப்புணர்ச்சி நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் பயிற்சியளித்தல் ஏற்பாடுகள்

உள்ளகக் கணக்காய்வுத் திணைக்களமானது "உள்ளகக் கணக்காய்வு வசதிப்படுத்தல் வழிகாட்டல்கள்" தொடர்பில் கணக்காய்வு இணைப்பு அலுவலர்களுக்காக காட்சிப்படுத்தலுடன் கூடிய விரிவுரையொன்றினை மேற்கொண்டது. மேலும், மனிதவளத் திணைக்களத்தின் வேண்டுகோளுக்கிணங்க உள்ளகக் கணக்காய்வுத் திணைக்களமானது ஆண்டு காலப்பகுதியில் பட்டதாரி மாணவர்களுக்கு உள்ளகக் கணக்காய்வு மற்றும் அத்துறைசார்ந்த பயிற்சிகளை தொடர்ந்து வழங்கியது.

### 15.4 நாணயச் சபை மதியுரைக் கணக்காய்வுக் குழுவிற்கு வசதியளித்தல்

மதியுரைக் கணக்காய்வுக் குழுவானது, நாணயச் சபையின் உப குழுவாக காணப்படுவதுடன் இக்குழுவானது நிதியியல் அறிக்கையிடல், உள்ளகக் கட்டுப்பாடுகளும் இடர்நேர்வு முகாமைத்துவ முறைமைகளும், இணங்குவிப்பு, தகவல் தெரியப்படுத்தல், மோசடி, உள்ளகக் கணக்காய்வு, வெளிவாரி கணக்காய்வு மற்றும் சபையினால் வழங்கப்பட்ட ஏதேனும் ஏனைய விடயங்கள் போன்றவை தொடர்பாக நாணயச்சபைக்கு ஆலோசனை வழங்குகின்றது. நாணயச் சபைக்கான செயலாளர் மதியுரைக் கணக்காய்வுக் குழுவிற்கும் செயலாளராக இருப்பார். உள்ளகக் கணக்காய்வுத் திணைக்களத்தின் பணிப்பாளர் மதியுரைக் கணக்காய்வுக் குழுவின் உதவிச் செயலாளராக இருப்பார். இதன்படி, ஆண்டுக் காலப்பகுதியில் உள்ளகக் கணக்காய்வுத் திணைக்களமானது மதியுரை கணக்காய்வுக் குழுவிற்கான செயலகப் பணி வசதிப்படுத்தல்களையும் வழங்கியது.

## 16. பன்னாட்டுத் தொழிற்பாடுகள்

நாணய விதிச்சட்டத்தின் நியதிகளின்படி, இலங்கை மத்திய வங்கி நாட்டின் அலுவல்சார் வெளிநாட்டுச் செலாவணி ஒதுக்குகளினை முகாமைப்படுத்துவதற்கு பொறுப்பாக இருக்கிறது. இது தொடர்பில் வெளிநாட்டு செலாவனி ஒதுக்குகள் முகாமைத்துவத் தொழிற்பாட்டினை செயலாற்றுகின்ற மற்றும் அதன் சுமுகமான தொழிற்பாட்டினை உறுதிசெய்வதற்காக உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையினை கண்காணிக்கின்ற பொறுப்புக்கள் பன்னாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

நாணய விதிச் சட்டமானது, பன்னாட்டு ஒதுக்குகளின் முகாமைத்துவம் மற்றும் உள்ளமைப்பு, ரூபாவின் பன்னாட்டு உறுதிப்பாட்டினைப் பேணுவதற்கான நடவடிக்கைகள், இலங்கை மத்திய வங்கியின் வெளிநாட்டுச் செலாவணி தொழிற்பாடுகளின் செயற்பரப்பு மற்றும் பன்னாட்டு ஒதுக்கு முகாமைத்துவம் தொடர்பான நாணயச் சபையின் அதிகாரம் மற்றும் பொறுப்புக்கள் என்பனவற்றை உள்ளடக்கும் விதத்தில் பன்னாட்டு ஒதுக்கு முகாமைத்துவத்திற்குத் தேவையான சட்டக் கட்டமைப்பினை வழங்குகின்றது. இவ்விடயத்தில் சொத்துவகைகள், இணைத்தரப்பினர்கள், சாதனங்கள் மற்றும் வழங்குநர்கள் என்பன தொடர்பான அளவீடுகளை நாணய விதிச்சட்டத்தின் 67ஆவது பிரிவு கையாள்கிறது. ஒதுக்கு முகாமைத்துவத்தின் பாதுகாப்பு, திரவத்தன்மை மற்றும் வருமானக் குறிக்கோள்கள் என்பனவற்றை மேம்படுத்துவதற்காக, நடவடிக்கைகளின் நோக்கெல்லையினை மேலும் விரிவுபடுத்துவதற்கு நாணயச் சபை ஒதுக்கு முகாமைத்துவ நடவடிக்கை தொடர்பில் பணிப்புரைகளை விடுக்க முடியும்.

### 16.1 பன்னாட்டு ஒதுக்கு முகாமைத்துவம்

பாதுகாப்பு, திரவத்தன்மை மற்றும் வருமான குறிக்கோள்களின் பெறுபேறு என்பனவற்றினைப் பரிசீலனையில் கொண்டு, வெளிநாட்டு ஒதுக்கு முகாமைத்துவக் குழுவின் மேற்பார்வையின் கீழ் நாணயச் சபையினால் திருத்தப்பட்டு ஒப்புதலளிக்கப்பட்ட வெளிநாட்டு ஒதுக்குகள் முகாமைத்துவ வழிகாட்டல்களுக்கு இணங்க பன்னாட்டு ஒதுக்குகளில் முதலீடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. பன்னாட்டு ஒதுக்குகள் பல முக்கிய நாணயங்களில் குறித்துரைக்கப்படுவதுடன் அவை முக்கியமாக நிலையான வருமானப் பிணையங்கள், பணச்சந்தை முதலீடுகள் மற்றும் தங்கம் என்பனவற்றில் முதலீடு செய்யப்படுகின்றன. நிலையான வருமான பிணையங்களின் சொத்துப்பட்டியல், உயர்ந்த வீதங்களைக் கொண்ட அரச பிணையங்கள், அரச உத்தரவாதப் பிணையங்கள், அரச முகவர்கள் மற்றும் உயர் தேசிய நிறுவனங்களின் பிணையங்கள் என்பனவற்றை உள்ளடக்கியிருந்தது. ஒதுக்கு முகாமைத்துவ நோக்கங்களுக்காக பன்னாட்டு தொழிற்பாடுகள் திணைக்களத்தின் கொடுக்கல்வாங்கல்கள், மத்திய வங்கிகள், உயர் வீதத்தினைக் கொண்ட வர்த்தக வங்கிகள் மற்றும் முதலீட்டு இல்லங்கள் என்பனவற்றுடன் மேற்கொள்ளப்பட்டதுடன், இவை வலுவான தன்மை மற்றும் நம்பகத்தன்மை என்பனவற்றின் பரிசீலனையில் கொண்டு இடர்நேர்வு முகாமைத்துவத்தின் மூலமான அவசியமான வரையறை ஒதுக்கீடுகளுக்குட்பட்டு இணைத்தரப்பு கடன் இடர்நேர்வு முகாமைத்துவ முறைமையில் குறித்துரைக்கப்பட்ட பிரமாணங்களுக்கமைவாக வெளிநாட்டு ஒதுக்குகள் முகாமைத்துவக் குழுவினால் ஒப்புதலளிக்கப்பட்ட இணைத்தரப்பினர்களாகக் காணப்பட்டன. வெளிநாட்டு ஒதுக்கு சொத்துப்பட்டியலின் சொத்துக்கள் மற்றும் நாணய உள்ளமைப்பினை தீர்மானிப்பதற்கு பரிசீலனையில் கொள்ளப்பட்ட முக்கிய காரணங்களாக திரவத் தேவைப்பாடுகள், படுகடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகள், உள்ளடங்கியிருந்த அதேவேளை, இடர்நேர்வு முகாமைத்துவ பிரமாணங்கள், வருமான உருவாக்க இயலாற்றல்கள் மற்றும் நாணயச் சபையின் குறித்துரைக்கப்பட்ட பணிப்புரைகள் என்பனவும் பரிசீலிக்கப்பட்டன.

2016 இலிருந்து இலங்கை மத்திய வங்கி வெளிநாட்டு நாணய ஒதுக்குகள் மற்றும் ஏனைய முதலீட்டுச் சொத்துப்பட்டியலின் வினைத்திறன்மிக்க முகாமைத்துவத்தினை இயலுமைப்படுத்துவதற்காக அலுவல்சார் துறை முதலீட்டு முகாமையாளர்களுக்கு ஆலோசனைப் பணிகளையும் பயிற்சியையும் வழங்கும் உலக வங்கியின் ஒதுக்கு ஆலோசனை மற்றும் முகாமைத்துவ நிகழ்ச்சித்திட்டத்துடன் தொடர்புபட்டிருந்தது. இதன்படி, மூலதனப் பாதுகாப்பு திரவத்தன்மைத் தேவைப்பாடுகள், வருமான உருவாக்கம் மற்றும் இலங்கை மத்திய வங்கியின் இடர்நேர்வினைத் தாங்கிக் கொள்ளும் தன்மை ஆகிய குறிக்கோள்களை முக்கிய பரிசீலனையில் கொண்ட இலங்கை மத்திய வங்கியின் பொறுப்பு அமைப்பினை அடிப்படையாகக் கொண்டு புதிய மாதிரியின் அடிப்படையில் உபாயச் சொத்து ஒதுக்கீடொன்று உருவாக்கப்பட்டது. 2016 இலிருந்து வருகின்றவாறு இலங்கை மத்திய வங்கியின் வெளிநாட்டு ஒதுக்குகள் மூன்று முக்கிய தொகுதிகளாக பிரிக்கப்பட்டதுடன் இவை வேறுபட்ட சொத்துப்பட்டியல்களை உள்ளடக்கியிருந்ததுடன் முதலீட்டுக் காலம், நாணய உள்ளமைப்பு மற்றும் சொத்து உள்ளமைப்பு என்பனவும் வழங்கப்பட்டிருந்தன. இத்தொகுதிகளின் கீழ் வரைவிலக்கணம் செய்யப்பட்ட ஒவ்வொரு சொத்துப்பட்டியலுக்கும் தொடர்பான அடிப்படை அளவுக்குறியீடொன்று வழங்கப்பட்டது. இதன்படி, செயலாற்ற மீளாய்வில் உலகளாவிய ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட மிகச் சிறந்த நடைமுறைகளுடன் இசைந்து செல்லும் விதத்தில் சொத்துப்பட்டியலின் செயலாற்றம் தொடர்பான அடிப்படை அளவுக்குறியீட்டிற்கெதிராக மீளாய்வு செய்யப்படுகின்றன.

ஒதுக்கு ஆலோசனை மற்றும் முகாமைத்துவ நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் உயர்தர அரசாங்க, அரசாங்க உத்தரவாதமளிக்கப்பட்ட மற்றும் உயர் தேசியப் பிணையங்களில் மூன்று வருட காலமொன்றுக்கு முதலிடுவதற்கு வெளிநாட்டு ஒதுக்குகளிலிருந்து ஐ.அ.டொலர்200 மில்லியன் ஒதுக்கீடு செய்ததன் மூலம், உலக வங்கித் திறைசேரியானது இலங்கை மத்திய வங்கி ஒதுக்கு முகாமைத்துவத்திற்கான வெளிவாரி முகாமையாளரொருவராக நியமிக்கப்பட்டது.

2018 காலப்பகுதியில் உலக வங்கியின் தொழில்நுட்ப நிபுணர்களின் உதவியுடன் இலங்கை மத்திய வங்கியில் உள்ளகப்பயிற்சியாக வெளிநாட்டு ஒதுக்குகள் முகாமைத்துவம் தொடர்பில் தொழில்நுட்ப உதவிக்கான இரண்டு செயலமர்வுகள் நடாத்தப்பட்டன. வெளிநாட்டு ஒதுக்குகள் மற்றும் சொத்துப்பட்டியல் முகாமைத்துவம் மற்றும் இடர்நேர்வு முகாமைத்துவம் மீதான தொழில்நுட்ப உதவி என்பன மீதான இடர்நேர்வு இயலளவினைக் கட்டியெழுப்புவதில் இச்செயலமர்வுகள் கவனம் செலுத்தியிருந்தன.

### 16.2 செயலாற்றப் பகுப்பாய்வு மற்றும் வசதிப்படுத்தல் நடவடிக்கைகள்

செயலாற்றப் பகுப்பாய்வு மற்றும் நடவடிக்கைகளை வசதிப்படுத்தலின் கீழ், இலங்கை மத்திய வங்கியின் ஒதுக்கு முகாமைத்துவத்துடன் தொடர்பான பின்வரும் முக்கிய தொழிற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன.

#### (அ) செயலாற்ற அளவுமுறை

பன்னாட்டு தொழிற்பாடுகள் திணைக்களமானது, மொத்த வருமான அணுகுமுறை மீது அதன் ஒதுக்கு முகாமைத்துவ நடவடிக்கையின் செயலாற்றத்தினை நாளாந்தம் மதிப்பிடுவதுடன் மாதாந்த,

அடிப்படையில் அதனை வெளிநாட்டு ஒதுக்கு முகாமைத்துவ குழுவிற்கும் காலாண்டு அடிப்படையில் நாணயச் சபைக்கும் ஒதுக்கு நிலைமை மற்றும் அதன் போக்கு என்பனவற்றின் பகுப்பாய்வுடன் சேர்த்து சமர்ப்பிக்கின்றது. நாணயச் சபையினால் ஒப்புதளிக்கப்பட்ட உபாய சொத்து ஒதுக்கீட்டின்படி, நிலையான வருமான பிணைகளின் முதலீடுகள் ஊடாக உருவாக்கப்பட்ட வருமானம் தெரிவுசெய்யப்பட்ட அடித்தள அளவீட்டு குறியீடுகளுக்கு எதிராக அளவிடப்படுகின்றன. வணிகர்களினால் எடுகோள் கொள்ளப்படுகின்ற மேலதிக இடர்நேர்வு மேலதிக வருமானத்தினை போதுமானளவிற்கு எதிரீடு செய்கின்றதா என்பதனைக் காட்டுவதன் மூலம் அடிப்படை அளவுக்குறியீடுகளுக்கு எதிரான ஒப்பீடு ஒதுக்குகள் முகாமைத்துவ உபாயத்தின் காத்திரமான தன்மையினை நிர்ணயிக்க உதவுகிறது. இவ்வணுகுமுறையானது, ஒப்புதலளிக்கப்பட்ட வழிகாட்டல்களுக்கு அமைவாக முதலீட்டின் மூலம் நியாயமான அளவொன்றில் எய்தப்பட்ட முகாமைத்துவ ஒதுக்குகளின் வருமானக் குறிக்கோள் என்பதனை அடையாளம் காண்பதற்கு பயன்மிக்கதாக இருக்கும். இச்செயன்முறையானது இடர்நேர்வுக் காரணிகளின் பல்வேறு மூலங்களினால் உருவாக்கப்பட்ட அளவீட்டுக் கூற்றுக்களினால் சொத்துப்பட்டியலின் செயலாற்றத்தினை மதிப்பிடுவதற்கு உதவும் என்பதுடன், கண்டறியப்பட்ட பெறுபேறுகள் மத்திய வங்கியின் வெளிநாட்டு ஒதுக்கு முகாமைத்துவ உபாயத்தின் பெறுமதிகூட்டப்பட்ட உள்ளீடுகளாகப் பயன்படுத்த முடியும். 2018இல் அறிமுகப்படுத்தப்பட்ட செயலாற்ற பண்பு மதிப்பீட்டினை பயன்படுத்தி வெளிநாட்டு ஒதுக்கு முகாமைத்துவத்தினூடாக ஈட்டப்பட்ட மொத்த வருவாய்களை மேலும் விரிவுபடுத்துவதற்கு முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளன.

**(ஆ) திறைசேரி முகாமைத்துவ முறைமையின் நிருவாகம்**

திறைசேரி முகாமைத்துவ முறைமையின் பிரதான பயன்படுத்துநரான பன்னாட்டு தொழிற்பாடுகள் திணைக்களம், முறைமையின் பொது நிருவாகத் தொழிற்பாட்டிற்கு பொறுப்பாகவிருப்பதுடன் ஏனைய பயன்பாட்டாளர் திணைக்களங்கள்,மென்பொருள் விற்பனையாளர்கள் மற்றும் உள்ளூர் பங்காளர் என்போரிடையே பொருத்தமான ஒருங்கிணைப்பினையும் உறுதி செய்கின்றது. அதற்கிணங்க, திறைசேரி முகாமைத்துவ முறைமையானது தொடர்புடைய திருத்தங்கள்/ இணைப்புகளுடன் இற்றைப்படுத்தப்படுகின்றமையினையும் திறைசேரி முகாமைத்துவ முறைமையின் வினைத்திறன்மிக்க தொழிற்பாடுகளை உறுதிப்படுத்துவதற்காக சுவிப்ற், அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமை மற்றும் பொதுப்பேரேடு போன்ற உள்ளக முறைமைகளுடனும் புளூம்போர்க் மற்றும் றொயிட்டர் போன்ற வெளிவாரி இடைமுகங்களுடனும் முழுமையாக இணைக்கப்பட்டிருப்பதனையும் பன்னாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களம் உறுதிப்படுத்துகிறது.

**(இ) நிதியல்லா இடர்நேர்வுகளையும் இணங்குவிப்புக்களையும் கண்காணித்தல்**

பன்னாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களம், ஒதுக்குகள் முகாமைத்துவ நடவடிக்கைகளுடன் தொடர்பான நிதியல்லா இடர்நேர்வு தோற்றப்பாட்டினை இனங்காண்பதுடன் நிதியல்லா இடர்நேர்வு முகாமைத்துவக் குழுவிற்கு தொடர்பான இடர்நேர்வு தணிப்பு நடவடிக்கைகளை காலாண்டு அடிப்படையில் முன்மொழிகின்றது.

**(ஈ) பணம் தூயதாக்கலுக்கெதிரான மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியிடலை ஒடுக்குதல் என்பன தொடர்பில் தற்போதைய இணைத்தரப்பினர்கள் அதனைப் பின்பற்றியமை/ இணங்கிக் கொண்டமை பற்றிய வருடாந்தம் மீளாய்வுகள் மேற்கொள்ளல்**

இலங்கை மத்திய வங்கியின் அனைத்து இணைத் தரப்பினர்களினாலும் மேற்கொள்ளப்பட்ட வெளிநாட்டுச் செலாவணிக் கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பில் பணம் தூயதாக்கலுக்கெதிரான மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியிடலை ஒடுக்குதல் தொடர்பில் விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகள், பன்னாட்டு சிறந்த நடைமுறைகள் என்பவற்றுடன் இணங்கியொழுகுவதனை உறுதிப்படுத்துவதற்காக, 2018இல் பன்னாட்டு தொழிற்பாடுகள் திணைக்களம் "இலங்கை மத்திய வங்கி மற்றும் வெளிநாட்டு இணைத்தரப்பினர்களுக்காக உங்கள் வாடிக்கையாளரைத் தெரிந்து கொள்ளுங்கள்/ வாடிக்கையாளரை நெருக்கமாகக் கவனித்தல் விதிகள்" இனை மேற்கொண்டது.

**16.3 உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தை அபிவிருத்திகள்**

இவ்வாண்டில், கூடுதலான நெகிழ்ச்சித்தன்மையினை அனுமதிக்கின்ற அதேவேளையில் செலாவணி வீதத்தில் மிகையான தளம்பல்களைக் கட்டுப்படுத்தும் நோக்குடன் பன்னாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களம் உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் சுமுகமான தொழிற்பாடுகளை உறுதப்படுத்துவதற்காக தொடர்ச்சியான முயற்சிகளை மேற்கொண்டது.

**(அ) உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தைக்கான தலையீடுகள்**

செலாவணி வீதத்தின் மிகையான தளம்பல்களைக் கட்டுப்படுத்தும் பொருட்டு, 2018 காலப்பகுதியில் மத்திய வங்கி தேவையான வேளைகளில் உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் தொடர்ந்தும் தலையிட்டது. அவ்வாறு ஈடுபடும் பொழுது குறிப்பீடு செய்வதற்கான கோரிக்கை என அழைக்கப்படும் வெளிப்படையான பொறிமுறையூடாக நிறைவேற்றத்தக்க புதிய தளம்பலை அடிப்படையாகக் கொண்ட தலையீட்டுக் கட்டமைப்பொன்று 2018 யூலையிலிருந்து இலங்கை மத்திய வங்கியினால் நடைமுறைப்படுத்தப்பட்டது. இப்புதிய பொறிமுறையானது, செலாவணி வீதத்தில் ஏற்படும் மிகையான தளம்பலை முகாமைப்படுத்துவதற்காக வெளிநாட்டுச் செலாவணி தலையீடுகளுக்காக (விற்கின்ற மற்றும் வாங்குகின்ற பக்கங்கள் இரண்டின் மீதும்) இலங்கை மத்திய வங்கி சந்தையில் நுழைகின்ற போது இருவழி குறியீடுகளை வழங்குவதன் மூலம் போட்டித்தன்மை வாய்ந்த விலைக்குறிப்பீடுகளை மேற்கொள்ள உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளை தேவைப்படுத்துவதனால் இது சந்தையின் வெளிப்படைத்தன்மையினை அதிகரிக்கிறது.

**(ஆ) புதிய கண்காணிப்பு முறைமை**

முன்னோக்கிய நடவடிக்கையொன்றாக, உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையினை அபிவிருத்தி செய்யும் விதத்தில் பன்னாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களம் வங்கிகளுக்கிடையிலான வெளிநாட்டுச் செலாவணிக் கொடுக்கல்வாங்கல்களை அதேநேரத்தில் அறிக்கையிடல் மற்றும் கண்காணிப்பதற்காக "மத்திய ஒருங்கிணைக்கப்பட்ட சந்தைக் கண்காணிப்பாளர்" என்ற பெயரில் புதிய ஒருங்கிணைக்கப்பட்ட சந்தைக் கண்காணிப்பு முறைமையினை ஆண்டின் தொடக்கத்தில் அறிமுகப்படுத்தியது. மேலும், உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளிடையே வெளிப்படைத்தன்மையினையும் போட்டித்தன்மையினையும் அதிகரிப்பதற்காக பன்னாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களம் உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் அதிகாரமளிக்கப்பட்ட பணத்தரகர்கள் என்பன சந்தை அசைவுகள் பற்றிய சிறந்த அறிவுடன் வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் வர்த்தகம் செய்வதற்கு அவற்றினை இயலுமைப்படுத்துவதற்காக மத்திய ஒருங்கிணைக்கப்பட்ட சந்தைக் கண்காணிப்பாளரின் கணனித் திரையில் அதேநேர அடிப்படையில் வங்கிகளுக்கிடையிலான உடன் சந்தையில் வர்த்தகம் செய்யப்பட்ட இறுதி ஐந்து உடனடி வர்த்தகத்தின் விபரங்களை வெளியிட ஆரம்பித்தது.

**(இ) தகவல்களைப் பரப்புதல்**

பன்னாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களம் ஐ.அ.டொலர்/ இலங்கை ரூபாவின் குறியீட்டுச் செலாவணி வீதத்தினை ஐம்பத்தாறு உலக நாணயக்களுக்கான குறியீட்டுச் செலாவணி வீதங்களுடனும் உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளால் தந்தி மாற்றலுக்காக வழங்கப்படும் ஒன்பது முக்கிய நாணயங்களுக்கெதிரான இலங்கை ரூபாவின் வாங்கள் மற்றும் விற்றல் வீதத்தின் சராசரியினையும் இலங்கை மத்திய வங்கியின் வெப்தளத்தில் நாளாந்த அடிப்படையில் வெளியிட்டது. மேலும், பன்னாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களம் அரச நிறுவனங்களுக்கும் பொதுமக்கள் உட்பட பல்வேறுபட்ட மற்றைய தரப்பினருக்கும் அவர்களின் கோரிக்கையின் அடிப்படையில் செலாவணி வீத தரவுகளை வழங்குவதன் மூலம் தகவல்களை பரப்பும் அதன் கடமைகளை மேற்கொண்டது.

**(ஈ) தேறிய ஆரம்ப நிலைமைக்கான திருத்தம்**

வெளிநாட்டுச் செலாவணிச் சந்தை அபிவிருத்திகளுக்கு ஆதரவளிக்கும் நோக்குடன் உரிமம் பெற்ற வங்கிகளின் வெளிநாட்டுச் செலாவணித் தொழிற்பாடுகளுக்கு ஏற்புடைத்தான தேறிய ஆரம்ப நிலைமை வரையறைகள் 2018 மேயிலும் ஒத்தோபரிலும் திருத்தப்பட்டன.

**(உ) சந்தைப் பங்கேற்பாளர்களுடனான இணைப்பு**

சந்தையில் காணப்பட்ட அழுத்தச் சூழ்நிலை தொடர்பில் பன்னாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களம் உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் அதிகாரமளிக்கப்பட்ட பணத்தரகர்கள் முக்கிய இறக்குமதியாளர்கள் மற்றும் ஏற்றுமதியாளர்களுடன் அவர்களது கரிசனைகளைக் கலந்துரையாடும் பொருட்டு பல்வேறு கூட்டங்களையும் நடத்தியதுடன் வெளிநாட்டுச் செலாவணிச் சந்தைத் தொழிற்பாடுகளை ஒழுங்குமுறைப்படுத்தும் நோக்குடன் அத்தகைய பிரச்சனைகளை வெல்வதற்காக பல வழிமுறைகளையும் மேற்கொண்டது. மேலும், பன்னாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களம் தகவல்களைப் பகிர்ந்து கொள்வதற்காகவும் உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணித் தொழிற்பாடுகள் தொடர்பான பிரச்சனைகளைக் கலந்துரையாடுவதற்காகவும் காலாண்டு அடிப்படையில் உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளின் திறைசேரியாளர்களுடன் கூட்டங்களை நடத்தியது. இவ்வாறு மேற்கொள்ளும் வேளையில் பன்னாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களம் தேவையான வேளைகளில் வெளிநாட்டுச் செலாவணி வர்த்தகம் தொடர்பில் உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளையும் அதிகாரமளிக்கப்பட்ட பணத்தரகர்களையும் மேற்பார்வை செய்யத் தொடங்கியதுடன் உலகாளவிய நியமங்களைச் சந்தைப் பங்கேற்பாளர்கள் பின்பற்றுவதனை உறுதிப்படுத்தும் விதத்தில் தேவையான நடவடிக்கைகளையும் எடுத்தது.

**(ஊ) சந்தை மனோபாவங்கள் மீதான அவதானிப்பு**

உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தை நடவடிக்கைகளின் கண்காணிப்பிற்குப் பொறுப்பான முக்கிய திணைக்களம் என்ற ரீதியில் பன்னாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களம் 2018ஆம் ஆண்டு முழுவதும் இலங்கை மத்திய வங்கியின் ஏனைய திணைக்களங்களினாலும் வெளிவாரி நிறுவனங்களினாலும் சமர்ப்பிக்கப்பட்ட பல்வேறு முன்மொழிவுகள், ஒழுங்குவிதிகள், திருத்தங்கள் மற்றும் கொள்கை விடயங்கள் தொடர்பில் அத்தகைய முன்மொழிவுகள் செலாவணி வீத அசைவுகள் மீதான அத்தகைய முன்மொழிவுகளின் சாத்தியமான தாக்கங்கள் பற்றி அதன் கருத்து, அவதானிப்பு மற்றும் விதந்துரைப்புக்களை வழங்கியது.

**(எ) பன்னாட்டுத் தொடர்புகளைப் பேணுதல்**

பன்னாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களம் இவ்வாண்டுப் பகுதியில் ப.நா.நிதியம் - விரிவாக்கப்பட்ட நிதிய வசதியை மீளாய்வு செய்வதற்காக இலங்கைக்கு விஜயம் செய்த பன்னாட்டு நாணய நிதிய அலுவலர் குழுவுடனும் தென்னாசிய பிரதேச பயிற்சி மற்றும் தொழில்நுட்ப உதவி மையத் தூதுக்குழுவுடனும் நெருக்கமாகப் பணியாற்றியதுடன் கிரமமான தரவு அறிக்கையிடல் தேவைப்பாடுகளின் பொறுப்புக்களையும் ஆற்றியது.

## 17. சட்டம் மற்றும் இணங்குவிப்பு

சட்டம் மற்றும் இணங்குவிப்பு திணைக்களமானது மத்திய வங்கி தனது மைய நியதிச்சட்ட நோக்கங்களை அடைவதில் சட்டம் மற்றும் நடவடிக்கை சார் அம்சங்களுடன் இணங்கும் நிலையை மேம்படுத்தும் நோக்கில் நிறுவப்பட்டுள்ளது. தற்போது, மத்திய வங்கியின் ஒழுங்குபடுத்தல் மற்றும் மேற்பார்வை அதிகாரத்தை மேம்படுத்துவதற்கும், புதிய சட்டங்களை உருவாக்குவதற்கும், மத்தியவங்கியினால் நிருவகிக்கப்படுகின்ற ஏலவே நடைமுறையிலுள்ள சட்டங்களில் திருத்தங்களை மேற்கொள்வதற்கும், மத்திய வங்கியின் அத்தகைய அதிகாரம், ஆளுகை மற்றும் பொறுப்புகூறும் தன்மை ஆகியவற்றை மத்திய வங்கியினால் நிறைவேற்றப்படுகின்ற அனைத்து செயற்பாடுகள் தொடர்பிலும் மேம்படுத்துவதற்கும், சாத்தியமான இணக்கமீறல்கள் அடையாளம் காணப்படும்போது முகாமைத்துவம் எடுக்கின்ற பொருத்தமான திருத்த நடவடிக்கைகளை உள்ளடக்கும் வகையிலான வினைத்திறன் மிக்க இணங்குவிப்பு கட்டமைப்பினை உருவாக்குவதற்கும் உரிய பொறுப்பு சட்டம் மற்றும் இணங்குவிப்பு திணைக்களத்திற்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் சட்டம் மற்றும் இணங்குவிப்பு திணைக்களம் பன்னாட்டுத் தரங்கள் மற்றும் சிறந்த நடைமுறைகளுக்கு இணையான சட்டம் மற்றும் நடைமுறைக் கட்டமைப்பினை உறுதிசெய்வதற்கு பரந்தளவிலான நடவடிக்கைகளை பொறுப்பேற்றுள்ளது. வங்கியின் அனைத்து உபாய முன்னுரிமைகளிலும் தீவிரமாக ஈடுபட்ட அதேவேளை சட்டம் மற்றும் இணங்குவிப்பு திணைக்களமானது 2018ஆம் ஆண்டின் போது பின்வரும் பிரதான செயற்பாடுகளை நிறைவேற்றியுள்ளது.

கடந்த ஆண்டின் போது சட்டம் மற்றும் இணங்குவிப்பு திணைக்களம் மத்திய வங்கியினால் நிருவகிக்கப்படுகின்ற நியதிச்சட்டங்களுக்கு திருத்தங்களை அறிமுகம் செய்வதற்கான செயற்பாடுகளில் ஈடுபட்டது. மத்திய வங்கியின் நாணயக்கொள்கை கட்டமைப்பினை நோக்கமாக கொண்ட நெகிழ்ச்சித்தன்மை வாய்ந்த பணவீக்க இலக்கிடல் நாணயக் கொள்கைக் கட்டமைப்பு, மேம்படுத்தப்பட்ட ஆளுகைத்தரங்கள் மற்றும் பேரண்ட முன்மதியுடைய அதிகாரம் ஆகியவற்றை வசதிப்படுத்துவதற்காக 1949ஆம் ஆண்டின் 58ஆம் இலக்க நாணய விதிச்சட்டத்திற்கு திருத்தங்கள் முன்மொழியப்பட்டன. திறைசேரி முறிகளின் வழங்குகையின் போது பொறுப்புக்கூறும் தன்மை மற்றும் வெளிப்படைத்தன்மை தேவைப்பாடுகளை மேம்படுத்துவதற்காக 1937ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க பதிவுசெய்யப்பட்ட பங்குகள் மற்றும் பிணையங்கள் கட்டளைச் சட்டம் மீளாய்வு செய்யப்பட்டது. ஒழுங்குமுறை மேற்பார்வை கட்டமைப்பினை மேம்படுத்துவதற்காக 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்திற்கு திருத்தங்கள் முன்மொழியப்பட்டன. மேலும், பொதுக்கடன் தீவிர முகாமைத்துவத்தினை எளிதாக்கம் செய்வதற்கு புதிய சட்டக் கட்டமைப்பாக 2018ஆம் ஆண்டின் 8ஆம் இலக்க, தீவிரப் பொறுப்பு முகாமைச் சட்டத்தினை அறிமுகம் செய்வதற்கு சட்டம் மற்றும் இணங்குவிப்பு திணைக்களம் தனது பங்களிப்பினை வழங்கியுள்ளது. நிதித்துறை ஒழுங்குமுறைப்படுத்துநர்கள் தமது நிலையான மற்றும் உறுதியான நிதியமைப்பு முறைக்கான நியதிச்சட்ட குறிக்கோள்களை அடைவதற்கும், நிதித்துறையில் பேரண்ட முன்மதியுடைய கண்காணிப்பை மேம்படுத்த பங்களிப்பினை செய்வதற்கும் சட்டம் மற்றும் இணங்குவிப்பு திணைக்களமானது நிதித்துறை ஒழுங்முறைப்படுத்துநர்கள் மத்தியில் தகவல்களை பரிமாற்றம் செய்வதற்கான சட்டமூலத்தின் வரைபில் ஈடுபட்டதோடு அமைச்சரவையின் அங்கீகாரத்தை பெற்றுள்ள குறித்த சட்டமூலம் இயற்றப்படுவதற்கு வசதியளிக்கும் விதத்தில் சட்ட வரைஞர் திணைக்களத்துடன் இணைந்து செயற்பட்டது. 1990ஆம் ஆண்டின் 2ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட

ஏற்பாடுகள்) சட்டத்திற்கு திருத்தங்களை அறிமுகம் செய்வதனூடாக வங்கித்தொழில் சட்டத்தின் கீழ் உரிமம் அளிக்கப்பட்டுள்ள அனைத்து வங்கிகளும் துரித நடவடிக்கை முறைகளை பயன்படுத்தி தம்மால் வழங்கபட்ட கடன்களை அறவிடுவதை இயலச்செய்வதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இதுபோன்ற அத்தகைய அனைத்து நடவடிக்கைகளும் நிதியியல் முறைமையின் உட்கட்டமைப்பினை வலுப்படுத்துவதை இறுதி இலக்காக கொண்டிருந்தன.

சட்டம் மற்றும் இணங்குவிப்பு திணைக்களம் அதனுடைய இணங்குவிப்பு இலக்குகளை அடையும்பொழுது சட்டம், நன்மதிப்பு மற்றும் இணங்குவிப்பு இடர்நேர்வுகளை கையாளும் பொருட்டு முழுமையான இணங்குவிப்பு கைநூல் ஒன்றை திணைக்கள ரீதியாகப் பன்முகப்படுத்தப்பட்ட கட்டமைப்பை வழங்குவதற்காக உருவாக்கியுள்ளது. மத்திய வங்கியின் ஆளுகைக் கட்டமைப்பினை வலுப்படுத்துவதற்காக தகவல் தெரிவிக்கும் கொள்கையினை அறிமுகம் செய்துள்ளது. ஆளுகைக் கட்டமைப்பில் நிலவுகின்ற கணிசமான இடைவெளியை நிரப்புவதற்காக இரண்டு நன்னடத்தைக் கோவை விதித் தொகுப்புகள் முறையே நாணயச் சபையின் உறுப்பினர்கள் மற்றும் மத்திய வங்கியின் ஊழியர்களுக்காக இறுதியாக்கப்பட்டுள்ளது. மேலும், சட்டம் மற்றும் இணங்குவிப்பு திணைக்களம் 2016ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க, தகவலறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் வழங்கப்பட்டுள்ள தேவைப்பாடுகளுக்கேற்ப மத்திய வங்கி இணங்கியொழுகுவதனை உறுதிசெய்வதற்கான முன்னெடுப்புகளை ஏனைய திணைக்களங்களுடன் இணைந்து மேற்கொண்டது.

நாணயச் சபை, மத்திய வங்கி அல்லது அதன் ஊழியர்கள் கட்சிக்காரர்களாக உள்ள வழக்குகளை உரிய அதிகாரிகளின் ஆலோசனையுடன் கையாள்வதற்கு சட்டம் மற்றும் இணங்குவிப்பு திணைக்களம் பொறுப்பாக இருந்தது. 2018ஆம் ஆண்டில் சட்டம் மற்றும் இணங்குவிப்புத் திணைக்களமானது மத்திய வங்கியினால் ஒழுங்குபடுத்தப்படுகின்ற பல்வேறு நிதி நிறுவனங்களுக்கெதிராகவும் அவற்றின் பணிப்பாளர்களுக்கு எதிராகவும் வழக்கு நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளது. இடர்பாடுகளுக்குட்பட்ட சில நிதி நிறுவனங்களுக்கெதிராக 2018ஆம் ஆண்டில் மத்திய வங்கியினால் முன்னெடுக்கப்பட்ட தீர்மான நடவடிக்கைகள் தொடர்பான ஆராய்வுகளில் சட்டம் மற்றும் இணங்குவிப்பு திணைக்களம் மேற்பார்வை திணைக்களங்களுடன் இணைந்து தீவிரமாக ஈடுபட்டதுடன் அத்தகைய ஒழுங்குபடுத்தல் நடவடிக்கைகளைக் குறைந்தளவு சட்ட இடர்நேர்வுகளுடன் திறம்பட நிறைவேற்றப்படுவதற்காக ஒழுங்குவிதிகள், ஒப்பந்தங்கள், செயற்பாட்டு நடைமுறைகள் போன்ற மற்றைய தேவையான சட்ட நிறைவேற்று சாதனங்களை உருவாக்கம் செய்தது.

மேலும், உள்ளக மற்றும் வெளிவாரி தரப்பினரை கையாளும் போது மத்திய வங்கியின் நலவுரித்துக்களைப் பாதுகாக்கும் நோக்கில் சட்டம் மற்றும் இணங்குவிப்பு திணைக்களமானது அத்தகைய சட்ட நிறைவேற்று சாதனங்கள் சட்டரீதியான தேவைப்பாடுகளுக்கேற்ப அமைந்துள்ளமையை உறுதிசெய்துகொள்ள ஒப்பந்தங்களை பரிசீலனை செய்வதில் ஈடுபட்டது. மத்திய வங்கியின் இதர செயற்பாட்டு நடவடிக்கைகள் தொடர்பில் சட்டம் மற்றும் இணங்குவிப்பு திணைக்களத்தின் கருத்துக்கள் மத்திய வங்கியின் ஏனைய திணைக்களங்களால் அத்தகைய நடவடிக்கைகளில் காணப்படுகின்ற சட்டம், இணங்குவிப்பு மற்றும் செயற்பாட்டு இடர்நேர்வுகளை குறைப்பதற்காக கோரப்படுகின்றன.

இவற்றுக்கு மேலதிகமாக, 2018ஆம் ஆண்டின் போது மத்திய வங்கியின் நடவடிக்கைகளுடன் தொடர்பான பல்வேறு விடயங்கள் தொடர்பாக மத்திய வங்கியினுள் நிறுவப்பட்ட விசேட குழுக்கள் பலவற்றை சட்டம் மற்றும் இணங்குவிப்பு திணைக்களம் பிரதிநிதித்துவப்படுத்தியுள்ளது.

2018ஆம் ஆண்டுக் காலப்பகுதியின் போது முக்கிய செயற்பாடுகளில் ஒன்றாக சட்டம் மற்றும் இணங்குவிப்பு திணைக்களமானது மத்திய வங்கியின் சட்ட ரீதியான நலவுரித்துக்களை பாதுகாப்பதில் வெற்றிகரமான பங்களிப்பை வழங்கி அதன் மூலம் அதன் பிரதான நோக்கங்கள் மற்றும் உபாய முன்னுரிமைகள் ஆகியவற்றை அடைவதனை உறுதி செய்துள்ளது.

## 18. பேரண்ட முன்மதியுடைய கண்காணிப்பு

நிதியியல் முறைமை உறுதிப்பாட்டினைப் பேணலானது இலங்கை மத்திய வங்கியின் இரண்டு நியதி நோக்கங்களில் ஒன்றாகும். இலங்கை மத்திய வங்கியானது நிதியியல் முறைமை உறுதிப்பாட்டு நோக்கத்தை அடையும் பொருட்டு தொடர்ச்சியான நுண்முன்மதியுடைய மேற்பார்வையை நடத்தி வருகிறது. பேரண்ட முன்மதியுடைய திணைக்களமானது மேற்கூறப்பட்ட அதேநோக்கத்தை அடைவதற்கு வசதிப்படுத்தும் முகமாக நுண்மதியுடைய மேற்பார்வைக்கு மேலதிகமாக நிதியியல் துறைக்குள் அடங்கிய உபதுறைகள் மீது பரந்தளவில் ஆய்வுகளை மேற்கொண்டு வருகின்றது. இதற்கு மேலாக பேரண்ட முன்மதியுடைய கண்காணிப்புத் திணைக்களம் உள்நாட்டு நிதியியல் முறைமை மற்றும் அதன் உறுதிப்பாட்டின் மீது பரந்த பேரண்டப் பொருளாதாரக் காரணிகளின் தாக்கத்தினையும் மதிப்பிடுகிறது. பேரண்ட முன்மதியுடைய கண்காணிப்புத் திணைக்களத்தால் ஒழுங்கு முறைப்படுத்தப்படுகின்ற நிதியியல் நிறுவனங்களால் அறிக்கையிடப்படுகின்ற தரவுகள் மற்றும் கணக்கெடுப்புகள் மூலம் பெறப்பட்ட தரவுகள் போன்றவற்றை உபயோகித்து நிதியியல் துறை கண்காணிப்பு மேற்கொள்ளப்படுகிறது. இம்மதிப்பீட்டின் முடிவுகள் இலங்கை மத்திய வங்கியின் நிதியியல் துறை கொள்கை உருவாக்கல் செயல்முறைக்கு குறிப்பிடத்தக்களவில் பங்களிக்கிறது. 2018இல் பேரண்ட முன்மதியுடைய கண்காணிப்புத் திணைக்களத்தால் மேற்கொள்ளப்பட்ட முக்கிய நடவடிக்கைகள் சுருக்கமாக கீழே தரப்பட்டுள்ளன.

### (அ) பேரண்ட முன்மதியுடைய கண்காணிப்பு

பேரண்ட முன்மதியுடைய கண்காணிப்புத் திணைக்களம் முறைமை சார் இடர்நேர்வு மற்றும்/ அல்லது முறைமைசார் இடர்நேர்வின் உருவாக்கத்தை அடையாளம் காணல் மற்றும் நிதியியல் முறைமை அடிப்படையான இடர்நேர்வுகளைத் தாக்குப்பிடிக்கும் இயலுமையை மதிப்பிடுவதற்கு பேரண்ட முன்மதியுடைய கண்காணிப்பை நடத்தியது. மேற்கூறப்பட்ட கண்காணிப்பு உலக மற்றும் உள்நாட்டு பேரண்டப் பொருளாதார அபிவிருத்திகள், நிதியியல் சந்தை நடவடிக்கைகள் மற்றும் நிதியியல் நிறுவனங்களின் இடர்நேர்வுத் தன்மையையும் உள்ளடக்கியுள்ளது. பேரண்ட முன்மதியுடைய கண்காணிப்புத் திணைக்களம் உள்நாட்டு நிதியியல் முறைமையின் வெவ்வேறான உப துறைகளிற்கு நிதியியல் முறைமை உறுதித்தன்மை செயலாற்றம் மற்றும் உறுதித்தன்மை போன்றவற்றின் அடிப்படையில் தொடர்ந்தும் பல எண்ணிக்கையான குறிகாட்டிகளைத் தொகுக்கின்றது. இதற்கு மேலாக வங்கித் துறைக்கான மேலிருந்து கீழான பேரண்ட அழுத்தச் சோதனை கொடுகடன் இடர்நேர்வு, வட்டி வீத இடர்நேர்வு மற்றும் அந்நிய செலாவணி இடர்நேர்வுகளின் தாக்கத்தை வங்கித்துறையின் மற்றும் தனித்தனி வங்கிகளின் மூலதன மட்டத்தை மதிப்பிடுவதற்கு நடாத்தப்பட்டுள்ளது. மேலும், பேரண்ட முன்மதியுடைய கண்காணிப்புத் திணைக்களம் தொடர்ந்தும் அழுத்தப் பரிசோதனை செயன்முறையை முன்னேற்றிக்கொண்டு வருகிறது. இந்த ஆய்வுகளின் பெறுபேறுகள் சபைப் பத்திரங்களாக காலாண்டு அடிப்படையில் நாணயச் சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. இதற்கு மேலாக, பேரண்ட முன்மதியுடைய கண்காணிப்புத் திணைக்களம் வாகனங்களின் இறக்குமதி மீதான பெறுமதிக்கெதிரான கொடுகடன்களின் தாக்கம், சராசரி நிறையேற்றப்பட்ட வட்டிவீதத்தின் மாறாத்தன்மை, வங்கித்துறையின் கட்டடத்துறை மற்றும் நுகர்வுக்கான கடன்களின் மீதான அளவுக்கதிகமான வெளிப்பாடு மற்றும் உரிமம்பெற்ற நிதிக்கம்பனிகள்/சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக் கம்பனிகள் சம்பந்தமான பிரச்சனைகள் அடங்கலாக நிதியியல் முறைமை உறுதிப்பாட்டின் மீதான கரிசனைகள் தொடர்பாக பல எண்ணிக்கையான பத்திரங்கள் நாணயச் சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

### (ஆ) கணக்கெடுப்புக்கள் மற்றும் தகவல் சேகரிப்பு

**முறைசார் இடர்நேர்வுக் கணக்கெடுப்பு:** பேரண்ட முன்மதியுடைய கண்காணிப்புத் திணைக்களம் 2017ஆம் ஆண்டில் ஆரம்பித்த முறைசார் கணக்கெடுப்பை ஆண்டிற்கு இருமுறை மேற்கொண்டு வருகிறது. முறைசார்

இடர்நோ்வுக் கணக்கெடுப்பு நிதியியல் முறைமை உறுதிப்பாட்டிற்குள்ள காத்திரமான இடர்நோ்வு மீதான சந்தைப் பங்கேற்பாளர்களின் கருத்தை அறிவதை நோக்காகக் கொண்டுள்ளது. இக்கணக்கெடுப்பின் பெறுபேறுகள் கொள்கை உருவாக்கத்திற்கும் ஒழுங்குமுறைப்படுத்தல் தேவைக்கும் முக்கியமானதாகக் கருதப்படுவது பங்குத்தாரர்களின் நிதியியல் முறைமை உறுதிப்பாட்டின் மீதான நம்பிக்கையை பெறும் அரிய சந்தா்ப்பம் இருப்பதாலாகும். மேலும், இப்பெறுபேறுகள் கொள்கை வகுப்பினா்களுக்கான நிதியியல் முறைமைக்கு வளா்ந்துவரும் இடர்நோ்வு தொடா்பான எதிா்காலப்பாா்வையை வழங்குவதனால் இடர்நோ்வுகளை முன்னுரிமைப்படுத்தி கையாளுவதற்கு உதவுகிறது. முறைமைசாா் இடர்நோ்வுகள் சிக்கலானவையாகக் கண்டறியப்பட்டுள்ளதுடன் பேரண்ட முன்மதியுடைய கண்காணிப்புத் திணைக்களத்திற்கு இதனை அளவிடுவது சிக்கலானதும் சவாலானதுமான முயற்சியாகவுள்ளது. இருந்தபோதிலும், முறைசாா் இடர்நோ்வு கணக்கெடுப்பின் மூலம் பெறப்பட்ட சந்தைப் பங்கேற்பாளா்களின் கருத்து நிதியியல் முறைமை உறுதிப்பாட்டின் நியாயமான நுண்ணறிவை வழங்குவதுடன் பேரண்ட முன்மதியுடைய கண்காணிப்பு நடவடிக்கைக்கு வலுவூட்டுவதாகவும் இருக்கிறது.

**வீட்டலகு கடன் நம்பகத்தன்மை கணக்கெடுப்பு:** இலங்கையில் வீட்டலகு கடன்படுநிலை மீதான நிதியியல் மற்றும் சமூக பிரச்சனைகளின் அதிகரிப்பு காரணமாக பேரண்ட முன்மதியுடைய கண்காணிப்புத் திணைக்களம் வீட்டலகு கடன் நம்பகத்தன்மை கணக்கெடுப்பை ஆரம்பித்தது. இக்கணக்கெடுப்பின் முதன்மை நோக்கமானது வீட்டலகுத் துறையின் நிதியியல் தரவுகள் சம்பந்தமாக விரிவான தரவுத் தொகுப்பை உருவாக்குவதாக இருக்கிறது. இது வீட்டலகின் கடன் மீளச்செலுத்தும் திறனையும் இதனால் நிதியியல் உறுதிப்பாட்டின் மீதான தாக்கத்தையும் மதிப்பீடு செய்வதற்கு உதவுகிறது. 2018இல், பேரண்ட முன்மதியுடைய கண்காணிப்புத் திணைக்களம் வீட்டலகுத் துறை தொடா்பான தேவையான தகவல்களைச் சேகரித்ததுடன் இத்தகவல்கள் வீட்டலகின் கடனளவு மற்றும் அவா்களின் முறையான மற்றும் முறையல்லாத மூலங்களில் கடன்பெறுகைத் தங்கியின்மையும் மதிப்பிட்டு அளவிடவும் உதவும்.

**தரவு சேகரித்தல்:** பேரண்ட முன்மதியுடைய கண்காணிப்புத் திணைக்களம் வெளிப்புற நிறுவனங்களிடமிருந்து கீழ்மட்ட விரிவான தரவுகளைத் தொடா்ந்தும் சேகரித்து தனது தரவுத் தளத்தை வளப்படுத்தியுள்ளது. திணைக்களம் தொடா்ந்தும் கிரமமாக வெளிப்புற நிறுவனங்களான கொழும்புப் பங்குச்சந்தை, கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம், தொழிற் திணைக்களம், ஓய்வூதியத் திணைக்களம், ஊழியா் நம்பிக்கை நிதிச் சபை, இலங்கை காப்புறுதி ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு, "சனச" கூட்டமைப்பு, இலங்கை பிணையங்கள் மற்றும் பரிமாற்றல் ஆணைக்குழு மற்றும் இலங்கை கூறுநம்பிக்கை சங்கம் ஆகியவற்றிலிருந்து தரவுகளைச் சேகரித்து வருகிறது. இதற்கு மேலாக, பேரண்ட முன்மதியுடைய கண்காணிப்புத் திணைக்களம் இலங்கை சுங்கத் திணைக்களத்திடமிருந்தும் கடன்தகவல் பணியகத்திடமிருந்தும் விரிவான கீழ்மட்ட தரவுகளைச் சேகரிக்க ஆரம்பித்து தனது ஆய்வை வளப்படுத்துகின்றது.

### (இ) இலங்கை மத்திய வங்கியின் நியதி அறிக்கைகள் மற்றும் ஏனைய வெளியீடுகளிற்குமான பங்களிப்பு

**2018இன் நிதியியல் முறைமை உறுதிப்பாட்டு மீளாய்வு:** 2018 திசெம்பரில் நிதியியல் முறைமை உறுதிப்பாட்டு மீளாய்வு வெளியிடப்பட்டது. இந்த அறிக்கையின் நோக்கமானது நிதியியல் நிறுவனங்கள், நிதியியல் சந்தைகள் மற்றும் உட்கட்டமைப்பு மீதான விரிவான இடர்நோ்வு மதிப்பீட்டை வெளிப்படுத்தலாகும். பேரண்ட முன்மதியுடைய கண்காணிப்புத் திணைக்களம் நாட்டின் நிதியியல் முறைமையின் செயலாற்றம், ஒழுங்குமுறைப்படுத்தல் அபிவிருத்திகள், தொடா்பான இடர்நோ்வு மற்றும் வாய்ப்பை பொதுமக்களிற்கு வருடாந்த அடிப்படையில் தெரிவிப்பதற்குத் தொடா்ந்தும் முயற்சி செய்யும். 2018இன் நிதியியல் முறைமை உறுதிப்பாட்டு மீளாய்வு மூன்று அத்தியாயங்களைக் கொண்டிருந்தது. அவையாவன நிதியியல் முறைமையைப் பாதிக்கும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு அபிவிருத்திகள், நிதியியல் துறை அபிவிருத்தியும் உறுதிப்பாடும் மற்றும் முக்கிய புதிய அபிவிருத்திகள் மீதான விசேட குறிப்புக்கள் ஆகும்.

**ஏனைய வெளியீடுகள்:** இலங்கை மத்திய வங்கியின் ஆண்டறிக்கை 2017இன் நிதியியல் துறை அபிவிருத்திகள் மற்றும் உறுதிப்பாடு எனும் அத்தியாயம் மற்றும் அண்மைய பொருளாதார அபிவிருத்திகள் 2018 ஆகியவற்றை பேரண்ட முன்மதியுடைய கண்காணிப்புத் திணைக்களம் ஒருங்கிணைத்து தொகுத்தது. மேலும், திணைக்களம் நிதியமைச்சருக்கு அனுப்பப்பட்ட செத்தெம்பா் 15 அறிக்கையின் நிதியியல் துறை அபிவிருத்திகள் எனும் அத்தியாயத்திற்கும் பங்களிப்புச் செய்துள்ளது. இந்த அறிக்கைகள் நாட்டின் நிதியியல் நிறுவனங்கள், நிதியியல் சந்தைகள் மற்றும் நிதியியல் உட்கட்டமைப்பு தொடா்பான செயலாற்றம், இடர்நோ்வு மற்றும் இடர்நோ்வு முகாமைத்துவம், மூலவள கிடைப்பனவு மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் அபிவிருத்திகள் மீதான குறிப்பிட்ட வலியுறுத்துகைகள் ஒவ்வொரு பகுதிக்கும் தொடா்பானவை விரிவாக ஆய்வுசெய்யப்பட்டு வழங்கப்பட்டுள்ளன. மேலும், திணைக்களம் மத்திய வங்கியின் ஏனைய வெளியீடுகளிற்கு நிதியியல் துறை தரவு தொகுத்தல் மற்றும் நிதியியல் முறைமையின் உபதுறைகளின் மீதான ஆய்வை வழங்கியும் பங்களிப்பு செய்துள்ளது.

### (ஈ) நிதியியல் முறைமை உறுதிப்பாடு தொடா்பான குழுக்களின் ஒருங்கிணைப்பு

**நிதியியல் முறைமை உறுதிப்பாட்டுக் குழு:** 2018இல் பேரண்ட முன்மதியுடைய கண்காணிப்புத் திணைக்களம் நிதியியல் முறைமை உறுதிப்பாட்டு குழுவிற்குச் செயலகமாகப் பணியாற்றியது. 2017இல் நிதியியல் முறைமை உறுதிப்பாட்டுக் குழு மீளவும் அமைக்கப்பட்டதுடன் முதலாவது கூட்டம் 2018 மே 17 ஆந் திகதி நடைபெற்றது. நிதியியல் முறைமை உறுதிப்பாட்டுக் குழுவானது உள்ளக திணைக்களங்களிற்கிடையேயான மன்றமாவதுடன் மத்திய வங்கியின் 14 திணைக்களங்களும் அத்திணைக்களங்களிற்குரிய உதவி மற்றும் பிரதி ஆளுநா்களும் பிரதிநிதித்துவம் வகிக்கின்றனா். இம்மன்றம் நிதியியல் துறையைப் பாதிக்கும் இடர்நோ்வை அடையாளம் காணுவதற்காகவும், இடர்நோ்வுகளைக் குறைப்பதற்கான அளவீடுகளை கலந்துரையாடுவதற்கும் நிதியியல் முறைமை உறுதிப்பாட்டை ஊக்குவிப்பதற்கான ஒருங்கிணைந்த முயற்சிக்காகவும் இருக்கின்றது. 2018 காலப்பகுதியில் மூன்று (03) கூட்டத்தொடா்கள் நடைபெற்றிருக்கின்றன.

**நிதியியல் முறைமை உறுதிப்பாட்டு ஆலோசனைக் குழு:** நிதியியல் முறைமை உறுதிப்பாட்டு ஆலோசனைக் குழு உறுப்பினா்கள் ஆளுநரால் நியமிக்கப்படுவா். இதில் இலங்கையின் நிதியியல் துறையின் பிரதானமான நிறுவனங்களிலிருந்து முக்கியமான அலுவலா்கள் அடங்குவதுடன் தற்போதைய குழு 17 அங்கத்தவா்களைக் கொண்டுள்ளது. இக்குழு மத்திய வங்கிக்கு நிதியியல் துறை பிரச்சனைகள் தொடா்பாக அறிவுரை மற்றும் பாா்வையை வழங்குகிறது. ஆண்டுகாலப்பகுதியில் 4 கூட்டத்தொடா்கள் இடம்பெற்றுள்ளன. பேரண்ட முன்மதியுடைய கண்காணிப்புத் திணைக்களம் நிதியியல் முறைமை உறுதிப்பாட்டுக் குழுவிற்கு செயலக பணியை வழங்குகின்றது.

## 19. கொடுப்பனவுகள் மற்றும் தீா்ப்பனவுகள்

கொடுப்பனவுகள் மற்றும் தீா்ப்பனவுகள் திணைக்களமானது நிதியங்களின் மாற்றங்களுக்கான முறைமைகளை நிறுவுவதற்கும் தொழிற்படுத்துவதற்கும் கொடுப்பனவுக் கடப்பாடுகளைத் தீா்ப்பனவு செய்வதற்கும் பங்கேற்கும் நிறுவனங்களுக்கு முறைமை விதிகளை வழங்குவதற்கும் மத்திய வங்கிக்கு அதிகாரங்களை வழங்குகின்ற நாணய விதிச்சட்டத்தின் கீழ் 62 அ பிரிவின் கீழ் மத்திய வங்கியிடம் ஒப்படைக்கப்பட்ட பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்காக 2002இல் நிறுவப்பட்டது. மேலும், 2005ஆம் ஆண்டின் 28ஆம் இலக்க கொடுப்பனவு மற்றும் தீா்ப்பனவு முறைமைகள் சட்டம் இயற்றப்பட்டதுடன் கொடுப்பனவு, தீா்ப்பனவு மற்றும் கொடுத்துத்தீா்த்தல் முறைமைகள் அத்துடன்

பணப்பணிகள் வழங்குனர்கள் ஆகியவற்றை ஒழுங்குமுறைப்படுத்தி மேற்பார்வை செய்வதற்கும் இச்சட்டத்தின் கீழ் மத்திய வங்கிக்கு பொறுப்பளிக்கப்பட்ட ஏனைய பொறுப்புகளை நிறைவேற்றுவதற்கும் கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் திணைக்களத்திற்கு பொறுப்பளிக்கப்பட்டது.

கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படும் முக்கிய தொழிற்பாடுகளாக அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமைகளின் தொழிற்பாடு, நிதியியல் கொடுக்கல்வாங்களுக்கான பின்னரங்கு அலுவலகப் பணிகளை வழங்குதல், சுவிப்ற் தொடர்பாடல் முறைமையின் முகாமைத்துவம், ஆசியத் தீர்ப்பனவு ஒன்றியத்தின் கீழான கொடுக்கல்வாங்கல்களுக்கு வசதியளித்தல், தேசிய கொடுப்பனவு ஆளியின் அபிவிருத்திக்கு வசதியளித்தல், கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் முறைமைகளின் ஒழுங்குமுறைப்படுத்தல் மற்றும் மேற்பார்வை என்பன காணப்படுகின்றன. 2018ஆம் ஆண்டின்போது செயலாற்றப்பட்ட தொழிற்பாடுகளின் சாரம்சம் கீழே தரப்பட்டுள்ளது.

### 19.1 அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமையின் தொழிற்பாடு

(அ) கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு திணைக்களமானது அதேநேர மொத்த அடிப்படையில் நெருக்கடி நேர பாரிய பெறுமதி பங்கேற்பாளர்களுக்கிடையிலான கொடுப்பனவுகளையும் அதேபோன்று வாடிக்கையாளர் கொடுப்பனவுகளையும் தீர்ப்பனவு செய்கின்ற அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமையினைத் தொடர்ந்தும் தொழிற்படுத்தியதுடன் அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமையின் சுமூகமான தொழிற்பாட்டினை உறுதிசெய்தது, மேலதிக நிதியங்களைக் கோரிய பங்கேற்கின்ற நிறுவனங்களுக்கு நாளுக்குள்ளான திரவத்தன்மை வசதியினை வழங்குவதனை கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் திணைக்களம் வசதிப்படுத்திக் கண்காணித்தது. அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமையின் பங்கேற்கும் நிறுவனங்களாக மத்திய வங்கி, உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள், தனி முதனிலை வணிகர்கள், ஊழியர் சேம நிதியம், கொழும்பு பங்குப் பரிவர்த்தனையின் மத்திய வைப்பக முறைமை என்பன காணப்படுகின்றன.

(ஆ) 2018இன் இறுதியிலுள்ளவாறு அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமையில் பங்கேற்கும் நிறுவனங்களின் எண்ணிக்கை 37 ஆகக் காணப்பட்டது. 2018இல் பேங்ஒவ் சைனா லிமிடெட் லங்காசெட்டில் முறைமையின் பங்கேற்பாளர் ஒருவராக அனுமதிக்கப்பட்டது. இவ்வாண்டுப் பகுதியில் அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமையினால் தீர்ப்பனவு செய்யப்பட்ட கொடுக்கல்வாங்கல்களின் மொத்த எண்ணிக்கை ரூ.100,473 பில்லியன் மொத்தப் பெறுமதி கொண்ட 405,200 ஆகக் காணப்பட்டது. அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமையினால் சராசரியாக ஒரு நாளைக்கு ரூ.419 பில்லியன் பெறுமதி கொண்ட 1,688 பரிவர்த்தனைகள் தீர்ப்பனவு செய்யப்பட்டன. சராசரியாக நாளுக்குள்ளேயான திரவ வசதியாக பங்கேற்பாளர்களுக்கு ரூ.55 பில்லியன் விடுவிக்கப்பட்டது. பன்னாட்டு ரீதியான சிறந்த நடைமுறைகளைக் கடைப்பிடித்து லங்காசெட்டில் முறைமையின் கிடைக்கப்பெறும் தன்மை ஆண்டுகாலப்பகுதியின் போது 99.90 சதவீத உயர்வான மட்டமொன்றில் பேணப்பட்டது.

### 19.2 மத்திய வங்கியின் நிதியியல் கொடுக்கல்வாங்கல்களுக்கான பின்னரங்கு அலுவலகப் பணிகளை வழங்கல்

#### (அ) வெளிநாட்டுச் செலாவணி கொடுக்கல்வாங்கல்களுக்கான பின்னரங்க அலுவலகப் பணிகள்

2018ஆம் ஆண்டுக் காலப்பகுதியில், மத்திய வங்கியின் பன்னாட்டு ஒதுக்கு முகாமைத்துவத்திற்கு வசதியளிப்பதற்காக வழங்கப்பட்ட பின்னரங்கு அலுவலகப் பணிகள் பின்வருவனவற்றை உள்ளடக்குகின்றன.

i. வெளிநாட்டு செலாவணி வர்த்தகப்படுத்தல் மற்றும் நிதியிடல், பணச்சந்தை நடவடிக்கைகள், நிலையான வருமானப் பிணையங்கள், தங்க வர்த்தகம், ஆசியத் தீர்ப்பனவு ஒன்றியம் மற்றும் மீள்கொள்வனவு/ நேர்மாற்று மீள்கொள்வனவு என்பவற்றுடன் தொடர்பான ஐ.அ.டொலர் 342.3 பில்லியன் தொகை கொண்ட 11,626 கொடுக்கல்வாங்கல்கள் 2018இல் தீர்ப்பனவு செய்யப்பட்டன.

ii. பன்னாட்டு சுவிப்ற் தர நியமங்களுடன் இணங்கியொழுகும் பொருட்டு, கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுகள் முறைமையானது 2018இல் மத்திய வங்கியின் திறைசேரி முகாமைத்துவ முறைமைக்கான தரப்படுத்தல் முன்பரிசோதனையில் ஈடுபட்டது.

#### (ஆ) திறந்த சந்தை தொழிற்பாடுகளுக்கான பின்னரங்கு அலுவலகப் பணிகள்

உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் முதனிலை வணிகர்களுடனான திறந்த சந்தை தொழிற்பாடுகளின் தொடர்புபட்ட தீர்ப்பனவானது திறந்த சந்தை பங்கேற்பாளர்களின் திரவத்தன்மை தேவைப்பாடுகளின் முகாமைத்துவத்திற்கு வசதியளிக்கும் விதத்தில் கொண்டு நடாத்தப்பட்டது. அதற்கமைய, 2018ஆம் ஆண்டுப்பகுதியில் கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுத் திணைக்களம் ரூ.1,125 பில்லியன் பெறுமதியான 722 மீள்கொள்வனவு கொடுக்கல்வாங்கல்களையும் ரூ.4,504 பில்லியன் பெறுமதியான 3,049 துணைநில் வைப்பு வசதி கொடுக்கல்வாங்கல்களையும் 3,057 பில்லியன் பெறுமதியான 4,005 துணைநில் கடன்வசதி கொடுக்கல்வாங்கல்களையும் ரூ.3,386 பில்லியன் பெறுமதியான 2,387 நேர்மாற்று கொள்வனவு கொடுக்கல்வாங்கல்களையும் 40 பில்லியன் பெறுமதியான 83 உடனடி கொள்வனவு கொடுக்கல்வாங்கல்களையும் 64 பில்லியன் பெறுமதியான 38 உடனடி விற்பனை கொடுக்கல்வாங்கல்களையும் ஏற்படுத்தி வசதியளித்தது.

### 19.3 சுவிப்ற் தொடர்பூட்டல் வலையமைப்பு முகாமைத்துவம்

கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுகள் திணைக்களமானது பாதுகாப்பான நிதியியல் செய்தியனுப்பல்களுக்காக சுவிப்ற் தளத்தினைப் பயன்படுத்துவதுடன் மத்திய வங்கியின் அனைத்துப் பயனாளிகளின் சார்பாக சுவிப்ற் முறைமையினை முகாமை செய்கின்றது. மென்பொருள், வன்பொருள், செயன்முறை, நடவடிக்கைமுறை மற்றும் இடர்நேர்வு முகாமைத்துவ கட்டுப்பாடுகள் தொடர்பாக சுவிப்ற் தலைமையகத்தினால் வரையறுக்கப்பட்ட நியமங்களுக்கு அமைவாக கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் திணைக்களமானது முறைமையினைப் பேணுகின்றது. ஆற்றல்வாய்ந்த தொடர்புகையினைப் பேணுவதற்காகவும் வினைத்திறன்மிக்க சேவையினை வழங்குவதற்காகவும் இலங்கை மத்திய வங்கி, லங்கா பினான்சியல் சேர்விஸ் பீறோ லிமிடெட் ஊடாக சுவிப்ற் நெட்டுக்கான தொடர்புகையினைப் பேணுகின்றது.

2018இல் இலங்கை மத்திய வங்கி CBCELKLX என்ற வர்த்தக அடையாளக் குறியீட்டுக்கான தொடர்பு முகாமைத்துவ பிரயோகத்துடன் சேர்ந்த வசதியினை இலங்கை மத்திய வங்கி நடைமுறைப்படுத்தியது. தொடர்பு முகாமைத்துவப் பிரயோகத்துடன் சேர்ந்த வசதியானது நிறுவனங்கள் சுவிப்ற் பின் செய்திகளை ஒவ்வொரு இணைத்தரப்பினருக்கும் அனுப்புவதற்கும் அவர்களிடமிருந்து பெற்றுக்கொள்வதையும் வரையறை செய்வதற்கு நிறுவனங்களை இயலச்செய்கின்றது. மேலும், தொழிற்பாட்டு மற்றும் இணங்குவித்தல் இடர்நேர்வுகளை தணிப்பதன் மூலம் நேரொத்த தொடர்புகள் மீது மேலதிக நுணுக்கத்தையும் கட்டுப்பாட்டினையும் வழங்குகின்றது. 2018இல் சுவிப்ற் முறைமையினை புதிய பதிப்பிற்கு (பதிப்பு 7.2.50) தரமுயர்த்தப்பட்டது. புதிய பதிப்பின் நோக்கம் அதன் பயன்பாட்டாளர்களுக்கு உயர் பாதுகாப்புமிக்க மிகவும் வினைத்திறன்மிக்கப் பணியினை வழங்குவதாகும். அதற்கமைய, இலங்கை மத்திய வங்கியானது புதிய பதிப்பினை வெற்றிகரமாகப் பொருத்தி சுவிப்ற் சேவையினால் அறிமுகப்படுத்தப்பட்ட வசதிகளின் பன்னாட்டு தரநியமங்களுடன் இணங்கியொழுகியது. இலங்கை மத்திய வங்கி ஆண்டு முழுவதும் சுவிப்ற் பிரிவின் பொருத்தமான பாதுகாப்பு மட்டத்தினையும் பேணியது.

### 19.4 ஆசியத் தீர்ப்பனவு ஒன்றியத்தின் கீழான தீர்ப்பனவுகளை வசதிப்படுத்தல்

2018ஆம் ஆண்டில் கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் திணைக்களம் ஆசியத் தீர்ப்பனவு ஒன்றியத்தின் அங்கத்துவ மத்திய வங்கிகளுக்கிடையேயான பல்புடை தேறிய அடிப்படையொன்றில் தகைமையுடைய வர்த்தகம் மற்றும் தொடர்புடைய கொடுக்கல்வாங்கல்கள் தீர்ப்பனவினைத் தொடர்ந்தும் வசதிப்படுத்தியது. ஆசியத் தீர்ப்பனவு ஒன்றியத்தின் பொறிமுறையூடாக மேற்கொள்ளப்பட்ட கொடுக்கல்வாங்கல்களின் மொத்த எண்ணிக்கை 6,467 ஆகவும் கொடுக்கல்வாங்கல்களின் பெறுமதி ரூ.585.0 பில்லியனாகவும் காணப்பட்டது. ஆசியத் தீர்ப்பனவு ஒன்றியத்தின் பொறிமுறையின் கீழ் மேற்கொள்ளப்பட்ட தேறிய தீர்ப்பனவுகளின் பெறுமதி ரூ.490.5 பில்லியனாகக் காணப்பட்டது.

துணை நில் தொழில்நுட்ப தயார்படுத்தல் கூட்டம் 2018 ஏப்பிறலில் கொழும்பில் நடைபெற்றதுடன் ஆசிய தீர்ப்பனவு ஒன்றியத்தின் பணிப்பாளர் நாயகமும் மத்திய வங்கிகள் மற்றும் நாணய அதிகார சபைகளின் 7 உறுப்பினர்களைக் கொண்ட பேராளர் குழுவொன்றும் இக்கூட்டத்தில் பங்கேற்றது. ஆசியத் தீர்ப்பனவு ஒன்றிய பணிப்பாளர் சபை மற்றும் துணை நில் தொழில்நுட்பக் குழுவின் 47ஆவது கூட்டம் 2018 யூனில் நேபாளத்தின் கத்மண்டு நகரில் நடைபெற்றது. மேற்குறித்த கூட்டத்தில் மத்திய வங்கியின் தொடர்புடைய அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

### 19.5 தேசியக் கொடுப்பனவு ஆளியின் அபிவிருத்தியினை வசதிப்படுத்தல்

"லங்கா பே" என்ற வர்த்தக நாமத்தின் கீழ் லங்கா கிளியர் பிறைவேட் லிமிடெட் நிறுவனத்தினால் தொழிற்படுத்தப்படுகின்ற பொதுவான அட்டை மற்றும் கொடுப்பனவு ஆளியின் துணை ஆளிகளை நடைமுறைப்படுத்தலினைக் கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுத் திணைக்களம் தொடர்ந்தும் வசதியளித்தது. நாட்டின் தேசிய கொடுப்பனவு ஆளியாக குறித்துரைக்கப்பட்ட பொதுவான அட்டை மற்றும் கொடுப்பனவு ஆளி ஐந்து துணை ஆளிகளைக் கொண்டுள்ளது அதாவது, பொதுவான தன்னியக்க கூற்றுப்பொறி ஆளி, பொதுவான இலத்திரனியல் நிதிமாற்றல் ஆளி, பகிரப்பட்ட தன்னியக்க கூற்றுப்பொறி ஆளி, பொதுவான விற்பனை மைய ஆளி மற்றும் பொதுவான நடமாடும் தொலைபேசி ஆளி என்பன ஆகும். பொதுவான அட்டை மற்றும் கொடுப்பனவு ஆளியின் நடைமுறைப்படுத்தலின் முன்னேற்றம் பின்வருமாறு சுருக்கமாகக் காட்டப்பட்டுள்ளது.

(அ) பொதுவான அட்டை மற்றும் கொடுப்பனவு ஆளியின் முதலாவது கட்டமான பொதுவான தன்னியக்க கூற்றுப்பொறி ஆளியானது 2013 யூலை மாதத்தில் நேரடி தொழிற்பாடுகளைத் தொடங்கியது. 2018இன் இறுதியில் பொதுவான தன்னியக்க கூற்றுப்பொறி ஆளியின் உறுப்புரிமை எண்ணிக்கை 28 நிறுவனங்களாக அதிகரித்தது. 2018 ஆண்டின் போது ரூ.344.6 பில்லியன் பெறுமதியான 40 மில்லியன் பெறுமதியான கொடுக்கல்வாங்கல்களைத் தீர்ப்பனவு செய்தது.

(ஆ) பொதுவான அட்டை மற்றும் கொடுப்பனவு ஆளியின் இரண்டாவது கட்டமான பொதுவான இலத்திரனியல் நிதி மாற்றல் ஆளியானது 2015 ஒகத்து 21ஆம் திகதி நடைமுறைப்படுத்தப்பட்டது. பொதுவான அட்டை மற்றும் இலத்திரனியல் நிதி மாற்றல் ஆளியானது தன்னியக்க கூற்றுப்பொறி இணையமூடான வங்கித்தொழில், செல்லிடத் தொலைபேசி வங்கித்தொழில், கிசொக்கள், கருமபீடத்தின் மீதான சேவை போன்ற பலகொடுப்பனவு வழிமுறைகள் ஊடாக கொடுப்பனவுகளைத் தீர்ப்பனவு செய்வதற்கான பொதுவான உட்கட்டமைப்பினை வழங்குகின்றது. 2018இன் போது 5 நிதியியல் நிறுவனங்கள் பொதுவான இலத்திரனியல் நிதி முறைமையின் ஒருங்கிணைந்து உறுப்பினர்களை 33ஆக அதிகரித்தது.

(இ) இலங்கை சுங்கத்திற்கு அதேநேர கொடுப்பனவுகளை வசதிப்படுத்துவதற்காக 2017 யூலை 20ஆம் திகதியன்று லங்காபே என்ற இணையத்தளம் ஊடான கொடுப்பனவுத் தளமானது தொடங்கப்பட்டது. தற்போது எட்டு உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் லங்கா பே என்ற இணையத்தளம் ஊடான கொடுப்பனவுத் தளத்துடன் இணைக்கப்பட்டுள்ளன. 2018இன் போது உள்நாட்டு இறைவரித் திணைக்களம், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு இலங்கை முதலீட்டுச் சபை மற்றும் இலங்கை துறைமுகங்கள் அதிகார சபை என்பவற்றை இணையத்தளமூடான கொடுப்பனவுகளை ஒருங்கிணைப்பதற்கு லங்கா பே கிளியர் பிறைவேட் லிமிடெட்டுக்கு அனுமதியளிக்கப்பட்டது.

(ஈ) பொதுவான தன்னியக்க கூற்றுப்பொறி ஆளி மற்றும் பொதுவான இலத்திரனியல் நிதி மாற்றல் ஆளி என்பவற்றின் ஊடாக மேற்கொள்ளப்படுகின்ற வங்கிகளுக்கிடையிலான கொடுக்கல்வாங்கல் தீர்ப்பனவுச் செயன்முறையினைச் சீர்படுத்தும் பொருட்டு அதேநேர மொத்த தீர்ப்பனவு முறையில் தீர்ப்பனவு சுழற்சிகளின் எண்ணிக்கை 4 ஆக அதிகரிக்கப்பட்டது. மேலும், பொதுவான தன்னியக்க கூற்றுப்பொறி ஆளி மற்றும் பொதுவான இலத்திரனியல் நிதி மாற்றல் ஆளி என்பவற்றில் முதனிலை பங்கேற்பாளர்களுக்கான குறைந்தபட்ச பொறுப்பு வரையறைகளை குறித்துரைக்கின்ற சுற்றறிக்கையொன்று வழங்கப்பட்டது.

(உ) பொதுவான அட்டை மற்றும் கொடுப்பனவு ஆளியின் நான்காம் கட்டமான பொதுவான விற்பனை மைய ஆளி உள்நாட்டு விற்பனை கொடுக்கல்வாங்கல்களை ஆளிப்படுத்தல் மற்றும் தீர்ப்பனவு செய்தல் என்பவற்றை வசதிப்படுத்தும். அதற்கமைய, விற்பனை மைய ஆளியின் சுமூகமான தொழிற்பாடுகளை உறுதிசெய்யும் பொருட்டு கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுத் திணைக்களம் பொதுவான விற்பனை மைய ஆளித் தொழிற்பாடுகளின் மீது 2018இன் இரண்டாம் இலக்க பொதுப் பணிப்புரையினை வழங்கியது.

### 19.6 கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமைகளின் ஒழுங்குபடுத்தல் மற்றும் மேற்பார்வை செய்தல்

இலத்திரனியல் கொடுப்பனவு முறைமைகளின் பாதுகாப்புத் தன்மை மற்றும் செயற்றிறனை உறுதிப்படுத்துவதற்கான கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுத் திணைக்களம் தனது ஒழுங்குபடுத்தல் மற்றும் மேற்பார்வை செய்தல் நடவடிக்கைகளைத் தொடர்ந்தது. இதற்கேற்ப, 2018இல் கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுத் திணைக்களத்தால் மேற்கொள்ளப்பட்ட முக்கிய நடவடிக்கைகள் வருமாறு,

(அ) கொடுப்பனவு தளவழங்குனர்கள் ஊடாக கொடுப்பனவு அட்டை அடிப்படையிலான கொடுக்கல்வாங்கல்களை பெற்றுக்கொள்வதன் மீது நிபந்தனைகளை விதந்துரைப்பதற்கு 2018 சனவரியில் சேவை வழங்குனர்கள் ஊடாக கொடுப்பனவு அட்டை அடிப்படையிலான இலத்திரனியல் வணிக கொடுக்கல்வாங்கல்களை பெற்றுக்கொள்ளுதல் தொடர்பான பணிப்புரைகள் வழங்கப்பட்டன. இ-வணிகக் கொடுக்கல்வாங்கல்களில் ஈடுபடுகின்ற மூன்றாம் தரப்பு கொடுப்பனவு தளவழங்குனர்களின் இடர்நேர்வுகளைக் குறைக்கின்ற அதேவேளை வணிகர்களுக்கு உரிய கால கொடுப்பனவுகளை உறுதிசெய்கின்ற நோக்குடன் இப்பணிப்புரை வழங்கப்பட்டது.

(ஆ) நிதியியல் நிறுவனங்களினால் பயன்படுத்தப்படும் செல்லிடத் தொலைபேசி செயலிகளுக்கான குறைந்தபட்ச இணங்குவித்தல் தர நியமங்களை நிர்ணயிப்பதற்கு கொடுப்பனவுடன் தொடர்புடைய செல்லிடத் தொலைபேசி செயலிகளுக்கான குறைந்தபட்ச இணங்குவித்தல் தரநியமங்கள் மீதான வழிகாட்டலினை 2018 சனவரியில் வழங்கியது.

(இ) 2013இன் 1ஆம் இலக்க கொடுப்பனவு அட்டைகள் மற்றும் செல்லிட கொடுப்பனவுகள் முறைமைகள் ஒழுங்கு விதிகளின் ஏற்பாடுகளின் நியதிகளின் அடிப்படையில் பற்று அட்டைகளை விநியோகிப்பதற்கான உரிமம்பெற்ற கொடுப்பனவு அட்டையின் சேவை வழங்குனராக பற்று அட்டை விநியோகிப்பதற்கான அதிகாரம் வழங்கப்பட்ட ஒரு உரிமம்பெற்ற வர்த்தக வங்கிக்கும் இரண்டு

நிதியியல் கம்பனிகளுக்கும் அனுமதியளிக்கப்பட்டுள்ளது. மேலும், கொடுப்பனவு அட்டைகளின் நிதியியல் கையேற்பவர் ஒருவராக தொழிற்படுவதற்கு உரிமம்பெற்ற கொடுப்பனவு அட்டைகள் சேவை வழங்குனராக உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியொன்றுக்கு அனுமதி வழங்கப்பட்டது.

(ஈ) சொல்லப்பட்ட முறைமைகளின் நம்பகத்தன்மையினையும் சீரான தொழிற்பாட்டையும் உறுதிசெய்யும் பொருட்டு ஆக்கப்பட்ட பரிந்துரைகளின் நடைமுறைப்படுத்தலினை உறுதிசெய்வதற்கு செல்லிடத் தொலைபேசி அடிப்படையாகக் கொண்ட இ-பண முறைமைகளின் உரிமம்பெற்ற தொழில்படுத்துனர்கள் மீது தலத்திலான மேற்பார்வை மேற்கொள்ளப்பட்டது.

(உ) அவசரமான நிலைமைகளில் வியாபாரத் தொழிற்பாடுகளை தொடர்வதற்கான அவர்களின் இயலுமையினை உறுதிசெய்யும் பொருட்டு லங்காசெட்டில் பங்கேற்பாளர்களினதும் லங்காகிளியர் பிறைவட் லிமிடெட்டினதும் தொழில் தொடர்ச்சி திட்டங்கள் மதிப்பிடப்பட்டன.

### 19.7 தேசிய கொடுப்பனவு சபை

கொடுப்பனவு முறைமைகள் தொடர்பான தொழிற்துறை மற்றும் கண்காணிப்பு குழுவானது தேசிய கொடுப்பனவுச் சபையானது நாட்டின் கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமைகளுக்கு தோற்றம் பெற்றுவரும் புத்தாக்க கொடுப்பனவு தொழில்நுட்பங்களை அறிமுகப்படுத்தும் சாத்தியப்பாட்டினைக் கண்டறியும் பொருட்டு பின்டெக் துறை மற்றும் டிஜிட்டல் பேரேட்டு தொழில்நுட்பம் என்பவற்றின் அபிவிருத்திகளை ஆய்வுசெய்வதற்கு குழுக்களை நியமித்தது. இக்குழுக்களினால் ஆக்கப்பட்ட பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதற்கு கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுத் திணைக்களம் பின்வரும் நடவடிக்கைகளை ஆரம்பித்தது.

(அ) வாடிக்கையாளர் வசதிகளையும் பாதுகாப்பினையும் ஊக்குவிப்பதற்கும் வேறுபட்ட கொடுப்பனவு பொறிமுறைகளினதும் சாதனங்களினதும் ஒன்றுக்கொன்று இடையிலான தொழிற்படும் தன்மையினை உறுதிசெய்வதற்கும் 2018 ஒத்தோபரில் தேசிய உடனடி பதிலிறுத்தல் (QR) குறியீட்டி நியமம் வழங்கப்பட்டது.

(ஆ) போக்குவரத்துத் துறையில் தேசிய இடமாறல் அட்டையினைத் தயாரிப்பதற்கும் பயணச்சீட்டு மற்றும் கட்டணங்களைச் சேகரித்தலுக்கான உட்கட்டமைப்பு முறைமைக்கும் வசதியளிக்கப்பட்டது. இம்முயற்சியானது போக்குவரத்து கைத்தொழில் கொடுப்பனவு பொறிமுறைகளைத் தரப்படுத்தி குறைந்த காசுப் பயன்படுத்தும் சமூகமொன்று என்ற தேசிய குறிக்கோளுக்கும் பங்களிக்கும்.

(இ) ஒழுங்குமுறைப்படுத்தப்பட்ட தேவைப்பாடுகளை மீறிச்செயற்படாது தமது உற்பத்திகளையும் சேவைகளையும் பரிசோதிப்பதற்கு புத்தாக்குனர்களுக்கான கட்டுப்படுத்தப்பட்ட சூழல் ஒன்றில் பாதுகாப்பான இடவசதியினை வழங்கும் பொருட்டு பின்டெக் ஒழுங்குமுறைப்படுத்தல் பரிசோதனைக் கட்டமைப்பொன்றினை நிறுவுவதற்கு செயன்முறை ஆரம்பிக்கப்பட்டது. அதற்கமைய ஒழுங்குமுறைப்படுத்தல் பரிசோதனைக் கட்டமைப்பின் நோக்கெல்லையினை நிர்ணயிப்பதற்கு அவர்களது அறிவினையும் அனுபவத்தினையும் பகிர்ந்து கொள்ளுமாறு ஆர்வமுள்ள தரப்பினர்களுக்கு கோரிக்கை விடுக்கப்பட்டது.

(ஈ) நிதியியல் துறையில் டிஜிட்டல் பேரேட்டு தொழில்நுட்பத்தினைப் பின்பற்றுவதனை மேலும் ஆய்வுசெய்வதற்காக செயலாற்றக்குழு ஒன்று நியமிக்கப்பட்டது. வங்கித்தொழில் துறையில் பயன்படுத்தப்படவுள்ள பகிரப்பட்ட உமது வாடிக்கையாளர்களை தெரிந்துகொள்ளுங்கள் டிஜிட்டல் என்ற பேரேட்டு தீர்வு ஒன்று பற்றிய சாத்தியவளத்தினை செயலாற்றக்குழு மதிப்பிடுகின்றது.

### 19.8 பொதுமக்கள் விழிப்பூட்டல்

நாட்டில் தொழிற்படுகின்ற கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் முறைகள் மீதான தகவல்களையும் புள்ளிவிபரங்களையும் பரப்புவதற்காக கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு திணைக்களம் இலங்கை மத்திய வங்கியின் வெப்தளத்தில் “கொடுப்பனவுச் செய்தித் திரட்டு” என்ற காலாண்டு வெளியீட்டினை தொடர்ச்சியாக வெளியிட்டு வருகின்றது. மேலும், கொடுப்பனவு முறைமைகள் மற்றும் ஏனைய தொடர்பான விடயங்கள் பற்றி பொதுமக்கள் மற்றும் வங்கித்தொழில் சமூகத்திற்கு அறிவூட்டுவதற்காக தேவையின் அடிப்படையில், விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்களை நடத்தியது. தேசிய உடனடி பதிலிறுத்தல் (QR) குறியீட்டினை ஊக்குவிக்கும் பொருட்டு ஞசு குறியீட்டினை அடிப்படையாகக் கொண்ட கொடுப்பனவுகள் பற்றி வாடிக்கையாளர்களுக்கும் வணிகர்களுக்கும் அறிவூட்டுவதற்கு நாளாந்த பத்திரிகைகளில் விளம்பரமொன்று வெளியிடப்பட்டது. மேலும், மறைகுறி நாணயங்களைப் பயன்படுத்துவதில் ஏற்படக்கூடிய சாத்தியமான இடர்நேர்வுகள் பற்றி பொதுமக்களுக்கு எச்சரிக்கை விடுத்து 2018 ஏப்பிறலில் பத்திரிகை வெளியீடொன்று வழங்கப்பட்டது.

## 20. கொள்கை மீளாய்வு மற்றும் கண்காணிப்பு

கொள்கை மீளாய்வு மற்றும் கண்காணிப்புத் திணைக்களமானது வங்கியின் நடுத்தர கால மற்றும் நீண்ட கால இலக்குகளை மெய்ப்பிக்கும் பொருட்டு வங்கியின் ஒட்டுமொத்த உபாயத் திட்டமிடல் செயன்முறையினை வசதிப்படுத்துவதற்கு பொறுப்புடையதாகும். இக்குறிக்கோளுக்கு அமைவாக திணைக்களமானது மீளாய்வுக்குட்படும் ஆண்டின் போது வருடாந்த மீளாய்வுக் கூட்டத்தினை நடாத்தி உபாயத் திட்டம் மற்றும் திணைக்களசார் நடவடிக்கைத் திட்டங்களின் அமுலாக்கத்தின் காலாண்டு அடிப்படையான முன்னேற்றத்தினை மீளாய்வு செய்து நிறுவன முகாமைத்துவக் குழுவிற்கும் நாணயச் சபைக்கும் அறிக்கைகளைச் சமர்ப்பித்தது.

### 20.1 உபாயத் திட்டம் 2018 - 2020 மற்றும் உபாய முன்னுரிமைகள் 2018 - 2020 என்பனவற்றைத் தயாரித்தல்

இலங்கை மத்திய வங்கியின் உபாயத் திட்டம் 2018 - 2020, உபாய முன்னுரிமைகள் மற்றும் தனிப்பட்ட திணைக்களசார் நடவடிக்கைத் திட்டங்கள் தொடர்பாக வங்கி முழுவதும் திணைக்களம் சார்ந்த அலுவலர்களுக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சிகளைத் தொடர்ந்து 2018 சனவரி 02ஆம் திகதியன்று நடைபெற்ற புத்தாண்டு பணி தொடங்கும் வைபவத்தில் வெளியிடப்பட்டது. 2018இலிருந்து ஆரம்பிக்கின்ற மூன்றாண்டு காலப்பகுதிக்கான இனங்காணப்பட்ட வங்கி முழுவதுமான ஆறு உபாய முன்னுரிமைகள் பின்வருமாறு:

i. காத்திரமான நெகிழ்வுத்தன்மை மிக்க பணவீக்க இலக்கிடல் கட்டமைப்பொன்றினை அறிமுகப்படுத்தல்

ii. நிலைபெறத்தக்க வளர்ச்சிக்குத் துணையளிப்பதற்காக இயக்கவாற்றலும் தாக்குப்பிடிக்கும் தன்மையும் மிக்க நிதியியல் துறையினை ஊக்குவித்தல்

iii. கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் முறைமைகளின் உட்கட்டமைப்பினை நவீனமயப்படுத்தல் : குறைந்தளவு பண பயன்பாட்டு சமூகமொன்றினை நோக்கிய பாறையை வகுத்தல்.

iv. படுகடன் நிலைபெறும் தன்மையை உறுதி செய்கின்ற முன்மதிமிக்க படுகடன் முகாமைத்துவத்தினை மேம்படுத்தல்

v. அனைத்தையுமுள்ளடக்கிய மனிதவள உபாயமொன்றினை வகுத்தலும் நடைமுறைப்படுத்தலும்

vi. தொழில்முயற்சி முழுவதுமான இடர்நேர்வு முகாமைத்துவக் கட்டமைப்பினை நடைமுறைப்படுத்தி இணங்குவித்தலினை வலுப்படுத்தல்.

உபாய முன்னுரிமைகள் தொடர்பில் காலம் குறிக்கப்பட்ட உபாய நடவடிக்கைகள் செயலணிகளால் இனங்காணப்பட்டு ஒவ்வொரு உபாய முன்னுரிமைக்காகவும் தொடர்புடைய திணைக்களங்கள் மூலம் உபாய முக்கிய செயலாற்றல் குறிகாட்டிகள் இனங்காணப்பட்டன. உபாய முன்னுரிமைகளை ஒருங்கிணைத்து நடைமுறைப்படுத்துவதற்கு வழிநடத்தல் திணைக்களம் பொறுப்பாக இருந்த அதேவேளை கொள்கை மீளாய்வு மற்றும் கண்காணிப்புத் திணைக்களமானது வழிநடத்தல் திணைக்களத்துடனான கூட்டிணைப்புடன் உபாய முன்னுரிமைகள் முன்னேற்றத்தினை உன்னிப்பாகக் கண்காணித்தது.

### 20.2 முன்னேற்றத்தினை மீளாய்வு செய்து முகாமைத்துவத்திற்கு அறிக்கையிடல்

உபாய முன்னுரிமைகள் மற்றும் திணைக்களசார் நடவடிக்கைத் திட்டங்கள் 2018இன் நடைமுறைப்படுத்தலின் முன்னேற்றம் ஆண்டின் போது காலாண்டு மீளாய்வுக் கூட்டங்களில் மீளாய்வு செய்யப்பட்டன. "முழுமையாக நிறைவேற்றப்பட்டவை", "பகுதியளவில் நிறைவேற்றப்பட்டவை" அல்லது "எதிர்பார்க்கப்பட்டவாறு ஆரம்பிக்கப்படாதவை" என முக்கிய செயலாற்றுகைக் குறிகாட்டிகளை இனங்காண்பதற்கு முக்கிய செயலாற்றக் குறிகாட்டிகளின் வர்ண - வகைப்படுத்தல் அறிமுகப்படுத்தப்பட்டமை முன்னேற்ற மீளாய்வுப் பொறிமுறைக்கு மேலதிக அம்சமொன்றாக இருந்தது. திணைக்களங்கள் மூலம் முக்கிய செயலாற்றக் குறிகாட்டிகளை உரிய காலத்தில் நிறைவேற்றுவதற்குத் தடையாக இருந்த காரணங்களை இனங்காண்பதற்கும் அதேபோன்று சீர்படுத்தல் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும் இது வாய்ப்பளித்தது. முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்களைத் தொடர்ந்து, நிறுவன முகாமைத்துவக் குழுவிற்கும் நாணயச் சபைக்கும் அனைத்தையுமுள்ளடக்கிய அறிக்கையொன்று சமர்ப்பிக்கப்பட்டது. 2018இன் இறுதியிலுள்ளவாறு உபாய நடவடிக்கைகளினதும் தொழிற்பாட்டு நடவடிக்கைகளினதும் அடைவு மட்டம் ஒட்டுமொத்தமாக 92.69 சதவீத அடைவொன்றினைத் தோற்றுவித்து, முறையே 90.57 சதவீதமாகவும் 93.42 சதவீதமாகவும் காணப்பட்டது.

### 20.3 உபாயத் திட்டமிடலின் மீளாய்வுக் கூட்டம் - 2018

கொள்கை மீளாய்வு மற்றும் கண்காணிப்புத் திணைக்களமானது எதிர்வரும் ஆண்டிற்கான வங்கியின் கொள்கைகள், முதல் மூன்றாண்டு காலப்பகுதிக்கான உபாய முன்னுரிமைகள் மற்றும் திணைக்களசார் நடவடிக்கைத் திட்டங்களைக் கலந்துரையாடுவதற்கு நாணயச்சபை மற்றும் மூத்த முகாமைத்துவத்தின் பங்கேற்புடன் இலங்கை மத்திய வங்கியின் கேட்போர் கூடத்தில் 2018 ஒத்தோபர் 20 - 21 வரை 13ஆவது தொடர் உபாயத் திட்டமிடலின் மீளாய்வுக் கூட்டத்தினை நடாத்தியது. மீளாய்வுக் கூட்டத்திற்கு முன்னர் கொள்கை மீளாய்வு மற்றும் கண்காணிப்புத் திணைக்களமானது, 2018 சனவரி - செத்தெம்பர் காலத்திற்கான முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்களை நடத்தி முன்னேற்றத்தினை மீளாய்வுக் கூட்டத்தில் சமர்ப்பித்தது. மேலும், திணைக்களசார் நடவடிக்கைத் திட்டம் 2019 மீளாய்வுக் கூட்டத்தில் விரிவாகக் கலந்துரையாடப்பட்டு மீளாய்வுக் கூட்டத்தில் முன்மொழியப்பட்ட மேம்படுத்தல்களை கூட்டிணைத்து அதன் பின்னர் இறுதிப்படுத்தப்பட்டது.

## 21. பொதுப்படுகடன்

நாணயவிதிச் சட்டத்தின் 113 ஆவது பிரிவின் நியதிகளில் பொதுப்படுகடனின் முகாமைத்துவத்திற்கான அரசின் முகவராக இலங்கை மத்திய வங்கியின் சட்டரீதியான பொறுப்புக்களை ஆற்றுவதற்குப் பொறுப்பாகப் பொதுப்படுகடன் திணைக்களம் உள்ளது. இத்தகைய பொறுப்புக்களை நிறைவேற்றும் நோக்குடன் மத்திய வங்கி தொடங்கப்பட்ட 1950 ஓகத்து 28 நாளன்று பொதுப்படுகடன் திணைக்களம் நிறுவப்பட்டது. ஒதுக்குச் சட்டத்தில் குறிப்பிட்டவாறு பொதுப்படுகடன் திணைக்களத்தின் முக்கிய தொழிற்பாடுகள் அரசாங்கத்தின் மொத்தக் கடன்பாட்டுத் தேவைப்பாடுகளைப் பூர்த்திசெய்வதற்கான நிதியங்களைத் திரட்டுதல், அரசபடுகடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகளை உரியநேரத்தில் நிறைவேற்றுதல், அரச பிணையங்களின் சந்தைக் கொடுக்கல்வாங்கல்களின் தீர்ப்பனவுகள் சுமூகமாக தொழிற்படுவதனை வசதிப்படுத்தும் நோக்கில் லங்காசெகுயர் முறைமையினைப் பேணுதல் மற்றும் மத்திய வைப்பக முறைமையின் அரச பிணையங்களின் உரித்துப் பதிவினைப் பேணுதல் என்பனவற்றை உள்ளடக்குகின்றன. மேலும், பொதுப்படுகடன் திணைக்களமானது நாட்டின் படுகடன் அரச பிணையங்கள் சந்தை அபிவிருத்திகளிலும் ஈடுபட்டதுடன் படுகடன் முகாமைத்துவ உபாயங்களை மதிப்பிடுவதிலும் பொறுப்பு முகாமைத்துவ முன்னெடுப்புக்களிலும் பங்களித்தது.

### 21.1 ஒதுக்கீட்டுச் சட்டத்தில் குறித்துரைக்கப்பட்டவாறு அரசின் மொத்தக் கடன்பாட்டுத் தேவையினைப் பூர்த்திசெய்வதற்கு நிதிகளைத் திரட்டுதல்

அ) திறைசேரி உண்டியல்கள், திறைசேரி முறிகள், இலங்கை அபிவிருத்தி முறிகள் மற்றும் நாட்டுக்கான பன்னாட்டு முறிகள் போன்றவை 2018இல் அரசாங்கத்தின் மொத்தக் கடன்பாட்டுத் தேவைப்பாடுகளை நிதியிடுவதற்கான பிரதான படுகடன் கருவிகளாகக் காணப்பட்டன.

ஆ) நிதியங்களின் ஒவ்வொரு மூலங்களின் கீழான நடவடிக்கைகளின் சுருக்கமான அட்டவணை கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

அட்டவணை II - 2.2
கருவிகள் மற்றும் ஏலச்செயலாற்றம் - 2017 மற்றும் 2018

| கருவி | 2017 | | 2018 | |
|---|---|---|---|---|
| | வழங்கல்கள் ரூ. பில்லியன் | ஏலங்களின் எண்ணிக்கை | வழங்கல்கள் ரூ. பில்லியன் | ஏலங்களின் எண்ணிக்கை |
| திறைசேரி உண்டியல்கள் | 1,624.3 | 52 | 1,653.3 | 51 |
| திறைசேரி முறிகள் | 548.8 | 16 | 763.02 | 11 |
| | வழங்கல்கள் (ஐ.அ.டொலர் மில்லியன்) | ஏலங்களின் எண்ணிக்கை | வழங்கல்கள் (ஐ.அ.டொலர் மில்லியன்) | ஏலங்களின் எண்ணிக்கை |
| இலங்கை அபிவிருத்தி முறிகள் | 2,231.4 | 4 | 1,492.05 | 6 |
| நாட்டிற்கான பன்னாட்டு முறிகள் | 1,500.0 | 1 | 2,500.0 | 1 |

இ) 2018இல் வெளிநாட்டு முதலீடுகளால் திறைசேரி முறிகள் மற்றும் திறைசேரி உண்டியல்களில் செய்யப்பட்ட முதலீடுகளின் மொத்த தேறிய வெளிப்பாய்ச்சலானது ஐ.அ.டொலர் 990.7 மில்லியனுக்கு வகைகூறியதுடன் இது திறைசேரி உண்டியல்களிலான ஐ.அ.டொலர் 96.4 மில்லியனையும் மற்றும் திறைசேரி முறிகளிலான ஐ.அ.டொலர் 893.6 மில்லியனையும் கொண்ட தேறிய உட்பாய்ச்சலினை உள்ளடக்கியது.

ஈ) முதலாந்தரச் சந்தை விளைவு வீதங்களின் அசைவுகளுடன் இசைந்து செல்கின்ற விதத்தில், குறிப்பாக 2018இன் பிற்பகுதியில் இரண்டாந்தரச் சந்தை விளைவு வீதங்களில் சமாந்தரமான மேல்நோக்கிய பெயர்வொன்று அவதானிக்கப்பட்டது. மேலும், இரண்டாந்தரச் சந்தை விளைவு வீதங்களின் மேல்நோக்கிய பெயர்விற்கு ஐக்கிய அமெரிக்காவின் வட்டி வீதங்கள் இயல்பு நிலையடைந்தமையின் முக்கிய காரணமாக இலங்கை உட்பட தோற்றம் பெற்றுவரும் சந்தைப் பொருளாதாரங்களிலிருந்து வெளிநாட்டு முதலீடுகள் மீளப்பெறப்பட்டமையிலிருந்து தோன்றிய அழுத்தங்களும் குறிப்பாக ஆண்டின் பிற்பகுதியில் நிலவிய சவால்மிக்க உள்நாட்டு மற்றும் அதேபோன்று உலகளாவிய பொருளாதார நிலைமைகளும் முக்கிய காரணங்களாக அமைந்திருக்கக்கூடும்.

உ) நடுத்தரகால திறைசேரி முறிகளின் கிரமமான வழங்கல், சந்தைப் பங்கேற்பாளர்களுடனான தொடர்ச்சியான ஈடுபாட்டின் விளைவாக தோன்றிய தன்மைகள், திறைசேரி முறிகளின் முன்கூட்டிய வழங்கல் கலண்டர் மற்றும் சந்தையில் மூலவளக் கிடைப்பனவுடன் இணைந்த வழங்கல் என்பனவற்றின் காரணமாக வெளிநிற்கும் உள்நாட்டுப் படுகடன் இருப்புக்களின் முதிர்ச்சிக்கான சராசரிக் காலம் 2017 இறுதியில் 5.78 ஆண்டுகளிலிருந்து 2018 இறுதியில் 5.91 ஆண்டுகளுக்கு அதிகரித்தது.

### 21.2 அரசபடுகடன்களைத் தீர்ப்பனவு செய்தல்

2018 காலப்பகுதியில், ரூ.1,517.7 பில்லியன் கொண்ட உள்நாட்டுப் படுகடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகளையும், ரூ.534.9 பில்லியன் வெளிநாட்டுப் படுகடன் தீர்ப்பனவு கொடுப்பனவுகளையும் உள்ளடக்கி ரூ.2,050.6 பில்லியன் மொத்தப் படுகடன் தீர்ப்பனவு மேற்கொள்ளப்பட்டது.

### 21.3 அரச பிணையங்களின் தீர்ப்பனவிற்கு வசதியளித்தல்

லங்காசெக்குயர் முறைமையானது அரச பிணையங்களின் முதனிலை மற்றும் இரண்டாம் தரச்சந்தைக் கொடுக்கல்வாங்கல்களின் தீர்ப்பனவுக்காகப் பயன்படுத்தப்படுகிறது. இம்முறையானது தங்கள் சார்பில் அல்லது தங்களது வாடிக்கையாளர்களாக இருக்கக்கூடிய ஏனைய முதலீட்டாளர்கள் சார்பில் கணக்குகளை வைத்துள்ள 34 முகவர் நேரடிப் பங்குபற்றுனர்களையும் (26 பட்டியலிடப்பட்ட வர்த்தக வங்கிகள் மற்றும் 8 முதனிலை வணிகர் கம்பனிகள்) தங்களது சார்பில் மட்டும் கணக்குகளைக் கொண்டுள்ள 3 நேரடிப் பங்குபற்றுனர்களையும் (கொழும்புபங்கு பரிவர்த்தனை, இலங்கை மத்திய வங்கி மற்றும் ஊழியர் சேமலாபநிதி) கொண்டுள்ளது. பொதுப்படுகடன் திணைக்களமானது லங்காசெக்குயரின் தடங்கலற்ற அதேநேர தொழிற்பாட்டினை உறுதிப்படுத்தி தீர்ப்பனவுகளுக்கு வசதியளித்தல் மூலம் அதன் பிரதான பங்கினை ஆற்றுகின்றது. 2018 திசெம்பர் இறுதியிலுள்ளவாறு பத்திரங்களற்ற பிணையங்களினது உடமைகளின் மொத்த முகப்பெறுமதியானது ரூ.5,103 பில்லியனுக்கு வகைகூறியது. இது திறைசேரி உண்டியல்களின் ரூ.758.8 பில்லியனையும் திறைசேரி முறிகளின் ரூ.4,344.2 பில்லியனையும் உள்ளடக்கியுள்ளது.

### 21.4 அரச பிணையங்களின் பதிவினைப் பேணுதல்

பொதுப்படுகடன் திணைக்களத்தில் பேணப்படும் மத்திய வைப்பக முறைமையிலுள்ள அரச பிணையங்களின் உரித்துப் பதிவின் அதேநேர இற்றைப்படுத்தலுக்கான வசதியானது அரச பிணையங்களின் பாதுகாப்பினை உறுதிசெய்துள்ளது. ஆண்டு முழுவதும், மத்திய வைப்பக முறையில் கணக்குகளை வைத்திருப்போருக்கு அவர்களது உடமைகள், கொடுக்கல்வாங்கல்கள் மற்றும் கொடுப்பனவுகள் தொடர்பிலான காலாந்தரக் கூற்றுக்கள் தொடர்ச்சியாக வழங்கப்பட்டு வருகின்றது. 2018 காலப்பகுதியில் பொதுபடுகடன் திணைக்களம் மத்திய வைப்பக முறையில் கணக்கு வைத்திருப்போருக்கு இலத்திரனியல் வடிவில் 1,832 கூற்றுக்களையும் 16,026 உடமைகளின் அரையாண்டு கூற்றுக்களையும் 42,681 கொடுக்கல்வாங்கல் மாதாந்த கூற்றுக்களையும் 18,744 கொடுப்பனவு கூற்றுக்களையும் அஞ்சல் மூலமாக அனுப்பி வைத்துள்ளது. மேலும், மத்திய வைப்பக முறைமையின் கணக்கு உடமையாளர்கள் இணையத்தளமூடாக அதேநேர கணனிவழி அடிப்படையில் அவர்களது கணக்கு விபரங்களைப் பார்வையிடுவதற்கான வசதியும் வழங்கப்பட்டிருக்கிறது. 2018 திசெம்பர் இறுதியில் மத்திய வைப்பக முறையில் பதிவுசெய்யப்பட்ட கணக்கு உடமையாளர்களின் மொத்த எண்ணிக்கை 94,082 ஆக காணப்பட்டது.

### 21.5 முறைமை சீர்திருத்தங்கள்

2018 ஆண்டு காலப்பகுதியில் வினைத்திறன், காத்திரதன்மை மற்றும் வெளிப்படைத்தன்மை போன்றவற்றினை மேம்படுத்துதல் அதேபோன்று அரச பிணையங்கள் சந்தையினை விருத்திசெய்தல் போன்ற நோக்குடன் பின்வரும் முறைமைச் சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டன.

**அ) தீவிரப் பொறுப்பு முகாமைத்துவக் கட்டமைப்பினை இயற்றியமை**

பாராளுமன்றம் 2018 மாச்சில் தீவிரப் பொறுப்பு முகாமைத்துவச் சட்டத்திற்கு ஒப்புதல் வழங்கியதுடன் இலங்கைக்கு உள்ளேயோ அல்லது வெளியேயோ கடன் மூலமாக ரூ.310 பில்லியனைத் திரட்டுவதற்கான தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது. இது இலங்கை அரசாங்கம் மீள்நிதியிடல் தேவைப்பாடுகளின் ஒரு பகுதியை உரிய காலத்திற்கு முன்னரேயே (மாறிச்செல்லும் உச்சங்களைக் குறைக்கும்) முன்கூட்டிய செயற்பாடு சார்ந்த விதத்தில் கட்டுப்படுத்துவதற்கும் முதிர்ச்சிக் காலப்பகுதியினை நீடிப்பதற்கும் அத்துடன்/ அல்லது நாட்டிற்கான பன்னாட்டு முறிகளின் அமைப்பு மற்றும் ஏனைய படுகடன் முதிர்ச்சிகளினதும் மீள்கொடுப்பனவுகளை அமுல்படுத்துவதற்கும் இலங்கை அரசாங்கத்தினை இயலுமைப்படுத்தியது. பொதுவாக, பொறுப்பு முகாமைத்துவமானது முதலீட்டாளர் தளத்தினை பன்முகப்படுத்துவதற்கும் சந்தை நிலைமைகளை அடிப்படையாகக் கொண்டு கடன்பாட்டுச் செலவினை ஒழுங்குமுறைப்படுத்துவதற்கான வாய்ப்புக்களை வழங்குவதற்கும் சொத்துப் பட்டியலின் காலப்பகுதியனை நீடிப்பதற்கும், அண்மைய காலப்பகுதியில் மீள்நிதியிடல் இடர்நேர்வுகளைக் குறைப்பதற்கும் ஏதேனும் புதிய வழங்கல்களுக்கான சாதகமான விலைப் போக்கினை உருவாக்குவதற்கும் இலங்கை அரசாங்கத்திற்கு உதவும். மேலும், தீவிர பொறுப்பு முகாமைத்துவச் சட்டம் தாங்கிருப்பினைக் கட்டியெழுப்புதல், ஆளணிப்படுத்தல், திரும்ப வாங்குதல், திரும்பிய ஏலங்கள் போன்ற வடிவத்தில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுச் சந்தையில் பொறுப்பு முகாமைத்துவ நடவடிக்கைகளின் முன்னெடுப்பு போன்றவற்றிற்கு மத்திய வங்கிய இயலுமைப்படுத்தும். பொதுப்படுகடன் திணைக்களம் நிதியமைச்சின் ஆலோசனையுடன் எதிர்காலப் படுகடன் கடப்பாடுகள் தொடர்பில் பொறுப்பு முகாமைத்துவத்தினை நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான முன்னெடுப்புக்களை மேற்கொள்ளும்.

**ஆ) நடுத்தரகாலப் படுடன் முகாமைத்தவ உபாயத்தினை நிறுவனமயப்படுத்தல்**

அரச செலவினத்தில் விரைந்து அதிகரித்து வரும் படுகடன் இருப்பு மற்றும் அதனுடன் தொடர்பான படுகடன் தீர்ப்பனவுக் கூறுகளினது முக்கிய காரணமாக இலங்கையில் பொதுப்படுகடன் முகாமைத்துவம் அண்மைய ஆண்டுகளில் முக்கிய கொள்கை முன்னுரிமைகளிலொன்றாக மாறியுள்ளது. நடுத்தரகாலப் படுகடன் முகாமைத்துவ உபாயம் இலங்கையின் பொதுப்படுகடன் சொத்துப் பட்டியலின் முக்கிய இடர்நேர்வுகளை கணியப்படுத்தும் என்பதுடன் படுகடன் வழங்கலின் பொருத்தமான நாணயம் மற்றும் முதிர்ச்சி உள்ளமைப்பு மற்றும் இதனை அடைந்துகொள்வதற்கான உபாயத்தினைக் குறித்துரைப்பதுடன் செலவு இடர்நேர்வினை விட்டுக்கொடுத்தலின் அடிப்படையில் தற்போதைய படுகடன் வழங்கல் தேர்வுகள் மற்றும் நாணய இறைக் கொள்கைக் குறிக்கோள்களுடன் இசைந்து செல்வதனையும் காட்டும். அவற்றுடன் இசைந்து செல்லும்விதத்தில் பொதுப்படுகடன் திணைக்களம் இலங்கைக்கான நடுத்தரகால படுகடன் முகாமைத்துவ உபாயங்களை வடிவமைப்பதில் நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சுடன் நெருக்கமான இணைப்பினைக் கொண்டிருப்பதுடன் இது 2019இன் முதலாம் காலாண்டுப் பகுதியில் உபாயமாக்கப்பட்டு வெளியிடப்படும்.

### 21.6 முன்னோக்கிய பாதை

(அ) லங்காசெக்குயர் முறைமையிலுள்ள பத்திரங்களற்ற பிணையங்களின் ஒவ்வொரு பற்று மற்றும் வரவுப் பதிவேடுகளுக்கான குறுஞ்செய்தி அத்துடன்/ அல்லது மின்னஞ்சல் எச்சரிக்கையொன்றை வழங்குவதன் வாயிலாக லங்காசெக்குயர் முறைமையின் வாடிக்கையாளருக்கு அதேநேர அறிவித்தலை வழங்குதல் 2019இன் முதற்காலாண்டுப் பகுதியில் ஒவ்வொரு பிணையக் கணக்குகளுக்காவும் நடைமுறைப்படுத்தப்படும்.

(ஆ) உள்நாட்டு சந்தையிலிருந்து அரச கடன்பாடுகளின் வெளிப்படைத் தன்மையையும் வினைத்திறனையும் மேலும் மேம்படுத்துவதற்காக திறைசேரி உண்டியல்களுக்காக புதிய முதலாந்தர வழங்கல் முறைமையினையும் இலங்கை அபிவிருத்தி முறிகளின் முதலாந்தர வழங்கலுக்கான இலத்திரனியல் விலைக் குறிப்பீட்டு ஒழுங்குகளையும் விரிவாக்குவதற்கான சாத்தியத்தினையும் கண்டறிந்து கொள்ளுதல். மேலும், திறைசேரி முறிகளுக்கான புதிய முதலாந்தர வழங்கல் முறைமையின் சந்தை அடிப்படையாகக் கொண்ட ஒழுங்குகளையும் திறைசேரி முறிகளின் சந்தா முறைமையில் சந்தை பங்கேற்பாளர்களின் ஏற்புடைத்தன்மையினையும் மேலும் உயர்த்தும்.

(இ) தற்போதுள்ள சட்டவாக்கங்களைப் பலப்படுத்துவதற்கான வழிமுறைகள்.

வெளிப்படைத் தன்மையினை மேம்படுத்தல் மற்றும் நடைமுறைச் சந்தை அபிவிருத்திக்கு நிகராக இருப்பதற்காக பதிவுசெய்யப்பட்ட பங்குகள் மற்றும் பிணையங்கள் கட்டளைச் சட்டம் மற்றும் உள்ளூர் திறைசேரி உண்டியல்கள் கட்டளைச் சட்டம் போன்றவற்றை மேம்படுத்துவதற்கான திருத்தங்கள் முன்மொழியப்பட்டுள்ளன. அத்துடன் வெளிவாரிப் பொறுப்புகளுக்கான கணக்கியலின் பன்னாட்டு நியமங்களுடன் இணைந்து செல்லத்தக்க விதத்தில் 1957ஆம் ஆண்டின் 29ஆம் இலக்க வெளிநாட்டு கடன்கள் சட்டத்தினை திருத்துவதற்கான யோசனைகள் தெரிவிக்கப்பட்டுள்ளன.

### 21.7 நாட்டிற்கான பன்னாட்டுத் தரமிடல் மீளாய்வுப் பணியினை ஒருங்கிணைத்தல்

2018 இல், இலங்கைக்கான பன்னாட்டுத் தரமிடல் கிடைப்பனவை உறுதிப்படுத்தும் நோக்கில் பொதுப்படுகடன் திணைக்களமானது பன்னாட்டுத் தரமிடல் முகவர்களின் (பிட்ஜ் ரேட்டிவ் லிமிடெட், மூடிஸ் இன்வெஸ்டர் சேவிஸ், ஸ்டாண்டட் அன்ட் புவர்) வருடாந்த தரமிடல் மீளாய்வுகளுக்கு வசதியளித்தது.

## 22. பிரதேச அபிவிருத்தி

பிரதேச அபிவிருத்தித் திணைக்களம் அனைத்தையும் உள்ளடக்கியதும் சமச்சீரானதுமான பொருளாதார வளர்ச்சியை எய்துவதற்கு ஆதரவளிக்கும் குறிக்கோளுடன் இலங்கை மத்திய வங்கி, அரசாங்கம், கொடை முகவர்கள் மற்றும் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களினால் நிதியிடப்பட்ட பல்வேறு மீள் நிதியிடல், வட்டி உதவுதொகை மற்றும் கொடுகடன் உத்தரவாதத் திட்டங்களைத் தொடர்ந்தும் இணைத்து, வசதியளித்து நடைமுறைப்படுத்திய வேளையில் நாட்டில் நிதியியல் உள்ளடக்கத்தன்மையினையும் மேம்படுத்தியது. இம்மரபுவழிக் கொடுகடன் தொழிற்பாடுகளை பூரணப்படுத்துகின்ற விதத்தில் பிரதேச அபிவிருத்தித் திணைக்களம் புதிய உபாயங்களையும் முன்னைய ஆண்டுகளில் ஆரம்பிக்கப்பட்ட முன்னெடுப்புக்களையும் தொடர்ந்தும் அபிவிருத்தி செய்ததுடன் 2018இல் பல்வேறுபட்ட பரந்துபட்ட கொடுகடன் துணைநிரப்புப் பணிகளையும் வழங்கியது.

2018ஆம் ஆண்டுப் பகுதியில் பிரதேச அபிவிருத்தித் திணைக்களம் பின்தங்கிய பிரதேசங்களிலுள்ள, குறிப்பாக, பாதிக்கப்படக்கூடிய தொகுதியினரை இலக்காகக் கொண்டு தனிப்பட்டவர்களுக்கும் வியாபார தொழில்முயற்சிகளுக்குமான நிதியியல் கிடைப்பனவினை மேம்படுத்துவதில் தொடர்ந்தும் ஈடுபட்டது. இம்முயற்சிகள் தொழில்முயற்சியாளர்களாக வரக்கூடிய சாத்தியங்களைக் கொண்டவர்களின் இயலாற்றலை மேலும் அபிவிருத்தி செய்வதனையும் உறுதியான நிதியியல் அத்திவாரத்தினையும் உயர்ந்தளவிற்கு சுயமாக தங்கியிருப்பதனையும் இயலச்செய்கின்ற அதேவேளையில் தொழில்முயற்சியாளர்கள் என்ற ரீதியில் அவர்கள் எதிர்நோக்கவிருக்கும் சவால்களை எதிர்கொள்வதற்கான இயலாற்றலையும் அபிவிருத்தி செய்வதனையும் நோக்கமாகக் கொண்டிருந்தது. இம்முயற்சியில் விலங்கு வளர்ப்பு, கைத்தொழில் மற்றும் பணிகள் என்பனவற்றை உள்ளடக்கிய பரந்த வீச்சிலான துறைகளின் நுண்பாக, சிறிய, மற்றும் நடுத்தர தொழில்முயற்சியாளர்களுக்கு தாங்கக்கூடிய கொடுகடன் வசதிகளும் கொடுகடன் துணை நிரப்பு பணிகளும் வழங்கப்பட்டன. இவற்றிற்குப் புறம்பாக, பொதுவான ஆளொருவரை விவேகம் மிக்க தொழில்முயற்சியாளராக மாற்றுகின்ற குறிக்கோள்களுடன் முறைசார்ந்த நிதியியல் துறைக்கு வெளியேயுள்ளவர்களையும் முறைசார்ந்த நிதியியல் பணிகளைப் பெறுவது தொடர்பில் பின்தங்கியுள்ளவர்களையும் முக்கிய கவனத்திற்கொண்டு இவ்வாண்டுப் பகுதியில் பிரதேச அபிவிருத்தித் திணைக்களம் நாடளாவிய ரீதியில் நிதியியல் கல்வி அறிவு, விழிப்புணர்வினை கட்டியெழுப்புதல் மற்றும் தேர்ச்சி அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களை தொடராக மேற்கொண்டது.

கொள்கைப் பக்கத்தில், பிரதேச அபிவிருத்தித் திணைக்களம், 2018இல் பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்தின் தொழிற்பாடுகளை காத்திரமான முறையில் நடைமுறைப்படுத்துவதற்காக முன்கூட்டிய செயற்பாடுகள் சார்ந்த பல வழிமுறைகளையும் தொடர்ந்தும் மேற்கொண்டமையானது பல முக்கியமான மைல்கற்களை குறிப்பதாகவிருந்தது. 2018ஆம் ஆண்டுப் பகுதியில், 2017இல் ஆரம்பிக்கப்பட்ட தேசிய நிதியியல் உள்ளடக்க உபாயம் சாதகமான அபிவிருத்திகளைக் காட்டி 2019இல் எதிர்பார்க்கப்பட்டவாறு முடிவுறுத்தப்படும் என்பதனை உறுதிப்படுத்துவதாகவும் இருந்தது. தேசிய நிதியியல் உள்ளடக்க உபாயம் பன்னாட்டு வெளிப்படுத்துகைகளையும் நாட்டின் நிதியியல் வசதிகளின் உள்ளீடுகளை மேம்படுத்துவதில் அனுபவங்களையும் கொண்டு வந்தது. மேலும், வேளாண்மை அபிவிருத்திக்கான பன்னாட்டு நிதியம் மற்றும் அரசாங்கத்தினால் கூட்டாக நிதியிடப்பட்ட சிறு உடமையாளர் வேளாண் வியாபார பங்குடமை நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் ஆறு புதிய மீள்நிதியிடல் கடன் திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன. இந்த ஆறு கடன் திட்டங்களும் அரச தனியார் - உற்பத்தியாளர் - பங்குடமைகளை உள்ளடக்கியிருக்கின்றமையின் காரணமாக இத்திட்டங்களின் அறிமுகம் வேளாண்மைத் துறைக்கான இலங்கையில் சலுகை அடிப்படையிலான கடன் வழங்கல் பாரம்பரியத்தில் குறிப்பிடத்தக்கதொரு திருப்புமுனையாக விளங்கியது. சிறு உடமையாளர் வேளாண் வியாபார பங்குடமை நிகழ்ச்சித்திட்டத்தின் கடன் திட்டங்களின் கொடுகடன் கூறுகள் சனாதிபதி செயலகத்தின் கீழ் தொழிற்படுத்தப்படுகின்ற சிறு உடமையாளர் வேளாண் வியாபார பங்குடமை நிகழ்ச்சித் திட்டத்தின் செயற்றிட்ட முகாமைத்துவப் பிரிவின் ஆதரவுடன் பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்தினால் நடைமுறைக்கிடப்பட்டது.

### 22.1 சலுகை ரீதியான நிதியியல் வசதிகளை வழங்குதல்

2018ஆம் ஆண்டுப் பகுதியில் பிரதேச அபிவிருத்தித் திணைக்களம் 11 மீள்நிதியிடல், வட்டி உதவுதொகை மற்றும் கொடுகடன் உத்தரவாதத் திட்டங்கள் நடைமுறைக்கிடப்பட்டதன் மூலம் அதன் கொடுகடன் தொழிற்பாடுகள் தொடர்ந்தமையின் மூலம் நிதியியலின் சென்றடையும் பரப்பளவு அதிகரித்தது. பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்ட மீள் நிதியிடலின் திட்டங்கள் மற்றும் வட்டி உதவுதொகைத் திட்டங்கள் மீதான தகவல்கள் அட்டவணை II - 23இல் தரப்பட்டுள்ளன.

நிதியியல் நியதிகளில் பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்ட கடன் திட்டங்களினூடாக 105,867 நன்மை பெறுநர்கள் முறைசார்ந்த நிதியியல் துறையினை அணுகக்கூடியவர்களாக விளங்கி 2018இல் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களினூடாக வழங்கப்பட்ட சலுகைக் கடன்களின் மூலமாக ரூ.16,431.7 மில்லியனைப் பெற்றுக்கொண்டனர். பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்தினால் தொழிற்படுத்தப்பட்ட கடன் திட்டங்களினூடாக வழங்கப்பட்ட மொத்தக் கடன்களில் அரசாங்கத்தினால் நிதியிடப்பட்ட கடன் திட்டங்கள் 72.9 சதவீதத்திற்குப் பங்களித்த வேளையில் மத்திய வங்கியும் வேளாண்மை அபிவிருத்திக்கான பன்னாட்டு நிதியமும் முறையே 25.1 சதவீதத்திற்கும் 2.0 சதவீதத்திற்கும் பங்களித்தன. இந்நிதியிடலில் 71.5 சதவீதக் கடன்கள் வேளாண்மை மற்றும் விலங்கு வளர்ப்புத் துறையினை

நோக்கி நெறிப்படுத்தப்பட்ட வேளையில் முறையே 14.2 சதவீதமும் 14.3 சதவீதமும் பணிகள் துறைக்கும் கைத்தொழில் துறைக்கும் விநியோகிக்கப்பட்டன.

2018இல் பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்ட கடன் திட்டங்களின் நிலை கீழே தரப்படுகிறது.

### 22.2 அரசாங்கத்தினாலும் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களினாலும் நிதியிடப்பட்ட திட்டங்களை நடைமுறைப்படுத்தல்

பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்ட கொடுகடன் திட்டங்களின் முக்கிய மூலமாக அரசாங்கம் மற்றும் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களின் நிதியியல் திட்டங்கள் விளங்கி 2018இல் பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்தக் கொடுகடன்களில் ரூ.11,986.7 மில்லியன் அல்லது 72.9 சதவீதத்திற்கு பங்களித்தது. இந்நிதியங்கள், 7 மீள்நிதியிடல் கடன் திட்டங்கள் மற்றும் ஒரு வட்டி உதவுதொகைத் திட்டம் என்பனவற்றை உள்ளடக்கிய 8 கடன் திட்டங்களின் கீழ் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களினூடாக நன்மை பெறுநர்களுக்கு வழங்கப்பட்டன. இத்திட்டங்களுள் “சருசர” அல்லது புதிய அனைத்தையுமுள்ளடக்கிய கிராமிய கொடுகடன் திட்டம் வட்டி உதவுதொகைத் திட்டமொன்றாகவும் கொடுகடன் உத்தரவாதத்திட்டமொன்றாகவும் செயற்பட்டது. புதிய அனைத்தையுமுள்ளடக்கிய கிராமியக் கொடுகடன் திட்டத்தின் கீழ் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் அவற்றின் சொந்த நிதியினைப் பயன்படுத்தி வழங்கிய கடன்களுக்கான வட்டித்தொகையினை அரசாங்கம் வழங்கியது.

(அ) 2018ஆம் ஆண்டுப் பகுதியில், 33 குறுங்கால பயிர் இனங்களைப் பயிரிட்ட 78,215 சிறு அளவிலான வேளாண்மையாளர்களுக்கு பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களினால் வழங்கப்பட்ட ரூ.9,021.7 மில்லியன் பெறுமதி கொண்ட சலுகைக் கடன்களின் பேரில் ரூ.245.6 மில்லியன் கொண்ட வட்டி உதவுதொகையினை அரசாங்கம் வழங்கியது. புதிய அனைத்தையுமுள்ளடக்கிய கிராமிய கொடுகடன் திட்டத்தின் கீழ் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களின் கடன் வழங்கல் 2017இன் ரூ.7,845.2 மில்லியனிலிருந்து 2018இல் ரூ.9,021.7 மில்லியனுக்கு 15.0 சதவீதத்தினால் அதிகரித்தது. வேளாண்மைத் துறைக்கான கடன் வழங்கலில் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களின் கடப்பாட்டினை எடுத்துக்காட்டியது. இதன்படி, அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட வட்டி உதவுதொகையும் 2017இன் ரூ.227.5 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2018இல் 8.0 சதவீதத்தினால் அதிகரித்தது.

புதிய அனைத்தையுமுள்ளடக்கிய கிராமிய கொடுகடன் திட்டத்தின் கீழ் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களினால் பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்தக் கடன்களின், பகிர்ந்தளிப்புக்களில் மிக உயர்ந்த சதவீதம் அம்பாறை மாவட்டத்தில் பதிவுசெய்யப்பட்டதுடன் இத்திட்டத்தின் கீழான மொத்த பகிர்ந்தளிப்பில் 12.6 சதவீதத்திற்கு ரூ.1,137.9 மில்லியன்) இது வகைகூறியது. இதனைத் தொடர்ந்து பொலநறுவை மற்றும் அநுராதபுர மாவட்டங்கள் விளங்கியதுடன் இவை புதிய அனைத்தையுமுள்ளடக்கிய கிராமியக் கொடுகடன் திட்டத்தின் மொத்த பகிர்ந்தளிப்பில் முறையே ரூ.966.2 மில்லியனுக்கும் (10.7 சதவீதம்) ரூ.948.3 மில்லியனுக்கும் (10.5 சதவீதம்) பங்களித்தன.

(ஆ) அனர்த்தத்திற்குப் பின்னரான பொருளாதார நடவடிக்கை மீட்பு முயற்சிகளுக்கு வசதியளிப்பதற்காக அரசாங்கத்தின் தலையீட்டுடன்கூடிய மீள் நிதியிடல் திட்டமொன்றாக 2017 ஓகத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட “அத்வெல்ல” கடன் திட்டம் 2018இல் சிறந்த முறையில் செயலாற்றியது. அரசாங்கத்திடமிருந்து பெறப்பட்ட ரூ. 1,500 மில்லியனில் ரூ.1,499.7 மில்லியன் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களினால் பகிர்ந்தளிக்கப்பட்ட 3,543 கடன்களுக்கெதிராக அவர்களினால் செய்யப்பட்ட மீள் நிதியிடல் கோரல்களை பூர்த்திசெய்வதற்காக பகிர்ந்தளிக்கப்பட்டது. “அத்வெல்ல” கடன் திட்டமானது அரசாங்கத்தினால் அடையாளம் காணப்பட்ட ஏதேனும் அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டவை என அடையாளம் காணப்பட்ட ஏதேனும் பொருளாதார நடவடிக்கையினை மீள ஆரம்பிக்கும் பொருட்டு இலக்கிடப்பட்ட நன்மை பெறுநர்களுக்கு ஆண்டொன்றிற்கு 2 சதவீத சலுகை ரீதியான நிதியியல் வசதிகளை வழங்கும் நோக்குடன் நடைமுறைப்படுத்தப்பட்டதொரு திட்டமாகும்.

(இ) புதிய அனைத்தையுமுள்ளடக்கிய கிராமியக் கொடுகடன் திட்டம் மற்றும் “அத்வெல்ல” கடன் திட்டங்களுக்குப் புறம்பாக, 2018இல் பிரதேச அபிவிருத்தித் திணைக்களம் 4 ஏனைய மீள் நிதியிடல் கடன் திட்டங்களை நடைமுறைப்படுத்தியது. அம்மீள்நிதியிடல் திட்டங்களாக “சுவசக்திக் கடன்திட்டம், வறுமை ஒழிப்பு நுண்பாக நிதிச் செயற்றிட்டம் - சுழலும் நிதியம், வறுமை ஒழிப்பு நுண்பாக நிதிச் செயற்றிட்டம் II - சுழலும் நிதியம் மற்றும் சுயவேலைவாய்ப்பு ஊக்குவிப்பு முன்னெடுப்பு கடன் திட்டம் - கட்டம் II என்பன காணப்பட்டன. மேலும், பிரதேச அபிவிருத்தித் திணைக்களம் 2017இல் முடிவடைந்த தேயிலைத் தொழிற்சாலைகளுக்கான தொழிற்படு மூலதனக் கடன் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட கடன்களுக்கான வட்டி உதவுதொகைகளை வழங்கியது. இத்திட்டங்களில் வறுமை ஒழிப்பு நுண்பாக நிதிச் செயற்றிட்டம் - சுழலும் நிதியம் மற்றும் வறுமை ஒழிப்பு நுண்பாக நிதிச் செயற்றிட்டம் II - சுழலும் நிதிய மீள் நிதியிடல் கடன் திட்டங்கள் இரண்டும் கூட்டாக அரசாங்கத்தினால் நிதியிடப்பட்ட கடன் திட்டங்களின் பகிர்ந்தளிப்பில் 7.1 சதவீதத்தினை பகிர்ந்தளித்தன. இது ரூ.855.9 மில்லியன்களாகக் காணப்பட்டது.

(ஈ) மேலும் வறுமை ஒழிப்பு நுண்பாக செயற்றிட்டம் II - சுழலும் நிதியம் திட்டமிடப்பட்டவாறு 2018 யூலை 15 அன்று வெற்றிகரமாக நிறைவடைந்து செயற்றிட்ட காலப்பகுதியில் 94,893 நன்மை பெறுநர்களுக்கிடையே ரூ.7 பில்லியன் கொண்ட கடன் தொகையினை வழங்கியதன் மூலம் நாட்டின் வறுமை ஒழிப்பிற்கு பங்களித்திருக்கிறது.

கடந்த காலப் போக்கினை தொடர்கின்ற விதத்தில் நிதியத்தின் பெரும்பங்கு அரசாங்கத்தினாலும் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களினாலும் வழங்கப்பட்ட மொத்த நிதியியல் ரூ.9,922.3 மில்லியன் அல்லது 82.8 சதவீதம் முக்கியமாக வேளாண்மை மற்றும் விலங்கு வளர்ப்பு துறைக்கு சலுகைக் கடன்களை வழங்குவதற்குப் பயன்படுத்தப்பட்டது. 2018 காலப்பகுதியில் நிதியினைப் பெறுவதற்கான தேவையினைக் கொண்டிருந்த பணிகள் துறையினதும் தனிப்பட்டவர்களும் வியாபாரத் தொழில்முயற்சிகளும் பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்ட அரசாங்கத்தினால் நிதியிடப்பட்ட கடன் திட்டங்களில் ரூ. 1,366.6 மில்லியனை அல்லது 11.4 சதவீதத்தினைப் பெற்றுக்கொண்டன. கைத்தொழில் துறைக்கு செய்யப்பட்ட பகிர்ந்தளிப்புக்கள் 2018இல் ரூ.697.7 மில்லியன்களாக விளங்கி மொத்த பகிர்ந்தளிப்பில் 5.8 சதவீதத்திற்கு வகை கூறின.

(உ) மிக முக்கியமான விடயம் யாதெனில், சிறு உடமையாளர் வேளாண் வியாபார பங்குடமை நிகழ்ச்சித்திட்டத்தின் நடைமுறைப்படுத்தல் தொடர்பில் வேளாண்மை அபிவிருத்திக்கான பன்னாட்டு அமைப்புடன் 2018 ஆரம்பத்தில் அரசாங்கம் நிதியிடல் உடன்படிக்கையொன்றினை செய்து கொண்டமையும் இணைத்தரப்பு நிதியூடாக சிறு உடமையாளர் வேளாண் வியாபார பங்குடமை நிகழ்ச்சித்திட்டத்தின் சுழலும் நிதிய கடன் திட்டங்களின் நடைமுறைப்படுத்தலுக்காக ஐ.அ.டொலர் 11.8 மில்லியன் ஒதுக்குவதற்கு இணங்கிக் கொண்டமையுமாகும். மூன்று நிதியிடல் திட்டங்களான சுழலும் நிதிய மூலதனக் கடன் திட்டம், சுழலும் நிதிய பருவகால கடன் திட்டம் மற்றும் வருமான உருவாக்கக் கடன் திட்டம் என்பனவற்றை உள்ளடக்கியிருந்ததுடன், இவற்றிற்கு, வேளாண்மை அபிவிருத்திக்கான பன்னாட்டு நிதியினால் நிதியிடப்பட்ட முன்னைய கடன் திட்டங்களின் அறவிடல் நிதிகளைப் பயன்படுத்தி அரசாங்கத்தினால் நிதியிடப்படவுள்ளது. இது தொடர்பான விபரமான

தகவல்கள் சிறு உடமையாளர் வேளாண் வியாபார தனியுடமையாளர் நிகழ்ச்சித்திட்டத்தின் அமைப்பு கலந்துரையாடப்படுகின்ற பிரிவு 22.4இல் தரப்பட்டுள்ளன. சுழலும் நிதிய கடன் திட்டங்களின் கீழ் பருவகால, மூலதன/ தொழிற்படு மூலதனம் மற்றும் வருமான உருவாக்கக் கடனின் பொறிகள், இளைஞர், வேளாண்மையாளர்கள், அடிமட்ட நிறுவனங்கள் தேயிலை/ இறப்பர் தொழிற்சாலைகள், தேயிலை/ இறப்பர் நாற்றுமேடைகள் மற்றும் பணிகள் முகாமையாளர் ஆகியோரை உள்ளடக்கிய அரச தனியார் துறை - உற்பத்தியாளர் - பங்குடமை ஒழுங்குகளில் ஈடுபட்டுள்ள வேளாண்மையாளர்/ உற்பத்தியாளர் அமைப்புக்களுக்கு வழங்கப்பட்டன.

2018இல் ரூ.112.7 மில்லியன் தொகை கொண்ட 578 கடன்கள் அரசாங்கத்தினால் நிதியிடப்பட்ட சிறு உடமையாளர் வேளாண் வியாபார தனியுடமையாளர் நிகழ்ச்சித்திட்டத்தின் சுழலும் நிதிய வருமான உருவாக்க கடன் திட்டத்தின் கீழ் பதிவுசெய்யப்பட்டன. 2018 திசெம்பரில் முடிவடைந்த ஏழுமாத தொழிற்பாட்டு காலப்பகுதியில் சிறு உடமையாளர் வேளாண் வியாபார தனியுடமையாளர் நிகழ்ச்சித்திட்டத்தின் சுழலும் நிதிய கடன் திட்டங்களின் கீழ் மத்திய வங்கியினால் ரூ.106.4 மில்லியன் கொண்ட 527 கடன்கள் மீள நிதியிடப்பட்டன.

### 22.3 மத்திய வங்கி மற்றும் பங்கேற்கின்ற நிதியியல் நிறுவனங்களினால் நிதியிடப்பட்ட திட்டங்களின் நடைமுறைப்படுத்தல்

2018இல் ரூ.4,123.0 மில்லியன் அல்லது கடன்களில் 25.1 சதவீதம் மத்திய வங்கியினாலும் பங்கேற்கின்ற நிதியியல் நிறுவனங்களினாலும் நிதியிடப்பட்ட கடன் திட்டங்களினூடாக பகிர்ந்தளிக்கப்பட்டன. சௌபாக்கியா கடன் திட்டத்தின் கீழ் மீள் நிதியிடலுக்கு மத்திய வங்கி நிதியிட்டதுடன் வட்டி உதவுதொகை வர்த்தக அளவிலான பாற்பண்ணை அபிவிருத்தி கடன் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

(அ) ரூ.3,850.1 மில்லியன் அல்லது மத்திய வங்கியினாலும் பங்கேற்கின்ற நிதியியல் நிறுவனங்களினாலும் நிதியிடப்பட்ட மீள் நிதியிடல் திட்டங்களினூடாக பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்த நிதியியல் 93.4 சதவீதம் பகிர்ந்தளிக்கப்பட்டமையின் மூலம் சௌபாக்கியா கடன் திட்டம் 2018இல் பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்ட முக்கிய மீள்நிதியிடல் கடன் திட்டம் என்ற அதன் நிலைமையினை தொடர்ந்தும் பேணியது. 2018இல் சௌபாக்கியா கடன் திட்டம் நாடளாவிய ரீதியில் 5,445 நன்மைபெறுநர்களுக்கு கடன்களை வழங்கியிருக்கிறது.

(ஆ) மேலும், சௌபாக்கியா கடன் திட்டம் 2018ஆம் ஆண்டு முடிவடைவதற்கு முன்னர் ரூ3,800 மில்லியன் கொண்ட அதன் மீள் நிதியிடல் இலக்கினை வெற்றிகரமாக அடைந்தது. மீள் நிதியிடலில் பெரும்பங்கான ரூ.465.0 மில்லியன் (12.1 சதவீதம்) களுத்துறை மாவட்டத்திலுள்ள நன்மைபெறுநர்களிடையே பகிர்ந்தளிக்கப்பட்டது. சௌபாக்கியா கடன் திட்டத்தின் கடன் பகிர்ந்தளிப்பின் புவியியல் ரீதியான பரம்பலைக் கருத்திற்கொண்டு பார்க்கையில் குருநாகல் மாவட்டத்திற்கும் (ரூ.301.6 மில்லியன் அல்லது 7.8 சதவீதம்) கண்டி மாவட்டத்திற்குமான (ரூ.294.9 மில்லியன் அல்லது 7.7 சதவீதம்) கடன் பகிர்ந்தளிப்புக்கள் முறையே இரண்டாவது மற்றும் மூன்றாவது உயர் செயலாற்றத்தினைக் கொண்டனவாகக் காணப்பட்டன. சௌபாக்கியா கடன் திட்டத்தின் பகிர்ந்தளிப்புக்களில் பெரும்பங்கான ரூ.1,628.1 மில்லியன் அல்லது 42.3 சதவீதம் கைத்தொழில் துறைக்கு வழங்கப்பட்ட வேளையில் ரூ.1,234.6 மில்லியன் (32.1 சதவீதம்) வேளாண்மை மற்றும் விலங்கு வளர்ப்புத் துறைகளிலுள்ள நன்மைபெறுநர்களிடையே பகிர்ந்தளிக்கப்பட்டன. ரூ.987.4 மில்லியன் (25.6 சதவீதம்) கொண்ட மீதி பணிகள் துறைக்கு வழங்கப்பட்டது.

(இ) இலங்கை மத்திய வங்கியினால் நிதியிடப்படும் வட்டி உதவுதொகைத் திட்டமான வர்த்தக அளவிலான பாற்பண்ணை அபிவிருத்திக் கடன் திட்டம் இதன் செயற்றிட்டக் காலப்பகுதியில் எதிர்பார்க்கப்பட்ட ரூ.6 பில்லியன் பெறுமதியான கடன்களைப் பகிர்ந்தளித்ததன் மூலம் அதன் இலக்கினை அடைந்து கொண்டது. 2018இன் முதலரைப்பகுதியில் ரூ.272.9 மில்லியன் பெறுமதியான கடன்கள் வர்த்தக அளவிலான பாற்பண்ணை அபிவிருத்திக் கடன் திட்டத்தினூடாக 287 நன்மைபெறுநர்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டது. இத்திட்டத்தின் கீழ், பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் அவற்றின் சொந்த நிதியினைப் பயன்படுத்தி கடன்களை வழங்கிய வேளையில் வட்டி உதவுதொகை மத்திய வங்கியினால் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டன. பாலில் தன்னிறைவடையும் தேசிய குறிக்கோளுக்கு ஆதரவளிக்கும் பொருட்டு பாற்பண்ணை வேளாண்மையாளர்களுக்கு கடன்களை வழங்கும் திட்டமானது பணிகளை வியாபாரத்துடன் தொடர்பான அனைத்து அம்சங்களையும் உள்ளடக்கியிருந்தது.

(ஈ) 2018ஆம் ஆண்டுப்பகுதியில் சௌபாக்கியா கடன் திட்டத்திற்கும் வர்த்தகளவிலான பாற்பண்ணை அபிவிருத்திக் கடன் திட்டத்திற்கும் நிதியிடுவதற்காக மத்திய வங்கியினால் ஒதுக்கப்பட்ட நிதிகளில் பெரும்பங்கு நிதித்தொழில் துறைக்கு வழங்கப்பட்டது. இத்திட்டங்களினூடாக கைத்தொழில் துறைக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட நிதிகள் ரூ.1,628.2 மில்லியன்களாக விளங்கி மத்திய வங்கியின் நிதியிடலில் 39.5 சதவீதத்திற்கு வகைகூறின. பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்தினால் தொழிற்படும் திட்டங்களினூடாக மொத்தப் பகிர்ந்தளிப்பில், நிதியிடல் 36.6 சதவீதம் வேளாண்மை மற்றும் விலங்கு வளர்ப்பிற்கு (ரூ. 1,507.5 மில்லியன்) வழங்கப்பட்ட வேளையில் அதனைத் தொடர்ந்து 23.9 சதவீதமான பகிர்ந்தளிப்பு (ரூ.987.4 மில்லியன்) பணிகள் துறைக்கு வழங்கப்பட்டது.

### 22.4 கொடை வழங்குநர்களினால் நிதியிடப்பட்ட திட்டங்களின் நடைமுறைப்படுத்தல்

2018ஆம் ஆண்டு காலப்பகுதியில் பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்தின் பிராந்திய அபிவிருத்தி இலக்குகளைப் பூர்த்திசெய்வதற்கான நிதியியல் மற்றும் உபாய முயற்சி இரண்டிற்கும் நீண்டகால நிதியிடல் பங்காளரான வேளாண்மை அபிவிருத்திக்கான பன்னாட்டு நிதியத்தினால் உதவிகள் வழங்கப்பட்டன.

(அ) முக்கியமாக, வேளாண்மை அபிவிருத்திக்கான பன்னாட்டு நிதியத்தினால் நிதியிடப்பட்ட வேளாண் வியாபார அபிவிருத்திக் கடன் திட்டங்கள் முடிவடைந்ததுடன் அறிமுகப்படுத்தப்பட்ட சிறு உடமையாளர் வேளாண் வியாபார பங்குடமை நிகழ்ச்சித்திட்டம் தேசிய வேளாண் வியாபார அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் தொழிற்பட்டது. தேசிய வேளாண் வியாபார அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டமானது தேசிய வேளாண் வியாபார அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்ட நுண்பாக நிதி, தருண திரிய, வெளிப்பயிர்ச் செயற்கையாளர் வேளாண்மையாளர். (மூலதன மற்றும் பருவகாலக் கடன் திட்டங்கள்) மற்றும் அனர்த்தத்திற்குப் பின்னைய பொருளாதார நடவடிக்கை மீட்புக் கடன் திட்டங்கள் என்பனவற்றை உள்ளடக்கிக் காணப்படுகின்றது. சிறு உடமையாளர் வேளாண் வியாபார பங்குடமை நிகழ்ச்சித்திட்டமானது வேளாண்மை அபிவிருத்திக்கான பன்னாட்டு நிதியத்தினால் வழங்கப்பட்ட புதிய நிதியிடலை ஒன்று சேர்த்து ஒன்று திரட்டப்பட்ட தொடர் கொடுகடனை உருவாக்கியதன் மூலம் வேளாண்மை அபிவிருத்திக்கான பன்னாட்டு நிதியத்தினாலும் அரசாங்கத்தினாலும் முன்னர் வேளாண்மை அபிவிருத்திக்கான பன்னாட்டு நிதியத்தினால் நிதியிடப்பட்ட தற்போதைய மற்றும் எதிர்கால அறவிடல் நிதிகளின் மூலமும் கூட்டாக நிதியிடப்பட்டது. சிறு உடமையாளர் வேளாண் வியாபார பங்குடமையாளர் நிகழ்ச்சித்திட்ட நிதியிடல் உடன்படிக்கையின் மூலம் வேளாண்மை அபிவிருத்திக்கான பன்னாட்டு நிதியம் நிகழ்ச்சித் திட்டத்திற்கு ஐ.அ.டொலர் 11.8 மில்லியனை பங்களிப்பதன் மூலம் சிறு உடமையாளர் வேளாண் வியாபார பங்குடமையாளர் நிகழ்ச்சித்திட்டத்திற்கு நிதியிட இணங்கிக் கொண்டது. அரசாங்கம்

தேசிய வேளாண் வியாபார அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம், சிறு உடமையாளர் பெருந்தோட்ட தொழில்முயற்சியாண்மை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் மற்றும் வரண்ட வலய வாழ்வாதார மற்றும் ஆதரவு நிகழ்ச்சித்திட்டம் - சுழலும் நிதியம் என்பனவற்றின் அறிவிடல் நிதிகளைப் பயன்படுத்தி இணைத்தரப்பு நிதியிடலாக ஐ.அ.டொலர் 18.5 மில்லியனை பங்களிப்பதற்கு இணங்கியது.

(ஆ) நிதியியல் உடன்படிக்கையின் நியதிகளின்படி, நிகழ்ச்சித்திட்ட சுழலும் நிதியின் கீழ், பிரதேச அபிவிருத்தித் திணைக்களம் வேளாண்மை அபிவிருத்திக்கான பன்னாட்டு நிதியத்திலிருந்தான கடன் பெறுகைகளை வழிப்படுத்துகின்ற முகவராக அடையாளம் காணப்படுகிறது. சனாதிபதி செயலகம் நிதியின் கிடைப்பனவினை அதிகரிக்கின்றமையுடன் தொடர்பான நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்துவதற்கான சிறு உடமையாளர் வேளாண் வியாபார பங்குடமையாளர் நிகழ்ச்சித்திட்டத்தின் தலைமை நிகழ்ச்சித்திட்ட முகவராக அடையாளம் காணப்பட்டிருக்கிறது. சிறு உடமையாளர் வேளாண் வியாபார பங்குடமையாளர் நிகழ்ச்சித்திட்டமானது தலைமை நிகழ்ச்சித்திட்ட முகவராக இருந்துவரும் சனாதிபதி செயலகத்தின் கீழ் தொழிற்படுகின்ற நிகழ்ச்சித்திட்ட முகாமைத்துவப் பிரிவினால் இணைக்கப்படுகிறது.

(இ) சிறு உடமையாளர் வேளாண் வியாபார பங்குடமையாளர் நிகழ்ச்சித்திட்டத்தின் முக்கிய குறிக்கோள் வறுமைக் குறைப்பிற்கு பங்களிப்பதும் இலங்கை சிறு உடமையாளர் சமூகத்தில் போட்டித்தன்மையினை அதிகரிப்பதுமேயாகும். இது, வர்த்தகம் சார்ந்த வேளாண்மை உற்பத்திகள் மற்றும் சந்தைப்படுத்தல் முறைமையுடன் தொடர்புபட்டு 57,500 சிறு உடமையாளர் வேளாண்மையாளர் வீட்டு அலகுகளின் வருமானத்தினையும் ஊட்டச்சத்துக்களையும் அதிகரிப்பதனையும் நோக்கமாக கொண்டிருக்கிறது. சிறு உடமையாளர் வேளாண்மை வியாபார பங்குடமையாளர் நிகழ்ச்சித்திட்டம் பின்வரும் 6 கடன் திட்டங்களை உள்ளடக்கியுள்ளது.

1. அரச - தனியார் - உற்பத்தியாளர் - பங்குடமைக் கடன் திட்டங்கள் மூலதனக் கடன் திட்டம், பருவகால கடன் திட்டம், இளைஞர் கடன் திட்டம் - வேளாண்மை அபிவிருத்திக்கான பன்னாட்டு நிதியத்தினால் நிதியிடப்பட்டவை.

2. சுழலும் நிதியக் கடன் திட்டங்கள், சுழலும் நிதிய மூலதனக் கடன் சுழலும் நிதிய பருவகாலக் கடன், வருமான உருவாக்கக் கடன் திட்டம் - அரசாங்க இணைத்தரப்பு நிதியிடலின் மூலம் நிதியிடப்பட்டது.

(ஈ) 2018 ஏப்பிறலில் அறிமுகப்படுத்தப்பட்ட சிறு உடமையார் வேளாண் வியாபார பங்குடமையாளர் நிகழ்ச்சித்திட்டக் கடன் திட்டங்களின் தொழிற்பாடுகள் தற்பொழுது ஆரம்ப கட்டத்திலேயே காணப்படுகிறது. 2018 திசெம்பர் இறுதியிலுள்ளவாறு, ரூ.437.9 மில்லியன் தொகை கொண்ட 1,377 கடன்கள் சிறு உடமையாளர் வேளாண் வியாபார பங்குடமையாளர் நிகழ்ச்சித்திட்டத்தின் அரச - தனியார் - உற்பத்தியாளர் - பங்குடமையாளர் கடன் திட்டங்களின் கீழ் இலங்கை மத்திய வங்கியினால் ரூ.322.0 மில்லியன் கொண்ட 1,699 கடன்கள் மீள் நிதியிடப்பட்டன.

(உ) கொள்கைப் பக்கத்தில், பருவகாலக் கடன் திட்டங்களின் கீழ் வழங்கப்பட்ட கடன்களின் உயர்ந்தபட்ச மீள்கொடுப்பனவுக் காலத்தினையும் சலுகைக் காலத்தினையும் அதிகரித்தமையின் மூலம் சிறுஉடமையாளர் வேளாண் வியாபார பங்குடமையாளர் நிகழ்ச்சித்திட்டக் கடன் திட்டங்களின் தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களைத் திருத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. பருவகாலப் பயிர்ச்செய்கை நடவடிக்கைகளை மேற்கொள்ளும் வேளாண்மையாளர்களினால் எதிர்நோக்கப்படும் நடைமுறைக் கஷ்டங்களை இது கட்டுப்படுத்துமென முக்கியமாக எதிர்பார்க்கப்பட்டது. இதன்படி, முழுமையான ஒரே தடவையில்/முழுத்தொகையின் கொடுப்பனவுகள் தொடர்பில் சிறுஉடமையாளர் வேளாண் வியாபாரப் பங்குடமையாளர் நிகழ்ச்சித்திட்டப் பருவகாலக் கடன் திட்டங்களின் சலுகைக் காலத்தினை 12 மாதங்களிலிருந்து 18 மாதங்களுக்கு அதிகரிப்பதற்கும் பருவகாலக் கடன்களுக்கான மாதாந்த மீள்கொடுப்பனவினை உயர்ந்தபட்சம் 30 மாதங்களுக்கு அதிகரிப்பதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

### 22.5 பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்தின் உபாய முன்னெடுப்புக்கள்

#### 22.5.1 நிதியியல் உள்ளடக்கத்திற்கான தேசிய உபாயமொன்றினை அபிவிருத்தி செய்தல்

(அ) பிரதேச அபிவிருத்தித் திணைக்களம் இலங்கைக்காக தேசிய நிதியியல் உள்ளடக்க உபாயமொன்றினை அபிவிருத்தி செய்வதற்கான நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளது. இது தொடர்பில், பிரதேச அபிவிருத்தித் திணைக்களம், நாடுமுழுவதும் நிதியியல் உள்ளடக்கத்தினை மேம்படுத்துவதற்காக கூடியளவு காத்திரமானதும் வினைத்திறன் மிக்கதுமான செயன்முறையினை ஊக்குவிக்கும் நோக்கினைக் கொண்ட அனைத்தையுமுள்ளடக்கிய தேசிய நிதியியல் உள்ளடக்க உபாயத்தினை அபிவிருத்தி செய்வதற்காக உலக வங்கிக் குழுமத்தின் உறுப்பினரான பன்னாட்டு நிதிக் கூட்டுத்தாபனத்தின் தொழில்நுட்ப மற்றும் நிதியியல் உதவியினைப் பெற்றுக்கொள்வதற்கான ஒழுங்குகளை மேற்கொண்டது. இது தொடர்பில், மத்திய வங்கி 2018 சனவரியில் பன்னாட்டு நிதிக் கூட்டுத்தாபனத்துடன் ஒத்துழைப்பு உடன்படிக்கையொன்றில் கையெழுத்திட்டது.

(ஆ) உத்தேச தேசிய நிதி உள்ளடக்க உபாயத்தினூடாக, நாட்டில் நிதியியல் உள்ளடக்கத்தினை அதிகரிப்பதற்காக அலுவலர்களிடம் பொறுப்புக்களை ஒப்படைப்பதற்கான நடவடிக்கைத் திட்டமொன்று உட்பட, அனைத்தையுமுள்ளடக்கிய உபாயக் கட்டமைப்பொன்றினை அறிமுகப்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. அத்தகைய அனைத்தையுமுள்ளடக்கிய கட்டமைப்பொன்றினை நடைமுறைப்படுத்துவதன் மூலம் நாட்டிலுள்ள ஒவ்வொரு தனிப்பட்டவர்களுக்கும் வியாபார முயற்சிகளுக்கும் போதுமானதும் தரமானதும் தாங்கிக் கொள்ளக்கூடியதுமான நிதியியல் பணிகளை உள்ளடக்கிய நியாயமானதும் அணுகத்தக்கதுமான நிதியியல் முறைமையொன்றினை வழங்குமென எதிர்பார்க்கப்படுகிறது. மேலும், 2019இல் நடைமுறைப்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படும் உத்தேச தேசிய நிதியியல் உள்ளடக்க உபாயம் நாட்டின் எதிர்காலப் பொருளாதாரக் கொள்கை வகுப்பாளர்களாக விளங்கக்கூடிய மாணவர்கள் உட்பட பொருளாதாரத்திலுள்ள அனைத்து ஆர்வலர்களிடையேயுமான நிதியியல் அறிவினை மேம்படுத்துவதற்குத் தேவையான அறிவினை வழங்குவதுடன் இணைக்கப்பட்டதாக இருத்தல் வேண்டும்.

(இ) பிரதேச அபிவிருத்தித் திணைக்கள அலுவலர்களின் பாங்கோ சென்றல் சிங் பிலிப்பைன்சுக்கு மேற்கொள்ளப்பட்ட அறிவினைப் பகிர்ந்துகொள்ளும் விஜயத்தின் அடிப்படையில், பிலிப்பைன்சின் பின்னணியில் தேசிய நிதியியல் உள்ளடக்க உபாயத்தினை அபிவிருத்தி செய்வதன் அனுபவத்தினைக் கண்டறிந்து கொள்வதற்காக நிதியியல் கல்வியினூடாக நுகர்வோர் வலுவூட்டலை மேம்படுத்துவதற்காக உத்தேச நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. மேலும், இந்நோக்கத்திற்காக தெரிவுசெய்யப்பட்ட சிறப்புஅளவீட்டு நிறுவனமொன்றினூடாக அனைத்து மாவட்டங்களிலுமுள்ள 480 கிராம அலுவலர் பிரிவுகளை உள்ளடக்கி 2018இல் நாடளாவிய ரீதியில் நிதியியல் உள்ளடக்க அளவீடொன்று நடத்தப்பட்டது. இது நாட்டிலுள்ள நிதியியல் உள்ளடக்கத்தின் நிலையினை அடையாளம் காண்பதனை முக்கிய நோக்கமாகக் கொண்டுள்ளது. மேலும், உலக வங்கியின் குழுமத்தின் ஆலோசனையாளர்கள்

## அட்டவணை II - 23
## 2018இல் பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்ட கடன் வழங்கல் நிகழ்ச்சித்திட்டங்கள்

### கடன் வழங்கல் நிகழ்ச்சித்திட்டம்/ சலுகை கொடுகடன் திட்டம் பற்றிய தகவல்கள்

மொத்தம் ரூபா மில்.

| நிதியிடல் மூலம் | பெயர் | நோக்கம் | மீள்நிதியிடல்/ வட்டி உதவு தொகை | 2018இற்கான மொத்த நிதிய ஒதுக்கீடு | 2018இல் பகிர்ந்து அளிக்கப்பட்ட நிதியங்கள் | பகிர்ந்து அளிக்கப்பட வேண்டிய மீதி நிதியங்கள் | இறுதி கடன் பெறுநருக்கான வட்டி வீதம் - ஆண்டு இறுதி (ஆண்டொன் றிற்கு) | குறிப்பு |
|---|---|---|---|---|---|---|---|---|
| இலங்கை அரசாங் கத்தினால் நிதியிடப்பட்டவை | வறுமை ஒழிப்பு நுண்பாக நிதிச் செயற்றிட்டம் - சுழலும் நிதியம் | வருமான உருவாக்க நடவடிக்கைகளை ஊக்குவிப்பதனூடாக வறுமையையொழித்தல் மற்றும் குறைந்த வருமானம் பெறும் குழுவினரை முறைசாா்ந்த வட்டித் தொகை முறைமையுடன் இணைத்தல் | மீள்நிதியிடல் | ரூ.400.0 மில்லியன் | ரூ.519.7 மில்லியன் | அறவிடப்படும் நிதிகள் மீளப் பயன் படுத்தப்படும் | 12% | |
| | வறுமை ஒழிப்பு நுண்பாக நிதிச் செயற்றிட்டம் II - சுழலும் நிதியம் | | மீள்நிதியிடல் | ரூ.300.0 மில்லியன் | ரூ.336.2 மில்லியன் | அறவிடப்படும் நிதிகள் மீளப் பயன் படுத்தப்படும் | கடன் பெறுநருக்கு பங்கேற்பு நிதி நிறுவனங் களிடமிருந்து 10% | |
| | "சுவசக்தி" - கடன் திட்டம் | நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சி துறைகளில் வருமானம் ஈட்டுகின்ற நடவடிக்கைகளில் ஈடுபடுகின்ற புதிதாக நுழைகின்ற மற்றும் தற்போதுள்ள தொழில் முயற்சியாளர்களுக்கான தொழில் வாய்ப்புக்களை உருவாக்குதல் | மீள்நிதியிடல் | கடன் திட்டத்திற்காக ரூ.3,500 மில்லியன். வருடாந்த ஒதுக்கீடு இல்லை | ரூ.375.4 மில்லியன் | ரூ.930.5 மில்லியன் | 5.5% | சுவசக்திக் கடன் திட்டத்தின் ஊடாக பிரச்சாரத் திற்காக ரூ.47.3 மில்லியன் பயன்படுத்தப் பட்டது. |
| | அனா்த்தங் களினால் பாதிக்கப்பட்ட பொருளாதார நடவடிக்கைகளை மீள ஆரம்பிப்பதற்கான "அத்வெல" கடன்திட்டம் | இலங்கை அரசாங்கத்தினால் அறிவிக்கப்பட்டவாறு ஏதேனும் அனா்த்தத்தினால் பாதிக்கப்பட்ட ஏதேனும் பொருளாதார நடவடிக்கையினை மீள ஆரம்பிப்பதற்கு சலுகை நிதியில் வசதிகளை வழங்குதல். | மீள்நிதியிடல் | கடன் திட்டத்திற்காக ரூ2,000 மில்லியன். வருடாந்த ஒதுக்கீடு இல்லை | ரூ.1,499.7 மில்லியன் | இலங்கை அரசாங்கத்திட மிருந்து பெறப்பட வேண்டிய நிதி | 2% | |
| | சுயதொழில் ஊக்குவிப்பு முன்முயற்சிக் கடன் திட்டம் (கட்டம் II) | அங்கீகரிக்கப்பட்ட தொழிற்பயிற்சி நிறுவனங்களினால் பயிற்றப்பட்ட இளைஞர்களுக்கு அவர்களுக்குரித்தான சுயதொழில் செயற்றிட்டங்களை நிறுவுவதற்காக நிதியுதவி வழங்குதல். | மீள்நிதியிடல் | ரூ.127.4 மில்லியன் | ரூ.127.4 மில்லியன் | 2019இற்காக இலங்கை அரசாங் கத்தினால் நிதியங்கள் ஒதுக்கப்படும் | 7% | |
| GOSL குரனென | சிறு உடமையாளர் வேளாண் வியாபார பங்குடமை நிகழ்ச்சித்திட்டம் - வருமான உருவாக்க கடன் திட்டம் | இலங்கையின் சிறு உடமையாளர் வறுமையினைக் குறைப்பதற்கு பங்களித்தல் வர்த்தகம் சார்ந்த உற்பத்தி மற்றும் சந்தைப்படுத்தல் முறைமைகளுடன் தொடர்புபட்ட 57,500 சிறு உடமையாளர்களின் போட்டித்தன்மைகளையும் வருமானத்தினையும் உணவின் தரத்தினையும் அதிகரித்தல். | மீள்நிதியிடல் | | ரூ.106.4 மில்லியன் | வி.கி* | 6.5% | பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களின் சொந்த நிதி. வட்டி உதவு தொகை இலங்கை அரசாங்கத் தினால் வழங்கப்படும் |
| | "சறுசற: புதிய அனைத்தையு முள்ளடக்கிய கிராமிய கொடுகடன் திட்டம் | நெல் மற்றும் குறுங்கால பயிர்செய்கையில் ஈடுபட்டுள்ள நுண்பாக, சிறியளவு வேளாண்மையாளர்களின் சமூகப் பொருளாதார நிலைமைகளை உயர்த்தல் | வட்டி உதவுதொகை கொடுகடன் உத்தரவாதம் | நிதியத்திற்கான கேள்வியில் தங்கியிருத்தல் | ரூ.9,025.3 மில்லியன் | வி.கி* | 7% | |
| | சுபீட்சக் கடன் திட்டம் (சௌபாக்கியா) | நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சியினை அல்லது அனா்த்தங்களால் பாதிக்கப்பட்ட ஏதேனும் நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சியினை ஆரம்பித்தல் அல்லது விரிவுபடுத்தல். | மீள்நிதியிடல் | ரூ.3,800 மில்லியன் | ரூ.3,850.1 மில்லியன் | அறவிடப்படும் நிதிகள் மீளப் பயன்படுத்தப்படும் | 8% | |
| மத்திய வங்கியினால் நிதியிடப்பட்டது | வர்த்தக அளவிலான பாற்பண்ணை அபிவிருத்திக் கடன் திட்டம் | வர்த்தக அளவிலான பாற்பண்ணைகளை ஊக்குவிப்பதனூடாக பால் மற்றும் பால் உற்பத்திகளில் தன்னிறைவடைவதற்கு ஆதரவளித்தல். | வட்டி உதவுதொகை | நிதியத்திற்கான கேள்வியில் தங்கியிருத்தல் | ரூ.272.9 மில்லியன் | | 6% | பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களின் சொந்த நிதி. வட்டி உதவு தொகை இலங்கை அரசாங்கத் தினால் வழங்கப்படும் |
| Donor குரனென | சிறு உடமையாளர் வேளாண் வியா-பார பங்குடமை நிகழ்ச்சித்திட்டம் - அரச - தனியார் துறை - உற்பத்திகள் - பங்குடமை மூலதன கடன் திட்டம் | இலங்கையின் சிறு உடமையாளர் வறுமையினைக் குறைப்பதற்கு பங்களித்தல். வர்த்தகம் சார்ந்த உற்பத்தி மற்றும் சந்தைப்படுத்தல் முறைமைகளுடன் தொடர்புபட்ட 57,500 சிறு உடமையாளர்களின் போட்டித்தன்மைகளையும் வருமானத்தினையும் உணவின் தரத்தினையும் அதிகரித்தல். | மீள்நிதியிடல் | அனைத்து அரச தனியார் துறை உற்பத்தியாளர் பங்குடமை கடன் திட்டங் களுக்காக ஐ.அ.டொலர் 11.8 மில்லியன். குறிக்கப்பட்ட ஆண்டுகளுக்கென ஒதுக்கம் இல்லை | ரூ.67.8 மில்லியன் | வி.கி* | 6.5% | வேளாண்மை அபிவிருத்திக் கான பன்னாட்டு நிதியத்தினால் நிதியிடப் பட்டது |
| | சிறு உடமையாளர் வேளாண் வியா-பார பங்குடமை நிகழ்ச்சித்திட்டம் - அரச - தனியார் துறை - உற்பத்திகள் - பங்குடமை பருவகால கடன் திட்டம் | | மீள்நிதியிடல் | | ரூ.254.2 மில்லியன் | வி.கி* | 6.5% | |

* Abbreviations stands for;
N.A.; Not applicable

2018இல் மத்திய வங்கிக்கு விஜயம் செய்து, நாட்டில் நிதியியல் உள்ளடக்கம் தொடர்பில் பல்வேறுபட்ட ஆர்வலர்களினதும் நோக்குகளையும், கருத்துக்களையும் பிரச்சனைகளையும் திரட்டுவதற்காக தொடர்ச்சியான கூட்டங்களையும் செயலமர்வுகளையும் நடத்தியது. இக்கூட்டத்தினைத் தொடர்ந்து தேசிய நிதியியல் உள்ளடக்க உபாயத்திற்காக மேலோட்டமான திட்டமொன்று வரையப்பட்டதுடன் ஆர்வலர்களினால் அது மீளாய்வு செய்யப்பட்டது. 2019ஆம் ஆண்டின் முதற்காலாண்டுப் பகுதியில் உலக வங்கி குழுமத்தின் ஆலோசனையாளர் குழுமத்தின் பங்கேற்புடன் தேசிய நிதியியல் உள்ளடக்க உபாயத்தின் மீது இரண்டாவது ஆலோசனை செயலமர்வொன்றினை நடாத்த எதிர்பார்க்கப்படுகிறது.

### 22.5.2 பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்ட கடன் திட்டங்களின் தொழிற்பாடுகள் தன்னியக்கப்படுத்தல்

2018ஆம் ஆண்டுப்பகுதியில், பிரதேச அபிவிருத்தித் திணைக்களமானது அத்திணைக்களத்தினால் தொழிற்படுத்தப்படும் திட்டங்களின் கீழ் கடன்களை பதிவுசெய்தல் மற்றும் மீள் நிதியிடலை தன்னியக்கப்படுத்துவதற்கான பூர்வாங்க நடவடிக்கைகளை ஆரம்பித்தது. சிறு உடமையாளர் வேளாண் வியாபார பங்குடமையாளர் நிகழ்ச்சித்திட்டங்களிலிருந்து ஆரம்பிக்கப்படவேண்டிய இத்தன்னியக்க செயன்முறையானது சிறு உடமையாளர் வேளாண் வியாபார பங்குடமையாளர் நிகழ்ச்சித்திட்ட நிதியிடல் உடன்படிக்கையின் நிறுவன ரீதியான வலுப்படுத்தல் பிரிவின்கீழ் வேளாண்மை அபிவிருத்திக்கான பன்னாட்டு நிதியத்தினால் நிதியிடப்படவுள்ளது. இச்செயன்முறையானது சிறு உடமையாளர் வேளாண் வியாபார பங்குடமையாளர் நிகழ்ச்சித்திட்டத்தின் நிகழ்ச்சித்திட்ட முகாமையாளர் பிரிவு பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் மற்றும் ஏனைய தொடர்பான பங்குடமையாளர்களின் ஒத்துழைப்புடன் நிறைவு செய்வதற்கு எதிர்பார்க்கப்படுகிறது.

(அ) சிறு உடமையாளர் வேளாண் வியாபார பங்குடமையாளர் நிகழ்ச்சித்திட்டத்தின் கடன் திட்டங்களை தன்னியக்கப்படுத்தல் இத்திட்டங்களின் சுமுகமான நடைமுறைப்படுத்தலை மேம்படுத்தும். இச்செயன்முறையானது பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்தின் முழுக்கடன் சொத்துப்பட்டியலினதும் தொழிற்பாடுகளை தன்னியக்கப்படுத்த வழியமைக்கும் என்பதுடன் இதன் தொழிற்பாடுகளின் வினைத்திறனையும் காத்திரமான தன்மையினையும் அதிகரிக்கும். இம்முறைமையானது அனைத்தையுமுள்ளடக்கிய முகாமைத்துவ தகவல் முறைமையொன்றாக செயற்படுமென்பதுடன் இது பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்தின் தீர்மானங்களை மேற்கொள்ளும் செயன்முறைக்கு ஆதரவளிக்கும்.

இது தொடர்பில், பிரதேச அபிவிருத்தித் திணைக்களம் தொடர்பான ஆர்வலர்களின் பங்கேற்புடன் பயன்படுத்துநர் தேவைப்பாடுகள் மற்றும் தொழிற்பாட்டு கரிசனைகள் தொடர்பில் பல கூட்டங்களையும் செயலமர்வுகளையும் நடத்தியது. பிரதேச அபிவிருத்தித் திணைக்களம் 2019இல் செயற்றிட்டத்தினை நிறைவுசெய்வதற்கு எதிர்பார்க்கிறது.

### 22.5.3 "ஒரு கிராமம் - ஒரு உற்பத்தி" நிகழ்ச்சித்திட்டம்

நாட்டின் உணவு மற்றும் ஊட்டச்சத்து பாதுகாப்பினை உறுதிப்படுத்துவதற்கு உள்நாட்டு வேளாண்மை உற்பத்தியை அதிகரிக்கும் நோக்குடன், உள்ளார்ந்த வளத்தினைக் கொண்ட கிராமங்களைத் தெரிவுசெய்வதன் மூலம் வர்த்தக அளவிலான வேளாண்மை உற்பத்திகளுக்கான "ஒரு கிராமம் - ஒரு உற்பத்தி" கோட்பாட்டினை ஊக்குவிப்பதற்காக, மத்திய வங்கி நடவடிக்கைகளை மேற்கொண்டது. இந்நிகழ்ச்சித்திட்டத்தின் பரந்த குறிக்கோள் யாதெனில் அரசாங்கத்தின் தேசிய உணவு உற்பத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் வலுவான அபிவிருத்தி இலக்குகளுக்கு ஆதரவளிப்பதேயாகும்.

"ஒரு கிராமம் - ஒரு உற்பத்தி" நிகழ்ச்சித்திட்டத்தினை உள்நாட்டு மூலவளங்களுக்கான பெறுமதி கூட்டலினூடாக வருமானத்தினையும் செலவினத்தையும் அதிகரிப்பதற்காக தொலைநோக்குடன் ஒருங்கிணைக்கப்பட்ட சமூக அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டமொன்றாக உருவாக்க முடியும். மேலும், இதனை புத்தாக்கம், ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி, உள்ளூரில் கிடைக்கத்தக்க மூல வளங்களின் பெறுமதி கூட்டலை அதிகரித்தல் என்பனவூடாக குறித்துரைக்கப்பட்ட கிராமங்களில் கிடைக்கத்தக்கதாகவுள்ள மூலவளங்களின் உயர்ந்தபட்ச பயன்பாட்டிற்கு இது வழிவகுக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதன் மூலம் வருமானத்தினை உயர்த்தல் மற்றும் வாழ்க்கைத்தரத்தினை மேம்படுத்தல் ஆகிய வழிகளின் மூலம் சமூகத்திற்கு நன்மை பயக்கும் ஒரே விதமான தரத்தினைக்கொண்ட உள்ளூர் ரீதியாகவும் பிராந்திய ரீதியாகவும் உலகளாவிய ரீதியிலும் அங்கீகரிக்கப்பட்ட உற்பத்திகளை அபிவிருத்தி செய்யமுடியும்.

## 22.6 நிதியியல் அறிவினையும் இயலாற்றலையும் கட்டியெழுப்புதல்

அனைத்தையுமுள்ளடக்கிய நிதியியல் உள்ளடக்கத்தினை நோக்கிய பயணத்தின் இயக்கவாற்றல் மிக்கதொரு பகுதியாக, நிதியியல் அறிவினதும் விழிப்புணர்வினதும் முக்கியத்துவத்தினை அடையாளம் காணுகின்ற விதத்தில் 2018இல் பிரதேச அபிவிருத்தித் திணைக்களம் 150 நிகழ்ச்சித்திட்டங்களை நடத்துகின்ற இலக்குடன் ஒப்பிடுகையில், 163 விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களை நடத்தியது. இந்நிகழ்ச்சித்திட்டங்கள் சமூக முன்னேற்ற நடவடிக்கைகளிலும் சமூகத்தின் அடித்தளத்திலுள்ள நிதியியல் ரீதியில் பின்தங்கியுள்ள தொகுதியினரின் நடவடிக்கைகளிலும் ஈடுபாடு கொண்டுள்ள சமூகத் தலைவர்களுக்கும் ஆர்வலர்களுக்கும் நிதியியல் அறிவு. தொழில்முயற்சியாண்மை அபிவிருத்தி மற்றும் தேர்ச்சி அபிவிருத்தியை வழங்குவது மீது முக்கிய கவனத்தினைச் செலுத்தின.

இந்நிகழ்ச்சித்திட்டங்கள் நிதியியல் அறிவின்மையின் காரணமாக ஏற்படும் வீட்டலகினரின் கடன் சுமை போன்ற பின்னடைவுகளின் மீது விழிப்புணர்வினை உருவாக்குவதனை நோக்கமாக கொண்டுள்ளன. மேலும், இந்நிகழ்ச்சித்திட்டங்கள் நிவாரணங்களை வழங்குவதிலும் முறைசார்ந்த நிதியியல் துறையுடன் இணைக்கப்படுவதிலும் கவனம் செலுத்தின. முக்கியமான தொகுதியினருக்கு சிறந்த வங்கித்தொழில் நடத்தைகள், நிதியியல் ஒழுக்காறு மற்றும் புதிய நிதியியல் சாதனங்கள் மற்றும் பணிகள் மீது அறிவூட்டப்பட்டவிடத்து அவர்கள் நிதியியல் ரீதியான அறிவாற்றலைக் கொண்டிருந்ததுடன் அவர்கள் சேமிப்பு, முதலீடு கடன்பாடு போன்றவற்றை தெரிவுசெய்வதற்கான நிதியியல் தகவல்களையும் பெற்றுக்கொள்ளக்கூடியவர்களாக இருந்தனர். பிரதேச அபிவிருத்தி திணைக்களம், நிதியியல் ரீதியாக கவனிப்பாரற்றுப் போனமையின் காரணமாக பின்னடைந்தவர்கள் தொடர்பில் விழிப்புணர்வினை உருவாக்கும் நோக்குடன் அபிவிருத்தியடைந்த மற்றும் பின்தங்கிய பிரதேசங்கள் இரண்டினையும் அடையாளம் கண்டது. இந்நிகழ்ச்சித்திட்டங்களின் இலக்கிடப்பட்ட தொகுதியினர், கடந்த காலத்தில் பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்தின் பிராந்திய அபிவிருத்தி அனுபவங்களின் அடிப்படையில் அதனால் அடையாளம் காணப்பட்ட பாதிக்கப்படக்கூடிய தொகுதியினரை முக்கியமாக உள்ளடக்கியிருந்தது.

பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்தினால் நடாத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களின் விபரங்கள் அட்டவணை II - 24இல் தரப்பட்டுள்ளன.

**அட்டவணை II - 24**

**2018இன் போது பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்தினால் நடாத்தப்பட்ட விழிப்பூட்டல் நிகழ்ச்சித்திட்டங்கள்**

| நிகழ்ச்சித்திட்டத்தின் வகை | நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை |
|---|---|
| நிதியியல் அறிவு | 110 |
| இயலளவைக்கட்டியெழுப்புதல் | 44 |
| ஊடக பிரச்சாரம் | 9 |
| **மொத்தம்** | **163** |

## 23. பிரதேச அலுவலக முகாமைத்துவம்

நாணயவிதிச்சட்டத்தின் 7 ஆவது பிரிவின்படி "இலங்கை மத்திய வங்கி தனது பிரதான வியாபார நிலையத்தினை கொழும்பில் கொண்டிருப்பதுடன், வங்கிச்செயற்பாடுகளை முறையாக மேற்கொள்வதற்கு அவசியமாகின்ற வகையில் இலங்கையிலுள்ள ஏனைய பகுதிகளிலும். வெளிநாடுகளிலும் அதன் கிளைகள், முகவர்கள் மற்றும் நிருபர்களைக் கொண்டிருக்க முடியும்". இவ்வாறாக இலங்கை மத்திய வங்கி அதன் தொழிற்பாடுகளை மேற்கொள்ளல், உரிய பிராந்தியங்களில் அபிவிருத்தி நடவடிக்கைகளை மேம்படுத்தல் போன்ற நோக்கில், 1981 தொடக்கம் மாத்தறை, அனுராதபுரம், மாத்தளை, யாழ்ப்பாணம், திருகோணமலை, கிளிநொச்சி மற்றும் நுவரெலியா ஆகிய மாவட்டங்களில் தனது ஏழு பிரதேச அலுவகங்களை நிருவ படிமுறைகளை எடுத்துள்ளது. கிளிநொச்சி பிரதேச அலுவலகத்தில் கிடைக்கக்கூடிய சேவைகள் மற்றும் இப்பகுதியிலுள்ள வளங்களைப் பயன்படுத்தி இப்பிரதேச மக்களுக்கு வினைத்திறனான சேவைகளை வழங்கும் நோக்கில் யாழ்ப்பாண பிரதேச அலுவலகம் 2017 யூன் மாதத்திலிருந்து கிளிநொச்சி பிரதேச அலுவலகத்துடன் இணைக்கப்பட்டது. மேலும், நாணயச்சபையின் அனுமதியுடன், முன்னர் எந்த பிரதேச அலுவலகங்களின் கண்காணிப்பின் கீழும் உள்ளடக்கப்படாத மாவட்டங்களான இரத்தினபுரி, கேகாலை மற்றும் மொனராகலை ஆகிய மாவட்டங்கள் முறையே, மாத்தறை பிரதேச அலுவலகம், மாத்தளை பிரதேச அலுவலகம் மற்றும் நுவரெலியா பிரதேச அலுவலகம் ஆகியவற்றின் முகாமைத்துவத்தின் கீழ் கொண்டுவரப்பட்டன. முன்னர் பிரதேச அலுவலகங்களின் மேற்பார்வைக்கு உட்படாத மேல் மாகாணத்திலுள்ள 3 மாவட்டங்கள் பிரதேச அலுவலக முகாமைத்துவ திணைக்களத்தின் கீழ் கொண்டுவரப்பட்டன. இவ்வாறாக 2018 ஆம் ஆண்டளவில் நாட்டின் நிர்வாக மாவட்டங்கள் 25 இனையும் உள்ளடக்கியதாக பிரதேச அலுவலக முகாமைத்துவ திணைக்களம் மற்றும் பிரதேச அலுவலகங்களின் தொழிற்பாடுகள் இடம்பெற்றன.

பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் பயிற்சித் திட்டங்களினை நடாத்துவதுடன் முயற்சியாளர்களின் நலனை அடிப்படையாகக்கொண்டு வர்த்தகக்கண்காட்சி, தொழில்நுட்ப பரிமாற்ற பயிற்சிப்பட்டறைகள், வெளிப்படுத்துகை விஜயங்கள் என்பவற்றை ஒழுங்குபடுத்துதலுடன் அபிவிருத்தி நடவடிக்கைகளை மேம்படுத்தல் மூலம் அதிக நிலைத்திருக்கக்கூடிய சமச்சீரான பிரதேச அபிவிருத்தியை அடைந்துகொள்வதற்கு பிரதேச அலுவலகங்கள் மற்றும் பிரதேச அலுவலக முகாமைத்துவ திணைக்களம் பங்களித்துள்ளன. மேலும், இலங்கை மத்திய வங்கியின் சேவைகளை பிரதேச மட்டத்தில் விரிவாக்கம் செய்வதில் பிரதேச அலுவலக முகாமைத்துவ திணைக்களம் மற்றும் பிரதேச அலுவலகங்கள் பிரதான பங்கினையும் வகிக்கின்றன.

### 23.1 அபிவிருத்தி செயற்பாடுகள்

ஆண்டு காலப்பகுதியில், தொழில்முயற்சியாளர்கள், அரச அலுவலர்கள், பாடசாலை மாணவர்கள், பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் போன்ற பல்வேறு தரப்பினரையும் உள்ளடக்கிய 12,781 தனிநபர்களை இலக்காகக் கொண்டு பிரதேச அலுவலக முகாமைத்துவ திணைக்களம் மற்றும் பிரதேச அலுவலகங்கள் முறைசார் மற்றும் தாங்கிக்கொள்ளக்கூடிய நிதியியல் பணிகள் போன்றவற்றின் மீதான 148 விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களையும் நடாத்தியுள்ளன. மேலும், பிரதேச அலுவலகங்கள் தொடர்புடைய பிரதேசங்களின் கொடுகடன் வழங்கல் பொறிமுறையினை மேம்படுத்தி வெற்றிகரமாக 1,953 கொடுகடன் இணைப்புக்களை ஏற்படுத்தியுள்ளதுடன், பல்வேறு காரணங்களினால் தவணைக்கடன்களினை மீளச்செலுத்துவதில் இடர்பாடுகளை எதிர்நோக்கிய கடன்பாட்டாளர்களுக்கு கொடுகடன் ஆலோசனைப்பணிகளும் வழங்கப்பட்டன.

பிரதேச அலுவலக முகாமைத்துவ திணைக்களம் மற்றும் பிரதேச அலுவலகங்கள் தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி, சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாண்மை உருவாக்கம், தொழில்நுட்ப மாற்றல் மற்றும் வியாபாரத்திலான சிறந்த நடைமுறைகளின் பிரயோகம் போன்ற விடயங்களை உள்ளடக்கி பல்வேறு பயிற்சித்திட்டங்களை நடாத்தியுள்ளன. இந்த வகையில், வியாபார திட்டம் தயாரித்தல், கணக்குப்பதிவு, வரிவிதிப்பு, சந்தைப்படுத்தல் மற்றும் ஏனைய முறை போன்ற பல்வேறு தேவைப்பாடுகளின் மீது 80 பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் 4,476 தனிநபர்கள் பயனடைவதற்காக நடாத்தப்பட்டது. மேலும், சிறந்த நடைமுறைகள் நிகழ்ச்சித்திட்டங்கள் உள்ளடங்கலாக 132 இயலளவைக் கட்டியெழுப்புதல் நிகழ்ச்சித்திட்டங்கள் 6,860 தொழில்முயற்சியாளர்களுக்கு ஒழுங்குபடுத்தப்பட்டுள்ள அதேவேளையில் 09 வெளிப்படுத்துகை விஜயங்கள் மற்றும் தொழில்நுட்ப மாற்றல் நிகழ்ச்சித்திட்டங்கள் 103 தொழில்முயற்சியாளர்களுக்கு ஒழுங்குபடுத்தப்பட்டதுடன், இப்பயனாளிகள், வேளாண்மை, பாற்பொருள் உற்பத்தி, அலங்கார தாவரங்கள் மற்றும் மலர் வளர்ப்பு, காளான் வளர்ப்பு, உணவு உற்பத்தி செயன்முறை, பாதணிகள் தயாரிப்பு, பற்றிக் அச்சிடுதல், ஆடைத்துறை மற்றும் சுற்றுலாத்துறை மற்றும் ஏனையவற்றுடன் இணைந்ததாகக் காணப்பட்டது.

பிரதேச அலுவலகங்கள் சந்தை இணைப்புக்களை ஒழுங்குசெய்தல், வாங்குநர், விற்பனையாளர் கலந்துரையாடல்கள், பண்டிகைக்கால வர்த்தக கண்காட்சிகள் என்பவற்றினூடாக கடன்பாட்டாளர்களின் சந்தைப்படுத்தல் முயற்சிகளுக்கு உதவின. இதன்படி, பிரதேச மட்டத்தில் 05 வர்த்தக கண்காட்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டதுடன், மொத்தமாக 373 முயற்சியாளர்கள் பயனடைந்துள்ளனர்.

அதேவேளை பிரதேச அலுவலகங்கள் முழுநாள் நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்தி அதன்மூலம் மத்திய வங்கியின் பணிகளான ஊழியர் சேமலாப நிதியம், சேதமடைந்த நாணயத்தின் பரிமாற்றம், நாணய அரும்பொருட்காட்சிக்கூடம், மத்திய வங்கி வெளியீடுகள் மற்றும் ஞாபகார்த்த நாணயக்குற்றிகள் என்பவற்றின் விற்பனை மற்றும் பல்வேறு கடன் கிடைப்பனவை வசதிப்படுத்தல் என்பன மூலம் பொதுமக்கள் மற்றும் பெருமளவான மக்கள் பயன்பெற்றார்கள். மேலும் மேற்கூறப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களுடன் சமாந்தரமாக பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் வர்த்தக்கண்காட்சிகளையும் நடாத்தியுள்ளன. பிரதேச அலுவலக முகாமைத்துவ திணைக்களம் 2018 ஆம் ஆண்டில் ஆளுநர் செயலகத்துடன் இணைந்து நுவரெலியா, திருகோணமலை மற்றும் அனுராதபுரம் ஆகிய பிரதேச காரியாலயங்களிற்கு ஆளுநரின் சிறப்பு வருகையை ஒழுங்குபடுத்தியுள்ளது. பொருத்தமான அமைச்சுக்களின் உதவியுடன் கடன் சுமை தொடர்பில் கிராமிய சமூகங்களினால் எதிர்கொள்ளப்படுகின்ற பிரச்சனைகளை மீளாய்வதற்கான நிகழ்ச்சித்திட்டங்களும் நடாத்தப்பட்டுள்ளன. இவ்வாறாக 1,290 தனிநபர்கள் இத்தகைய நிகழ்ச்சித்திட்டங்களிலிருந்து பயன்பெற்றுள்ளனர். இதற்கு அப்பால், முழுநாள் நிகழ்ச்சித்திட்டங்களுடன் இணைந்த வகையில் வங்கிகள் மற்றும் நிதியியல் நிறுவனங்களின் மூத்த அதிகாரிகளின் பங்களிப்புடன் ஆய்வரங்குகளும் நடாத்தப்பட்டுள்ளன.

### 23.2 இலங்கை மத்திய வங்கியை பிரதேச மட்டத்தில் பிரதிநிதித்துவப்படுத்தல்

பிரதேச அலுவலகங்கள் மற்றும் பிரதேச அலுவலக முகாமைத்துவ திணைக்களம் இலங்கை மத்தியவங்கியின் ஏனைய திணைக்களங்களின் பல்வேறு வகையான நிகழ்வுகளை நடாத்த உதவியதன் மூலம் மத்திய வங்கியை பிரதேச மட்டத்தில் பிரதிநிதித்துவப்படுத்தின. பிரதேச அலுவலகங்கள் ஆண்டு முழுவதிலும் 91,931 ஊழியர் சேமநிதி தொடர்பான விசாரணைகள் மற்றும் நினைவு நாணயங்கள் தொடர்பான விற்பனை, இலங்கை மத்திய வங்கியின் வெளியீடுகள் நாடளாவிய தரவு சேகரிப்பு மற்றும் நாணய அருங்காட்சியகம் ஆகிய நிகழ்ச்சிகளில் பங்குபற்றின. மேலும், தூய நாணயதாள் போலி நாணயத்தாள்களை அடையாளங்காணுதல், அனுமதியளிக்கப்படாத நிதி நிறுவனங்கள் தடைசெய்யப்பட்ட திட்டங்கள், அரச பிணையங்கள் சந்தை, வெளிநாட்டு நாணய கட்டுப்பாடுகள் தொடர்பான பல்வேறு நிகழ்ச்சிதிட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளன. மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கான

கல்வியறிவு சார் நிகழ்ச்சிதிட்டங்களும் நடாத்தப்பட்டுள்ளன. இதன்படி பலதரப்பட்ட விடயங்களை உள்ளடக்கியதான 155 விழிப்புணர்வு நிகழ்ச்சிதிட்டங்கள் 17,516 பங்குபற்றுநர்களுக்கு நடாத்தப்பட்டன. மேலும் இவ் ஆண்டில் பிரதேச அலுவலக முகாமைத்துவ திணைக்களம் மற்றும் பிரதேச அலுவலகங்கள் கடன் கேள்வி ஆய்வு, வாடிக்கையாளர் வரைவு தொடர்பான விழிப்புணர்வு, நிதி தொடர்பான ஆய்வுகளையும் நடாத்தியுள்ளன. பிரதேச ரீதியில் நடைமுறைப்படுத்தப்பட்ட பல்வேறு கூட்டங்கள் விவாதங்கள் மற்றும் விசேட நிகழ்ச்சிகளில் பிரதேச முகாமையாளர் மற்றும் பிரதேச அலுவலக முகாமைத்துவ திணைக்களத்தின் அலுவலர்கள் பங்குபற்றியுள்ளனர்.

## 24. தீர்மானங்கள் மற்றும் நடைமுறைப்படுத்தல்

2017 யூன் 16ஆம் திகதி இடம்பெற்ற 21/2017ஆம் இலக்க நாணயச் சபையின் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கிணங்க, சட்டம் மற்றும் இணங்குவிப்புத் திணைக்களத்தினுள் தொழிற்பட்ட நடைமுறைப்படுத்தல் பிரிவினை மாற்றியமைத்ததன் மூலம் 2018.01.01 இலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் தீர்மானங்கள் மற்றும் நடைமுறைப்படுத்தல் திணைக்களம் நிறுவப்பட்டது. வங்கி மேற்பார்வைத் திணைக்களத்தில் தொழிற்பட்டுவந்த வைப்புக் காப்புறுதி பிரிவும்கூட, தீர்மானங்கள் மற்றும் நடைமுறைப்படுத்தல் திணைக்களத்திற்கு மாற்றப்பட்டது. முதலில் சட்டம் மற்றும் இணங்குவிப்புத் திணைக்களத்தின் கீழ் ஆரம்பத்தில் நிறுவப்பட்ட விசேட பொலிஸ் பிரிவும் புதிதாக உருவாக்கப்பட்ட தீர்மானங்கள் மற்றும் நடைமுறைப்படுத்தல் திணைக்களத்தின் கண்காணிப்பின் கீழ் கொண்டுவரப்பட்டது.

இடர்ப்பாட்டு நிலையிலுள்ள நிதியியல் நிறுவனங்களைத் தீர்மானித்தல், அதிகாரமளிக்கப்படாத வைப்புக்களை ஏற்கும் நிறுவனங்கள் மற்றும் தடைசெய்யப்பட்ட திட்டங்கள் உள்ளடங்கலாக நிதித்தொழில் சட்டம் மற்றும் வங்கித்தொழில் சட்டத்தின் தொடர்பான ஒழுங்குவிதி ஏற்பாடுகளுக்கு மாறாக நடந்துகொள்ளும் நிறுவனங்களின் அலுவலர்களுக்கெதிராக விசேட விசாரணைகளை நடாத்துதல் ஆகியன தீர்மானங்கள் மற்றும் நடைமுறைப்படுத்தல் திணைக்களத்தின் பிரதான குறிக்கோள்களாக உள்ளன. இக்குறிக்கோள்களை அடைந்துகொள்ளும்பொருட்டு திணைக்களமானது அதற்கு ஒப்படைக்கப்பட்ட மையத் தொழிற்பாடுகளை அடிப்படையாகக்கொண்டு தீர்மானங்கள் பிரிவு, நடைமுறைப்படுத்தல் பிரிவு மற்றும் வைப்புக் காப்புறுதிப் பிரிவு என மூன்று பிரிவுகளைக் கொண்டுள்ளது.

### 24.1 இடர்ப்பாட்டு நிலையிலுள்ள நிதி நிறுவனங்கள் பற்றிய தீர்மானங்கள்

தீர்மானங்கள் மற்றும் நடைமுறைப்படுத்தல் திணைக்களமானது இலங்கை மத்திய வங்கியினால் உரிமம் வழங்கப்பட்ட நிதி நிறுவனங்களுக்காக அனைத்தையுமுள்ளடக்கிய தீர்மானமெடுத்தல் கட்டமைப்பொன்றை அபிவிருத்தி செய்யும் செயன்முறையில் ஈடுபட்டுள்ளது. தீர்மான அதிகாரம் மற்றும் அதன் தீர்மான வலு குறித்துரைக்கப்பட்டுள்ள ஏற்கனவேயுள்ள ஒழுங்குபடுத்தல் கட்டமைப்பினுள் இது அபிவிருத்தி செய்யப்படும். தற்போது பெரும்பாலும் அனைத்து தீர்மான அதிகாரங்களும் தொடர்புடைய ஒழுங்குபடுத்துநர்களுக்கு அதாவது தொடர்பான சட்டவாக்கங்களின்படி உரிமம்பெற்ற வங்கிகள் விடயத்தில் வங்கி மேற்பார்வைத் திணைக்களப் பணிப்பாளர் மற்றும் வங்கியல்லா நிதி நிறுவனங்கள் விடயத்தில் வங்கியல்லா மேற்பார்வைத் திணைக்களப் பணிப்பாளர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

### 24.2 நடைமுறைப்படுத்தல் நடவடிக்கைகள்

தீர்மானங்கள் மற்றும் நடைமுறைப்படுத்தல் திணைக்களத்தின் நடைமுறைப்படுத்தும் தொழிற்பாடுகள் நடைமுறையிலுள்ள சட்ட ஏற்பாடுகளின் நியதிகளில் உள்ளக ஒழுங்குகள் உள்ளடங்கலாக தயார் செய்யப்பட்ட செயற்பாட்டு நடவடிக்கைகளின் கீழ் நடாத்தப்படுகின்றன. அதன்படி அதிகாரமளிக்கப்படாத நிதி வியாபாரங்கள் மீதான விசாரணையை நடாத்துவதற்காக, 2011ஆம் ஆண்டின் 42ஆம் இலக்க நிதித்தொழில் சட்டத்தின் 42(1)ஆம் பிரிவின் கீழ் வங்கியல்லா நிதி நிறுவனங்கள் திணைக்களப் பணிப்பாளர் தீர்மானங்கள் மற்றும் நடைமுறைப்படுத்தல் திணைக்கள அலுவலர்களுக்கு அதிகாரமளித்துள்ளார். தடைசெய்யப்பட்ட திட்டங்கள் மீதான விசாரணைகளை நடாத்துவதற்கு ஆளுநர் 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் 83இ பிரிவின் கீழ் தீர்மானங்கள் மற்றும் நடைமுறைப்படுத்தல் திணைக்கள அலுவலர்களை நியமித்திருக்கிறார்.

தடைசெய்யப்பட்ட திட்டம் எனக்குறிப்பிட்ட திட்டங்களின் நடத்தை மீது தீர்மானங்கள் மற்றும் நடைமுறைப்படுத்தல் திணைக்கள அலுவலர்கள் புலன்விசாரணைகளை ஆரம்பித்துள்ளார்கள். நாணயச் சபையின் தீர்மானத்துடன் இரண்டு விசாரணை அறிக்கைகளும் வழக்குத்தொடுப்பதற்காக சட்டமா அதிபர் திணைக்களத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. மேலும் தடைசெய்யப்பட்ட திட்டங்கள் தொடர்பில் ஏனைய இரண்டு விசாரணைகளுக்கு தீர்மானங்கள் மற்றும் நடைமுறைப்படுத்தல் திணைக்கள அலுவலர்கள் குற்றப்புலனாய்வுப் பிரிவு மற்றும் நிதிக் குற்றப் புலனாய்வுப் பிரிவுக்கு உதவியதோடு நிறைவுசெய்யப்பட்ட விசாரணை அறிக்கைகள் சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு மேலதிக நடவடிக்கைகளுக்காக அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

அதிகாரமளிக்கப்படாத வைப்புக்களை ஏற்கும் ஒரு நிறுவனத்தின் மீதான விசாரணை முடிவடைந்ததைத் தொடர்ந்து நாணயச் சபையின் வழிகாட்டல் மற்றும் தீர்மானங்களுடன் இணங்கிச்செல்வதில் தோல்விகண்ட கம்பனியின் பணிப்பாளர்களுக்கெதிராக சட்ட நடவடிக்கையையும் ஆரம்பித்தது. கம்பனியின் பணிப்பாளரொருவர் பொலிஸ் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டதோடு மேலதிக விசாரணைகளை நடாத்துமாறு குற்றப்புலனாய்வுப் பிரிவிற்கு நீதிமன்றம் பணித்தது.

தடுப்பு வழிமுறையொன்றாக அதிகாரமளிக்கப்படாத வைப்புக்களை ஏற்கும் நிறுவனங்கள் மற்றும் தடைசெய்யப்பட்ட திட்டங்கள் தொடர்பில் கிராமிய சமூகங்களிடையிலான நிதிசார் அறிவை மேம்படுத்துவதற்காக நடைமுறைப்படுத்தல் பிரிவு கிரமமான அடிப்படையில் நாடு முழுவதும் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துகிறது. 2018ஆம் ஆண்டு காலப்பகுதியில் அரசாங்க அலுவலர்கள், பொலிஸ் உத்தியோகத்தர்கள், சமூகத் தலைவர்கள் மற்றும் சாதாரண பொதுமக்கள் என நாடுமுழுவதும் 43 விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களை தீர்மானங்கள் மற்றும் நடைமுறைப்படுத்தல் திணைக்களம் நடாத்தியது.

அட்டவணை II:

**விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள்**

| இலக்குக் குழு | நிகழ்ச்சித் திட்டங்களின் எண்ணிக்கை | பங்குபற்றுநர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| பாடசாலை மாணவர்கள் | 08 | 1,053 |
| அரச அலுவலர்கள் | 16 | 2,058 |
| சாதாரண பொதுமக்கள் | 15 | 1,984 |
| பொலிஸ் உத்தியோகத்தர்கள் | 01 | 150 |
| வான்படை மற்றும் கடற்படை உத்தியோகத்தர்கள் | 03 | 233 |
| மொத்தம் | 43 | 5,478 |

### 24.3 இலங்கை வைப்புக் காப்புறுதி மற்றும் திரவத்தன்மை ஆதரவுத்திட்டத்தின் நிர்வாகம்

2018 திசெம்பர் 31ஆம் திகதியில் உள்ளவாறு, இத்திட்டமானது ஏறத்தாழ ரூ.53 பில்லியன்கள் (கணக்காய்வு செய்யப்படாத) மொத்த நிதியத்துடன் 76 உறுப்பு நிறுவனங்களை திட்டம் உள்ளடக்கியுள்ளது. அரச பிணையங்களில் நிதியம் மூலமான முதலீடுகள் மற்றும் மறுசீரமைப்புக்கான திரவத்தன்மை ஆதரவு வசதியின்கீழ் 2014ஆம் ஆண்டு காலப்பகுதியில் உறுப்பு நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட கடன்கள் என்பவற்றின் ஏட்டுப் பெறுமதிகள் 2018 திசெம்பர் 31இல் முறையே 49.8 பில்லியன் மற்றும் 1.9 பில்லியன்களாக இருந்தன. இலங்கை வைப்புக் காப்புறுதி மற்றும் திரவத்தன்மை ஆதரவுத்திட்டத்தின் நிதியியலின் முக்கிய பண்புகள் கீழேயுள்ள அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன.

அட்டவணை II-26

**இலங்கை வைப்புக் காப்புறுதி மற்றும் திரவத்தன்மை ஆதரவுத் திட்டத்தின் நிதியியல் முக்கிய பண்புகள்**

| விடயம் | தொகை (ரூ.மில்லியன்கள்) | |
|---|---|---|
| | 2017.12.31இல் உள்ளவாறு | 2018.12.31இல் உள்ளவாறு* |
| நிதியின் அளவு | 44,123 | 53,710 |
| மொத்த வருமானம் | 12,115 | 14,024 |
| மொத்த செலவினம் | 2,249 | 3,240 |
| வருடத்திற்கான இலாபம் (வரிக்கு முன்னரானது) | 9,866 | 10,784 |
| அரச பிணைகளில் முதலீடு | 39,646 | 49,843 |
| கடன்கள் மற்றும் பெறத்தக்கவை | 6,129 | 1,902 |
| விற்பனை ஒதுக்கங்களுக்கான கிடைப்பனவு | 2,392 | (1,528) |

* தற்காலிகமானவை.

(அ) உடனடியாக முற்போந்த நிதியியல் ஆண்டின் முடிவில் மூலதனப் போதுமை விகிதம் 14 சதவீதத்தினை அல்லது அதற்குமேல் பேணும் உரிமம்பெற்ற வங்கிகள், அனைத்துத் தகுதிவாய்ந்த வைப்புக்களின் மொத்தப் பெறுமதியில் ஆண்டிற்கு 0.10 சதவீத கட்டணம் ஒன்றைச் செலுத்துமாறு வேண்டப்படுகின்றனர். மேலும் ஏனைய வங்கிகளுக்கு வருடாந்தம் 0.125 சதவீத கட்டணம் அறவிடப்படுகிறது. உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளுக்கான பிரயோகிக்கத்தக்க கட்டணம் ஆண்டிற்கு 0.15 சதவீதமாகும். உறுப்பு நிறுவனங்களிடமிருந்தான வருடத்துக்கான கட்டணங்கள் மற்றும் தண்டப்பணங்கள் ரூ.8.8 பில்லியன்களாக அமைந்தன.

(ஆ) 2018 சனவரி 01 இலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் வைப்பாளரொருவருக்கான காப்புறுதி உள்ளடக்கம் ஒரு நிறுவனமொன்றிற்கு ரூ.600,000 ஆகும்.

### 24.4 இடர்ப்பாட்டு நிலையிலுள்ள நிதிக் கம்பனிகளின் வைப்பாளர்களுக்கான இழப்பீட்டுக் கொடுப்பனவு

சென்றல் இன்வெஸ்ட்மென்ட அன்ட் பினான்ஸ் பிஎல்சி மற்றும் ஸ்டான்டட் கிறடிற் பினான்ஸ் லிமிடெட் ஆகிய இடர்பாட்டு நிலையிலுள்ள இரு உறுப்பு நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட உரிமத்தை முறையே 2018.03.05 மற்றும் 2018.07.25 இருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் இரத்து செய்வதற்கான ஒப்புதலை நாணயச் சபை வழங்கியது. அதற்கிணங்க இலங்கை வைப்புக் காப்புறுதித் திட்ட ஒழுங்குவிதிகளின் பிரகாரம் 2018.08.27 இருந்து சென்றல் இன்வெஸ்ட்மன்ட அன்ட் பினான்ஸ் பிஎல்சி வைப்பாளர்களுக்கான இழப்பீட்டுக் கொடுப்பனவு ஆரம்பமானது. 2018.12.31இல் உள்ளவாறு செலுத்தப்பட்ட மொத்த இழப்பீட்டுக் கொடுப்பனவு ரூ.601,539,494.66 ஆக விளங்கியது.

## 25. இடர் நேர்வு முகாமைத்துவம்

இலங்கை மத்திய வங்கி தனது கொள்கை நோக்கங்களினை நடைமுறைப்படுத்துகின்ற போது பல்வேறு வகையான நிதியியல் மற்றும் நிதிசாரா இடர்நேர்வுகளை எதிர்நோக்குகின்றது. இத்தகைய ஏதாயினும் இடர்நேர்வுகள் ஏற்படுகின்ற சந்தர்ப்பத்தில் அவை மத்திய வங்கியின் நிதியியல் நிலைமை மற்றும் நற்பெயரினை பாதிப்படையச் செய்வதனால் முறையாக வடிவமைக்கப்பட்ட இடர் நேர்வு முகாமைத்துவக் கட்டமைப்பு மத்திய வங்கிக்கு முக்கியத்துவமுடையதொன்றாகக் காணப்படுகின்றது. இடர்நேர்வினைத் தனித் தனியாக நோக்குகின்ற வழக்கமான முகாமைத்துவ அமைப்பிலிருந்து வெளிவந்து இலங்கை மத்திய வங்கியின் இடர்நேர்வு முகாமைத்துவத்துக்கு ஓர் ஒருங்கிணைக்கப்பட்ட அணுகுமுறையினுடைய தந்திரோபாய முக்கியதிவத்தினைக் கருத்திற் கொண்டு 2015 ஆம் ஆண்டு இடர்நேர்வு முகாமைத்துவ திணைக்களம் என ஓர் தனியான திணைக்களம் உருவாக்கப்பட்டது. இதன்பிரகாரம் 2018 - 2020 ஆம் ஆண்டு காலப்பகுதிக்கு இடர்நேர்வு முகாமைத்துவம் ஓர் முக்கியமான தந்திரோபாயமாக அங்கீகரிக்கப்பட்டதுடன் நிறுவன ரீதியான இடர்நேர்வு முகாமைத்துவக் கட்டமைப்பினை நடைமுறைப்படுத்தும் செய்முறையினை மேற்கொண்டு வருகின்றது. இக் கட்டமைப்பானது வங்கியின் அனைத்து மட்டங்களிலும் தகவல்களின் அடிப்படையில் இடர்நேர்வினை எதிர்கொள்ளும் கலாச்சாரத்தினை ஊக்குவிக்கும் நோக்கினைக் கொண்டது.

2018 ஜுலை இல் நாணயசபையினால் அனுமதியளிக்கப்பட்ட இடர்நேர்வு ஆளுகை கட்டமைப்பானது இடர் நேர்வு ஆளுகை அமைப்பு மற்றும் இடர் நேர்வு முகாமைத்துவ அமைப்பு என்பவற்றைக் கொண்டுள்ளதோடு வங்கியால் எதிர்கொள்ளப்படும் நிதியியல் மற்றும் நிதிசாரா இடர்நேர்வுகளை உள்ளடக்கியுள்ளது. இடர்நேர்வு ஆளுகைக் கட்டமைப்பானது நாணயச் சபை மற்றும் இரு சபை உப குழுக்களான சபை இடர்நேர்வு மேற்பார்வைக் குழுவையும் நாணய சபை மதியுரை கணக்காயவுக் குழுவையும் கொண்டுள்ளது. நாணயச் சபையானது வங்கியினுடைய இடர்நேர்வு முகாமைத்துவ செயற்ப்பாடுக்கான அதி கூடிய பொறுப்பினை கொண்டிருப்பதுடன் இது தொடர்பிலான உயர் தொனியினையும் கொண்டுள்ளது. மேலும் நாணயச் சபையானது இடர்நேர்வு ஏற்பனவு அளவு மற்றும் இடர்நேர்வு தாங்குதல் அளவினையும் தீர்மானிப்பதுடன் இடர்நேர்வு முகாமைத்துவம் இணங்குவிப்பு கட்டமைப்பினை அனுமதித்தல் தொடர்பான பொறுப்பினையும் கொண்டுள்ளது.

சபை இடர் நேர்வு மேற்பார்வைக் குழுவானது 2018 ஆகஸ்ட்டில் உருவாக்கப்பட்டதுடன் இதன் தலைவராக நாணயச் சபையின் சுயாதீன உறுப்பினரான கிரிசாந்த பெரேராவும் வெளியக வல்லுனர்களும் (01.08.2018 இலிருந்து 05.10.2018 வரை திரு ரவி அபயசூரிய, பணிப்பாளர் எச். என். பி. அயூரன்ஸ் அவர்களும் அதனைத் தொடர்ந்து 05.10.2018 இலிருந்து திரு பிரியன் பெர்னாண்டோ, தலைவர் பிரெண்டிஸ் மற்றும் சிரேஸ்ட ஆலோசகர் பொஸ்டன் ஆலோசனைக் குழுமம்) காணப்படுகின்றனர். நாணயச் சபையிடமிருந்தான ஓர் உத்தியோகபூர்வமான கையளிப்பினூடாக சபை இடர் நேர்வுக் குழுவானது இலங்கை மத்திய வங்கியின் ஒட்டு மொத்த இடர்நேர்வு முகாமைத்துவம் மற்றும் இணங்குவிப்பு தொழிற்பாடுகளை மேற்பார்வை செய்வதுடன் இடர்நேர்வு முகாமைத்துவம் மற்றும் இணங்குவிப்பு செயற்பாட்டிற்கான கொள்கைகள் மற்றும் தந்திரோபாயங்களை உருவாக்குவது தொடர்பில் பொறுப்புக்களைக் கொண்டுள்ளது. சபை இடர்நேர்வுக் குழுவானது மேலும் வங்கியின் இடர்நேர்வு முகாமைத்துவம் மற்றும் இணங்குவித்தலின் மீதான ஓர் அர்ப்பனிப்புடனான கவனத்தை உறுதி செய்வதற்கு நாணயச்சபைக்கு உதவுகின்றது.

இடர் நேர்வு முகாமைத்துவக் கட்டமைப்பானது மூன்று கட்ட பாதுகாப்பு மாதிரியைப் பயன்படுத்தி நிறுவப்பட்டுள்ளது. முதலாம் கட்ட பாதுகாப்பின் கீழ் செயற்பாட்டுத் திணைக்களமானது வங்கியினுடைய இலக்குகள்

மற்றும் நோக்கங்கள் என்பவற்றிக்கு இணைந்து செல்லும் விதத்தில் செயற்பாடுகள் முன்னெடுத்துச் செல்லப்படுவதை உறுதி செய்யும் பொருட்டு இடர் நேர்வினை இனங்காணல் மதிப்பிடல் கட்டுப்படுத்தல் மற்றும் குறைதல் என்பவற்றோடு உள்ளக கொள்கைகள் மற்றும் செய்முறைகளை நடைமுறைப்படுத்த வேண்டும். இரண்டாம் கட்ட பாதுகாப்பின் ஒரு பகுதியாக இடர் நேர்வு முகாமைத்துவத் திணைக்களமானது இடர் நேர்வு முகாமைத்துவம் தொடர்பில் மத்திய வங்கியை வழிகாட்டி நெறிப்படுத்தும் பொருட்டு செயற்பாடுகளை ஒருங்கிணைப்பதன் மூலம் இடர் நேர்வு முகாமைத்துவ செய்முறைகளுக்கு உதவுகின்றது.

இடர் நேர்வு முகாமைத்துவத் திணைக்களமானது இடர் நேர்வு முகாமைத்துவக் கொள்கைகள், வழிகாட்டல்கள் ஊடாக இடர் நேர்வு முகாமைத்துவ செயற்பாடு மற்றும் நிறுவன ஒருங்கமைப்பை வடிவமைத்தல், நடைமுறைப்படுத்தல், கண்காணித்தல், மீளாய்வு செய்தல் போன்றவற்றிக்கு அடிப்படையை வழங்குவதோடு இடர்நேர்வு முகாமைத்துவ செய்முறையை தொடர்ச்சியாக விருத்தி செய்ய உதவுகின்றது.

இடர் நேர்வு முகாமைத்துவத் திணைக்களமானது நிதியியல் இடர் நேர்வுகளை சுயாதீனமாக இனங்காணல், பகுப்பாய்வு செய்தல், மதிப்பீடு செய்தல், தீர்த்தல் கண்காணித்தல், மீளாய்வு செய்தல் மற்றும் அறிக்கையிடல் என்பவற்றை மேற்கொள்வதோடு நாணயச் சபையால் அனுமதியளிக்கப்பட்ட முதலீட்டுக் கொள்கைகள் மற்றும் வழிகாட்டலோடு இணங்கி நடத்தலை உறுதி செய்கின்றது. மூன்றாம் கட்ட பாதுகாப்பான உள்ளக கணக்காய்வானது முதலாம் இரண்டாம் கட்டப் பாதுகாப்பானது இடர் நேர்வு முகாமைத்துவம் மற்றும் கட்டுப்பட்டு நோக்கங்கள் உள்ளடங்கலாக ஆளுகையின் வினைத்திறனான தன்மை, இடர்நேர்வு முகாமைத்துவம் மற்றும் உள்ளக கட்டுப்பாடு தொடர்பில் ஓர் உறுதிப்படுதலை வழங்குகின்றது. மூன்று கட்டப் பாதுகாப்பில் உள்ள ஒவ்வொரு தரப்பும் வங்கியினுடைய இடர் நேர்வு ஆளுகை தொடர்பில் வெவ்வேறான வகிபாகத்தினை செயற்படுத்துகின்றது.

மூன்று கட்ட பாதுகாப்பு மாதிரியின் கீழ் அனைத்து திணைக்களங்களினதும் நிதிசாரா இடர்நேர்வு முகாமைத்துவத்தினை மேம்படுத்துவதற்கு மேலதிகமாக பன்னாட்டு ஒதுக்குகளினதும் இலங்கை மத்திய வங்கியின் உள்ளக முதலீட்டு நிதியங்களினதும் அதேபோன்று அரசிற்கான முகவர் தொழிற்பாடாக மேற்கொள்ளப்படும் ஊழியர் சேமலாபா நித்தியத்தினது நிதிய முகாமைத்துவ செயற்பாடுகளினதும் நிதிசார் இடர்நேர்வு முகாமைத்துவத்திற்கு இடர்நேர்வு முகாமைத்துவத் திணைக்களம் பொறுப்பாக இருக்கின்றது. இடர்நேர்வு முகாமைத்துவத் திணைக்களம் ஊழியர் சேமலாபா நித்தியத்தினதும் உள்ளக முதலீட்டு நிதியங்களினதும் முதலீட்டு கொள்கை பத்திரம் மற்றும் முதலீட்டு வழிகாட்டுதல்களையும் மீளாய்வு செய்ததுடன் இத்தகைய நிதிய முகாமைத்துவ செயற்பாடுகளினை மேற்பார்வையிடுவதற்காக முதலீட்டு மேற்பார்வை குழுக்களினையும் நியமித்தது. இடர்நேர்வு முகாமைத்துவத் திணைக்களம் இத்தகைய நிதிய முகாமைத்துவ செயற்பாடுகளுடன் தொடர்ப்புடைய சந்தை மற்றும் கடன் இடர்நேர்வுகளை சுயாதீனமாக கண்காணித்ததுடன் அவற்றிடமிருந்து வெளிப்படும் இடர்நேர்வுகளை முகாமைத்துவத்திற்கு அறிக்கையிட்டது. சந்தை மற்றும் கடன் இடர்நேர்வு குறிகாட்டிகள் வெளிநாட்டு ஒதுக்குகளின் முகாமைத்துவ குழுவின் மாதாந்த கூட்டங்களில் அறிக்கையிடப்பட்டதுடன் முதலீட்டு தந்திரோபாயங்களினதும் உலக சந்தை அபிவிருத்திகள் மீதான இடர்நேர்வு கண்ணோட்ட அவதானிப்புகழும் இக்குழுவிற்கு அறிவிக்கப்பட்டன. ஊழியர் சேமலாபா நித்தியத்தினதும் உள்ளக முதலீட்டு நிதியங்களினதும் முதலீட்டு மேற்பார்வை குழுக்களிற்கும் இதேபோன்ற கூட்டங்கள் காலாண்டு அடிப்படையில் நடாத்தப்பட்டதுடன் இவற்றின் முதலீடுகளுடன் தொடர்ப்புடைய இடர்நேர்வுகழும் இணங்குவிப்பு பிரச்சனைகளும் கலந்துரையாடப்பட்டன.

புதிய கட்டமைப்பிற்கு ஏற்ப, இடர்நேர்வு முகாமைத்துவத் திணைக்களம் இலங்கை மத்திய வங்கி முழுவதற்கும் இடர்நேர்வு முகாமைத்துவத்தினை நடைமுறைப்படுத்துவதற்கான கொள்கைகளை அமைத்து, இலங்கை மத்திய வங்கியிற்கான இடர்நேர்வு முகாமைத்துவக் கொள்கை அறிக்கை ஒன்றினை தயாரித்தது. இந்த செயற்பாட்டில், பல்வேறு பங்குதாரர்களிற்கிடையில் தெளிவான பொறுப்புடமையுடன் இடர்நேர்வு உரிமை மற்றும் முகாமைத்துவத்தினை நியமிக்குன்ற வேளை, இடர்நேர்வுகளை சமாளிப்பதற்காக ஏற்றுக்கொள்ளப்பட்ட தரநிலைகளையும் வழிகாட்டுதல்களையும் இலங்கை மத்திய வங்கி பின்பற்றுகின்றது.

இலங்கை மத்திய வங்கியில் தாக்கத்தினை ஏற்படுத்துகின்ற பிரதான முழுவங்கிக்குமான நிதிசார இடர்நேர்வுகளினை தீர்மானிப்பதற்கு இலங்கை மத்திய வங்கியின் முகாமைத்துவதிற்கும் நாணயச் சபைக்கும் ஓர் ஆய்வு நடாத்தப்பட்டது. இவ் ஆய்வின் பெறுபேறுகள் இலங்கை மத்திய வங்கியிற்கான ஒரு இடர் வகைபிரித்தலை உருவாக்குவதற்கு பயன்படுத்தப்படுவதுடன் இலங்கை மத்திய வங்கியினை பாதிக்கும் பிரதான முழுவங்கிக்குமான நிதிசார இடர்நேர்வுகளினை முன்னுரிமைப்படுத்துவதற்கு உதவுவதுடன் இலங்கை மத்திய வங்கியில் தாக்கத்தினை ஏற்படுத்துகின்ற பிரதான இடர் வகைகளில் கவனம் செலுத்துவதற்கு முகாமைத்துவத்தினை செயடற்படுத்தும்.

வங்கிக்கிடையில் ஒரு இடர்நேர்வு கலாச்சாரத்தினை உருவாக்குவதன் முக்கியத்துவத்தினை அங்கீகரித்து வெளியக வளவாளர்களினதும் இடர்நேர்வு முகாமைத்துவத் திணைக்களத்தின் ஊழியர்களினதும் ஈடுபாட்டுடன் ஆண்டு முழுவதும் பல்வேறு கூடங்களில் இலங்கை மத்திய வங்கியின் ஊழியர்களுக்கு பல்வேறு இடரநேர்வு விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களை இடர்நேர்வு முகாமைத்துவத் திணைக்களம் நடாத்தியது. உலக வங்கியின் திரு.அமெடீ புறோவொஸ்ட், பணிப்பாளர், செயற்பாட்டு இடர்நேர்வு மற்றும் திரு.றியாஸ் அகமட், முகாமையாளர், செயற்பாட்டு இடர்நேர்வு, ஆகியோர் செயற்பாட்டு இடர்நேர்வுகளைக் கையாள்வதில் அவர்களின் அனுபவங்களை பகிர்வதர்க்கும் செயற்பாட்டு இடர்நேர்வு முகாமைத்துவத் தொழிற்பாட்டினை வலுப்படுத்துவதற்கும் இலங்கை மத்திய வங்கியுடன் சாத்தியமான நீண்டகால தொழில்நுட்ப உதவி ஈடுபாட்டினை கலந்துரையாடுவதற்கும் 2018 ஒத்தோபரில் இலங்கை மத்திய வங்கிக்கு விஜயம் செய்திருந்தனர்.

முன்னோக்கி செல்கையில், இலங்கை மத்திய வங்கியின் ஓர் குறிப்பிட்டளவு தாக்கத்தினை கொண்டிருக்கும் வளர்ந்து வரும் இடர்நேர்வுகள் மற்றும் இலங்கை மத்திய வங்கியின் இடர்நேர்வின் ஏற்பனவுக்கு அப்பால் எடுக்கப்பட்ட ஏதாவது இடர்நேர்வுகள் என்பன உரிய காலத்தில் இனங்காணப்பட்டு எடுத்துச்செல்லப்பட்டு தீர்வு காணப்படக் கூடிய ஓர் சூழலை உருவாக்குவதற்கு இடர்நேர்வு முகாமைத்துவ திணைக்களம் தொடர்ந்து முயற்சி எடுத்து வரும். படிப்படியான முறையில் இடர்நேர்வு பதிவேடுகளை உருவாக்குவதற்கு செயற்பாட்டு திணைக்களங்களுடன் இடர்நேர்வு முகாமைத்துவ திணைக்களம் வேலை செய்யும். இடர்நேர்வு பதிவேடுகள் வங்கியின் அனைத்து செயற்பாடுகளுக்குமிடையில் மிகவும் சீரானதும் இணைந்து செல்லும் விதத்திலும் இடரநேர்வுகளினை அளப்பதற்கு வசதியளிக்கும். இது இடர்நேர்வுகளை உரிய நேரத்தில் மதிப்பிடுவதற்கும் தீர்வுகாண்பதற்கும் இடர்நேர்வு தகவல்களை முகாமைத்துவத்திற்கு வழங்கும்.

இலங்கை மத்திய வங்கியை பாதிக்கும் இடர்நேர்வு சம்பவங்களினை முகாமைத்துவத்திற்கு அறிக்கையிடுவதனை வசதிப்படுத்துவதற்கும் அத்தகைய சம்பவங்களின் காரணிகளுக்கு தீர்வு காண்பதற்கு பொருத்தமான நடவடிக்கைகளினை செயற்படுத்துவதனை உறுதிப்படுத்துவதற்கும் 2019 ஆரம்பத்தில் ஓர் சம்பவ அறிக்கை முறைமையினை அமுல்படுத்துவதற்கு இடர்நேர்வு முகாமைத்துவ திணைக்களம் திட்டமிட்டுக்கொண்டிருக்கின்றது. இக் கணினிவழி சம்பவ அறிக்கை முறைமை எல்லா மட்டங்களிலும் உத்தியோகத்தர்களால் பயன்படுத்தக் கூடியதாக இருக்கும்.

இலங்கை மத்திய வங்கியின் மீதான எதாவது எதிர்மறை தாக்கத்தினை எதிர்ப்பதற்கான பொருத்தமான பதில்களின் உருவாக்கம் மற்றும் அமுலாக்கம் என்பனவற்றை உறுதி செய்து கட்டுப்பாட்டு சூழலை

வலுப்படுத்துகின்ற வேளையில் சாத்தியமான பாதிப்புக்குள்ளான பகுதிகளினையும் போக்குகளினையும் அடையாளம் காணுதலும் இடர்நேர்வினைக் குறைக்கும் நடவடிக்கைகளை மேம்படுத்துதலும், இடர்நேர்வு சம்பவங்களினை மதிப்பீடு செய்வதற்கும் பகுப்பாய்வு செய்வதற்குமான ஓர் அடிப்படையாக பணியாற்றுவதற்கும் இலங்கை மத்திய வங்கியினுள் இடர்நேர்வு நிகழ்வுகளின் மத்திய களஞ்சியம் ஒன்றினை உருவாக்குவதற்கு இது வசதியளிக்கும். நிதிசார் இடர்நேர்வு முகாமைத்துவம் தொடர்பில் இலங்கை மத்திய வங்கியில் அக்கறையுடைய தரப்பினர், வழங்குநர்கள் மற்றும் பாதுகாப்பாளர்களினை உள்ளடக்கி இலங்கை மத்திய வங்கியின் நிதிய முகாமைத்துவ செயற்பாடுகளின் கடன் இடர்நேர்வு முகாமைத்துவ கோட்பாட்டினை மேம்படுத்தும் நோக்குடனான கடன் இடர்நேர்வு கொள்கைகளையும், வழிமுறைகளையும் மறு பரிசீலனை செய்வதே இடர்நேர்வு முகாமைத்துவ திணைக்களத்தின் வேலையாக இருக்கும்.

## 26. செயலகம்

செயலகத் திணைக்களமானது, இலங்கை மத்திய வங்கி ஆரம்பிக்கப்பட்ட நேரத்தில் முதலில் நிறுவப்பட்ட திணைக்களங்களில் ஒன்றாகும். செயலகத் திணைக்களத்தின் முக்கிய தொழிற்பாடுகளானவை பெறுகை முகாமைத்துவம், ஓய்வூதிய நிதியங்களை நிருவகித்தல், வெளிநாட்டு கற்கைகள் மற்றும் பயிற்சிகளுக்காக வசதியளித்தல், அளவீட்டுச் சபையினை நடாத்துதல், ஆளுநருக்கு செயலக மற்றும் உபசரணை உதவிகளை வழங்குதல் மற்றும் விடுப்பு விதிகளை நடைமுறைப்படுத்தல் என்பனவாகும்.

### (அ) பெறுகை முகாமைத்துவம்

இலங்கை மத்திய வங்கியின் கையேட்டில் எடுத்துரைக்கப்பட்டுள்ள பெறுகை வழிகாட்டல்களுக்கமைவாக செயலகத் திணைக்களமானது, 2018 காலப்பகுதியில் விலைக்கோரல் நடைமுறைகளூடாகவும் அதேபோன்று விலைக்கோரல் நடைமுறைகளின்றியும் பொருட்கள் மற்றும் சேவைகளைப் பெற்றுக்கொண்டது. பெறுகைச் செயன்முறையானது ஆண்டிற்கான பெறுகைத் திட்டத்திற்கமைவாக கொண்டு நடாத்தப்பட்டது. இதற்கு மேலதிகமாக, வங்கியின் சில தேவைகளை நிறைவுசெய்வதற்காக அவசரப் பெறுகைகளும் மேற்கொள்ளப்பட்டன.

### (ஆ) ஓய்வூதிய நிதியங்களை நிருவகித்தல்

செயலகத் திணைக்களமானது சுமார் 2,200 பயனாளிகளை ஈடுபடுத்துகின்ற வங்கியின் ஓய்வூதிய நிதியத்துடன் தொடர்புடைய கொடுப்பனவுகள் மற்றும் ஏனைய தொடர்புகளை தொடர்ந்தும் நிர்வகித்தது. அதற்கமைய, செயலகத் திணைக்களமானது பணிக்கொடைக் கொடுப்பனவுகளை கொடுப்பனவு செய்தல், மாற்றிய ஓய்வூதியக் கொடுப்பனவு செய்தல், சேமநிதியங்களை விடுவித்தல், மாதாந்த ஓய்வூதியங்கள், விதவைகள் மற்றும் அநாதைகள் ஓய்வூதியம், விதுரர்கள் மற்றும் அநாதைகள் ஓய்வூதியக் கொடுப்பனவு என்பவற்றில் ஈடுபட்ட அதேவேளை இலங்கை மத்திய வங்கியின் கையேட்டில் குறித்துரைக்கப்பட்ட ஓய்வூதிய விதிகளுக்கிணங்க அரையாண்டு அடிப்படையில் ஆயுள் சான்றிதழ்களை சேகரித்தது.

### (இ) வெளிநாட்டு கற்கைகள் மற்றும் பயிற்சிகளுக்கு வசதியளித்தல்

2018 காலப்பகுதியில் செயலகத் திணைக்களமானது ஊழியர்களுக்கான பட்டப்பின்படிப்புக் கற்கைகளையும் குறுகியகாலப் பயிற்சிகளையும் மூத்த முகாமைத்துவத்திற்கான கடமைசார்ந்த வெளிநாட்டுப் பயணங்களையும் வசதிப்படுத்தியது. இது தொடர்பில் செயலகத் திணைக்களமானது பல்கலைக்கழகங்களுக்கும் ஏனைய பயிற்சி நிறுவனங்களுக்கும் அத்துடன் மேற்குறித்த நோக்கங்களுக்காக வெளிநாடுகளுக்குப் பயணித்த அலுவலர்களுக்கும் தொடர்புடைய கொடுப்பனவுகளை மேற்கொள்வதில் ஈடுபட்டது. இதற்கு மேலதிகமாக, வீசாக் கடிதங்களை வழங்குதல் மற்றும் சேமநிதிய நிலுவை உறுதிப்படுத்தல் கடிதங்கள், விமானப் பயணச்சீட்டு வழங்கல் மற்றும் பயணக் காப்புறுதி என்பனவற்றை வழங்குவதனூடாக வீசா பெற்றுக்கொள்வதற்காகவும் வெளிநாடுகளுக்குச் சென்ற அலுவலர்களுக்கு செயலகத் திணைக்களம் உதவியளித்தது.

### (ஈ) அளவீட்டுச் சபையினை நடாத்துதல்

பாவனைக்குதவாத, சேதமடைந்த, நன்னிலைப்படுத்தமுடியாத, பழுதுபார்க்க முடியாத மற்றும் மிகையான அலுவலக உபகரணங்கள், தளபாடங்கள் மற்றும் ஏனைய நிலையான சொத்துக்களை விற்றுஅகற்றுவதற்காக அளவீட்டுச் சபை நடாத்தப்பட்டது. விற்றுஅகற்றல் முகாமைத்துவச் செயன்முறையானது வங்கியிலுள்ள அத்தகைய சொத்துக்கள் பற்றிய அளவீடு மற்றும் அளவீட்டுச் சபையினால் பரிந்துரைக்கப்பட்டவாறு பொருட்களை விற்றுஅகற்றுதல் என்பவற்றை உள்ளடக்கியிருந்தது.

### (உ) விடுப்பு விதிகளையும் ஏனைய நிர்வாகக் கருமங்களையும் நடைமுறைப்படுத்தல்

செயலகத் திணைக்களமானது, விசேட விடுப்பு, விபத்து விடுப்பு, நீடிக்கப்பட்ட சுகயீன விடுப்பு, கடமை விடுப்பு மற்றும் மகப்பேற்று விடுப்பு, அரைநாள் கொடுப்பனவு மகப்பேற்று விடுப்பு போன்றன தொடர்பில் விடுப்பு விதிகளை நடைமுறைப்படுத்தியது. இதற்கு மேலதிகமாக, செயலகத் திணைக்களமானது ஆண்டு காலப்பகுதியில் வங்கியின் ஊழியர் சங்கங்கள், கழகங்கள் மற்றும் அமைப்புகளுக்கு வழங்கப்படும் சேவைகளுடன் தொடர்புடைய தொடர்புகளைக் கையாண்டது. இதற்குப் புறம்பாக, பகிரங்க அறிவித்தல்கள், கூட்டங்கள் மற்றும் பொதுவான மின்னஞ்சல் சுற்றறிக்கைகள் போன்றவற்றுக்கான அனுமதிகளையும் செயலாளர் வழங்கியிருந்தார்.

### (ஊ) ஆளுநருக்குத் தேவையான செயலக மற்றும் உபசரணை உதவிகளை வழங்குதல்

ஆளுநருக்கான செயலக மற்றும் உபசரணை உதவியினை ஆளுநரின் செயலகம் வழங்கியது. வழங்கப்பட்ட செயலக உதவிகளாக சந்திப்புக்கள் மற்றும் கூட்டங்களை அட்டவணைப்படுத்தல், ஆளுநருக்கான காட்சியுடன்கூடிய விரிவுரைகள், பேச்சுக்கள், குறிப்புக்கள், கட்டுரைகள் போன்றவற்றினை தொகுத்தல் என்பவற்றை உள்ளடக்கியிருந்தன. உபசரணை உதவியானது ஆளுநரின் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பயணங்களை ஒருங்கிணைத்து ஏற்பாடு செய்தல், ஆளுநரால் விருந்தளிக்கப்பட்ட உத்தியோகபூர்வ நிகழ்வுகள் மற்றும் ஆளுநரின் அத்துடன் வங்கியினது விசேட அதிதி வருகைதருநர்களுக்கு வழங்கப்பட்ட உபசரணைச் சேவைகள் என்பவற்றை உள்ளடக்கியிருந்தது.

### (எ) ஏனைய தொழிற்பாடுகள்

வங்கியின் ஆதனங்கள் மற்றும் இனங்காணப்பட்ட இடர்நேர்வு விடயப்பரப்புகள் என்பன மீதான அளவீடொன்றினை நடாத்தி செயலகத் திணைக்களமானது இலங்கை மத்திய வங்கியின் அளைத்து ஆதனங்களையும் உள்ளடக்கின்ற கூட்டுக் காப்புறுதி ஒன்றினைப் பெற்றுக் கொண்டது. செயலகத் திணைக்களமானது அதன் அஞ்சல் அறைப் பணிகளினூடாக இலங்கை மத்திய வங்கிக்கு உள்வறும் மற்றும் வெளிச்செல்லும் அஞ்சல்களை வசதிப்படுத்தியது. திணைக்களமானது அதன் காகிதாதி முகாமைத்துவ முறையினூடாக திணைக்களங்களுக்குத் தேவையான போதியளவான காகிதாதிப் பொருட்கள் களஞ்சியத்தில் கிடைக்கப்பெறுதனையும் வழங்கப்படுதனையும் உறுதிசெய்தது. வங்கிக்கென நிகழ்வுகளை ஒழுங்கமைத்தலும் திணைக்களத்தின் மற்றுமொரு முக்கிய பணியாக அமைந்திருந்தது.

## 27. பாதுகாப்புப் பணிகள்

பாதுகாப்புப் பணிகள் திணைக்களமானது வருடம் முழுவதும் அதன் ஊழியர்கள், வருகைதருநர்கள், சொத்துக்கள் மற்றும் கொண்டுசெல்லப்படுகின்ற நாணய அனுப்புகைகளை பாதுகாத்துக்

கொள்வதற்கு அதனுடைய செயற்பாடுகளைத் தொடர்ந்தும் மேற்கொண்ட அதேவேளை முறைமை விருத்திகள் மற்றும் ஆளணிப் பயிற்சிகளில் பங்கேற்றது கீழே சுருக்கமாகத் தரப்பட்டுள்ளவாறு.

### 27.1 முறைமை விருத்திகள்

தலைமை அலுவலகத்திலும் ஏனைய வளாகங்களிலும் அமைந்துள்ள அனைத்து தீயணைப்பு உபகரணங்களினதும் செயற்பாட்டுத் தகுதியானது வருடம் முழுவதும் கிரமமான அடிப்படையில் பரிசோதிக்கப்பட்டு, பழுதுபார்க்கப்பட்டு மற்றும் பதிலீடு செய்யப்பட்டன. தகவல் தொழில்நுட்பத் திணைக்களம் மற்றும் வசதிகள் முகாமைத்துவத் திணைக்களம் ஆகியவற்றின் ஒத்துழைப்புடன் இராஜகிரியவில் அமைந்துள்ள வங்கித் தொழில் கற்கைகள் நிலையத்தில் உள்ள சவுரின் கற்கை நிலையத்திற்கு தனியான அணுகுவழிக் கட்டுப்பாட்டு முறைமையொன்றினை அமுல்படுத்துவதற்கு முயற்சி எடுக்கப்பட்டது. பாதுகாப்பு பணிகள் திணைக்களமானது கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு மற்றும் தகவல் தொழில்நுட்பத் திணைக்களங்களால் நடாத்தப்பட்ட அனைத்து வணிக தொடர் பயிற்சிகளிலும் பங்குபற்றி ஒருங்கிணைத்தது.

### 27.2 பயிற்சி

**(அ) தீயினைத் தடுத்தல், தீயணைப்பு மற்றும் முதலுதவி நிகழ்ச்சித்திட்டங்கள்**

கொழும்பு மாநகர சபையினுடைய தீயணைப்புப் பணிகள் திணைக்களம், சென். ஜோன் அம்புலன்ஸ் மற்றும் அனர்த்த முகாமைத்துவ நிலையம் என்பனவற்றின் உதவியுடன் 2018ஆம் ஆண்டு ஒத்தோபர் மாதத்தில் இலங்கை மத்திய வங்கியினுடைய அனைத்துத் திணைக்களங்களிலிருந்தும் தெரிவுசெய்யப்பட்ட தீயணைப்புப் பொறுப்பாளர்களுக்காக தீயினைத் தடுத்தல், தீயணைப்பு, முதலுதவி மற்றும் அனர்த்த முகாமைத்துவம் தொடர்பாக இரண்டு நாள் விரிவான பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் நடாத்தப்பட்டது. மேலதிகமாக, விமானப்படை மற்றும் கொழும்பு தீயணைப்புப் படையின் உதவியுடன் தலைமை அலுவலகத்தில் அனைத்து ஊழியர்களுக்கும் தீயினைத் தடுத்தல் மற்றும் தீயணைப்பு பயிற்சிகள் தொடர்பாக 2018 மாச்சில் செயல்முறை விளக்கமளிக்கப்பட்டது.

**(ஆ) திறன்களையும் தேர்ச்சியினையும் கட்டியெழுப்புதல்**

பாதுகாப்பு அலுவலர்களினுடைய திறன்களை விருத்தி செய்யும் நோக்கில் பாதுகாப்பு பணிகள் திணைக்களமானது அதன் ஊழியர்களுக்காக பல்வேறுபட்ட கல்விசார் நிகழ்ச்சித் திட்டங்களினை ஒழுங்கமைத்தது. இத்தகைய கல்விசார் நிகழ்ச்சித்திட்டங்கள், முக்கிய பாதுகாப்பு விடயங்கள், தகவல்தொழில்நுட்பம் மற்றும் வாடிக்கையாளர் கவனிப்புக்கள் போன்றவற்றைஉள்ளடக்கியிருந்தன.

**(இ) ஆயுதங்களை கையாளுதல் மற்றும் நேரடி துப்பாக்கி சுடுதல்**

ஆயுதங்களை கையாளுதல் மற்றும் நேரடி துப்பாக்கிச் சுடுதல் போன்றவை இறுதிக் காலாண்டில் இலங்கை இராணுவத்தினரின் உதவியுடன் அனைத்து பாதுகாப்பு அலுவலர்களுக்காகவும் நடாத்தப்பட்டது.

**(ஈ) 2018ஆம் ஆண்டு திசெம்பரில் இருபத்தொரு பயிலுநர் பாதுகாப்பு அலுவலர்கள் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டனர்.**

## 28. அலுவலர் பணிகள் முகாமைத்துவம்

அலுவலர் பணிகள் முகாமைத்துவ திணைக்களமானது ஆண்டு முழுவதும் அனைத்து பயன்பெறுநர்களுக்கும் வினைத்திறனுடனும் பயனுறு விதத்திலும் நலன்புரி வசதிகளைத் தொடர்ந்தும் வழங்கியது. இத்தகைய நலன்புரி வசதிகள் அலுவலகர் வீடமைப்பு (ஈட்டு) கடன்திட்டம், சேம நிதிய கடன் திட்டம் மற்றும் அலுவலர் நலத்திட்டம் என்பவற்றின் கீழ் கடன்களை வழங்குதல் தொழில்தருநர் பங்களிப்பு மருத்துவ நன்மைகள் திட்டத்தின் கீழ் செலவுகளை மீளளித்தல் மற்றும் மருத்துவ நிலையம் மற்றும் உணவக வசதிகளை வழங்குதல் என்பவற்றை உள்ளடக்கியிருந்தன. 2018 இறுதியில் உள்ளவாறு மருத்துவ நன்மைகள் திட்டத்தின் கீழ் ஊழியர்கள், ஓய்வூதியம் பெறுவோர், விதவைகள்/விதுரர்கள் மற்றும் அவர்களின் பதிவுசெய்யப்பட்ட தங்கியிருப்போர் ஆகியோரை உள்ளடக்கி ஏறத்தாழ 10,000இற்கு மேற்பட்ட நன்மை பெறுநர்கள் பதிவு செய்யப்பட்டிருந்தனர்.

2018ஆம் ஆண்டு காலப்பகுதியில் அலுவலர் பணிகள் முகாமைத்துவத் திணைக்களம், வீடமைப்புக் கடன்கள், சேம நிதியக் கடன்கள், ஊர்திக் கடன்கள், கணனிக் கடன்கள் மற்றும் அலுவலர் நன்மைத் திட்டத்தின் கீழான ஏனைய கடன்களை உள்ளடக்கி 1,551 கடன்களை வழங்கியது. கடன் கண்காணிப்பு முறைமை, ஊழியர்களுக்கான கடன் பகிர்ந்தளிப்புகளின் செயல்திறன்மிக்க மேற்பார்வையினை இயலச்செய்துள்ளது.

2018 ஆண்டு காலப்பகுதியின் போது இலங்கை மத்திய வங்கியின் அலுவலர்களுக்கு இலங்கை மத்திய வங்கியின் உணவகம், காலை மற்றும் மதிய உணவுகளை நியாயமான விலையில் தொடர்ந்தும் வழங்கியதுடன் உணவக வசதிகளை மேம்படுத்துவதற்கும் பல வழிமுறைகள் எடுக்கப்பட்டன.

அலுவலர் பணிகள் முகாமைத்துவ திணைக்களமானது மருத்துவ நன்மைகள் திட்டத்தின் கீழ் அனைத்துப் பதிவுசெய்யப்பட்ட நன்மைபெறுநர்களினாலும் ஏற்பட்ட மருத்துவச் செலவுகளைத் தொடர்ந்தும் மீளளித்தது. மருத்துவச் செலவின் மொத்த மீளளிப்புத் தொகை முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2018இல் 7 சதவீதத்தினால் அதிகரித்தது. மருத்துவ நிலையத்தில் அத்தகைய சேவைகளை வெளியிலிருந்து பெற்றுக்கொள்வதன் மூலம் சேவை நேரங்களின் போது இலங்கை மத்திய வங்கியின் ஊழியர்களுக்காக மருத்துவ வசதிகள் கிடைக்கப்பெறச் செய்யப்பட்டன. மருத்துவ நிலையத்தில் மருத்துவ பரிசோதனைகளும் ஆய்வுகூட சோதனைகளும் நியாயமான கட்டணத்தில் வழங்கப்பட்டன. அலுவலர் பணிகள் முகாமைத்துவ திணைக்களமானது இலங்கை மத்திய வங்கியின் அலுவலர்களின் அறிவினை மேம்படுத்துவதற்காக “காது, மூக்கு மற்றும் தொண்டை நோய்களிலிருந்து உங்களை எவ்வாறு பாதுகாத்தல்”, “சுய ஊக்குவிப்பு” மற்றும் “வளர்ந்தோரின் பாதுகாப்பைத் தாண்டி பிள்ளைகளின் குறுகிய ஆயுட்காலம்” என்ற தலைப்பில் முக்கிய ஆரோக்கிய விடயங்கள் பற்றி மூன்று விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்தியது.

## 29. புள்ளிவிபரவியல்

புள்ளிவிபரவியல் திணைக்களம் பொருளாதார மற்றும் விலை உறுதிப்பாட்டினைப் பேணுகின்ற குறிக்கோள்களை எய்துவதற்கு தொடர்ந்தும் பங்களித்தது. இலங்கை மத்திய வங்கியினால் முன்னெடுக்கப்பட்டிருக்கின்ற புதிய நாணயக் கொள்கைக் கட்டமைப்பு மற்றும் நெகிழ்ச்சித் தன்மைவாய்ந்த பணவீக்க இலக்கிடல் என்பனவற்றை நோக்கிய செயன்முறைகளின் காரணமாக புள்ளிவிபரவியல் திணைக்களத்தின் வகிபாகம் மேலும் விரிவடைந்தது. இது தொடர்பில் நெகிழ்ச்சித் தன்மைவாய்ந்த பணவீக்க இலக்கிடலை நோக்கி சுமூகமாக நிலைமாறிச் செல்வதற்கு வசதியளிப்பதற்காக புள்ளிவிபரவியல் திணைக்களம் பல தொழிற்பாட்டு முறையியல் மாதிரிகளை அறிமுகப்படுத்தியது. இதற்கமைய 2018ஆம் ஆண்டுப் பகுதியில் புள்ளிவிபரவியல் திணைக்களத்தின் முக்கிய நடவடிக்கைகள் (1) நாடளாவிய தரவு சேகரிப்பு முறை போன்ற முதலாந்தர மூலங்களிலிருந்தும் இரண்டாந்தர மூலங்களிலிருந்தும் தரவுகளையும் தகவல்களையும் சேகரித்தல் (2) வியாபார மனோபாவம் சொத்து விலை மற்றும் கூலி வீத சுட்டெண்களைத் தொகுத்தல் (3) குறுங்கால முக்கிய பேரண்டப் பொருளாதார மாறிலிகளை எதிர்வுகூறல் (4) இலங்கை சுபீட்சச் சுட்டெண் மற்றும் மாகாண ரீதியான மொத்த உள்நாட்டு உற்பத்தி போன்ற பிராந்திய புள்ளிவிபரங்களைத் தொகுத்தல் (5) தரவு நூலகம், வெளியீடுகள், அறிக்கைகள் மற்றும் பத்திரிகை வெளியீடுகள் என்பனவற்றினூடாக தகவல்களை சரியான நேரத்தில் கிரமமாக

பரப்புதல் (6) முக்கியமான உலகளாவிய தரமிடலில் இலங்கையின் நிலைமையினை முன்னேற்றுவதில் ஈடுபட்டன. அத்துடன் உள்நாட்டு மற்றும் பன்னாட்டு அமைப்புக்களுக்கு இயலாற்றலைக் கட்டியெழுப்பும் முன்னெடுப்புக்களுக்கு மூலவளங்களை வழங்குதல் என்பனவற்றை உள்ளடக்கியிருந்தன.

### 29.1 அளவீடுகள் மற்றும் ஏனைய தரவு மூலங்களினூடாக தரவுகளைச் சேகரித்தல்

#### (அ) வியாபார மனோபாவ அளவீடுகள்

எதிர்கால பொருளாதார வளர்ச்சிக்கு அடிப்படையாக விளங்கும் நடைமுறைப் பொருளாதார நிலைமைகளையும் குறுங்காலச் சந்தை அபிவிருத்திகளையும் கண்காணிப்பதற்காக 2018ஆம் ஆண்டுப் பகுதியில் வியாபாரத் தோற்றப்பாட்டு அளவீடு காலாண்டு அடிப்படையில் தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்டது. இவ்வளவீட்டின் இலக்கிடப்பட்ட குடித்தொகையினராக பொருளாதாரத்தின் மூன்று முக்கிய நடவடிக்கைகளான வேளாண்மை, கைத்தொழில் மற்றும் பணிகளை உள்ளடக்கிய பாரிய அளவு தொழில்முயற்சிகள் அமைந்திருந்தன.

தயாரிப்பு, பணிகள் மற்றும் கட்டடவாக்க நடவடிக்கைகளுக்கான கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் அளவீடு மாதாந்த அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டதுடன் மொத்த உள்நாட்டு உற்பத்தி எதிர்வுகூறலில் ஆரம்ப குறிகாட்டிகளாக பயன்படுத்தப்பட்டது. மேலும், இச்சுட்டெண்கள் ஆராய்ச்சியாளர்கள், பொருளாதார ஆய்வாளர்கள், கைத்தொழில் நிபுணர்கள், வியாபார தீர்மானங்களை வகுப்போர் ஆகியோரினால் நாட்டின் கைத்தொழில் நிலைமைகளை விளங்கிக் கொள்வதற்கு பயன்படுத்தப்பட்டு வருகின்றன. தயாரிப்பு மற்றும் கட்டுமான நடவடிக்கைகளுக்கான கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் அளவீட்டின் இலக்கிடல் குடித்தொகையினராக கொள்வனவு முகாமையாளர்கள் விளங்கிய வேளையில், பணிகள் நடவடிக்கைகளுக்கான கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் அளவீடுகளுக்கான இலக்கிடப்பட்ட குடித்தொகையினராக நிறுவனங்களின் வியாபார நடவடிக்கைகளின் ஒட்டுமொத்த அறிவினைக் கொண்ட பதவி குறிக்கப்பட்ட அலுவலர்கள் காணப்பட்டனர். அளவீடானது மேல் மாகாணத்தில் பெருமளவிற்கு குவிந்து காணப்படும் தயாரிப்பு மற்றும் பணிகள் துறைகளுக்காக இத்துறையிலுள்ள 100 நிறுவனங்களிலிருந்து பெறப்படும் பதிலிறுப்புக்களை இலக்கிடலைக் கொண்டு ஒவ்வொரு மாதத்தின் இறுதி வாரத்திலும் மேற்கொள்ளப்பட்ட வேளையில், கட்டுமானக் கைத்தொழிலுக்கான அளவீடு மாதாந்தம் நடாத்தப்பட்டதுடன் இது கட்டுமான அபிவிருத்தி அதிகார சபையில் பதிவு செய்யப்பட்ட கம்பனிகளிலிருந்து தெரிவுசெய்யபட்ட முக்கிய கட்டுமானக் கம்பனிகளை உள்ளடக்கியிருந்தது.

கொடுகடன் சந்தையில் கேள்வி மற்றும் நிரம்பல் பக்க அபிவிருத்திகளைப் பெற்றுக்கொள்வதற்காக வடிவமைக்கப்பட்ட கொடுகடன் நிலைமைகள் அளவீடு 2018ஆம் ஆண்டுப் பகுதியிலும் தொடர்ந்தது. கொடுகடன் கேள்வி அளவீட்டினைப் பொறுத்தவரையில், இலக்கிடப்பட்ட குடித்தொகையினராக மேல் மாகாணத்திலும் இலங்கை மத்திய வங்கியின் பிரதேச பிரசன்னங்களைக் கொண்ட மாகாணங்களிலுமுள்ள பொருளாதாரத்தின் சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர்கள் காணப்பட்டனர். கொடுகடன் நிரம்பல் அளவீடானது நாட்டிலுள்ள அனைத்து உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளையும் உரிமம்பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளையும் உள்ளடக்குகிறது. கொடுகடன் நிலைமை அளவீட்டின் பெறுபேறுகள் கொள்கை வகுப்பிற்கு வசதியளிப்பதற்காக அரையாண்டு அடிப்படையில் முகாமைத்துவத்திற்கு அறிவிக்கப்பட்டன.

#### (ஆ) பணவீக்க எதிர்பார்ப்பு அளவீடு

பணவீக்க எதிர்பார்ப்பு அளவீடு 2006இல் அது அறிமுகப்படுத்தப்பட்டதிலிருந்து மாதாந்த அடிப்படையில் திணைக்களத்தினால் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்படுகிறது. தற்போதைய அளவீடு மூன்று முக்கிய வகை பதிலிறுப்பாளர்களான கம்பனித்துறை, வீட்டு அலகுகள் துறை மற்றும் கல்வியியலாளர்கள் ஆகியோரை உள்ளடக்குகின்றது. 2018இன் இறுதிக் காலாண்டுப் பகுதியில் வீட்டு அலகுகள் துறையின் பிரதிநிதித்துவத்தினையும் துல்லியத்தன்மையினையும் மேம்படுத்துவதற்காக நாடளாவிய தரவு சேகரிப்பு முறைமையின் ஆசிரியப் பரீட்சகர்களும் பதிலிறுப்பாளர் தளத்திற்குள் சேர்க்கப்பட்டனர். பதிலிறுப்பாளர்கள் தற்போதைய மற்றும் எதிர்கால பணவீக்க எதிர்பார்ப்புக்கள் மீதான கணியம்சார் மற்றும் தரம்சார் தகவல்கள் இரண்டினையும் 12 மாதங்களுக்கு முன்னுள்ள காலப்பகுதிக்காக வழங்குகின்றனர். அளவீட்டின் பெறுபேறுகள் கொள்கை வகுப்பினை மேற்கொள்வதற்கு பயன்படுத்துவதற்காக மாதாந்த அடிப்படையில் முகாமைத்துவத்திற்கு அறிக்கையிடப்படுகின்றன.

#### (இ) தொழிற்படைத் தகவல்கள் மற்றும் அரச துறை தொழில் நிலை அளவீடு

ஒட்டுமொத்த தொழிற் சந்தைத் தரவுப் பகுப்பாய்வினைப் பொறுத்தவரையில் தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களத்திலிருந்தும் ஏனைய தரவு வழங்குநர்களிடமிருந்தும் பெற்றுக்கொள்ளப்பட்ட தகவல்கள் நாட்டின் தொழில்நிலை, தொழிலின்மை, வெளிநாட்டுத் தொழில்நிலை, தொழிலாளர் உறவுகள் தொழிற்சந்தை சீர்திருத்தங்கள் மற்றும் தொழில்சார் உற்பத்தியாளர்கள் என்பன தொடர்பான பகுப்பாய்விற்குட்படுத்தப்பட்டது. கொள்கை உருவாக்க செயன்முறைக்கு உதவும் பொருட்டு ஒத்துழைப்பு தரவுகள் தேசிய மற்றும் பன்னாட்டு முகவர்களுடன் பகிர்ந்து கொள்ளப்பட்டன.

அரச துறை தொழில்நிலையில் ஏற்பட்ட அபிவிருத்திகளைக் கண்டறிவதற்காக, 2018இல் அனைத்து அரச துறை நிறுவனங்களையும் உள்ளடக்கிய அரச துறை தொழில்நிலை அளவீடொன்று ஆண்டு அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டது. மேலும், 2018இல் இருந்து நிதியமைச்சின் முகாமைத்துவப் பணிகள் திணைக்களம் அரச துறை தொழில்நிலையுடன் தொடர்பான தரவுகளை வழங்கிவருகிறது. இத்தரவுகள் பொதுமக்களின் தகவல்களுக்காக பகுப்பாய்வு செய்யப்பட்டு இலங்கை மத்திய வங்கியின் ஆண்டு வெளியீடுகளூடாக வெளியிடப்பட்டு வருகின்றன.

#### (ஈ) தனியார் துறை நலப்பணிகளின் அளவீடு

மொ.உ.உற்பத்தியின் எதிர்ப்புக் கூறலை மேம்படுத்துவதற்காக தனியார் துறை நலப் பணிகளில் ஏற்பட்ட அபிவிருத்திகளைப் பெற்றுக் கொள்வதற்காக குறிகாட்டியொன்றினை அபிவிருத்தி செய்வதற்கு வடிவமைக்கப்பட்ட இவ்வளவீடு, தனியார் நலப்பணிகள் ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழுவின் கீழ் பதிவுசெய்யப்பட்ட வைத்தியசாலைகளின் மாதிரியினை இலக்காகக் கொண்டு மாதாந்த தரவுகளை உள்ளடக்குகின்ற விதத்தில் காலாண்டு அடிப்படையில் 2018ஆம் ஆண்டுப் பகுதியில் தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்டது. தனியார் நலப் பணிகளில் அபிவிருத்தியை பெற்றுக்கொள்வற்காக வெளி நோயாளர்களினதும் அனுமதிக்கப்பட்டவர்களினதும் எண்ணிக்கையின் மீதான தகவல்கள் சேகரிக்கப்பட்டு பயன்படுத்தப்பட்டன. இது தனியார் துறை நலப்பணிகளில் ஏற்பட்ட பெறுமதி கூட்டப்பட்ட வளர்ச்சியை எதிர்வு கூறுகின்ற குறிகாட்டியொன்றாகப் பயன்படுத்தப்பட்டது.

#### (உ) சிறப்பு அங்காடி சில்லறை வர்த்தகத்தின் அளவீடு

சிறப்பு அங்காடிகளின் சில்லறை வர்த்தக நடவடிக்கைகளின் போக்கினை அறிந்து கொள்வதற்காக 2017இல் ஆரம்பிக்கப்பட்ட இவ்வளவீடானது 2018இலும் காலாண்டு அடிப்படையில் தொடர்ந்தது. விற்பனைச் செலவுகளின் மீதான தகவல்கள் சேகரிக்கப்பட்டு, இவ்வளவீட்டினூடாக சேகரிக்கப்பட்ட தரவுகளின் அடிப்படையில் காலாண்டு சிறப்பு அங்காடி விற்பனைச் செலவுச் சுட்டெண் கணிக்கப்பட்டு மொ.உ.உற்பத்தி எதிர்வுகூறலுக்கான அடிப்படை குறிகாட்டியொன்றாக புள்ளிவிபரவியல் திணைக்களத்தினால் இக்குறிகாட்டி பயன்படுத்தப்படுகிறது. நாட்டின் நவீன சில்லறை வர்த்தக நடவடிக்கைகளின் எதிர்கால உள்ளார்ந்த வளத்தினை அடையாளம் கண்டுகொள்வதற்காக பொருளாதாரத்தின் நுகர்வோர் செலவிடல் மாதிரிகளைப் பகுப்பாய்வு செய்வதற்கான பதிலியாகவும் இக்குறிகாட்டி பயன்படுத்தப்பட்டது.

### (ஊ) கூட்டுறுதி தொடர்மாடி மனைகளின் சந்தை அளவீடு

இக்காலாண்டு அளவீடானது, உண்மையான விற்பனை விலைகள், கேள்வி, விலையில் ஏற்படும் மாற்றங்களுக்கான காரணம், தற்போதுள்ள மற்றும் இனி வரவிருக்கின்ற வீடமைப்பு அலகுகளின் எண்ணிக்கை, செயற்றிட்டங்களில் வதிகின்ற மட்டம், வாங்குகின்ற நபரின் சொத்துப்பட்டியல் தகவல் மற்றும் கூட்டுறுதி தொடர்மாடிகளின் அபிவிருத்திகளின் பார்வையில் முன்னோக்கிய எதிர்பார்ப்புக்கள் என்பன மீதான பிரதான தரவுகளைப் பெற்றுக்கொள்ளும் நோக்குடன் 2017இல் ஆரம்பிக்கப்பட்டது. கூட்டுறுதித் தொடர்மாடி மனைகளின் புவியியல் பிரதேசத்தின் உள்ளடக்கம் அளவீட்டிற்கு பதிலிறுத்தவர்களினால் மேற்கொள்ளப்பட்ட செயற்றிட்டங்களுக்கு மட்டுப்படுத்தப்பட்டிருந்தது. எனவே, சேகரிக்கப்பட்ட தரவுகள் விலையின் போக்குகளை அடையாளம் காண்பதற்கும் ஏனைய பயன்மிக்க உள்ளக விடயங்கள் கொள்கையினை உருவாக்கும் நோக்கங்களுக்காவும் பயன்படுத்தப்பட்டன.

### (எ) தகவல் தொடர்பூட்டல் தொழில்நுட்பம் வியாபார செயன்முறை முகாமைத்துவ அளவீடு

புள்ளிவிபரவியல் திணைக்களம், தகவல் தொடர்பூட்டல் தொழில்நுட்பம் மற்றும் வியாபார செயன்முறை முகாமைத்துவ துறைக்காக, இலங்கை மென்பொருள் மற்றும் பணிகள் கம்பனிகள் சங்கத்தின் ஆதரவுடன் 2018 யூலையிலிருந்து தனியான வியாபார நிலைமைகள் சுட்டெண்ணொன்றினை அறிமுகப்படுத்தியது. இவ்வளவீட்டின் முக்கிய அனுகூலங்களாக மொ.உ.உற்பத்தியின் எதிர்வுகூறல் செயன்முறையில் பதிலி குறிகாட்டியாக பயன்படுத்ததுதல், மொ.உ.உற்பத்தி மதிப்பீட்டினை கண்காணிப்பதற்கு உதவியளிப்பதற்கு தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களத்துடன் அத்தகைய தகவல்களைப் பகிர்ந்துகொள்ளுதல் மற்றும் தகவல் தொடர்பூட்டல் தொழில்நுட்பம்-வியாபார செயன்முறை முகாமைத்துவ துறையின் தொழில் நிலைமைகளை சிறந்த முறையில் புரிந்துகொள்வதற்காக உதவும் விதத்தில் வியாபார கொள்கை வகுப்போருடனும் பொருளாதார ஆய்வாளர்களுடனும் தரவுகளைப் பகிர்ந்து கொள்ளுதல் என்பன காணப்பட்டன.

### (ஏ) தேவையின் அடிப்படையிலான அளவீடுகள்

#### வடமத்திய மாகாணத்திலுள்ள வீட்டு அலகினரின் கடன் சுமை மீதான அளவீடு

வீட்டு அலகுத்துறைக் கடன்களின் அதிகரிப்பில் காணப்படும் போக்கினையும் நிதியியல் துறையின் வியாபார ஆரோக்கியத்தின் மீதும் அதேபோன்று வீட்டு அலகுத்துறையினர் மீதும் பரவக் கூடிய கடுமையான தன்மையின் போக்குகளை அடையாளம் காணவும் வருமானம் குறைந்த குடும்பங்களைத் தூண்டுகின்ற கடன் சுமை நிலைமையும் அடையாளம் காண்பதற்காக புள்ளிவிபரவியல் திணைக்களம், நுண்பாக நிதி நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களம், பிரதேச அபிவிருத்தித் திணைக்களம் மற்றும் பிரதேச அலுவலக முகாமைத்துவத் திணைக்களம் என்பனவற்றினுடன் இணைந்து வட மத்திய மாகாணத்திலுள்ள வீட்டு அலகுத் துறையின் கடன் சுமையினை மேலும் நுணுக்கமாக ஆராய்ந்தது. அளவீட்டிற்கான மாதிரிக் கட்டமைப்பாக வட மத்திய மாகாணத்திலுள்ள அனைத்து கிராம அலுவலர் பிரிவுகளிலுமுள்ள வீடமைப்பு அலகுகள் காணப்பட்டன. தரவின் நம்பகத் தன்மையினை உறுதிப்படுத்தும் பொருட்டு பக்கச் சார்பற்ற தகவல்களின் சேகரிப்பினை உறுதிப்படுத்துவதற்காக இரண்டு கட்ட உபாய மாதிரி நடைமுறை பயன்படுத்தப்பட்டது. அளவீடானது 1500 வீட்டு அலகுகளை உள்ளடக்கி சரியான முறையில் அமைக்கப்பட்ட வினாக்கொத்துக்களைப் பயன்படுத்தி தெரிவுசெய்யப்பட்ட வீட்டு அலகுத் துறையினருடன் நேர்காணலை மேற்கொண்டமையின் மூலம் மேற்கொள்ளப்பட்டதுடன், தகவல்கள், அப்பிரதேசத்தின் அபிவிருத்தி அலுவலகளை தரவுச் சேகரிப்பிற்கான புள்ளிவிபரச் சேகரிப்பினர்களாகப் பயன்படுத்தி சேகரிக்கப்பட்டன. பெறுபேறுகள் புள்ளிவிபரத் திணைக்களத்தினால் பகுப்பாய்வு செய்யப்பட்டு முகாமைத்துவத்திற்கு அறிக்கையிடப்பட்டன.

#### உலகளாவிய டிஜிட்டல் மயப்படுத்தல் அளவீடு

"டிஜிட்டல் மயப்படுத்தல்" மீதான உலகளாவிய அளவீடொன்றினை புள்ளிவிபரவியல் திணைக்களம் புளோரிடா, மியாமியிலுள்ள அட்லாண்டா பெடரல் றிசேர்வ் வங்கியினால் ஒழுங்குசெய்யப்பட்ட மத்திய வங்கி வியாபார அளவீடுகள் மற்றும் தொடர்பு நிகழ்ச்சித் திட்டத்தின் மீதான வருடாந்த மாநாட்டில் பங்கேற்ற மற்றும் 16 மத்திய வங்கிகளுடன் சேர்ந்து 2018ஆம் ஆண்டுப் பகுதியில் மேற்கொண்டது. இவ்வளவீட்டினை நடத்தியமையின் முக்கிய குறிக்கோள்களாக நிறுவனங்களினால் பின்பற்றப்படுகின்ற பல்வேறு வடிவங்களிலான டிஜிட்டல் தொழில்நுட்பங்களை அடையாளம் காண்பதும் விலைகள் மற்றும் தொழில்நிலைகளின் மீது டிஜிட்டல் மயமாக்கலின் தளத்தாக்கம் தொடர்பிலான அவர்களின் எதிர்பார்ப்புக்கள் மீதான தகவல்களைத் திரட்டுவதும் காணப்படுகின்றன. இலங்கைக்கான அளவீடு பொருளாதாரத்தின் மூன்று முக்கிய துறைகளான வேளாண்மை, கைத்தொழில் மற்றும் பணிகளை உள்ளடக்கி தெரிவுசெய்யப்பட்ட நிறுவனங்களினால் மேற்கொள்ளப்பட்டது.

### (i) நாடாளாவிய தரவு சேகரிப்பு முறைமை

1978இல் தொடங்கப்பட்ட கைகளினால் செய்யப்படும் முறையினைக் கொண்டிருந்த நாடாளாவிய தரவு சேகரிப்பு முறைமை திருத்தி நவீன முறையில் அமைக்கப்பட்டதுடன் 'டப்ளட்' கணனிகளினூடான அதேநேர இலத்திரனியல் தரவு சேகரிப்பு தளத்துடன் கூடிய தரவு சேகரிப்பு பிரயோகம் 2018 சனவரி 01ஆம் திகதியிலிருந்து ஆரம்பிக்கப்பட்டது. இச்செயன்முறையின் முக்கிய குறிக்கோள் யாதெனில், கொள்கை வகுக்கும் நோக்கங்களுக்காக தேசிய நுகர்வோர் விலைச்சுட்டெண்ணின் எதிர்வுகூறலுக்கு வசதியளிப்பதற்காக சில்லறை விலைகளையும் நேர அடிப்படையில் சேகரிப்பதாகவிருந்தது. மேலும், புதிய முறைமையானது தேவையான பொழுது கோரிக்கை விடுக்கப்படும் அளவீட்டிற்கு வசதியளிக்கும். ஆசிரிய பரீட்சகர் வலையமைப்பிற்கு புதிய இ-தரவு சேகரிப்பு ஒழுங்குகளை அறிமுகப்படுத்துவதற்காக 2018இன் 2ஆம் அரைப்பகுதியில் நான்கு ஆய்வரங்குகள் நடாத்தப்பட்டன.

வாராந்த, மாதாந்த மற்றும் காலாண்டு அடிப்படையில் நுகர்வுப் பொருட்களின் சில்லறை விலைகள் மற்றும் உற்பத்தியாளர் விலைகளின் மீதான தகவல்களின் கிரமமான சேகரிப்பு முறைசாரா தனியார் துறையின் நாளாந்தக் கூலிகள் மற்றும் வேளாண்மை மற்றும் மீன்பிடிப் பண்டங்களின் எதிர்கால உற்பத்தி மட்டங்களின் மேலெழுந்தவாரியான மதிப்பீடுகள் புதிய இ-தரவு சேகரிப்பு முறைமையின் உதவியுடன் தொடர்ந்தும் இடம்பெற்றன. முறைமையின் கீழ் சேகரிக்கப்பட்ட தரவுகள் விலை மற்றும் கூலிகளில் பருவகால வேறுபாடுகள் மற்றும் பிராந்திய வேறுபாடுகள் விலைச் சுட்டெண்கள் மாகாண மொ.உ.உற்பத்தி மற்றும் இலங்கை சுபீட்சச் சுட்டெண் தொகுப்பு, விலை அசைவுகளை எதிர்வுகூறல் மற்றும் பணவீக்கம் விலைகள் மீதான கொள்கை மாற்றங்களின் தாக்கத்தின் மதிப்பீடு தேசிய செலவினம் மற்றும் வருமானத்தின் மதிப்பீடு மற்றும் பொதுமக்களுக்கு விலைகள் மற்றும் கூலிகளைப் பரப்புதல் என்பனவற்றிற்காகப் பரந்தளவிற்குப் பயன்படுத்தப்பட்டன.

நாடளாவிய சேகரிப்பு முறைமை தீவு முழுவதனையும் உள்ளடக்கிய தரவுச் சேகரிப்பு மையங்களுக்காக தரவுப் பரீட்சகர்களாகப் பணியாற்றிய அரச பாடசாலை ஆசிரியர்களைப் பயன்படுத்தியது. மேலும், இம்முறைமையானது புறக்கோட்டைச் சந்தை, மரடஹகமுல்ல அரிசிச் சந்தை, தம்புள்ள மற்றும் நாரகென்பிட்டியவிலுள்ள சிறப்புப் பொருளாதார மையங்கள் மற்றும் நீர்கொழும்பு, பேலியகொட மீன்சந்தைகள் என்பனவற்றிலிருந்து மொத்த விற்பனை மற்றும் சில்லறை விற்பனைகள் மீதான தரவுகளை நாளாந்த மற்றும் வாராந்த அடிப்படையில் அறிக்கையிடுவதற்காக ஆசிரியர்களல்லாத தரவுச் சேகரிப்பாளர்களைப் பயன்படுத்திக் கொண்டது. முகாமைத்துவத் தகவல் முறைமையினை வலுப்படுத்தும் பொருட்டு திணைக்களம் தெரிந்தெடுக்கப்பட்ட சந்தைகளிலிருந்து பல்வேறுபட்ட உணவுப் பண்டங்களினது மொத்த விற்பனை மற்றும் சில்லறை விலைகளை நேரடியாகச் சேகரித்ததுடன் பொதுவான தகவல்கள் நாளாந்த அடிப்படையில் இலங்கை மத்திய வங்கியின் வெப்தளத்தில் வெளியிடப்பட்டன.

### 29.2 சுட்டெண்களைத் தொகுத்தல்

#### (அ) வியாபார மனோபாவச் சுட்டெண்கள்

வியாபாரத் தோற்றப்பாட்டு அளவீட்டின் பெறுபேறுகளை அடிப்படையாகக் கொண்டு வியாபார மனோபாவச் சுட்டெண்களான வியாபார நிலைமைகள், இலாபத்தன்மை, தேர்ச்சி பெற்ற தொழிலாளரின் கிடைப்பனவு, விற்பனைகள், கேள்வி மற்றும் இயலளவுப் பயன்பாடு என்பன கணிப்பிடப்பட்டன. பெறுபேறுகள் நாணயக் கொள்கைக் குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்டதுடன் கொள்கை வகுத்தல் நோக்கங்களுக்காக முகாமைத்துவத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டது. மேலும், தெரிந்தெடுக்கப்பட்ட சுட்டெண்கள் வெளிவாரி பாவனையாளர்களுக்காக கூட்டுத்தொகை வடிவத்தில் காலாண்டு ரீதியாக இலங்கை மத்திய வங்கியின் வெப்தளத்தில் வெளியிடப்பட்டன.

புதிய கட்டளைகள், உற்பத்தி, தொழில்நிலை, நிரம்பலர் வழங்கல் நேரம், கொள்வனவுகளின் இருப்பு என்பனவற்றின் துணைச் சுட்டெண்களுடனான கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் - தயாரிப்புத்துறை மற்றும் புதிய வியாபாரங்கள், வியாபார நடவடிக்கை, தொழில்நிலை, வேலைகளின் நிலுவை மற்றும் நடவடிக்கைக்கான எதிர்பார்ப்புக்கள் என்பனவற்றின் துணைச் சுட்டெண்களுடனான பணிகள் துறைக்கான கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் என்பன கணிக்கப்பட்டு, மாதத்திற்கு மாத மாற்றம் மதிப்பிடப்பட்டதுடன் கொள்கைத் தீர்மானத்தினை மேற்கொள்ளும் நோக்கத்திற்காக நாணயக் கொள்கைக் குழுவிற்கும் மூத்த முகாமைத்துவத்திற்கும் அறிக்கையிடப்பட்டதுடன் பொதுமக்களுக்காக பத்திரிகை அறிவித்தலும் வெளியிடப்பட்டது.

#### (ஆ) சொத்து விலைச் சுட்டெண்கள்

புள்ளிவிபரவியல் திணைக்களம், காணி விலைச் சுட்டெண்களை (அடியாண்டு : 1998) கொழும்பு மாவட்டத்திலுள்ள 5 பிரதேச செயலாளர் பிரிவுகளின் 50 நிலையங்களை உள்ளடக்கிய விதத்தில் 1998-2008 வரை வருடாந்தமும் 2009-2017 வரை அரையாண்டுக்கொரு முறையும் தொகுத்தது. உண்மைச் சொத்துத் துறையில் ஏற்பட்ட அண்மைய அபிவிருத்திகளின் காரணமாக காணி விலைகளைக் கண்காணிக்கின்ற முக்கியத்துவம் அதிகரித்து வருகின்றமையின் காரணமாக புள்ளிவிபரவியல் திணைக்களம் 2018ஆம் ஆண்டுப் பகுதியில் கொழும்பு மாவட்டத்திலுள்ள அனைத்து பிரதேச செயலாளர் பிரிவுகளையும் உள்ளடக்கிய விதத்தில் 82 நிலையங்களுக்கு காணி விலைச் சுட்டெண்ணினை உள்ளடக்கி புவியியல் பரப்பினை விரிவாக்கிக் கொண்டதுடன் அதன் அடிப்படைக் காலப்பகுதியினை 2017இன் முதலரைப் பகுதிக்கு திருத்தியமைத்துக் கொண்டது. சுட்டெண்ணின் தொகுப்பு செயன்முறைக்காக வெற்றுக் காணிக்கான அரசாங்கச் மதிப்பீட்டுத் திணைக்களத்தினால் பயன்படுத்தப்பட்ட பேர்ச் ஒன்றிற்கான மதிப்பீடு பயன்படுத்தப்பட்டது. காணிகளின் பல்வேறு விதமான பயன்பாட்டினையும் ஒத்த தன்மையினைப் பேணுவதனையும் கருத்திற்கொண்டு வதிவிடம், வர்த்தக மற்றும் கைத்தொழில் காணிகளுக்கான மூன்று துணைச்சுட்டெண்கள் தனித்தனியாக கணிக்கப்பட்டதுடன் மூன்று துணைச் சுட்டெண்களினதும் சராசரியினை கவனத்திற்கொண்டு ஒட்டுமொத்த காணிவிலைச் சுட்டெண் கணிக்கப்பட்டது.

சொத்து வெப்தளத்தில் கிடைக்கத்தக்கதாயிருக்கும் விற்பனை விலைகளை அடிப்படையாகக்கொண்டு கூட்டுறுதித் தொடர்மாடிமனைச் சொத்துக்களின் விலைகள் மீதான மாதாந்த சுட்டெண்களின் தொகுப்பினை அபிவிருத்தி செய்யும் பணிகள் 2018இலும் தொடர்ந்தன. தரவுச் சேகரிப்பின் வினைத்திறனை உயர்த்துவதற்காகவும் சுட்டெண்ணின் புவியியல் உள்ளடக்கத்தினை விரிவுபடுத்துவதற்காகவும் ஆண்டின் பிற்பகுதியில் சுட்டெண்ணின் செயன்முறைக்கு மேம்பாடுகள் அறிமுகப்படுத்தப்பட்டன. மேலும் அளவீட்டிற்கு பதிலிறுத்துவர்களுக்குச் சொந்தமான செயற்றிட்டங்களை உள்ளடக்கிய காலாண்டு அடிப்படையிலான கூட்டுறுதித் தொடர்மாடிமனை சந்தை அளவீட்டினூடாக பெறப்பட்ட கொடுக்கல்வாங்கல் செய்யப்பட்ட விலைகளின் அடிப்படையில் 2018இல் புதிய சுட்டெண் ஒன்று ஆரம்பிக்கப்பட்டது.

#### (இ) கூலிச் சுட்டெண்கள்

புள்ளிவிபரத் திணைக்களம், பொருளாதாரத்தில் சம்பளங்கள் மற்றும் கூலிகளின் அசைவுகளை மதிப்பிடுவதற்காக கூலி வீதச் சுட்டெண்களைத் தொகுத்தது. இது தொடர்பாக அரச, முறைசார்ந்த தனியார் துறை மற்றும் முறைசாராத் தனியார் துறையின் கூலி அசைவுகளைத் தனித்தனியாக பகுப்பாய்வுகள் செய்யப்பட்டன. அரச துறைக்கான பெயரளவு மற்றும் உண்மைக் கூலி வீதச் சுட்டெண்கள் பொது நிருவாகச் சம்பள சுற்றறிக்கைகளின் அடிப்படையில் தொகுக்கப்பட்டன. முறைசார்ந்த தனியார் துறையின் உண்மைக் கூலி வீதச் சுட்டெண்கள் கூலி நிர்ணய சபை வர்த்தகங்களிலுள்ள ஊழியர்களுக்காக தொழில் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட பெயரளவு கூலி வீதச் சுட்டெண்களைப் பயன்படுத்தி தொகுக்கப்பட்டது. முறையியலில் மேம்பாடுகளை ஏற்படுத்தும் விதத்தில், 2017இல் அறிமுகப்படுத்தப்பட்ட முறைசார்ந்த தனியார் துறைக்கான புதிய சுட்டெண்ணினை தொகுக்கும் வேலைகளை புள்ளிவிபரவியல் திணைக்களம் தொடர்ந்தும் மேற்கொண்டது. முறைசாரா தனியார் துறைக் கூலி அசைவுகள் நாடளாவிய தரவுச் சேகரிப்பு முறைமையினூடாக சேகரிக்கப்பட்ட தகவல்களின் அடிப்படையில் திரட்டப்பட்ட முறைசாரா தனியார் துறைக் கூலி வீதச் சுட்டெண்ணின் நியதிகளில் பகுப்பாய்வு செய்யப்பட்டன.

### 29.3 முக்கிய பேரண்டப் பொருளாதார மாறிகளின் எதிர்வுகூறல்

புள்ளிவிபரவியல் திணைக்களம் குறுங்கால நுகர்வோர் பணவீக்கம் மற்றும் பொருளாதார வளர்ச்சி என்பவற்றை மாதிரி மற்றும் குறிகாட்டியை அடிப்படிப்படையாகக் கொண்ட தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி எதிர்வுகூறுகிறது. இவ்வெதிர்வுகூறல்கள் அலுவலர்மட்ட கூட்டம், நாணயக் கொள்கைக் குழுவிற்கு முன்னரான கூட்டம் மற்றும் நாணயக் கொள்கைக் குழுக் கூட்டத்தில் ஆய்வு செய்யப்பட்டு மற்றும் கலந்துரையாடப்பட்டு, கொள்கை தொடர்பான முடிவுகளை எடுப்பதற்காக நாணயச் சபைக்குச் சமர்ப்பிக்கப்பட்டது.

குறுங்கால பணவீக்க எதிர்வுகூறல்கள் பிரதானமாக அண்மைக்கால விலைப்போக்குகள், பொருளியலளவை நுட்பங்கள் மற்றும் சந்தை அபிவிருத்திகளுடன் தொடர்புடைய எதிர்பார்க்கப்பட்ட விலை அசைவுகள் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டிருந்தது. பணவீக்க எதிர்வுகூறல் மாதிரிகளை மேம்படுத்துவதற்காக பணவீக்கத்தின் மீதான நிரம்பல் மற்றும் கேள்விப்பக்கத் தாக்கங்கள் இரண்டினையும் பிரதிபலிக்கின்ற புதிய மாறிகளை திணைக்களம் தொடர்ந்தும் கண்டறிந்தது. உண்மையில் அளவிடப்பட்ட மற்றும் உணரப்பட்ட மாற்றங்களுடன் இசைந்து செல்லும் விதத்தில் அடிக்கடி இற்றைப்படுத்தப்பட்டது. இது அவதானிக்கப்பட்ட நுகர்வோர் விலைகளின் அளவுசார் திணைக்களத்தினால் நடத்தப்பட்ட அளவீடுகளில் கண்டறியப்பட்டவற்றினூடாகப் பிரதிபலிக்கப்பட்டவாறு உள்ளீட்டு மற்றும் வெளியீட்டு விலைகளில் ஏற்பட்ட அபிவிருத்திகளுடன் சேர்ந்து அதன் அடிப்படையில் பணவீக்கத்தின் மீதான தாக்கத்தினைக் கொண்டிருந்தது. 2018இல் நாடளாவிய தரவுச் சேகரிப்பு முறையின் ஆசிரிய பரீட்சகர்களூடாக சேகரிக்கப்பட்ட தரவுகளின் ஊடாக தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்ணில் எதிர்வுகூறல் மாதிரியியலுக்கு மேம்பாடுகள் அறிமுகப்படுத்தப்பட்டன. மேலும், நேரகாலத்துடன் எச்சரிக்கின்ற முறைத் தரவுகளின் அடிப்படையிலான நியாயபூர்வமான சீராக்கத்தினூடாக மாதிரியினை அடிப்படையாகக் கொண்ட பணவீக்க எதிர்வுகூறல்கள் மேம்படுத்தப்பட்டன.

குறிகாட்டிகள் மற்றும் மாதிரியினை அடிப்படையாகக் கொண்ட தொழில் நுணுக்கங்களின் அடிப்படையில் பொருளாதாரத்தின் ஒவ்வொரு துணை நடவடிக்கை தொடர்பான முதலாந்தர மற்றும் இரண்டாந்தரத் தரவுகளைப் பயன்படுத்திக் காலாண்டு அடிப்படையில் வளர்ச்சி எதிர்வுகூறல்கள் தயாரிக்கப்பட்டன. முன்னணிப் பொருளாதாரக் குறிகாட்டிகள்,

அளவீட்டில் கண்டறியப்பட்டவை மற்றும் பொருளாதாரத்தின் துணை நடவடிக்கைகள் தொடர்பான ஏனைய தகவல்கள் என்பன குறிகாட்டிகளை அடிப்படையாகக் கொண்ட எதிர்வுகூறல்களுக்கான நிபுணத்துவ நியாய பூர்வத்தன்மை இணைக்கப்பட்டன. மாதிரியினை அடிப்படையாகக் கொண்ட குறுங்கால எதிர்வுகூறல்களை வலுப்படுத்தும் பொருட்டு, 2017 காலப்பகுதியில், அதன் தொழில் நுணுக்க விடயங்களுக்கு குறுங்கால இயக்கவாற்றல் காரணி மாதிரியொன்று அறிமுகப்படுத்தப்பட்டது.

உள்ளக எதிர்வுகூறல் கட்டமைப்பிற்குப் புறம்பாக, புள்ளிவிபரத் திணைக்களம் இலங்கை மத்திய வங்கியின் எதிர்வுகூறல் மற்றும் கொள்கை பகுப்பாய்வு முறைமைக்கு தேவைப்படுத்தப்பட்ட பணவீக்கம் மற்றும் மொ.உ.உற்பத்தியின் குறுங்கால எதிர்வுகூறல்களுடன் தொடர்புபட்ட பகுப்பாய்வு மற்றும் ஏனைய தகவல்களுடன் தொடர்ந்தும் பங்களித்தது.

### 29.4 பிரதேச புள்ளிவிபரங்களைத் தொகுத்தல்

#### (அ) இலங்கை சுபீட்சச் சுட்டெண்

நாட்டினதும் அதன் ஒவ்வொரு மாகாணங்களினதும் சுபீட்சத்தின் ஒட்டுமொத்த அந்தஸ்தினை மதிப்பிடுவதற்காக புள்ளிவிபரத் திணைக்களம் 2017இல் இலங்கை சுபீட்சச் சுட்டெண்ணினைத் தொடர்ந்தும் தொகுத்தது. நாட்டினதும் அதன் மாகாணங்களினதும் பொருளாதார மற்றும் சமூக அபிவிருத்திகளைப் பிரதிபலிக்கின்ற கலப்புக் குறிகாட்டியாக இது விளங்குகிறது. இச்சுட்டெண், 43 பிரதிநிதித்துவ மாறிகளைப் பயன்படுத்தி அளவிடப்பட்ட மூன்று துணைச் சுட்டெண்களான பொருளாதார மற்றும் வியாபாரச் சூழல், மக்கள் நலனோம்புகை மற்றும் சமூக பொருளாதார உட்கட்டமைப்பு ஆகிய சுட்டெண்களை உள்ளடக்கியுள்ளது.

#### (ஆ) மாகாண ரீதியாக மொத்த உள்நாட்டு உற்பத்தி

தொகைமதிப்புப் புள்ளிவிபரவியல் திணைக்களத்தின் தேசிய கணக்குகளின் மதிப்பீடுகளைப் புள்ளிவிபரத் திணைக்களம் மாகாண மட்டத்தில் தொடர்பான குறிகாட்டிகளைப் பயன்படுத்திப் பிரித்ததன் மூலம் 2017இல் பெயரளவு நியதிகளில் மாகாண ரீதியான மொ.உ.உற்பத்தியை மதிப்பிட்டது. இப்புள்ளிவிபரங்கள் தேசிய மொ.உ.உற்பத்திக்கான மாகாண ரீதியான பங்களிப்பினை எடுத்துக் காட்டியதன் மூலம் அது மாகாண அதிகாரிகளுக்கும் அதேபோன்று மத்திய அரசாங்கத்தின் தேசிய திட்டமிடலாளர்களுக்கும் மாகாணங்களுக்கிடையே குறைந்த வருமான ஏற்றத்தாழ்வுகளுக்கான பொருத்தமான உபாயங்களை அறிமுகப்படுத்துவதற்கும் நடைமுறைப்படுத்துவதற்கும் பயன்மிக்கதாகவிருக்கும்.

### 29.5 தகவல்களைப் பரப்புதல்

திணைக்களம் அதன் தரவுப் பரப்பல்களை அச்சு மற்றும் இலத்திரனியல் ஊடகங்கள் இரண்டினூடாகவும் தொடர்ந்தும் மேற்கொண்டது. இதன்படி, அதன் இரண்டு முக்கிய புள்ளிவிபரவியல் வெளியீடுகளான "இலங்கையின் பொருளாதாரம் மற்றும் சமூக புள்ளிவிபரங்கள் - 2018 - தொகுதி XL" மற்றும் "இலங்கை சமூக பொருளாதார தரவு 2018 - தொகுதி XLI" என்பவற்றை அனைத்து மூன்று மொழிகளிலும் முறையே ஓகத்திலும் செத்தெம்பரிலும் வெளியிட்டது. மேலும், தெரிவுசெய்யப்பட்ட நுகர்வுப் பொருட்களின் நாளாந்த விலை அறிக்கைகள், வாராந்த மற்றும் மாதாந்த பொருளாதார குறிகாட்டிகள் என்பன இலங்கை மத்திய வங்கியின் வெப்தளத்தில் உரிய நேரத்தில் வெளியிடப்பட்டதுடன் ஒன்பது உள்ளக திணைக்களங்கள் மற்றும் பல வெளிவாரி நிறுவனங்களிலிருந்து சேகரிக்கப்பட்ட உண்மை, நாணய, இறை, வெளிவாரி மற்றும் நிதியியல் துறைகள் போன்ற பரந்துபட்ட பல்வேறு விடயங்கள் மீதான நேரத்தொடர் தரவுகளையும் உள்ளடக்கியிருந்தது. திணைக்களம் இலங்கை மத்திய வங்கியின் ஆண்டறிக்கை மற்றும் அண்மைக்கால பொருளாதார அபிவிருத்தி அறிக்கை என்பனவற்றின் இரண்டு அத்தியாயங்களுக்கு முக்கியமாக பங்களிப்புச் செய்ததுடன், மத்திய வங்கியின் மாதாந்த செய்தித்திரட்டிற்கும் தரவுகளை வழங்கியது. மேலும், பத்திரிகை வெளியீடுகளூடாக பொதுமக்களுக்கு தகவல்கள் பெருமளவிற்கு பரப்பப்பட்டதுடன் ஆண்டுமுழுவதும் அறிவினைப் பகிர்ந்துகொள்ளும் செயன்முறைகளும் மேற்கொள்ளப்பட்டன.

### 29.6 உலகளாவிய தரமிடலில் இலங்கையின் நிலைமையினை மேம்படுத்தல்

#### (அ) "வியாபாரம் செய்தலை இலகுபடுத்தல்" தரமிடல்

புள்ளிவிபரவியல் திணைக்களம் இலங்கையின் "வியாபாரம் செய்தலை இலகுபடுத்தல்" தரமிடலை மேம்படுத்துகின்ற பொறுப்பு ஒப்படைக்கப்பட்டுள்ள பணிக்குழுவிற்கு கேட்டுக் கொள்ளப்படும் வேளைகளில் அதன் உதவிகளைத் தொடர்ந்தும் வழங்கியது. இதன்படி, 2018ஆம் ஆண்டுப் பகுதியில் திணைக்களம் சீர்திருத்தங்களின் முன்னேற்றம் மீதான கூட்டங்களில் கலந்து கொண்டதுடன் நாட்டின் நிலைமையினை முன்னேற்றுவதற்காக பன்னாட்டு ஆய்வரங்குகளில் இலங்கையின் பங்கேற்பினை ஒருங்கிணைத்ததுடன் தொடர்பான அதிகாரிகளுக்கு தரமிடலின் கீழ் மாறிகளை உரிய நேரத்தில் கிடைக்கச் செய்வதனை முக்கிய கவனத்தில் கொண்டு தரவுகளைப் பரப்பியது. மேலும், வியாபார அழுத்தங்கள், தொழில்முயற்சியாளராக வரக்கூடிய சாத்தியத்தன்மை கொண்டவர்கள், வெளிநாட்டு முதலீட்டாளர்கள் மற்றும் முதலீட்டு ஊக்குவிப்பு முகவர்கள் ஆகியோருக்கான பயன்மிக்க தகவல்களை உள்ளடக்கிய "இலங்கையில் வியாபாரத்தினைச் செய்வதற்கான படிப்படியானதொரு வழிகாட்டல்" என்பதன் திருத்தப்பட்ட பதிப்பினை 2018இல் வெளியிடப்பட்டது.

#### (ஆ) ஏனைய உலகளாவிய தரமிடல்

திணைக்களமானது உலகளாவிய ஆளுகை குறியீடு, உலகளாவிய போட்டித்தன்மைச் சுட்டெண் பொருளாதார சுதந்திரச் சுட்டெண், மானிட அபிவிருத்திச் சுட்டெண், உலகளாவிய பொருளாதார சுதந்திரச் சுட்டெண் மற்றும் ஊழல் உணர்வுச் சுட்டெண் ஆகிய உலகளாவிய சுட்டெண்களைத் தொடர்ந்தும் கண்காணித்ததுடன், முகாமைத்துவம் மற்றும் ஏனைய உயர் அதிகாரிகளிற்கு தரமிடலை மேம்படுத்துவதற்காக தேவையான வேளையில் சமர்ப்பித்ததுடன் நாட்டின் நிலைமை மற்றும் உபாயங்கள் மீது அறிக்கைகளையும் சமர்ப்பித்தது. பேரண்ட பொருளாதார தகவல்களும் ஏனைய தரவுகளும் மேற்குறிப்பிட்ட சுட்டெண்களின் தொகுப்பாளர்களுக்கு வாராந்த மற்றும் மாதாந்த அடிப்படையில் வழங்கப்பட்டன.

## 30. வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வை

வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள் மேற்பார்வைத் திணைக்களத்திடம் 2011ஆம் ஆண்டின் 42ஆம் இலக்க நிதித்தொழில் சட்டத்தினதும் 2000ஆம் ஆண்டின் 56ஆம் இலக்க நிதிக் குத்தகைக்குவிடுதல் சட்டத்தினதும் ஏற்பாடுகளின் கீழ், முறையே உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகளையும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகளையும் ஒழுங்குமுறைப்படுத்தி மேற்பார்வை செய்யும் கடப்பாடு ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. மேலும், வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களம் 1923ஆம் ஆண்டின் 8ஆம் இலக்க உள்நாட்டுத் திறைசேரி உண்டியல் கட்டளைச் சட்டம் மற்றும் 1937ஆம் ஆண்டின் 07ஆம் இலக்க பதிவுசெய்யப்பட்ட பங்குகள் மற்றும் பிணையங்கள் கட்டளைச் சட்டம் என்பனவற்றின் ஏற்பாடுகளின் கீழ் முதனிலை வணிகர்களையும் மேற்பார்வை செய்கிறது. மேலும், வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள் மேற்பார்வைத் திணைக்களம் 2016ஆம் ஆண்டின் 6ஆம் இலக்க நுண்பாக நிதிச் சட்டத்தின் கீழ் ஒழுங்குமுறைப்படுத்தல் மற்றும் மேற்பார்வை நோக்கங்களுக்காக நுண்பாக நிதி வியாபாரத்தில் ஈடுபட்டுள்ள நிறுவனங்களுக்கு உரிமங்களை வழங்கும் நடவடிக்கையிலும் ஈடுபட்டு வருகின்றது.

வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள் மேற்பார்வைத் திணைக்களத்தின் மேற்பார்வைத் தொழிற்பாடுகள் உரிமம் பெற்ற நிறுவனங்களின் நியதிச் சட்ட பரீட்சிப்புக்களை நடத்துவதனையும் தொடர்ச்சியாக

கண்காணிப்பினையும் உள்ளடக்கியிருந்த வேளையில், ஒழுங்கு முறைப்படுத்தல் தொழிற்பாடானது முன்மதியுடைய ஒழுங்குவிதிகளை நடைமுறைப்படுத்துவதுடனும் ஒழுங்குமுறைப்படுத்தல் ஒப்புதல்களை வழங்குவதுடனும் தொடர்புபட்டதாகக் காணப்படுகிறது. முக்கிய தொழிற்பாடுகளுக்குப் புறம்பாக, வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களம் துறையின் இயலாற்றலைக் கட்டியெழுப்புதல், நீதிமன்ற வழக்காடல்களுக்கு வசதியளித்தல் மற்றும் பொதுமக்களின் முறைப்பாடுகளைக் கவனித்தல் போன்ற மற்றைய பல நடவடிக்கைகளிலும் ஈடுபட்டு வருகிறது.

2018 இறுதியில் திணைக்களத்தின் அதிகாரவரம்பிற்குள் 43 உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகளும் 5 சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகளும் 8 முதனிலை வணிகர்களும் காணப்பட்டனர். மேலும் நிதிக் குத்தகைக்குவிடும் சட்டத்தின் கீழ், 5 சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகள் உட்பட 65 பதிவுசெய்யப்பட்ட நிதிக் குத்தகைக்குவிடும் நிறுவனங்களுக்கு உரிமங்கள் வழங்கப்பட்டன. உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகள், சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகள், பதிவுசெய்யப்பட்ட நிதிக் குத்தகைக்குவிடும் நிறுவனங்கள் மற்றும் முதனிலை வணிகர்களின் பெயர்கள் இப்பிரிவின் இறுதியில் தரப்பட்டுள்ளன. வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள் மேற்பார்வைத் திணைக்களத்தினால் 2018ஆம் ஆண்டுப்பகுதியில் ஆற்றப்பட்ட முக்கிய தொழிற்பாடுகளினதும் நடவடிக்கைகளினதும் சுருக்கம் கீழே தரப்படுகிறது.

### 30.1 முன்மதியுடைய ஒழுங்குவிதிகளை விடுத்தல்

2018ஆம் ஆண்டுப்பகுதியில் விடுக்கப்பட்ட முன்மதியுடைய ஒழுங்குவிதிகள் இவ்வறிக்கையின் பகுதி III இல் தரப்பட்டுள்ளன. முக்கியமான முன்மதியுடைய ஒழுங்குவிதிகளின் சுருக்கம் கீழே தரப்படுகிறது.

அ. துறையின் உறுதிப்பாட்டினையும் ஆற்றல் வாய்ந்த தன்மையினையும் உறுதிப்படுத்துவதற்காக வாடிக்கையாளர் நலவுரித்துக்களைப் பாதுகாத்தல், ஆரோக்கியமான உறவுமுறைகளைப் பேணுதல் மற்றும் இத்துறையின் மீதான வாடிக்கையாளரின் நம்பிக்கையினை வலுப்படுத்தல் என்பனவற்றினைக் கருத்திற் கொண்டு நிதியியல் வாடிக்கையாளர் பாதுகாப்புக் கட்டமைப்பொன்று அறிமுகப்படுத்தப்பட்டது. இப்பணிப்புரையானது வெளிப்படுத்துகை மற்றும் வெளிப்படைத்தன்மை, நிதியியல் அறிவு மற்றும் விழிப்புணர்வு, பொறுப்பு மிக்க வியாபார நடத்தை, முறைப்பாடுகளைக் கையாளல் மற்றும் நிவாரணம், சமத்துவமாகவும் நியாயமாகவும் நடத்துதல் மற்றும் வாடிக்கையாளர் தரவு மற்றும் இரகசியங்களைப் பாதுகாத்தல் ஆகிய துறைகளில் வாடிக்கையாளர் பாதுகாப்புத் தொடர்பில் குறைந்தபட்ச நியமங்களை நிறுவியிருக்கின்றது.

ஆ. வெளியிலிருந்து பணிகளைப் பெற்றுக் கொள்வதனால் ஏற்படும் இடர்நேர்வுகளைக் கட்டுப்படுத்துவதற்கும் வெளியிலிருந்து பணிகளைப் பெற்றுக் கொள்ளும் மைய வியாபாரச் செயற்பாடுகள்/ தொழிற்பாடுகள் மற்றும் நடவடிக்கைகள் மீது கட்டுப்பாடுகளை விதிப்பதற்குமாக இடர்நேர்வு முகாமைத்துவ வழிகாட்டல்களை அறிமுகப்படுத்தியதன் மூலம் வெளியிலிருந்து பணிகளைப் பெற்றுக்கொள்ளும் ஒழுங்குகளை நியமப்படுத்துவதற்காக வியாபாரத் தொழிற்பாடுகளை வெளியிலிருந்து பெற்றுக்கொள்வது தொடர்பில் புதிய பணிப்புரையொன்று அறிமுகப்படுத்தப்பட்டது.

இ. இடர்நேர்வு முகாமைத்துவம் மீது வலுவான வலியுறுத்தல்களை மேற்கொள்ளும் பொருட்டும் உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகள்/ சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகளின் தற்போதைய இடர்நேர்வு மதிப்பீட்டு இயலாற்றல்களை மேம்படுத்துவதனை ஊக்குவிக்கும் பொருட்டும் உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகளுக்கும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக் கம்பனிகளுக்குமான புதிய மூலதனப் போதுமைக் கட்டமைப்பொன்று நடைமுறைக்கிடப்பட்டது. ஆகவே புதிய மூலதனப் போதுமைக் கட்டமைப்பு பாசல் உடன்படிக்கையில் கிடைக்கத்தக்கதாகவுள்ள அடிப்படை அணுகுமுறையின் கீழ் கொடுகடன் மற்றும் தொழிற்பாட்டு இடர்நேர்வுகளை உள்ளடக்குகின்ற கூடியளவிற்கு இடர்நேர்வு உணர்திறன்மிக்க கவனிப்பின் அடிப்படையில் மூலதனப் போதுமைக் கட்டமைப்பினைப் பேணுவதற்கான வசதியை வழங்குகிறது. புதிய கட்டமைப்பின் நியதிகளில் ரூ.100 பில்லியனுக்கு மேற்பட்ட சொத்துக்களைக் கொண்ட கம்பனிகள் உயர்ந்த மூலதனப் போதுமை விகிதத்தினை பேண வேண்டியிருக்கும்.

ஈ. அசையாச் சொத்துக்கள் தொடர்பில் உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகள் மற்றும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகளின் மதிப்பீட்டு நடைமுறைகளை ஒழுங்குமுறைப்படுத்துவதற்காக பணிப்புரையொன்று விடுக்கப்பட்டது. புதிய தேவைப்பாடுகள் மதிப்பீட்டாளர்களின் தகைமைகள், மதிப்பீட்டுக் கால இடைவெளி, உள்ளக மற்றும் வெளிவாரி மதிப்பீட்டு அறிக்கைகளுக்கான ஆரம்ப மட்டம் மற்றும் வெளிப்படுத்துகை என்பனவற்றைக் குறித்துரைக்கின்றன.

உ. அனைத்து உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகளும் இலங்கை மத்திய வங்கியினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட கொடுகடன் தரமிடல் முகவர் ஒருவரிடமிருந்து கொடுகடன் தரமிடலொன்றினை பெற்றுக்கொள்ள வேண்டுமென கேட்டுக் கொள்ளப்பட்டிருப்பதுடன் அத்தகைய தரமிடலை 2018 ஒத்தோபர் 1ஆம் திகதியிலிருந்து பிரசுரிக்க வேண்டுமெனவும் கேட்டுக்கொள்ளப்பட்டன.

ஊ. கடன்கள் மீது அளவுக்கதிகமான வட்டி வீதங்கள் விதிக்கப்படுவதிலிருந்தும் வாடிக்கையாளர்களைப் பாதுகாக்கும் குறிக்கோளுடன் நுண்பாக நிதிக் கடன்கள் மீதான உயர்ந்தபட்ச வட்டி வீதம் தொடர்பாக புதிய பணிப்புரையொன்று உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகளுக்கும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகளுக்கும் அறிமுகப்படுத்தப்பட்டது.

எ. இறக்குமதிகளையும் அதன் விளைவாக செலாவணி வீதத்தின் மீது ஏற்படக்கூடிய மோசமான தாக்கங்களையும் கட்டுப்படுத்துவதற்காக தற்போதுள்ள பெறுமதிக்கான கடன் விகிதம் திருத்தப்பட்டதுடன் 2018 ஒத்தோபர் 1ஆம் நாளிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் புதிய விகிதத்தினைப் பின்பற்றுமாறு உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகளும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகளும் கேட்டுக் கொள்ளப்பட்டன. இதன்படி, கலப்பு வலு, உந்து ஊர்திகள், வான்கள் மற்றும் கடுவழிப்பயண ஊர்திகளின் பெறுமதிக்கான கடன் விகிதம் 50 சதவீதத்திற்குக் குறைக்கப்பட்டது.

### 30.2 உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகள் மற்றும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகளின் மேற்பார்வை

#### அ. நியதிச் சட்டப் பரீட்சிப்புக்களை நடத்துதல்

i. திட்டமிடப்பட்டவாறு 2018ஆம் ஆண்டுப்பகுதியில் வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களம் உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகள் மற்றும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகள் தொடர்பில் 13 வருடாந்த நியதிச்சட்ட பரீட்சிப்புக்களை நடத்தியது. பரீட்சிப்புக்களில் முக்கியமாகக் கண்டறியப்பட்ட விடயங்கள் குறைந்த வினைத்திறன், கம்பனி ஆளுகை தொடர்பான பிரச்சனைகள் கடன் இழப்புக்களுக்கான ஒதுக்கம் போதுமானளவில் இல்லாமை, உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள தவறுகள், சாத்தியமான கொடுகடன் இடர்நேர்வுகள் மற்றும் வியாபார மாதிரிகளிலிருந்து உருவாகின்ற உறுதிப்பாட்டுத்தன்மை தொடர்பான பிரச்சனைகள் என்பனவற்றை உள்ளடக்கியிருந்தன.

ii. நாணயச் சபை நேரக் கட்டமைப்புடன் கூடிய நடவடிக்கைத் திட்டங்களுக்கும் இப்பரீட்சிப்புக்களின் விதந்துரைப்புக்களுக்கும் ஒப்புதலளித்ததுடன் அவை பணிப்பாளர் சபையினதும் சபைத்

துணைக் குழுக்களினதும் கவனத்திற்காகத் தொடர்பான கம்பனிகளுக்கு அறிவிக்கப்பட்டதுடன், இணங்கப்பட்ட நேரக் கட்டமைப்பிற்குள் உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகளும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகளும் சரிசெய்யும் வழிமுறைகளை எடுத்திருப்பதனை உறுதிப்படுத்துவதற்காக பின்தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

**ஆ. தொடர்ச்சியான கண்கணிப்பினை நடத்துதல்**

i. அனைத்து உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகளும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகளும் வெப்தளத்தினை அடிப்படையாகக் கொண்ட பின்நெட் முறைமையினூடாக சமர்ப்பிக்கப்பட்ட காலாந்தர நிதியியல் தகவல்கள் கணக்காய்வாளர் அறிக்கைகள், முகாமைத்துவக் கடிதங்கள், வெளிவாரித் தரமிடல் மற்றும் பத்திரிகை அறிக்கைகள் போன்றன உட்பட ஏனைய நிதியியல் தகவல்களின் மீளாய்வுகளை அடிப்படையாக்க கொண்டு தொடர்ச்சியாக மேற்பார்வை செய்யப்பட்டன. இம்மீளாய்வுகள் மூலதனம், திரவத்தன்மை, ஒதுக்கங்கள், கம்பனி ஆளுகை மற்றும் இடர்நேர்வு முகாமைத்துவம் ஆகிய துறைகளின் மீதான நேர காலத்துடன் எச்சரிக்கை விடுக்கும் குறிகாட்டிகள் மற்றும் உள்ளகத் தரமிடல் முறைமையூடாக உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகள்/ சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகளின் சாத்தியமான இடர்நேர்வுகளை அடையாளம் காண்கிறது.

ii. மீளாய்விற்குரிய ஆண்டுப்பகுதியில், குறைந்தபட்ச மைய மூலதனம் மற்றும் மூலதனப் போதுமை விகிதம் என்பன மீது புதிதாக விடுக்கப்பட்ட பணிப்புரைகளுடன் இசைந்து செல்லும் விதத்தில் மூலதனப் போதுமை தொடர்பில் புதிய பின்நெட் கூற்றுக்கள் அறிமுகப்படுத்தப்பட்டன. மேலும், கூடுதலான தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்காகவும் இலங்கை வைப்புக் காப்புறுதி மற்றும் திரவத்தன்மை ஆதரவுத் திட்டத்தின் ஒழுங்குவிதிகளுடன் இசைந்து செல்வதற்காகவும் இத்துறையின் மீது முறையே கொடுகடன் வெளிப்படுத்துகை மற்றும் வைப்புப் பொறுப்புக்கள் ஆகிய இரண்டு கூற்றுக்கள் அறிமுகப்படுத்தப்பட்டன.

iii. கண்டறியப்பட்ட விடயங்களின் மதிப்பீடு மற்றும் கடுமையான தன்மை என்பனவற்றின் அடிப்படையில் வங்கியல்லா நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களம் தெளிவான குறித்துரைக்கப்பட்ட நேரக் கட்டமைப்பொன்றிற்குள் மேற்பார்வைக் கரிசனைகளைத் திருத்துவதற்காக உடனடியாகச் சரிசெய்யும் நடவடிக்கைகளை மேற்கொள்கிறது. மேலும், இத்துறையின் பிந்திய அபிவிருத்திகளை மூத்த முகாமைத்துவத்திற்கு அறிவிக்கும் நோக்குடன் இத்துறையின் செயலாற்றம் நாணயச் சபைக்கு கிரமமான அடிப்படையில் அறிவிக்கப்படுகிறது.

iv. வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களம் படுகடன் சாதனங்களை வழங்குதல், பங்கு மூலதனத்தினை அதிகரித்தல், புதிய முதலீட்டாளர்களின் மூலதன உள்ளீடுகள், அமைப்பு அகவிதிகளைத் திருத்துதல், துணைக் கம்பனிகளை உருவாக்குதல், வெளியாரிடமிருந்து பணிகளைப் பெற்றுக்கொள்ளுதல், புதிய பணிப்பாளர்களையும் நிறைவேற்றுத் தொழிற்பாடுகளை மேற்கொள்ளும், அலுவலர்களையும் நியமித்தல், கம்பனியின் பெயரை மாற்றுதல், பதிவுசெய்யப்பட்ட முகவரியினை மாற்றுதல், வியாபாரத் தலத்தினை வேறிடத்தில் அமைத்தல், சொத்துரிமை மாற்றல்கள் மற்றும் புதிய கிளைகளைத் திறத்தல் என்பன தொடர்பில் உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகளுக்கும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகளுக்கும் ஒழுங்குமுறைப்படுத்தல் ஒப்புதல்களை வழங்கியது. எல்ஓஎல்சி மைக்ரோ கிரெடிட் லிமிடெட் எல்ஓஎல்சி பினான்ஸ் பிஎல்சியுடன் இணைக்கப்பட்டதனைத் தொடர்ந்து அதற்கு வழங்கப்பட்ட குத்தகைக்குவிடும் உரிமம் இரத்துச் செய்யப்பட்டது.

v. உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகள் மற்றும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகள் தொடர்பில் பொதுமக்களிடமிருந்து, முக்கியமாக, நியாயமற்ற வாடிக்கையாளர் நடைமுறைகள் மற்றும் உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகள் மற்றும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகளுடன் செய்து கொள்ளப்பட்ட கொடுக்கல்வாங்கல் மீதான நிவாரணங்கள் தொடர்பாகப் பெறப்பட்ட பெரும் எண்ணிக்கையான முறைப்பாடுகளுக்குத் தீர்வு காண மத்தியஸ்தராகத் தொழிற்பட்டது.

**இ. நலிவடைந்த உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகள் தொடர்பில் தீர்வு காணும் நடவடிக்கைகள்**

2018 காலப்பகுதியில் வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களத்தின் முக்கிய கவனம், கடந்த பல ஆண்டுகளாகக் கடுமையான திரவத்தன்மை நெருக்கடிகளுக்கு முகம் கொடுத்த கடன் தீராற்றலற்ற கம்பனிகளின் பிரச்சனைகளுக்குத் தீர்வு காண்பதன் மீது இருந்தது. இதன்படி, இது தொடர்பில் பின்வரும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

i. லங்கா கிறடிட் அன்ட் பினினஸ் லிமிடெட்டினால் செய்யப்பட்ட முதலீட்டுடன் சிட்டி பினான்ஸ் கோப்பரேசன் லிமிடெட் மீளெழுச்சி பெற்றதுடன் மீளமைப்புத் திட்டம் தற்பொழுது இடம்பெற்று வருகிறது. திட்டத்தின்படி, ஆரம்ப மூலதன உள்ளீடுகள், இரண்டு கம்பனிகளினதும் இணைப்பு மற்றும் வைப்புக்களின் ஒரு பகுதியின் மீள்கொடுப்பனவு என்பன நிறைவடைந்துள்ளன.

ii. 2011ஆம் ஆண்டின் 42ஆம் இலக்க நிதி வியாபாரச் சட்டத்தின் கீழ் சென்றல் இன்வெஸ்ட்மன்ட் அன்ட் பினான்ஸ் பிஎல்சி மற்றும் ஸ்டான்ரட் கிறடிட் பினான்ஸ் லிமிடெட் என்பனவற்றிற்கு வழங்கப்பட்ட உரிமங்கள் இரத்துச் செய்யப்பட்டதுடன் ஒடுக்கிவிடும் நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன.

iii. உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகளின் உத்தேச தீர்மானம் மற்றும் நடைமுறைப்படுத்தல் கட்டமைப்பு என்பனவற்றுடன் இசைந்து செல்லும் விதத்தில் நிதித்தொழில் சட்டத்தின் 33ஆம் பிரிவினால் வழங்கப்பட்டவாறு “நிதிக் கம்பனிகளை ஒடுக்கிவிடுவது தொடர்பிலான கோரல்களின் முன்னுரிமை” மீதான ஒழுங்குவிதி. இவ்விதி உரிமம் பெற்ற நிதிக் கம்பனியினை ஒடுக்கிவிடும் சந்தர்ப்பமொன்றில் ஏற்புடைத்தாயிருக்கும். தொடர்பான அதிகாரிகளின் ஒப்புதல் கிடைத்ததன் பின்னர் இது வர்த்தமானியில் வெளியிடப்படும்.

iv. நிதியியல் நிலைமையில் இடர்ப்பாட்டிலுள்ள மூன்று கம்பனிகளின் வைப்புக்கள் மற்றும் கடன்பாடுகள் மீது கட்டுப்பாடுகளை விதித்தல், வியாபார அலுவல்களை முகாமைப்படுத்துவதற்குக் குழுவொன்றினை நியமித்தல், துணைநிறுவனங்கள் மற்றும் ஏனைய முதலீட்டுச் சொத்துப்பட்டியல்களை விற்பனை செய்வதனூடாக வைப்புக்களின் ஒரு பகுதியை மீளச்செலுத்தல் என்பன உட்பட பல ஒழுங்குமுறைப்படுத்தல் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள வேளையில் இக்கம்பனிகளை மீளவமைக்கும் நோக்குடன் நெருக்கமாகக் கவனிக்கும் நடவடிக்கையினை மேற்கொள்வதன் மூலம் இந்நடவடிக்கைகளை தொடர்வதற்கு முதலீட்டாளர்களாக வரக்கூடிய பலருக்கும் வசதியளிக்கப்பட்டது. மேலும், இக்கம்பனிகளின் தவறிழைத்தவர்களினால் அவர்களது நடவடிக்கையின் காரணமாக கம்பனிக்கு ஏற்பட்ட இழப்பினை அறவிட்டுக் கொள்வதற்காக கடவுச்சீட்டுக்களை பறிமுதல் செய்தல், தனிப்பட்ட வங்கிக் கணக்குகளை முடக்குதல் உட்பட பல ஒழுங்குமுறைப்படுத்தல் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. மேலும், இலங்கை மத்திய வங்கியின் பணிப்புரைகளுடன் இணங்கிச் செல்லும் விதத்தில் இக்கம்பனிகளின் முன்னேற்றம் மற்றும் மீளமைப்பு/ மீளெழுச்சித் திட்டங்களை கண்காணிப்பதற்காக பணிப்பாளர் சபை, மூத்த முகாமைத்துவம் மற்றும் வெளிவாரிக் கணக்காய்வாளர்களுடன் கூட்டங்கள் கிரமமாக இடம்பெற்றன.

### 30.3 முதனிலை வணிகர்களின் மேற்பார்வை

#### அ. நியதிப் பரீட்சிப்புக்களையும் தொடர்ச்சியான கண்காணிப்பினையும் மேற்கொள்ளுதல்

2018ஆம் ஆண்டுப்பகுதியில் 4 முதனிலை வணிகர்களின் நியதிச்சட்டப் பரீட்சிப்புக்கள் நிறைவடைந்த வேளையில், அனைத்து முதனிலை வணிகர்கள் தொடர்பிலும் தொடர்ச்சியான மேற்பார்வை மேற்கொள்ளப்பட்டது. மேற்பார்வை வழிமுறையொன்றாக பெர்பெட்சுவல் றெசரீஸ் லிமிடெட் மற்றும் பான் ஏசியா பாங்கிங் கோப்பிரேஷன் பிஎல்சி - முதனிலை வணிகர் பிரிவு என்பனவற்றின் வியாபார நடவடிக்கைகளினை இடைநிறுத்தல் மேலும் 6 மாத காலப்பகுதிக்கு நீடிக்கப்பட்டது (பெர்பெட்சுவல் றெசரீஸ் லிமிடெட் 2019 சனவரி 05 இலிருந்தும் பான் ஏசியா பாங்கிங் கோப்பரேஷன் 2018 ஓகத்து 15ஆம் நாளிலிருந்தும் நீடிக்கப்பட்டது).

வங்கி முதனிலை வணிகர் பிரிவுகளின் மேற்பார்வை பரீட்சிப்பு மற்றும் புலனாய்வுகள் மற்றும் செயலாற்றத்தின் காலாந்தர மதிப்பீடுகள் தொடர்பான தொழிற்பாடுகள் 2018 சனவரி 1ஆம் நாளிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் வங்கி மேற்பார்வைத் திணைக்களத்திற்கு மாற்றல் செய்வதற்கு நாணயச் சபையின் ஒப்புதல் வழங்கப்பட்டது. மேலும், அரச பிணையங்கள் சந்தை மற்றும் சந்தை நடத்தைகளின் அபிவிருத்தி தொடர்பில் அனைத்து முதனிலை வணிகர்களுக்கும் (வங்கியல்லா முதனிலை வணிகர்கள் மற்றும் வங்கி முதனிலை வணிகர் பிரிவுகள்) தொடர்ந்தும் ஒழுங்குவிதிகளையும் பணிப்புரைகளையும் வழங்க பொதுப்படுகடன் கண்காணிப்பாளருக்கு அதிகாரமளிக்கப்பட்ட வேளையில் முதனிலை வணிகர்களுக்கான முன்மதியுடைய தேவைப்பாடுகள் மீதான பணிப்புரைகளையம் வழிகாட்டல்களையும் விடுக்கின்ற அதிகாரம் வங்கியல்லா நிதி நிறுவனங்களின் மேற்பார்வைப் பணிப்பாளரிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது.

#### ஆ. என்றஸ்ட் செக்குறிட்டீஸ் பிஎல்சி மீதான தீர்மான நடவடிக்கைகள்

என்றஸ்ட் செக்குறிட்டீஸ் பிஎல்சியின் ஆற்றலற்ற நிதியிடல் நடைமுறைகளின் விளைவாக திரவத்தன்மையற்ற நிதியியல் நிலைமை தொடர்பில் 2016ஆம் ஆண்டில் முறையியல் சார்ந்த கரிசனைகள் தோன்றின. பிணையிடப்பட்ட மீள்கொள்வனவு மற்றும் உடனடி முதலீடுகள் தீர்ப்பனவு செய்யப்பட்டன. நிதி குற்றவியல் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டதுடன் சட்ட நடவடிக்கைகளும் புலன் விசாரணைகளும் இடம்பெற்று வருகின்றன. இலங்கை மத்திய வங்கி தற்பொழுது சாத்தியமான தீர்வுத் திட்டமொன்றினை வடிவமைத்து வருகின்றது. நீதிமன்றத்தினால் பணிக்கப்பட்டவாறு என்றஸ்ட் செக்குறிட்டீஸ் பிஎல்சி தொடர்பில் தடயவியல் கண்காணிப்பினை நடத்துவதற்காக வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களம் கணக்காய்வாளர் நாயகத்தின் திணைக்களத்திற்கு வசதிகளை வழங்கி வருகின்றது.

### 30.4 உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகள்/ சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகள் துறையின் மீதான பொதுமக்கள் விழிப்புணர்வினையும் இயலாற்றலையும் கட்டியெழுப்புதல்

#### அ. இயலளவினைக் கட்டியெழுப்புதல்

தேர்ச்சி/ தகுதிகளை அதிகரிக்கின்ற நோக்குடன் வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களத்தின் அலுவலர்கள் தடயவியல் புலனாய்வுகள் பாசல் கோட்பாடுகள், அழுத்தப் பரீட்சிப்பு மற்றும் கம்பனி ஆளுகை போன்ற விடயங்களில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களில் பங்கேற்றுக் கொண்டனர். மேலும், பன்னாட்டு நிதியியல் அறிக்கையிடல் நியமத்தின் தேவைப்பாடுகளுடன் இசைந்து செல்லும் விதத்தில் புதிய கணக்கீட்டு நியமங்களை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் அனைத்து அலுவலர்களுக்காகவும் விசேட பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் நடத்தப்பட்டன. திணைக்களத்தின் மூத்த அலுவலர்கள், இலங்கை மத்திய வங்கியின் வங்கித்தொழில் கற்கைகளின் ஆய்வுநிலையத்திலும் மற்றைய வெளிநிறுவனங்களிலும் நடத்தப்பட்ட பயிற்சித் தொடர்களில் வளவாளர்களாகத் தொடர்ந்தும் பணியாற்றினர்.

#### ஆ. உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகள்/ சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகள் மற்றும் ஆர்வலர்களுடனான கூட்டங்கள்

பொருளாதாரம் மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் அபிவிருத்திகள் தொடர்பான விடயங்களில் மத்திய வங்கிக்கும் உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகள்/ சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகளுக்குமிடையிலான கருத்துக்களைப் பகிர்ந்து கொள்ளும் குறிக்கோளுடன் வங்கியல்லா நிதி நிறுவனங்கள் மேற்பார்வைத் திணைக்களம் ஆளுநர் தலைமையில் உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகள்/ சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகளின் முதன்மை நிறைவேற்று அலுவலர்களுடன் இரண்டு கூட்டங்களை நடத்தியது. மேலும், திணைக்களம் கம்பனி மற்றும் இத்துறை தொடர்பான பிரச்சனைகள் பற்றி ஆராய்வதற்கும் சரியான நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்துவதற்குமாக உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகள்/ சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகள், வெளிவாரிக் கணக்காய்வாளர்கள் மற்றும் பன்னாட்டு முகவர்களுடன் தொடர்ந்தும் கூட்டங்களை நடத்தியது.

#### இ. பொதுமக்கள் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள்

தீர்மானம் மற்றும் நடைமுறைப்படுத்தல் திணைக்களம், பிரதேச அபிவிருத்தித் திணைக்களம் மற்றும் பிரதேச அலுவலகங்கள் கண்காணிப்புத் திணைக்களம் போன்ற மற்றைய திணைக்களங்களின் கோரிக்கையின் பேரில் வங்கியல்லா நிதி நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களம் கேட்டுக் கொள்ளப்படும் நேரத்தில் அத்தகைய நிகழ்ச்சித்திட்டங்களை நடத்துவதற்கு உதவிகளை வழங்குகிறது.

### 30.5 அதிகாரமளிக்கப்படாத நிதியியல் நிறுவனங்கள் தொடர்பான வழக்கு விசாரணைகளுக்கு வசதியளித்தல்

#### அ. கோல்டன் கீ கிறடிட் கார்ட் கம்பனி லிமிடெட்

கோல்டன் கீ கிறடிட் கார்ட் கம்பனி லிமிடெட்டின் பிணைய வைப்பு உடமையாளர்களுக்கு மீள்கொடுப்பனவுகளைச் செய்வதற்காக உயர் நீதிமன்றத்தினால் ஒப்புதலளிக்கப்பட்ட மாதிரி முறைகளுக்கிணங்க, வங்கியல்லா நிதி நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களம், கோல்டன் கீ கிறடிட் கார்ட் கம்பனியின் வாடிக்கையாளர்களினால் வைத்திருக்கப்பட்ட பிணைய வைப்புக்களின் மீள்கொடுப்பனவினை இணைத்து வருகின்றது.

#### ஆ. அதிகாரமளிக்கப்படாத நிதியியல் நிறுவனங்கள் தொடர்பிலான நடவடிக்கைகள்

திணைக்களமானது பினான்ஸ் அன்ட் கறண்டி புறொப்பட்டி டெவலப்பேர்ஸ் லிமிடெட் மற்றும் எவ் அன்ட் ஜீ றியல் எஸ்டேட் கம்பனி லிமிடெட் என்பனவற்றின் வைப்பாளர்களினால் 2015இல் தொடுக்கப்பட்ட நீதிமன்ற வழக்குகளுக்குத் தொடர்ந்தும் வசதியளித்தது. மேலும், வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களம் அதிகாரமளிக்கப்படாத நிதியியல் வியாபாரம் தொடர்பாக தொகுக்கப்பட்ட வழக்குகளுக்கான சான்றுகளை நீதிமன்றம் கேட்டுக்கொள்ளப்படும் வேளைகளில் வழங்கி வருகிறது.

## பிண்ணிணைப்பு II-4

### வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வை திணைக்களத்தினால் ஒழுங்குமுறைப்படுத்தப்படும் நிறுவனங்கள் (2018 இறுதியிலுள்ளவாறு)

#### உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகள்

1. அபான்ஸ் பினான்ஸ் பிஎல்சி
2. அலயன்ஸ் பினான்ஸ் கம்பனி பிஎல்சி
3. ஏஎம்டபிள்யு கபிட்டல் லீசிங் அன்ட் பினான்ஸ் பிஎல்சி
4. ஆர்பிகோ பினான்ஸ் கம்பனி பிஎல்சி
5. ஏசியா அசெற் பினான்ஸ் பிஎல்சி
6. அசோசியேட்டட் மோட்டார் பினான்ஸ் கம்பனி பிஎல்சி
7. பிம்புத் பினான்ஸ் பிஎல்சி
8. சென்றல் பினான்ஸ் கம்பனி பிஎல்சி
9. சிற்றிசென்ஸ் டெவலெப்மென்ற் பிசினஸ் பினான்ஸ் பிஎல்சி
10. கொமர்ஷல் கிரடிட் அன்ட் பினான்ஸ் பிஎல்சி
11. கொமர்ஷல் லீசிங் அன்ட் பினான்ஸ் பிஎல்சி
12. டயலொக் பினான்ஸ் பிஎல்சி (முன்னர் கொழும்பு ரஸ்ட்ற் பினான்ஸ் பிஎல்சி)
13. ஈரிஜ பினான்ஸ் லிமிடெட் (அ)
14. பின்ரெக்ஸ் பினான்ஸ் லிமிடெட் (முன்னர் மெல்ஸ்ரா றியல் பினான்ஸ் லிமிடெட்)
15. எச்என்பீ பினான்ஸ் லிமிடெட் (முன்னர் எச்என்பீ கிறமீன் பினான்ஸ் லிமிடெட்)
16. ஐடியல் பினான்ஸ் லிமிடெட்
17. கன்றிச் பினான்ஸ் லிமிடெட்
18. லங்கா கிறெடிட் அன்ட் பிசினஸ் பினான்ஸ் லிமிடெட் (முன்னர் சிற்றி பினான்ஸ் கோப்பரேஷன் லிமிடெட்)
19. எல்பீ பினான்ஸ் பிஎல்சி
20. எல்ஓஎல்சி டெவலப்மென்ட் பினான்ஸ் பிஎல்சி (முன்னர் பிறக் லங்கா பினான்ஸ் பிஎல்சி)
21. எல்ஓஎல்சி பினான்ஸ் பிஎல்சி
22. மா்க்கன்டைல் இன்வெஸ்ட்மன்ட்ஸ் அன்ட் பினான்ஸ் பிஎல்சி
23. மேர்ச்சன்ட் பாங்க் ஒவ் சிறிலங்கா அன்ட் பினான்ஸ் பிஎல்சி
24. மல்ரி பினான்ஸ் பிஎல்சி
25. நேஷன் லங்கா பினான்ஸ் பிஎல்சி
26. ஒறியன்ட் பினான்ஸ் பிஎல்சி
27. பீப்பிள்ஸ் லீசிங் அன்ட் பினான்ஸ் பிஎல்சி
28. பீப்பிள்ஸ் மேர்ச்சன்ட் பினான்ஸ் பிஎல்சி
29. பிறைம் பினான்ஸ் பிஎல்சி
30. றிச்சேர்ட் பீரிஸ் பினான்ஸ் லிமிடெட்
31. சர்வோதய டெவலப்மன்ட் பினான்ஸ் லிமிடெட்
32. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி
33. செரன்டிப் பினான்ஸ் லிமிடெட்
34. சிங்கர் பினான்ஸ் (லங்கா) பிஎல்சி
35. சிங்கபுத்ர பினான்ஸ் பிஎல்சி (அ)
36. சியப்பதா பினான்ஸ் பிஎல்சி
37. சொவ்ற்லொஜிக் பினான்ஸ் பிஎல்சி
38. சுவர்ணமஹால் பினான்ஸ்சியல் சேர்விஸஸ் பிஎல்சி (அ)
39. த பினான்ஸ் கம்பனி பிஎல்சி (அ)
40. ரிகேஎஸ் பினான்ஸ் லிமிடெட் (அ)
41. ட்ரேட் பினான்ஸ் அன்ட் இன்வெஸ்ட்மன்ட்ஸ் பிஎல்சி
42. யு பீ பினான்ஸ் கம்பனி லிமிடெட்
43. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி

#### பதிவு செய்யப்பட்ட நிதிக் குத்தகைக்குவிடும் நிறுவனங்கள்

**(அ) உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள**

1. அமானா வங்கி பிஎல்சி
2. இலங்கை வங்கி
3. கொமர்ஷல் பாங்க் ஒவ் சிலோன் பிஎல்சி
4. டிஎவ்சிசி பாங்க் பிஎல்சி
5. அட்டன் நஷனல் பாங்க் பிஎல்சி
6. எம்சிபி பாங்க் லிமிடெட்
7. நஷனல் டெவலப்மன்ட் பாங்க் பிஎல்சி
8. நேஷன்ஸ் ட்ரஸ்ட் பாங்க் பிஎல்சி
9. பான் ஏசியா பாங்கிங் கோப்பரேசன் பிஎல்சி
10. சம்பத் பாங்க் பிஎல்சி
11. செலான் பாங்க் பிஎல்சி
12. யூனியன் பாங்க் ஒவ் கொழும்பு பிஎல்சி

**(ஆ) உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள்**

1. இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கி
2. லங்காபுத்ர டெவலப்மன்ட் பாங்க் லிமிடெட்
3. பிரதேசிய சங்வர்தன பாங்க்
4. சணச டெவலப்மன்ட் பாங்க் பிஎல்சி
5. சிறிலங்கா சேவிங்ஸ் பாங்க் லிமிடெட்

**(இ) சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகள்**

1. அசட்லைன் லீசிங் கம்பனி லிமிடெட்
2. கோபரேடிவ் லீசிங் கம்பனி லிமிடெட்
3. நியூவெஸ்ட் கப்பிட்டல் லிமிடெட் (ஆ)
4. எஸ்எம்பீ லீசிங் பிஎல்சி
5. யுனிசன்ஸ் கப்பிட்டல் லீசிங் லிமிடெட்

**(ஈ) அனைத்து உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகள் மேலே பட்டியலிடப்பட்டுள்ளன.**

#### முதனிலை வணிகர்கள்

1. அக்குயிட்டி செக்குரிட்டீஸ் லிமிடெட்
2. இலங்கை வங்கி
3. கப்பிட்டல் அலையின்ஸ் லிமிடெட்
4. கொமர்ஷல் பாங்க் ஒவ் சிலோன் பிஎல்சி
5. என்ட்ரஸ்ட் செக்குரிட்டீஸ் பிஎல்சி(அ)
6. பர்ஸ்ட் கப்பிட்டல் ரெசறீஸ் பிஎல்சி
7. நற்வெல்த் செக்குரிட்டீஸ் லிமிடெட்
8. என்எஸ்பீ பன்ட் மனேஜ்மன்ட் கம்பனி லிமிடெட்
9. பான் ஏசியா பாங்கிங் கோப்பிரேஷன் பிஎல்சி(ஈ)
10. மக்கள் வங்கி
11. பேப்பச்சுவல் ரெஷரீஸ் லிமிடெட்(உ)
12. சம்பத் பாங்க் பிஎல்சி
13. செலான் பாங்க் பிஎல்சி
14. யூனியன் பாங்க் ஒவ் கொழும்பு பிஎல்சி
15. வெல்த்ரஸ்ட் செக்குரிட்டீஸ் லிமிடெட்

(அ) இந்நிறுவனங்களுக்கு இலங்கை மத்திய வங்கி, 2011 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க நிதித்தொழில் சட்டத்தின் கீழ் புதிய வைப்புக்களை ஏற்பதற்கு கட்டுப்பாடுகளை விதித்துள்ளது.

(ஆ) 01.03.2019 இலிருந்து பதிவு இரத்துச் செய்யப்பட்டுள்ளது.

(இ) அரச பிணையங்கள் முதனிலை ஏலங்களில் பங்கேற்பது 2017.07.24 இலிருந்து விலக்கப்பட்டது.

(ஈ) 2018.08.15 இலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் ஆறு மாத காலப்பகுதிக்கு முதனிலை வணிகர் ஒருவராக வியாபாரங்களையும் நடவடிக்கைகளையும் மேற்கொள்வதிலிருந்தும் இடைநிறுத்தப்படுகிறார்.

(உ) 2019.01.05 இலிருந்த நடைமுறைக்குவரும் விதத்தில் ஆறு மாத காலப்பகுதிக்கு முதனிலை வணிகர் ஒருவராக வியாபாரங்களையும் நடவடிக்கைகளையும் மேற்கொள்வதிலிருந்தும் இடைநிறுத்தப்படுகிறார்.

### 31. பயிற்சி மற்றும் அபிவிருத்தி

இலங்கை மத்திய வங்கியின் மனித மூலதன அபிவிருத்திகளில் உருவாகிவரும் தேவைகளுக்கு பயிற்சி மற்றும் அபிவிருத்தித் திணைக்களமானது வசதியளிக்கின்றது. இது தொடர்பில், பயிற்சி மற்றும் அபிவிருத்தித் திணைக்களமானது பயிற்சித் தேவைப்பாடுகளை இனங்காணல், பயிற்சி இடைவெளியினை நிரப்புவதற்கான உபாயங்களை உருவாக்குதல், வருடாந்த பயிற்சித் திட்டத்தினை தயாரித்தல் மற்றும் நடைமுறைக்கிடல், அலுவலர்களுக்கு அவர்களின் பட்டப்பின் படிப்பிற்கு வசதியளித்தல் மற்றும் அலுவலர்களுக்காக உள்நாட்டு அல்லது வெளிநாட்டு குறுங்காலப் பயிற்சிக்கான சந்தர்ப்பங்களை வழங்குதல். மேலும், பயிற்சி மற்றும் அபிவிருத்தித் திணைக்களமானது அலுவலர்களுக்கிடையில் அறிவினைப் பகிர்ந்து கொள்வதற்கும் வசதியளிக்கின்றது.

### 31.1 பட்டப்பின் படிப்பு

2018 காலப்பகுதியில், பயிற்சி மற்றும் அபிவிருத்தித் திணைக்களமானது ஐக்கிய இராச்சியம் மற்றும் அவுஸ்திரேலியா நாடுகளிலுள்ள புகழ்பெற்ற பல்கலைக்கழகங்களில் முனைவர் நிகழ்ச்சித்திட்டத்தினை மேற்கொள்வதற்கு 8 உயர் பதவி அலுவலர்களுக்கும் முதுமானிப்பட்ட நிகழ்ச்சித்திட்டத்தினை ஆரம்பிப்பதற்கு மேலும் 8 அலுவலர்களுக்கும் வசதியளித்தது. அதேவேளை, உள்நாட்டுப் பல்கலைக்கழகங்களில் பகுதிநேர முதுமானி நிகழ்ச்சித்திட்டங்களை ஆண்டு காலப்பகுதியில் ஆரம்பிப்பதற்கு 3 அலுவலர்களுக்கு வசதியளித்தது.

மேலும், 2018 காலப்பகுதியில் முனைவர் பட்டப்படிப்பினை நிறைவு செய்த 01 அலுவலரையும் மற்றும் முதுமானிப் பட்டத்தினை நிறைவு செய்த 14 அலுவலர்களையும் உள்ளடக்கி 15 அலுவலர்கள் வெற்றிகரமாக அவர்களுடைய பட்டப்பின் படிப்பினை நிறைவு செய்த பின் கடமைக்குத் திரும்பினர். 2014 - 2018 காலப்பகுதியில் வங்கி புலமைப்பரிசில் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் பட்டப்பின் படிப்பினைத் தொடங்கிய மற்றும் நிறைவு செய்த அலுவலர்களினுடைய எண்ணிக்கையானது கீழே அட்டவணை II-27 தரப்பட்டுள்ளது.

### 31.2 குறுங்காலப் பயிற்சி

2017இன் இறுதியில் மேற்கொள்ளப்பட்ட வருடாந்த தகைமைகள் திட்டமிடல் செயன்முறையினூடாக இனங்காணப்பட்ட தகைமை இடைவெளிகளைக் குறைக்கும் நோக்குடன், பயிற்சி மற்றும் அபிவிருத்தித் திணைக்களமானது 1,548 குறுங்கால வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு பயிற்சி வாய்ப்புக்களை வங்கி அலுவலர்களுக்கு வழங்கி வசதியளித்தது.

#### 31.2.1 குறுங்கால வெளிநாட்டுப் பயிற்சி

2018 காலப்பகுதியில் புகழ்பெற்ற வெளிநாட்டு பயிற்சி நிறுவனங்கள் மற்றும் வெளிநாட்டு மத்திய வங்கிகளினால் நடாத்தப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள், செயலமர்வுகள், கருத்தரங்குகள், மாநாடுகள், கற்றல் விஜயங்கள் மற்றும் கூட்டங்கள் உள்ளடங்கலாகப் பொருத்தமான குறுங்கால வெளிநாட்டுப் பயிற்சியில் மத்திய வங்கியினுடைய ஊழியர்கள் பங்குபற்றுவதற்குப் பயிற்சி மற்றும் அபிவிருத்தித் திணைக்களமானது வசதியளித்தது.

பாங்க் டி பிரான்ஸ், பாங்க் ஒவ் இங்கிலண்ட், டொய்ச் புண்டேஸ் பாங்க், றிசேர்வ் பாங்க் ஒவ் இந்தியா, பாங்க் நேகரா மலேசியா, பாங்க் ஒவ் கொரியா, ஐக்கிய அமெரிக்காவின் பெடரல் றிசேர்வ் முறைமை, சிங்கப்பூரினுடைய நாணய அதிகாரசபை மற்றும் பாகிஸ்தானினுடைய அரச வங்கி போன்றவை இலங்கை மத்திய வங்கியினுடைய ஊழியர்களுக்கு 2018 காலப்பகுதியில் பயிற்சியை வழங்கிய வெளிநாட்டு நிறுவனங்களாகும்.

அதற்கு மேலதிகமாக, பன்னாட்டு நாணய நிதியம், உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி, சீசென், பன்னாட்டுத் தீர்ப்பனவுகளுக்கான வங்கி, இந்திய தொழில்நுட்ப மற்றும் பொருளாதார ஒத்துழைப்பு, மலேசியா புத்ரா பல்கலைக்கழகம், கொங்கொங் சீனப் பல்கலைக்கழகம் போன்ற பன்னாட்டு நிதியிடல் முகவர்கள், ஆராய்ச்சி நிறுவனங்கள், பல்கலைக்கழகங்கள் மற்றும் பயிற்சி நிறுவனங்கள் போன்றவற்றினால் வழங்கப்பட்ட குறுங்கால பயிற்சித் திட்டங்களில் வங்கியின் ஊழியர்கள் பங்குபற்றியிருந்தனர்.

**அட்டவணை II-27 : வங்கியின் புலமைப்பரிசில் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் பட்டப்பின் படிப்புக்கள்**

| கற்கைகள் | 2014 | | 2015 | | 2016 | | 2017 | | 2018 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | தொடங்கியவர்கள் | நிறைவு செய்தவர்கள் | தொடங்கியவர்கள் | நிறைவு செய்தவர்கள் | தொடங்கியவர்கள் | நிறைவு செய்தவர்கள் | தொடங்கியவர்கள் | நிறைவு செய்தவர்கள் | தொடங்கியவர்கள் | நிறைவு செய்தவர்கள் |
| முனைவர் பட்டம் | 5 | 2 | 3 | 5 | 5 | 2 | 3 | 3 | 8 | 1 |
| முதுமானிப் பட்டம் | 24 | 11 | 19 | 21 | 24 | 11 | 19 | 18 | 8 | 14 |

அத்தகைய குறுங்காலப் பயிற்சி சந்தர்ப்பங்களுக்கு திணைக்களத்தினால் 408 மொத்த எண்ணிக்கையினருக்கு வசதியளிக்கப்பட்டிருந்தது. மேலும், 2018ஆம் ஆண்டு காலப்பகுதியில் பயிற்சி மற்றும் அபிவிருத்தித் திணைக்களமானது இந்தியா, மலேசியா, ஹங்கேரியா, ஒஸ்ரியா, சவுதி அரேபியா, பின்லாந்து, பிலிப்பைன்ஸ், கொரியா மற்றும் லெபனான் போன்ற நாடுகளுக்கு 13 கற்கை விஜயங்களை மேற்கொள்வதற்கு வசதியளித்திருந்தது (அட்டவணை II-28). பயிற்சி மற்றும் அபிவிருத்தித் திணைக்களமானது வளவாளர்களாக வெளிநாட்டு நிகழ்ச்சித்திட்டங்களில் பங்களிப்பதற்கு 2 இலங்கை மத்திய வங்கியின் அலுவலர்களுக்கு வசதியளித்திருந்தது.

பயிற்சி மற்றும் அபிவிருத்தித் திணைக்களமானது பயிற்சி மற்றும் அபிவிருத்தி விடயம் தொடர்பாக தீர்மானங்களை மேற்கொள்வதற்கு 18 பயிற்சிக் குழுக் கூட்டங்களை நடாத்த வசதியளித்தது.

**அட்டவணை II-28 :**
**குறுங்கால வெளிநாட்டுப் பயிற்சி - 2018**

| துறை | நிகழ்ச்சித் திட்டங்களின் எண்ணிக்கை | பங்கேற்றவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| பொருளாதாரம் மற்றும் விலை உறுதிப்பாடு | 67 | 101 |
| நிதியியல் உறுதிப்பாடு | 128 | 205 |
| முகவர் தொழிற்பாடுகள் | 16 | 16 |
| நாணய முகாமைத்துவம் | 8 | 11 |
| துணைப் பணிகள் மற்றும் ஏனையவை | 39 | 75 |
| **மொத்தம்** | **258** | **408** |

இலங்கை மத்திய வங்கி அலுவலர்களுக்குத் தேவையான பயிற்சி வாய்ப்புக்களை வழங்கும் வேளையில் அவர்கள் அத்தகைய நிகழ்ச்சித்திட்டங்களிலிருந்து பெற்றுக்கொண்ட அறிவு மற்றும் திறன்களை வங்கியினுடைய தொழிற்பாடுகளின் விருத்திக்குப் பயன்படுத்துகிறார்கள் என்பதை பயிற்சி மற்றும் அபிவிருத்தித் திணைக்களமானது உறுதிப்படுத்துவதில் அக்கறை காட்டியது. இந்த நோக்கத்திற்காக, பயிற்சியின் பின்னரான கண்காணிப்பு தொடர்பான பயிற்சி துணைக் குழுவினுடைய கூட்டங்களுக்கு பயிற்சி மற்றும் அபிவிருத்தித் திணைக்களமானது வசதியளித்தது. 2018 காலப்பகுதியில் 14 அத்தகைய பயிற்சி துணைக் குழுக் கூட்டங்கள் நடாத்தப்பட்டன. அதன்படி, 2019ஆம் ஆண்டு பெப்புருவரி 28ஆம் திகதியிலுள்ளவாறு குறுங்கால வெளிநாட்டுப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களில் பங்குபற்றிய 236 அலுவலர்களின் 212 ஒப்படைகள் நிறைவு செய்யப்பட்டன (அட்டவணை II-29).

**அட்டவணை II-29 :**

**2019ஆம் ஆண்டு பெப்புருவரி 28ஆம் திகதியிலுள்ளவாறு குறுங்கால வெளிநாட்டுப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களில் பங்கேற்றவர்களினால் நிறைவு செய்யப்பட்ட ஒப்படைகள்**

| வகை | ஒப்படைகளின் எண்ணிக்கை |
|---|---|
| நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைக்கான வழிகாட்டல்கள் | 12 |
| கட்டுரைகள் மற்றும் காட்சிப்படுத்தலுடன் கூடிய விரிவுரைகள் ஊடாக அறிவனைப் பகிர்ந்துகொள்ளுதல் மற்றும் பொதுமக்கள் விழிப்புணர்வு | 130 |
| முறைமைகள் மற்றும் செய்முறைகளை மேமபடுத்துவதற்கான முன்மொழிவுகள் | 30 |
| கோட்பாட்டுப் பத்திரங்கள் | 40 |
| **மொத்தம்** | **212** |

2018இன் ஆண்டு காலப்பகுதியில் பயிற்சி மற்றும் அபிவிருத்தித் திணைக்களமானது குறுங்கால வெளிநாட்டுப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களினுடைய நடைமுறைகளுக்குப் பொருத்தமான 2 சுற்றறிக்கைகளை வெளியிட்டது.

### 31.2.2 குறுங்கால உள்நாட்டுப் பயிற்சி

ஆண்டு காலப்பகுதியில் பயிற்சி மற்றும் அபிவிருத்தித் திணைக்களமானது பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள், கருத்தரங்குகள், செயலமர்வுகள் போன்ற முறைகளில் வங்கித்தொழில் கற்கைகளுக்கான ஆய்வுநிலையம் மற்றும் ஏனைய புகழ்பெற்ற உள்நாட்டு நிறுவனங்கள் போன்றவற்றில் வங்கி ஊழியர்களுக்கு 1,140 குறுங்கால உள்நாட்டுப் பயிற்சி வாய்ப்புக்களை வழங்கியது. இவை முக்கியமாக, பொருளியல், புள்ளிவிபரவியல், கணக்கியல், வங்கித்தொழில், தகவல் தொழில்நுட்பம், சட்டம், ஆய்வு, நிதி முகாமைத்துவம், இடர்நேர்வு முகாமைத்துவம், செயலக நடைமுறைகள், மனிதவள அபிவிருத்தி, வங்கி மற்றும் நிதியியல் நிறுவனங்களினுடைய மேற்பார்வை, நிதியியல் சந்தைகள், வெளிநாட்டுச் செலாவணி, நாணயம் மற்றும் பிரதேச அபிவிருத்தி போன்ற விடயங்களில் மேற்கொள்ளப்பட்டன. ஆண்டு காலப்பகுதியல் உள்நாட்டு நிறுவனங்களால் நடாத்தப்பட்ட 93 பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களில் 466 அலுவலர்கள் பங்குபற்றிய அதேவேளை வங்கித்தொழில் கற்கைகள் ஆய்வுநியைலத்தினால் நடாத்தப்பட்ட 57 பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களில் 674 அலுவலர்கள் பங்குபற்றியிருந்தனர்.

மேலும், 2018இன் ஆண்டு காலப்பகுதியில் பயிற்சி மற்றும் அபிவிருத்தித் திணைக்களமானது அலுவலர் தர அலுவலர்களுக்காக, வங்கித்தொழில் கற்கைகளுக்கான ஆய்வுநிலையத்துடன் இணைந்து “வங்கியினுடைய மூத்த முகாமைத்துவத்திற்காக மத்திய வங்கியின் ஆளுகை” மற்றும் “நன்னடத்தைக் கோவைகள்” என்ற இரு நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துவதற்கு வசதியளித்தது. மேலும், தகவல் தொழில்நுட்பத் திணைக்களம் மற்றும் வங்கித்தொழில் கற்கைகளுக்கான ஆய்வுநிலையம் என்பன இணைந்து “இணையப் பாதுகாப்பு” என்ற நிகழ்ச்சித்திட்டத்தினை நடாத்துவதற்கு வசதியளித்தது. 2018இன் ஆண்டு காலப்பகுதியில் பயிற்சி மற்றும் அபிவிருத்தித் திணைக்களமானது சட்டம் மற்றும் இணங்குவிப்புத் திணைக்களத்துடன் இணைந்து அனைத்து வங்கி அலுவலர்களுக்குமாக “இலங்கை மத்திய வங்கியினுடைய ஊழியர்களுக்கான நன்னடத்தைக் கோவைகள்” என்ற விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டத்தினை நடாத்தியது. 2018ஆம் ஆண்டு திசெம்பரில், பயிற்சி மற்றும் அபிவிருத்தித் திணைக்களமானது புதிதாக பணிக்கமர்த்தப்பட்ட முகாமைத்துவ பயிலுநர்கள், சட்ட அலுவலர்கள் மற்றும் பாதுகாப்பு பயிலுநர் அலுவலர்கள் மற்றும் பதவியுயர்வு வழங்கப்பட்ட தகுதிகாண் அலுவலர் தர அலுவலர்களுக்காக அறிமுக நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்தியது.

## 31.3 அறிவுப் பரிமாற்றம் மற்றும் ஏனைய செயற்பாடுகள்

பயிற்சி மற்றும் அபிவிருத்தித் திணைக்களமானது முதுமானிக் கற்கைகளை நிறைவு செய்து கடமைக்குத் திரும்பிய இலங்கை மத்திய வங்கியின் அலுவலர்கள் காட்சிப்படுத்தலுடன் கூடிய விரிவுரைகளை மேற்கொள்ள வசதியளித்திருந்தது. மேலும், பயிற்சி மற்றும் அபிவிருத்தித் திணைக்களமானது வரவழைக்கப்பட்ட விருந்தினர் பேச்சாளர்கள் அதேபோல் முனைவர் பட்டம் பெற்ற வங்கியினுடைய அலுவலர்களுடன் இணைந்து பொருளாதார மன்றங்களை ஒழுங்கமைத்தது.

பயிற்சி மற்றும் அபிவிருத்தித் திணைக்களமானது, வங்கித் தொழிற்பாடுகளுக்கு பயன்மிக்க தொழில்சார்நிபுணத்துவத் தகைமைகளைப் பெற்றுக்கொள்வதற்கு இலங்கை மத்திய வங்கி அலுவலர்களை ஊக்குவிப்பதற்கான ஒரு ஊடகமாக சார்ட்ட் பினான்சியல் அனாலிஸ்ற் தகைமையைப் பெற்றுக்கொள்வதற்கு வங்கியினுடைய புலமைப்பரிசில் திட்டத்தினைத் தொடர்ந்து வழங்கி வருகின்றது.